பெரிய புராண விளக்கம்

பகுதி-6

(திருநாவுக்கரசு நாயனார் புராணம்-பாகம்-1)

''வாகீச கலாநிதி''
கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண் 617,
மயிலாப்பூர், சென்னை-600 004.

உரிமை பதிவு :

முதற் பதிப்பு : செப்டம்பர், 1989

இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 1996

விலை : ரூ. 75-00

கலை நிலா அச்சகம்,
சென்னை-24.

நூற்றாண்டை நோக்கி...

"தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ. வி. குப்புஸ்வாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்."

—**மகாத்மா காந்தி**

"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழிபெயர்ப்புக்களையும் இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகின்றேன்."

—**மகாமகோபாத்தியாய Dr. உ. வே. சாமிநாத ஐயர்**

"Books published by Alliance Company are highly Popular Books."

—Rt. Hon'ble V. S. Srinivasa Sastri

"தமிழில் பல அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்."

—**சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்**

"அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்புகிறேன்."

—**சத்தியமூர்த்தி**

"மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ் நாட்டுக்குப் பல வழிகளிலும் பயன் விளைத்து வருதல் கண்கூடு. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக."

—**திரு. வி. க.**

பதிப்புரை

இதுவரை இந்நூலின் ஆறு பகுதிகள் வெளி வந்துள்ளன. தமிழ் மக்கள் இந்நூலைப் பெரிதும் வரவேற்கிறார்கள் என்பதைக் காணும்போது எங்களது உள்ளம் பேருவகை கொள்கிறது. அந்நாளில் கம்பராமாயணத்துக்குத் தெளிவுரை எழுதிய வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியாரை யும், இந்நாளில் பெரிய புராணத்திற்கு விளக்கவுரை எழுதிய கி. வா. ஜகந்நாதன் அவர்களையும் தமிழ் மக்கள் என்றென்றும் போற்றுவார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

இந்நூலில் (ஆறாவது பகுதியில்) திருநாவுக்கரசு நாயனார், அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பித்து அவருடைய வீட்டில் உணவருந்திவிட்டுச் செல்வது வரையிலும் அடங்கியுள்ளது. மேலும் திருநாவுக் கரசு நாயனாரும், அப்பூதியடிகளும் சென்று வழி பட்ட சிவத்தலங்கள் அவர் இயற்றிய பாசுரங்கள் எல்லாம் அடுத்த பகுதிகளில் வருவதைக் காணலாம்.

— பதிப்பகத்தார்.

குறிப்பு : இப்பகுதியில் பக்க எண் 324க்குப் பிறகு 225 என தப்பாக அச்சாகியுள்ளது. அதை 325 என்று வாசகர்கள் கவனத்திலிருத்தி மேற் கொண்டு தொடர்பாகப் படிக்க வேண்டுகிறோம். இந்தத் தப்பு புத்தகத்தின் கடைசி பாரத்தில் சரி செய்யப்பட்டுள்ளது. மற்றபடி தொடர்ச்சி சரியாக உள்ளது.

திருநாவுக்கரசு நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 5-ஆவதாக விளங்கும் திருநின்ற சருக்கத்தில் முதலாவதாக இருப்பது திருநாவுக்கரசு நாயனார் புராணம். அதில் வரும் முதற் பாடலின் உள்ளுறை வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனாருடைய வளர்ந்து வரும் திருத்தொண்டுகளினுடைய வழி வாழுமாறு திருவாய்மூர் என்னும் சிவத்தலத்தில் திருவவதாரம் செய்தருளிய மெய்ஞ்ஞானத்தையும் தவத்தையும் பெற்ற அந்த முனிவராகிய வாகீசருடைய உண்மை விளங்கும் பெருமையைப் பெற்ற திருநாமத்தினுடைய சீர்த்தியைப் புகழ்ந்து பாடத் தொடங்குகிறேன், பெரிய இந்தப் பூ மண்டலத்தில் ஒரு நாக்கினால் பாட முடியாத தன்மையை உணராதவனாகிய அடியேன்.' பாடல் வருமாறு:

" திருநாவுக் கரசுவளர்
திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர்
வாகீசர் வாய்மைதிகழ்

பெருநாமச் சீர்பரவ
லுறுகின்றேன்; பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய
ஒண்ணாமை உணராதேன்.''

பேருலகில்-இந்தப் பெரிய பூ மண்டலத்தில். ஒரு நாவுக்கு-ஒரு நாக்கினால்; உருபு மயக்கம். உரை செய்ய-பாட. ஒண்ணாமை-முடியாத தன்மையை. உணராதேன்-தெரிந்து கொள்ளாத அடியேன். திருநாவுக்கரசு-திருநாவுக்கரசு நாயனாருடைய. வளர்-வளர்ந்து வரும். திருத்தொண்டின்-திருத் தொண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நெறி-வழி. வாழ-வாழுமாறு. வரு-திருவாய்மூர் என்னும் சிவத்தலத்தில் திருவவதாரம் செய்தருளி வரும். ஞான-சிவ ஞானத்தையும். த்:சந்தி. தவ-தவத்தையும். முனிவர்-பெற்றவராகிய அந்த முனிவராகிய. வாகீசர்-வாகீசருடைய. வாகீசர்-வாக்குக்குத் தலைவர். வாய்மை-உண்மை. திகழ்-விளங்கும். பெரு-பெருமையைப் பெற்ற. நாம-திருநாமத்தினுடைய. ச்:சந்தி. சீர்-சீர்த்தியை. பரவல் உறுகின்றேன்-புகழ்ந்து பாடத் தொடங்குகிறேன். இந்தப் பாடலில் விற்பூட்டுப் பொருள்கோள் அமைந்திருக்கிறது.

திருவாய்மூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் வாய்மூர் நாதேசுவரர். அம்பிகை பாலினும் நன்மொழி அம்மை. இது திருவாரூருக்குத் தென் கிழக்குத் திசையில் 15 மைல் தூரத்தில் உள்ளது. சப்த விடங்கத் தலங்களுள் இது ஒரு தலம். சூரியன் வழிபட்டுப் பேறு பெற்ற தலம் இது. ஆலயம் கிழக்குத் திசையை நோக்கி இருப்பது. அதற்கு எதிரில் சூரியன் உண்டாக்கிய சூரிய தீர்த்தம் உள்ளது. திருநாவுக்கரசு நாயனார் வேதாரணியத்தில் தங்கியிருந்த காலத்தில் வாய்மூர்நாதேசுவரர் அவர் முன் தோன்றியருளித் திருவாய்மூருக்கு வருமாறு கட்டளையிட்டருளினார். அந்த நாயனார்,

"எங்கே என்னை இருந்திடத் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதென் கொலோ"

என்று பாடிக் கொண்டு எழுந்தருளும் பொழுது அந்த நாயனாருக்குப் பின்னால் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் எழுந்தருள, அந்த இரண்டு நாயன்மார்களும் சேர்ந்து கொண்டு சென்று தரிசித்த தலம் இது.

இதைப்பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய பாசுரம் ஒன்று வருமாறு:

"திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உண்ணின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே."

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு பாசுரம் வருமாறு:

"பாலின் மொழியாளோர் பாகம் கண்டேன்;
பதினெண்கணமும் பணியக் கண்டேன்;
நீல நிறமுண்ட கண்டம் கண்டேன்;
நெற்றி நுதல்கண்டேன்; பெற்றம் கண்டேன்;
காலைக் கதிர்செய் மதியம் கண்டேன்;
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்;
மாலைச் சடையும் முடியும் கண்டேன்;
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே."

பிறகு உள்ள 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பழங்காலம்முதல் முறையாக வரும் மண்ணினுடைய புழுதி அல்லாமல் வேறு தூசுகள் இல்லாத நன்மை நிலை பெற்ற நல்ல ஒழுக்கமாகிய நன்மையினால் சிறப்பை அடைந்த குடும்பங்கள் மிகுதியாக வளர்ந்து தங்களுடைய மேல் தளங்களில் சந்திரன் தவழ வளரும் மாணிக்கங்களைப் பதித்திருக்கும் மாடங்கள் ஓங்கி நிற்கும் செழுமையைப் பெற்ற சிவத்

தலங்கள் நிலைபெற்று விளங்கி நிரம்பியதாக இருப்பது திருமுனைப்பாடி நாடு என்னும் வளப்பங்களைப் பெற்ற நாடு ஆகும்.' பாடல் வருமாறு:

"தொன்மைமுறை வருமண்ணின்
துகளன்றித் துகள் இல்லா
நன்மைநிலை ஒழுக்கத்து
நலம்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர்
மணிமாடச் செழும்பதிகள்
மன்னிநிறைந் துளது திரு
முனைப்பாடி வளநாடு."

தொன்மை-பழமையாகிய காலம் முதல். முறை-முறையாக. வரு-வரும். மண்ணின்-மண்ணினுடைய. துகள்-புழுதி. அன்றி-அல்லாமல். த்:சந்தி. துகள்-குற்றம். இல்லா-இல்லாத. 'துகள்' என்னும் சொல் இரண்டு பொருள்களில் வந்தது. நன்மை-நல்ல தன்மை. நிலை-நிலை பெற்ற. ஒழுக்கத்து -நல்ல ஒழுக்கமாகிய. நலம்-நன்மையினால். சிறந்த-சிறப்பை அடைந்த. குடி-குடும்பங்கள். 'குடி மக்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். மல்கி-மிகுதியாக வளர்ந்து. ச்:சந்தி. சென்னி-தங்களுடைய மேல் தளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மதி-சந்திரன். புனைய-தவழுமாறு உயர்ந்து நின்று. வளர்-வளரும். மணி-மாணிக்கங்களைப் பதித்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மாட-மாடங்கள் உயரமாக நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். செழும்-செல்வச் செழிப்பைப் பெற்று விளங்கும். பதிகள்-சிவத்தலங்கள். மன்னி-நிலைபெற்று விளங்கி. நிறைந்து-நிரம்பியிருப்பதாக; வினையாலணையும் பெயர். உளது-இருப்பது; இடைக்குறை. திருமுனைப்பாடி-திருமுனைப்பாடி நாடு என்னும். வள-நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். நாடு-நாடு ஆகும்.

அடுத்து வரும் 3-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: 'குறிஞ்சி நிலத்தில் வளர்ந்து நிற்கும் மூங்கில் மரத்தில் தோன்றிய முத்துக்களோடு முல்லை நிலமாகிய காட்டில் வளர்ந்து நிற்கும் பலவகையாகிய மரங்களில் மலர்ந்திருக்கும் புதியமலர்களோடும் தொகுதிகள் கணக்குஇல்லாத அலைகள் சுமந்து கொண்டு வந்து தன்னுடைய கரைகளினுடைய பக்கங்களில் பெரியவையாக விளங்கும் எருமைகளைப் பூட்டியிருக்கும் வயல்களை உழும் ஏர்களினுடைய கூட்டத்தைப் பெற்ற வயல்களை உழும் பண்ணைகளில் எறிந்து உலாவி எய்த உலகங்களிலும் வாழ்பவர்கள் தன்னுடைய அழகை எண்ணிப் பார்க்கும் வண்ணம் ஓடிவரும் பெருமையைப் பெற்ற பெண்ணையாறு பாய்கின்ற வளம் அந்தத் திருமுனைப்பாடி நாட்டில் பெருகியிருக்கும்.' பாடல் வருமாறு:

"புனப்பண்ணை மணியினொடும்
புறவினறும் புதுமலரும்
கனப்பெண்ணில் திரைசுமந்து
கரைமருங்கு பெரும்பகட்டேர்
இனப்பண்ணை உழும்பண்ணை
எறிந்துலவி எவ்வுலகும்
வனப்பெண்ண வரும்பெண்ணை
மாநதிபாய் வளம்பெருகும்."

புன-குறிஞ்சி நிலத்தில் வளர்ந்து நிற்கும். ப்:சந்தி. பண்ணை-மூங்கில் மரத்தில் தோன்றிய. பணை என்பது பண்ணை என நின்றது; விரித்தல் விகாரம். மணியினொடும்-முத்துக்களோடும்; ஒருமை பன்மை மயக்கம். புறவில்-முல்லை நிலமாகிய காட்டில், நறும்-வளர்ந்து நிற்கும் பலவகையாகிய மரங்களில் மலர்ந்திருக்கும் நறுமணம் கமழும். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், மருத மரம், கடம்ப மரம், விளா மரம், வேப்ப மரம், பூவரச மரம், நெல்லி மரம், வில்வ மரம், நாவல் மரம் முதலியவை.

புது-புதிய. மலரும்-மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்களாவன: செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், வெள்ளைச் செவ்வந்தி மலர், மஞ்சட் செவ்வந்தி மலர், அல்லி மலர், ஆம்பல் மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், பூவரச மலர், நுணா மலர், விளா மலர், மகிழ மலர், நீலோற்பல மலர், குமுத மலர், தும்பை மலர், தாழம்பூ, குருக்கத்தி மலர், பவள மல்லிகை மலர், அசோக மலர், வேப்ப மலர் முதலியவை. கனப்பு-தொகுதிகள்; ஒருமை பன்மை மயக்கம். எண்-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. திரை-அலைகள்; ஒருமை பன்மை மயக்கம். சுமந்து-சுமந்து கொண்டு வந்து. கரை-இரண்டு கரைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். பெரும்-பெரியவையாக விளங்கும். பகட்டு-எருமை மாடுகளைப் பூட்டியிருக்கும். ஏர்-வயலை உழும் ஏர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இன-கூட்டத்தைப் பெற்ற. ப்:சந்தி. பண்ணை-பண்ணைகளில்; ஒருமை பன்மை மயக்கம். உழும்-வயல்களை உழும். பண்ணை-பண்ணைகளில்; ஒருமை பன்மை மயக்கம். எறிந்து உலவி-வீசிக் கொண்டு ஓடி. எவ்வுலகும்-எந்த உலகங்களில் வாழ்பவர்களும்; இட ஆகு பெயர். உலகு: ஒருமை பன்மை மயக்கம். வனப்பு-தன்னுடைய அழகை. எண்ண-எண்ணிப் பார்க்கும்வண்ணம். வரும்-ஓடிவரும். பெண்ணை மாநதி-பெருமையைப் பெற்ற தென் பெண்ணையாறு. பாய்-பாயும். வளம்-நீர்வளம். பெருகும்-அந்தத் திருமுனைப்பாடி நாட்டில் பெருகியிருக்கும். 'புனப் பண்ணை மணியினொடும்-குறிஞ்சி நிலத்தில் உள்ள தொகுதியான இரத்தினங்களோடும்' எனலும் ஆம். மணி: ஒருமை பன்மை மயக்கம். அந்த இரத்தினங்களாவன: மாணிக்கம், கோமேதகம், மரகதம், பவளம், முத்து, நீலமணி, வைடூரியம், பதுமராகம், புட்பராகம் என்பவை.

அடுத்து வரும் 4-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'தென்பெண்ணை ஆற்றிலிருந்து பிரிந்து ஓடி வரும் கால்வாய்களில் எல்லாம் தகடுகளைப் போன்ற வரால் மீன்கள் துள்ளிக் குதிக்கும்; அந்தத் திருவாய்மூரில் உள்ள வயல்களில் வளர்ந்து நிற்கும் கரும்புச் செடிகளில் உள்ள கணுக்கள் எல்லாவற்றிலிருந்தும் பொழிகின்ற தேனைக் காணலாம்; பக்கங்கள் எல்லாவற்றிலும் கதிர்களைக்கொண்ட நெற்பயிர்கள் வளர்ந்து நிற்கும்; அந்தப் பரவிய நிலங்கள் எல்லாவற்றிலும் குலைகளைப் பெற்ற பாக்கு மரங்கள் ஓங்கி வளர்ந்து விளங்கும்; வயல்களை ஏர்களால் உழுத சுவடுகள் எல்லாவற்றிலும் முத்துக்களினுடைய வரிசை ஒளியை வீசிக்கொண்டு விளங்கும்; அந்தத் திருவாய்மூரில் உள்ள தடாகங்கள் எல்லாவற்றிலும் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்திருக்கும்; ஆகாயத்தின் மேல் முழுவதும் திருவாய்மூரில் வாழும் பெண்மணிகள் நீராடிவிட்டுத் தங்களுடைய கூந்தல்களை உலர்த்துவதற்காக நெருப்பால் இட்ட அகில மரங்களினுடைய கட்டைகளிலிருந்து எழுந்த புகை போய் அடையும்; அந்தத் திருவாய்மூரில் உள்ள திருத்தமாகக் கட்டப் பெற்ற திருமாளிகைகள் எல்லாவற்றிலும் வாழும் மக்கள் வரவேற்று உணவைப் படைக்கும் விருந்தினர்களைக் காணலாம்.' பாடல் வருமாறு:

"கால்எல்லாம் தகட்டுவரால்;
கரும்பெல்லாம் கண்பொழிதேன்;
பாலெல்லாம் கதிர்ச்சாலி;
பரப்பெல்லாம் குலைக்கமுகு;
காலெல்லாம் தரளநிரை;
தடமெல்லாம் செங்கழுநீர்;
மேலெல்லாம் அகிற்றூபம்;
விருந்தெல்லாம் திருந்துமனை."

கால்-தென் பெண்ணை ஆற்றிலிருந்து பிரிந்து ஓடிவரும் கால்வாய்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லா

வற்றிலும். தகட்டு-வெள்ளித் தகடுகளைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். வரால்-வரால் மீன்கள் துள்ளிக் குதிக்கும். கரும்பு-அந்தத் திருவாய்மூரில் உள்ள வயல்களில் வளர்ந்து நிற்கும் கரும்புச் செடிகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றிலும். கண்-அந்தக் கரும்புச் செடிகளில் உள்ள கரும்புகளில் இருக்கும் கணுக்களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். பொழி-சொரியும். தேன்-தேனைக் காணலாம். பால்-அந்தத் திருவாய்மூரினுடைய பக்கங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றிலும் உள்ள வயல்களில். கதிர்-கதிர்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சாலி-நெற்பயிர்கள் வளர்ந்து நிற்கும். பரப்பு-அந்தப் பரவிய நிலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றிலும். குலை-குலைகளாகக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கமுகு-பாக்கு மரங்கள் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். கால்-அந்தத்திருவாய்மூரில் உள்ள வயல்களை உழவர்கள் ஏர்களால் உழுத சுவடுகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றிலும். தரள-சங்குப் பூச்சிகள் உமிழ்ந்த முத்துக்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசை ஒளியை வீசிக்கொண்டு விளங்கும். தடம்-அந்த ஊரில் உள்ள தடாகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றிலும். செங்கழுநீர-செங்கழுநீர் மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மேல்-மேலே உள்ள ஆகாயம். எல்லாம்-முழுவதிலும். அகில்-திருவாய்மூரில் வாழும் பெண்மணிகள் தென்பெண்ணையாற்றில் நீராடிவிட்டுத் தங்களுடைய கூந்தல்களை உலர்த்துவதற்காக நெருப்பில் இட்ட அகில் மரங்களினுடைய கட்டைகளிலிருந்து எழுந்த; ஒருமை பன்மை மயக்கம். தூபம்-புகை போய் அடையும். திருந்து-திருத்தமாகக் கட்டப் பெற்ற. மனை எல்லாம்-திருமாளிகைகள் எல்லாவற்றிலும்; ஒருமை

பன்மை மயக்கம். விருந்து-வாழும் மக்கள் வரவேற்று உணவைப் படைக்கும் விருந்தினர்களைக் காணலாம் திணை மயக்கம்.

பின்பு வரும் 5-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருவாய்மூரில் வாழும் தாழ்த்தப் பெற்ற குலமக்களாகிய பள்ளர்கள் நெருங்கியிருக்கும் வயல்களில் வெட்டிய கரும்புகளினுடைய துண்டுகள் சொரியும் கொழுமையாகிய சாறு அந்தக் கரும்புச் செடிகளினுடைய நடுப் பக்கங்களில் வைத்த தேன் கூடுகளிலிருந்து இழிவதனால் இறங்கி வழியும் தேனாகிய வெள்ளத்தோடு பக்கங்களில் பரவி ஓடி வண்டுகள் மொய்த்துக்கொண்டு ரீங்காரம் புரியப் புதிய நீரைப் போல ஓடி வயல்களில் உள்ள மடைகளை உடைக்க, அவ்வாறு உடைந்த மடைகளை, அந்தக் கரும்புகளை ஆலையில் பிழிந்து கொப்பரையில் இட்டுக் காய்ச்சி எடுத்த வெல்லக் கட்டிகளால் ஒவ்வோர் ஊர்தனிலும் அடைப்பார்கள்.' பாடல் வருமாறு:

"'கடைஞர்மிடை வயற்குறைத்த
கரும்புகுறை பொழிகொழுஞ்சா
றிடைதொடுத்த தேன்கிழிய
இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறொலிப்பப்
புதுப்புனல்போல் மடையுடைப்ப
உடைமடையக் கரும்படுகட்
டியினடைப்ப ஊர்கள்தொறும்."

கடைஞர்-அந்தத் திருவாய்மூரில் வாழும் தாழ்த்தப் பெற்ற குலமக்களாகிய பள்ளர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மிடை-நெருங்கியிருக்கும். வயல்-வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். குறைத்த-வெட்டிய. கரும்பு-கரும்புகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குறை-துண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். பொழி-சொரியும். கொழும்சாறு-கொழுமை

யான சாறு. சாறு-ரஸம். இடை-அந்தக் கரும்புச் செடிகளி னுடைய நடுப்பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். தொடுத்த-வண்டுகள் கட்டிய. தேன்-தேன் கூடுகளிலிருந்து; ஆகுபெயர். கிழிய-கிழிவதனால். இழிந்து-இறங்கி. ஒழுகு-வழியும். நீத்தமுடன்-தேன் நிறைந்த வெள்ளத்தோடு. புடை-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். பரந்து-பரவி ஓடி. ஞிமிறு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். ஒலிப்ப-மொய்த்துக்கொண்டு ரீங்காரம் புரிய. ப்:சந்தி. புது-புதியதாக ஆற்றில் வந்து. ப்:சந்தி. புனல்போல்-நீரைப் போல ஓடிச் சென்று. மடை-வயல்களில் உள்ள மடைகளை; ஒருமை பன்மை மயக்கம். மடை-வயலுக்கு நீர்பாயும் சிறிய கால்வாய். உடைப்ப-உடைக்க. உடை-அவ்வாறு உடைந்த. மடை-மடைகளை; ஒருமை பன்மை மயக்கம். அக்கரும்பு-அந்தக் கரும்புகளை ஆலையில் பிழிந்துவரும் சாற்றைக் கொப்பரையில் இட்டு. அடு-காய்ச்சி எடுத்த. கட்டியின்-வெல்லக் கட்டிகளால்; ஒருமை பன்மை மயக்கம். ஊர்கள் தொறும்-ஊர் ஒவ்வொன்றிலும். அடைப்ப-உழவர்கள் அடைப்பார்கள்.

இந்தப் பாடலில் உள்ள வருணனை திருநாவுக்கரசு நாயனாருடைய வரலாற்றைக் குறிப்பாகத் தெரிவிக்கிறது. வயல்களில் வெட்டிய கரும்புகளைப் பிழிந்தசாறு மடைகளை உடைத்துச் சென்றது என்பது திருநாவுக்கரசு நாயனார் சைவ சமயத்தை விட்டுவிட்டுச் சமண சமயத்தைச் சார்ந்த தைக் குறிப்பாகப் புலப்படுத்தும். அவ்வாறு மடையை உடைத்த கருப்பஞ்சாற்றை அந்தக்கருப்பஞ்சாற்றைக்காய்ச்சி எடுத்த வெல்லக்கட்டிகளைக் கொண்டு உழவர்கள் அடைப் பார்கள் என்பது அவ்வாறு புறச்சமயமான சமண சமயத்தைச் சேர்ந்து வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரை அதே ஊரில் அவரோடு பிறந்த தமக்கையாராகிய திலகவதியார் அந்த நாயனாரை மீட்டும் சைவ சமயத்திற்கு வரும்படி தடுத்து ஆட்கொண்ட செயலைக் குறிப்பாகப் புலப்படுத்தும்.

பிறகு உள்ள 6-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'கருமை நிறத்தைப் பெற்ற அடிகளைக்கொண்ட வாழை மரங்களில் காய்த்திருக்கும் பெரியவையாக விளங்கும் காய்கள் நிறைந்த குலைகள் ஆண்யானைகளினுடைய துதிக்கைகளினுடைய முன் இடங்களைத் தோற்றுமாறு செய்யவும், அந்தத் திருவாய்மூரின் பக்கங்களில் வளர்ந்து நிற்கும் சம்பா நெற்பயிர்களினுடைய கதிர்கள் வலிமையைப் பெற்ற குதிரைகளினுடைய முகங்களைப் போன்ற தோற்றத்தைக் கொண்டு விளங்கவும், பெரியவை ஆக விளங்கும் வண்டிகள் இரதங்களைப் போலக் காட்சி அளிக்கவும் வயல்களில் வேலைகளைப் புரியும் தொழிலாளர்களாகிய உழவர்களுடைய ஆரவார ஒலி விளக்கமாகக் கேட்கவும், இவ்வாறு நெருங்கியுள்ள தேர், யானை, குதிரை, காலாட்கள் என்ற போருக்கு உரிய நான்கு வகையான அங்கங்களினுடைய வலிமையை வளம் நிரம்பியுள்ள திருவாய்மூரில் இருக்கும் மருதநிலங்கள் ஒத்துவிளங்குவன ஆகும்.' பாடல் வருமாறு:

" கருங்கதலிப் பெருங்குலைகள்
களிற்றுக்கைம் முகம்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல்
வயப்புரவி முகம்காட்டப்
பெரும்சகடு தேர்காட்ட
வினைஞர்ஆர்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபலம்
நிகர்ப்பனவாம் நிறைமருதம்.''

கரும்-கருமை நிறத்தைப் பெற்ற அடிகளைக் கொண்ட; ஆகுபெயர். கதலி-வாழை மரங்களில் காய்த்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பெரும் பெரியவையாக இருக்கும். குலைகள்-காய்கள் நிறைந்த குலைகள். களிற்று-ஆண் யானைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கை-துதிக்கைகளினுடைய; ஒருமை பன்மை

மயக்கம். ம்:சந்தி. முகம்-முன் இடங்களை; ஒருமை பன்மை மயக்கம். காட்ட-தோற்றுமாறு செய்யவும். வாழைத் தாறு கள் வளைந்து தோற்றுவதனால் ஆண் யானைகளினுடைய வளைந்த துதிக்கைகளைப் போலக் காட்சியை அளிக்கும். மருங்கு-அந்தத் திருவாய்மூரினுடைய பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வளர்-வளர்ந்து நிற்கும். கதிர்ச் செந்நெல்-சம்பா நெற்பயிர்களினுடைய கதிர்கள். கதிர்: ஒருமை பன்மை மயக்கம். நெல்: ஒருமை பன்மை மயக்கம். வய-வலிமையைப் பெற்ற, ப்:சந்தி. புரவி-குதிரைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். முகம்-முகங்களை; ஒருமை பன்மை மயக்கம். காட்ட-போன்ற தோற்றத்தைக் கொண்டு விளங் கவும். சம்பா நெற் பயிர்களின் கதிர்கள் முற்றி விளைந்த மையால் வளைந்திருக்கும்: அது குதிரைகள் தங்களுடைய முகங்களைத் தரையை நோக்கி வளைத்துக் கொண்டு நிற்ப தைப் போலத் தோற்றும். ப்:சந்தி. பெரும்-பெரியவையாக விளங்கும். சகடு-வண்டிகள்; ஒருமை பன்மை மயக்கம். இவை அறுத்த நெற்கதிர்களை வீடுகளுக்குக் கொண்டு போகப் பயன் படுபவை. தேர்-தேர்களைப் போன்ற தோற்றத்தை; ஆகு பெயர்; ஒருமை பன்மை மயக்கம். காட்ட-காண்பிக்க வும்; அந்த வண்டிகள் இரதங்களைப் போலத் தோற்றத்தை அளிந்தன. வினைஞர்-வயல்களில் வேலைகளைப் புரியும் தொழிலாளர்களாகிய உழவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். இந்த உழவர்கள் போரில் யுத்தம் செய்யும் காலாட் களை நினைப்பூட்டுகிறார்கள். ஆர்ப்பொலி-ஆரவாரச் சத்தம். பிறங்க-விளக்கமாகக் கேட்கவும். நெருங்கிய-இவ் வாறு நெருங்கியுள்ள. சாதுரங்க-தேர், யானை, குதிரை, காலாட்கள் என்ற போருக்கு உரிய நான்கு வகையான அங்கங்களினுடைய. அங்க: ஒருமை பன்மை மயக்கம். பலம்-வலிமையை. நிறை-வளம் நிரம்பியுள்ள. மருதம்-திருவாய் மூரில் இருக்கும் மருத நிலங்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

நிகர்ப்பன ஆம்-ஒத்து விளங்குபவை ஆகும். வாழைக் காய்களின் குலைகள் யானைகளினுடைய துதிக்கைகளையும், முற்றி வளைந்திருக்கும் சம்பா நெற்பயிர்களினுடைய கதிர்கள் தங்களுடைய முதுகங்களைத் தரையை நோக்கிக் குனிந்து வளைந்து நிற்கும் குதிரைகளையும், அறுத்த நெற்கதிர்களை இல்லங்களுக்கு ஏற்றிச் செல்லும் வண்டிகள் இரதங்களையும், வயல்களில் பணிகளைப் புரியும் தொழிலாளர்கள் காலாட்களையும் போலக் காட்சியை அளிப்பார்கள். இவ்வாறு வயல்களில் உள்ள பொருள்கள் போருக்கு உரிய தேர், யானை, குதிரை, காலாட்கள் என்னும் நான்கு அங்கங்களை போலக் காட்சி அளிக்கும்.

பிறகு உள்ள 7-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நறுமணத்தைக் கமழுமாறு புரியும் பாக்கு மரங்களினுடைய ஒன்பது ரத்தினங்களைப் போன்ற கழுத்துக்களுடன் தங்களுடைய கூந்தல்களினது பாரத்தைச் சுமக்க முடியாத பெண்மணிகள் என்றுகூறுமாறு அந்தத் திருவாய்மூரினுடைய வெளியிடங்களில் அசைகின்ற மரங்கள் வளர்ந்து நிற்கும் குளிர்ச்சியைப் பெற்ற பூம்பொழிலை வேலியாகப் பெற்ற தென்பெண்ணையாற்றினுடைய துறைகளில் நீலமணிகளைப் போன்ற நீல நிறத்தைக் கொண்ட வண்டுகள் ரீங்காரம் செய்யும் பெரியவையாக உயர்ந்து நிற்கும் பன மரங்கள், நிரம்பியுள்ள அந்தத் தென்பெண்ணையாற்றில் ஓடும் புனலினுடைய கொழுந்துகள் படர்ந்து சென்று ஏறுகின்ற நிலைமையை உடையது அந்தத் திருவாய்மூர்.' பாடல் வருமாறு:

"நறையாற்றும் கமுகநவ
மணிக்கழுத்தி னுடன்கூந்தற்
பொறையாற்றா மகளிரெனப்
புறம்பலைதண் டலைவேலித்
துறையாற்ற மணிவண்ணச்
சுரும்பிரைக்கும் பெரும்பெண்ணை

நிறையாற்று நீர்க்கொழுந்து
படர்ந்தேறு நிலைமையதால்.''

நறை-நறுமணத்தை. ஆற்றும்-கமழுமாறு புரியும். கமுக-பாக்கு மரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நவ மணி-மாணிக்கம், மரகதம், பவளம், முத்து, புட்பராகம், பதுமராகம், வஜ்ரம், வைடூரியம், கோமேதகம் என்னும் ஒன்பது இரத்தினங்களைப் போன்ற. மணி: ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கழுத்தினுடன்-கழுத்துக்களோடு; ஒருமை பன்மை மயக்கம். கூந்தல்-கூந்தல்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். பொறை-பாரத்தை. ஆற்றா-சுமக்க முடியாத. மகளிர்-பெண்மணிகள். என-என்று கூறுமாறு; இடைக்குறை. ப்:சந்தி. புறம்பு-திருவாய்மூரினுடைய வெளியிடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். அலை-அசைகின்ற. தண்டலை-பல வகையான மரங்கள் வளர்ந்து நிற்கும் குளிர்ச்சியைப் பெற்ற பூம்பொழிலை. அந்த மரங்களாவன, தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், பல வகையாகிய வாழை மரங்கள், தென்ன மரம், பனமரம், அரசமரம், ஆல மரம், மா மரம், பலா மரம், கடப்ப மரம், புளிய மரம், கொளிஞ்சி மரம், நாரத்தை மரம், வில்வ மரம், விளா மரம், பூவரச மரம், நுணா மரம், வேப்ப மரம், நெட்டிலிங்க மரம், அசோக மரம், பவள மல்லிகை மரம், மகிழ மரம் முதலியவை. வேலி-வேலியாகப் பெற்ற. த்:சந்தி துறை ஆற்ற-தென் பெண்ணை ஆற்றினுடைய துறைகளில்; ஒருமை பன்மை மயக்கம். மணி-நீல மணியைப் போன்ற. வண்ண-நீல நிறத்தைக்கொண்ட. ச்:சந்தி. சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். இரைக்கும்-ரீங்காரம் செய்யும். பெரும்-பெரியவையாக உயர்ந்து நிற்கும். பெண்ணை-பன மரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நிறை-நிரம்பியுள்ள. ஆற்று-அந்தத் தென் பெண்ணை ஆற்றில் ஓடும். நீர்-புனலினுடைய. க்:சந்தி.கொழுந்து-கொழுந்துகள்; ஒருமை பன்மை மயக்கம். படர்ந்து-பலவகையான கொடிகள் படர்ந்து

சென்று. அந்தக் கொடிகளாவன: மிளகுக் கொடி, முல்லைக் கொடி, மல்லிகைக் கொடி, இருவாட்சிக் கொடி, அவரைக் கொடி, புடலங் கொடி, பறங்கிக் கொடி, பூசணிக் கொடி, சுரைக் கொடி முதலியவை. ஏறும்-அந்தப் பனை மரங்களின் மேல் ஏறும். நிலைமையது-நிலைமையைப் பெற்றது அந்தத் திருவாய்மூர். ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 8-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நறுமணம் கமழும் பல வகையான மலர்கள், மிதக்கும் பெரிய சமுத்திரத்தில் படியும் நீல உருவங்களைப் பெற்ற மேகங்கள் என்று கூறுமாறு மிகுதியாகச் சென்று துள்ளிக் குதித்த கருமை நிறத்தைப் பெற்ற எருமை மாடுகளினுடைய கன்றுக் குட்டிகளைப் போல, கரிய உடம்புகளையும் சிவந்த கண்களையும் பெற்ற வரால் மீன்கள் தங்களுடைய மடிகளை முட்ட அந்த மடிகளில் உள்ள முலைகளிலிருந்து பாலை மழையைப் போலப் பொழியும் கருமையான நிறத்தைப் பெற்ற எருமை மாடுகளைச் சுமந்துகொண்டு கரைகள் புரள்பவையாகிய அலைகளை வீசும் வாவிகள் அந்தத் திருவாய்மூரில் இருக்கும்.' பாடல் வருமாறு:

"மருமேவு மலர்மேய மாகடலி னுட்படியும்
உருமேகம் எனமண்டி உகைத்தகரும் கன்றுபோல்
வருமேனிச் செங்கண்வரால் மடிமுட்டப் பால்சொரியும்
கருமேதி தனைக்கொண்டு கரைபுரள்வ திரைவாவி."

மரு-நறுமணம். மேவும்-கமழும். மலர்-பல வகையாகிய மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்களாவன: செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், நீலோற்பல மலர், குமுத மலர், ஆம்பல் மலர், அல்லி மலர், மகிழ மலர், பவளமல்லிகை மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், பூவரச மலர், வில்வ மலர், தும்பை மலர், நுணா மலர், வேங்கை மலர், வாகை மலர், செவ்வரளி மலர், வெள்ளையரளி மலர், மஞ்சட்செவ்வந்தி மலர், வெள்ளைச் செவ்வந்தி மலர், மா மலர், கடம்ப மலர் முதலி

யவை. மேய-சார்ந்து மிதக்கும். மா-பெரிய. கடலினுட் படியும்-சமுத்திரத்தில் படியும். உரு-நீல நிறத்தைக் கொண்ட. மேகம்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். என-என்று கூறுமாறு; இடைக்குறை. மண்டி-மிகுதியாகச் சென்று. உகைத்த-உதைத்த; துள்ளிக் குதித்த. கரும்-கருமையான நிறத்தைப் பெற்ற. கன்றுபோல்-எருமை மாடுகளினுடைய கன்றுக்குட்டிகளைப் போல; ஒருமை பன்மை மயக்கம். வரு-தங்களுக்குக் கிடைத்துவரும். மேனி-கருமையான உடம்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செம்-சிவப்பாக இருக்கும். கண்-கண்களையும் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வரால்-வரால் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். மடி-தங்களுடைய மடிகளை; ஒருமை பன்மை மயக்கம். முட்ட-முட்டுவதனால். ட்:சந்தி. பால்-அந்த மடிகளில் உள்ள முலைகளிலிருந்து பாலை. சொரியும்-மழை பொழிவதைப் போலப் பொழியும். கரு-கருமையான நிறத்தைப் பெற்ற. மேதிதனை-எருமை மாடு களை. தனை: ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. க்:சந்தி. கொண்டு - தன்மேல் சுமந்துகொண்டு. கரை-கரைகள்; ஒருமை பன்மை மயக்கம். புரள்வ-புரள்பவை யாகிய. திரை-அலைகள் வீசும். வாவி வாவிகள் அந்தத் திருவாய்மூரில் இருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வாவி-வாபீ என்ற வடசொல்லின் திரிபு.

பிறகு வரும் 9-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பறந்து வந்து மொய்க்கும் வண்டுகள் சூழ்ந்திருக்கும் வரிசை, நீலமாகிய முழுமையாகிய வளைகளைப் போல அலைந்து திரியச் சிவந்த தளிர்களைப் போன்ற நறுமணம் வீசும் விரல்களைப் போல, செழுமையைப் பெற்ற அரும்புகளி னுடைய அழகு சிறந்து விளங்க, தன்னுடைய திருமேனியின் பிரகாசத்தினுடைய பிரதிபிம்பத்தைப் பார்க்கும் கண்ணாடி என்று கூறுமாறு வெள்ளை நிறத்தைப் பெற்ற சந்திரன் இந்தப் பூமியாகிய மடந்தை தன்னுடைய கைகளால் அணைத்

தாற் போல உயர்ந்து நிற்கும் பலவகையான மரங்களில் மலர்ந்த மலர்கள் நறுமணம் கமழும் பூம்பொழில்கள் அந்தத் திருவாய்மூரில் விளங்கும்.' பாடல் வருமாறு:

"மொய்யளிசூழ் நிரைநீல
முழுவலயங் களின்அலையச்
செய்யதளிர் நறுவிரலிற்
செழுமுகையின் நலம்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும்
ஆடியென வெண்மதியை
வையமகள் கை யணைத்தாற்
போலுயர்வ மலர்ச்சோலை."

மொய்-பறந்து வந்து மொய்க்கும். அளி-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றிப் பறக்கும். நிரை-வரிசை. நீல-நீலநிறத்தைப் பெற்ற. முழு-முழுமையாகிய. வலையங்களின்-வளைகளைப் போல. அலைய-அலைந்து திரிய. ச்:சந்தி. செய்ய-சிவந்த. தளிர் - தளிர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். தளிர்-முற்றாத இலை. நறு-நறுமணம் கமழும். விரலின்-விரல்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். செழு-செழுமையாகிய. முகையின்-அரும்புகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நலம்-அழகு; சிறப்ப-சிறந்து விளங்க. மெய்-தன்னுடைய திருமேனியின். ஒளியின்-பிரகாசத்தினுடைய. நிழல்-பிரதி பிம்பத்தை. காணும்-பார்க்கும். ஆடி-கண்ணாடி. என-என்று கூறுமாறு; இடைக்குறை. வெண்-வெள்ளை நிறத்தைப் பெற்ற. மதியை-சந்திரனை. வையமகள்-நிலமடந்தை. கை-தன்னுடைய கைகளால்; ஒருமை பன்மை மயக்கம். அணைத்தாற்போல்-தழுவிக் கொண்டதைப் போல. மலர்-பலவகையான மரங்களில் மலர்ந்த மலர்கள் நறுமணம் கமழும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சோலை-பூம்பொழில்

கள்; ஒருமை பன்மை மயக்கம். உயர்வ-உயர்ந்து நிற்பவை யாக அந்தத் திருவாய்மூரில் விளங்கும்.

பிறகு உள்ள 10-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருமுனைப்பாடி நாட்டில் திருமதில்கள் சுற்றி விளங்கும் நீர்வளம், நிலவளம், செல்வவளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்ற ஊர்களில் உள்ள எந்த இடங்களிலும் நறுமணம் கமழும் வயல்களில் வளர்ந்து நிற்கும் பலவகையான பயிர்கள் விளையும் விசாலமான வயல்கள் பல பரவலாக இருந்து உயரமாக உள்ள நெற் களைச் சேமித்து வைக்கும் குதிர்களும் வெயிலைப் போல ஒளியை வீசும் குழைகளைத் தங்கள் காதுகளில் அணிந் திருக்கும் மென்மையாக விளங்கும் பெண்மணிகள் வாழும் மாடங்களும் உயரமாக நின்று மயில்களினுடைய கூட்டமும், மேகங்களினுடைய கூட்டமும் ஒன்றுக்கு ஒன்று வேறு வேறாக நின்று நடனம் புரிய அந்தத் திருவாய்மூரினுடைய பக்கங்களில் அந்த மயில்களினுடைய கூட்டமும், மேகங்களி னுடைய கூட்டமும் அசைந்து ஆடுவனவாக விளங்கும்.' பாடல் வருமாறு:

"எயிற்குலவும் வளம்பதிகள்
எங்கும்மணம் தங்கும்வயற்
பயிர்க்கண்வியல் இடங்கள்பல
பரந்துயர்நெற் கூடுகளும்
வெயிற்கதிர்மென் குழைமகளிர்
விரவியமா டமும்மேவி
மயிற்குலமும் முகிற்குலமும்
மாறாட மருங்காடும்."

எயில்-அந்தத் திருமுனைப்பாடி நாட்டில் திருமதில்கள்: ஒருமை பன்மை மயக்கம். குலவும்-சுற்றிலும் விளங்கும். வளம்-நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம், ஆலய வளம் முதலிய வளங்களைப் பெற்ற; ஒருமை

பன்மை மயக்கம். பதிகள்-ஊர்களில் உள்ள. எங்கும்-எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். மணம்-நறுமணம். தங்கும்-தங்கிக் கமழும். வயல்-வயல்களில் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். பயிர்க்கண்-பல வகையான பயிர்கள் விளையும் இடங்களாகிய; பயிர்: ஒருமை பன்மை மயக்கம். கண்: ஒருமை பன்மை மயக்கம். அந்தப் பயிர்களாவன: சம்பா நெற் பயிர்கள், குறுவை நெற் பயிர்கள், மணற்கத்தை நெற் பயிர்கள், கரும்புச் செடிகள், வெற்றிலைக் கொடிகள் முதலியவை. வியல்-அகலமாகிய. இடங்கள் பல-பலஇடங்கள். பரந்து-பரவலாக இருந்து. உயர்-உயரமாக உள்ள. நெல்-நெற்கதிர்களைச் சேமித்து வைக்கும்; ஒருமை பன்மை மயக்கம். கூடுகளும்-குதிர்களும். வெயில்-சூரியன் வீசும் வெயிலைப் போல. கதிர்-ஒளியை வீசும். குழை-குழைகளைத் தங்களுடைய காதுகளில் அணிந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையாக உள்ள. மகளிர்-பெண்மணிகள் விரவிய-ஒருவரோடு ஒருவர் கலந்து வாழும். மாடமும்-மாடங்களும்; ஒருமை பன்மை மயக்கம். மேவி-உயரமாக நின்று. மயில்-மயில்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலமும்-கூட்டமும். முகில்-மேகங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலமும்-கூட்டமும். மாறாட-ஒன்றுக்கு ஒன்று வேறு வேறாக நின்று நடனம் புரிய. மருங்கு-அந்தத் திருவாய்மூரினுடைய பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். ஆடும்-அந்த மயில்களினுடைய கூட்டமும் மேகங்களினுடைய கூட்டமும் அசைந்து அசைந்து ஆடுபவைகளாக விளங்கும்.

பிறகு உள்ள 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பாவத்தை உண்டாக்கும் கெட்ட வழி மாறுமாறு நீலமணியைப் போல ஆலகால விடத்தை விழுங்கியமையால் நீலமாக விளங்கும் திருக்கழுத்தைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானாருக்கு உரிய உண்மையைப் பெற்று,

சைவ சமய வழியையும் தருமங்களையும் வழங்கும் திருநாவுக்கரசு நாயனாரும், ஆலால சுந்தரராகிய சுந்தர மூர்த்தி நாயனாரும் திருவவதாரம் செய்தருளும் வண்ணம் இருப்பது ஆகுமானால் இந்தப் பெரிய உலகத்தில் சிறந்து விளங்கும் திருமுனைப்பாடி நாட்டினுடைய பெருமையினுடைய வகைகளைப் பாடும் கீர்த்தியைப் பெற்ற பெருமை அடியேங்களுடைய அளவுக்குள் அடங்குவதோ?' பாடல் வருமாறு:

'' மறம்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறம்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடும் சீர்ப்பாடு.''

மறம்-பாவத்தை. தரு-உண்டாக்கும். தீநெறி-கெட்ட வழி. மாற-மாறுமாறு. மணி-நீலமணியைப் போல. கண்டர்-ஆலகால விடத்தை விழுங்கியமையால் நீலமாக விளங்கும் திருக்கழுத்தைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானாருக்கு உரிய. வாய்மை-உண்மையான நிலையைப் பெற்ற; ஆகுபெயர். நெறி - சைவ சமய வழியையும். அறம்-தருமங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். தரு-வழங்கியருளும். நாவுக்கரசும்-திருநாவுக்கரசு நாயனாரும். ஆலால சுந்தரரும்-ஆலால சுந்தரராகிய சுந்தர மூர்த்தி நாயனாரும். பிறந்தருள-திருவவதாரம் செய்தருள. உளது-வண்ணம் இருந்து விளங்குவது; இடைக்குறை. ஆனால்-ஆகுமானால். பேருலகில்-இந்தப் பெரிய உலகத்தில். சிறந்த-சிறப்போடு அமைந்த. திருமுனைப்பாடி-திருமுனைப்பாடி நாட்டினுடைய. த்:சந்தி. திறம்-பெருமையினுடைய வகைகளை; ஒருமை பன்மை மயக்கம். பாடும் சீர்-பாடியருளும் சீர்த்தியைப் பெற்ற. ப்:சந்தி. பாடு-பெருமை. நம்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. அளவோ-அறிவினுடைய அளவுக்குள் அடங்குவதோ? அடங்காது என்பது கருத்து.

பிறகு வரும் 12-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இந்த வகைகளாகிய பெருமைகளைப் பெற்ற அழகிய திருமுனைப்பாடி நாட்டில் எத்தனையோ பலவாகிய ஊர்களும், எந்தக் காலத்திலும் உண்மையாக உள்ள வளங்கள் ஓங்கியிருக்குமாறு வளர்ந்து வரும் மேம்பாட்டைப் பெற்றவை; அத்தகைய வளங்களைப் பெற்ற அந்த ஊர்களுக்குள் சைவ சமய வழியை ஏழு உலகங்களில் வாழ்பவர்களும் பாதுகாக்கும் பான்மையால் தெய்வத் தன்மையைக் கொண்ட வழியாகிய சைவ சமயத்தைப் பெருகி வளருமாறு புரியும் செல்வத்தைப் பெற்றதாகும் தலம் திருவாய்மூர் என்பது.' பாடல் வருமாறு:

"இவ்வகைய திருநாட்டில் எனைப்பலவூர் களுமென்றும்
மெய்வளங்கள் ஓங்கவரும் மேன்மையன; ஆங்கவற்றுள்
சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாய்மூர்."

இவ்வகைய-இந்த வகைகளாகிய பெருமைகளைப் பெற்ற. வகை: ஒருமை பன்மை மயக்கம். திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். எனை-எத்தனையோ. ப்: சந்தி. பல ஊர்களும்-பலவாகிய ஊர்களும். என்றும்-எந்தக் காலத்திலும். மெய்-உண்மையாக உள்ள. வளங்கள்-நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம், ஆலய வளம் முதலிய வளங்கள். ஓங்க-ஓங்கியிருக்குமாறு. வரும்-வளர்ந்து வரும். மேன்மையன-மேம்பாட்டைப் பெற்றவை. ஆங்கு-அத்தகைய வளங்களைப் பெற்ற. அவற்றுள்-அந்த ஊர்களுக்குள். சைவ-சைவ சமயமாகிய. நெறி-வழியை. ஏழுலகும்-ஏழு உலகங்களில் வாழ்பவர்களும்; இட ஆகு பெயர்; உலகும்: ஒருமை பன்மை மயக்கம். பாலிக்கும்-பாதுகாத்து வரும். தன்மையினால்-பான்மையால். தெய்வ-தெய்வத்தன்மையைப் பெற்ற. நெறி-வழியாகிய. ச்: சந்தி. சிவம்-சைவ சமயத்தை. பெருக்கும் - பெருகி

வளருமாறு செய்யும். திரு-செல்வத்தை. ஆம்-பெற்றதாகும். ஊர்-தலம். திருவாய்மூர்-திருவாய்மூர் என்பது.

அடுத்து உள்ள 13-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருவாய்மூரில் அழகிய கொங்கைகளைப் பாரமாகச் சுமந்து கொண்டு வருந்துபவை பெண்மணிகளினுடைய இடுப்புக்கள்; ஒலிப்பவை அவர்கள் தங்களுடைய திருவடிகளில் அணிந்திருக்கும் சிலம்புகள்; ஒலியை எழுப்புபவை அந்தப் பெண்மணிகள் தங்களுடைய இடுப்புக்களில் அணிந்திருக்கும் மாணிக்கங்களைப் பதித்திருப்பவையும் எட்டு வடங்களைப் பெற்றவையும் ஆகிய மேகலைகள்; அந்தத் திருவாய்மூரில் உயரமாக விளங்குபவைகளாகிய மாடங்களினுடைய வரிசை; அந்தத் திருவாய்மூரில் வாழும் மக்கள் பெற்றுத் தங்களுடைய வாழ்க்கைகளை நடத்துபவை ஒரு குற்றமும் இல்லாத முப்பத்திரண்டு தருமங்கள்; அவர்கள் அகன்று (நீக்கி) வாழ்வது கெட்ட வழி; நெருங்கி விளங்குபவை பெருமையைப் பெற்று விளங்கும் குடும்பங்கள்.' பாடல் வருமாறு:

" ஆங்குவன முலைகள்சுமந்
தணங்குவன மகளிர்இடை;
ஏங்குவன நூபுரங்கள்;
இரங்குவன மணிக்காஞ்சி;
ஓங்குவன மாடநிரை;
ஒழுகுவன வழுவில்அறம்;
நீங்குவன தீங்குநெறி;
நெருங்குவன பெருங்குடிகள்."

ஆங்கு-அந்தத் திருவாய்மூரில். வன-அழகிய. முலைகள்_ கொங்கைகளை. சுமந்து-பாரமாகச் சுமந்து கொண்டு. அணங்குவன-வருத்தத்தை அடைபவை. மகளிர்-பெண்மணிகளினுடைய. இடை-இடுப்புக்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த ஊரில் வாழும் மக்கள் வருத்தத்தை அடையாமல்

வாழ்பவர்கள் என்பது குறிப்பு. ஏங்குவன-ஒலிப்பவை. நூபுரங்கள்-அந்தப் பெண்மணிகள் தங்களுடைய திருவடிகளில் அணிந்து கொண்டிருக்கும் சிலம்புகள். அந்த ஊரில் வாழும் ஆடவர்களும் பெண்மணிகளும், 'இவை நமக்குக் கிடைக்கவில்லையே!" என்று ஏங்கும் ஏக்கத்தை உடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்பது குறிப்பு. இரங்குவன-ஒலியை எழுப்புபவை. மணி-மாணிக்கங்களைப் பதித்திருப்பவையும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. காஞ்சி-எட்டு வடங்களைப் பெற்றவையுமாகிய மேகலைகள்; ஒருமை பன்மை மயக்கம். 'ஒட்டியாணங்கள்' எனலும் ஆம். அந்த ஊரில் வாழும் மக்கள் எதனாலும் வருத்தத்தை அடைய மாட்டார்கள் என்பது குறிப்பு. ஓங்குவன-அந்தத் திருவாய்மூரில் உயரமாக விளங்குபவைகளாகிய. மாடம்-மாடங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஒழுகுவன-அந்தத் திருவாய்மூரில் வாழும் ஆடவர்களும் பெண்மணிகளும் பெற்றுத் தங்களுடைய வாழ்க்கைகளை நடத்துபவை. வழு-ஒரு குற்றமும். இல்-இல்லாத. அறம்-முப்பத்திரண்டு தருமங்கள்; ஒருமை பன்மை மயக்கம்; அவை இன்னவை என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. அந்தத் திருவாய்மூரில் உள்ள திருமாளிகைகள் செவ்வையாகக் கட்டப் பெற்றிருப்பதனால் எவ்வளவு கடுமையான மழை பொழிந்தாலும் சிறிதளவும் நீர் ஒழுகாமல் இருக்கும் என்பது குறிப்பு. நீங்குவன-அவர்கள் அகன்று (நீக்கி)வாழ்வது. தீங்கு-கெட்டதாகிய. நெறி-வழி. அந்தத் திருவாய்மூரில் வாழ்பவர்கள் எல்லா வகையான வசதிகளையும் பெற்று வாழ்வதனால் அவர்கள் அந்த ஊரை விட்டு நீங்கிப் போக மாட்டார்கள் என்பது குறிப்பு. நெருங்குவன-நெருங்கி விளங்குபவை. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். குடிகள்-குடும்பங்கள். அந்த ஊரில் வாழும் மக்கள் திருடர் முதலியவர்களால் நெருக்கப்பட்டு வருந்த மாட்டார்கள் என்பது குறிப்பு. குடிகள்-'குடிமக்கள்' எனலும் ஆம். நெருங்குவன; திணை மயக்கம்.

அடுத்து வரும் 14-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருவாய்மூரில் உள்ள வயல்கள் நீலோற்பல மலர்கள் மலர்ந்திருப்பதைக் காட்டும்; மையைப் போன்ற கரிய களங்கத்தைச் சந்திரன் காட்டும்; மலர்ச்சியைப் பெற்று நீளமாக உள்ள திருவாய்மூரில் இருக்கும் வீதிகள் அழகிய ஊஞ்சல்கள் பலவற்றைக் காட்டும்; விடியற் காலத்தில் அந்த நீலோற்பல மலர்கள் இருட்டைக் காட்டிக் கொண்டு விளங்கும்; அந்த விடியற் கால வேளையில் உழவர்கள் நிலங்களை உழும்போது மாடுகளை ஓட்டும் சத்தத்தை அந்த ஊரில் கேட்கலாம்; பல வகையாகிய பாத்திரங்களையும் அணிகலன்களையும் உயரமாக நிற்கும் திருவாய்மூரில் உள்ள திருமாளிகைகள் தோன்றச் செய்யும்; இவ்வாறு ஒரு வரம்பைக் காட்ட முடியாத பெரிய வளங்கள் அந்தத் திருவாய்மூரில் நிறைந்து விளங்கும்.' பாடல் வருமாறு:

"மலர்நீலம் வயல்காட்டும்;
மைஞ்ஞிலம் மதிகாட்டும்;
அலர்நீடு மறுகாட்டும்
அணியூசல் பலகாட்டும்;
புலர்நீலம் இருள்காட்டும்;
பொழுதுழவர் ஒலிகாட்டும்;
கலம்நீடு மனைகாட்டும்;
கரைகாட்டாப் பெருவளங்கள்."

மலர் நீலம் வயல்-அந்தத் திருவாய்மூரில் உள்ள வயல்கள் நீலோற்பல மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். காட்டும்—காணுமாறு செய்யும். மை-மையைப் போன்ற கருமையான களங்கத்தை. நீலம் என்பது இங்கே கரிய நிறத்தைக் குறித்தது; "நீல நிறக் காக்கை" என வருதலைக் காண்க. மதி-சந்திரன். காட்டும்-தன்னிடத்தில் இருப்பதைக்காண்பிக்கும். அலர்-மலர்ச்சியைப் பெற்று; முதல்நிலைத் தொழிற் பெயர். நீடு-நீளமாக இருக்கும். மறுகு-திருவாய்மூரில் உள்ள

தெருக்களில்; ஒருமை பன்மை மயக்கம். ஆட்டும்-ஆடவர்களும் பெண்களும் ஏறிக் கொண்டு ஆட்டும். அணி-அழகிய. ஊசல்-ஊஞ்சல்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பல வற்றை. காட்டும்-அந்தத் தெருக்களில் உயரமாக உள்ள திருமாளிகைகள் காண்பிக்கும். புலர்-விடியும் காலத்தில்; வினையாலணையும் பெயர். நீலம்-அந்த நீலோற்பல மலர்கள். இருள்-இருட்டை. காட்டும்-தோன்றுமாறு செய்யும். பொழுது-அந்த விடியற்கால நேரத்தில். உழவர்-அந்தத் திருவாய்மூரில் உள்ள வயல்களில் பணிகளைப் புரியும் உழவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஒலி-உழும்போது ஏரில் கட்டப் பெற்ற மாடுகளை ஓட்டும் சத்தம். காட்டும்-அந்த வயல்கள் கேட்குமாறு செய்யும். கலம்-பலவகையான பாத்திரங்களையும், பலவகையான அணிகலன்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அந்தப் பாத்திரங்களாவன: வெண்கலப் பானை, அரிக்கும் சட்டி, குடம், செம்பு, தவலை, ஈயச் செம்பு, அண்டா, குண்டா, போகி, கிண்ணங்கள், எண்ணெய்க் கரண்டி, இரும்புக் கரண்டி, பித்தளைக் கரண்டி முதலியவை. அந்த அணிகலன்களாவன: சுட்டி, மாட்டல், ஜிமிக்கிகள், தோடுகள், கடுக்கன்கள், வைரக் கம்மல், அட்டிகை, காசு மாலை, நவரத்தின மாலை, கை வளையல்கள், மோதிரங்கள், வங்கிகள், லோலாக்குகள், ஒட்டியாணம், மேகலை, கால் காப்புக்கள், மெட்டிகள், பாதசரங்கள், சிலம்புகள், தண்டைகள், வெண்டயங்கள் முதலியவை. நீடு-திருவாய்மூரில் உயரமாக நிற்கும். மனை-திருமாளிகைகள்; ஒருமை பன்மை மயக்கம். காட்டும்-காண்பிக்கும். கரை-வரம்பை. காட்டா-காட்ட முடியாத. ப்:சந்தி. பெரு-பெரிய. வளங்கள்-செல்வங்கள் அந்தத் திருவாய்மூரில் நிறைந்து விளங்கும்.

பிறகு உள்ள 15-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இந்தப் பூ மண்டலத்தில் திகழ்ந்த அந்த ஒப்பற்ற சிவத்தலமாகிய திருவாய்மூரில் எல்லா வகைகளாகிய நல்ல

பண்புகளிலிருந்தும் தவறாத ஒழுக்கத்தைப் பெற்ற பரம்பரையில் பிறந்த குடிமக்களினுடைய நடுவில் விலக்குதல் இல்லாத இல்லற வாழ்வில் அமைந்த நல்லொழுக்கமாகிய மேன்மையையும் தகுதியையும் பெற்ற நிலையைக் கொண்ட வேளாளர்களினுடைய சாதியில் பிறக்கும் பெருமையைப் பெற்ற குறுக்கையர்களினுடைய குடும்பங்கள் திகழும்.' பாடல் வருமாறு:

'' தவத்தின்கண் விளங்கியஅத்
தனிப்பதியில் அனைத்துவித
நலத்தின்கண் வழுவாத
நடைமரபிற் குடிநாப்பண்
விலக்கில்மனை ஒழுக்கத்தின்
மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக்
குறுக்கையர்தம் குடிவிளங்கும்.''

தவத்தின்கண்-இந்தப் பூ மண்டலத்தில். விளங்கிய-விளக்கத்தைப் பெற்றுத் திகழ்ந்த. அத்தனிப் பதியில்-அந்த ஒப்பற்ற சிவத்தலமாகிய திருவாய்மூரில். அனைத்து-எல்லா. வித-வகைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். நலத்தின் கண்-நல்ல பண்புகளிலிருந்தும்; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். அந்தப் பண்புகளாவன: பொறுமை, சான்றாண்மை, கோபமின்மை, சோம்பல் இன்மை, விடாமுயற்சி, உறவினர்களைப் பாதுகாத்தல், பெண்மணிகள் கற்பு நெறி வழுவாமல் இருத்தல், ஆடவர்கள் தங்களுடைய மனைவிமார்களிடம் என்றும் மாறாத காதலோடு விளங்குதல், தங்களுடைய இல்லங்களுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்று உபசரித்து விருந்துணவை வழங்குதல், ஆலயங்களுக்குச் சென்று கடவுளை வணங்குதல், யாவரும் ஒற்றுமையாக இருந்து வாழ்தல், இடித்துக் கூறும் நண்பர்களைப் பெற்றிருத்தல் முதலியவை. வழுவாத-தவறாத. நடை-

ஒழுக்கத்தைப் பெற்ற. மரபில்-பரம்பரையில் பிறந்த. குடி-குடி மக்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாப்பண்-நடுவில். விலக்கு-சான்றோர்கள் ஆகாதவை என்று விலக்கும் குற்றங்கள்; ஒருமை பன்மை மயக்கம். இல்-இல்லாத; கடைக் குறை. மனை-இல்லற வாழ்வில் அமைந்த; ஆகு பெயர். ஒழுக்கத்தின் - நல்லொழுக்கமாகிய. மேதக்க-மேன்மையையும் தகுதியையும் பெற்ற. நிலை- நிலைத்து நிற்கும் நிலையைக் கொண்ட. வேளாண் குலத்தின் கண்-வேளாளர்களினுடைய சாதியில்; வேளாண்: திணை மயக்கம். வரும்-பிறக்கும். பெருமை-பெருமையைப் பெற்ற. க்:சந்தி. குறுக்கையர் தம்-குறுக்கையர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம்; தம்:அசை நிலை. குடி-குடும்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். விளங்கும்-அந்தத் திருவாய்மூரில் திகழும்.

பிறகு உள்ள 16-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தக் குறுக்கை வேளாளர்களினுடைய குடும்பங்களில் மேலாக விளங்கிய புதல்வராகிய பெருமையையும் நல்ல இயல்புகளையும் பெற்றவர் புகழ் மிகுதியாக உள்ள இல்லறத்தை நடத்தி விருந்தினர்களை வரவேற்று அவர்களுக்கு விருந்து உணவுகளைவழங்கும் மேம்பாட்டைப் பெற்றவராகி, சுற்றத்தார்கள் வளரும் பெருமையையும் சிறப்பையும் கொண்டவராக இருப்பவரானார் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு. தென்கிழக்கு, தென் மேற்கு என்னும் எட்டுத் திசைகளிலும் உள்ள ஊர்களில் வாழும் மக்களிடம் மேவும் பெருமை விளங்குமாறு பிறந்து வரும் புகழனார் என்பவர்.' பாடல் வருமாறு:

" அக்குடியின் மேல்தோன்றல்
ஆயபெரும் தன்மையினார்
மிக்கமனை அறம்புரிந்த
விருந்தளிக்கும் மேன்மையினார்
ஒக்கல்வளர் பெருஞ்சிறப்பின்
உளரானார் உளரானார்

திக்குநில வும்பெருமை
திகழவரும் புகழனார்."

அக்குடியின்-அந்தக் குறுக்கை வேளாளர்களினுடைய குடும்பங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மேல்-மேலாக விளங்கிய. தோன்றல்-புதல்வர். ஆய-ஆகிய. பெரும்-பெருமையையும். தன்மையினார்-நல்ல இயல்புகளையும் பெற்றவர். தன்மை: ஒருமை பன்மை மயக்கம். அந்த இயல்புகளாவன: கோபம் இன்மை, சோம்பல் இன்மை, விடா முயற்சி, விருந்தினர்களை வரவேற்று உபசரித்து விருந்துணவை வழங்கும் இயல்பு, யாவரும் புகழும் நல்ல நிலையில் வாழ்தல், தங்களுடைய மனைவிமார்களிடத்தில் காதலோடு ஒழுகுதல் முதலியவை. மிக்க-புகழ் மிகுதியாக உள்ள. மனை அறம்-இல்லறத் தர்மத்தை. புரிந்த-நடத்திய. விருந்தளிக்கும்-விருந்தினர்களை வரவேற்று அவர்களுக்கு விருந்து உணவுகளை வழங்கும். மேன்மையினார்-மேம்பாட்டைப் பெற்றவராகி. ஒக்கல்-சுற்றத்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். வளர்-வளரும். பெரும்-பெருமையையும். சிறப்பின்-சிறப்பையும் கொண்டவராக; ஆகு பெயர். உளரானார்-இருப்பவரானார்; உளர்: இடைக் குறை. உளரானார்-நல்ல திருவுள்ளத்தைப் பெற்றவராக ஆனார். உளர்: இடைக்குறை. திக்கு-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வட மேற்கு, தென் கிழக்கு, தென் மேற்கு என்னும் எட்டுத் திசைகளிலும் உள்ள ஊர்களில் வாழும் மக்களிடம்; ஒருமை பன்மை மயக்கம்; இட ஆகு பெயர். நிலவும்-மேவும். பெருமை-பீடு. திகழ-விளங்குமாறு. வரும்-பிறந்து வரும். புகழனார்-புகழனார் என்னும் திருநாமத்தைப் பெற்றவர். பெற்றவர் உளவரானார் என்று கூட்டிப் பொருள் உரைக்க.

அடுத்து உள்ள 17-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தப் புகழனாருக்கு உரிமையை உடையதாகிய ஒப்பு இல்லாத குலமாகிய குடும்பத்தில் மகிழ்ச்சியை அடையுமாறு

திருவவதாரம் செய்தருளி வரும் திருமணத்தைப் புரிந்த மாதினியார் என்னும் பெண்மணியாருடைய அழகிய வயிற்றில் மலர்ச்சியைப் பெற்று செந்தாமரை மலர்களில் உள்ள வரிசையாகிய இதழ்களினுடைய உள்ளிடத்தில் விளங்குமாறு திருவவதாரம் புரிந்தருளி வரும் திருமகளைப் போன்ற திலகவதியார் என்னும் பெண்மணியார் திருவவதாரம் செய்தருளினார்.' பாடல் வருமாறு:

'' புகழனார் தமக்குரிமைப்
பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த
மாதினியார் மணிவயிற்றில்
நிகழும்மலர்ச் செங்கமல
நிரையிதழின் அகவயினில்
திகழவரும் திருவனைய
திலகவதி யார்பிறந்தார்.''

புகழனார் தமக்கு-அந்தப் புகழனாருக்கு. தம்:அசை நிலை. உரிமை-உரிமையை உடையதாகிய. ப்:சந்தி. பொரு-ஒப்பு. இல்-இல்லாத; கடைக்குறை. குல்-குலமாகிய. க்:சந்தி. குடியின்கண்-குடும்பத்தில். மகிழ-மகிழ்ச்சியைத் தம்முடைய தந்தையும் அன்னையும் அடையுமாறு. வரு-திருவவதாரம் புரிந்தருளி வரும். மணம்-திருமணத்தை. புணர்ந்த-புரிந்த. மாதினியார்-மாதினியார் என்னும் அன்னையாருடைய. மணி வயிற்றில்-அழகிய வயிற்றில். நிகழும்-மலர்ச்சியைப் பெற்று இருக்கும். மலர்ச் செங்கமல-செந்தாமரை மலர்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசையாகிய. இதழின்-இதழ்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். அகவயினில்-உள்ளிடத்தில். திகழ-விளங்குமாறு. வரும்-திருவவதாரம் புரிந்தருளி வரும். திரு-திருமகளை. அனைய-போன்ற. திலகவதியார்-திலகவதியார் என்னும் திருநாமத்தைப் பெற்ற பெண்மணியார். பிறந்தார்-திருவவதாரம் செய்தருளினார்.

மணி வயிறு: "மன்னு புகழ்க் கௌசலை தன் மணி வயிறு வாய்த்தவனே." என்று குலசேகரப் பெருமாள் பாடியருளியதைக் காண்க.

பெண்மணிக்குத் திருமகள் உவமை: "திருத்திகழ் மலைச் சிறுமி." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "பெருந்திரு இமவான் பெற்ற பெண் கொடி." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "திருவனார் பணிந்தேத்தும் திகழ் திருவாஞ்சியத் துறையும் ஒருவனார்." என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "திருவின கருக்குழி." என்று திருமூலரும், "எஞ்சாத திருவொடும் பொலியும் ஒரு பால்." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "திருமகள் என்ன நின்ற தேவியார்.", "பதும நற்றிருவின் மிக்கார்.", "திருமகட்கு மேல் விளங்கும் செம்மணியின் தீபமெனும் ஒரு மகளை.", "பெறலரும் திருவினாளை.", "அம்புய மலராள் போல்வாள்.", "செங்கமலத் திரு மடந்தை கன்னி நாடாள்." என்று சேக்கிழாரும், "திருவின் வடிவொக்கும் தேவகி.", "ஒரு மகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்." என்று பெரியாழ்வாரும், "தவந்தீர் மருங்கில் திருமகள் போல... பைந்தொடி.", "திருமகள் போலக் கோமகள் போதும்.", "திருமகள் போல... தோற்ற பாவாய்.", "பூவீற்றிருந்த திருமகள் போல... வாசவத்தை.", "தாமரைத் தடாகத் துறையும் மாசில் மடமகள் மருங்கின் வடிவாய்.", "இயற்கைத் திருமகள் இவள்.", "திருமகளாயினும் உருவினும் உணர்வினும் ஒப்புமையாற்றாத் தெரியிழை அல்குல் தேமொழிக் குறுமகள்." (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், "மகளிருள் திருவனாளை.", "செய்பூந்தவிசின் மிசையல்லது சேறலில்லா." (சீவக சிந்தாமணி, 840, 2338) என்று திருத்தக்க தேவரும், "பாடகச் செம்பதும மலர்ப் பாவையர்.", "அவனித் திருவும்." (திருவவதாரப் படலம், 32, 129), "பூமட மயிலினைப் பொருவும் பொற்பொடும்." (தாடகை

வரைப் படலம், 29), "சீதையைத் தருதலாலே திருமகள் இருந்த செய்ய போதெனப் பொலிந்து தோன்றும் பொன் மதில் மிதிலை.", "மலர்மேல் நின்றிம் மங்கை வையத்திடைவைகப் பல காலும் தம் மெய்நனி வாடும்படி நோற்றார்." (மிதிலைக் காட்சிப் படலம், 5, 69), "புணரி எழுகின்ற தெள்ளமுதோடெழுந்தவளும் இழிந்தொதுங்கத் தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி.", "இத்திருவை நிலவேந்தர் எல்லாரும் காதலித்தார்."(கார்முகப் படலம், 17 19, "தெண்டிரைப் பாலைத் திரு அன்னவர்." (எழுச்சிப் படலம், 47), "அம்புயத்தணங்கின் அன்னவர்.", "பொன்னனையாள்.", "பூமகளே காண் என்ன." (பூக்கொய் படலம் 8, 24, 31), "செய்ய தாமரைச் செல்வியைத் தீம்புனல் கையின் ஆட்டும் களிற்றர சென்னவே." (நீர் விளையாட்டுப் படலம், 35), "அவ்வல்லி மலர் புல்லும் மங்கை இவளாம்.", "போதினை வெறுத்தரசர் பொன்மனை புகுந்தாள்." (கோலம் காண் படலம், 32, 35,) "திருவேயனையாள் முகமோ தெரியின்,", "அலை கடற் பிறந்து பின்னை அவனியில் தோன்றி.", "பூமகளும் பொருளும் என மாமகள் தன்னொடு மன்னுதி." (கடிமணப் படலம், 14, 80, 87), "சீதையாம் திருமகள்.", "புவியெனும் திருவும்.", "மலர் மகள் கலையூர் பெண்ணினும் நல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்." (மந்திரப் படலம், 9 38, 40), "சனகியாம் கடிகமழ் கமலத்தல்லை." (மந்தரை சூழ்ச்சிப் படலம், 88). "மகளிரெல்லாம் சீதையை ஒத்தார் அன்னாள் திருவினை ஒத்தாள்.", "அற்புதன் திருவைச்சேரும் அருமணம்." (கைகேசி சூழ்வினைப் படலம், 16, 73), "கீரை சுற்றித் திருமகள் பின் செல.", "தாமரைப் பொன்னும் தானும் ஓர் தேர்மிசைப் போயினான்." (நகர் நீங்கு படலம், 234, 238), "தானும் தம்பியும் மிதிலைப்பொன்னும் போயினன்." (தைலமாட்டுப் படலம், 60), "சீலம் இன்னதென்றருந்திக் கருளிய திருவே.", "தெரிவை மார்க்கொரு கட்டளை எனச் செய்த

திருவே.'', ''பொன்னிறத் திருவொடும் குடிபுக்கான்.'' (சித்திர கூடப் படலம், 16, 33, 50), ''இருநகர்த் திரு தீர்ந்தனளாம்.'' (பள்ளியடைப் படலம், 28), ''தாமரைச் செல்வியும் தவத்தை மேவினாள்.'' (ஆற்றுப் படலம், 42) ''திருவான நில மகளை.'' (விராதன் வதைப் படலம்,58), ''பொன்னொழுகு பூவிலுறை பூவை எழில் பூவைப் பின்னெழில் கொள்வாள்.'', ''தீதில் வரவாக திருநின் வரவு.'', ''திருவிங்கு வருவாள் கொல்லோ.'', ''மிதிலை வேந்தன் பொன்னொடும்.'', ''தேவியோ திருமங்கையிற் செவ்வியாள்.'', ''தாமரை உறையும் நங்கை இவரென நெருநல் நடந்த வரோதாம்.'' (சூர்ப்பணகைப் படலம், 38, 59, 69, 87), ''தாமரை தவிரப் போந்தாள்... பொன்வயின் மேனி கொண்டாள்.'', ''தாமரை இருந்த தையல் கேடியாம் தரமும் அல்லள்.'', ''பொன்மயமான நங்கை.'', ''பொன்னனார் எடுக்க.'', ''பொன்னனாள் புக்க சாலை காத்தனன்.'' (மாரீசன் வதைப் படலம், 67, 69, 87, 95, 239), ''சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்திவண் மேயவள்.'' (சடாயு உயிர் நீத்த படலம், 29), ''காமரு திருவை நீத்தோ.'', ''செந்தாமரை ஒதுங்கும் அன்னம் இவளால்.'', ''பொன்னை நாடாதிண்டிருத்தல் பொருளோ.'' (அயோமுகிப் படலம், 4, 30, 32), ''திருவாயனைய சேதாம்பற் கயலே கிடந்த செங்கிடையே.'', ''தாமரையின் நிலயம் பூத்தாள்.'' (பம்பா நதிப் படலம், 30, 32), ''திருமகள் அனைய அத் தெய்வக் கற்பினாள்.'', ''திருமகள் உறைவிடம் தேர வேண்டுமால்.'' (கலன்காண் படலம், 13, 31), ''மங்கையர்க் கோதி வைத்த இலக்கணம் வண்ண வாசப் பங்கயத் தவட்கும் ஐயா நிரம்பல பற்றி நோக்கின் செங்கயற் கருங்கட் செவ்வாய்த் தேவரும் வணங்கும் தெய்வக் கொங்கையைக் குயிலுக் கொன்றும் குறைவில்.'' (நாடவிட்ட படலம், 61), ''இலங்கையில் அத் திருவைக் கண்டனன்.'' (ஊர்தேடு படலம், 232), ''இவன் கமலச் செல்வியே.'' (காட்சிப்

திலகவதியாருக்குப் பிறகு. மலரும்-மலர்ச்சியைப் பெற்று விளங்கும். மருணீக்கியார்-மருள் நீக்கியார் என்பவர். வந்து-திருவாய்மூருக்கு வந்து. அவதாரம் செய்தார்-திருவவதாரம் செய்தருளினார்.

பிறகு வரும் 19-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மாதினியார் என்னும் பெண்மணியாருடைய அழகிய வயிற்றில் திருவாய்மூரில் நிலை பெற்றுவிளங்கிய சீர்த்தியைப் பெற்ற புகழனாருடைய புதல்வராகிய அந்த மருணீக்கியார் திருவவதாரம் செய்தருளியதற்குப் பிறகு செய்ய வேண்டிய கடமைகளாகிய முறைமைப்படி உள்ள மங்கலக் காரியங்களாகிய மேம்பாட்டையும் தகுதியையும் பெற்ற நல்ல செயல்கள் சிறப்பாக அமைய தாங்கள் விழைந்த மற்ற மக்கள் பாராட்டும் பாராட்டுதல்களோடு குற்றம் இல்லாத பல உறவினர்களும் வாழ்த்துமாறு அந்த மருணீக்கியார் இளங் குழந்தைப் பருவத்தைக் கடந்தருளினார்.' பாடல் வருமாறு:

"மாதினியார் திருவயிற்றில்
மன்னியசீர்ப் புகழனார்
காதலனார் உதித்ததற்பின்
கடன்முறைமை மங்கலங்கள்
மேதகுநல் வினைசிறப்ப
விரும்பியபா ராட்டினுடன்
ஏதமில்பல் கிளைபோற்ற
இளங்குழலிப் பதம்கடந்தார்."

மாதினியார்-புகழனாருடைய பத்தினியாராகிய மாதினியாருடைய. திருவயிற்றில்-அழகிய வயிற்றிலிருந்து; உருபு மயக்கம். மன்னிய-திருவாய்மூரில் நிலை பெற்று விளங்கிய சீர்-சீர்த்தியைப் பெற்ற. ப:சந்தி. புகழனார்-மாதினியாருடைய கணவராகிய புகழனாருக்கு. காதலனார்-புதல்வராகிய மருணீக்கியார். உதித்ததற்பின்-திருவவதாரம் செய்தருளியதற்குப் பிறகு. கடன்-செய்ய வேண்டிய கடமைகளாகிய ஒருமை பன்மை மயக்கம். முறைமை-முறைப்படி. மங்கலங்

கள்-மங்கலமாகிய காரியங்களாகிய. அவையாவன: குடுமி வைத்தல், பள்ளிக்கு அனுப்பப் பூசை போடுதல் முதலியவை. மேதகு-மேம்பாட்டையும் தகுதியையும் பெற்ற. நல்-நல்ல. வினை-செயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். சிறப்ப-சிறப்பாக அமைய. விரும்பிய-தாங்கள் விழைந்த. பாராட்டினுடன்-அந்தத் திருவாய்மூரில் வாழும் மக்கள் பாராட்டிக் கூறும் பாராட்டுதல்களோடு; ஒருமை பன்மை மயக்கம். ஏதம்-குற்றம்; 'துன்பம்' எனலும் ஆம். இல்-இல்லாத; கடைக்-குறை. பல்-பல. கிளை-உறவினர்கள்; திணை மயக்கம். போற்ற-வாழ்த்துக்களைக் கூறுமாறு. இளங்குழவி-இளங் குழந்தை. ப்:சந்தி. பதம்கடந்தார்-பருவத்தைக் கடந்தருளினார்.

பிறகு உள்ள 20-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மருணீக்கியாருடைய தலையில் உள்ள மயிர்களை அகற்றும் குடுமி வைத்தலாகிய திருமணச் செயலையும் தெளிந்த அறிவைப் பெற்றவர்களும், திருவாய்மூரில் வாழ்பவர்களும் ஆகிய பல மனிதர்கள் எல்லாரு மகிழ்ச்சியில் சிறந்து விளங்கவும் அந்தச் செயலைச் செய்ததற்குப் பிறகு நிதியத்தை வெள்ளத்தைப் போல அந்த மக்கள் பெற்றுக்கொள்ளுமாறு வழங்கி தம்முடைய மெய், வாய், கண்கள், காதுகள், மூக்கு என்னும் ஐந்து இந்திரியங்களும் பெறுபவையாகிய தம்முடைய திருவுள்ளத்தில் அரும்பிய கருண்ட அறியாமையைப் போக்கிவிட்டு மலருமாறு புரிவிக்கும் அறுபத்து நான்கு கலைகளைக் கற்றுப் பழகும் வண்ணம் ஆரம்பித்து வைத்தார்கள்.' பாடல் வருமாறு:

"மருணீக்கி யார்சென்னி
 மயிர்நீக்கும் மணவினையும்
தெருணீர்ப்பன் மாந்தரெலாம்
 மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருணீத்தம் கொளவீசிப்
 புலன்கொளுவ மனம்முகிழ்த்த

படலம், 69), "திருமகன் இருந்த திசை." (நிந்தனைப் படலம், 19), "முளரி நீங்கிய தையலை நோக்கிய தலையன்.", (திருவடி தொழுத படலம், 55), "பூமேல் சீதை நாயகன்." (அங்கதன் தூதுப் படலம், 21), "செந்திரு நீர் அல்லீரேல்.", "பூவின் மேல் இருந்த தெய்வத்தையலும் பொதுமையுற்றாள்.", "தீங்கிலாக் கற்பிற்றிரு மடந்தை சேடியாம் பாங்கினாள்." (மாயா சனகப் படலம், 53, 62, 83), "சீதையைத் திருவைத் தீண்டிச் சிறை வைத்த தீயோன்.", "தையலைத் துணையிலாளைத் தவத்தியைத் தருமக்கற்பின் தெய்வ தம் தன்னை மற்றுன் தேவியைத் திருவை.", (மாயா சீதைப் படலம், 49, 66), "திரு மகளைத் தேவர்க்கும் தெரிவரிய தெய்வக் கற்பின் பேர் மகளை." (இராவணன் வதைப் படலம், 226), "திருவினை அல்குற் கேற்ப மேகலை தழுவச் சேர்த்தார்.", "தாமரை ஏய்ந்ததன் கோயிலே எய்து வாளெனப் பாய்ந்தனள்.", "திருவினை நிலத்தோடேந்தித் தென்றிசை இலங்கை புக்கான்." (மீட்சிப் படலம், 45, 85, 283), "தாமரைக் கிழத்தியோடும் தயரத ராமன் சார்ந்தான்.", "பூ மலர்த்த விசை நீத்துப் பொன் மதில் மிதிலை பூத்த தேமொழித் திருவை." (விடை கொடுத்த படலம், 1, 22) என்று கம்பரும் பாடியவற்றையும், "மாமலர் மேல் திரு ஒக்கும் வடிவுடையது." (இராவணன் பிறப்புப் படலம், 58), "புண்டரிக மாதோ புனமயிலோ.", "கோகனக மாதனைய கொம்பு." (திக்கு விசயப் படலம், 151, 169), "செந்தாமரைமேல் திருமகளோ." (சம்புவன் வதைப் படலம், 58), "தாமரைப் பெருங்கானத்துத் தையலோடுறைந்த செய்ய தாமரைத் தடங்கணானை.", "கஞ்ச மலராள் அனைய காமினிகள்.", "சீதை என்னும் அத் திருவை." (அசுவமேத யாகப் படலம், 65, 222) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

பிறகு உள்ள 18-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் திலகவதியார் திருவவதாரம் செய்தருளி முறை யாகச் சில ஆண்டுகள் கடந்ததற்குப் பிறகு கணக்கு இல்லாத அறுபத்து நான்கு கலைகளினுடைய துறைகள் தழைத்து ஓங்கவும், செய்வதற்கு அருமையாக உள்ள தவத்தைப் புரிந்த தவசிகளின் வழி வாழவும், இந்த உலகத்தில் உண்டாகும் இருட்டைப் போக்கி பிரகாசம் திகழும் சூரியனைப் போல அவருக்குப் பின்னால் மலர்ச்சியைப் பெற்று விளங்கும் மருணீக்கியார் என்பவர் திருவாய்மூருக்கு வந்து திருவவதாரம் செய்தருளினார்.' பாடல் வருமாறு:

"திலகவதி யார்பிறந்து
சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப
அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி
ஒளிவிளங்கு கதிர்போற்பின்
மலரும்மரு ணீக்கியார்
வந்தவதா ரம்செய்தார்."

திலகவதியார்-அந்தத் திலகவதியார். பிறந்து-திருவவதாரம் செய்தருளி. சிலமுறை-முறையாகச் சில. ஆண்டு-பிராயங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அகன்றதற்பின்-கடந்ததற்குப்பிறகு. அலகு-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. கலை-அறுபத்து நான்கு கலைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக்கண்டுணர்க. த்:சந்தி. துறை-துறைகள்; ஒருமை பன்மை மயக்கம். தழைப்ப-தழைத்து ஓங்கவும். அரும்-புரிவதற்கு அருமையாக இருக்கும். தவத்தோர்-தவத்தைப் புரிந்த தவசிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நெறி-தவத்தினுடைய வழி. வாழ-வாழவும். உலகில்-இந்த மண்ணுலகத்தில். வரும்-ஒவ்வொரு நாளும் உண்டாகும். இருள்-இருட்டை. நீக்கி-போக்கி விட்டு. ஒளி-பிரகாசத்தோடு. விளங்கு-வானத்தில் திகழும். கதிர்போல்-சூரியனைப் போல. பின்-அந்தத்

வளர்ச்சிக்குப் பிறை உவமை: "திங்கட் கதிரினம் கொழுந்தோ...என்ன." என்று சேக்கிழார் பாடியருளி யதைக் காண்க.

அடுத்து உள்ள 22-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு மருணீக்கியார் வளர்ந்து வரும் அந்தக் காலத் தில் அவருடைய தமக்கையாராகிய திலகவதியாருக்குப் பன்னிரண்டு பிராயங்கள் நிறைவதற்கு முன்பாக அவர்க ளோடு ஒரு குடும்பத்தினுடைய முதல்வராகிய ஒத்த வேளாளர் குடிமக்களுடைய தலைவர் மின்னலைப் போல ஒளியை வீசும் சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலை யின் மேற் கொண்டவராகிய திருவதிகை வீரட்டானேசுவர ராகிய பெருமையைப் பெற்றவருடைய உண்மையான அடிமையாக இருப்பதில் விருப்பத்தைப் பெற்றவர், தங்கத் தால் அமைந்ததும், மாணிக்கங்களைப் பதித்ததுமாகிய மகுடத்தைச் சூடிய அரசனிடத்தில் திருவருளை உடையவர்.' பாடல் வருமாறு:

" அந்நாளில் திலகவதி
யாருக்காண் டாறிரண்டின்
முன்னாக ஒத்தகுல
முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னார்செஞ் சடைஅண்ணல்
மெய்யடிமை விருப்புடையார்
பொன்னாரும் மணிமௌலிப்
புரவலன்பால் அருளுடையார். "

அந்நாளில்-அவ்வாறு மருணீக்கியார் வளர்ந்துவரும் அந்தக் காலத்தில். திலகவதியாருக்கு-அவருடைய தமக்கை யாராகிய திலகவதியார் என்னும் மாதரசியாருக்கு. ஆண்டா றிரண்டின்-பன்னிரண்டு பிராயங்கள் நிறைவதற்கு. ஆண்டு: ஒருமை பன்மை மயக்கம். முன்னாக-முன்பாக. ஒத்த-அவர்க

ளோடு சமானமாக உள்ள. குல-ஒருகுடும்பத்தினுடைய.முதல் -முதல்வராகிய; திணை மயக்கம். வேளாண்-வேளாளர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம்; திணை மயக்கம். குடி-குடிமக்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தலைவர்-தலைவராக விளங்குபவர். மின்-மின்னலைப் போல ஆர்-நிறைந்த ஒளியை வீசும். செம்-சிவப்பாக விளங்கும். சடை-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் கொண்ட அண்ணல் - பெருமையைப் பெற்றவராகிய திருவதிகை வீரட்டானேசுவரருடைய. மெய்-உண்மையான. அடிமை -அடிமையாக இருப்பதில்; ஆகுபெயர். விருப்பு-விருப்பத்தை. உடையார் - பெற்றவர். பொன்-தங்கத்தால். ஆரும்-அமைந்ததும்; வினையாலணையும் பெயர். மணி-மாணிக்கங்களைப் பதித்ததுமாகிய; ஒருமை பன்மை மயக்கம்; வினையாலணையும் பெயர். மௌலி-மகுடத்தைச் சூடிய. ப்:சந்தி. புரவலன்பால்-அரசனிடத்தில். அருள்-திருவருளை. உடையார்-உடையவர்.

பிறகு உள்ள 23-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வீரர்களினுடைய தகுதியாகிய பான்மையைப் பெற்று வீரமாகிய வேலைகளில் வலிமையைப் பெற்ற ஆண் சிங்கத்தைப் போல இருக்கிறவர்; யாவரும் காணும் தகுதியைப் பெற்ற பெருமையைக் கொண்ட அழகோடு விளங்கும் கலிப்பகையார் என்னும் திருநாமத்தை உடையவர்; தாம் அணிகலனைப் போலக் கொண்ட கொடுப்பதில் வல்லவராகிய புகழனாராகிய மருணீக்கியாருடைய தந்தையாரிடத்தில் ஒப்பு இல்லாத அவருடைய புதல்வியாகிய திலகவதியைத் திருமணத்துக்கு உரிய கன்னிகையாகப் பெற விரும்பி தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழும் விருப்பத்தால் மேன்மையாகிய நற்பண்புகளைப் பெற்ற சான்றோர்களைப் புகழனார் திருமாளிகைக்குப் போகுமாறு அனுப்பினார்.' பாடல் வருமாறு:

சுருணீக்கி மலர்விக்கும்
கலைபயிலத் தொடங்குவித்தார். ”

மருணீக்கியார்-அந்த மருணீக்கியாருடைய. சென்னி-தலையில் உள்ள. மயிர்-மயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். நீக்கும்-அகற்றும். மண - குடுமி வைத்தலாகிய திருமண. வினையும்-சடங்கையும். தெருள்-தெளிந்த அறிவைப் பெற்ற; ஆகு பெயர். நீர்-இயல்பைக் கொண்ட. ப்:சந்தி.பன்-பல,மாந்தர்-திருவாய்மூரில் வாழும் மனிதர்கள் ஒருமை பன்மை மயக்கம். எலாம்-எல்லாரும். மகிழ்-மகிழ்ச்சியில். சிறப்ப-சிறந்து விளங்கவும். ச்:சந்தி. செய்த தற்பின்-அந்தச் சடங்கைப் புரிந்ததற்குப் பிறகு. பொருள்-செல்வத்தை. நீத்தம்-வெள்ளத்தைப்போல். கொள—அந்த மக்கள் பெற்றுக் கொள்ளுமாறு; இடைக்குறை. வீசி-வழங்கி. ப்:சந்தி. புலன்-மெய், வாய், கண்கள், மூக்கு, காதுகள் என்னும் ஐந்து இந்திரியங்களும்; ஒருமை பன்மை மயக்கம். கொளுவ-பெறுபவையாகிய; இடைக்குறை. மனம்-தம்முடைய திருவுள்ளத்தில். முகிழ்த்த-அரும்பிய; தோன்றிய. சுருள்-சுருளாகிய அறியாமையை. நீக்கி-போக்கிவிட்டு. மலர்விக்கும்-மலர்ச்சியைப் பெறுமாறு செய்விக்கும். கலை-அறுபத்துநான்கு கலைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். பயில-கற்றுப் பழகும் வண்ணம். த்:சந்தி. தொடங்குவித்தார்-அந்தப் புகழனாரும் மாதினியாரும் ஆரம்பித்து வைத்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 21-ம் ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய தந்தையாராகிய புகழனார் களிப்பிலும் மகிழ்ச்சியிலும் தலை சிறந்து நிற்கும் வண்ணம் முறைமையோடு தம்முடைய திருவுள்ளத்தில் மலர்ச்சியை அடைந்து பொங்கி எழும் அறிவாற்றலால் செழுமையாகிய அறுபத்து நான்கு கலைகளினுடைய வகைகள் எல்லாவற்றையும் அந்த இளம் பருவத்திலேயே முறையோடு கற்றுத் தேர்ச்சி பெற்று

முதிர்ச்சியை அடைய அவற்றில் ஆழ்ந்த அறிவு உண்டாகும் விதத்தில் அந்தப் புகழனார் புதல்வராகிய மருணீக்கியார் கறை நீங்கிய இளைய பிறைச் சந்திரனைப் போல வளர்ந்து வரலானார்.' பாடல் வருமாறு:

" தந்தையார் களிமகிழ்ச்சி
 தலைசிறக்க முறைமையினால்
சிந்தைமலர்ந் தெழும்உணர்வில்
 செழுங்கலையின் திறங்கள்எல்லாம்
முந்தைமுறை மையிற்பயின்று
 முதிரஅறி வெதிரும்வகை
மைந்தனார் மறுஒழிந்த
 இளம்பிறைபோல் வளர்கின்றார். "

தந்தையார்-தம்முடைய தகப்பனாராகிய புகழனார். களி-களிப்பிலும். மகிழ்ச்சி-மகிழ்ச்சியிலும். தலைசிறக்க-தலைசிறந்து நிற்குமாறு. முறைமையினால்-முறையோடு; உருபு மயக்கம். சிந்தை-தம்முடைய திருவுள்ளம். மலர்ந்து-மலர்ச்சியை அடைந்து. எழும்-பொங்கி எழும். உணர்வில்-அறிவாற்றலினால்; உருபு மயக்கம். செழும்-செழிப்பாக விளங்கும். கலையின்-அறுபத்து நான்கு கலைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். திறங்கள்-வகைகள். எல்லாம்-எல்லாவற்றையும். முந்தை-அந்த இளம்பருவத்திலேயே. முறைமையில்-முறையோடு; உருபு மயக்கம். பயின்று-கற்றுப் பழகி. முதிர அறிவு-அந்தக்கலைகளில் தம்முடைய அறிவு முதிர்ச்சியை அடைய. எதிரும் வகை-அவற்றில் ஆழ்ந்த புலமை உண்டாகும் விதத்தில். மைந்தனார்-அந்தப் புகழனாருடைய புதல்வராகிய மருணீக்கியார். மறு-முயலாகிய கறை. ஒழிந்த-நீங்கிய. இளம் பிறைபோல்-இளமையோடு விளங்கும் பிறைச் சந்திரனைப் போல. வளர்கின்றார்-வளர்ந்து வருகிறவரானார்.

றடக்கை மைந்தன் வாய்விட்டுப் புலம்பி.'', ''கொல் இன யானை பார்க்கும் கூறுசிர்த் தறுகண் ஆளி, இல்லெலி பார்த்து நோக்கி இறப்பின் கீழ் இருந்ததுண்டே, பல்வினை வெள்ளம் நீந்திப் பகா இன்பம் பருகின் அல்லால், நல்வினை விளையுள் என்னும் நஞ்சினுட் குளித்தலுண்டே.'' (சீவக சிந்தாமணி, 132, 811, 814, 2554, 2882, 2985) என்று திருத்தக்க தேவரும், ''மடங்கல் போல் மொய்ம்பினான்.'' (கையடைப் படலம், 3), ''மாக மடங்கலும் மால் விடையும்... நாண நடந்தான்.'' (கார்முகப் படலம், 32), ''பாயரித் திறலான்.'' (நீர் விளையாட்டுப் படலம், 23), ''ஆயிர நாமச் சிங்கம்.'' (கடிமணப் படலம், 100), ''ஆழி நெடுங்கை மடங்கல் ஆளி அன்னான்.'' (கைகேசி சூழ்வினைப் படலம், 1), ''சிங்கவேறனைய வீரன்.'' (கங்கைப் படலம், 15), ''சிங்க வேறெனச் சித்தர்சேரவே.'' (மாரீசன் வதைப் படலம், 9), ''சிங்க மெனத்தமியன் திரிவானை.'' (அயோமுகிப் படலம், 39), ''வெங்கண் ஆளியேறும்... சிங்க வேறிரண்டொடு ரண்டு அன்ன செய்கையார்.'' (கலன்காண் படலம், 34), ''சிங்க வேறனைய வீர.'' (கிட்கிந்தைப் படலம், 101), ''மடங்கலரியேறும் மதமால் களிறும் நாண நடந்து.'' (ஊர் தேடு படலம், 65), ''சிங்க வேறனையான்.'' (விபீடணன் அடைக்கலப் படலம், 125), ''அரியொடும் வாழ்ந்த பேடை அங்கணத் தழுக்குத் தின்னும் நரியொடும் வாழ்வதுண்டோ.'' (மாயாசனப் படலம், 69), ''சிங்க வேறு கடல் போல் முழங்கி.'', ''அதிகாயனாம் சிங்கம்.'', ''ஆளியின் துப்பின் வீரர்.'', ''ஆளிபோல் மொய்ம்பினானும்.'', ''சிங்க வேறனைய வீரர் யாவரும்.'', ''சிங்கவே றசனியேறு கேட்டலும் கீற்றச் சேனை பொங்கியதென்ன மன்னன் பொருக்கென எழுந்து.'' (நாகபாசப் படலம், 62, 76, 96, 101, 179, 276), ''முழைக் குலச்சீயம் வெம்போர் வேட்டது முனிந்த தென்னப் புழைப்பின்ற எயிற்றுப் பேழ்வாய் இடிக்

குலம் பொடிப்ப ஆர்த்து.", "சிங்கம் அன்ன போர்த் தலைவரில் தலைவராய்த் தெரிந்தார்." (படைத் தலைவர் வதைப் படலம், 30, 51), "தேர்வரு சிங்கமும் நடுக்குற.", "வீரச் சிங்கம் அன்னவர்." "சிங்க வேறென்ன இலக்குவவ.", "அரிகுலம் அன்ன நீலன், அங்கதன், குமுதன் சாம்பன்.", "அரிகுல வீரர்.", "சிங்க வேறிடியுண்டென நெடு நிலம் சேர்ந்தான்." (பிரமாத்திரப் படலம், 47, 69, 79, 121, 154, 176), "சிங்க வேறனைய வீரன் செறி கழற் பாதம் சேர்ந்தான்." (மாயா சீதைப் படலம், 56), "ஆளி போன்றுளன்." (வேலேற்ற படலம், 17), "வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க." (இராவணன் வதைப் படலம், 201), "சிங்க வேறனையான் செய்ய திருமுடியாட்டும் புன்னீர்." (திருமுடி சூட்டுப் படலம், 35) என்று கம்பரும் பாடியவற்றையும், "சினச் சிங்கம் என எழுந்து." (இலவணன் வதைப் படலம், 104), "ஆளியனார் தம் ஆருயிர் கொள்வார்." (அசுவமேத யாகப் படலம் 37), "வெங்கண் மதகரி நிரைகள் மிக்கவுள வேணும், சிங்க விளங் குருளையொடு சென்று செருச்செயுமோ, இங்கிவர்கள் இனையரென இகழல்." (கந்திருவர் வதைப் படலம், 46) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

பிறகு வரும் 24-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'தெய்வப் பெண்ணைப் போன்ற திலகவதியாரை அந்தத் திருவாய்மூரில் அந்தக் கலிப்பகையாருக்கு திருமணத்துக்கு உரிய கன்னிகையாகும் பொருட்டுப் பேசி வந்த சான்றோர்களும் தாங்கள் வந்ததற்கு உரிய காரணத்தைத் தெரியப் படுத்த அந்தக் கன்னிகையினுடைய நல்ல பண்புகளை எடுத்துக் கூறி அவள் பிறந்த குலத்தையும் எடுத்துச் சொல்லி ஒரு குற்றமும் இல்லாத சீர்த்தியைப் பெற்ற, புகழனார் படத்தைக் கொண்ட பாம்பைப் போல அகன்ற பெண்குறியைப் பெற்ற பசுமையான வளைகளைத் தன்னுடைய கைகளில் அணிந்தவளாகிய அந்தத் திலகவதியை

"ஆண்டகைமைத் தொழிலின்கண்
அடலரியே றெனஉள்ளார்,
காண்டகைய பெருவனப்பிற்
கலிப்பகையார் எனும்பெயரார்,
பூண்டகொடைப் புகழனார்
பாற்பொருவில் மகட்கொள்ள
வேண்டிஎழும் காதலினால்
மேலோரைச் செலவிட்டார்."

ஆண்டகைமை-வீரர்களினுடைய தகுதியாகிய பான்மையைப் பெற்ற வீரமாகிய. த்:சந்தி. தொழிலின் கண்-வேலைகளில்;ஒருமை பன்மை மயக்கம். அடல்-வலிமையைப் பெற்ற; 'கொலை புரிதலைப் பெற்ற' எனலும் ஆம். அரியேறு-ஆண் சிங்கம். என-என்று கூறுமாறு; இடைக்குறை. உள்ளார்-இருக்கிறவர். காண்டகைய-யாவரும் பார்க்கும் தகுதியைப் பெற்ற. பெரு-பெருமையைக் கொண்ட. வனப்பில்-அழகோடு; உருபு மயக்கம். கலிப்பகையார்-விளங்கும் கலிப்பகையார். எனும்-என்னும்; இடைக்குறை. பெயரார்-திருநாமத்தை உடையவர். பூண்ட-அணிகலனைப் போல மேற்கொண்ட. கொடை-கொடுப்பதில் வல்லவராகிய; ஆகுபெயர். ப்:சந்தி. புகழனார்பால் - மருணீக்கியாருடைய தந்தையாராகிய புகழனாரிடத்தில். பொரு-ஒப்பு. இல்-இல்லாத; கடைக்குறை. மகள்-அவருடைய புதல்வியாகிய திலகவதியை. கொள்ள-திருமணத்துக்கு உரிய கன்னிகையாகப் பெற. வேண்டி-விரும்பி. எழும்-தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழும். காதலினால்-விருப்பத்தால். மேலோரை-மேன்மையாகிய நற்பண்புகளைப் பெற்ற சான்றோர்களை; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செல-புகழனாருடைய திருமாளிகைக்குப் போகுமாறு; இடைக்குறை. விட்டார்-அனுப்பினார்.

வீரருக்குச் சிங்கம் உவமை; "எழிலார் இராச சிங்கத்தை.", "ஏறொப் பானை.", "சாவா மூவாச் சிங்கமே."

என்று திருநாவுக்கரசு நாயனாரும்,“புகலித் தாளரிக்கும் அரியான்அருள்பெற்ற பரசமய கோளரிக்கும்.”,என்றுநம்பியாண்டார் நம்பியும்,“செங்கண் வாளரியிற் கூடிக் கிடைத்தனர் சீற்றம் முக்கார்.”, “வென்றி மடங்கல்விடக்கு வரமுன் பார்த்து நின்றாற் போல் நின்றார்.”, “கானவர்க் கரிய சிங்கம்.”, “செங்கண் வயக் கோளரியேறன்ன திண்மைத் திண்ணனார்.”, “பூசுரர் தம் சிங்கம் அனையார்.” என்று சேக்கிழாரும், “தேவகி சிங்கமே தாலேலோ.”, “ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே.”, “தேவகி சிங்கத்தைப் பாடிப்பற.”, “அசோதை தன் சிங்கத்தைப் பாடிப்பற.” என்று பெரியாழ்வாரும், “ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்.”, “சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்துப் போதருமா போலே.”, “கோளரி மாதவன்.” என்று ஆண்டாளும், “ஓடா ஆளரியின் எருவாய் மருவி என்றன் மாடே வந்தடியேன் மனம் கொள்ள வல்லமைந்தா.”, “ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை.” என்று திருமங்கையாழ்வாரும், “மீளி முன் பின் ஆளி போல.” (புறநானூறு, 207:8) என்று பெருஞ்சித்திரனாரும், “மடங்கலிற் கிளைஇய மடங்காவுள்ளத் தடங்காத் தானை வேந்தர்.” (புறநானூறு, 71:1-2) என்று பூத பாண்டியனும், “இறை மகன் போதர ஆளி கண்டயானை யிமை போல்.” (பெருங்கதை) என்று கொங்குவேளிரும், “ஆளிய மொய்ம்பர்க்கு.”, “தறுகண் ஆளி பொங்கிய முழக்கின் வேழப் பேரினம் புலம்பினாற் போல் தங்குதார் மன்னர் எல்லாம் தளர்ந்து கண்சாம்பினாரே.”, “சிறுபடையவர்கள் வென்று செகுப்பவோ என்ன வேண்டா, செறிஎயிற்றாளி வேழப் பேரினம் செகுத்ததன்றே.”, “முலை முதல் துறந்த அன்றே முரித்தாள் ஆளியானைத், தலை நிலம் புரளவெண்கோடுண்டதே போன்று தன்கைச் சிலையிடம் பிடித்த ஞான்றே. தெவ்வரைச் செருத்த நம்பி.”, “ஆளியாற் பாயப் பட்ட அடுகளி யானை போல, வாளிவிற்

துப் போர் புரிய அவர்களுக்கு மேல் அவர்களுக்கு அந்த மன்னன் விடைகொடுத்து அனுப்பினான்; அந்த யுத்தமாகிய செயலை மேற்கொண்டு அவர் புறப்பட்டுப் போனார்.' பாடல் வருமாறு:

"கன்னிதிருத் தந்தையார்
மணம்இசைவு கலிப்பகையார்
முன்அணைந்தார் அறிவிப்ப
வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர்
மாறேற்க மற்றவர்மேல்
அன்னவர்க்குவிடை கொடுத்தான்;
அவ்வினைமேல் அவர்அகன்றார்."

கன்னி-அந்தக் கன்னிகையாகிய திலகவதியாருடைய. திரு-செல்வத்தைப் படைத்தவராகிய; திணைமயக்கம். த்:சந்தி. தந்தையார்-தகப்பனாராகிய புகழனார். மணம்-அந்தத் திலகவதியைக் கலிப்பகையாருக்குத்திருமணம் செய்து கொடுக்க. இசைவு-சம்மதம் அளித்ததை அறிந்து. கலிப் பகையார்-அந்தக் கலிப்பகையார். முன்-பெண் பேசுவதன் பொருட்டு முன்னால். அணைந்தார்-திலகவதியினுடைய திருமாளிகைக்குச் சென்றவர்களாகிய சான்றோர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அறிவிப்ப-தெரியப்படுத்த. வதுவை-திருமணமாகிய. வினை-மங்கலச் சடங்கை. முடிப் பதன் முன்-முடிப்பதற்கு முன்பே. மன்னவற்கு-தம்முடைய அரசனுக்காக. வடபுலத்தோர்-வடநாட்டில் வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். மாறு ஏற்க-பகைவர்களாக வந்து எதிர்த்துப் போர் புரிய. மாறு: திணை மயக்கம். மற்று: அசைநிலை. அவர்மேல்-அந்தப் பகைவர்களுக்கு மேல்; ஒருமை பன்மை மயக்கம். அன்னவர்க்கு-அந்தக் கலிப்பகை யாருக்கு. விடைகொடுத்தான் - அந்த மன்னன் விடை கொடுத்துப் போருக்கு அனுப்பினான். அவ்வினை-அந்தப்

போராகிய செயலை. மேல்-மேற்கொண்டு. அவர்-அந்தக் கலிப்பகையார். அகன்றார்-போர்க்களத்துக்குப் புறப்பட்டுப் போனார்.

பிறகு வரும் 26-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்த மன்னனுக்குப் போர் எழுந்த சமயத்தில் அத்தொழிலை மேற்கொண்டு கொடுமையாக இருக்கும் யுத்தத்தைப் புரிவதற்காக அந்த மன்னனிடம் விடையைப் பெற்றுக்கொண்டு போனவராகிய அந்தக் கலிப்பகையாரும் போர் புரியும் சேனைகளையும் தம்மோடு கூட்டிக் கொண்டு சில தினங்களில் மூண்ட கோபத்தைக் கொண்ட பகைவர்களுடைய நாட்டுக்குச் சென்று அந்தப் பகைவர்களோடு சேர்ந்து கடுமையாக இருக்கும் போராகிய சமுத்திரத்தை நீந்துபவராகி நீண்ட தினங்களாக வீரம் நிரம்பிய கொடுமையாக இருக்கும் யுத்தத் துறைகளை மேற் கொண்டார்.' பாடல் வருமாறு:

" வேந்தற்குற் றுழிவினைமேல்
வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையும்
உடன்கொண்டு சிலநாளில்
காய்ந்தசினப் பகைப்புலத்தைக்
கலந்துகடும் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்கள்
நிறைவெம்போர்த் துறைவிளைத்தார். "

வேந்தற்கு-அந்த மன்னனுக்கு. ஊற்றுழி-போர் எழுந்த சமயத்தில். உற்றுழி-உற்ற உழி; தொகுத்தல் விகாரம். வினை-அந்தத் தொழிலை. மேல்-தாம் மேற் கொண்டு. வெம்-கொடுமையாக இருக்கும். சமத்தில்-யுத்தத்தைப் புரிவதற்காக; உருபு மயக்கம். விடை-அந்த மன்னனிடம் விடையை. கொண்டு-பெற்றுக் கொண்டு. போந்தவரும்-சென்றவராகிய அந்தக் கலிப்பகையாரும். பொரு-போர்

திருமணம் புரிந்து கொள்வதற்குச் சம்மதித்தார்.' பாடல் வருமாறு:

" அணங்கனைய திலகவதி
யார்தம்மை ஆங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும்
வந்தபடி அறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக்
கோதில்சீர்ப் புகழனார்
பணங்கொளர வகல்அல்குற்
பைந்தொடியை மணம்நேர்ந்தார்.''

அணங்கு-தெய்வலோகத்துப் பெண்ணை. அனைய-போன்ற. திலகவதியார் தம்மை-அந்தத் திலகவதியாரை. தம்:அசை நிலை. ஆங்கு-அந்தத் திருவாய்மூரில். அவர்க்கு -அந்தக் கலிப்பகையாருக்கு. மணம்பேசி-திருமணத்துக்கு உரிய கன்னிகையாகும் பொருட்டுப் பேசி. வந்தவரும்-வந்த சான்றோர்களும்; ஒருமை பன்மை மயக்கம். வந்தபடி-தாங்கள் வந்ததற்கு உரிய காரணத்தை. அறிவிப்ப-புகழனாருக்குத் தெரியப் படுத்த. க்:சந்தி. குணம்-அந்தக் கன்னிகையினுடைய நல்ல பண்புகளை; ஒருமை பன்மை மயக்கம். பேசி -எடுத்துக் கூறி. க்:சந்தி. குலம்-அவள் பிறந்த சாதியையும். பேசி-எடுத்துச் சொல்லி. க்:சந்தி. கோது-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. சீர்-சீர்த்தியைப் பெற்ற. ப்:சந்தி. புகழனார்-கலிப்பகையாருடைய தந்தையாராகிய புகழனார். பணம்-படத்தை. கொள்-கொண்டிருக்கும். அரவு -பாம்பைப் போன்ற. அகல்-அகலமாகிய. அல்குல்-பெண் குறியைப் பெற்ற. பைந்தொடியை-பசுமையான வளைகளைத் தன்னுடைய கைகளில் அணிந்தவளாகிய அந்தத் திலகவதியை; அன்மொழித் தொகை. மணம்-திருமணம் புரிந்து கொள்வதற்கு. நேர்ந்தார்-அந்தப் புகழனார் சம்மதித்தார்.

பணங் கொளரவல்குல்: ''நாகபணம் திகழ் அல்குல்மல்கு

நன்னுதல் மான்விழி மங்கை.'', ''பையார் அரவே ரல்குலா ளொடும்.'', ''பைசேர் அரவார் அல்குலார்,'', ''பட அரவே ரல்குற் பல்வளைக்கை மடவரவாளை.'', ''பணங்கொள் ஆடரவல்குல் நல்லார்.'', ''பையரா வரும் அலகுல் மெல்லியல்.'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பையாரும் அரவேரல்குல் இவள் வாடுகின் றாள்.'', ''அரவேர் அல்குலாளை ஓர்பாகம் அமர்ந்து.'', ''பையரவிள அல்குற்பாவை.'' என்று சுந்தர மூர்த்தி நாய னாரும், ''அங்கரவல்குல் நங்கைக்கு.'', ''அரவின் பை பழித்தகன்ற பரந்தேந்தல்குல்.'', ''அரவணி அல்குல்துகில் நெறிதிருத்தியும்.'' (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், ''அரவு வெகுண்டன்ன அகலல்குல்.'' (சீவக சிந்தாமணி, 1878) என்று திருத்தக்க தேவரும், ''பாந்தள் தேர் இவை பழிபடப் பரந்த பேரல்குல்.'' (சித்திரகூடப் படலம், 31), ''பணந்தாழ் அல்குற் பனி மொழியார்க்கு.'' (மாரீசன் வதைப் படலம், 113), ''கலைசார் அல்குல் தடங்கடற் குவமை தக்கோய், பாராழிப் பிடரில் தங்கும் பாந்தளும்.'' (நாட விட்ட படலம், 37) என்று கம்பர் பாடியவற்றையும், 'பழிப்பில் பணத்தேர் அல்குலோ.'' (சம்புவன் வதைப் படலம், 5) என்று உத்தர காண்டத்தில் வருவதையும் காண்க.

பிறகு வரும் 25-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தக் கன்னிகையாகிய திலகவதியினுடைய செல் வத்தைப் படைத்த தந்தையாராகிய புகழனார் அந்தத் திலகவதியைத் திருமணம் செய்து கொடுக்கச் சம்மதித்ததை அறிந்து கலிப்பகையார் பெண் பேசுவதன் பொருட்டு முன்னால் திலகவதியினுடைய திருமாளிகைக்கு முன்பு சென்றவர்களாகிய சான்றோர்கள் தெரியப்படுத்தத் திருமண மாகிய மங்கலச் சடங்கை முடிப்பதற்கு முன்னால் அரசனுக்கு வடநாட்டில் வாழும் மக்கள் பகைவர்களாக வந்து எதிர்த்

புரிவதற்கு உரிய. படையும்-யானை, தேர், குதிரை, காலாட்கள் என்னும் சதுரங்க சேனைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். உடன்-தம்மோடு. கொண்டு-கூட்டிக் கொண்டு. சில நாளில்-சில தினங்களில்; ஒருமை பன்மை மயக்கம். காய்ந்த-மூண்டிருந்த. சின-கோபத்தைக் கொண்ட. ப்:சந்தி. பகை-பகைவர்களினுடைய; திணை மயக்கம்; பகைமையைப் பெற்ற பகைவர்களினுடைய. ப்:சந்தி. புலத்தை-நாட்டுக்கு; உருபு மயக்கம். க்:சந்தி. கலந்து-போய்ச் சேர்ந்து. கடும்-கடுமையாக இருக்கும். சமர்-போராகிய. க்:சந்தி. கடலை-சமுத்திரத்தை. நீந்துவார்-நீந்துபவராகி; முற்றெச்சம். நெடு-நீண்ட. நாள்கள்-தினங்களாக. நிறை-வீரம் நிரம்பிய. வெம்-கொடுமையாக இருக்கும். போர்-யுத்தத்தினுடைய. த்:சந்தி. துறை-துறைகளை; ஒருமை பன்மை மயக்கம். விளைத்தார்-அந்தக் கலிப்பகையார் மேற்கொண்டார்.

பிறகு உள்ள 27-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அத்தகையவாகிய தினங்களுக்கு நடுவில் இந்தத் திருவாமூரில் தேவலோகத்தில் வாழும் பெண்மணியைப் போன்றவளாகிய திலகவதியைப் பெற்றெடுத்த பரிசுத்தமாகிய குலத்தில் பிறந்த புகழனார் பழங்காலம் தொட்டு வரும் யாக்கை நிலையாமை என்பது மேவிய வினைகளினுடைய பயனால் இந்த மண்ணுலகத்தை விட்டு இறந்து போகும் வண்ணம் கெட்டதாகிய மருத்துவர்களால் போக்குவதற்கு அருமையாக இருக்கும் ஒரு நோயினால் வருந்தி தேவலோகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

'' ஆயநா ளிடைஇப்பால்
அணங்கனையாள் தனைப்பயந்த
தூயகுலப் புகழனார்
தொன்றுதொடு நிலையாமை

மேயவினைப் பயத்தாலே
இவ்வுலகை விட்டகலத்
தீயஅரும் பிணியுழந்து
விண்ணுலகிற் சென்றடைந்தார்.''

ஆய-அவ்வாறு உள்ளவையாகிய. நாளிடை-தினங்களுக்கு நடுவில். நாள்: ஒருமை பன்மை மயக்கம். இப்பால்-இந்தத் திருவாய்மூரில். அணங்கனையாள்தனை-தேவலோகத்தில் வாழும் பெண்மணியைப் போன்றவளாகியதிலகவதியை. தன்:அசை நிலை. ப:சந்தி. பயந்த-பெற்றெடுத்த. தூய-பரிசுத்தமாகிய. குல-சாதியிற் பிறந்த. 'குடும்பத்திற் பிறந்த' எனலும் ஆம். ப்:சந்தி. புகழனார்-புகழனார் என்பவர். தொன்றுதொடு-பழங்காலம் தொட்டு வரும். நிலையாமை-யாக்கை நிலையாமை என்பது. மேய-மேவிய. வினை-வினைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வினைகள்-புண்ணியச் செயலும் பாவச்செயலும். ப்:சந்தி. பயத்தால்-பயனால். ஏ:அசை நிலை. இவ்வுலகை-இந்த மண்ணுலகத்தை. விட்டு அகல-விட்டு இறந்து போகும் வண்ணம். த்:சந்தி. தீய-கெட்டதாகிய. அரும்-மருத்துவர்களால் போக்குவதற்கு அருமையாக இருக்கும். பிணி-ஒரு நோயினால். உழந்து-வருத்தத்தை அடைந்து. விண்ணுலகில்-தேவலோகத்திற்கு; உருபு மயக்கம். சென்றடைந்தார்-அந்தப் புகழனார்போய்ச் சேர்ந்தார்.

அடுத்து வரும் 28-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தப் புகழனார் தம்முடைய உயிரை விட்டு விட்டுத் தேவலோகத்திற்குப் போய்ச் சேர அவருடைய பத்தினியாராகிய மாதினியார் என்பவர் தம்முடைய உறவினர்களோடு தம்முடைய புதல்வர்களையும் புழுதியைப் போலவே விட்டு விட்டு சிறந்த பான்மையினால் அந்தப் புகழனாரோடு எந்தக் காலத்திலும் பிரியாத தேவலோகத்தை அடையும் கற்பினுடைய வழி தவறாமல் தம்முடைய கணவ

னாராகிய அந்தப் புகழனாரோடு போய்ச் சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

"மற்றவர்தாம் உயிர்நீப்ப
மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையும்
துகளாக வேநீத்துப்
பெற்றிமையால் உடன்என்றும்
பிரியாத உலகெய்தும்
கற்புநெறி வழுவாமல்
கணவனா ருடன்சென்றார்."

மற்று: அசை நிலை. அவர்தாம்-அவ்வாறு அந்தப் புகழனார். தாம்:அசை நிலை. உயிர்-தம்முடைய உயிரை. நீபப-விட்டு விட்டுத் தேவலோகத்திற்குப் போய்ச் சேர. மனைவியார்-அவருடைய பத்தினியாராகிய. மாதினியார்-மாதினியார் என்பவர். சுற்றமுடன்-தம்முடைய உறவினர்களோடு; திணை மயக்கம். மக்களையும்-தம்முடைய புதல்வர்களையும். துகளாகவே-புழுதியைப் போலவே. நீத்து-விட்டு விட்டு. ப்:சந்தி. பெற்றிமையால்-சிறந்த பான்மையினால். உடன் -அந்தப் புகழனாரோடு. என்றும்-எந்தக் காலத்திலும். பிரியாத உலகு-பிரியாத தேவலோகத்தை. எய்தும்-அடையும். கற்பு-கற்பினுடைய. நெறி-வழியிலிருந்து. வழுவாமல்-தவறாமல். கணவனாருடன்-தம்முடைய கணவனாராகிய அந்தப் புகழனாரோடு. சென்றார்-போய்ச் சேர்ந்தார்.

பிறகு உள்ள 29-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய தந்தையாராகிய புகழனாரும், தம்மைப் பெற்றெடுத்த அன்னையாராகிய மாதினியாரும் இறந்து போனதற்குப் பிறகு விருப்பத்தைப் பெற்றவராகிய திலகவதியாரும் அவருக்குப் பின்னால் திருவவதாரம் செய்தருளிய பிள்ளையாராகிய மருணீக்கியாரும் தங்களுடைய திருவுள்ளங்

களில் உண்டான கவலையால் மயக்கத்தை அடைந்த நல்ல உறவினர்களோடும் பெரியதாக இருக்கும் துயரமாகிய கடலில் ஆழ்ந்தார்கள்.' பாடல் வருமாறு:

"தாதையா ரும்பயந்த
தாயாரும் இறந்ததற்பின்
மாதரார் திலகவதி
யாரும்அவர் பின்வந்த
காதலனார் மருணீக்கி
யாரும்மனக் கவலையினால்
பேதுறுநற் சுற்றமொடும்
பெருந்துயரில் அழுந்தினார்."

தாதையாரும்-தம்முடைய தந்தையாராகிய புகழனாரும். பயந்த-தம்மைப் பெற்றெடுத்த. தாயாரும்-அன்னையாராகிய மாதினியாரும். இறந்ததற்பின்-மரணத்தை அடைந்ததற்குப் பிறகு. மாதரார் திலகவதியாரும்-விருப்பத்தைப் பெற்றவராகிய திலகவதியாரும். 'மாதர்-அழகுமாம்.' அவர்-அவருக்கு. பின்-பின்னால். வந்த-திருவவதாரம் செய்தருளிய. காதலனார்-தம்பியாரும் பிள்ளையாரும் ஆகிய. மருணீக்கியாரும்-மருணீக்கியார் என்பவரும். மன-தங்களுடைய திருவுள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கவலையினால்-உண்டான கவலையால். பேதுறு-மயக்கத்தை அடைந்த; 'வருத்தத்தை அடைந்த' எனலும் ஆம். நல்-நல்ல. சுற்றமொடும்-உறவினர்களோடும்; திணை மயக்கம். பெரும்-பெருகியிருக்கும். துயரில்-துயரமாகிய கடலில். அழுந்தினார்-ஆழ்ந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 30-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திலகவதியாரும் மருணீக்கியாரும் ஒருவாறு தங்களுடைய பெருமையைப் பெற்று விளங்கும் உறவினர்கள் தங்களுடைய திருவுள்ளங்களைத் தேறுதலை அடையுமாறு

புரியத் தாங்கள் அடைந்திருந்த துயரத்திலிருந்து நீங்கிப் பெருமையைப் பெற்ற தேவலோகத்தை அடைந்த அந்தப் புகழனாருக்கும் மாதினியாருக்கும் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைப் பெருகலாகப் புரிந்தார்கள்; பகைவர்களின் மேல் தம்முடைய அரசனுக்காகப் போரைப் புரியச் செல்லும் கலிப்பகையார் என்பவர் போரைப் புரியும் யுத்த களத்தில் தம்முடைய உயிரை விட்டுப் புகழைப் பெற்றார்.' பாடல் வருமாறு:

"ஒருவாறு பெருங்கிளைஞர்
 மனம்தேற்றத் துயரொழிந்து
பெருவானம் அடைந்தவர்க்குச்
 செய்கடன்கள் பெருக்கினார்;
மருவார்மேல் மன்னவற்கா
 மலையப்போம் கலிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தில்
 உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார்."

ஒருவாறு-அந்தத் திலகவதியாரும் மருணீக்கியாரும் ஒரு வகையாக. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். கிளைஞர்-உறவினர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மனம். தங்களுடைய திருவுள்ளங்களை; ஒருமை பன்மை மயக்கம். தேற்ற-ஆறுதலை அடையுமாறு புரிய. த்:சந்தி. துயர்-தாங்கள் அடைந்திருந்த துயரத்திலிருந்து. ஒழிந்து-நீங்கி. பெரு-பெருமையைப் பெற்ற. வானம்-தேவலோகத்தை. அடைந்தவர்க்கு-அடைந்த அந்தப் புகழனாருக்கும் மாதினியாருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செய்-புரிய வேண்டிய. கடன்கள்-ஈமக் கடன்களை. பெருக்கினார்-பெருகலாகப் புரிந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். மருவார் மேல்-பகைவர்களின்மேல்; ஒருமை பன்மை மயக்கம். மன்னவற்கா-தம்முடைய அரசனுக்காக. மலைய-போரைப் புரிவதற்கு. திந். சப்:போம்-செல்லும். கலிப்பகையார் பொருவாரும்-

கலிப்பகையார் போரைப் புரியும். போர்க்களத்தில்-யுத்த களத்தில். உயிர்-தம்முடைய உயிரை. கொடுத்து-விட்டு விட்டு. ப்:சந்தி. புகழ்-புகழை. கொண்டார்-பெற்றார்.

அடுத்து உள்ள 31-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'கொடுமையாக இருக்கும் போர்க்களத்தின் மேல் கலிப் பகையார் தம்முடைய வேலாயுதத்தை ஏந்திய மன்னன் கட்டளையிடச் சென்று அந்தப் போர்க்களத்தில் பகைவர் களைப் போரிட்டு அழித்துவிட்டுத் தேவர்கள் வாழும் தேவ லோகத்தை ஆட்சி புரியும் பொருட்டுத் தம்முடைய கடமை யைச் செய்து நிறைவேற்றிய பெருமைக்கு உரிய மொழி களை அந்தத் திருவாய்மூர் என்னும் சிவத்தலத்தில் வாழும் மக்கள் கூறச் செந்தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் திரு மகளைப் போன்ற திலகவதியார் கேள்விப்பட்டார்.' பாடல் வருமாறு:

" வெம்முனைமேற் கலிப்பகையார்
　　வேல்வேந்தன் ஏவப்போய்
அம்முனையிற் பகைமுருக்கி
　　அமருலகம் ஆள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த
　　பெருவார்த்தை தலம்சாற்றச்
செம்மலர்மேல் திருவனைய
　　திலகவதி யார்கேட்டார்."

வெம்-கொடுமையாக இருக்கும். முனைமேல்-போர்க் களத்தின் மேல். கலிப்பகையார்-கலிப்பகையார் என்பவர். வேல்-வேலை ஏந்திய. வேந்தன்-தம்முடைய மன்னன். ஏவ-கட்டளையிட. ப்:சந்தி. போய்-சென்று. அம்முனை யில்-அந்தப் போர்க்களத்தில். பகை-பகைவர்களை; பகை மையைப் பெற்ற பகைவர்களை; ஒருமை பன்மை மயக்கம். முருக்கி-போரிட்டு அழித்துவிட்டு. அமர் உலகம்-தேவர்கள்

வாழும் தேவலோகத்தை. 'அமரர்' என்பது 'அமர்' என நின்றது; குறுக்கல் விகாரம். ஆள்வதற்கு-ஆட்சி புரியும் பொருட்டு. த்:சந்தி. தம்முடைய கடன்-தம்முடைய கடமையை. கழித்த-செய்து நிறைவேற்றிய. பெரு-பெருமைக்கு உரிய. வார்த்தை - மொழிகளை; ஒருமை பன்மை மயக்கம். தலம்-அந்தத் திருவாய்மூர் என்னும் சிவத் தலத்தில் வாழும் மக்கள்; இடஆகு பெயர். சாற்ற-கூற. ச்:சந்தி. செம்மலர் மேல்-செந்தாமரை மலரின்மேல். இரு-வீற்றிருக்கும் திருமகளை. அனைய-போன்ற. திலகவதி யார்-மருணீக்கியாருடைய தமக்கையாராகிய திலகவதியார். கேட்டார்-கேள்விப்பட்டார்.

பிறகு வரும் 32-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அடியேனுடைய தந்தையாகிய புகழனாரும், அடியே னுடைய தாயாகிய மாதினியாரும் அந்தக் கலிப்பகை யாருக்கு அடியேனைத் திருமணம் புரிந்து கொடுக்கச் சம்மதித்தார்கள்; அந்த முறையினால் அந்தக் கலிப்பகை யாருக்கே அடியேன் உரியவள்; ஆகையினால் இந்த அடியே னுடைய உயிர் அந்தக் கலிப்பகையாருடைய உயிருடன் சேரும் வண்ணம் அடியேன் புரிவேன்'' என்று துணிந்து கொண்டு இறந்து போக வந்தவராகிய திலகவதியாருடைய இரண்டு திருவடிகளின் மேலும் மருணீக்கியாராகிய அவரு டைய தம்பியார் விழுந்து வணங்கினார்.' பாடல் வருமாறு:

"எந்தையும் அனையும் அவர்க்
கெனைக்கொடுக்க இசைந்தார்கள்;
அந்தமுறை யால்அவர்க்கே
உரியதுநான் ஆதலினால்
இந்தஉயிர் அவருயிரோ
டிசைவிப்பன்.' எனத்துணிய
வந்தவர்தம் அடியிணைமேல்
மருணீக்கி யார்விழுந்தார்."

எந்தையும்-அடியேனுடைய தந்தையாகிய புகழனாரும், அனையும்-அடியேனுடைய தாயாகிய மாதினியாரும். அனை இடைக்குறை. அவர்க்கு-அந்தக் கலிப்பகையாருக்கு. எனை-அடியேனை; இடைக்குறை. க்:சந்தி. கொடுக்க-திருமணம் புரிந்து கொடுக்க. இசைந்தார்கள்-சம்மதித்தார்கள். அந்த முறையால்-அந்த முறையினால். அவர்க்கே-அந்தக் கலிப் பகையாருக்கே. உரியது-உரியவள்; திணை மயக்கம். நான் -அடியேன். ஆதலினால்-ஆகையால். இந்த உயிர்-அடியே னுடைய இந்த உயிர். அவர் உயிரோடு-அந்தக் கலிப்பகை யாருடைய உயிருடன். இசைவிப்பன்-சேரும் வண்ணம் அடி யேன் புரிவேன். என-என்று; இடைக்குறை. த்:சந்தி. துணிய-தீர்மானம் செய்துகொண்டு இறந்துபோக. வந்தவர் தம்-வந்தவராகிய திலகவதியாருடைய. தம்: அசைநிலை. அடி யிணைமேல்-இரண்டு திருவடிகளின் மேலும். அடி; ஒருமை பன்மை மயக்கம். மருணீக்கியார்-அந்தத் திலகவதி யாருடைய தம்பியாராகிய மருணீக்கியார். விழுந்தார்-விழுந்து வணங்கினார்.

பிறகு உள்ள 33-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த நிலையில் மருணீக்கியார் மிகுதியாக அழுது, "அடியேனுடைய தாயாகிய மாதினியாரும், அடியேனு டைய தந்தையாகிய புகழனாரும் இந்த மண்ணுலகத்தை விட்டுப் பிரிந்ததற்குப் பிறகும் அடியேன் அடியேனுடைய தமக்கையாராகிய தங்களைப் பணியும் பாக்கியத்தை அடைவதனால் அடியேனுடைய உயிரைப் போக்கிவிடாமல் தாங்கியிருந்தேன்; அடியேனை இனிமேல் தனியாகக் கைவிட்டு விட்டுப் போவீர் ஆனால் அடியேனும் உங்களுக்கு முன்னால் அடியேனுடைய உயிரைவிட்டுவிடுவேன்." என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டுத் துன்பமாகிய கடலில் ஆழ்ந்தார்.' பாடல் வருமாறு:

" அந்நிலையில் மிகப்புலம்பி,
'அன்னையும்அத் தனும்அகன்ற

பின்னையும்நான் உமைவணங்கப்
　　பெறுதலினால் உயிர்தரித்தேன்;
என்னைஇனித் தனிக்கைவிட்
　　டேகுவீர் எனில்யானும்
முன்னம்உயிர் நீப்பன்' என
　　மொழிந்திடரின் அழுந்தினார்.''

அந்நிலையில்-அந்த நிலையில். மிக-மருணீக்கியார் மிகுதியாக. ப்:சந்தி. புலம்பி-அழுது. அன்னையும்-அடியேனுடைய தாயாகிய மாதினியாரும். அத்தனும்-அடியேனுடைய தகப்பனாகிய புகழனாரும். அகன்ற-இந்த மண்ணுலகத்தை விட்டுப் பிரிந்ததற்கு. பின்னையும்-பிறகும். நான்-அடியேன். உமை-அடியேனுடைய தமக்கையாராகிய தங்களை; இடைக்குறை. வணங்க-பணிவதற்கு உரிய. ப்:சந்தி. பெறுதலினால்-பாக்கியத்தை அடைவதனால். உயிர்-அடியேனுடைய உயிரை. தரித்தேன்-போக்கிவிடாமல் தாங்கிக் கொண்டிருந்தேன். என்னை-அடியேனை. இனி-இனிமேல். த்:சந்தி. தனி-தனியாக. க்:சந்தி. கைவிட்டு-கைநழுவவிட்டு. விட்டு ஏகுவீர்-போவீர்கள். எனில்-என்றால்; இடைக்குறை. யானும்-அடியேனும். முன்னம்-தங்களுக்குமுன்னால். உயிர்-அடியேனுடைய உயிரை. நீப்பன்-விட்டுவிடுவேன். என-என்று; இடைக்குறை. மொழிந்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. இடரின்-துக்க சாகரத்தில். அழுந்தினார்-மருணீக்கியார் ஆழ்ந்தார்.

பின்பு வரும் 34-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' ''அந்தத் திலகவதியார் தம்முடைய தம்பியாராகிய மருணீக்கியார் உயிரோடு இருப்பவராக வேண்டும்'' என்று அவரிடத்தில் வைத்திருந்த தயை அந்த மருணீக்கியார் தேவர்கள் வாழும் தேவ லோகத்தை அடைவதற்காக எண்ணிய நிலையை விலக்கும் பொருட்டுத் தம்முடைய உயிரைப் போக்கிவிடாமல் தாங்கிக்கொண்டு அழகிய தங்கத்

தால் செய்த மாணிக்கத்தைப் பதித்த மாங்கல்ய நூலாகிய தாலியைத் தாங்காமல் எல்லா உயிர்களுக்கும் திருவருளைத் தாங்கிக்கொண்டு இந்த உலகத்தில் தம்முடைய திருமாளி கையில் தங்கிக்கொண்டு தவத்தைப் புரிந்தருளி அந்தத் திலகவதியார் வாழ்ந்து கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

" ' தம்பியார் உளராக
வேண்டும்' என வைத்ததயா
உம்பருல கணையவுறு
நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா
தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து
திலகவதி யார்இருந்தார். "

தம்பியார்-அந்தத் திலகவதியார் தம்முடைய தம்பியா ராகிய மருணீக்கியார். உளராக-உயிரோடு இருப்பவராக; இடைக்குறை. வேண்டும் என-வேண்டும் என்று. என: இடைக்குறை, வைத்த-அந்த மருணீக்கியாரிடத்தில் தாம் வைத்திருந்த. தயா-தயை. உம்பர்-தேவர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். உலகு-தேவலோகத்தை. அணைய-அடைவதற்காக. உறு-எண்ணியிருந்த. நிலை-நிலையை. விலக்க-விலக்கும் பொருட்டு. உயிர்-தம்முடைய உயிரை தாங்கி-போக்கிவிடாமல் தாங்கிக்கொண்டு. அம்-அழகிய. பொன்-தங்கத்தால் செய்த. மணி-மாணிக்கத்தைப் பதித்த. நூல்-மாங்கல்ய நூலாகிய தாலியை. தாங்காது-திருமணம் புரிந்துகொண்டு தாங்காமல். அனைத்து - எல்லாவகை யாகிய. உயிர்க்கும்-உயிர்களிடத்திலும்; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். அருள்-திருவருளை. தாங்கி-தாங் கிக்கொண்டு. இம்பர்-இந்த உலகத்தில். மனை-தம் முடைய திருமாளிகையில் தங்கிக்கொண்டிருந்து. த்:சந்தி. தவம்

தவத்தை. புரிந்து-புரிந்துகொண்டு. திலகவதியார்-அந்தத் திலகவதியார். இருந்தார்-வாழ்ந்து கொண்டிருந்தார்.

பிறகு உள்ள 35-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய குற்றம் ஒன்றும் இல்லாத திருவுள்ளத்தில் உண்டாகியிருந்த துயரம் போவதற்காக அந்த மருணீக்கியார் நிறைந்து இந்தப் பாரத தேசத்தில் சைவ சமயமாகிய வழி நிலைத்து நில்லாமையைப் பார்த்து முப்பத்திரண்டு தருமங்களைப் புரிபவராகி இந்த மண்ணுலகத்தின் மேல் தம்முடைய புகழ் விளங்குமாறு இரவலர்களுக்குச் செல்வத்தை வழங்கியும் கருணையால் குற்றம் இல்லாத பல தருமச்சாலைகளையும், தண்ணீர்ப் பந்தல்களையும் கட்டி வைப்பவரானார்.' பாடல் வருமாறு:

"மாசில்மனத் துயரொழிய
மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை
கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க
நிதியளித்தும் கருணையினால்
ஆசில்அறச் சாலைகளும்
தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார்."

மாசு-குற்றம் ஒன்றும். இல்-இல்லாத; கடைக்குறை. மன-தம்முடைய திருவுள்ளத்தில் உண்டாகியிருந்த. த்:சந்தி. துயர்-துயரம். ஒழிய - போவதற்காக. மருணீக்கியார்-அந்த மருணீக்கியார். நிரம்பி-நிறைந்து. த்:சந்தி. தேசம்-இந்தப் பாரத தேசத்தில். நெறி-சைவ சமயமாகிய வழி நிலையாமை-நிலைத்து நில்லாமையை. கண்டு-பார்த்து. அறங்கள்-முப்பத்திரண்டு தருமங்களையும்; அவை இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக்கண்டுணர்க. செய்வாராய் - புரிந்தருளுபவராகிய. க்:சந்தி. காசினிமேல்-இந்த மண்ணுலகத்தின் மேல். புகழ்-தம்

டைய புகழ். விளங்க-விளங்கும் வண்ணம். நிதி-செல்வத்தை. அளித்தும் - இரவலர்களுக்கு வழங்கியருளியும். கருணையினால்-தம்மிடம் உண்டாகிய கருணையால். ஆசு-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. அறச்சாலைகளும் - தருமச்சாலைகளையும். தண்ணீர்ப் பந்தரும்-தண்ணீர்ப் பந்தல்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அமைப்பார்-கட்டி வைப்பவரானார்.

பிறகு உள்ள 36-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பூம்பொழில்களில் பலவகையாகிய மரங்களை நட்டு வைத்து வளருமாறு புரிந்தருளியும், பல குளங்களைத் தோண்டியருளியும், தம்முடைய கடன் ஒரு சிறிதும் தவறாமல் வருகிற மக்களுக்கு வேண்டிய பொருள்களை மகிழ்ச்சியை அடைந்து வழங்கியருளியும், தம்முடைய திருமாளிகைக்கு வரும் அதிதிகளுக்கு இனிய சுவைகளைப் பெற்ற விருந்து உணவுகளை வழங்கியருளியும், நாவன்மையைப் பெற்ற புலவர்களுக்குச் செல்வத்தைப் பெருகலாக அளித்தருளியும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்களில் உள்ள ஊர்களில் வாழும் மக்கள் எல்லோர்க்கும் என்றைக்கும் நீங்காத கொடையாகிய செயல் துறையில் அந்த மருணீக்கியார் நிலைத்து நின்றார்.' பாடல் வருமாறு:

"காவளர்த்தும் குளம்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறைநின்றார்."

கா-பூம்பொழில்களில்; ஒருமை பன்மை மயக்கம். வளர்த்தும்-பல வகையாகிய மரங்களை நட்டு வைத்து அவை வளரு

மாறு புரிந்தருளியும். அந்த மரங்களாவன; தேக்கு மரம் வாகை மரம், வேங்கை மரம், தென்னை மரம், பனை மரம், விளா மரம், மா மரம், பலா மரம், பல வகையாகிய வாழை மரங்கள், வில்வ மரம், மகிழ மரம், தமால மரம், நுணா மரம், ஆல மரம், அரச மரம், நாரத்தை மரம், கொளிஞ்சி மரம், பவளமல்லிகை மரம், நெட்டிலிங்க மரம், அசோக மரம், வேப்ப மரம், புளிய மரம், குருக்கத்தி மரம் முதலியவை. குளம்-பல குளங்களை; ஒருமை பன்மை மயக்கம். தொட்டும்-தோண்டியருளியும். கடப்பாடு-தம்முடைய கடமை. வழுவாமல்-சிறிதளவும் பிழையாத வண்ணம். மேவினர்க்கு-தம்முடைய திருமாளிகைக்கு வந்த மக்களுக்கு ; ஒருமை பன்மை மயக்கம். வேண்டுவன-வேண்டிய பொருள்களை. அவையாவன; வேட்டிகள், அங்க வஸ்திரங்கள், செல்வம், உணவுப் பொருள்கள், செருப்பு, குடை, சீலைகள், ரவிக்கைகள், பலவகை அணிகலன்கள் முதலியவை. மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. அளித்தும்-கொடுத்தருளியும். விருந்து-தம்முடைய திரு மாளிகைக்கு வரும் அதிதிகளுக்கு இனிய ஆறு சுவைகளைப் பெற்ற விருந்து உணவுகளை; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: சம்பா அரிசிச்சோறு, பலவகைக் கறியமுதுகள், நெகிழ்கறியமுதுகள், பால்பாயசம், ரசம், தயிர் வடைகள், இலட்டுகங்கள், ஊறுகாய்கள் முதலியவை. ஆறுசுவைகளாவன: காரம், கசப்பு, தித்திப்பு, துவர்ப்பு, உப்பு, புளிச்சுவை என்பவை. அளித்தும் -நல்கியருளியும். நாவலர்க்கு-நாவன்மையைப் பெற்றவர்களாகிய புலவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். வளம்-செல்வத்தை. பெருக-பெருகலாக. நல்கியும்-வழங்கியருளியும். நாளிலத்து உள்ளோர்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்களில் உள்ள ஊர்களில் வாழும் மக்கள். யாவருக்கும்-எல்லோருக்கும். தவிராத-என்றைக்கும் நீங்காத. ஈகை-கொடையாகிய, வினை-செயல். த்:சந்தி.

துறை-துறையில். நின்றார்-அந்த மருணீக்கியார் நிலைத்து நின்றார்.

பிறகு வரும் 37-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நிலைத்து நிற்காத இந்த மண்ணுலகத்தினுடைய இயல்பைப் பார்த்து, "நிலைத்து நில்லாத வாழ்க்கையில் அடியேன் வாழ்கிறவன் அல்லேன்" என்று எண்ணிச் சைவ சமயத்தை அறவே விட்டுவிட்டு சமயங்களாக உள்ளவற்றுள் நல்ல சமய வழியை அறிந்து உணர்ந்து கொள்ள நம்பராகிய சிவபெருமானார் தம்முடைய திருவருளை வழங்காமையால் கொல்லாமை என்னும் போர்வைக்குள் மறைந்து கொண்டு வாழும் சமணர்களுடைய ஜைன சமயத்தைச் சேர்பவரானார் அந்த மருணீக்கியார்.' பாடல் வருமாறு:

"நில்லாத உலகியல்பு
கண்டு, 'நிலை யாவாழ்க்கை
அல்லேன்.' என் றறத்துறந்து
சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர
நம்பர்அரு ளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும்
அமண்சமயம் குறுகுவார்."

நில்லாத-நிலைத்து நிற்காத. உலகு-இந்த மண்ணுலகத்தினுடைய. இயல்பு-தன்மையை. கண்டு-பார்த்து. நிலையா-நிலைத்து நில்லாது. வாழ்க்கை-வாழ்க்கையில். அல்லேன்-அடியேன் வாழ்கிறவன் அல்லேன். என்று-என்று எண்ணி. அற-சைவசமயத்தை அடியோடு. த்:சந்தி. துறந்து-விட்டு. விட்டு. சமயங்கள் ஆனவற்றின்-சமயங்களாக உள்ளவற்றுள். நல்-நல்ல. ஆறு-வழியாகிய சைவசமய வழியை. தெரிந்து-அறிந்து. உணர-உணர்ந்து கொள்ள. நம்பர்-தம்முடைய அடியவர்களுக்குப் பலவிதமாகிய நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய சிவபெருமானார். அந்த நம்பிக்கைகள் இன்னவை:

என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டு ணர்க. அருளாமையினால்-தம்முடைய திருவருளை வழங் காமையால். கொல்லாமை-கொல்லாமை என்னும் போர் வைக்குள்; ஆகுபெயர். மறைந்து-தங்களை மறைத்துக் கொண்டு. உறையும்-வாழும். அமண்-சமணர்களினுடைய; திணைமயக்கம். சமயம்-ஜைனசமயத்தை. குறுகுவார்-அந்த மருணீக்கியார் சேர்பவர் ஆனார்.

பிறகு வரும் 38-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மருணீக்கியார் பாடலிபுத்திரமாகிய திருப்பாதிரிப் புலியூர் என்னும் சிவத்தலத்தை அடைந்து சமணத் துறவி கள் வாழும் ஒரு பள்ளியினுடைய பாகத்தை அடைந்தவ ராகி, வலிமையைப் பெற்ற சமணர்கள் அந்த மருணீக்கியா ருடைய பக்கத்தை அடைந்து அவருக்கு, "முக்தியைத் தெரிந்து கொள்ளும் வழி இதுதான்." என்று உண்மையைப் போல தங்களோடு கூட வரும் உணர்ச்சியைக் கொள்ளும் வண்ணம் பல பொய் நூல்களைக் கற்பித்தார்கள்.' பாடல் வருமாறு:

"பாடலிபுத் திரம்என்னும்
பதிஅணைந்து சமண்பள்ளி
மாடணைந்தார்; வல்லமணர்
மருங்கணைந்து மற்றவர்க்கு
'வீடறியும் நெறிஇதுவே'
எனமெய்போல் தங்களுடன்
கூடவரும் உணர்வுகொள
குறிபல்வும் கொளுவினார்."

பாடலிபுத்திரம் என்னும்-அந்த மருணீக்கியார் பாடலி புத்திரமாகிய திருப்பாதிரிப்புலியூர் என்று கூறப்படும். பதி- சிவத்தலத்தை. அணைந்து-அடைந்து. சமண்-சமணத் துறவிகள் வாழும்; திணைமயக்கம். பள்ளி-ஒரு பள்ளியி னுடைய. மாடு-பக்கத்தை. அணைந்தார்-அடைந்தவராகி;

முற்சிறச்சம். வல்-வலிமையைப்பெற்ற, அமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-அந்த மருணீக்கியா ருடைய பக்கத்தை. அணைந்து-அடைந்து. மற்று:அசை நிலை. அவர்க்கு-அந்த மருணீக்கியாருக்கு. வீடு-முக்தியை. அறியும்-தெரிந்து கொள்ளும். நெறி-வழி. இதுவே-இந்தச் சமணசமயந்தான். என-என்று; இடைக்குறை. மெய்போல்-உண்மையைப்போல., தங்களுடன்-தங்களோடு. கூடவரும்-கூட எழுந்தருளும். உணர்வு-உணர்ச்சியை. கொள-கொள் ளும் வண்ணம்; இடைக்குறை. க்:சந்தி. குறி-பொய்ந்நூல் கள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும்-பலவற்றையும். கொளுவினார்-மருணீக்கியாருடைய திருவுள்ளம் கொள்ளு மாறு அந்தச் சமணர்கள் கற்பித்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 39-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'அந்தச் சமண் பள்ளியில் அந்த மருணீக்கியாரும் சமண சமயத்தில் உள்ள அருமையாக இருக்கும் கலைகளைக் கூறும் சாத்திரங்களாக உள்ள எல்லாவற்றையும் தம்முடைய திரு வுள்ளத்தில் பொங்கி எழும் உணர்ச்சி உண்டாகுமாறு கற்றுப் பழகி அந்தச் சமண சமய வழியில் தம்முடைய அறிவு சிறப் பாக அமைய பரிசுத்தமாகிய முழுமையாக உள்ள உடம்பு களைப் பெற்ற சமணர்கள் அந்த மருணீக்கியாரைச் சுற்றிக் கொண்டு மகிழ்ச்சியை அடைபவர்களாகி அந்த மருணீக்கி யாருக்குத் தங்களுக்குள் மேலாக விளங்கும் தருமசேனர் என்னும் திருநாமத்தை வழங்கினார்கள்.' பாடல் வருமாறு:

" அங்கவரும் அமண்சமயத்
தருங்கலைநூ லானவெலாம்
பொங்கும்உணர் வுறப்பயின்றே
அந்நெறியிற் புலன்சிறப்பத்
துங்கமுழு உடற்சமணர்
சூழ்ந்துமகிழ் வார்அவர்க்குத்

தங்களின்மே லாம்தரும
சேனர்எனும் பெயர் கொடுத்தார்.''

அங்கு-அந்தச் சமணப் பள்ளியில். அவரும்-அந்த மருணீக்கியாரும். அமண் சமயத்து-சமண சமயத்தில் உள்ள. அரும் - அருமையாக இருக்கும். கலை-கலைகளைக் கூறும்; ஒருமை பன்மை மயக்கம். நூல்-சாத்திரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆன-ஆக உள்ள. எலாம்-எல்லாவற்றையும்; இடைக்குறை. பொங்கும்-தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழும். உணர்வு-உணர்ச்சி; அறிவு. உற-உண்டாகுமாறு. ப்:சந்தி. பயின்று-கற்றுப் பழகி. ஏ:அசை நிலை. அந்நெறியில்-அந்தச் சமண சமயமாகிய வழியில். புலன்-தம்முடைய அறிவு. சிறப்ப-சிறப்பாக அமைய. த்:சந்தி. துங்க-பரிசுத்தமான. முழு-முழுமையாக உள்ள. 'துங்க' என்றது இழிவுக் குறிப்பு; பரிசுத்தம் இல்லாதவர்கள் என்றபடி. சமணத்துறவிகள் நீராட மாட்டார்கள். உடல்-உடம்புகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். சமணர்-சமண சமயத்தவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்து-அந்த மருணீக்கியாரைச் சுற்றிக் கொண்டு. மகிழ்வார்-மகிழ்ச்சியை அடைபவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம்; முற்றெச்சம். அவர்க்கு-அந்த மருணீக்கியாருக்கு. த்:சந்தி. தங்களின்-தங்களுக்குள். மேலாம்-மேலாக விளங்கும். தருமசேனர் எனும்-தருமசேனர் என்னும்: இடைக்குறை. பெயர்-திருநாமத்தை. கொடுத்தார்-வழங்கினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 40-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

''அந்த மருணீக்கியார் அந்தச் சமண சமயத் துறையில் மேலாகச் சிறந்து விளங்கும் தம்முடைய அறிவாற்றல் சிறப்பாக அமைந்திருக்கும் இயல்பினால் அகலமாக உள்ள இந்த உலகத்தில் சித்தங்களினுடைய உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளாத பௌத்த சமயத்தவர்களையும் வாதத்தில் செலுத்திய தம்முடைய அறிவாற்றலால் வெற்றியைப்

பெற்று இந்த மண்ணுலகத்தில் தம்முடைய புகழைப் பெற்ற வித்தகராக விளங்கி சமண சமயத்தவர்களினுடைய தலைமைப் பதவியில் மேம்பாட்டை அடைந்து திகழ்ந்தார்." பாடல் வருமாறு:

" அத்துறையில் மீக்கூரும்
அமைதியினால் அகலிடத்தில்
சித்தநிலை அறியாத
தேரரையும் வாதின்கண்
உய்த்தஉணர் வினில்வென்றே
உலகின்கண் ஒளியுடைய
வித்தகராய் அமண்சமயத்
தலைமையினில் மேம்பட்டார்."

அத்துறையில்-அந்த மருணீக்கியார் அந்தச் சமண சமயத் துறையில். மீக் கூரும்-மேலானவராகச் சிறந்து விளங்கும் மீ: திணை மயக்கம். அமைதியினால்-தம்முடைய அறிவாற்றல் சிறப்பாக அமைந்திருக்கும் இயல்பினால். அகல்-அகலமாகிய. இடத்தில்-இந்த உலகத்தில். சித்தம்-மக்களுடைய சித்தங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிலை நிலையை. அறியாத-தெரிந்து கொள்ளாத. தேரரையும்-பௌத்த சமயத்தவர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். வாதின்கண்-அவர்களோடு தாம் புரிந்த வாதத்தில். உய்த்த-செலுத்திய. உணர்வினில்- தம்முடைய அறிவாற்றலால்; உருபு மயக்கம். வென்று-வெற்றியைப் பெற்று. ஏ:அசை நிலை, உலகின்கண்-இந்த மண் உலகத்தில். ஒளி-வாழும் மக்கள் பாராட்டும் புகழை. உடைய-பெற்ற. வித்தகராய்-வித்தைகளில் வல்லவராகி. அமண்-சமணர்களினுடைய; திணை மயக்கம். சமய-சமயத்தினுடைய. த்:சந்தி. தலைமையினில்-தலைமைப் பதவியில். மேம்பட்டார்-மேம்பாட்டை அடைந்து திகழ்ந்தார்.

அடுத்து வரும் 41-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தச் சமண சமயமாகிய வழியில் மிகுதியாகிய சிறப்பைப் பெற்றவராகி அந்த மருணீக்கியார் இவ்வாறு நடந்து வர அமைந்த தவத்தைப் புரிந்த தவசிகளினுடைய நேர்மையாகிய வழியில் தம்முடைய திருமடத்தில் தங்கியிருக்கும் திலகவதியாரும் பழைய வழியாகிய சைவ சமய நெறியில் தம்முடைய உறவினர்களினுடைய சம்பந்தம் அகலப் பரிசுத்தமாகிய சைவ சமயமாகிய நல்ல வழியையே அடைவதற்காகத் தம்முடைய தலைவனாகிய திருவதிகை வீரட்டானேசுவரனுடைய திருவடிகளை அடைபவரானார்.' பாடல் வருமாறு:

> " அந்நெறியில் மிக்கார்
> அவரொழுக ஆன்றதவர்
> செந்நெறியின் வைகும்
> திலகவதி யார்தாமும்
> தொன்னெறியின் சுற்றத்
> தொடர்பொழியத் தூயசிவ
> நன்னெறியே சேர்வதற்கு
> நாதன்தாள் நண்ணுவார்."

அந்நெறியில்-அந்தச் சமண சமயமாகிய வழியில். மிக்கார்-மிகுதியாகிய சிறப்பைப் பெற்றவராகி; முற்றெச்சம். அவர்-அந்த மருணீக்கியார். ஒழுக-இவ்வாறு நடந்து வர. ஆன்ற-அமைந்த. தவர்-தவத்தைப் புரிந்த தவசிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். செந்நெறியின்-நேர்மையாகிய வழியில். வைகும்-தம்முடைய திருமடத்தில் தங்கியிருக்கும். திலகவதியார் தாமும்-மருணீக்கியாருடைய தமக்கையாராகிய திலகவதியாரும். தாம்-அசைநிலை. தொல்-பழமையாகிய. நெறியின்-சைவ சமய வழியில். சுற்ற-தம்முடைய உறவினர்களோடு; திணைமயக்கம். த்:சந்தி. தொடர்பு-சம்பந்தம். ஒழிய-அகல. த்:சந்தி. தூய-பரிசுத்தமாக உள்ள. சிவ-சைவசமயமாகிய. நல்-நல்ல. நெறியே-வழியையே. சேர்வதற்கு-

அடைவதற்காக. நாதன்-தம்முடைய தலைவனாகிய திருவதிகை வீரட்டானேசுவரனுடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். நண்ணுவார்-அடைபவராகித் திருவதிகை வீரட்டானத்தை அடைபவரானார்.

பிறகு வரும் 42-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நீங்காத பந்த பாசத்தினுடைய கட்டுத் தம்மைவிட்டு அகலுவதற்காக பின்னிய சடாபாரத்தைத் தன்னுடைய தலையின்மேல் பெற்றவனாகிய வீரட்டானேசுவரனிடத்தில் குறையாத பக்தியை அடைவதற்காக விரும்பிய அந்த மடப்பத்தைப் பெற்ற மாதரசியாராகிய திலகவதியார் நீர் நிரம்பி ஓடும் கெடில நதியினுடைய வடக்கில் உள்ள நீளமான கரையில் நெடுங்காலமாக விளங்கும் பெருமையையும் சீர்த்தியையும் நிறையப் பெற்ற திருவதிகை வீரட்டானத்தை அடைந்தருளினார்.' பாடல் வருமாறு:

"பேராத பாசப்
பிணிப்பொழியப் பிஞ்ஞகன்பால்
ஆராத அன்புபெற
ஆதரித்த அம்மடவார்
நீரார் கெடிலவட
நீள்கரையில் நீடுபெரும்
சீரார் திருவதிகை
வீரட்டா னம்சேர்ந்தார்."

பேராத-நீங்காத. பாச-பந்த பாசத்தினுடைய. ப்: சந்தி. பிணிப்பு-கட்டு. ஒழிய-தம்மை விட்டு அகலுவதற்காக. ப்: சந்தி. பிஞ்ஞகன்பால்-பின்னிய சடாபாரத்தைத் தன்னுடைய தலையின் மேல் பெற்றவனாகிய வீரட்டானேசுவரனிடத்தில். ஆராத-சிறிதளவும் குறையாத. அன்பு-பக்தியை. பெற-அடைவதற்காக. ஆதரித்த-விரும்பிய. அம்மடவார்-அந்த மடப்பத்தைப் பெற்ற மாதரசியாராகிய திலகவதியார். நீர்-புனல். ஆர்-நிரம்பி ஓடும். கெடில-கெடில நதியினுடைய. வட-

வடதிசையில் உள்ள. நீள்-நீளமான. கரையில் நீடு-கரையில் நெடுங்காலமாக விளங்கும். பெரும்-பெருமையையும். சீர்-சீர்த்தியையும். ஆர்-நிறையப் பெற்ற. திருவதிகை வீரட்டானம்-திருவதிகை வீரட்டானத்தை. சேர்ந்தார்-அடைந்தருளினார்.

திருவதிகை வீரட்டானம்: இது நடு நாட்டில் உள்ள சிவத்தலம். இது கெடில நதியின் வடக்குக் கரையில் விளங்குவது. இங்கே கோயில் கொண்டிருப்பவர் வீரட்டேசுவரர். அம்பிகை திரிபுரசுந்தரி. இது பண்ணுருட்டி என்னும் ஊருக்குத் தென்கிழக்கில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. "வீசும் கெடில வடகரைத்தே எந்தை வீரட்டமே" என்று தேவாரத்தில் வரும் பகுதி இந்தத் தலம் கெடில நதியின் வடகரையில் இருப்பதைக் குறிக்கிறது. இது எட்டு வீரட்டங்களில் ஒன்று; திரிபுரதகனம் செய்ததைக் குறிப்பது. திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையாராகிய திலகவதியார் வீரட்டேசுவரரை வழிபட்ட தலம் இது. அந்த நாயனார் சமண சமயத்தை விட்டுவிட்டுச் சைவ சமயத்தைச் சார்ந்தவராகி, "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்போது அவருடைய சூலை நோய் தீர்ந்து விட்டது. காடவன் என்னும் சமண மன்னன் சைவ சமயமே உண்மையான சமயம் என்ற தெளிவைப் பெற்ற பிறகு திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணர்களினுடைய பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துவிட்டு அவற்றில் இருந்த கற்களைக் கொண்டு (குணதர ஈச்சுரம்) என்ற திருக்கோயிலைக் கட்டினான். அந்த ஆலயமும் இந்தத் தலத்தில் உள்ளது. இதைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

"முற்றா வெண்மதி சூடும் முதல்வனார்
செற்றார் வாழும் திரிபுரம் தீஎழ
வில்தான் கொண்டெயில் எய்தவர் வீரட்டம்
கற்றால் அல்லலெதன் கண்துயில் கொள்ளுமே."

திருவதிகை வீரட்டானத்தைப் பற்றித் தக்கராகப் பண்ணில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"எண்ணார் எயில்எய்தான்
இறைவன் அனலேந்தி
மண்ணார் முழவதிர
முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப்
பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவநின்
றாடும்வீரட் டானத்தே."

இந்தத் தலத்தைப் பற்றிக் கொல்லிப் பண்ணிலும், காந்தாரப் பண்ணிலும், காந்தார பஞ்சமப் பண்ணிலும் திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். இவற்றையன்றி, கொப்புளித்த திருநேரிசை, திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, ஏழைத் திருத்தாண்டகம், அடையாளத் திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம், திருவடித் திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம் என்பவை அடங்கிய திருப்பதிகங்களையும் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியிருக்கிறார். அடையாளத் திருத்தாண்டகம் ஒன்று வருமாறு:

'செம்பொனாற் செய்தழகு பெய்தாற் போலும்
செஞ்சடையெம் பெருமானே தெய்வம் நாறும்
வம்பினாள் மலர்க்கூந்தல் உமையாள் காதல்
மணவாள னேவலங்கை மழுவா ளனே
நம்பனே நான்மறைகள் தொழ நின்றானே
நடுங்காதார் புரம்மூன்றும் நடுங்கச் செற்ற
அம்பனே அண்டகோ சரத்து ளானே
அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே.''

பிறகு வரும் 43-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திலகவதியார் திருவதிகைக்கு எழுந்தருளித்

திருவதிகை வீரட்டானத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருந்த சிவந்த பவள மலையைப் போன்றவராகிய வீரட்டே சுவரருடைய திருவடிகளை வணங்கி குற்றம் இல்லாத சிவ சின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்க மாலை, சடாபாரம். ஆகியவற்றை அந்த நாள் முதலாகத் தரித்துக் கொண்டு பேராவல் உண்டாகுமாறு தம்முடைய கரங்களால் அமைந்த திருப்பணிகளைப் புரிய ஆரம்பித்தார்.' பாடல் வருமாறு:

"சென்றுதிரு வீரட்டா
 னத்திருந்த செம்பவளக்
குன்றை அடிபணிந்து
 கோதில் சிவசின்னம்
அன்றுமுதல் தாங்கி
 ஆர்வமுறத் தம்கையால்
துன்றுதிருப் பணிகள்
 செய்யத் தொடங்கினார்."

சென்று-அவ்வாறு திலகவதியார் திருவதிகைக்கு எழுந் தருளி. திருவீரட்டானத்து-திருவதிகை வீரட்டானத்தில்; இருந்த-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்த. செம்-சிவப்பாக இருக்கும். பவளக் குன்றை-பவள மலையைப் போன்றவராகிய வீரட்டேசுவரருடைய; உருபு மயக்கம். அடி-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணிந்து-வணங்கி விட்டு. கோது-குற்றம். இல்-இல்லாத; கடைக் குறை. சிவசின்னம்-திருநீறு, உருத்திராக்க மாலை, சடா பாரம் ஆகிய சைவ சமயத்துக்கு உரிய அடையாளங்களை. சின்னம்: ஒருமை பன்மை மயக்கம். அன்று முதல்-அந்த நாள் முதலாக. தாங்கி-தரித்துக்கொண்டு. ஆர்வம்-பேராவல். உற-உண்டாகுமாறு. த்:சந்தி. தம்-தம்முடைய. கையால்-திருக்கரங்களால்; ஒருமை பன்மை மயக்கம். துன்று-அமைந் துள்ள. திருப்பணிகள்-திருப்பணிகளை. செய்ய-புரிந்தருள. த்:சந்தி. தொடங்கினார்-ஆரம்பித்தார்.

சிவபெருமானுக்குப் பவளக் குன்றை உவமானமாகக்

கூறும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

பிறகு உள்ள 44-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திலகவதியார் விடிவதற்கு முன்பே துயிலிலிருந்து எழுந்து வந்து திருவதிகை வீரட்டானேசுவரருடைய ஆலயத்தின் திருவாசலில் அழகிய துடைப்பத்தால் பெருக்கி ஈன்றணிமைபோன அழகு மிகுதியாக உள்ள பசுமாட்டினுடைய சாணத்தினால் நன்றாக அழகாகத் தரையை மெழுகி நந்தவனத்திலிருந்து பல வகையாகிய மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து அந்த மலர்களால் மாலைகளையும் கட்டி வைத்து அந்தத் திருவதிகையில் வாழும் பல மக்களும் புகழ்ந்து பாராட்டும் நல்ல பண்பினோடு திருப்பணிகள் பலவற்றைப் புரிந்தருளினார்.' பாடல் வருமாறு:

"புலர்வதன்முன் திருவலகு
பணிமாறிப் புனிறகன்ற
நலம்மலிஆன் சாணத்தால்
நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து
மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினால்
திருப்பணிகள் பலசெய்தார்."

புலர்வதன்முன்-அந்தத் திலகவதியார் விடிவதற்கு முன்பே. திருவலகு-துயிலிலிருந்து எழுந்து வந்து திருவதிகை வீரட்டானேசுவரருடைய ஆலயத்தின் திருவாசலில் அழகிய துடைப்பத்தால். பணி-செய்யும் திருப்பணியாகிய பெருக்குவதை. மாறி-மீண்டும் மீண்டும் புரிந்தருளி. ப்:சந்தி. புனிறு-ஈன்றணிமை. அகன்ற-போன. நலம்-அழகு. மலி-மிகுதியாக உள்ள. ஆன்-பசுமாட்டினுடைய. சாணத்தால்-சாணத்தினால். நன்கு-நன்றாக. திரு-அழகிய. மெழுக்கு-தரையை மெழுகுவதை. இட்டு-புரிந்தருளி. மலர்-பல வகையாகிய மலர்களை. அவையாவன: நந்தியாவட்டை மலர், அரளி

மலர், தும்பை மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், பவள மல்லிகை மலர், வெள்ளைச் செவ்வந்தி மலர், மஞ்சட் செவ்வந்தி மலர் முதலியவை. கொய்து-நந்தவனத்திலிருந்து பறித்து. கொடுவந்து-அவற்றை எடுத்துக் கொண்டு வந்து. மாலைகளும்-அவற்றால் பல மாலைகளையும், தொடுத்து-கட்டி. அமைத்து-வைத்து. ப்:சந்தி. பலர்-அந்தத் திருவதிகையில் வாழும் பலமக்களும். புகழும்-புகழ்ந்து பாராட்டும். பண்பினால்-நல்ல பண்போடு; உருபு மயக்கம். திருப்பணிகள் பல-திருப்பணிகள் பலவற்றை. செய்தார்-புரிந்தருளினார்.

அடுத்து உள்ள 45-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திலகவதியார் அவ்வாறு ஒவ்வொரு நாளும் மிகுதியாக இருக்கும் திருப்பணிகளைப் புரிந்து கொண்டு தம்முடைய குறைகளை வீரட்டானேசுவரரிடம் விண்ணப்பித்து வரும் நல்ல காலத்தில் உறவின் முறையாக அமையும் அன்பு உண்டாகுமாறு நடந்து வரும் நட்பைப் பெற்ற அந்த மாதரசியார் தமக்கு பின்னால்தம்பியாராகப்பிறந்தவராகிய மருணீக்கியார் கிரகங்களால் உண்டாகிய தீய வினையாகிய பாவம் முன்னால் செல்ல சைவ சமயம் அல்லாத வேறு சமயமாகிய சமண சமயத்தைச் சேர எண்ணி அவ்வாறே சமணர்களோடு போய் சேர்ந்து கொண்ட செயலுக்காக மூண்டு எழும் தம்முடைய திருவுள்ளத்தில் தோன்றிய கவலையால் முற்றிக் கொண்டு வரும் துயரத்தால் வருத்தத்தை அடைந்து.' பாடல் வருமாறு:

" நாளும்மிகும் பணிசெய்து
குறைந்தடையும் நன்னாளில்
கேளுறும்அன் புறஒழுகும்
கேண்மையினார் பின்பிறந்தார்
கோளுறுதீ வினைமுந்தப்
பரசமயம் குறித்ததற்கு

மூளும்மனக் கவலையினால்
முற்றவரும் துயருழந்து."

இந்தப் பாடல் குளகம். நாளும்-திலகவதியார் அவ்வாறு ஒவ்வொரு நாளும். மிகும்-மிகுதியாக இருக்கும். பணி-திருப் பணிகளை; ஒருமை பன்மை மயக்கம் செய்து-புரிந்து கொண்டு. குறைந்து-தம்முடைய குறைகளை வீரட்டானேசு வரரிடம் விண்ணப்பித்து. அடையும்-வரும். நல்-நல்ல. நாளில்-காலத்தில். கேள்-உறவின் முறையாக. உறும்-அமை யும். அன்பு உற-அன்பு உண்டாகுமாறு. ஒழுகும்-நடந்து வரும். கேண்மையினார்-நட்பைப் பெற்ற அந்த மாதரசியார். பின்-தமக்குப் பின்னால். பிறந்தார்-தம்பியாராகப் பிறந்தவ ராகிய மருணீக்கியார். கோள்-கிரகங்களால்; ஒருமை பன்மை மயக்கம். உறு-உண்டாகிய. தீவினை-தீய வினையாகிய பாவம். முந்த-எல்லாவற்றிற்கும் முன்னால் செல்ல. ப்:சந்தி. பரசமயம்-சைவ சமயம் அல்லாத வேறு சமயமாகிய சமண சமயத்தை. குறித்ததற்கு-சேர எண்ணி அவ்வாறே சமணர்க ளோடு போய்ச் சேர்ந்து கொண்ட செயலுக்காக. மூளும்-மூண்டு எழும். மன-தம்முடைய திருவுள்ளத்தில் தோன்றிய. க்:சந்தி. கவலையினால்-கவலையால். முற்றவரும்-முற்றிக் கொண்டு வரும். 'முற்ற அரும்-காலம் முழுவதும் அருமை யாக இருக்கும்' எனலும் ஆம். துயர்-துயரத்தால். உழந்து-வருத்தத்தை அடைந்து.

பிறகு வரும் 46-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு துயரத்தால் வருத்தத்தை அடைந்தவரும், தூண்டுகின்ற தவத்தைப் புரிந்த விளக்கைப் போன்றவராகிய திலகவதியார் சுடர் வீசும் சோதியாகிய வீரட்டானேசு வரரை வணங்கி, "அடியேனைத் தேவரீர் ஆளாகக் கொண்டு திருவருளை வழங்குபவரானால், அடியேனுக்குப் பின்னால் பிறந்தவனாகிய மருணீக்கியைத்தொகுதியாகக்கூடி யிருக்கும் தீவினைகளாகிய பாவங்களைப் புரியும் வேறு சமய மாகிய சமண சமயம் என்னும் குழியிலிருந்தும் எடுத்தருள

புரிய வேண்டும்'' என்று பல தடவைகளும்விண்ணப்பத்தைப் புரிந்தார்.' பாடல் வருமாறு:

" தூண்டுதவ விளக்கனையார்
சுடரொளியைத் தொழு,'தென்னை
ஆண்டருளும் நீராகில்
அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக்
குழிநின்றும் எடுத்தருள
வேண்டும்'எனப் பலமுறையும்
விண்ணப்பம் செய்தனரால்.''

தூண்டு-அவ்வாறு துயரத்தால் வருத்தத்தை அடைந்தவரும் தூண்டுகின்ற. தவ-தவத்தைப் புரிந்த. விளக்கு - திருவிளக்கை. அனையார்-போன்றவராகிய திலகவதியார். சுடர்-சுடரை வீசும். ஒளியை-சோதியாகிய வீரட்டானேசுவரரை. த்:சந்தி. தொழுது-வணங்கி விட்டு. என்னை-அடியேனை. ஆண்டருளும் நீராகில்-தேவரீர் ஆளாகக் கொண்டு திருவருளை வழங்குபவரானால். அடியேன்-அடியேனுக்கு. பின்-பின்னால், வந்தவனை-பிறந்த தம்பியாகிய மருணீக்கியை. ஈண்டு-தொகுதியாகக் கூடியிருக்கும். 'இந்தஇடத்தில்' எனலும் ஆம். வினை-தீய வினைகளாகிய பாவங்களைப் புரியும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பரசமய-வேறு சமயமாகிய சமண சமயத்தைச் சேர்ந்த சமணர்களாகிய; திணை மயக்கம். க்:சந்தி. குழி நின்றும்-குழியிலிருந்தும். எடுத்தருள வேண்டும்-எடுத்துத் தேவரீர் திருவருளை வழங்க வேண்டும். என-என்று; இடைக் குறை. ப்:சந்தி. பல முறையும்-பல தடவைகளிலும்; ஒருமை பன்மை மயக்கம். விண்ணப்பம்-விண்ணப்பத்தை. செய்தனர் -செய்து கொண்டார். ஆல்:ஈற்றசை நிலை.

பெண்மணிக்கு விளக்கு உவமை : "விளக்கொளியாகிய மின் கொடியாளை." என்று திருமூலரும், "அணி விளக்கென்ன விழவு கொண்டெழும் பேதையருடன்.", "செழுமலர்

தென்னாடு விளக்கும் சீர் விளக்கின் செய்ய சீறடிகள் போற்றி.'' என்று சேக்கிழாரும், ''மனைக்கு விளக்காகிய வாணுதல்.'' (புறநானூறு, 314:1) என்று ஐயூர் முடவனாரும், ''மனைக்கு விளக்கம் மடவாள்.'' (நான்மணிக் கடிகை, 104) என்று வேறு ஒரு புலவரும், ''விளக்குறுத்தது போல் தோன்றும் மாதரை.'' என்று கொங்கு வேளிரும், ''திகழ்ந் தெரி விளக்கெனத் திலகம் ஆயினார்.'' (சீவக சிந்தாமணி 2640) என்று திருத்தக்க தேவரும், ''கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குல விளக்கே.'' என்று ஆண்டாளும், ''மங்கையர்க்கு விளக்கன்ன மானையும்.'' (கங்கைப் படலம், 16), ''வில்லி வாங்கிய சிலையெனப் பொலிநுதல் விளக்கே.'', ''வீறு பஞ்சியின்றி அமுத நெய் மாட்டிய விளக்கே.'' (சித்திர கூடப் படலம், 13, 15), ''பெண்ணியல் தீபம் அன்ன பேரெழிலாட்டி.'', ''செந்தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கை.'' (இரணியன் வதைப் படலம்) என்று கம்பரும் பாடியவற்றையும், ''மண்ணிற் பிறந்த மணிவிளக்கோ.'' (சம்புவன் வதைப் படலம், 58) என்று உத்தர காண்டத்தில் வருவதையும் காண்க.

பிறகு உள்ள 47-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'''தவம் எனக் கூறிக்கொண்டு பாய்களை உடைகளாக அணிந்து, அவற்றைத் தங்களுடைய கட்கங்களில் இடுக்கி வைத்துக் கொண்டு தங்களுடைய தலைகளில் உள்ள மயிர்களைத் தாங்களே பிடுங்கிக் கொண்டு, நின்றபடியே உணவுகளை உண்ணும் வீணாக உள்ள இயற்கை சேர்ந்திருக்கும் சமண சமய வழியாகிய குழியில் விழுகின்ற என் தம்பியாகிய மருணீக்கி அவ்வாறு விழாத வண்ணம் தேவரீர் திருவருளை வழங்குவீர்களாக!'' என்று சைவ சமயத்தில் சேர்ந்திருக்கும் வழியில் நிலைத்து நின்ற திலகவதியார் வீரட்டானேசுவரரைப் புகழ்ந்து வணங்க, பிறப்பில் சேரும் தீய வினைகளாகிய பாவங்களைப் போக்குபவராகிய அந்த ஈசுவரர் தம்மு

டைய திருவுள்ளத்தில் எண்ணுபவரானார்.* பாடல் வருமாறு:

"தவமென்று பாய்இடுக்கித்
 தலைபறித்து நின்றுண்ணும்
அவமொன்று நெறிவீழ்வான்
 வீழாமே அருளும்.' எனச்
சிவமொன்று நெறிநின்ற
 திலகவதி யார்பரவப்
பவமொன்றும் வினைதீர்ப்பார்
 திருவுள்ளம் பற்றுவார்."

தவம் என்று-தவம் எனக் கூறிக் கொண்டு. பாய்-பாய்களை; ஒருமை பன்மை மயக்கம். இடுக்கி-உடைகளாக அணிந்து கொண்டு அவற்றைத் தங்களுடைய கட்கங்களில் இடுக்கி வைத்துக் கொண்டு. த்:சந்தி. தலை-தங்களுடைய தலைகளில் உள்ள மயிர்களை; ஆகு பெயர். பறித்து-தாங்களே பிடுங்கிக் கொண்டு; இவ்வாறு செய்வதை 'உலோச்சு' என்பர். நின்று-நின்று கொண்டே. உண்ணும்-உணவுகளை உண்ணும். அவம்-வீணாக உள்ள இயல்பு. ஒன்று-சேர்ந்திருக்கும். நெறி-சமண சமய வழியாகிய குழியில்; ஆகு பெயர். வீழ்வான்-விழுகின்ற அடியேனுடைய தம்பியாகிய மருணீக்கி. வீழாமே-அவ்வாறு விழாத வண்ணம். அருளும்-தேவரீர் திருவருளை வழங்குவீராக. என-என்று; இடைக்குறை. ச்:சந்தி. சிவம்-சைவ சமயத்தில். ஒன்று-சேர்ந்திருக்கும். நெறி-சைவ சமய வழியில். நின்ற-நிலைத்து நின்ற. திலகவதியார்-மருணீக்கியாருடைய தமக்கையாராகிய அந்தத் திலகவதியார். பரவ-வீரட்டானேசுவரரைப் புகழ்ந்து வணங்க. ப்:சந்தி. பவம்-மனிதப் பிறவியில். ஒன்றும்-வந்து பிறக்கும். வினை-செயலுக்குக் காரணமாகிய தீய வினைகளாகிய பாவங்களை; ஒருமை பன்மை மயக்கம். தீர்ப்பார்-போக்கியருள்பவராகிய அந்த ஈசுவரர்.

திருவுள்ளம் -தம்முடைய திருவுள்ளத்தில். பற்றுவார்- எண்ணுபவரானார்.

பிறப்பைப் போக்குபவர்: "பிறவிகள் அறல் எளிது... கழலிணை தொழல் மருவுமே.", "பிறவி அறுக்கும் பிரானார்.", "பிறப்பார் பிறப்புச் செறப்பாதி யந்தம் செலச் செய்யும் தேசன்.", "பிறவியை அறுக்க உன்னுவீர்.... வாழ்த்து வாழ்மினே.", "பிறவி அறுப்பீர்காள் அறவன் ஆரூரை மறவாதேத்துமின்.", "பிணியும் பிறப்பறுப்பான் பெருமான்.", "பிறப்பை அறுத்து.", "பேர்த்தினிப் பிறவா வண்ணம் பிதற்றுமின்... பாசுபதன் திறமே." "அம்மையே பிறவித்துயர் நீத்திடும்.", "பிறவி நீங்கப் பிதற்றுமின்.", "பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி இறப்பு நீங்கி இங் கின்பம் வந்தெய்திடும்... செந் நெறியான் கழல் மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே.", "பிறவி அறுக்கும் பிரானே போற்றி.", "இம்மாயப் பிறப்பென்னும் கடலாம் துன்பத் திடைக்கழிப்பட்டிளைப்பேனை இளையா வண்ணம்... கருணை செய்து.", "கருமருவு வல்வினை நோய் அகற்றினான்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்.", "இடர்ப் பிறவி பிறந்தயர்வேன் அயராமம் அங்ஙனம் வந்தெனை ஆண்ட அருமருந்து.", "சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத் தன் அருள் தந்த எம் தலைவனை.", "பிறப் பிறப்பென்னும் இதனை நீக்கி." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க.", "மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி.", "பிறந்தபிறப்பறுக்கும் எங்கள்பெருமான்.", "அல்லற் பிறவி அறுப்பானே.", "மீட்டேயும் பிறவாமற் காத்தாட்கொண்டான்.", "ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்.", "எங்கள் பிறப்பறுத்திட்டெந்தரமும் ஆட்கொண்டு.", "இனிப் பிறவாமே காத்து.", "பிறப்பறுத்தாண்டு கொண்ட கூத்தனை.", "பித்த உலகிற்

பிறப்போடிறப்பென்னும் சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவர்க்கே.'', ''மரணம் பிறப்பென்றிவை இரண் டின் மயக்கறுத்த கருணைக் கடலுக்கே.'', ''என் பிறவிக் கருவேர் அறுத்தபின்.'', ''பிறப்பறுத்த அத்தன்.'', ''என் றும் பிறந்திறந்தாழாமே ஆண்டுகொண்டான்.'', ''துஞ்சல் பிறப்பறுப்பான்.'', ''தொல்பிறவித்தீர்தோடா வண்ணம் திகழப் பிறப்பறுப்பான்.'', ''பிறவிப் பகை கலங்க.'' ''இப்பிறப்பறுத்தெமை ஆண்டருள் புரியும் எம்பெருமான்.'', ''பிறவிப் பிணிக்கோர் மருந்தே.'', ''பிறவிதனை அற மாற்றி.'', ''பிறவி வேரறுத் தென்குடி முழுதாண்ட பிஞ் ஞகா.'', ''பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கெ லாம் அறுத்த நற்சோதீ.'', ''மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்.'', ''என்பாவைப் பிறப்பறுத்து.'', ''முடியேன், பிறவேன்.'', ''இப்பிறவிதனைத் தூரும் பரிசு துரிசறுத்து.'', ''பிறவி என்னும் இக்கடலை நீந்தத் தன் பேரருள் தந் தருளினான்.'', ''பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்.'', ''மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும்.'' என்று மாணிக்கவாசகரும், ''முன்பிப்பிறவி முடிவதுதானே.'', ''பிறப்பை அறுக்கும்.'', ''பிறடபினை நீக்கும் பெருமை பெற்றாரே.'', ''ஆர்த்த பிறவி அகலவிட்டோடுமே.'', ''ஒழித்தேன் பிறவியை.'' என்று சேரமான் பெருமாள் நாயனாரும், ''இல்லை பிறவிக் கடல் ஏறல்...சடையானைச் சாரா தார்தாம்.'', ''மன்னும் பிறப்பறுக்கும் மாமருந்து.'' என்று கபிலதேவ நாயனாரும், ''நின் திருவடி பரவுதும் யாமே நெடுநாள் இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந் தும் சிறைக்கருப் பாசயம் சேரா மறித்தும் புகாஅ வாழ்வு பெறற் பொருட்டே.'', ''வருந்தேன் இறந்தும் பிறந்தும்.'', ''பிறவாத வண்ணம் அறிந்தேன்.'', ''இச்சிறை பிழைப்பித் தினிச் சிறை புகாமற் காத்தருள் செய்ய வேண்டும்.'' ''தம்மைப் பிறவிக் கடல் கடப்பிப்பவர்.'' என்று பட்டி னத்துப் பிள்ளையாரும், ''பவம் அறுத்தாள்வதற்

கோதில்லை நட்டம் பயில்கின்றதே.'', ''பிறப்பென்னாய்க் கழியுங்கொல் என்றனக்கே.'', ''பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத் துறவியெனும் தோற்றோணி கண்டீர்.'', ''பிறவாமை வேண்டும்.'', ''பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.'', ''கருவரைப்பிற் புகாதவர் கை தொழும் ஒருவரை.'', ''ஒரு பிறப்பும் எய்தாமை உடையார்.'', ''பவமற என்னை முன்னாள் ஆண்ட அப் பண்புகூட.'', ''ஊனுடம்பிற் பிறவிவிடம் தீர்ந்துலகத்தோர் உய்ய ஞானமுதல் நான்கும் மலர் நற்றிரு மந்திர மாலை.'' என்று வருவனவற்றைக் காண்க.

பிறகு வரும் 48-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருவதிகை வீரட்டானத்தில் நிலைபெற்று விளங்கும் தவமாகிய செல்வத்தைப் பெற்றவராகிய திலகவதியாருக்கு அவர் துயிலும்போது உண்டான சொப்பனத்தில் இளமைப் பருவத்தைப் பெற்ற இடப வாகனத்தை ஓட்டுபவராகிய அந்த வீரட்டானேசுவரர், ''நின்னுடைய உள்ளத்தில் உள்ள கவலையை நீ விட்டு விடுவாயாக. உன்னுடன் பிறந்தவனும் உன்னுடைய தம்பியும் ஆகிய மருணீக்கி முன் பிறவியிலேயே முனிவனாகி என்னை அடைவதற்காகத் தவத்தைப் புரிந்தான்; அத்தகைய அவனை இனிமேல் கடுமையாகிய வயிற்று வலியை வழங்கி அவனை ஆளாகக் கொள்வேன்.'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து.' பாடல் வருமாறு:

''மன்னுதபோ தனியார்க்குக்
கனவின்கண் மழவிடையார்
'உன்னுடைய மனக்கவலை
ஒழிநீ;உன் உடன்பிறந்தான்
முன்னமே முனியாகி
எனைஅடையத் தவம்முயன்றான்;
அன்னவனை இனிச்சூலை
மடுத்தாள்வன்.' எனஅருளி.''

இந்தப் பாடல் குளகம். மன்னு-திருவதிகை வீரட்டானத்தில் நிலைபெற்று விளங்கும். தபோதனியார்க்கு-தவமாகிய செல்வத்தைப் பெற்றவராகிய திலவதியாருக்கு. க்:சந்தி. கனவின் கண்---அவர் துயிலும்போது உண்டான சொப்பனத்தில். மழ-இளம் பருவத்தைப் பெற்ற. விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவராகிய அந்தவீரட்டானேசுவரர். உன்னுடைய-நின்னுடைய. மன-உள்ளத்தில் உள்ள. க்:சந்தி. கவலை-கவலையை. ஒழிநீ-நீ விட்டு விடுவாயாக. உன்உடன்-உன்னோடு. பிறந்தான்-பிறந்தவனும் உன்னுடைய தம்பியும் ஆகிய மருணீக்கி. முன்னமே-முன் பிறவியிலேயே. முனியாகி-ஒரு முனிவனாக இருந்து. எனை-என்னை; இடைக்குறை. அடைய-அடைவதற்காக. த்:சந்தி. தவம்-தவத்தை. முயன்றான்-புரிந்தான். அன்னவனை-அத்தகைய அவனை. இனி-இனிமேல். ச்:சந்தி. சூலை-கடுமையாகிய வயிற்று வலியை. மடுத்து-வழங்கி. ஆள்வன்-ஆளாக ஏற்றுக் கொள்வேன். என-என்று; இடைக்குறை. அருளி-திருவாய் மலர்ந்தருளிச் செய்து.

பிறகு வரும் 49-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த மருணீக்கி பழைய பிறவியில் செய்த நல்ல தவத்தினால் குற்றத்தினுடைய அளவு சிறிதேனும் தவறும் திருத்தொண்டராகிய அந்த மருணீக்கியாரை எம்முடைய ஆளாகப்புரிய ஆரம்பிக்கும் கடுமையாகிய வயிற்றுவலி என்னும் வேதனையை ஒற்றைக் கண்ணைத் தம்முடைய நெற்றியில் பெற்றவராகிய அந்த வீரட்டானேசுவரர் வழங்கியருள கடுமையாகிய நெருப்பைப் போல வருத்தத்தைத் தரும் கொடுமையாகிய மிக்கு உண்டாகிய பெரிதாக இருக்கும் சூலையை அந்த மருணீக்கியாருடைய வயிற்றுக்குள் புகுந்தது.' பாடல் வருமாறு:

"பண்டுபுரி நற்றவத்துப்
பழுதினளவிறைவழுவும்

தொண்டரைஆ ளத்தொடங்கும்
சூலைவே தனைதன்னைக்
கண்தருநெற் றியர்அருளக்
கடுங்கனல்போல் அடும்கொடிய
மண்டுபெருஞ் சூலைஅவர்
வயிற்றினிடைப் புக்கதால்."

பண்டு-அந்த மருணீக்கி பழைய பிறவியில். புரி-செய் திருந்த. நல்-நல்ல. தவத்து-தவத்தினால். ப்:சந்தி. பழுதின்-குற்றத்தினுடைய. அளவு-அளவானது. இறை-சிறிதேனும். வழுவும்-தவறும். தொண்டரை-திருத்தொண்டராகிய அந்த மருணிக்கியாரை, ஆள-எம்முடைய ஆளாக ஏற்றுக் கொள்ள. த்:சந்தி. தொடங்கும்-ஆரம்பிக்கும். சூலை-கடுமையாகிய வயிற்று வலி என்னும். வேதனை தன்னை-வேதனையை. தன்:அசைநிலை. க்:சந்தி. கண்-ஒற்றைக் கண்ணை. தருநெற்றியர்-தம்முடைய திருநுதலில் பெற்றவராகிய அந்த வீரட்டானேசுவரர். அருள-வழங்கியருளிய. க்:சந்தி. கடும்-கடுமையாக இருக்கும். கனல் போல்-நெருப்பைப் போல. அடும்-வருத்தத்தை அளிக்கும்-கொடிய-கொடுமையாகிய. மண்டு-மிகுதியாக உண்டாகிய. பெரும்-பெரியதாக இருக்கும். சூலை-சூலை நோயை. அவர்-அந்த மருணிக்கியாருடைய. வயிற்றினிடை-வயிற்றுக்குள். ப்:சந்தி. புக்கது-புகுந்தது. ஆல்:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 50-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அறிவு அடைதல் இல்லாத சமணர்கள் விரும்பிய அந்தத் தருமசேனருடைய வயிற்றுக்குள் உண்டாகிய அந்தச் சூலை நோய் வடவாக்கினியும் கொடுமையாகிய ஆலகால நஞ்சும், இந்திரனுடைய வஜ்ஜிராயுதமும், வேறு ஆயுதங்களும் ஆகும் கொடுமையாக உள்ள யாவும் ஒன்று சேர்ந்ததாகும் என்று கூறுமாறு அவருடைய குடலினுடைய உட்புறத்தைக் குடைந்திருக்க, மிக்க துன்பத்தினால் வருத்-

தத்தை அடைந்து நடுக்கத்தைப் பெற்று சமணர்கள் வாழும் பாழியில் உள்ள பாறையில் அவர் விழுந்தார்.' பாடல் வருமாறு:

"அடைவில்அமண் புரிதரும
சேனர்வயிற் றடையும்அது
வடஅனலும் கொடுவிடமும்
வச்சிரமும் பிறவுமாம்
கொடியஎலாம் ஒன்றாகும்
எனக்குடரின் அகம்குடையப்
படருழந்து நடுங்கிஅமண்
பாழியறை யிடைவிழுந்தார்."

அடைவு-நல்ல அறிவு அடைதல். இல்-இல்லாத; கடைக் குறை. அமண்-சமணர்கள்; திணை மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். புரி-விரும்பிய. தருமசேனர்-தருமசேனருடைய. வயிற்று-வயிற்றுக்குள். அடையும்-உண்டாகியிருக்கும். அது -அந்தச் சூலை நோய். வட அனலும்-வடவா முகாக்கினியும். வடவாமுகம்-படவாமுகம்; பெண் குதிரையின் முகம். கொடு -கொடுமையாக உள்ள. விடமும்-பாற் கடலில் எழுந்த ஆல கால நஞ்சும். வச்சிரமும்-இந்திரனுடைய வஜ்ஜிராயுதமும் பிறவும்-வேறு ஆயுதங்களும். ஆம்-ஆகும். கொடிய-கொடு மையாக உள்ள. எலாம்-யாவும்; இடைக்குறை. ஒன்றாகும் -ஒன்று சேர்ந்ததாகும். என-என்று கூறுமாறு; இடைக் குறை. க்:சந்தி. குடரின்-குடலினுடைய. அகம்-உட்புறத்தை. குடைய-குடைந்திருக்க. ப்:சந்தி. படர்-மிக்க துன்பத்தி னால்வருத்தத்தை. உழந்து-அடைந்து. நடுங்கி-நடுக்கத்தைப் பெற்று. அமண்-சமணத் துறவியர்கள். வாழும்; திணை மயக்கம். பாழி-மலைக் குகையில் உள்ள. அறையிடை-பாறை யில். விழுந்தார்-அந்த மருணீக்கியார் விழுந்தார்.

பிறகு உள்ள 51-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தச் சமண சமயத்தில் தாம் முன்பு அதிகாரத்தைப்

பெற்று வாய்க்கப் பெற்றுவரும் மந்திர வித்தைகளினால் அந் தச் சூலைநோயைத் தடுக்கவும் அது மேலும் மேலும் மிகுதி யாக வேகத்தை அடைந்து உச்ச நிலையை அடைய வேத னையை உண்டாக்கும் அந்தச் சூலை நோய் ஓங்கி எழுந்து நிற்க அந்தப் பாழியில் அந்த மருணீக்கியார் நஞ்சைக் கக்கும் பாம்பினுடைய விஷம் தலையில் ஏறிக் கொண்டது என்று கூறுமாறு மயக்கத்தை அடைந்து துன்பத்தை அடைந்தார்.' பாடல் வருமாறு:

" அச்சமயத் திடைத்தாம்முன்
அதிகரித்து வாய்த்துவரும்
விச்சைகளால் தடுத்திடவும்
மேன்மேலும் மிகமுடுகி
உச்சமுற வேதனைநோய்
ஓங்கிஎழ ஆங்கவர்தாம்
நச்சரவின் விடம்தலைக்கொண்
டெனமயங்கி நவையுற்றார்."

அச்சமயத்திடை-அந்தச் சமண சமயத்தில். த்:சந்தி. 'தாம்' என்றது மருணீக்கியாரை. முன்-முன்பு. அதிகரித்து-தலைவராகிய அதிகாரத்தைப் பெற்று. வாய்த்து-வாய்க்கப் பெற்று. வரும்-கை வரும். விச்சைகளால்-மந்திர வித்தைகளினால். தடுத்திடவும்-அந்த நோயைத் தடுத்துப் பார்த்தும். மேன் மேலும்-அது மேலும் மேலும். மிக-மிகுதியாக. முடுகி-வேகத்தை அடைந்து. உச்சம்-உச்ச நிலையை. உற-அடைய. வேதனை-வேதனையை உண்டாக்கும். நோய்-அந்தச் சூலை நோய். ஓங்கி எழ-மேலும் மேலும் ஓங்கி எழ. ஆங்கு-அந்தப் பாழியில். அவர் தாம்-அந்த மருணீக்கியார். தாம்:அசை நிலை. நச்சு-நஞ்சைக் கக்கும். அரவின்-பாம்பினுடைய. விடம்-விஷம். தலைக் கொண்டு-தலையில் ஏறிக் கொண்டது; வினையாலணையும் பெயர். என-என்று கூறுமாறு; இடைக்குறை. மயங்கி-மயக்கத்தை அடைந்து. நவை-துன்பத்தை. உற்றார்-அடைந்தார்.

அடுத்து வரும் 52-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மருணீக்கியாருடைய வருத்தத்தை அடைந்த நிலையைப் பார்த்ததற்குப் பிறகு சமணர்களாகிய இழிந்த செயல்களையும் இழிவான ஒழுக்கத்தையும் கொண்டவர்கள் பல பேர்களும் கூடிக் கொண்டு, "இவரைக் கவர்ந்திருக்கின்ற நஞ்சைப் போல முன்பு நாம் பார்த்து அறியாத கொடுமையாக இருக்கும் இந்தச் சூலை நோய் இந்த மருணீக்கியாருக்கு வந்து விட்டது; இனிமேல் செய்வதற்குரிய செயல் ஏது இருக்கிறது?" என அந்தச் சமணர்கள் வருத்தத்தை அடைந்தார்கள்; அவர்கள் தவம் என்று கூறிக் கொண்டு தீய வினைகளாகிய பாவங்களைப் பெருகலாகச் செய்து சார்பு அல்லாத சமண சமய வழியைச் சார்ந்து இருப்பவர்கள்.' பாடல் வருமாறு:

"அவர்நிலைமை கண்டதற்பின்
அமண்கையர் பலர்ஈண்டிக்
'கவர்கின்ற விடம்போல்முன்
கண்டறியாக் கொடும்சூலை
இவர்தமக்கு வந்ததினி
யாதுசெயல்?' என்றழிந்தார்
தவமென்று வினைபெருக்கிச்
சார்பல்லா நெறிசார்வார்."

அவர்-அந்த மருணீக்கியாருடைய. நிலைமை-வருத்தத்தை அடைந்த நிலையை. கண்டதற்பின்-பார்த்ததற்குப் பிறகு. அமண்-சமணர்களாகிய; திணைமயக்கம். கையர்-இழிந்த செயல்களையும் இழிவான ஒழுக்கத்தையும் கொண்டவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலர்-பல பேர்களும். ஈண்டி-கூடிக் கொண்டு. க்:சந்தி. கவர்கின்ற-இவரைக் கவர்ந்திருக்கின்ற. விடம் போல்-நஞ்சைப் போல. முன்-முன்னால். கண்டு அறியா-நாம் பார்த்துத் தெரிந்து கொள்ளாத. க்:சந்தி. கொடும்-கொடுமையாக இருக்கும். சூலை-இந்தச்

சூலை நோய். இவர்தமக்கு-இந்த மருணீக்கியாருக்கு. தம் அசை நிலை. வந்தது-வந்து விட்டது. இனி-இனிமேல். யாது -ஏது. செயல்-செய்வதற்குரிய பரிகாரமாகிய காரியம் ஏது இருக்கிறது. என்று-என எண்ணி. தவம் என்று-தவம் என்று கூறிக் கொண்டு. வினை-தீய வினைகளாகிய பாவங்களை; ஒருமை பன்மை மயக்கம். பெருக்கி-பெருகலாகச் செய்து. ச்:சந்தி. சார்பு-சார்தல். அல்லா-அல்லாமல் உள்ள. நெறி-சமணசமய வழியை. சார்வார்-சார்ந்து இருப்பவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அழிந்தார்-வருத்தத்தை அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 53-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தங்களுடைய தலைகளில் உள்ள மயிர்களைத் தாங்களே பிடுங்கிக் கொண்டமையால் உண்டாகிய புண்களைப் பெற்ற தலைகளைக் கொண்ட வலிமையையும் முரட்டுத் தனத்தையும் பெற்ற சமணர்கள் வாட்டத்தை அடைந்து செய்வதற்கு உரிய காரியம் ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் தங்களுடைய கைகளில் வைத்திருக்கும் கமண்டலங்களில் உள்ள நீரை மந்திரங்களைக் கூறி அந்த மருணீக்கியாரைக் குடிக்கச் செய்தும் அந்தச் சூலைநோய் குறையாமையால் அதைப் பார்த்து மிகுதியாகத் தாங்கள் வைத்திருக்கும் மயிற் பீலிகளைக் கொண்டு அந்த மருணீக்கியாருடைய திருவடிகளின் அளவும் தடவவும் முன்பு இருந்ததைக் காட்டிலும் அந்தச் சூலை நோயால் உண்டான வருத்தம் மிகுதியாக அவமானத்தால் அந்தச் சமணர்கள் துன்பத்தை அடைந்து வருந்தினார்கள்' பாடல் வருமாறு:

"புண்தலைவன் முருட்டமணர்
புலர்ந்துசெயல் அறியாது
குண்டிகைநீர் மந்திரித்துக்
குடிப்பித்தும் தணியாமை

கண்டுமிகப் பீலிகொடு
கால்அளவும் தடவிடவும்
பண்டையினும் நோவுமிகப்
பரிபவத்தால் இடர்உழந்தார்.''

புண்-தங்களுடைய தலைகளில் உள்ள மயிர்களைத் தாங்களே பிடுங்கிக் கொண்டமையால் உண்டாகிய புண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். தலை தலைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். அவ்வாறு தங்களுடைய தலைகளில் உள்ள மயிர்களைத் தாங்களே பிடுங்கிக் கொள்வதை 'உலோச்சு' என்பர். வன்-வலிமையையும். முருட்டு-முரட்டுத்தனத்தையும் பெற்ற. அமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். புலர்ந்து-வாட்டத்தை அடைந்து. செயல்-பரிகாரமாகச் செய்வதற்கு உரிய காரியம் ஒன்றையும். அறியாது-தெரிந்து கொள்ளாமல். குண்டிகை-தங்களுடைய கைகளில் வைத்திருக்கும் கமண்டலங்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். நீர்-புனலை. மந்திரித்து-மந்திரங்களைக் கூறியும். க்:சந்தி. குடிப்பித்தும்-அந்த மருணீக்கியாரைக் குடிக்குமாறு செய்தும். தணியாமை-அந்தச் சூலை நோய் சிறிதேனும் குறையாமையால். கண்டு-அதைப் பார்த்து விட்டு. மிக-மிகுதியாக. ப்:சந்தி. பீலி-தாங்கள் வைத்திருக்கும் மயிற் பீலிகளை; ஒருமை பன்மை மயக்கம். கொடு-எடுத்துக் கொண்டு. கால்-அந்த மருணீக்கியாருடைய திருவடிகள்; ஒருமை பன்மை மயக்கம். அளவும்-வரையிலும். தடவிடவும்-தடவவும். பண்டையினும்-முன்பு இருந்ததைக் காட்டிலும். நோவு-அந்தச் சூலை நோயால் உண்டாகிய வருத்தம். மிக-மிகுதியாக உண்டாக. ப்:சந்தி. பரிபவத்தால்-அவமானத்தால். இடர்-துன்பத்தை. உழந்தார்-அடைந்து அந்தச் சமணர்கள் வருந்தினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 54-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'குறையாத புகழைப் பெற்ற அந்தத் தருமசேனருக்கு

வந்திருந்த சூலை நோய் சிறிதேனும் குறையாமல் நின்று கொண்டிருக்கவும் அந்த நோய் நீங்காமையைத் தெரிந்து கொண்டவர்களாய், "ஹா, ஹா, நாம் இனிமேல் எந்த வகையாகிய பரிகாரத்தைப் புரிவோம்" என்று எண்ணி வருத்தத்தை அடைந்த உள்ளங்களைப் பெற்றவர்களாகிச் செல்பவர்கள் ஆகிய அந்தச் சமணர்கள், "இந்தச் சூலை நோய் எங்களால் தீர்ப்பதற்கு அரியதாகும்." என்று கூறி. பாடல் வருமாறு:

" தாவாத புகழ்த்தரும
 சேனருக்கு வந்தபிணி
ஓவாது நின்றிடலும்
 ஒழியாமை உணர்ந்தாராய்
'ஆ!ஆ!நாம் என்செய்கோம்?'
 என்றழிந்த மனத்தினராய்ப்
போவார்கள், 'இதுநம்மால்
 போக்கரிதாம்' எனப்புகன்று.'

இந்தப் பாடல் குளகம். தாவாத-குறையாத. புகழ்-புகழைப் பெற்ற. த்:சந்தி. தருமசேனருக்கு-அந்தத் தருமசேனருக்கு. வந்த-உண்டாகியிருந்த. பிணி - சூலை நோய். ஓவாது-சிறிதேனும் குறையாமல். நன்றிடலும்-அந்த மருணீக்கியாருடைய வயிற்றில் நின்று கொண்டிருக்கவும். ஒழியாமை-அந்தச் சூலை நோய் சிறிதேனும் நீங்காமையை. உணர்ந்தாராய்-தெரிந்து கொண்டவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம். ஆ-ஹா! ஆ-ஹா! நாம்-யாம். என்-இனிமேல் எந்த வகையாகிய பரிகாரத்தை. செய்கோம்-புரிவோம். என்று-என எண்ணி. அழிந்த-வருத்தத்தை அடைந்த. மனத்தினராய்-உள்ளங்களைப் பெற்றவர்களாகி. மனம்: ஒருமை பன்மை மயக்கம். மனத்தினர்:)))) க்கம். ப்:சந்தி. போவார்கள்-செல்பவர்கள் ஆகிய அந்தச் சமணர்கள். இது-இந்தச் சூலை நோய். நம்மால்-எங்களால். போக்கரிதாம்-தீர்ப்பதற்கு அரியது.

ஆகும். என-என்று; இடைக்குறை. ப்:சந்தி. புகன்று-கூறி.

பிறகு வரும் 55-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தச் சமணர்களாகிய இழிந்தவர்களும் அந்தச் சூலை நோயைப் போக்குவதற்கு முடியாமல் மருணீக்கியாரைத் தங்களுடைய கைகளிலிருந்தும் விட்டு விட்டார்கள்; கொடுமையாக இருக்கும் அந்தச் சூலை நோய் தம்முடைய தலையின் மேல் ஏறிக் கொண்டு மிகுதியாகப் பெருகி மிகவும் மேலும் மேலும் பெருகி வந்ததனால் அந்தச் சமணர்கள் தங்களுடைய அறிவுகளில் மயக்கத்தை அடைந்து பழைய உறவின் முறையைத் தெரிந்து கொண்டவராகிய அந்த மருணீக்கியாருக்குத் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார் இருப்பவராக எண்ணிக் கொண்டு அந்த மாதரசியாரிடம் தமக்கு உணவைச் சமைத்து உண்ணுமாறு செய்யும் சமையற்காரனைத் தம்முடைய குறித்த எண்ணத்தைத் தெரிவிக்கும் பொருட்டு அனுப்பினார்.' பாடல் வருமாறு:

"குண்டர்களும் கைவிட்டார்;
கொடும்சூலை மிசைக்கொண்டு
மண்டிமிக மேன்மேலும்
பெருகுதலால் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்க்குத்
திலகவதி யார்உளராக்
கொண்டவர்பால் ஊட்டுவான்
தனைவிட்டார் குறிப்புணர்த்த."

குண்டர்களும்-அந்தச் சமணர்களாகிய இழிந்தவர்களும். கைவிட்டார்-அந்தச் சூலை நோயைப் போக்குவதற்கு முடியாமல் மருணீக்கியாரைத் தங்களுடைய கைகளிலிருந்தும் விட்டு விட்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம். கொடும்-கொடுமையாக இருக்கும். சூலை-அந்தச் சூலை நோய். மிசைக் கொண்டு-தம்முடைய தலையின் மேல் ஏறிக் கொண்டு. மண்டிமிக-மிகுதியாகப் பெருகி மிகவும். மேன்

மேலும்-மேலும் மேலும். பெருகுதலால்-பெருகி வந்ததனால். மதி-அந்தச் சமணர்கள் தங்களுடைய அறிவுகளில்; ஒருமை பன்மை மயக்கம். மயங்கி-மயக்கத்தை அடைந்து. ப்:சந்தி. பண்டை-பழைய. உறவு-உறவின் முறையை. உணர்ந்தார்க்கு-தெரிந்து கொண்டவராகிய அந்த மருணீக்கியாருக்கு. த்:சந்தி. திலகவதியார்-தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார். உளரா-இருப்பவராக; இடைக்குறை. க்:சந்தி. கொண்டு-எண்ணிக் கொண்டு. அவர்பால்-அந்த மாதரசியாரிடத்திற்கு. ஊட்டுவான் தனை-தமக்கு உணவைச் சமைத்து உண்ணுமாறு செய்யும் சமையற்காரனை. தன்:அசை நிலை. குறிப்பு-தாம் குறித்த எண்ணத்தை. உணர்த்த-தெரிவிக்கும் பொருட்டு. விட்டார்-அனுப்பி வைத்தார்.

அந்தச் சமையற்காரன் இவ்வாறு மருணீக்கியார் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியாரிடம் தன்னை அனுப்பி வைத்தச் சமணர்களிடம் தெரிவிக்காமல், "நாம் சமைத்த உணவினால் இந்த வயிற்று வலி இந்த மருணீக்கியாருக்கு வந்து விட்டதோ?" என்று அஞ்சியும், அந்த மருணீக்கியாருடைய நல்ல குணங்களைத் தெரிந்து கொண்டமையாலும் அவன் திலகவதியாரிடம் சென்றான்.

பிறகு வரும் 56-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறே அந்தத் திலகவதியார் தங்கியிருந்த அந்த மடத்திற்கு அந்தச் சமையற்காரன் சென்று திருவதிகை வீரட்டானத்திற்குப் போய்ச் சேர அருமையாகிய தவத்தைப் புரிந்தவராகிய அந்தத் திலகவதியார் மலர்கள் நறுமணத்தை வீசும் நந்தனவனத்திற்கு வெளியில் அடைய அதைப் பார்த்து அந்தத் திலகவதியாராகிய மாதரசியாரை வணங்கி விட்டு, "திருவதிகை வீரட்டானத்தைச் சேர அருமையாக விளங்கும் இந்த இடத்திற்கு அடியேன் தங்களுக்கு இளைய தம்பியாராகிய மருணீக்கியார் இட்ட கட்டளையினால் வந்தது" என்று அந்தச் சமையற்காரன்கூற, அப்போது அந்தத் திலகவதியார், "என்னுடைய தம்பியாகிய மருணீக்குக்கு ஏதேனும் துன்பங்

கள் இருக்கின்றனவோ?'' என்று கேட்கவே, அந்தச் சமையற் காரனும் கூறலானான்.' பாடல் வருமாறு:

'' ஆங்கவன்போய்த் திருவதிகை
தனைஅடைய அருந்தவத்தார்
பூங்கமழ்நந் தனவனத்தின்
புறம்பணையக் கண்டிறைஞ்சி
'ஈங்கியான் உமக்கிளையார்
ஏவலினால் வந்த'தெனத்
'தீங்குளவோ?' எனவினவ
மற்றவனும் செப்புவான்.''

ஆங்கு-இவ்வாறு மருணீக்கியார் தம்முடைய தமக்கை யாராகிய திலகவதியார் என்னும் மாதரசியாரை வணங்கி விட்டு. அவன்-அந்தச் சமையற்காரன். போய்-சென்று. த்:சந்தி. திருவதிகை தனை-திருவதிகை வீரட்டானத்தை. தன்:அசை நிலை. அடைய-சேர. அரும்-அருமையாக விளங் கும். தவத்தார்-தவத்தைப் புரிந்த தவசியார். பூம்-பலவகை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கமழ்-நறுமணம் கமழும். நந்தன வனத்தின்-ஆலயத்தைச் சார்ந்த நந்தனவனத்தில். அந்த மலர்களாவன: நந்தியாவட்டை மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், பவள மல்லிகை மலர் முதலியவை. புறம்பு-வெளியில் உள்ள இடத்தை. அணைய-போய்ச் சேர. க்:சந்தி. கண்டு-அதைப் பார்த்து. இறைஞ்சி-அந்தச் சமையற்காரன் திலகவதியாரை வணங்கி விட்டு. ஈங்கு-இந்தத் திருவதிகை வீரட்டானத்திற்கு: இ:குற்றியலிகரம். யான்-அடியேன். உமக்கு-தங்களுக்கு. இளையார்-இளைய சகோதரராகிய தம்பியார் என்னும் மருணீக்கியார். ஏவலினால்-இட்ட கட்டளையால். வந்தது-இங்கே வந்த காரியம். என-என்று கூற; இடைக்குறை. த்:சந்தி. தீங்கு-துன்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உளவோ-அவனுக்கு இருக்கின்றனவோ; இடைக் குறை. என-என்று; இடைக்குறை. வினவ-அந்தச் சமையற்காரனை

கேட்க. மற்று:அசை நிலை. அவனும்-அந்தச் சமையற் காரனும். செப்புவான்-பின் வருமாறு கூறுவானானான்.

பிறகு உள்ள 57-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மருணீக்கியாருடைய வயிற்றுக்குள் உண்டான சூலை நோய் அவரைக் கொல்லாமல் அவருடைய குடலை முடங்கச் செய்து போகாமையால் சமணர்கள் யாவரும் அவரைத் தங்களுடைய கைகளிலிருந்து விட்டுவிட்டார்கள்; "இந்தச் செயலை அடியேனுக்கு முன்னால் திருவவதாரம் செய்தருளிய நல்லவளாகிய திலக வதியாரிடத்திற்குப் போய்ச் சொல்லி அடியேன் உயிர் பிழைக்கும் வண்ணம் கேட்டு இந்த இடத்திற்கு இரவு நேரம் வரும் சமயத்தில் நீ வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார் எனத் திலகவதியாரிடம் தெரிவித்தான்.' பாடல் வருமாறு:

"கொல்லாது சூலைநோய்
குடர்முடக்கித் தீராமை
எல்லாரும் கைவிட்டார்;
'இதுசெயல்என் முன்பிறந்த
நல்லாள்பால் சென்றியம்பி
நான்உய்யும் படிகேட்டிங்
கல்லாரும் பொழுதணைவாய்
என்றார்.' என்றறிவித்தான்."

கொல்லாது-மருணீக்கியாருடைய வயிற்றுக்குள் உண்டான சூலை நோய் அவரைக் கொல்லாமல். சூலைநோய்-அந்தச் சூலைநோய். குடற்-அவருடைய குடலை. முடக்கி-முடங்கச் செய்து. த்:சந்தி. தீராமை-போகாமையால் எல்லாரும்-சமணர்கள் யாவரும். கைவிட்டார்-தங்களுடைய கைகளிலிருந்து விட்டுவிட்டார்கள்;ஒருமை பன்மை மயக்கம். இது செயல்-இதுதான் நடந்த காரியம். என்-அடியேனுக்கு. முன்-முன்னால். பிறந்த-திருவவதாரம் செய்தருளிய. நஉ

லாள் பால்-நல்லவளாகிய திலகவதியினிடத்தில். சென்று-நீ போய். 'நீ' என்றது சமையற்காரனை. இயம்பி-கூறிவிட்டு. நான்-அடியேன்; என்றது மருணீக்கியார் தம்மை. உய்யும் படி-உயிர் பிழைக்கும் வண்ணம். கேட்டு-அந்தத் திலகவதி யாரிடம் கேட்டுவிட்டு. இங்கு-இந்த இடத்திற்கு. அல்-இரவு வேளை. ஆரும் - வரும். பொழுது-சமயத்தில். அணைவாய்-நீ வருவாயாக. என்றார்- என்று அந்த மருணீக்கியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார். என்று-என. அறிவித்தான்-அந்தச் சமையற்காரன் தெரிவித்தான்.

பெண்ணை நல்லாள் என்றல்: ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே.'', ''பணங்கொள் ஆடர வல்குல் நல்லார்.'', ''நல்லார் தொழுநாகேச்சுர நகரில்.'', ''வளைக்கை மங்கை நல்லாளை.'', ''பெண்ணின் நல்லாளை ஓர் பாகமாப் பேணினான்.'', ''பெண்ணின் நல்லாளை ஓர் பாகம் வைத்து.'', ''மைப் பயந்த ஒண்கண் மட நல்லார்.'', ''வளைக்கை மடநல்லார்.'', ''மைம்பூசும் ஒண்கண் மட நல்லார்.'', ''மலிவிழா வீதி மடநல்லார்.'' என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், ''தையல் நல்லாளொடும் பாடி.'', ''கெண்டையந்தடங்கண் நல்லார்.'', ''தாழ்குழல் இன்சொல் நல்லார்.'', ''படவேர் அகலல்குற்பாவை நல்லீர்.'', ''பனி மலர்க் குழற்பாவை நல்லாரினும்.'', ''மடந்தை நல்லார்களும்.'' என்று திருநாவுக்கரசு நாயனா ரும், ''மாதர் நல்லார் வருத்தம்.'', ''மயிற் சாயல் நல்லார்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''நல்லா ளோடு நயப்புற எய்தியும்.'', ''வாட்டடங்கண் மங்கை நல்லீர்.'', ''பையரவல்குல் மடந்தை நல்லீர்.'', ''பூண் முலை மங்கை நல்லீர்.'', ''பானற்றடங்கண் மடந்தை நல்லீர்.'', ''மாது நல்லாள் உமை மங்கை பங்கன்.'' என்று மாணிக்கவாசகரும், ''தையல் நல்லாளைத் தவத்தின் தலை வியை.'', ''மாது நல்லாளும்.'' என்று திருமூலரும், நல் லாய் படுமேற்படும்.'' என்று சேரமான் பெருமான்

நாயனாரும், ''அவளினும் நல்லாள்.'' என்று சேக்கிழாரும், ''மங்கை நல்லாய்.'' என்று திருமங்கையாழ்வாரும், ''நல்லோள் கற்கும் நாழிகை.'', ''நங்காய் நல்லாய்.'' (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், ''நல்லவர் தம் முள்.'', ''நல்லானை.'' (பரிபாடல்) என்று வேறு ஒரு புலவரும், ''நல்லவர்க் காரணங்காகிய மார்பில்.'' (புறநானூறு, 14) என்று கபிலரும், ''நறிய நல்லோன் மேனி.'' (குறுந்தொகை, 12:4) என்று சிறைக்குடி ஆந்தையாரும், ''காதலி நல்லன்.'' (குறுந்தொகை, 120 : 2 - 3) என்று பரணரும், ''புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே.'' (குறுந்தொகை, 235 : 5) என்று மாயெண்டனும், ''கலையூர் பெண்ணினும் நல்லள் பெரும் புகழ்ச் சனகியோ நல்லள்.'' (மந்திரப் படலம், 40), ''நல்லாய் உடனே நட நீ.'' (சரபங்கர் பிறப்பு நீங்கு படலம், 17) என்று கம்பரும் பாடியவற்றைக் காண்க.

பிறகு வரும் 58-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'என்று அந்தச் சமையற்காரன் திலகவதியாருக்கு முன்னால் சொன்னவுடன், ''நான் அந்த மருணீக்கி இருக்கும் சமண் பாழிக்கு நின்னுடன் வந்து நல்ல செயல்களைத் தெரிந்து கொள்ளாத சமணர்களினுடைய பாழிக்கு வரமாட்டேன் என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளை நீ போய் அந்த என்னுடைய தம்பியாகிய மருணீக்கிக்குக் கூறுவாயாக'' எனத் திலகவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அன்றைக்கு அந்தச் சமையற்காரனும் திரும்பிச் சென்று நடந்த வித்தை அந்த மருணீக்கியாரிடம் கூறினான்.' பாடல் வருமாறு:

'' என்றவன்முன் கூறுதலும்,
'யான்அங்குன் னுடன்போந்து
நன்றறியா அமண்பாழி
நண்ணுகிலேன் எனும்மாற்றம்

சென்றவனுக் குரை' என்று
திலகவதி யார்மொழிய
அன்றவனும் மீண்டுபோய்ப்
புகுந்தபடி அவர்க்குரைத்தான்.''

என்று-என. அவன்-அந்தச் சமையற்காரன். முன்-திலகவதியாருக்கு முன்னால். கூறுதலும்-சொன்னவுடன். யான்-நான். அங்கு-என் தம்பியாகிய மருணீக்கி உள்ள அந்த இடத்திற்கு. உன்னுடன்-உன்னோடு. போந்து-வந்து. நன்று-நல்ல செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். அறியா-தெரிந்து கொள்ளாத. அமண்-சமணத் துறவிகள் தங்கியிருக்கும்; திணைமயக்கம். பாழி-பாழிக்கு. நண்ணுகிலேன்-யான் வரமாட்டேன். எனும்-என்று யான் கூறும்; இடைக்குறை. மாற்றம்-வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். சென்று-அந்த மருணீக்கி உள்ள இடத்திற்குப் போய். அவனுக்கு-என் தம்பியாகிய அந்த மருணீக்கிக்கு. உரை-நீ கூறுவாயாக. என்று-என. திலகவதியார்-மருணீக்கியாருடைய தமக்கையாராகிய திலகவதியார். மொழிய-இவ்வாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. அன்று-அன்றைக்கு. அவனும்-அந்தச் சமையற்காரனும். மீண்டு-திரும்பி. போய்-மருணீக்கியார் தங்கியிருக்கும் அமண்பாழிக்குச் சென்று. ப்:சந்தி. புகுந்தபடி-நடந்த விதத்தை. அவர்க்கு-அந்த மருணீக்கியாரிடம்; உருபு மயக்கம். உரைத்தான்-கூறினான்.

பிறகு உள்ள 59-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தச் சமையற்காரன் கூறிய அந்த வார்த்தைகளை மருணீக்கியார் கேட்டவுடன் சோர்வை அடைந்து, "இந்தத் துன்பத்தைப் போக்குவதற்கு இனிமேல் அடியேன் எவ்விதம் புரிவேன்?" என்று எண்ணி பரமேசுவரராகிய திருவதிகை வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருள் சேர்வதால், "அடியேனுக்குப் பொருத்தம் இல்லாத இந்தப் பொலிவற்றதாகிய சமண சமயத்திலிருந்து போகாத இந்தத் துயரம்,

போகுமாறு செம்மையான சைவ சமய வழியைச் சேர்ந்திருக்கும் அடியேனுடைய தமக்கையாராகிய திலகவதியாருடைய திருவடிகளைச் சென்று அடியேன் அடைவேன்'' என்று." பாடல் வருமாறு:

'' அவ்வார்த்தை கேட்டலுமே
அயர்வெய்தி, 'இதற்கினியான்
எவ்வாறு செய்வன்?'என
ஈசர்அருள் கூடுதலால்
'ஒவ்வாஇப் புன்சமயத்
தொழியாஇத் துயரொழியச்
செவ்வாறு சேர்திலக
வதியார்தாள் சேர்வன்.' என.''

இந்தப் பாடல் குளகம். அவ்வார்த்தை-அந்தச் சமையற்காரன் கூறிய அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்டலும்-மருணீக்கியார் கேட்டவுடன். ஏ: அசைநிலை. அயர்வு-அவர் சோர்வை. எய்தி-அடைந்து. இதற்கு-இந்தத் துன்பத்தைப் போக்குவதற்கு. துன்பம் என்றது சூலைநோயை. இனி-இனிமேல். யான்-அடியேன். எவ்வாறு-எந்த வண்ணம். செய்வன்-புரிவேன். என-என்று எண்ணி; இடைக்குறை. ஈசர்-பரமேசுவரராகிய திருவதிகை வீரட்டானேசுவரர். அருள்-வழங்கிய திருவருள். கூடுதலால்-சேர்வதால். ஒவ்வா-அடியேனுக்குப் பொருத்தம் இல்லாத. இப்புன்-இந்தப் பொலிவற்ற. சமயத்து-சமண சமயத்திலிருந்து. ஒழியா-விட்டுவிட்டு நீங்காத. இத்துயர்-இந்தத் துயரம். ஒழிய-போகுமாறு. ச்:சந்தி. செவ்வாறு-செம்மையாகிய சைவ சமய வழியை. சேர்-சேர்ந்திருக்கும். திலகவதியார்-அடியேனுடைய தமக்கையாராகிய திலகவதியாருடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். சேர்வன்-திருவதிகை வீரட்டானத்தைப் போய் அடைவேன். என-என்று; இடைக்குறை.

பிறகு வரும் 60-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்த மருணீக்கியார் தம்முடைய திருவுள்ளத்தில் எடுத்துக் கொண்ட எண்ணம் தாம் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் எழுந்து இருப்பதால் அதற்கு ஏற்ப எழுந்த முயற்சி தம்மிடம் உண்டானவுடனே தமக்கு உண்டாகியிருந்த சோர்வு விலகிப் போகத் திருவதிகை வீரட்டானத்தைப் போய்ச் சேருவதற்காக தாம் உடுத்துக் கொண்டு திரியும் பாய் நீங்கவும், உறியில் வைத்திருக்கும் கமண்டலம் நீங்கவும், கட்டி வைத்திருந்த மயிற் பீலிகளும் அகலுமாறு அந்தத் திருவதிகை வீரட்டானத்திற்குச் செல்லுவதற்குத் தீர்மானம் செய்து எழுந்து புறப்பட்டார்.' பாடல் வருமாறு:

"எடுத்தமனக் கருத்துய்ய
எழுதலால் எழுமுயற்சி
அடுத்தலுமே அயர்வொதுங்கத்
திருவதிகை அணைவதனுக்
குடுத்துழலும் பாயொழிய
உறியுறுகுண் டிகையொழியத்
தொடுத்தபீ லியும்ஒழியப்
போவதற்குத் துணிந்தெழுந்தார்."

எடுத்த-அவ்வாறு அந்த மருணீக்கியார் எடுத்துக் கொண்ட. மன-தம்முடைய திருவுள்ளத்தில். க்:சந்தி. கருத்து-மேற்கொண்ட எண்ணம். உய்ய-தாம் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம்; வயிற்றுவலியால் தம்முடைய உயிர் போகாத வண்ணம். எழுதலால்-எழுந்திருப்பதால். எழும்-அதற்கு ஏற்றபடி எழுந்த. முயற்சி-இடைவிடாத செயல். அடுத்தலும்-தம்மிடம் உண்டாகியவுடன். ஏ:அசை நிலை. அயர்வு-தமக்கு உண்டாகியிருந்த சோர்வு. ஒதுங்க-விலகிப் போக. த்:சந்தி. திருவதிகை-திருவதிகை வீரட்டானத்தை. அணைவதனுக்கு-போய்ச் சேருவதற்காக. உடுத்து-தாம் உடுத்துக் கொண்டு. உழலும்-திரியும். பாய்

ஒழிய-பாய் நீங்கவும். உறி-உறியில். உறு-தாம் வைத்திருந்த. குண்டிகை-கமண்டலம். ஒழிய-நீங்கவும். த்:சந்தி. தொடுத்த-கட்டி வைத்திருந்த. பீலியும்-மயிர்பீலிகளும்; ஒருமை பன்மை மயக்கம். ஒழிய-அகலுமாறு. ப்:சந்தி. போவதற்கு-அந்தத் திருவதிகை வீரட்டானத்திற்கு எழுந்தருள்வதற்கு. த்:சந்தி. துணிந்து-தீர்மானம் செய்தருளி. எழுந்தார்-அந்த அமண் பாழியிலிருந்து எழுந்து புறப்பட்டார்.

அடுத்து உள்ள 61-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பொய் வார்த்தைகளைக் கூறுமாறு வழங்கும் மயக்கத்தைக் கொண்ட உள்ளங்களையும் பொலிவின்மையையும் பெற்ற சமணத்துறவிகள் தங்கியிருந்த இடமாகிய அமண் பாழியை அந்த மருணீக்கியார் கடந்து உண்மையை அளிக்கும் சிறப்பைப் பெற்ற சைவ சமய வழியைச் சேர்பவராகி வெண்மையான ஆடையைத் தம்முடைய திருமேனியின் மேல் சுற்றிப் போர்த்துக் கொண்டு தமக்குக் கை கொடுப்பவர்களை எண்ணிப் பார்த்து யாரும் பாராத வண்ணம் இராத்திரி வேளையில் புரிந்த தவத்தைப் பெற்ற பெரிய தவசியாராகிய திலகவதியார் வாழ்ந்து கொண்டிருக்கும் திருவதிகை வீரட்டானத்திற்குப் போய்ச் சேர்பவரானார். பாடல் வருமாறு:

" பொய்தருமால் உள்ளத்துப்
புன்சமணர் இடங்கழிந்து
மெய்தருவான் நெறியடைவார்
வெண்புடைவை மெய்சூழ்ந்து
கைதருவார் தமையூன்றிக்
காணாமே இரவின்கண்
செய்தவமா தவர்வாழும்
திருவதிகை சென்றடைவார்."

பொய்-பொய் வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். தரு-கூறுமாறு வழங்கும். மால்-மயக்கத்தைக் கொண்ட.

உள்ளத்து-உள்ளங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புன்-தோற்றப் பொலிவு இன்மையையும் பெற்ற; சமணர்கள் நீராடுதல் இன்மையால் அவர்களுடைய உடம்புகள் அழுக்குப் படிந்து தோற்றப் பொலிவு இல்லாமல் இருக்கும். சமணர்-சமணத் துறவிகள்; ஒருமை பன்மை மயக்கம். இடம்-தங்கியிருந்த இடமாகிய அமண் பாழியை. கழிந்து-அந்த மருணீக்கியார் விட்டு விட்டு. மெய்-உண்மையை. தரு-அளிக்கும். வான்-சிறப்பைப் பெற்ற. நெறி-சைவ சமய வழியை. அடைவார்-சேர்பவராகி; முற்றெச்சம். வெண்-வெண்மையாகிய. புடைவை-ஆடையை. மெய்-தம்முடைய திருமேனியின்மேல். சூழ்ந்து-சுற்றிப் போர்த்துக் கொண்டு. கை தருவார்தமை-தமக்குக் கைகொடுப்பவர்களை; ஒருமை பன்மை மயக்கம். ஊன்றி-எண்ணிப் பார்த்து. க்:சந்தி. காணாமே-யாரும் பாராத வண்ணம்; 'அவ்வாறு உதவி புரிபவாகள யாரையும் பார்க்க முடியாமல்' எனலும் ஆம். இரவின்கண்-அன்று இராத்திரி வேளையில். செய்-புரிந்த. தவ-தவத்தைப் பெற்ற. மாதவர்-பெரிய தவசியாராகிய திலகவதியார். வாழும்-வாழ்ந்து கொண்டிருக்கும். திருவதிகை-திருவதிகை வீரட்டானத்திற்கு. சென்று அடைவார்-போய்ச் சேர்பவரானார்.

பிறகு வரும் 62-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருவதிகை வீரட்டானத்திற்குப் போய்ச் சேர்ந்தவராகிய மருணீக்கியார் சேர்ந்து தம்முடைய வயிற்றுக்கு உள்ளே எரியும் சூலை நோயோடு தொடர்ந்து செல்லுவதற்குத் தம்முடைய திருவுள்ளத்தில் அமைந்து எழுந்து சாரும் பெரிய விருப்பம் அவரைச் செலுத்திக் கொண்டு அடையச் சிறப்பைப் பெற்ற மலையைப் போல இருந்து விளங்குகின்ற மாணிக்கங்களைப் பதித்திருக்கும் திருமதிலினுடைய ஒளிவெள்ளம் எதிரில் தோன்றும் திருவதிகை வீரட்டானத்தில் தம்முடைய தமக்கையாராகிய

திலகவதியார் தங்கிக் கொண்டிருந்த அழகிய மடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

" சுலவிவயிற் றகம்கனலும்
சூலைநோ யுடன்தொடரக்
குலவிஎழும் பெருவிருப்புக்
கொண்டணையக் குலவரைபோன்
றிலகுமணி மதிற்சோதி
எதிர்கொள்திரு வதிகையினில்
திலகவதி யார்இருந்த
திருமடத்தைச் சென்றணைந்தார்."

சுலவி-அவ்வாறு திருவதிகை வீரட்டானத்திற்குப் போய்ச் சேர்ந்தவராகிய மருணீக்கியார் சேர்ந்து. வயிற்று-தம்முடைய வயிற்றுக்கு. அகம்-உள்ளே. கனலும்-தீயைப் போல எரியும். சூலை நோயுடன்-சூலை நோயோடு. தொடர-தொடர்ந்து செல்லுவதற்கு. க்:சந்தி. குலவி-தம்முடைய திருவுள்ளத்தில் அமைந்து. எழும்-எழுந்து பொங்கும். பெரு-பெரிய. விருப்பு-விருப்பம். க்:சந்தி. கொண்டு-அவரை உந்தித் தள்ளிக் கொண்டு. அணைய-அடைய. க்:சந்தி. குல-சிறப்பைப் பெற்ற. வரை-மலையை. போன்று-போல அமைந்து. இலகு-விளங்கும். மணி-மாணிக்கங்களைப் பதித்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மதில்-திருமதில் வீசும். சோதி-ஒளி வெள்ளத்தை. எதிர்கொள்-தம்முடைய எதிரில் கொண்ட. திருவதிகையினில்-திருவதிகை வீரட்டானத்தில். திலகவதியார்-தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார். இருந்த-தங்கிக் கொண்டிருந்த. திரு-அழகிய. மடத்தை-மடத்திற்கு; உருபு மயக்கம். ச்:சந்தி. சென்று-அந்த மருணீக்கியார் எழுந்தருளி. அணைந்தார்-சேர்ந்தார்.

திருமதிலுக்கு மலை உவமை: "நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி நனிதவ உயர்ந்தன பனிதோய், மால்வரைக் குலத்தின்யாவையும் இல்லை ஆதலால் உவமை மற்றில்லை, நூல் வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி நுணங்கிய

நுவலரும் உணர்வே, போல் வகைத்தல்லால் உயர்வினோடுயர்ந்ததென்னலாம் பொன் மதில் நிலையே.'' (கம்பராமாயணம், நகரப் படலம், 8) என வருவதைக் காண்க.

பிறகு வரும் 63-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு மருணீக்கியார் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார் தங்கிக் கொண்டிருந்த திருமடத்திற்குப் போய்ச் சேர்ந்து அந்தத் திலகவதியாருடைய திருவடிகளின் மேல் படியப் பணிந்து, ''அடியேங்களுடைய சாதியினர் முற்பிறப்பில் புரிந்த நல்ல தவத்தினுடைய பிரயோசனத்தைப் போல விளங்குபவரே, இந்த அடியேனுடைய உடம்பில் உண்டான கொடுமையாக இருக்கும் சூலை நோயினால் வருத்தத்தை அடைந்து இங்கே வந்து சேர்ந்தேன்; இனிமேல் அடியேன் மயக்கத்தை அடையாமல் உஜ்ஜீவனத்தை அடைந்து சமண சயமாகிய படுகுழியிலிருந்து கரையின் மேல் ஏறும் வழியைத் தாங்கள் திருவாய் மலர்ந்தருளிச் செய்வீராக.'' என்று அந்த மருணீக்கியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து.' பாடல் வருமாறு:

'' வந்தணைந்து திலகவதி
யார்அடிமே லுறவணங்கி
'நந்தமது குலம்செய்த
நற்றவத்தின் பயன்அனையீர்,
இந்தவுடற் கொடும்சூலைக்
கிடைந்தடைந்தேன்; இனிமயங்கா
துய்ந்துகரை ஏறுநெறி
உரைத்தருளும்' எனஉரைத்து.''

இந்தப் பாடல் குளகம். வந்து-அவ்வாறு மருணீக்கியார் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார் தங்கிக் கொண்டிருந்த திருமடத்திற்குப் போய். அணைந்து-சேர்ந்து. திலகவதியார்-அந்தத் திலகவதியாருடைய. அடிமேல்-திருவடிகளின் மேல்;ஒருமை பன்மைமயக்கம். உற-படிய. வணங்கி -பணிந்து. நந் தமது-அடியேங்களுடைய; இது மருணீக்கி

யார் தம்மையும் தம்முடைய சாதியினரையும் சேர்த்துக் கூறியது. குலம்-சாதியில், பிறந்தவர்கள்; திணை மயக்கம். செய்த-முற்பிறப்பில் புரிந்த. நல்-நல்ல. தவத்தின்-தவத்தி னுடைய. பயன்-பிரயோசனத்தை. அனையீர்-போல விளங்கு பவரே. இந்த-அடியேனுடைய இந்த. உடல்-உடம்பில் உள்ளவயிற்றில் உண்டாகியிருக்கும்; இடஆகுபெயர். கொடும் -கொடுமையாக இருக்கும். சூலைக்கு-சூலை நோயினால்; உருபு மயக்கம். இடைந்து-வருத்தத்தை அடைந்து. அடைந் தேன்-தங்களிடம் வந்து சேர்ந்தேன். இனி-இனிமேல். மயங் காது-சமண சமயத்தைச் சேர்ந்து மயக்கத்தை அடையாத வண்ணம். உய்ந்து-உஜ்ஜீவனத்தை அடைந்து; என்றது சைவ சமயத்தைச் சார்வதை. கரை-சமண சமயமாகிய படு குழியிலிருந்து சுனையின் மேல். ஏறும்-ஏறுவதற்கு உரியதாக இருக்கும். நெறி-வழியை. உரைத்தருளும்-தாங்கள் திருவாய் மலர்ந்தருளிச் செய்வீராக. என-என்று; இடைக்குறை. உரைத்து-அந்த மருணீக்கியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு.

பிறகு வரும் 64-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு தம்முடைய இரண்டு திருவடிகளின்மேல் விழுந்து வணங்கிச் சோர்வை அடையும் தம்முடைய தம்பியா ராகிய மருணீக்கியாரை அந்தத் திலகவதியார் பார்த்து தம்மை ஆளாக உடைய தம்முடைய தலைவனாகிய வீரட் டானேசுவரன் வழங்கும் திருவருளை எண்ணித் தம்முடைய கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கும்பிட்டு பிறகு தரையின்மேல் விழுந்து அந்த ஈசுவரனை வணங்கி விட்டு, ''சான்றோர்கள் ஏற்றுக் கொள்ளுதல் இல்லாத வேறு சமயமாகிய சமண சமய வழியாகிய படுகுழியில் விழுந்து அறியாமல் மூண்டிருக்கும் சகிப்பதற்கு அருமையாக இருக்கும் துயரத்தினால் வருத்தத்தை நீர் அடைந்தீர்; தரையிலிருந்து எழுந்திருப்பீராக'' என்று அந்தத் திலகவதி யார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

"தாளிணைமேல் விழுந்தயரும்
தம்பியார் தமைநோக்கி
ஆளுடைய தம்பெருமான்
அருள்நினைந்து கைதொழுது
"கோளில்பர சமயநெறிக்
குழியில்விழுந் தறியாது
மூளும்அரும் துயர்உழந்தீர்,
எழுந்திரீர்." எனமொழிந்தார்."

தாளிணை மேல்-அவ்வாறு தம்முடைய இரண்டு திருவடிகளின் மேல். தாள்: ஒருமை பன்மை மயக்கம். விழுந்து-விழுந்து வணங்கி. அயரும்-சோர்வை அடையும். தம்பியார் தமை-தம்பியாராகிய மருணீக்கியாரை. தம்:அசை நிலை. தமை: இடைக்குறை. நோக்கி-அந்தத் திலகவதியார் பார்த்து. ஆளுடைய-தம்மை ஆளாக உடைய. தம்-தம்முடைய. பெருமான்-தலைவனாகிய வீரட்டானேசுவரன். அருள்-வழங்கும் திருவருளை. நினைந்து-எண்ணி. கை-தம்முடைய கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கும்பிட்டு; ஒருமை பன்மை மயக்கம். தொழுது-பிறகு தரையின்மேல் விழுந்து அந்த ஈசுவரனை வணங்கி விட்டு. கோள்-சான்றோர்கள் ஏற்றுக் கொள்ளுதல். இல்-இல்லாத. பர-வேறு. சமய-சமயமாகிய. நெறி-சமண சமய வழியாகிய. க்:சந்தி. குழியில் விழுந்து-படுகுழியில் விழுந்து. அறியாது-அந்தக் குழியிலிருந்து கரை ஏறுவதைத் தெரிந்து கொள்ளாமல். மூளும்-மூண்டிருக்கும். அரும்-சகிப்பதற்கு அருமையாக இருக்கும். துயர்-துயரத்தினால். உழந்தீர்-நீர் வருத்தத்தை அடைந்தீர். எழுந்திரீர்-தரையிலிருந்து எழுந்திருப்பீராக. என-என்று; இடைக்குறை. மொழிந்தார்-அந்தத் திலகவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

அடுத்து வரும் 65-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன்

அந்த மருணீக்கியாரும் தமக்குத் தம்முடைய வயிற்றில் உண்டான சூலை நோயினால் தம்முடைய திருமேனியில் நடுக்கத்தை அடைந்து தரையிலிருந்து எழுந்திருந்து அந்தத் திலகவதியாரை வணங்க, உயர்ச்சியான தவத்தைப் புரிந்தவ ராகிய அந்த மாதரசியார், ''இவ்வாறு நீர் அடியேனிடம் வந்து சேர்ந்தது கற்றையாகிய சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய வீரட்டானேசுவரர் வழங் கிய திருவருளே என்பதை அறிந்து கொள்வீராக; தம்மு டைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை அடைந்த வர்களாகிய பக்தர்களுடைய பற்றுக்களைப் போக்கியருளுப வராகிய வீரட்டானேசுவரரை வணங்கித் திருப்பணிகளை நீர் புரிவீராக'' என்று அந்தத் திலகவதியார் மருணீக்கியாருக் குக் கட்டளையிட்டார்.' பாடல் வருமாறு:

'' மற்றவுரை கேட்டலுமே
மருணீக்கி யார்தாமும்
உற்றபிணி உடல்நடுங்கி
எழுந்துதொழ உயர்தவத்தோர்
'கற்றைவே ணியர்அருளே
காணும்இது; கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து
பணிசெய்வீர்.' எனப்பணித்தார்.''

மற்று: அசை நிலை. அ-அந்த. உரை-தம் முடைய தமக்கையாராகிய திலகவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்ட லும்-கேட்டவுடன். ஏ:அசை நிலை. மருணீக்கியார் தாமும்- அந்த மருணீக்கியாரும். தாம்:அசை நிலை. உற்ற-தமக்குத் தம்முடைய வயிற்றில் உண்டாகியிருந்த. பிணி-சூலை நோயினால். உடல்-தம்முடைய திருமேனியில். நடுங்கி-நடுக்கத்தை அடைந்து. எழுந்து - தரையி லிருந்து எழுந்திருந்து. தொழ-அந்தத் திலகவதியாரை வணங்க. உயர்-உயர்ச்சியாகிய. தவத்தோர்-

தவத்தைப் புரிந்தவராகிய அந்த மாதரசியார். கற்றை--கற்றையாகிய. வேணியர்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய வீரட்டானேசுவரர், அருளே-வழங்கிய திருவருளே. இது-இவ்வாறு நீர் அடியேனிடம் வந்து சேர்ந்த இந்தச் செயல். காணும்-என்பதை அறிந்து கொள்வீராக. கழல்-தம்முடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகு பெயர். அடைந்தோர்-அடைந்தவர்களாகிய பத்தர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். பற்று-அகப் பற்று, புறப்பற்று என்னும் பற்றுக்களை; ஒருமை பன்மை மயக்கம். அறுப்பார்தமை-போக்கியருளுபவராகிய வீரட்டானேசுவரரை. தம்:அசை நிலை. தமை: இடைக்குறை. ப்:சந்தி. பணிந்து-வணங்கிக் கொண்டு. பணி-திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்வீர்-நீர் புரிவீராக. என-என்று; இடைக்குறை. ப்:சந்தி. பணித்தார்-அந்தத் திலகவதியார் தம்முடைய தம்பியாராகிய மருணீக்கியாருக்குக் கட்டளையிட்டார்.

அடுத்து உள்ள 66-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'என அந்தத் திலகவதியார் மருணீக்கியாராகிய தமக்குக் கட்டளையிட்ட சமயத்தில் அந்த மாதரசியார் வழங்கிய திருவருளை அவருடைய எதிரில் ஏற்றுக் கொண்டு தம்முடைய தமக்கையாராகிய அந்த மாதரசியாரை வணங்க, அங்கே நின்று கொண்டிருந்த தவமாகிய செல்வத்தைப் பெற்ற அந்தத் திலகவதியாரும் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று மலங்களும் இல்லாதவனாகிய வீரட்டானேசுவரன் வழங்கிய பெரிய திருவருளை எண்ணித் தம்முடைய திருமடத்திலிருந்து போய்த் திருவீரட்டானத்தை அடைவதற்கு அழகிய கயிலை மலையைத் தம்முடைய நித்திய வாசத் தலமாகப் பெற்ற கைலாச பதியாருக்குரிய விபூதியை ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை உச்சரித்துத் தம்முடைய தம்பி

யாராகிய அந்த மருணீக்கியாருக்கு வழங்கியருளினார்." பாடல் வருமாறு:

"என்றபொழு தவரருளை
எதிரேற்றுக் கொண்டிறைஞ்ச
நின்றதபோ தனியாரும்
நின்மலன்பேர் அருள்நினைந்து
சென்றுதிரு வீரட்டம்
புகுவதற்குத் திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை
அஞ்செழுத்தோ திக்கொடுத்தார்."

என்ற-என அந்தத் திலகவதியார் மருணீக்கியாராகிய தமக்குக் கட்டளையிட்ட. பொழுது-சமயத்தில். அவர்-அந்த மாதரசியார். அருளை-வழங்கிய திருவருளை. எதிர்-அவருக்கு எதிரில். ஏற்றுக் கொண்டு-அந்த மருணீக்கியார் ஏற்றுக் கொண்டு. இறைஞ்ச-அந்த மாதரசியாரை வணங்க. நின்ற-அங்கே நின்று கொண்டிருந்த. தபோதனியாரும்-தவத்தையே செல்வமாகப் பெற்றவராகிய அந்தத் திலகவதியாரும். நின்மலன்-ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இல்லாதவனாகிய வீரட்டானேசுவரன். பேர்-வழங்கிய பெரிய. அருள்-திருவருளை. நினைந்து-எண்ணி. சென்று-தம்முடைய திருமடத்திலிருந்து போய். திருவீரட்டம்-திருவதிகை வீரட்டானத்தை. புகுவதற்கு-அடைவதற்காக. த்:சந்தி. திரு-அழகிய. க்:சந்தி. கயிலைக் குன்றுடையார்-கயிலாய மலையைத் தம்முடைய நித்திய வாசத் தலமாகப் பெற்றவராகிய கைலாசபதியாருக்கு உரிய. திருநீற்றை-விபூதியை. அஞ்சு எழுத்து-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். ஓதி-உச்சரித்து. க்:சந்தி. கொடுத்தார்-தம்முடைய தம்பியாராகிய அந்த மருணீக்கியாருக்கு வழங்கியருளினார்.

பிறகு வரும் 67-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'திருவருளாகிய செல்வத்தைப் பெற்றவனாகிய கைலாச பதிக்கு உரிய விபூதியைத் தமக்குத் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார் வழங்கியருள, "அடியேனுக்குப் பெரிய நல்ல வாழ்வு வந்து விட்டது" என்று எண்ணிப் பெருமையையும் தகுதியையும் பெற்றவராகிய அந்த மருணீக்கியார் தம்முடைய தமக்கையாரை வணங்கி அவர் வழங்கியருளிய விபூதியைத் தம்முடைய திருக்கரங்களில் வாங்கிக் கொண்டு அந்த இடத்தில் தம்முடைய திருமேனியில் நிரம்பப் பூசிக் கொண்டு தமக்கு ஒரு துன்பம் வந்த சமயத்தில் உஜ்ஜீவனத்தை அடையும் சைவ சமய வழியை ஏற்றுக் கொண்டு வழங்குபவராகித் தமக்கு முன்னால் திருவவதாரம் செய்தருளியவராகிய திலகவதியாருக்குப் பின்னால் அந்த மருணீக்கியார் எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

"திருவாளன் திருநீறு
திலகவதி யார்அளிப்பப்
'பெருவாழ்வு வந்த'தெனப்
பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவார அணிந்துதமக்
குற்றவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தம்முன்பு
வந்தார்பின் தாம்வந்தார்."

திருவாளன்-திருவருளாகிய செல்வத்தைப் பெற்றவனாகிய கைலாசபதிக்கு உரிய. திருநீறு-விபூதியை. திலகவதியார்-தம்முடைய தமக்கையாராகிய அந்தத் திலகவதியார். அளிப்ப-வழங்கியருள. ப்:சந்தி. பெரு-அடியேனுக்குப் பெரிய. வாழ்வு-நல்ல வாழ்வு. வந்தது-வந்து விட்டது. என-என்று எண்ணி; இடைக்குறை. ப்:சந்தி. பெரும்-பெருமையையும். தகையார்-தகுதியையும் பெற்றவராகிய அந்த மருணீக்கியார். பணிந்து-தம்முடைய தமக்கையாரை வணங்கி. ஏற்று-அவர் வழங்கியருளிய விபூதியைத்

தம்முடைய திருக்கரங்களில் வாங்கிக் கொண்டு-அங்கு-அந்த இடத்தில். உரு-தம்முடைய திரு மேனியில். ஆர-நிரம்ப. அணிந்து-பூசிக்கொண்டு. தமக்கு உற்ற-தமக்கு. ஒரு துன்பம் வந்த. இடத்து-சமயத்தில். உய்யும்-உஜ்ஜீவனத்தை அடையும். நெறி-சைவ சமய வழியை. தருவாராய்-வழங்குபவராகி. த்:சந்தி. தம்-தமக்கு. முன்பு-முன்னால். வந்தார்-திருவவதாரம் செய்தருளியவராகிய திலகவதியாருக்கு. பின்-பின்னால். 'தாம்' என்றது அந்த மருணீக்கியாரை. வந்தார்-எழுந்தருளினார்.

திருமேனி முழுவதும் விபூதியைப் பூசிக் கொள்ளுதல்: "மேனி நீறுபூசி.", "நீறடைந்த மேனியின்கண்.", "நீறார் திருமேனியர்.", "நீறுபட்ட மேனியார்.", "தூய வெண்ணீறு மேனிமேல் பாயவன்.", "நீறு சேர்வதொர் மேனியர்.", "விரவுநீறு மெய்பூசுவர் மேனிமேல்." "வெந்தநீறு மெய்யிற் பூசுவர்.", "செய்ய திருமேனி மிசை வெண்பொடி அணிந்து.", "பொடி மெய்பூசி.", "வெந்த நீறு மெய் பூசிய வேதியன்.", "பொடியணி மேனி.", "நீறார் திருமேனியன்.", "பொடி கொள்மா மேனியர்.", "செய்ய மேனி வெளிய பொடிப் பூசுவர்.", "மேனி நீறது ஆடலோன்.", "நீறணி மேனியனாய்.", "பொடிபடும் உருவினர்.", "பொடிகொள்மேனி வெண்ணூலினர்.", "நீறு திருமேனியின் மிசைத் தொளிபெறத் தட்வி.", "பொடி கொள் மேனியர்.", "நீற்று மேனியர் ஆயினர்.", "மேனிமேல் நீறனார்", "நீறு சேர்திருமேனியர்.", "பொடியார்மெய் பூசினும்.", "நீறுமெய்பூசி.", "ஏறு பொன்னேறி நீறு மெய்பூசி.", "நீறு திருமேனி மிசைஆடி." "பொடிகொள் மேனியிற் பூண்ட பாம்பினர்.", "பொடி கொள் உருவர்.", "பவளமேனி ஒளி நீறணிந்து." என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "நீறு மெய்பூச வல்

லானும்.'', ''மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனி யான்.'', ''நீறேறு திருமேனி நின்மலனை.'', ''நீறேற்ற மேனியனாய்.'', ''நீறு மெய் பூசி நின்று.'', ''நீறு மெய் பூசினானே.'', ''நீறு மெய் பூசினானே நிழல் திகழ் மழுவி னானே.'', ''பொடியணி மெய்யர் போலும்.'', ''நீறுடை உருவர் போலும்.'', ''பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ றணிந்து.'', ''மேனித் தவளப் பொடியன்.'', ''நீறலைத்த செம்மேனியன்.'', ''சுட்ட நீறு மெய்பூசி.'', ''செய்ய மேனி வெண்ணீறணிவான்.'', ''நீற்றினார் திருமேனி யன்.'', ''பொடிகொள் செம்பவளம் புரைமேனியும்.'', ''தூவெண்ணீறு துதைந்த செம்மேனியான்.'', ''மேனியிற் கோலமதாகிய நீற்றன்.'', ''நீறலைத்ததோர் மேனி.'', ''பொடிநாறு மேனியர்.'', ''மேனி நீறு மலிந்து.'', ''பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்.'', ''மெய்ப் பால் வெண்ணீறணிந்த மேனியானை.'', ''பொடியேறு திருமேனி உடையாய்.'', ''சுடர்ப் பவளத் திருமேனி வெண் ணீற்றானை.'', ''துண்டு சுடர்மேனித் தூநீறாடி.'', ''நீறு சேர் திருமேனி நிமலர்.'', ''நீறேறி திருமேனி உடையான் கண்டாய்.'', ''நீறேறி நிழல் திகழும் மேனியான்.'', ''நீறணிந்த திருமேனி நிமலர் போலும்.'', ''நெருப்பனைய திருமேனி வெண்ணீற்றானை.'', ''நீறேறு மேனி உடை யாய் போற்றி.'', ''நெருப்பனைய மேனிமேல் வெண்ணீற் றாரும்.'', ''வெண்ணீற்றை மெய்யிற் பூசி.'', ''செம்மேனி கலந்த வெள்ளை நீற்றவன்.'', ''நீறலைத்த திருவுருவும்.'', ''நெருப்புருவு திருமேனி வெண்ணீற்றானை.'', ''நீறேற்ற மேனியாகி.'', ''நீறுடைய திருமேனி பாகம் உண்டோ.'', ''நீறேறு திருமேனி நிகழக் கண்டேன்.'', ''பொன்னொத்த மேனி மேற் பொடியும் கண்டேன்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''முத்து நீற்றுப் பவள மேனிச் செஞ்சடை யான்.'', ''நீறார் மேனியனே.'', ''பொடியார் மேனி யனே.'', ''நீற்றாரும் மேனியராய்.'', ''பொடியேறு திரு

மேனிப் பெருமானை.'', ''நீறுறும் திருமேனி.'', ''பொடியாடு மேனியன்.'', ''வெந்த நீறு மெய் பூசவல்லானை.'', ''மெய்யை முற்றப் பொடிப் பூசியோர் நம்பி.'', ''செம்பொன் மேனி வெண்ணீறணிவானை.'', ''நீறணி மேனியன்.'', ''நீறேறும் திருமேனிக் குற்றமில் குணத்தானை.'', ''முழுநீறணி மேனியன்.'', ''வெண்பொடி மேனியினான்.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''நீறுபட்டே ஒளிகாட்டும் பொன்மேனி நெடுந்தகையே.'', ''வெண்ணீற்றர் செம்மேனியர்.'', ''பொடிப் பூசிற்றோர் வேடம்.'' என்று மாணிக்க வாசகரும், ''நீறணி பவளக் குன்றமே.'', ''திருநீறிடா உருத் தீண்டேன்.'' என்று திருமாளிகைத் தேவரும், ''தெள்ளும் நீறவன் நீறென்னுடல் விரும்பும்.'' என்று கருவூர்த் தேவரும், ''ஒளி பவளத் திருமேனி வெண்ணீற்றன்.'', ''நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியை.'' என்று திருமூலரும், ''நீறுபெறும் திருமேனி.'' என்று கபில தேவ நாயனாரும், ''நீறடுத்த செந்தாழ் வரையின் திரள் போல் திருமேனி எந்தாய்.'' என்று இளம் பெருமான் அடிகளும், ''வெள்ளை நீறு மெய்யிற்கண்டு.'' என்று பட்டினத்துப் பிள்ளையாரும் ''பொடியேர் தரு மேனியன் ஆகி.'', ''இலகு வெண்ணீறு தம் மேனிக் கணியும் இறைவர்களே.'' என் நம்பியாண்டார் நம்பியும், ''நீறணிமேனியர் அநேகர்.'', ''மாசிலாத மணி திகழ் மேனிமேற் பூசும் நீறு.'', ''நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக்கு.'', ''நீறு சேர்திருமேனியர்.'', ''மெய்யெலாம் நீறு பூசி.'', ''திருமேனி தனிற் பொலிந்து படிந்து திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்.'', ''திருமேனி வெண்ணீறு திகழ்ந்தொளிரும் கோலத்து.'' ''நீற்றால் நிறைவாகிய மேனியுடன்.'', ''பொடியார்க்கும் திருமேனிப் புனிதர்க்கு.'', ''தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும்.'', ''பூதிமெய்க் கணிந்து

வேந்தன்.'', ''நீற்றின் மேனியின்.'', ''நீற்றுக் கோல வேதியரும்.'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 68-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'விபூதியை அணிந்திருந்த மருணீக்கியாருடைய திருவுள்ளத்தில் இருந்த இருட்டாகிய அறியாமையையும், கரிய நிறம் நிறைந்த இரவு வேளையில் வெளியில் வீசும் இருட்டும் மாறுமாறு வரும திருப்பள்ளி எழுச்சியில் பெரிய தவத்தைப் புரிந்த சிறிய திருவடிகளை உடைய திலகவதியார் அழகிய துடைப்பத்தையும், அழகிய மெழுகுவதற்குரிய சாணத்தையும், ஒரு தோண்டியையும் எடுத்துக் கொண்டு கங்கையாற்றைத் தம்முடைய தலையில் அணிந்தவராகிய வீரட்டானேசுவரர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்குள் புகுந்து அந்தத் தொண்டர்கள் அந்த மருணீக்கியாரைக் கூட்டிக் கொண்டு நுழைந்தார்கள்.' பாடல் வருமாறு:

''நீறணிந்தார் அகத்திருளும்
நிறைகங்குற் புறத்திருளும்
மாறவரும் திருப்பள்ளி
எழுச்சியினில் மாதவம்செய்
சீறடியார் திருவலகும்
திருமெழுக்கும் தோண்டியும்கொண்
டாறணிந்தார் கோயிலினுள்
அடைந்தவரைக் கொடுபுக்கார்.''

நீறு-விபூதியை. அணிந்தார்-அணிந்திருந்த மருணீக்கியாருடைய. அகத்து-திருவுள்ளத்தில் இருந்த. இருளும்-இருட்டாகிய அறியாமையையும். நிறை-கரிய நிறம் நிறைந்த. கங்குல்-இரவு வேளையில். புறத்து-வெளியில் உள்ள. இருளும்-இருட்டும். மாற-மாறுமாறு. வரும்-எழுந்து வரும். திருப்பள்ளி எழுச்சியினில் - வீரட்டானேசுவரர் திருப்பள்ளியிலிருந்து விழித்து எழும் சமயத்தில். மா-பெரிய. தவம்-தவத்தை. செய்-புரிந்த. சீறடியார்-சிறிய திருவடிகளைப்

பெற்றவளும் மருணீக்கியாருடைய தமக்கையாரும் ஆகிய திலகவதியார். அடி:ஒருமை பன்மை மயக்கம். திரு-அழகிய அலகும்-துடைப்பத்தையும். திரு-அழகிய. மெழுக்கும்-ஆலயத்தின் தரையை மெழுகுவதற்கு உரிய சாணத்தையும். தோண்டியும்-அபிடேக நீரை நிரப்பிய ஒரு தோண்டியையும். கொண்டு-தம்முடைய கைகளில் எடுத்துக் கொண்டு. ஆறு-கங்கையாற்றை. அணிந்தார்-தம்முடைய தலைமேல் தங்க வைத்தவராகிய வீரட்டானேசுவரர். கோயிலினுள்-எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்குள். அடைந்து-தாம் புகுந்து. அவரை-அந்த மருணீக்கியாரை. க்:சந்தி. கொடு-தம்மோடு கூட்டிக் கொண்டு. புக்கார்-வீரட்டானேசுவரருடைய ஆலயத்துக்குள் நுழைந்தார்.

பிறகு வரும் 69-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அலைகளை வீசும் கெடில நதிக்கரையின் மேல் விளங்கும் திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருந்த சிவந்த பொன்மலையாகிய மேருமலை என்னும் வில்லை ஏந்தியவராகிய வீரட்டானேசுவரருடைய பெருமையைப் பெற்ற ஆலயத்தில் அந்த ஈசுவரரை வணங்கி விட்டு அந்தத் திருக்கோயிலை வலமாக வந்து மீண்டும் அந்த ஈசுவரரைப் பணிந்து தரையின் மேல் விழுந்து வணங்கித் தம்முடைய தலைவனாகிய வீரட்டானேசுவரன் வழங்கிய திருவருளால் அந்த மருணீக்கியார் இனிய சுவையைப் பெற்ற வார்த்தைகளைக் கொண்ட செந்தமிழ் மாலைகளாகிய திருப்பதிகங்களை அந்த வீரட்டானேசுவரருக்கு அணியும் உணர்ச்சி உண்டாக அந்த ஈசுவரருடைய பெருமைகளை அறிந்து பாடுவாரானார்.' பாடல் வருமாறு:

"திரைக் கெடில வீரட்டா
னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங் கோயில்
தொழுது வலம் கொண்டிறைஞ்சித்

தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து
தம்பிரான் திருவருளால்
உரைத்தமிழ்மா லைகள்சாத்தும்
உணர்வுபெற உணர்ந்து ரைப்பார்.''

திரை-அலைகளை வீசும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கெடில-கெடில நதியின் கரையின் மேல் விளங்கும்; ஆகு பெயர். வீரட்டானத்து-திருவதிகை வீரட்டானத்தில், இருந்த-எழுந்தருளியிருந்த. செம்-சிவப்பாக விளங்கும். கனைவரை-பொன்மலையாகிய மேருமலைஎன்னும். ச்:சந்தி. சிலையார்-வில்லைஏந்தியவராகிய வீரட்டானேசுவரருடைய. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். கோயில்-ஆலயத்தில். தொழுது-மருணீக்கியார் அந்த ஈசுவரரை வணங்கி. வலம் கொண்டு-அந்தத் திருக் கோயிலை வலமாக வந்து. இறைஞ்சி-மீண்டும் அந்த ஈசுவரரைப் பணிந்து. த்:சந்தி. தரைத் தலத்தின் மிசை-தரையாகிய இடத்தின் மேல். வீழ்ந்து-வணங்கி. தம்-தம்முடைய. பிரான்-தலைவனாகிய அந்த வீரட்டானேசுவரன். திருவருளால்-வழங்கிய திருவருளினால். உரை-இனிய சுவையைப் பெற்ற வார்த்தைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தமிழ் மாலைகள்-செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய திருப்பதிகங்களை. சாத்தும்-அந்தவீரட்டானேசுவரருக்கு அணியும். உணர்வு-உணர்ச்சியை. பெற-பெற்று உண்டாக. உணர்ந்து-அந்த ஈசுவரருடைய பெருமைகளை அறிந்து. உரைப்பார்-பாடியருள்வாரானார்.

அடுத்து வரும் 70-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'விபூதியை நிறையப் பூசிக் கொண்ட திருமேனியோடு நிறைந்த பக்தியைப் பெற்ற தம்முடைய திருவுள்ளத்தில் பக்தி மிகுதியாக உண்டாக அந்த மருணீக்கியார் பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்கு உரிய திரிபுரங்களாகிய மூன்று பறக்கும்

கோட்டைகளை எரித்து அழித்தருளிய அந்தணராகிய வீரட்டானேசுவரரை மயங்கும் சூலை நோயாகிய மாயமான பிணியைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு, ''கூற்றாயின வாறு விலக்ககிலீர்'' என்று தொடங்கும் நீளமாகிய குற்றம் இல்லாத ஒரு திருப்பதிகத்தை அந்த ஈசுவரரைப் பாடி வாழ்த்தியதால் ஏழு உலகங்களில் வாழும் மக்களுக்கு உண்டாகி வரும் துயரங்களும் அகலும் வண்ணம் அந்த ஈசுவரருடைய சந்நிதியில் நின்றுகொண்டு அந்த மருணீக்கியார் பாடியருளினார்.' பாடல் வருமாறு:

'' நீற்றால்நிறை வாகிய மேனியுடன்
நிறைஅன்புறு சிந்தையில் நேசம்மிக
மாற்றார்புரம் மாற்றிய வேதியரை
மருளும்பிணி மாயை அறுத்திடுவான்.
'கூற்றாயின வாறு விலக்ககிலீர்'
எனநீடிய கோதில் திருப்பதிகம்
போற்றாலுல கேழில் வருந்துயரும்
போமாறெதிர் நின்று புகன்றனரால்.''

நீற்றால்-விபூதியை; உருபு மயக்கம். நிறைவாகிய-நிறையப் பூசிக் கொண்ட. மேனியுடன்-திருமேனியோடு. நிறை-நிரம்பியுள்ள. அன்பு-பக்தி. உறு-உண்டாகிய. சிந்தையில்-தம்முடைய திருவுள்ளத்தில். நேசம்-பக்தி. மிக-மிகுதியாக உண்டாக. மாற்றார்-பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்குரிய; ஒருமை பன்மை மயக்கம். புரம்-திரிபுரங்களாகிய மூன்று பறக்கும் கோட்டைகளை; ஒருமை பன்மை மயக்கம். மாற்றிய-எரித்து அழித்தருளிய. வேதியரை-அந்தணராகிய வீரட்டானேசுவரரை. சிவபெருமானாரை அந்தணர் என்று குறிப்பிடும் இடங்களை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. மருளும்-மயங்கும். பிணி-சூலை நோயாகிய. மாயை-மாயமான பிணியை. அறுத்திடுவான் -

போக்கிக் கொள்ளும் பொருட்டு. கூற்றாயினவாறு விலக்ககிலீர் என-கூற்றாயினவாறு விலக்ககிலீர் என்று தொடங்கும். என:இடைக்குறை. நீடிய-நீளமாகிய. கோது-ஒரு குற்றமும்; என்றது சொற்குற்றம், பொருட்குற்றம் என்பவற்றை. இல்-இல்லாத. திருப்பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. போற்றால் பாடி வாழ்த்தியதால். உலகு-உலகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏழில்-ஏழிலும் வாழும் மக்களுக்கு; இட ஆகு பெயர். வரும்-உண்டாகி வரும். துயரும்-துயரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். போமாறு-அகலும் வண்ணம். எதிர்-அந்த வீரட்டானேசுவரருடைய சந்நிதியில். நின்று-நின்றுகொண்டு. புகன்றனர்-அந்த மருணீக்கியார் பாடியருளினார். ஆல்:ஈற்றசை நிலை. அவ்வாறு மருணீக்கியார் பாடியருளிய திருப்பதிகத்தில் வரும் முதற் பாசுரம் வருமாறு: இது கொல்லிப் பண் அமைந்தது.

"கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே."

அந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதிப் பாசுரம் வருமாறு:

"போர்த்தா யங்கொர் ஆனையின்ஈருரிதோல்
புறங்காடரங் கா நட மாடவல்லாய்
ஆர்த்தாரைக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்என்
வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்தி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே."

அந்த மருணீக்கியார் வயிற்று வலியோடு இருந்தாலும் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியாரிடம் சென்றால் அந்த சூலை நோய் தீர வழி உண்டாகும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தமையால் அவர் திருவதிகை வீரட்டானத்திற்குத் திருப்பாதிரிப் புலியூரிலிருந்து நடந்து வரும் ஆற்றலைப் பெற்றார். அந்தத் திலகவதியார் திருவாளன் திருநீற்றை வழங்கவே அதனை அணிந்து கொண்ட போது அவருடைய வயிற்றுவலி அகன்றுவிட்டது. ஆனாலும் வீரட்டானேசுவரருடைய சந்நிதியில் பாடும்போது வேதனை தாங்கவில்லையே என்று முறையிட்டுக் கொண்டார். கீழே விழுந்த ஒரு குழந்தை அப்போது அழா விட்டாலும் தன்னுடைய தாயைக் கண்டவுடன் அழுது புலம்பும். அவ்வாறு மருணீக்கியார் வீரட்டானேசுவரரைத் தரிசித்த போது இவ்வாறு முறையிட்டுக் கொண்டார்.

பிறகு வரும் 71-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மருணீக்கியார் பாடியருளியதும் நிலை பெற்று விளங்குவதும் ஆகிய அந்தத் திருப்பதிகத்தைப் பாடியருளிய பிறகு அவருடைய வயிற்றில் இருந்து துன்பத்தை உண்டாக்கிய சூலை நோயாகிய கொடிய வியாதி அவ்வாறு வீரட்டானேசுவரருடைய சந்நிதியில் நின்று கொண்டிருந்த நிலையில் போனவுடன், ''அடியேனுடைய உயிரோடு வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளை இந்தச்சூலை நோய் வழங்கியது.'' என்று செம்மையோடு நிலைத்து நின்ற பரம்பொருளாக விளங்குபவராகிய வீரட்டானேசுவரருடைய செல்வத்தைப் போன்ற நிரம்பிய திருவருளைப் பெற்றுக் கொண்ட சிறப்பை உடையவராகிய அந்த மருணீக்கியார் முன்னால் தம்மிடம் நிலைபெற்றிருந்த தெளிவினாலும் மயக்கத்தினாலும் எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய அந்த வீரட்டானேசுவரனுடைய கருணையாகிய சமுத்திரத்தில் அவர் முழுகினார்.' பாடல் வருமாறு:

''மன்னும் பதிகம்மது பாடியபின்
வயிறுற்றடு சூலை மறப்பிணிதான்
அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும்;
'அடியேன்உயி ரோடருள் தந்த'தெனாச்
செந்நின்ற பரம்பொரு ளானவர்தம்
திருவா ரருள்பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினால்
முதல்வன்கரு ணைக்கடல் முழுகினரே.''

மன்னும்-அந்த மருணீக்கியார் பாடியருளியதும் நிலை பெற்று விளங்குவதும் ஆகிய. பதிகம் அது-அந்தத் திருப்பதிகத்தை. 'பதிகமது' என்றது, 'பதிகம்மது' என நின்றது. செய்யுளின் ஓசையை நோக்கி. பாடிய பின்-பாடியருளிய பிறகு. வயிறு-அவருடைய வயிற்றில். உற்று-இருந்து. அடு-துன்பத்தை உண்டாக்கிய; வருத்தத்தைத்தந்த.சூலை-சூலை நோயாகிய. மற-கொடிய. ப்:சந்தி. பிணி-வியாதி. தான்: அசை நிலை. அந்நின்ற-அவ்வாறு வீரட்டானேசுவரருடைய சந்நிதியில் நின்று கொண்டிருந்த. நிலைக்கண்-நிலையில். அகன்றிடலும்-அவரை விட்டுப் போனவுடன். அடியேன்-அடியேனுக்கு உயிரோடு-அடியேனுடைய உயிருடன். அருள்-வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளை. தந்தது-இந்தச் சூலை நோய் வழங்கியது. எனா-என்று;இடைக்குறை. ச்:சந்தி.செந்நின்ற-செம்மையோடு நிலைத்து நின்ற. பரம்பொருள் ஆனவர்தம்-பரம் பொருளாக விளங்குபவராகிய வீரட்டானேசுவரருடைய. தம்:அசை நிலை. திரு-செல்வத்தைப் போன்ற. ஆர்-நிரம்பிய. அருள்-திருவருளை. பெற்ற-பெறும் பாக்கியத்தை உடைய. சிறப்பு உடையோர்-சிறப்பை உடையவராகிய அந்த மருணீக்கியார். முன்-இதற்கு முன்பு. நின்ற-தம்மிடம் நிலை பெற்று நின்று கொண்டிருந்த. தெருட்சி-தெளிவினாலும். மருட்சியினால்-வியப்பினாலும்; என்றது ஆனந்த பரவசத்தால் என்றபடி. தெளிவு வயிற்று வலி போனதால் உண்

டாகியது. மருட்சி, அது போனதை எண்ணி வியப்பைப் பெற்றது. முதல்வன்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய அந்த வீரட்டானேசுவரனுடைய. கருணை-கருணையாகிய. க்:சந்தி. கடல்-சமுத்திரத்தில். முழுகினர்-அந்த மருணீக்கியார் முழுகினார். ஏ:ஈற்றசை நிலை.

அடுத்து உள்ள 72-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த மருணீக்கியார் தம்முடைய உறுப்புக்கள் முழுவதும் மயிர்கள் எல்லாம் முழுவதும் புளகாங்கிதங்கள் அரும்பி மலர பொங்கி எழும் நீரைத் தம்முடைய விழிகள் சொரிந்து தரையில் இறங்க அவர் தரையின் மேல் விழுந்து புரண்டு சோர்வை அடைபவராகி, "இந்தத் திருவதிகை வீரட்டானத்தில் அடியேன் செய்யப் புகுந்த தவறாகிய அதனால் ஏற முடியாத பெரியதாக இருக்கும் மேட்டின் மேல் அடியேன் ஏறும் வண்ணம் தேவரீருடைய என்றும் தங்கி விளங்கும் கருணையாகிய பெரிய ஆற்றின் வெள்ளத்தில் அடியேனை ஆழ்த்துவதற்கு அடியேன் தகுதியை உடையவனோ?" என்று இத்தகைய வார்த்தைகளை அந்த மருணீக்கியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.' பாடல் வருமாறு:

"அங்கங்கள் அடங்கஉ ரோமமெலாம்
அடையப் புளகங்கள் முகிழ்த்தலரப்
பொங்கும்புனல் கண்கள் பொழிந்திழியப்
புவிமீது விழுந்து புரண்டயர்வார்
'இங்கென்செய லுற்ற பிழைப்பதனால்
ஏறாத பெருந்திடர் ஏறிடநின்
தங்கும்கரு ணைப்பெரு வெள்ளமிடத்
தகுமோ?' என இன்னன தாம்மொழிவார்."

அங்கங்கள்-அந்த மருணீக்கியார் தம்முடைய உறுப்புக்கள். அடங்க-முழுவதும். உரோமம்-மயிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்-எல்லாம்; இடைக் குறை. அடைய-முழுவதும். ப்:சந்தி. புளகங்கள்-புளகாங்கிதங்கள் ஆகிய

மயிர்க் கூச்சுக்கள். முகிழ்த்து-அரும்பி. அலர-மலர. ப்:சந்தி. பொங்கும்-பொங்கி எழும். புனல்-நீரை. கண்கள்-தம்முடைய விழிகள். பொழிந்து-சொரிந்து. இழிய-தரையில் இறங்கி ஓட. ப்:சந்தி. புவி மீது - தரையின் மேல். விழுந்து-விழுந்தும். புரண்டு-புரண்டு கொண்டும். அயர்வார்-சோர்வை அடைபவராகி; முற்றெச்சம். இங்கு-இந்தத் திருவதிகை வீரட்டானத்தில். என் - அடியேனுடைய. செயல் உற்ற-செய்யப் புகுந்த. பிழைப்பதனால்-தவறாகிய அதனால், என்றது 'சமண சமயத்தைச் சார்ந்திருந்ததை'. ஏறாத-ஏற முடியாத. பெரும்-பெரியதாக இருக்கும். திடர்-மேட்டின் மேல் ஏறிட-ஏறும் வண்ணம். நின்-தேவரீருடைய. தங்கும்-என்றும் தங்கி விளங்கும். கருணை-கருணையாகிய. ப்:சந்தி. பெரு-பெரிய வெள்ளம். வெள்ளம்-ஆற்றின் வெள்ளத்தில். இட-அடியேனை ஆழ்த்துவதற்கு. த்:சந்தி. தகுமோ-அடியேன் தகுதியை உடையவனோ; திணை மயக்கம். என-என்று; இடைக்குறை. இன்னன-இந்த விதமான வார்த்தைகளை. 'தாம்' என்றது மருணீக்கியாரை. மொழிவார்-அந்த மருணீக்கியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.

'ஏறாத பெருந்திடர்' என்றது விலக முடியாமல் தம்மை அகப்படுத்திய சமண சமயத்தை. 'ஏறிட' என்றது அந்தச் சமண சமயமென்னும் படுகுழியிலிருந்து கரையேறச் செய்ததை.

பிறகு வரும் 73-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மருணீக்கியார், "பொய்களைக் கூறுவதையே தங்களுடைய வாய்மொழிகளாக அமைந்த பான்மையைப் பெருகச் செய்த பொலிவற்ற சமண சமயமாகிய அறிவு இல்லாத சமயத்தைச் சார்ந்தவர்களாகிய இழிந்தவர்களுடைய சைவ சமயம் அல்லாத வேறு சமயத் துறையாகும் அந்த ஆழமாகிய படுகுழியில் விழுந்து அதிலிருந்து எழுந்து கரையேறி வரும் வழியைத் தெரிந்து கொள்ளாமல் மயக்கத்தை அடைந்து வீணாகிய செயல்களைச் செய்பவனாகிய

அடியேன் மையைப் போலக் கருமையானதும், வாசனை கமழும் கூந்தலைப் பெற்ற பெருமையைக் கொண்ட இமாசல அரசனுடைய புதல்வியாகிய பார்வதி தேவியினுடைய கண வனாகிய கைலாசபதியினுடைய செந்தாமரை மலர்களைப் போன்றவையும், வெற்றிக் கழலைப் பூண்டவையும் ஆகிய திருவடிகளினிடத்தில் அடியேன் வந்து சேரும் இந்த நல்ல வாழ்வை அடியேன் பெறும் பாக்கியத்தை வழங்கிய இந்தச் சூலை நோய்க்கு அடியேன் கைம்மாறாகப் புரியும் செயல் என்ன இருக்கிறது?" என்று எண்ணி அந்த வீரட்டானேசு வரரை அந்த மருணீக்கியார் வணங்குபவரானார்.' பாடல் வருமாறு:

" பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப்
பொறியில்சமண் நீசர் புறத்துறையாம்
அவ்வாழ்குழி விழுந் தெழுமா
றறியாது மயங்கி அவம்புரிவேன்
மைவாச நறுங்குழல் மாமலையாள்
மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்
கெதிர்செய்குறை என்கொல்?' எனத்
தொழுவார்.''

பொய்-அந்த மருணீக்கியார் பொய்களைக் கூறு வதையே; ஒருமை பன்மை மயக்கம். வாய்மை-தங்களுடைய வாய் மொழிகளாக அமைந்த பான்மையை. வாய்:ஆகு பெயர். பெருக்கிய-பெருகச் செய்த. புன்-பொலிவற்ற. சமய-சமண சமயமாகிய. ப்:சந்தி. பொறி-அறிவு. இல்—இல்லாத; கடைக்குறை.சமண்-சமணசமயமாகிய சமயத்தைச் சார்ந்தவர்களாகிய; திணை மயக்கம். நீசர்-இழிந்தவர்களி னுடைய; ஒருமை பன்மை மயக்கம். புறத்துறை-சைவசமயம் அல்லாத வேறு சமயத்துறை. ஆம்-ஆகும். அவ்வாழ்-அந்த ஆழமாக உள்ள. குழி-படுகுழியில். விழுந்து-அடியேன் விழுந்து. எழுமாறு-அதிலிருந்து எழுந்து கரையேறி வரும்

வழியை. அறியாது-தெரிந்து கொள்ளாமல். மயங்கி-மயக்கத்தை அடைந்து. அவம்-வீணான செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். புரிவேன்-செய்பவனாகிய அடியேன்; என்றது மருணீக்கியார் தம்மைக் கூறிக் கொண்டது. மை-மையைப் போலக் கருமையானதும்; வினையாலணையும் பெயர். வாசநறும்-வாசனை கமழும்; நறுமணம் கமழும். குழல்-கூந்தலைப் பெற்ற. மா-பெருமையைக் கொண்ட. மலையாள்-இமாசல அரசனுடைய புதல்வியாகிய பார்வதி தேவியினுடைய. மலை: திணைமயக்கம். மணவாளன்-கணவனாகிய கைலாசபதியினுடைய. பார்வதி தேவியினுடைய கூந்தல் இயற்கையாகவே நறுமணம் கமழ்வது. இது நக்கீரர் வரலாற்றால் அறியலாகும். மலர்-செந்தாமரை மலர்களைப் போன்றவையும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டவையும் ஆகிய திருவடிகளினிடத்தில்; ஆகுபெயர். வந்து-அடியேன் வந்து. அடையும்-சேரும். இவ்வாழ்வு-இந்த நல்ல வாழ்வை. பெற-அடியேன் பெறும் பாக்கியத்தை. த்:சந்தி. தரு-வழங்கிய. சூலையினுக்கு-இந்தச் சூலை நோய்க்கு. எதிர்-அடியேன் கைம்மாறாக. செய்-புரியும். குறை-செயல். என்கொல்-என்ன இருக்கிறது. கொல்: அசைநிலை. என-என்று எண்ணி; இடைக்குறை. த்:சந்தி. தொழுவார்-அந்த வீரட்டானேசுவரரை அந்த மருணீக்கியார் வணங்குபவரானார்.

விபீடணன் இராவணனால் துரத்தப்பட்டு இராம பிரானிடம் அடைக்கலம் புகுந்தபோது அவன் கூறியதாக உள்ள பாடல் இங்கே ஒப்பு நோக்குவதற்கு உரியது.

"மின்மினி ஒளியின் மாயும்
பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுடம் நீக்கித்
திருவடி புனைந்த செல்வன்
தன்முனார் கமலத் தண்ணல்
தாதையார் சரணம் தாழ

என்முனார் எனக்குச் செய்த
உதவிஎன் றேம்ப லுற்றான்.''
(விபீடணன் அடைக்கலப் படலம், 138.)

பிறகு உள்ள 74-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'மருணீக்கியார் வீரட்டானேசுவரரை அடைந்த இந்தச் சமயத்தில் நெடுங்காலமாக உள்ள கீர்த்தியைப் பெற்ற திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருந்த தலைவனாகிய வீரட்டானேசுவரன் வழங்கிய திருவருளால், ''பாவுற்றவர்'' என்று தொடங்கும் செந்தமிழ் மொழியில் அமைந்த இனிய சுவையைப் பெற்ற சொற்களைக் கொண்ட வளப்பத்தை உடைய ஒரு திருப்பதிகமாகிய மாலையைப் பாடியருளிய தன்மையினால் அந்த மருணீக்கியாருக்கு, 'திருநாவுக்கரசு நாயனார்' என ஏழு உலகங்களில் வாழும் மக்களிடத்தில் உன்னுடைய நல்ல திருநாமம் யாவரும் விருப்பத்தை அடையும் வண்ணம் நிலைபெற்று விளங்குவதாகுக!' என எல்லா மக்களுக்கும் ஆச்சரியம் உண்டாகுமாறு மேகங்கள் தவழ்ந்து தங்கும் ஆகாயத்திலிருந்து ஓர் அசரீரி வாக்கு எழுந்து கேட்டது.' பாடல் வருமாறு:

'' மேவுற்றஇவ் வேலையில் நீடியசீர்
வீரட்டம் அமர்ந்த பிரான்அருளால்
'பாவுற்றவர்'செந்தமி ழின்சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கர சென்று கேழினும்நின்
நன்னாமம்நயப்புற மன்னுக' என்றி
யாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா
னிடையேஒரு வாய்மை எழுந்ததுவே.''

மேவுற்ற-மருணீக்கியார் வீரட்டானேசுவரரை அடைந்த. இவ்வேலையில்-இந்தச் சமயத்தில். நீடிய-நெடுங்காலமாக உள்ள. சீர்-கீர்த்தியைப் பெற்ற. வீரட்டம்-திருவதிகை வீரட்டானத்தில். அமர்ந்த-கோயில்கொண்டு எழுந்தருளியிருந்த. பிரான்-தலைவனாகிய வீரட்டானேசுவரன். அருளால்-வழங்கிய திருவருளால். பாவுற்றவர்-

"பாவுற்றவர்' என்று தொடங்கும். செந்தமிழின்-செந்தமிழ் மொழியில் அமைந்த. இனி-இனிய சுவையைப் பெற்ற சொல்-சொற்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். வள-வளப்பத்தை உடைய. ப்:சந்தி. பதிகத்தொடை-ஒரு திருப்பதிகமாகிய மாலையை. 'பாவுற்றவர்' என்று தொடங்கும் திருப்பதிகம் கிடைக்கவில்லை. மறைந்து போன பதிகங்களில் அதுவும் ஒன்று போலும் அல்லது 'பாவுற்றலர்-பல பாசுரங்களைப் பெற்று மருணீக்கியாருடைய திருவாயிலிருந்து மலர்ந்த' என்று பொருள் கொள்ளலாம் போலும்! பாடிய-பாடியருளிய. பான்மையினால்-தன்மையால். நாவுக்கரசு-திருநாவுக்கரசு நாயனார். என்று-என. உலகு-உலகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏழினும்-ஏழிலும் வாழும் மக்களிடத்தில்; இட ஆகு பெயர். நின்-உன்னுடைய. நல்-நல்ல. நாமம்-திருநாமம். நயப்புற-யாவரும் விருப்பத்தை அடையும் வண்ணம்-மன்னுக-நிலைபெற்று விளங்குவதாகுக. என்று-என். இ: குற்றியலிகரம். யாவர்க்கும்-எல்லா மக்களுக்கும். வியப்புற-ஆச்சரியம் உண்டாகுமாறு. மஞ்சு-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உறை-தவழ்ந்து தங்கும். வானிடை-ஆகாயத்திலிருந்து; உருபு மயக்கம். ஏ:அசை நிலை. ஒரு வாய்மை-ஓர் அசரீரி வாக்கு. எழுந்தது-எழுந்து கேட்டது. ஏ:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 75-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இந்தப் பான்மையோடு அசரீரி வாக்குக் கேட்டபோது திருநாவுக்கரசு நாயனாராகிய பக்தரும், "இந்த நீண்ட காலமாக அடியேனுடைய உள்ளத்தில் விளங்கிய தீய வினையாகிய பாவத்தைப் புரிந்த அடியேன் பெறுவதற்குரியதாகும் செல்வமோ இது?" எனத் தெளிவைப் பெற்றுத் தெரிந்து கொள்ளாத அந்தப் பான்மையை உடையவனாகிய இராவணனுக்கு தேவரீர் திருவருளை வழங்கும் கருணையின்

வகையான அதனுடைய உண்மையாகிய இயல்பைத் தெரிந்து கொண்டு தேவரீரைத் தோத்திரம் புரிவதையே தம் மேற் கொண்டு அந்த வீரட்டானேசுவரரை அந்தத் திரு நாவுக்கரசு நாயனார் தம்முடைய திருமேனி தரையிற் படியப் பணிந்தார்.' பாடல் வருமாறு:

"இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக்
கிறையாகிய அன்பரும், 'இந்நெடுநாள்
சித்தம்திகழ் தீவினை யேன்அடையும்
திருவோ இது?' என்று தெருண்டறியா
அத்தன்மைய னாய இராவணனுக்
கருளும்கரு ணைத்திறம் ஆனஅதன்
மெய்த்தன்மை அறிந்து துதிப்பதுவே
மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே."

இத் தன்மை-இந்தப் பான்மையோடு. நிகழ்ந்துழி-அசரீரி வாக்குக் கேட்ட சமயத்தில். நாவின்-தம்முடைய நாவிலிருந்து வரும். மொழிக்கு-வார்த்தைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். இறையாகிய-அரசராகிய. 'திருநாவுக்கரசு நாயனாராகிய' என்றபடி. அன்பரும்-பக்தரும். இந் நெடு-இந்த நீண்ட. நாள்-காலமாக. சித்தம்-அடியேனுடைய உள்ளத்தில். திகழ்-விளக்கத்தைப் பெற்றிருந்த. தீவினையேன்-தீய வினையாகிய பாவத்தைச் செய்த அடியேன். அடையும்-அடையப் பெறும். இது-இந்த நிலை. திருவோ-செல்வமோ? என்று-என. தெருண்டு-தெளிவை அடைந்து. அறியா-கைலாசபதியினுடைய பெருமையைத் தெரிந்து கொள்ளாத. அத்தன்மையன் ஆய-அந்தப் பான்மையைப் பெற்றவனாகிய. இராவணனுக்கு-இலங்கையின் அரசனாகிய இராவணன் என்னும் அரக்கனுக்கு. அருளும்-தேதரீர் திருவருளை வழங்கும். கருணைத் திறம்-கருணையினுடைய ஆற்றலை. அறிந்து-தெரிந்து கொண்டு. துதிப்பதுவே-வீரட்டானேசுவரரைத் தோத்திரம் புரிவதனையே. மேல்கொண்டு-தாம் மேற்கொண்டு. மெய்-தம்முடைய

திருமேனி. உற-தரையில் படிய. ஏ:ஈற்றசைநிலை. வணங்கினர்-வீரட்டானேசுவரரைத் திருநாவுக்கரசு நாயனார் பணிந்தார்.

திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய திருப்பதிகங்களிற் பெரும்பாலும் இறுதிப் பாசுரத்தில் இராவணனைப் பற்றிய செய்தியை வைத்துப் பாடியுள்ளார். உதாரணம் வருமாறு:

"நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க மலையை
உரங்க ளெல்லாங் கொண்
டெடுத்தான் ஒன்பதும் ஒன்றும்அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டம் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்

அஞ்சுவ தியாதொன்றுமில்லை; அஞ்ச வருவதும் இல்லை."

"பையஞ் சுடர்விடு நாசப்
பள்ளிகொள் வான்உள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக்
காலவிர லாலடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்
புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சின் அப்புறத் தானும்
ஆரூர் அமர்ந்தஅம் மானே."

பிறகு வரும் 76-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' "பக்தர்கள் புகழும் கருணையை வழங்கும் பெரியவனாகிய வீரட்டானேசுவரன் தன்னுடைய திருவருளை வழங்கத் தாங்களே மயிர்களைப் பிடுங்கிக் கொள்ளும் பொலிவற்ற தலைகளை உடைய சமணத் துறவிகளினுடைய சமணசமய வழி பாழாகுமாறு திருவதிகை வீரட்டானத்திற்கு எழுந்தருளித் திருநாவுக்கரசு நாயனார் இந்தத்

வதிகை வீரட்டானத்தில் வீரட்டானேசுவரர் வழங்கிய திரு வருளைப் பெற்றுக் கொண்டதனால் இந்தப் பூ மண்டலத் தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடைந்தார்கள்'' என்று சிவபெருமானுடைய அடியவர்கள் தம்முடைய பக்கத்தைச் சுற்றி வரும் திருவதிகை வீரட்டானம் என்னும் சிவத் தலத் தில் முரசமும், படகமும், உடுக்கும், மத்தளமும், யாழும், முழவமும், புல்லாங்குழலும், துந்துபி வாத்தியமும், அடிக் கும் மணியோடு வரிசையான சங்க வாத்தியங்களை ஊது பவர்கள் ஊதும் முழக்கமும், எல்லா இடங்களிலும் முழக் கத்தை எழுப்புவதால் ஆழமான பெரிய சமுத்திரம் என்று கூறுமாறு அந்தத் திருவதிகை வீரட்டானம் எல்லாவற்றின் முழக்கங்களும் நிரம்பியிருக்கிறது.' பாடல் வருமாறு :

'' பரசும்கரு ணைப்பெரி யோன்அருளப்
பறிபுன்றலை யோர்நெறி பாழ்படவந்
தரசிங்கருள் பெற்றுல குய்ந்தெனா
அடியார்புடை சூழ்பதி கைப்பதிதான்
முரசம்பட கம்துடி தண்ணுமையாழ்
முழவம்கிளை துந்துபி கண்டையுடன்
நிரைசங் கொலிஎங்கும் முழங்குதலால்
நெடுமாகடல் என்ன நிறைந்துளதே.''

பரசும்-பக்தர்கள் புகழும். கருணை-கருணையை வழங்கும். ப:சந்தி. பெரியோன்-பெருமையைப் பெற்றவ னாகிய வீரட்டானேசுவரன். அருள-தன்னுடைய திரு வருளை வழங்க. ப:சந்தி. பறி-தாங்களே மயிர்களைப் பிடுங்கிக் கொள்ளும்; இதை உலோச்சு என்பர். புன்- பொலிவற்ற. தலையோர்-தலைகளை உடைய சமணத் துறவிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தலை:ஒருமை பன்மை மயக்கம். நெறி-சமண சமய வழி. பாழ்பட- பாழாகுமாறு. வந்து-திருவதிகை வீரட்டானத்திற்கு எழுந் தருளி. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணைமயக்கம். இங்கு-இந்தத் திருவதிகை வீரட்டானத்தில். அருள்-வீரட் டானேசுவரர் வழங்கிய திருவருளை. பெற்று-பெற்றுக்

கொண்டதனால். உலகு-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். உய்ந்தெனா-உஜ்ஜீவனத்தை அடைந்தார்கள் என்று; திணை மயக்கம். எனா:இடைக் குறை. அடியார்-சிவபெருமானுடைய அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். புடைசூழ்-தம்முடைய பக்கத்தைச் சுற்றி வரும். அதிகைப்பதி-திருவதிகை வீரட்டானம் என்னும் சிவத்தலத்தில். தான்: அசைநிலை. முரசம்-முரசத்தை வைத்திருப்பவர்கள் முழங்கவும். படகம்-படகம் என்னும் வாத்தியத்தை வைத்திருப்பவர்கள் அதை வாசிக்கவும். துடி-உடுக்கையைத் தட்டுபவர்கள் அதைத்தட்டி ஒலி எழுப்பவும். தண்ணுமை-குளிர்ந்த ஒலியை எழுப்பும் வாத்தியத்தைஅதை வைத்திருப்பவர்கள் வாசிக்கவும். யாழ்-யாழை வாசிப்பவர்கள் அதை மீட்டி வாசிக்கவும். முழவம்-மத்தளத்தைக் கொட்டுபவர்கள் அதைக் கொட்டி முழக்கவும். கிளை-மூங்கிலால் ஆகிய புல்லாங்குழலை ஊதுபவர்கள் அதை ஊதி இனிய நாதத்தை எழுப்பவும். துந்துபி-தும்தும் என்னும் ஒலியை எழுப்பும் வாத்தியத்தை வாசிப்பவர்கள் அதை வாசிக்கவும். கண்டையுடன்-அடிக்கும் மணியை ஆட்டி ஒலிப்பவர்கள் அதை ஆட்டி முழக்கவும் ஆகிய இந்தச் சத்தங்களோடு. நிரை-வரிசையாக உள்ள. சங்கு-சங்க வாத்தியங்களை; ஒருமை பன்மை மயக்கம். ஒலி-அதை ஊதுபவர்கள் ஊதவும். எங்கும்-அந்தத் திருவதிகை வீரட்டானத்தில் எந்தப் பக்கத்திலும். முழங்குதலால்-முழக்கத்தை எழுப்புவதால். நெடு-ஆழமான. மா-பெரிய. கடல்-சமுத்திரம். "நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்." என வருவதைக் காண்க. என்ன-என்று கூறுமாறு. நிறைந்து உளது-எல்லா வாத்தியங்களின் முழக்கங்களும் நிரம்பியிருக்கிறது. உளது:இடைக்குறை. ஏ:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 77-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மயக்கத்தை உண்டாக்கும் சமண சமயமாகிய படுகுழியின் துறையின்மேல் ஏறி மகிழ்ச்சியை அடைந்து கீர்த்தியைப்

பெற்ற வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய திருவுள்ளத்தோடும் உண்மையோடும் தம்முடைய திரு மேனிக்கு ஏற்ற திருப்பணிகளைப் புரிபவராகி விரவியிருக்கும் சைவ சமயத்துக்கு உரிய அடையாளங்களாகிய விபூதியைப் பூசிக் கொள்ளுதல், உருத்திராக்க மாலையை அணிந்து கொள்ளுதல், சடாபாரத்தைத் தரித்துக் கொள்ளுதல் என் பவை விளக்கமாகப் பொருந்த தம்முடைய திருவுள்ளத்தில் அடைந்து அமைந்த வீரட்டானேசுவரரைத் தியானம் புரிதல் அறாத உணர்ச்சியும், முடிவு இல்லாமல் எழுந்து பொங்கி வரும் அழகிய வாசகங்களாகிய திருப்பதிகங்களும், தம் முடைய திருக்கரத்தில் விளங்கும் உழவாரப் படையோடும் தாம் கைக் கொண்டு வேறு தொண்டர்களோடு சேர்ந்து கொண்டு தம்முடைய திருவுள்ளத்தில் உருக்கத்தைப் பெற்று விளங்கினார்.' பாடல் வருமாறு:

'' மையற்றுறை ஏறி மகிழ்ந்தவர்சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவும்சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அறாஉணர்வும்
ஈறின்றி எழும்திரு வாசகமும்
கையில்திக ழும்உழ வாரமுடன்
கைக்கொண்டு கலந்து கசிந்தனரே.''

மையல்-மயக்கத்தை உண்டாக்கும். துறை-சமண சமய மாகிய படுகுழியின் துறையின் மேல். ஏறி மகிழ்ந்தவர்-ஏறி மகிழ்ச்சியை அடைந்தவராகிய. சீர்-சீர்த்தியைப் பெற்ற. வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். மனத் தொடு-தம்முடைய திருவுள்ளத்தோடும். வாய்மையுடன்- உண்மையோடும். மெய்-தம்முடைய திருமேனிக்கு. உற்ற- ஏற்ற. திருப்பணி-திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்பவராய்-புரிந்து வருபவராகி. விரவும்-தம்மிடம் விரவி யிருக்கும்; பொருந்தியிருக்கும். சிவசின்னம்-சைவசமயத்துக்கு

உரிய அடையாளங்களாகிய விபூதியைத் திருமேனி முழுவதும் பூசிக்கொள்ளுதல், உருத்திராக்க மாலையை அணிந்து கொள்ளுதல், சடாபாரத்தைத் தரித்துக் கொள்ளுதல் என்பவை. சின்னம்:ஒருமை பன்மை மயக்கம். விளங்கிட-விளக்கமாகப் பொருந்த. ஏ:அசைநிலை. எய்துள்ள-தம்முடைய திருவுள்ளத்தில் அடைந்து அமைந்த. தியானம்-வீரட்டானேசுவரரைத் தியானம் புரிதல். அறா-அறாத. உணர்வும்-உணர்ச்சியும். ஈறு-ஒரு முடிவு. இன்றி-இல்லாமல். எழும்-தம்முடைய திருவாயிலிருந்து எழுந்து பொங்கி வரும். திரு-அழகிய. வாசகமும்-வாய் மொழிகளாகிய திருப்பதிகங்களும்; ஒருமை பன்மை மயக்கம். கையில்-தம்முடைய வலத் திருக்கரத்தில். திகழும்-விளங்கும். உழவாரமுடன்-உழவாரப் படையோடும். கைக்கொண்டு-தம்முடைய திருக் கரங்களில் எடுத்துக் கொண்டு. கை:ஒருமை பன்மை மயக்கம். கலந்து-வேறு தொண்டர்களோடு சேர்ந்து கொண்டு. கசிந்தனர்-தம்முடைய திருவுள்ளத்தில் உருக்கத்தைப்பெற்று விளங்கினார்.

பிறகு உள்ள 78-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'உண்மையாகிய திருப்பணிகளைப் புரிந்த விருப்பத்தினால் தேவலோகத்தில் வாழும் தேவர்களினுடைய ஒப்பற்ற தலைவராகிய வீரட்டானேசுவரருடைய வெற்றிக்கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளில் தம்முடைய விருப்பம் நிறைய வரங்களைப் பெறும் பாக்கியத்தைக் கொண்டிருக்கும் அந்த இயல்பைப் பெற்ற சிவத்தலமாகிய திருவதிகை வீரட்டானத்தில் உள்ள தம்முடைய திருமடத்தில் தங்கியிருந்த தபஸ்வினியாரும், திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையாரும் ஆகிய திலகவதியார், ''பொய் வார்த்தைகளைக் கூறும் சமண சமயத்தைச் சார்ந்த சமணர்களினுடைய கட்டை விட்டு விட்டருளி வெளியில் வந்தவராகிய திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால் செல்லும் பிணிப்பை

விட்டுவிட்டு அந்த நாயனாருக்குத் தம்முடைய திருவருளை வழங்கி ஒரு பொருளாக அடியேங்களுடைய திருப்பணிகளை ஏற்றுக் கொள்ளும் கருணையினுடைய ஆற்றலை இந்தத் திருவதிகை வீரட்டானத்தில் வேறு யார் அடைந்தார்?'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்தத் திலகவதியார் விரட்டானேசுவரரை வணங்கினார்.' பாடல் வருமாறு:

''மெய்ம்மைப்பணி செய்த விருப்பதனால்
விண்ணோர்தனி நாயக னார்கழலில்
தம்மிச்சை நிரம்ப வரம்பெறும்அத்
தன்மைப்பதி மேவிய தாபதியார்
'பொய்ம்மைச்சம யப்பிணி விட்டவர்முன்
போதும்பிணி விட்டரு ளிப்பொருளா
எம்மைப்பணி கொள்கருணைத் திறமிங்கி
யார்பெற்றனர்?' என்ன இறைஞ்சினரே.''

மெய்ம்மை-உண்மையாகிய. ப்:சந்தி. பணி-திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்த-புரிந்த. விருப்பதனால்-விருப்பத்தினால். அது:பகுதிப் பொருள் விகுதி. விண்ணோர்-தேவலோகத்தில் வாழும் தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தனி-ஒப்பற்ற. நாயகனார்-தலைவராகிய வீரட்டானேசுவரருடைய. கழலில்—வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளில்; ஆகுபெயர். தம்-தம்முடைய. இச்சை-விருப்பம். நிரம்ப-நிறைந்திருக்குமாறு. வரம்-வரங்களை; ஒருமை பன்மை மயக்கம். பெறும்-பெறும் பாக்கியத்தை அடைந்திருக்கும். அத்தன்மை-அந்த இயல்பைப் பெற்ற. ப்:சந்தி. பதி-சிவத் தலமாகிய திருவதிகை வீரட்டானத்தில் உள்ள தம்முடைய திருமடத்தில்; இட ஆகு பெயர். மேவிய-தங்கிக் கொண்டிருந்த. தாபதியார்-தபஸ்வினியாரும் திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையாரும் ஆகிய திலகவதியார். பொய்ம்மை - பொய்யான வார்த்தைகளையே கூறும்

பான்மையைப் பெற்ற. ச்:சந்தி. சமய-சமண சமயத்தைச் சார்ந்த சமணர்களினுடைய; ஆகுபெயர். ப்:சந்தி. பிணி-கட்டை. விட்டு அருளி-விட்டுவிட்டு வந்த அந்த நாயனாருக்குத் தம்முடைய திருவருளை வழங்கி. ப்:சந்தி. பொருளா-ஒரு பொருளாக மதித்து. எம்மை-அடியேங்களுடைய; உருபு மயக்கம். என்றது திலகவதியார் தம்மையும் தம்முடைய தம்பியாராகிய திருநாவுக்கரசு நாயனாரையும் சேர்த்துச் சொன்னது. ப்:சந்தி. பணி-திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். கொள்-ஏற்றுக் கொண்டருளும். கருணை-கருணையினுடைய. த்;சந்தி. திறம்-ஆற்றலை. இங்கு-இந்தத் திருவதிகை வீரட்டானத்தில். இ:குற்றிய லிகரம். யார்-வேறுயார்; அடியேங்களைத் தவிர வேறு யார். பெற்றனர்-பெறும் பாக்கியத்தை அடைந்தார். என்ன-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. இறைஞ்சினர்-அந்தத் திலகவதியார் வீரட்டானேசுவரரை வணங்கினார். ஏ:ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 79-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இத்தகைய பான்மையில் இந்தத் திருநாவுக்கரசு நாயனார் சிவசமய வழியை அடைந்து நிலைபெற்று விளங்கும் பெருமையைப் பெற்ற திருவதிகை வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளைப் பெற்றுக் கொண்டு தம்மைத் துன்புறுத்திய துன்பமாகிய சூலைநோயிலிருந்து அகன்ற இயல்பைப் பல தடவைகளும் கூறப்படும் பழமையைப்பெற்ற பாடலிபுத்திரமாகிய திருப்பாதிரிப் புலியூர் என்னும் பெரிய சிவத்தலத்தில் தங்கியிருந்த பொலிவற்ற செயல்களையே செய்யும் சமணர்கள் கேள்வியுற்று அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் மீண்டும் சைவசமயத்தைச் சேர்ந்துவிட்ட அந்தச் செயலைச் சகிக்காதவர்களாகி.' பாடல் வருமாறு:

'' இன்ன தன்மையில் இவர்சிவ நெறியினை எய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்

பன்னு தொன்மையிற் பாடலி புத்திர நகரிற்
புன்மை யேபுரி அமணர்தாம் கேட்டது
பொறாராய்.''

இந்தப் பாடல் குளகம். இன்ன-இத்தகைய. தன்மையில்-பான்மையில். இவர்-இந்தத் திருநாவுக்கரசுநாயனார். சிவ-சைவ சமய. நெறியினை-வழியை. எய்தி-சமண சமயத்தை விட்டுவிட்டு அடைந்து. மன்னு-நிலைபெற்று விளங்கும். பேரருள்-திருவதிகை வீரட்டானேசுவரர் வழங்கிய பெருமையைப் பெற்ற திருவருளை. பெற்று-பெற்றுக் கொண்டு-இடர்-தம்மைத் துன்புறுத்திய துன்பமாகிய சூலை நோயிலிருந்து. நீங்கிய- அகன்ற. வண்ணம்-இயல்பை. பன்னு-பலதடவைகளும் புகழ்ந்து கூறப்படும். தொன்மையில்-பழமையை உடைய; உருபு மயக்கம். பாடலிபுத்திர-பாடலிபுத்திரமாகிய திருப்பாதிரிப்புலியூர் என்னும். நகரில்-பெரிய சிவத் தலத்தில் தங்கிக் கொண்டிருந்த. புன்மையே-பொலிவற்ற செயல்களையே; ஒருமை பன்மை மயக்கம். புரி-செய்து வரும். அமணர் தாம்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தாம்:அசைநிலை. கேட்டு-கேள்வியுற்று. அது-அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்தை விட்டுவிட்டு மீண்டும் சைவ சமயத்தைச் சேர்ந்துவிட்ட அந்தச் செயலை. பொறாராய்-சகிக்காதவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 80-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

"தருமசேனருக்கு அவருடைய வயிற்றில் உண்டாகியிருந்த அந்தத் தங்களால் தடுப்பதற்கு அருமையாக இருக்கும் சூலைநோய் ஒரு சமணராலும் இந்தச் சமண் பாழியில் போகாமையினால் அந்தத் தருமசேனர் தம்முடைய உயிர் பிழைப்பதற்காகத் திருவதிகை வீரட்டானத்திற்குச் சென்று பெருகியுள்ள சைவ சமயத்தைச் சார்ந்தவராக மாறி மீண்டு தங்களுடைய கட்டினை விட்டுவிட்டு உஜ்ஜீவனத்தை அடைந்தார்; இதனால் யாம் சேர்ந்திருக்கும் நம்முடைய பெருமையைப் பெற்று விளங்கும் சமண சமயம் விழுந்து

விட்டது'' என்று கூறி அந்தச் சமணர்கள் மயங்குபவர்கள் ஆனார்கள்.'' பாடல் வருமாறு:

'' 'தரும சேனர்க்கு வந்தஅத் தடுப்பரும் சூலை
ஒருவ ராலும்இங் கொழிந்திடா மையினவர் உயப்போய்ப்
பெருகு சைவராய்ப் பெயர்ந்து தம்பிணி யொழித்துய்ந்தார்;
மருவு நம்பெரும் சமயம் வீழ்ந்தது'என மருள்வார்.''

தருமசேனர்க்கு-தருமசேனருக்கு. இது சமணர்கள் திருநாவுக்கரசு நாயனாருக்கு வைத்த திருநாமம். வந்த-அவருடைய வயிற்றில் உண்டாகியிருந்த. அ-அந்த. த்:சந்தி. தடுப்பரும்-சமணர்களாகிய தங்களால் என்ன செய்தும் தடுப்பதற்கு அருமையாக இருக்கும். சூலை-அந்தச் சூலை நோய். ஒருவராலும்-ஒரு சமணராலும். இங்கு-இந்த அமண் பாழியில். ஒழிந்திடாமையின்-போகாமையினால். அவர்-அந்தத் தருமசேனர். உய-தம்முடைய உயிர் பிழைப்பதற்காக; இடைக்குறை. ப்:சந்தி. போய்-திருவதிகை வீரட்டானத்திற்குச் சென்று. ப்:சந்தி பெருகு-பெருகியுள்ள. சைவராய்-சைவ சமயத்தைச் சார்ந்தவராக மாறி. ப்:சந்தி பெயர்ந்து-மீண்டு. தம்-சமணர்களாகிய தங்களுடைய. பிணி-கட்டினை. ஒழித்து-விட்டுவிட்டு. உய்ந்தார்-உஜ்ஜீவனத்தை அடைந்தார். 'உயிர் பிழைத்தார்' எனலும் ஆம். மருவு-இதனால் யாம் சேர்ந்திருக்கும். நம்-நம்முடைய. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். சமயம்-சமண சமயம். வீழ்ந்தது-தன்னுடைய பெருமையை இழந்து விழுந்து விட்டது. என-என்று கூறி; இடைக்குறை. மருள்வார்-அந்தச் சமணர்கள் மயங்குபவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 81-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

' ''நம்மோடு எதிர்த்து வாதாடிப் போர் புரியும் பல சமயங்களைச் சார்ந்தவர்களையும் வென்றுவிட்டு அந்தச்

சமயங்களைச் சார்ந்தவர்களால் நிலையாக விளங்கும் நிலைமையையும் அடைந்த இந்தச் சமண சமய வழி இனிமேல் அழிந்துவிட்டது" என வருத்தத்தை அடைந்து, "கொல்லுதலையும் பொய்களைப் பேசும் தன்மையையும் யாம் பெற்றிலோம்'' என்று கூறிக் கொண்டு கொடுமையாகிய செயல்களையே செய்து வருபவர்களாகிய சமணர்கள் தங்களுடைய தலைகளும், தாங்கள் தங்களுடைய கைகளில் தாங்கள் செல்லும் வழியைப் பெருக்குவதற்காக வைத்திருந்த மயிற் பீலிகளும் தாழ்வை அடையுமாறு வந்து ஒரு பக்கத்தை அந்தச் சமணர்கள் அடைந்தார்கள்.' பாடல் வருமாறு:

"'மலையும் பல்சம யங்களும்
வென்றுமற் றவரால்
நிலையும் பெற்றஇந் நெறிஇனி
அழிந்த'தென் றழுங்கிக்
'கொலையும் பொய்ம்மையும் இல'மென்று
கொடுமையே புரிவோர்
தலையும் பீலியும் தாழவந்
தொருசிறை சார்ந்தார்.''

மலையும்-நம்மோடு எதிர்த்து வாதாடிப் போர் புரியும்; வாதப் போரைப் புரியும். பல்-பல. சமயங்களும்-சமயங்களைச் சார்ந்தவர்களையும்; இட ஆகு பெயர். வென்று-வென்றுவிட்டு. அந்தச் சமயங்களாவன: சைவ சமயம், வைணவ சமயம், சாக்த சமயம், பௌத்த சமயம், சௌர சமயம் என்பவை. மற்று:அசை நிலை. அவரால்-அந்தச் சமயங்களை. சார்ந்திருப்பவர்களால்; ஒருமை பன்மை மயக்கம். நிலையும்-நிலைபெற்று விளங்கும் நிலைமையையும். பெற்ற-அடைந்த. இந்நெறி-இந்தச் சமண சமய வழி. இனி-இனிமேல். அழிந்தது-அழிந்துவிட்டது. என்று - என. அழுங்கி-அந்தச் சமணர்கள் வருத்தத்தை அடைந்து.க்:சந்தி. கொலையும்-கொலை செய்வதையும், பொய்ம்மையும்-பொய்

யாகிய வார்த்தைகளைப் பேசும் தன்மையையும். இலம்-யாம் பெற்றிலோம். என்று-எனக் கூறிக்கொண்டு. கொடு-மையே-கொடுமையாகிய செயல்களையே; ஒருமை பன்மை மயக்கம். புரிவோர்-செய்து வருபவர்களாகிய சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தலையும்-தங்களுடைய தலை-களும்; ஒருமை பன்மை மயக்கம். பீலியும்-தாங்கள் தங்களுடைய கைகளில் தாங்கள் செல்லும் வழியைப் பெருக்கு-வதற்காக வைத்திருந்த மயிற் பீலிகளும்; ஒருமை பன்மை மயக்கம். தாழ-குனியவும்; தாழ்வை அடையவும். தலைகள் குனியவும் மயிற் பீலிகள் தாழ்வை அடையவும் என்றபடி. வந்து-அந்தச் சமணர்கள் வந்து. ஒரு சிறை-ஒரு பக்கத்தை. சார்ந்தார்-அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 82-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இவ்வாறு பல சமணர்களும் துயரத்தோடு கூடிக்கொண்டு, "உண்மையாகிய விதத்தின் வகையைத் தெரிந்து கொண்டானானால் நம்முடைய அரசனும் கோபம்மூண்டு சைவசமயத்தைச் சார்ந்தவனாக மாறி நம்முடைய இறையிலி நிலங்களையும் நாம் கைவிடுமாறு செய்து எடுத்துக் கொள்ளு-வான்; இனிமேல் யாம் என்ன செய்வது?" என்று கூறிவிட்டு வஞ்சகமாகிய செயல்களை ஆராய்ந்து கற்பிப்பவர்கள் ஆனார்கள்.' பாடல் வருமாறு:

"இவ்வ கைப்பல அமணர்கள்
துயருடன் ஈண்டி
'மெய்வ கைத்திறம் அறிந்திடில்
வேந்தனும் வெகுண்டு
சைவ னாகிநம் விருத்தியும்
தவிர்க்கும்மற் றினிநாம்
செய்வ தென்?'என வஞ்சனை
தெரிந்துசித் திரிப்பார்."

இவ்வகை-இந்த விதத்தில். ப:சந்தி. பல அமணர்கள்-பல சமணர்களும். துயருடன்-துயரத்தோடு. ஈண்டி-கூடிக்

கொண்டு. மெய்-உண்மையாகிய. வகை-விதத்தின் த்:சந்தி. திறம்-வகையை. என்றது தருமசேனர் சமண சமயத்தை விட்டுவிட்டுச் சைவ சமயத்தைச் சார்ந்ததை. அறிந்திடில்-தெரிந்து கொண்டால். வேந்தனும்-நம்முடைய அரசனும், வெகுண்டு-நம்மைக் கோபித்துக் கொண்டு. சைவன் ஆகி-சைவ சமயத்தைச் சார்ந்தவனாக மாறி. நம்-நம்முடைய. விருத்தியும்-அந்த மன்னன் விட்டிருந்த இறையிலி நிலங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். இறை வரி. தவிர்க்கும்-நாம் கைவிடுமாறு செய்து எடுத்துக் கொள்ளுவான். மற்று:அசைநிலை. இனி-இனிமேல். நாம்-சமணர்களாகிய நாம். செய்வது என்-என்ன செய்வது. என-என்று கூறிவிட்டு; இடைக்குறை. வஞ்சனை-வஞ்சகமாகிய செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். தெரிந்து-ஆராய்ந்து. சித்திரிப்பார்-கற்பனையாகக் கற்பிப்பவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 83-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' "தம்முடைய தமக்கையாகிய திலகவதி சைவ சமயத்தில் நிலைபெற்று நிற்பதால் அந்தத் தருமசேனரும் தாம் சென்று தாமாகக் கற்பனை செய்து தம்முடைய வயிற்றில் அமைந்ததாகிய ஒரு சூலை நோய் போகவில்லை என்று கூறிவிட்டுத் திருவதிகை வீரட்டானத்திற்குச் சென்று இந்த அமண்பாழியில் துன்பம் உண்டாகுமாறு அந்தத் திருவதிகை வீரட்டானத்தை அடைந்து நம்முடைய சமண சமயத்தைத் தாண்டி விட்டதையும், நம்முடைய கடவுளாகிய அருகத் பரமேஷ்டியை நிந்திக்கும் செயலையும் புரிந்து விட்டார்" என்று கூறலாம் என்ற தெளிவை அந்தச் சமணர்கள் அடைந்தார்கள்.' பாடல் வருமாறு:

" 'தவ்வை சைவத்து நிற்றலின்
தருமசே னரும்தாம்
பொய்வ குத்ததோர் சூலைதீர்ந்
திலதெனப் போயிங்

கெவ்வ மாகஅங் கெய்திநம்
சமயலங் கனமும்
தெய்வ நிந்தையும் செய்தனர்'
எனச்சொலத் தெளிந்தார்.''

தவ்வை - தம்முடைய தமக்கையாகிய திலகவதி. சைவத் -சைவ சமயத்தில். நிற்றலின்-நிலை பெற்று நின்று கொண்டிருப்பதால். தருமசேனரும் தாம்-தருமசேனராகிய தாமும். பொய்-தாம் சென்று தாமாகக் கற்பனை செய்து, வகுத்தது ஓர்-அமைத்துக்கொண்டதாகிய ஒரு. சூலை-சூலை நோய். தீர்ந்திலது-போகவில்லை. என-என்று கூறிவிட்டு: இடைக்குறை. ப்:சந்தி. போய்-திருவதிகை வீரட்டானத்திற்குச் சென்று. இங்கு-இந்த அமண் பாழியில். எவ்வம்-துன்பம். ஆக-உண்டாகுமாறு. அங்கு - அந்தத் திருவதிகை வீரட்டானத்தை. எய்தி-அடைந்து. நம்-நம்முடைய சமய-சமண சமயத்தை. லங்கனமும்-தாண்டி விட்டதையும். தெய்வ-நம்முடைய கடவுளாகிய அருகத் பரமேஷ்டியை. நிந்தையும்-நிந்திக்கும் செயலையும். செய்தனர்-அந்தத் தருமசேனர் புரிந்து விட்டார் என-என்று; இடைக்குறை. ச்:சந்தி. சொல-கூறலாம் என்ற; இடைக்குறை; வினையாலணையும் பெயர். த்:சந்தி. தெளிந்தார்-தெளிவை அந்தச் சமணர்கள் அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 84-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தாங்கள் அவ்வாறு கூறியவாறே புரிவதற்குத் துணிவை அடைந்த கெட்ட அறிவைப் பெற்றவர்களாகிய அந்தச் சமணர்கள், "முன்னால் நாம் போய் அரசனிடத்தில் முறையிடுவோம்." என்று முயற்சியைச் செய்து இத்தகைய பான்மையோடு இருட்டினுடைய கூட்டம் போவதைப் போல தங்களுடைய வேந்தனாகிய பல்லவன் அரசாட்சி புரியும் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.' பாடல் வருமாறு:

''சொன்ன வண்ணமே செய்வது
துணிந்ததுன் மதியோர்
'முன்னம் நாம்சென்று முறைப்படு
வோம்' என முயன்றே
இன்ன தன்மையில் இருட்குழாம்
செல்வது போல
மன்ன னாகிய பல்லவன்
நகரில்வந் தணைந்தார்.''

சொன்ன-தாங்கள் அவ்வாறு கூறிய. வண்ணமே-படியே. செய்வது-புரிவதற்கு. துணிந்த-துணிவை அடைந்த. துன்மதியோர்-கெட்ட அறிவைப் பெற்றவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். முன்னம்-முன் கூட்டியே. நாம்-யாம். சென்று-போய். முறைப்படுவோம்-அரசனிடத்தில் முறையிடுவோம். என-என்று; இடைக் குறை. முயன்று-முயற்சியைச் செய்து. ஏ:அசை நிலை. இன்ன-இத்தகைய. தன்மையில்-பான்மையோடு; உருபு மயக்கம். இருள்-இருட்டினுடைய. குழாம்-கூட்டம். செல்வதுபோல-போவதைப் போல. மன்னன் ஆகிய-தங்களுடைய வேந்தனாகிய. பல்லவன்-பல்லவன் அரசாட்சி புரியும். நகரில்-நகரத்திற்கு; உருபு மயக்கம். வந்து-போய். அணைந்தார்-அந்தச் சமணர்கள் சேர்ந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 85-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தாங்கள் உடுத்துக் கொள்ளும் ஆடைகளை விட்டு விட்டு ஒரு பேச்சும் நடுவில் பேசுதல் இல்லாமல் நின்று கொண்டே உண்பவர்களாகிய அந்தச் சமணர்கள் அந்தப் பல்லவ மன்னனுடைய அரண்மனையினுடைய வாசலை அடைந்து அந்த மன்னனுடைய அரண்மனை வாசலைக் காவல் புரிந்துகொண்டு நிற்கும் வாயில் காவலர்களிடம், ''யாங்கள் யாவரும் வந்தமையை உங்களுடைய பல்லவ மன்னனிடம் தெரிவிப்பீர்களாக'' என்று வந்த சமணர்கள்

கூற, சமயத்தைத் தெரிந்து கொண்டு அரண்மனைக்குள் புகுந்து அந்த வாயில் காவலர்களும் தங்களுடைய அரசனாகிய பல்லவனிடம் கூறுவாரானார்கள்.' பாடல் வருமாறு:

"உடைஒ ழிந்தொரு பேச்சிடை
யின்றிநின் றுண்போர்
கடைஅ ணைந்தவன் வாயில்கா
வலருக்கு, 'நாங்கள்
அடைய வந்தமை அரசனுக்
கறிவியும்' என்ன
இடைஅ றிந்துபுக் கவரும்தம்
இறைவனுக் கிசைப்பார்."

உடை-தாங்கள் உடுத்துக் கொள்ளும் ஆடைகளை; ஒருமை பன்மை மயக்கம். ஒழிந்து-விட்டு விட்டு. ஒரு பேச்சு-ஒருபேச்சும். இடை-நடுவில். இன்றி-பேசுதல் இல்லாமல். நின்று-நின்று கொண்டே. உண்போர்-உணவுகளை உண்பவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கடை-அந்தப் பல்லவ மன்னனுடைய அரண்மனையின் வாசலை. அணைந்து-அடைந்து. அவன்-அந்த மன்னனுடைய. வாயில்-அரண்மனை வாசலை. காவலருக்கு-காவல் புரிந்துகொண்டு நிற்கும் வாயில் காவலர்களிடம்; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். நாங்கள்-யாங்கள். அடைய-யாவரும் சேர்ந்துகொண்டு. வந்தமை - வந்ததையை. அரசனுக்கு-உங்களுடைய மன்னனாகிய பல்லவனிடம்; உருபு மயக்கம். அறிவியும்-தெரிவிப்பீர்களாக. என்ன-என்று வந்த சமணர்கள் கூற. இடை-சமயத்தை. அறிந்து - தெரிந்துகொண்டு. புக்கு - அரண்மனைக்குள் நுழைந்து. அவரும்-அந்த வாயில் காவலர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தம்-தங்களுடைய. இறைவனுக்கு-அரசனாகிய பல்லவனிடம்; உருபு மயக்கம். இசைப்பார்-

தாங்கள் வந்த காரியத்தைக் கூறுபவர்களானார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 86-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' ''சமணத் துறவிகள் யாவரும் தங்களுடைய உள்ளங்களில் கவலையை உடையவர்களாகி மிகவும் வருத்தத்தை அடைந்து துவசம் அசைந்து ஆடும் அரண்மனையின் முன்பு உள்ள அழகிய வாசற் பக்கத்தை அடைந்தார்கள்'' என்று அந்த வாயில் காவலர்கள் இயம்ப, வடித்த நீண்ட வேலாயுதத்தை ஏந்தியிருக்கும் அந்தப் பல்லவ வேந்தனும் அந்த சமணர்களுடைய சார்பைப் பெற்றவன் ஆகையினால் வேகமாக அடைபவனாகி, ''அந்தத் துறவிகளுக்கு வந்த துன்பம் என்ன?'' என்று கவலையை அடைந்து கேட்டான்.' பாடல் வருமாறு:

'' 'அடிகண்மார் எல்லாரும்
ஆகுலமாய் மிகஅழிந்து
கொடிநுடங்கு திருவாயிற்
புறத்தணைந்தார்' எனக்கூற
வடிநெடுவேல் மன்னவனும்
மற்றவர்சார் பாதலினால்
கடிதணைவான், 'அவர்க்குற்ற
தென்கொல்?'எனக் கவன்றுரைத்தான்.''

அடிகள்மார்-சமணத் துறவிகள். எல்லாரும்-யாவரும். ஆகுலமாய்-தங்களுடைய உள்ளங்களில் கவலையை உடையவர்களாகி; திணை மயக்கம். மிக-மிகவும். அழிந்து-வருத்தத்தை அடைந்து. கொடி-துவசம். நுடங்கு-அசைந்து ஆடும். திரு-அழகிய. வாயில்-அரண்மனையின் முன்னால் உள்ள வாசலினுடைய. புறத்து-பக்கத்தை. அணைந்தார்-அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். என-என்று; இடைக்குறை. க்:சந்தி. கூற-அந்த வாயில் காவலர்கள் பல்லவ மன்னனிடம் சொல்ல. வடி-வடித்த. நெடு-நீளமாகிய. வேல்-வேலாயுதத்தை ஏந்தியிருக்கும். மன்னவ

னும்-அந்த பல்லவ வேந்தனும். மற்று: அசைநிலை. அவர்-அந்தச் சமணர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். சார்பு-சார்பைப் பெற்றவன்; வினையாலணையும் பெயர். ஆதலினால்-ஆகையால். கடிது-வேகமாக. அணைவான்-அடைபவனாகி; முற்றெச்சம். அவர்க்கு-அந்தத் துறவிகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். உற்றது-வந்த துன்பம். என்கொல்-என்ன. கொல்: அசைநிலை. என-என்று. இடைக்குறை. க்: சந்தி. கவன்று-கவலையை அடைந்து. உரைத்தான்-அவர்களிடம் கேட்டான்.

பிறகு வரும் 87-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த அரண்மனைக்கு முன்பு உள்ள வாசலைக் காத்தல் பணியை உடைய வாயில் காவலர்கள் அரண்மனைக்கு உள்ளே நுழையுமாறு அனுப்ப அந்தப் பல்லவ மன்னனிடத்தில் நடக்கும் தொழில் ஒன்றையே உடைய அந்தச் சமண சமயத் துறவிகள் அடைந்து தாங்கள் நினைத்தபடியே, "நம்முடைய தலைவராகிய தருமசேனர் வயிற்றுவலி என்ற நோயை அடைந்தவராகித் தன்னுடைய தலையின்மேல் சடாபாரத்தைப் பெற்றவனாகிய வீரட்டானேசுவரனுக்கு அடிமையாகி உன்னுடைய சமயமாகிய சமண சமயத்தை அழித்துவிட்டார்" என்று அவர்கள் அந்தப் பல்லவ மன்னனிடம் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

"கடைகாவல் உடையார்கள்
புகுதவிடக் காவலன்பால்
நடையாடும் தொழிலுடையார்
நண்ணித்தாம் எண்ணியவா
'றுடையாரா கியதரும
சேனர்பிணி உற்றாராய்ச்
சடையானுக் காளாய்நின்
சமயம்ஒழித் தார்' என்றார்."

கடை-அந்தப் பல்லவ மன்னனுடைய அரண்மனைக்கு

முன்னால் உள்ள வாசலை. காவல்-காவல் காத்தலாகிய பணியை. உடையார்கள்-உடைய வாயில் காவலர்கள், புகுத- அந்தச் சமண சமயத் துறவிகளை உள்ளே நுழையுமாறு விட-அனுப்ப. க்: சந்தி. காவலன்பால்-அந்தப் பல்லவ மன்னனிடத்தில். நடையாடும்-நடக்கும் தொழில் ஒன்றையே புரியும். தொழில்-வினையாக. உடையார்-உடைய அந்தச் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள்; ஒருமை பன்மை மயக்கம். நண்ணி-அரண்மனைக்குள் சென்று. த்: சந்தி. தாம்-தாங்கள். எண்ணியவாறு-நினைத்தபடியே. உடையார் ஆகிய-நம்முடைய தலைவராக விளங்கிய. தருமசேனர் பிணி-தருமசேனர் சூலை என்ற நோயை. உற்றாராய்-அடைந்தவராகி. ச்: சந்தி. சடையானுக்கு-தன்னுடைய தலையின் மேல் சடாபாரத்தைப் பெற்றவனாகிய வீரட்டானேசுவரனுக்கு. ஆளாய்-அடிமையாகி. நின்-உன்னுடைய. சமயம்-சமயமாகிய சமண சமயத்தை. ஒழித்தார்-அழித்து விட்டார். என்றார்-என்று அந்தச் சமணத் துறவிகள் அந்தப் பல்லவ மன்னனிடம் முறையிட்டுக் கொண்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 83-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நறுமணம் கமழும் மலர் மாலையை அணிந்து கொண்டிருக்கும் அந்தப் பல்லவ மன்னனும் அந்தச் சமணசமயத்தைச் சார்ந்த துறவிகள் கூறியதைக் கேட்டுச் சினம் மூண்டு தன்னுடைய சிங்காதனத்திலிருந்து எழுந்து வந்து, ''குற்றத்தைப் பெற்ற உள்ளத்தை உடையவராகிச் சமண சமயத்தை விட்டுப் போவதற்காகப் பொய்யாகிய சூலை நோயை தம் மேற்கொண்டு புகழால் சிறப்பை அடைந்த சமண சமயத்தை அந்தத் தருமசேனர் அழித்துவிட்டுப் போகுமாறு விடுவதா? வரம்பு இல்லாத தவத்தைப் புரிந்த சமண சமயத் துறவிகளே, இந்தச் செயலுக்கு என்ன பரிகாரத்தைப் புரிவது?'' என்று கேட்டுவிட்டு அந்தப் பல்லவ மன்னன் தீயைப் போலச் சினத்தைக் கொண்டான்.' பாடல் வருமாறு:

"விரை யலங்கற் பல்லவனும்
அதுகேட்டு வெகுண்டெழுந்து
'புரையுடைய மனத்தின ராய்ப்
போவதற்குப் பொய்ப்பிணிகொண்
டுரை சிறந்த சமயத்தை
அழித்தொழியப் பெறுவதே?
கரையில்தவத் தீர்,இத னுக்
கென்செய்வ' தெனக் கனன்றான்."

விரை-நறுமணம் கமழும். அலங்கல்-மலர் மாலையை அணிந்து கொண்டிருக்கும். பல்லவனும்-அந்தப் பல்லவ மன்னனும். அது-அந்தச் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள் முறையிட்டுக் கொண்ட அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்டு-அந்தப் பல்லவ மன்னன் கேட்டு விட்டு. வெகுண்டு-சினம் மூண்டு. எழுந்து-தன்னுடைய சிங்காதனத்திலிருந்து எழுந்து வந்து. புரை-குற்றத்தை. உடைய-பெற்ற. மனத்தினராய்-உள்ளத்தை உடையவராகி. ப்:சந்தி. போவதற்கு-நம்முடைய சமண சமயத்தை விட்டு விட்டுப் போவதற்காக. ப்:சந்தி. பொய்-பொய்யாகிய. ப்:சந்தி. பிணி-சூலை நோயை. கொண்டு-தம் மேற் கொண்டு. உரை-புகழினால். சிறந்த-சிறப்பை அடைந்த. சமயத்தை-நம்முடைய சமண சமயத்தை. அழித்து-அந்தத் தருமசேனர் அழித்துவிட்டு. ஒழிய-போகுமாறு. ப்:சந்தி. பெறுவதே-விடுவதா. கரை-வரம்பு. இல்-இல்லாத; கடைக்குறை. தவத்தீர்-தவத்தைப் புரிந்தவர்களாகிய சமண சமயத் துறவிகளே; ஒருமை பன்மை மயக்கம், இதனுக்கு-இந்தச் செயலுக்கு; என்றது தருமசேனர் சமண சமயத்தை விட்டுவிட்டுப் போனதற்கு என்பதை. என் செய்வது-என்ன பரிகாரத்தைப் புரிவது. என-என்று கேட்டுவிட்டு; இடைக் குறை. க்:சந்தி. கனன்றான்-தீயைப் போலச் சினத்தைக் கொண்டான.

அடுத்து வரும் 89-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"'அந்தத் தருமசேனன் தலைமை வழியாகிய நம்முடைய சமண சமயத்தை அழித்துவிட்டு நின்னுடைய நிலையாக நின்று கொண்டிருந்த பழைய வரம்பை உடைய சமண சமய வழியை அழித்துவிட்ட அறிவில்லாதவனாகிய அந்தத் தருமசேனனைத் தண்டனைக்கு உட்படுத்துவாயாக'' என்று அந்தப் பல்லவ மன்னனை அந்தச் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள் புகழ்ந்துவிட்டுத் தங்களுடைய வாய்களால் சிறிதேனும் பயத்தை அடையாமல், கொல்லுதலைச் செய்யாத நிலையை மேற்கொண்டு பொய்யாக ஒழுகி வரும் சமணர்களாகிய இழிந்தவர்கள் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

"'தலைநெறியா கியசமயத்
  தன்னைஅழித் துன்னுடைய
நிலைநின்ற தொல்வரம்பின்
  நெறியழித்த பொறியிலியை
அலைபுரிவாய்' எனப்பரவி
  வாயால்அஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு
  பொய்யொழுகும் அமண்குண்டர்.''

தலை-அந்தத் தருமசேனன் தலைமை. நெறியாகிய-வழியாகிய. சமயந்தன்னை-நம்முடைய சமண சமயத்தை. தன்: அசைநிலை. அழித்து-அழித்துவிட்டு. உன்னுடைய-நின்னுடைய. நிலை-நிலையாக. நின்ற-நின்று கொண்டிருந்த. தொல்-பழைய. வரம்பின்-எல்லையை உடைய. நெறி-சமண சமய வழியை. அழித்த-அழித்துவிட்ட. பொறு-அறிவு. இலியை-இல்லாதவனாகிய அந்தத் தருமசேனனை; இடைக்குறை. அலைபுரிவாய்-தக்க தண்டனைக்கு உட்படுத்துவாயாக. என-என்று; இடைக்குறை. ப்: சந்தி. பரவி-அந்தப் பல்லவ மன்னனை இந்தச் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள் புகழ்ந்துவிட்டு. வாயால்-தங்களுடைய வாய்களால்; ஒருமை பன்மை மயக்கம். அஞ்சாது-சிறிதேனும் பயத்தை அடையாமல். கொலை-கொல்லுதலை

புரியா-செய்யாத. நிலை-நிலைமையை. கொண்டு-மேற் கொண்டு. பொய்-பொய்யாக. ஒழுகும்-நடந்து வரும். அமண்-சமணர்களாகிய; திணை மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். குண்டர்-இழிந்தவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். உரைத்தார்-கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 90-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றுக்கொண்ட உணர்ச்சி இல்லாமல் சைவசமய வழியிலிருந்து விலகி இது தான் நல்ல அறிவையுடைய சமயம் என்று எண்ணிக் கொண்டு மயக்கத்தைக் கொண்ட அந்தப் பல்லவ வேந்தனும் தன்னுடைய அமைச்சர்களைப் பார்த்து, ''தெளிவைப் பெற்ற அறிவைக் கொண்டவர்களாகிய இந்தத் துறவிகள் கூறிய கெட்டவனாகிய தருமசேனனைத் தண்டிப்பதற்காக கையூட்டாகிய செல்வத்தைப் பெற்றுக்கொண்டு விட்டு விடாமல் என்னிடம் அழைத்துக்கொண்டு வருவீர்களாக'' என்று கூறினான்.' பாடல் வருமாறு:

'' அருள்கொண்ட உணர்வின்றி
நெறிகோடி அறிவென்று
மருள்கொண்ட மன்னவனும்
மந்திரிகள் தமைநோக்கித்
'தெருள்கொண்டோர் இவர்சொன்ன
தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பால்
கொடுவாரும்.' எனப்புகன்றான்.''

அருள் - சிவபெருமானுடைய. கொண்ட - பெற்றுக் கொண்ட. உணர்வு-உணர்ச்சி. இன்றி-இல்லாமல். நெறி-சைவசமய வழியிலிருந்து. கோடி-விலகி. அறிவு-இதுதான் நல்ல அறிவை உடைய சமயம்; ஆகுபெயர். என்று-என எண்ணிக்கொண்டு. மருள்-மயக்கத்தை. கொண்ட-பெற்ற. மன்னவனும்-அந்தப் பல்லவ வேந்தனும். மந்திரிகள் தமை-

தன்னுடைய அமைச்சர்களை. தமை: இடைக்குறை. தம்: அசை நிலை. நோக்கி-பார்த்து. த்:சந்தி. தெருள்-தெளி வைப் பெற்ற அறிவை; ஆகுபெயர். கொண்டோர்-கொண்ட வர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். இவர்-இந்தத் துறவிகள்; ஒருமை பன்மை மயக்கம். சொன்ன-கூறிய. தீயோனை-கெட்டவனாகிய தருமசேனனை. ச்;சந்தி. செறு வதற்கு-தக்கபடி தண்டிப்பதற்காக. ப்:சந்தி. பொருள்-கையூட்டாகச் செல்வத்தை. கையூட்டு-லஞ்சம். கொண்டு-நீங்கள் பெற்றுக் கொண்டு. விடாது-விட்டு விடாமல். என்பால்-என்னிடம். கொடு-அழைத்துக்கொண்டு. வாரும்-வருவீர்களாக. என-என்று; இடைக்குறை. ப்:சந்தி. புகா றான்-அந்தப் பல்லவ மன்னன் கூறினான்.

அடுத்து உள்ள 91-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தப் பல்லவ மன்னன் இட்ட கட்டளையில் தலை சிறந்து நின்று அவனுடைய மந்திரிகளும் அந்த நிலையி லேயே முரசு முழங்கும் சேனையோடு முன்னால் போய் மேகங்கள் சுற்றித் தவழ்ந்துகொண்டு நறுமணம் நிரம்பி யிருக்கும் மலர்கள் மலர்ந்துள்ள மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில் சுற்றி விளங்கும் திருவதிகை வீரட்டானத் திற்குச் சென்று வேறு சமயமாகிய சமண சமயத்தின் பற்றுக் கோட்டை அறுத்துக் கொண்ட தன்மையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனாரிடத்திற்குப் போனார்கள்.' பாடல் வருமாறு:

"அரசனது பணிதலைநின்
றமைச்சர்களும் அந்நிலையே
முரசதிரும் தானையொடு
முன்சென்று முகில்சூழ்ந்து
விரைசெறியும் சோலைசூழ்
திருவதிகை தனைமேவிப்
பரசமயப் பற்றறுத்த
பான்மையினார் பாற்சென்றார்."

அரசனது-அந்தப் பல்லவ மன்னன் இட்ட. பணி-கட்டளையில். தலைநின்று-தலைசிறந்து நின்று. அமைச்சர்களும்-அந்த மன்னனுடைய மந்திரிகளும். அந்நிலையே-அந்த நிலையிலேயே. முரசு-முரசம். அதிரும்-முழங்கும். தானையொடு-யானை, குதிரை, தேர், காலாட்கள் என்னும் சதுரங்க சேனையோடு. முன்-முன்னால். சென்று-போய். முகில்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்து-சுற்றித் தவழ்ந்துகொண்டு. விரை - நறுமணம். செறியும்-நிரம்பியிருக்கும் மலர்கள் மலர்ந்துள்ள பலவகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், மகிழ மரம், பலவகையான வாழை மரங்கள், வில்வ மரம், பவள மல்லிகை மரம், பூவரச மரம், நுணா மரம், புன்னை மரம், கோங்கிலவ மரம், சரக் கொன்றை மரம், புலிநகக்கொன்றை மரம் முதலியவை. சோலை-பூம்பொழில். சூழ்-சுற்றி விளங்கும். திருவதிகைத்தனை - திருவதிகை வீரட்டானத்திற்கு; உருபு மயக்கம். தனை: இடைக்குறை. தன்: அசை நிலை. மேவி-சென்று. பரசமய-சைவ சமயம் அல்லாத வேறு சமயமாகிய சமணசமயத்தின். பற்று-பற்றுக் கோட்டை. அறுத்த-அறுத்துக் கொண்ட. பான்மையினார் பால்-தன்மையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனாரிடத்திற்கு. சென்றார்- அந்த மந்திரிகள் போனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 92-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருவதிகை வீரட்டானத்திற்குப் போய்ச் சேர்ந்த அந்தப் பல்லவ மன்னனுடைய மந்திரிகளோடு சேனையில் உள்ள வீரர்களாகிய காலாட்களும் சுற்றிக்கொண்டு மின்னலைப் போல விளங்கும் புரிகளைக் கொண்ட சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்ற அந்தணராகிய வீரட்டானேசுவரருடைய அடியவராகிய அந்தத் திருநாவுக்

கரசு நாயனாரை, "இன்றைக்கு உம்மை எங்களுடைய பல்லவ மன்னன் கூட்டிக் கொண்டுவரும் பொருட்டு எங்களை அனுப்பினான்; வருவீராக" என்று கூறி, நின்று கொண்டிருந்த அந்த அமைச்சர்களைத் திருநாவுக்கரசு நாயனார் நேரில் பார்த்து நிறைந்த தவத்தைப் புரிந்தவராகிய அவர் திருவாய் மலர்ந்தருளிச் செய்வாரானார்.' பாடல் வருமாறு:

"சென்றணைந்த அமைச்சருடன்
சேனைவீ ரரும்சூழ்ந்து
மின்தயங்கு புரிவேணி
வேதியனார் அடியவரை
'இன்றுநுமை அரசன்அழைக்
கெமைவிடுத்தான்; போதும்' என
நின்றவரை நேர்நோக்கி
நிறைதவத்தோர் உரைசெய்வார்."

சென்று - திருவதிகை வீரட்டானத்திற்குப் போய். அணைந்த-சேர்ந்த. அமைச்சருடன்-அந்தப் பல்லவ மன்னனுடைய மந்திரிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். சேனை -படையில் உள்ள. வீரரும்-வீரர்களாகிய காலாட்களும்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்து-சுற்றிக்கொண்டு. மின்-மின்னலைப் போல. தயங்கு-விளங்கும். புரி-புரிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வேணி-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்ற. வேதியனார்-அந்தணராகிய வீரட்டானேசுவரருடைய. அடியவரை-அடியவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை. இன்று -இன்றைக்கு. நுமை-உம்மை; இடைக்குறை. அரசன்-எங்களுடைய மன்னனாகிய பல்லவன். அழைக்க-கூட்டிக் கொண்டு வருமாறு. எமை-எங்களை; இடைக்குறை. அழைக்கெமை-அழைக்க எமை; தொகுத்தல் விகாரம். விடுத்தான்-அனுப்பினான். போதும்-நீர் வருவீராக. என-

என்று கூறி; இடைக்குறை. நின்றவரை-நின்று கொண்டிருந்தவர்களாகிய அமைச்சர்களை; ஒருமை பன்மை மயக்கம். நேர்-நேரில். நோக்கி-பார்த்து. நிறை-நிறைந்த. தவத்தோர்-தவத்தைப் புரிந்தவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். உரை செய்வார்-பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்வாரானார்.

அடுத்து வரும் 93-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' "நாமார்க்கும் குடியல்லோம்" என்று தொடங்கி இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய தலைவனை கங்கையாற்றோடு குளிர்ச்சியைப் பெற்ற பிறைச் சந்திரன் தங்கும் சடாபாரத்தைத் தன்னுடைய தலையின் மேற் பெற்றவனாகிய வீரட்டானேசுவரனைத் தேன் நிரம்பிய மலர் மாலையாகிய செந்தமிழ் மொழியில் அமைந்த சொற் சுவை, பொருட் சுவை என்னும் செழுமை பொருந்திய ஒரு திருத்தாண்டகத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி, "நீங்கள் கூறுமாறு என்னை அழைத்துக் கொண்டு பல்லவ மன்னனிடம் செல்லும் அடைவை நாம் பெற்றிலோம்; எம்மால் அங்கே வர முடியாது" என்று அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்." பாடல் வருமாறு:

" 'நாமார்க்கும் குடியல்லோம்'
என்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன்
குளிர்மதி வாழ்சடையானைத்
தேமாலைச் செந்தமிழின்
செழுந்திருத்தாண் டகம்பாடி
'ஆமாறு நீர்அழைக்கும்
அடைவிலம்'என் றருள்செய்தார்."

'நாமார்க்கும் குடியல்லோம்' என்று-'நாமார்க்கும்குடியல்லோம்' என. எடுத்து-தொடங்கி. நான்மறையின்-இருக்கு

வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய. மறை:ஒருமை பன்மை மயக்கம். கோமானை-தலைவனை. நதியினுடன்-கங்கை யாற்றோடு. குளிர்-குளிர்ச்சியைப் பெற்ற. மதி-பிறைச் சந்திரன். வாழ்-தங்கியிருக்கும். சடையானை-சடாபாரத்தைத் தன்னுடைய தலையின்மேற் பெற்றவனாகிய வீரட்டானேசுவரனை. த்:சந்தி. தேு-தேன் நிரம்பிய. மாலை-மாலையைப் போன்ற இனிமையைப் பெற்ற. ச்:சந்தி. செந்தமிழின்-செந்தமிழ் மொழியில் அமைந்த. செழும்-இசைச்சுவை, பொருட்சுவை என்னும் செழுமையாகிய சுவைகள் பொருந்திய. திருத்தாண்டகப்-ஒரு திருத்தாண்டகத்தை. பாடி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி ஆமாறு-நீங்கள் கூறுமாறு. நீர்-நீங்கள். அழைக்கும்-என்னை அழைத்துக் கொண்டு பல்லவ மன்னனிடம் செல்லும். அடைவு-அடைதலை. இலம்-யாம் பெற்றிலோம்; இடைக் குறை. 'எம்மால் வர முடியாது' என்பது கருத்து. என்று-என. அருள் செய்தார்-அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருத்தாண்டகம் வருமாறு:

"நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்;பிணிஅறியோம்; பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும்; துன்பம் இல்லை;
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்க வெண்குழை யோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.''

பிறகு வரும் 94-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆளாகக் கொண்டருளிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அவ்வாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அதைக்கேட்ட பல்லவ மன்ன

னுடைய அந்த மந்திரிகளும் அந்த நாயனாருடைய திருவடிகளில் விழுந்து பணிந்துவிட்டு விரும்பி அந்த நாயனாரை அழைத்துக் கொண்டு போவதற்கு இடப வாகனத்தை ஓட்டுபவராகிய வீரட்டானேசுவரருடைய திருத்தொண்டராகிய அந்த நாயனார், "இங்கே அடியேனுக்கு உண்டாகி வரும் தீய வினைகளைப் போக்கியருளுவதற்கு அடியேங்களுடைய தலைவனாகிய வீரட்டானேசுவரன் இருக்கிறான்." என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு சம்மதித்துத் தங்கியிருந்தார்; சினம் மூண்ட போர் புரியும் அந்தப் பல்லவ வேந்தனுக்கு முன்னே சென்று அந்த அரண்மனையில் அந்த அமைச்சர்கள் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்கள்.' பாடல் வருமாறு:

> "ஆண்டஅரசருள்செய்யக்
> கேட்டவரும் அடிவணங்கி
> வேண்டியவர்க் கொண்டேக
> விடையுகைத்தார் திருத்தொண்டர்
> 'ஈண்டுவரும் வினைகளுக்கெம்
> பிரான்உளன்' என்றிசைந்திருந்தார்;
> மூண்டசினப் போர்மன்னன்
> முன்னணைந்தங் கறிவித்தார்."

ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆளாக்கக் கொண்டருளிய. அரசு-அந்தத் திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். அருள் செய்ய-அவ்வாறு நான் வரமாட்டேன் என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. க்:சந்தி. கேட்டவரும்-அதைக் கேட்ட பல்லவ மன்னனுடைய அந்த மந்திரிகளும்; ஒருமை பன்மை மயக்கம். அடி-அந்த நாயனாருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-பணிந்துவிட்டு. வேண்டி-விரும்பி. அவர்-அந்த நாயனாரை. க்:சந்தி. கொண்டு-அழைத்துக்கொண்டு. ஏக-பல்லவ மன்னனிடம் போவதற்கு. விடை-இடப வாகனத்தை. உகைத்தார்-ஓட்டுபவராகிய வீரட்டானேசுவர

ருடைய. திருத்தொண்டர்-திருத்தொண்டராகிய அந்த நாயனார். ஈண்டு-இந்தத் திருவதிகை வீரட்டானத்தில். வரும்-அடியேனுக்கு உண்டாகி வரும். வினைகளுக்கு-தீய வினைகளைப் போக்கியருளுவதற்கு. வினைகள்-துன்பங்கள். எம்-அடியேங்களுடைய. இது திருநாவுக்கரசு நாயனார் தம்மையும் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியாரையும் சேர்த்துக் கூறியது. பிரான்-தலைவனாகிய வீரட்டானேசுவரன். உளன்-இருக்கிறான்; இடைக்குறை. என்று-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. இசைந்து-சம்மதித்து. இருந்தார்-திலகவதியாருடைய திருமடத்தில் தங்கிக் கொண்டிருந்தார். மூண்டசின-கோபம் மூண்டு எழுந்த. ப்:சந்தி. போர்-யுத்தம் புரியும். மன்னன்-அந்தப் பல்லவ வேந்தனுக்கு. முன்-முன்னால். அணைந்து-சென்று. அங்கு-அந்த அரண்மனையில். அறிவித்தார்-இந்தச் செய்தியைத் தெரிவித்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 95-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தப் பல்லவ மன்னனும் அந்தச் செய்தியைக் கேட்டு விட்டுத் தன்னுடைய பக்கத்தில் அமர்ந்து கொண்டிருந்த பாய்களாகிய ஆடைகளை உடுத்துக் கொண்டிருந்த வலிமையைப் பெற்ற சமணர்களைப் பார்த்து, "அந்தத் தருமசேனனைச் செய்ய வேண்டிய காரியத்தை இனிமேல் நீங்கள் கூறுவீர்களாக" என்று கூறவே, எல்லாவற்றையும் அடங்கத் துறந்துவிட்டுத் தங்களுக்கு உறுதிப் பொருள் இன்னதென்று தெரிந்து கொள்ளாத பொலிவற்ற அறிவை உடைய சமணர்கள் சிறிதேனும் பயத்தை அடையாமல் சுண்ணாம்புக் காளவாயில் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை இடுமாறு கூறினார்கள்.' பாடல் வருமாறு:

"பல்லவனும் அதுகேட்டுப்
பாங்கிருந்த பாயுடுக்கை
வல்லமணர் தமைநோக்கி,
'மற்றவனைச் செய்வதினிச்

சொல்லும்' என அறத்துறந்து
தமக்குறுதி அறியாத
புல்லறிவோர் அஞ்சாது
நீற்றறையில் இடப்புகன்றார்.''

பல்லவனும்-அந்தப் பல்லவ மன்னனும். அதுகேட்டு-திருநாவுக்கரசு நாயனார் வரமாட்டேன் என்று திருவாய் மலர்ந்தருளிய அந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்டு. அது: ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாங்கு-தன் பக்கத்தில். இருந்த-அமர்ந்து கொண்டிருந்த. பாய்-பாய்களாகிய ஒருமை பன்மை மயக்கம். உடுக்கை-ஆடைகளை உடுத்துக் கொண்டிருந்த; ஒருமை பன்மை மயக்கம். வல்-வலிமையைப் பெற்ற. அமணர்தமை-சமணர்களை; ஒருமை பன்மை மயக்கம். தமை: இடைக்குறை. தம்:அசைநிலை. நோக்கி-பார்த்து. மற்று:அசைநிலை. அவனை-அந்தத் தரும சேனனை. ச்:சந்தி. செய்வது இனி-இனிமேல் செய்ய வேண்டிய காரியத்தை. ச்:சந்தி. சொல்லும்-நீங்கள் கூறுவீர்களாக. என-என்று கூறவே; இடைக்குறை. அற-எல்லாவற்றையும் அடங்க. த்:சந்தி. துறந்து-துறந்துவிட்டு. தமக்கு-தங்களுக்கு. உறுதி-உறுதிப் பொருள். அறியாத-இன்னதென்று தெரிந்து கொள்ளாத. புல்-பொலிவற்ற. அறிவோர்-அறிவை உடைய சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அஞ்சாது-சிறிதேனும் பயத்தை அடையாமல். நீற்றறையில்-சுண்ணாம்புக் காளவாயில். இட-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை இடுமாறு. ப்:சந்தி. புகன்றார்-கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 96-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தன்னுடைய பக்கத்தில் வந்து சேர்ந்தவர்களைப் பார்த்து, ''அவ்வாறே நீங்கள் செய்வீர்களாக'' என்று பெருகி மூண்ட சினத்தைக் கொண்ட கொடுங்கோலன் ஆகிய அந்தப் பல்லவ மன்னன் கூறியவுடன் பெருமையையும் தகுதியையும் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனாரை உருகு

கின்ற பெரிய நெருப்பினுடைய வெப்பம் நிரம்பியுள்ள சுண்ணாம்புக் காளவாய்க்கு உள்ளே அமரச் செய்து திருகும் கரிய தாள பூட்டைப் பூட்டி அவர் வெளியில் வராதவாறு பாதுகாப்புக்களை அவர்கள் செய்து அமைத்தார்கள்.' பாடல் வருமாறு:

'' அருகணைந்தார் தமைநோக்கி
'அவ்வண்ணம் செய்க'எனப்
பெருகுசினக் கொடுங்கோலான்
மொழிந்திடலும் பெருந்தகையை
உருகுபெருந் தழல்வெம்மை
நீற்றறையின் உள்ளிருத்தித்
திருகுகரும் தாட்கொளுவிச்
சேமங்கள் செய்தமைத்தார்.''

அருகு-தன்னுடைய பக்கத்தில். அணைந்தார் தமை-வந்து சேர்ந்த சமணர்களை. தமை:இடைக்குறை. தம்: அசைநிலை. நோக்கி-பார்த்து. அவ்வண்ணம்-அவ்வாறே. செய்க-அந்தத் தருமசேனனைச் சுண்ணாம்புக் காளவாயில் இடுவீர்களாக. என-என்று; இடைக்குறை. ப்:சந்தி. பெருகு-பெருகி மூண்டிருந்த. சின-கோபத்தைக் கொண்ட. க்:சந்தி. கொடுங்கோலான்-கொடுங்கோலன் ஆகிய அந்தப் பல்லவ மன்னன். மொழிந்திடலும்-கூறியவுடன். பெரும்-பெருமையையும். தகையை-தகுதியையும் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனாரை. உருகு-உருகும். பெரும்-பெரியதாக இருக்கும். தழல்-நெருப்பினுடைய. வெம்மை-வெப்பத்தைக் கொண்ட. நீற்றறையின்-சுண்ணாம்புக் காளவாயினுடைய. உள்-உள்ளே. இருத்தி-அமரச் செய்து. த்:சந்தி. திருகு-திருகிய. கரும்-கருமையான இரும்பால் ஆகிய. தாள்-பூட்டை. கொளுவி-பூட்டிவிட்டு. ச்:சந்தி. சேமங்கள்-அந்த நாயனார் வெளியில் வராதவாறு தக்க பாதுகாப்புக்களை. செய்து-புரிந்து. அமைத்தார்-அமைத்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 97-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருவதிகை வீரட்டானேசுவரரால் தடுத்து ஆட்கொள்ளப் பெற்ற திருநாவுக்கரசு நாயனார் அந்தச் சுண்ணாம்புக் காளவாய்க்குள் சேர்ந்த சமயத்தில் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவத்தை அந்தச் சந்நிதியில் செய்தருளும் நடராஜப் பெருமானாருடைய திருவடிகளினுடைய நிழலைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கொண்டு, "இங்கே உண்டாகும் துயரங்கள் பரமேசுவரனுடைய அடியவர்களுக்கு இருக்கின்றனவோ?" என்று பக்தி மூண்டு எழுந்த தம்முடைய திருவுள்ளத்தை நேரில் பார்த்துத் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய அந்த நடராஜப் பெருமானையே வணங்கிக் கொண்டு அந்தச் சுண்ணாம்புக் காளவாய்க்குள் அந்த நாயனார் அமர்ந்திருந்தார்.' பாடல் வருமாறு:

"ஆண்டஅர சதனகத்துள்
அணைந்தபொழு தம்பலத்துத்
தாண்டவம்முன் புரிந்தருளும்
தாள்நிழலைத் தலைக்கொண்டே
'ஈண்டுவரும் துயருளவோ
ஈசனடி யார்க்'கென்று
மூண்டமனம் நேர்நோக்கி
முதல்வனையே தொழுதிருந்தார்."

ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரரால் தடுத்து ஆட்கொள்ளப் பெற்ற. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். அதன் அகத்துள்-அந்தச் சுண்ணாம்புக் காளவாய்க்குள். அணைந்த-சேர்ந்த. பொழுது-சமயத்தில். அம்பலத்து-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில். த்: சந்தி. தாண்டவம்-ஆனந்தத் தாண்டவத்தை. முன்-அந்தச் சந்நிதியில். புரிந்தருளும்-செய்தரு

ளும். தாள்-நடராஜப் பெருமானாருடைய திருவடிகளின்; ஒருமை பன்மை மயக்கம். நிழலை-நீழலை. த்:சந்தி. தலை-தம்முடைய தலையின்மேல். க்:சந்தி. கொண்டு-வைத்துக் கொண்டு. ஏ:அசை நிலை. ஈண்டு-இவ்விடத்தில். ஈசன்-பரமேசுவரனுடைய. அடியார்க்கு-அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். வரும்-உண்டாகும். துயர்-துயரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உளவோ-இருக்கின்றனவோ; இடைக்குறை. என்று-என. மூண்ட-பக்தி மூண்டு எழுந்த. மனம்-தம்முடைய திருவுள்ளத்தை. நேர்-நேரில். நோக்கி-பார்த்துத் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. முதல்வனையே-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய அந்த நடராஜப் பெருமானையே. தொழுது-வணங்கியபடியே. இருந்தார்-அந்தச் சுண்ணாம்புக் காளவாய்க்குள் அந்த நாயனார் அமர்ந்திருந்தார்.

பிறகு உள்ள 98-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் அமர்ந்திருந்த வெப்பமாகிய சுண்ணாம்புக் காளவாய் மிகுதியாக உள்ள இளவேனிற் காலத்தில் தவழும் குளிர்ச்சியைப் பெற்ற தென்றற் காற்று வீசி அடைந்த குளிர்ச்சியைப் பெற்ற செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து விளங்கும் தடாகத்தைப் போல் மொய்த்துள்ள பிரகாசத்தை வீசும் வெண்மையாகிய நிலா மலர்ந்து இனிய கானத்தை எழுப்பிய யாழினுடைய இனிய ஓசையை உடையதாகி ஐயராகிய நடராஜப் பெருமானாருடைய திருவடிகளின் நிழலாகிய திருவருளாக மாறிக் குளிர்ச்சியை வழங்கியது.' பாடல் வருமாறு:

"வெய்யநீற் றறையதுதான்
வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றல்அணை
தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து
முரன்றயாழ் ஒலியினதாய்

ஐயர்திரு வடிநீழல்
அருளாகிக் குளிர்ந்ததே."

வெய்ய-அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் அமர்ந் திருந்த வெப்பமாகிய. நீற்றறையதுதான்-சுண்ணாம்புக் காளவாய். அது: பகுதிப்பொருள் விகுதி. தான்: அசை நிலை. வீங்கு-மிகுதியாக உள்ள. இளவேனிற் பருவம்-இள வேனிற் காலத்தில். தைவரு-தவழும். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. தென்றல்-தென்றற்காற்று. அணை-வீசி அடைந்த. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. கழுநீர்-செங்கழுநீர் மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தடம்-தடாகத்தை. போன்று-போல அமைந்து. மொய்-மொய்த் துள்ள. ஒளி-பிரகாசத்தை வீசும். வெண்-வெண்மை யாகிய. நிலவு-சந்திரனுடைய நிலா. அலர்ந்து-மலர்ந்து. முரன்ற-இனிய கானத்தை எழுப்பிய. யாழ்-யாழை மீட்டிய. ஒலியினதாய்-இனிய ஓசையை உடையதாகி. ஐயர்-ஐயரா கிய நடராஜப் பெருமானாருடைய. திருவடி-திருவடிகளின்; ஒருமை பன்மை மயக்கம். நீழல்-நிழலாகிய. அருள் ஆகி-திருவருளாக மாறி. க்:சந்தி. குளிர்ந்தது-குளிர்ச்சியை வழங்கியது. ஏ:ஈற்றசை நிலை.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட நிலையைக் கூறும் திருநா வுக்கரசு நாயனார் பாடியருளிய பாசுரம் வருமாறு:

" மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

பிறகு வரும் 99-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'முயற்கறை இல்லாத பிறைச் சந்திரனும் நீளமான கங்கை யாற்றின் நீரும் நிலைபெற்றுத் தங்கியிருக்கும் தலையை உடையவனும், பேசுவதற்கு இனிமையாக விளங்கு பவனும், இந்த உலகத்தில் வாழும் மக்களை அடிமைகளாகப் பெற்ற பின்னிய சடாபாரத்தைத் தன்னுடைய தலையின்

மேற் பெற்றவனாகிய நடராஜப் பெருமானும் பரமேசுவரனும் அடியேங்களுடைய தலைவனும் எல்லாவகையான உயிர்களையும் வழங்குபவனும், ஆசையில் திருப்தியை அடையாத அமுதம் போன்றவனும் ஆகிய அந்த ஆனந்தத் தாண்டவ மூர்த்தியை அவனுடைய திருவடிகளை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பணிந்து கொண்டு இனிமையாக அந்தச் சுண்ணாம்புக் காளவாய்க்குள் அமர்ந்திருந்தார்.'' பாடல் வருமாறு:

"மாசில்மதி நீடுபுனல்
மன்னிவளர் சென்னியனைப்
பேசஇனி யானைஉல
காளுடைய பிஞ்ஞகனை
ஈசனைஎம் பெருமானை
எவ்வுயிரும் தருவானை
ஆசையினா ராவமுதை
அடிவணங்கி இனிதிருந்தார்."

மாசு-முயலாகிய களங்கம். இல்-இல்லாத; கடைக் குறை. மதி-பிறைச் சந்திரனும். நீடு-நீளமாகிய. புனல்-கங்கையாற்றினுடைய நீரும். மன்னி-நிலை பெற்று. வளர்-தங்கியிருக்கும். சென்னியனை-தலையை உடையவனை. ப்: சந்தி. பேச-பேசுவதற்கு. இனியானை-இனிமையாக விளங்குபவனை. உலகு-இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்களை; [illegible]. ஆள்-அடிமைகளாக; ஒருமை பன்மை மயக்கம். உடைய-பெற்ற. பிஞ்ஞகனை-பின்னியிருக்கும் சடாபாரத்தைத் தன்னுடைய தலையின்மேற் பெற்றவனை. ஈசனை-பரமேசுவரனை. எம்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துச் சொன்னது. பெருமானை-தலைவனை. எவ்வுயிரும்-எல்லாவகையாகிய உயிர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மக்கள், விலங்குகள், பறவைகள், நீர்வாழ்வன, ஊர்வன முதலியவை. தரு-

வானை - உண்டாக்குபவனை. ஆசையில் - விருப்பத்தில். ஆரா - திருப்தியை அடையாத. அமுதை-அமிர்தத்தைப் போன்றவனை. அடி-அவனுடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-பணிந்து கொண்டே. இனிது-இனிமையாக. இருந்தார்-அந்தச் சுண்ணாம்புக் காளவாய்க்குள் அமர்ந்திருந்தார்.

பேச இனியான்: "பேசப் பெரிதும் இனியாய் நீயே." என்று திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியதைக் காண்க.

ஆரா அமுது: "எனக்கமுதம் ஆவானும்.", "அறவனை அமுதனை.", "கருகாவூர் அமுதர்.", "மருந்தன் அமுதன்.", "தேனுமாய் அமுதுமாய்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "இருங்கடல் அமுதந் தன்னை." "பத்தர்கட் கமுதாய பரத்தினை.", "பருகா அமுதமாம்.", "அருமை பயக்கும் அமிர்து.", "அற்றவர்கட் காரமுதமானாய் போற்றி.", "ஆராத இன்னமுதை.", "மன்னவர்க்கோர் அமுதம் ஆனாய்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "ஐயாற்றமுதே.", "அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே.", "அமுதா உயிர்க்கெல்லாம் உரிய நம்பி.", "கோதிலா அமுதே அருள்பெருகு கோலமே." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "தேனே தேனார் அமுதே.", "ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே.", "சிந்தனையுள் ஊற்றான உண்ணாரமுதே.", "இன்றெனக் காரமுதானாய் போற்றி.", "அரைசே போற்றி அமுதே போற்றி.", "கண்ணார் அமுதக் கடலே போற்றி.", "ஆரா அமுதே அருளே போற்றி.", "மாலமுதப் பெருங்கடலே.", "தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே.", "தேனே அமுதே சிந்தைக் கரியாய்.", "தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும் மானே", "அப்பனே எனக் கமுதனே.", "தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து.", "அத்தன் ஆனந்தன்

அமுதன்.'', ''என்னானை என்னரையன் இன்னமுது.'', ''அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை.'', ''கண்ணா ரமுதமுமாய் நின்றான்.'', ''என்னுளம் புகுந்த ஆரா அமுதாய்.'', ''தேன் வந்தமுதின் தெளிவின் ஒளி வந்த.'', ''தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்.'', ''என்னப்பன் என்பார்கட் கின்னமுதை.'', ''என்னுடையா ரமுதெங்கள் அப்பன்.'', ''மனத்தமுதாம் சங்கரனை.'', ''பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்.'', ''ஆரா அமுதின் அருட்டாளிணை பாடி.'', ''அமுதென அறிதற் கரிதென.'', ''ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே.'', ''கடலமுதே கரும்பே.'', ''அமுதே ஊறி நின்று.'', ''குறைவிலா நிறைவே கோதிலா அமுதே.'', ''அகம் நெகப்புகுந்தமுதூறும்.'', ''எப்பாலவர்க்கும் அப்பாலாம் என்னாரமுதேயோ.'', ''ஆரா அமுதே ஆசைப் பட்டேன்.'', ''தன்னைத் தந்த என்னாரமுதை.'', ''விருப்பிலேனை ஆண்டு கொண்ட என்னாரமுதை.'', ''நிறையின்னமுதை அமுதின் சுவையை.'', ''அந்தமில் அமுதே அரும் பெரும்பொருளே ஆரமுதே.'', ''உள்குவார் மனத்தின் உறுசுவை அளிக்கும் ஆரமுதே.'', ''கோதிலமுதானானை.'', ''கடல்வாய் அமுதென்கோ.'', ''பாண்டியற் காரமுதாம் ஒருவரை.'', ''அன்பினில் விளைந்த ஆரமுதே.'', ''தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவ பெருமான்.'', ''இன்னமுதாய ஆனந்த வெள்ளத்தான்.'', ''செங்கமல மலர்போல் ஆருருவாய என்னாரமுதே.'', ''போற்றி என் அமுதே என நினைந்தேத்தி.'', ''ஆரா அமுதாய் அமைந்தன்றே.'' என்று மாணிக்க வாசகரும், ''அப்பனே அம்பலத்தமுதே.'', ''அம்பலத் தமுதே என்னும்.'' என்று திருமாளிகைத் தேவரும், ''என்னுயிர்க் கமுதினை.'', ''ஐயா திருவாவடுதுறை அமுதே.'', ''தேனே அமுதே என் சித்தமே.'', ''பாலும் அமுதமும் தேனுமாய்.'', ''ஆவிக் கமுதை என் ஆர்வத்தனத்தினை.'', ''பாலும் அமுதமும்

ஒத்து நின்றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.'' என்று சேந்தனாரும், ''புவன நாயகனே அகவுயிர்க் கமுதே.'', ''கன்னலும் பாலும் தேனும் ஆரமுதம் கனியுமாய் இனிமை ஆயினையே.'', ''பாலுமாம் அமுதாம் பன்னகாபரணன்.'', ''கன்னலே தேனே அமுதமே.'', ''முக்கட் பகவனாம் அகவுயிர்க்கமுதாம்.'', ''முழு மணித் திரளமுதாங்கே தாய்தலைப்பட்டு.'', ''அன்பரானவர்கள் பருகும் ஆரமுதே.'', என்று கருவூர்த் தேவரும், ''என்னாரமுதை எங்கள் கோவை.'', ''அடியார்க்கருளும் தெளிவார் அமுதே.'' என்று கண்டராதித்தரும், ''அருவாய் உருவாய் ஆரா அமுதமாய்.'', ''பாலினை இன்னமுதை.'' என்று திருவாலியமுதனாரும், ''அப்பனை நந்தியை ஆரா அமுதினை.'', ''அமுதமதாக அழகிய மேனி....கேடிலி தானே.'' என்று திருமூலரும், ''உய்யக் கொண்ட கோதிலா அமுதே.'', ''அடியவர் தம் கண்ணா ரமுதை.'', ''கோதிலா ஆரமுதைக் கோமளக் கொம்புடன் கும்பிட்டு.'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 100-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஓர் ஏழு தினங்கள் போனதற்குப் பிறகு அறிவு இல்லாத சமணர்களை அழைத்து, ''இப்போது அந்தச் சுண்ணாம்புக் காளவாயைத் திறந்து பார்ப்பீர்களாக.'' என்று அந்தப் பல்லவ மன்னனும் கூறினான்; கருமையாக இருட்டிய இருட்டினுடைய கூட்டத்தைப் போல இருக்கும் உடம்புகளைப் பெற்ற கரிய நிறத்தைக் கொண்ட அந்தச் சமணர்கள் ஆராய்ந்து பார்க்கும் நிலைமை இல்லாதவர்கள் அந்தச் சுண்ணாம்புக் காளவாயைத் திறந்து பார்த்தார்கள்.' பாடல் வருமாறு:

'' ஓரெழுநாள் கழிந்ததற்பின்
உணர்வில்அம ணரைஅழைத்துப்,
'பாரும்இனி நீற்றறையை'
என உரைத்தான் பல்லவனும்;

காரிருண்ட குழாம்போலும்
உருவுடைய காரமணர்
தேரும்நிலை இல்லாதார்
நீற்றறையைத் திறந்தார்கள்.''

ஓரெழு-ஓரேழு. நாள்-தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். கழிந்ததற்பின்-போனதற்குப் பிறகு. உணர்வு-அறிவு. இல்-இல்லாத; கடைக்குறை. அமணரை-சமணர்களை; ஒருமை பன்மை மயக்கம். அழைத்து-தன்னிடம் வருமாறு அழைத்து. ப:சந்தி. இனி-இப்பொழுது. நீற்றறையை-தருமசேனனை இட்ட சுண்ணாம்புக் காளவாயை. பாரும்-திறந்து பாருங்கள். என-என்று; இடைக்குறை. பல்லவனும்-அந்தப் பல்லவ மன்னனும். உரைத்தான்-கூறினான். கார்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். இருண்ட-கூடிக் கொண்டு இருளை உண்டாக்கிய. குழாம்-கூட்டத்தை. போலும்-போல இருக்கும். உரு-உடம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். உடைய-பெற்ற. கார்-கரிய நிறத்தைக் கொண்ட. அமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தேரும்-ஆராய்ந்து பார்க்கும். நிலை-நிலைமை. இல்லாதார்-இல்லாதவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீற்றறையை-திருநாவுக்கரசு நாயனாரைத் தாங்கள் இட்ட அந்தச் சுண்ணாம்புக் காளவாயை. த்:சந்தி. திறந்தார்கள்-திறந்து பார்த்தார்கள்.

பிறகு உள்ள 101-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தச் சமணர்கள் அந்தச் சுண்ணாம்புக் காளவாயைத் திறந்து பார்த்தபோது திருநாவுக்கரசு நாயனார் பேரானந்த வெள்ளத்தில் முழுகிச் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திரு நடனம் புரிந்தருளும் பொன்னம்பலவாணருடைய தேன்நிரம்பிய செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளாகிய அமுதத்தை அந்த நாயனார் குடித்துத் தெளிவை அடைந்து எந்தவிதமான குறைபாடும் இல்லாதவராகி மகிழ்ச்சியைப்

பெற்று அந்தச் சுண்ணாம்புக் காளவாயில் அமர்ந்திருந்தவ ராகிய அந்த நாயனாரைப் பார்த்து, "சிறிதுகூட இவருடைய உடம்பில் குறைவு தங்கவில்லையாகும்; இது என்ன வியப்பான செயல்?" என்று அந்தச் சமணர்கள் கூறி னார்கள். பாடல் வருமாறு:

" ஆனந்த வெள்ளத்தின்
இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத்
தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி
உவந்திருந்தார் தமைக்கண்டே
'ஈனம்தங் கியதிலதாம்'
என்ன அதிசயம்!' என்றார்."

ஆனந்த வெள்ளத்தின் இடை-அவ்வாறு அந்தச் சமணர்கள் அந்தச் சுண்ணாம்புக் காளவாயைத் திறந்து பார்த்தபோது திருநாவுக்கரசு நாயனார் பேரானந்த வெள் ளத்தில். மூழ்கி-முழுகி. அம்பலவர்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் பொன்னம்பலவாணருடைய. தேன் உந்து-தேன் வழியும். மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாதத்து-திருவடிக ளாகிய; ஒருமை பன்மை மயக்கம். அமுது-அமுதத்தை. உண்டு-குடித்துவிட்டு. தெளிவு-யாதொரு மயக்கமும் இல் லாமல் தெளிவை. எய்தி-அடைந்து. ஊனந்தான்-எந்த விதமான குறைபாடும்; அசை நிலை. இலராகி-இல்லாத வராகி; இடைக்குறை. உவந்து-மகிழ்ச்சியை அடைந்து. இருந்தார் தமை-அந்தச் சுண்ணாம்புக் காளவாயில் அமர்ந் திருந்த அந்த நாயனாரை. தமை: இடைக்குறை. தம்: அசை நிலை. கண்டு-பார்த்துவிட்டு. ஏ:அசை நிலை. ஈனம்-சிறிதுகூட இவருடைய உடம்பில் குறைவு. தங்கியது-தங்கியிருப்பது. இலதாம்-இல்லாததாகும்; இடைக்குறை

என்ன-இது எத்தகைய. அதிசயம்-வியப்பான செயல். என்றார்-என்று அந்தச் சமணர்கள் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்துவரும் 102-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' "இது வியப்பு அல்ல; அந்தத் தருமசேனர் முன்பு தான் சேர்ந்திருந்த சமணசமயத்தில் புரிந்த சாதனையினால் இந்த மந்திரங்களை ஓதி உயிர் போகாமல் பிழைத்து இந்தச் சுண்ணாம்புக் காளவாயில் அமர்ந்திருந்தார்." என்று அந்தச் சமணர்கள் தங்களுடைய மன்னனாகிய பல்லவனுக்குக் கூறிவிட்டு, "நம்முடைய அறிவினால் ஆராய்ந்து பார்த்து இனிமேல் இந்தத் தருமசேனருக்கு வன்மையான பாம்பினுடைய நஞ்சை உண்ணுமாறு செய்வதே" என முதிர்ச்சியைப் பெற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்திவரும் பாதகச் செயல்களைச் செய்பவர்களாகிய அந்தச் சமணர்கள் தங்களுடைய துர்நாற்றம் அடிக்கும் வாய்களால் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

" 'அதிசயம்அன் றிது;முன்னை
அமணசமயச் சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தான்'
எனவேந்தற் குரைசெய்து,
'மதிசெய்வ தினிக்கொடிய
வல்விடம்ஊட் டுவ'தென்று
முதிரவரும் பாதகத்தோர்
முடைவாயால் மொழிந்தார்கள். "

இது-இவ்வாறு தருமசேனன் உயிரோடு இருப்பதாகிய இந்தச் செயல். அதிசயம்-வியப்பு. அன்று-அல்ல. முன்னை-இந்தத் தருமசேனன் முன்பு தான் சேர்ந்திருந்த. அமண-சமண. சமய-சமயத்தில் புரிந்த. ச்:சந்தி. சாதகத்தால்-மந்திர சாதனையினால். இது-இந்த மந்திரங்களை; ஒருமை பன்மை மயக்கம். செய்து-உச்சரித்தலைப் புரிந்துகொண்டு. பிழைத்து-தன்னுடைய உயிர் போகாமல் பிழைத்து. இருந்தான்-

இந்தச் சுண்ணாம்புக் காளவாயில் அமர்ந்திருந்தான். என-என்று; இடைக்குறை. வேந்தற்கு-தங்களுடைய அரச ணாகிய பல்லவனிடம்; உருபு மயக்கம். உரை செய்து-கூறி விட்டு. மதி-நம்முடைய அறிவாற்றலினால் ஆராய்ந்து. செய்வது-செய்ய வேண்டிய செயல். இனி-இனிமேல். க்:சந்தி. கொடிய-கொடுமையாக உள்ள. வல்-வலிமை யைப் பெற்ற; 'என்றது கொல்லும் வலிமையைப் பெற்ற' என்றபடி. விடம்-பாம்பினுடைய நஞ்சை. ஊட்டுவது-குடிக்குமாறு செய்வதே. என்று-என. முதிரவரும் பாதகத் தோர்-பாதகமான செயல்களைச் செய்து அவற்றில் முதிர்ச்சி யைப் பெற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டுவரும் அந்தப் பாதகர்களாகிய சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். முடை-துர்நாற்றம் வீசும். வாயால்-தங்களுடைய வாய்களால்; ஒருமை பன்மை மயக்கம். மொழிந்தார்கள்-அந்தப் பல்லவ மன்னனிடம் கூறினார்கள்.

அடுத்து வரும் 103-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தப் பாதகர்களாகிய சமணர்கள் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் கொடுமையாகிய சமணர்களுடைய சார்பினால் கெடும் அந்தப் பல்லவ வேந் தன் ஓங்கி எழும் பெரிய மயக்கத்தால், ''அந்தத் தரும சேனனுக்குப் பாம்பின் விடத்தை அளித்துக் குடிக்கச் செய் வீர்களாக.'' என்று அந்தச் சமணர்களிடம் கூறச் சற்றும் தயங்காதவர்களாகிய அந்தச் சமணர்கள் திருநாவுக்கரசு நாயனாரை அந்தக் கொடிய நஞ்சினுடைய இயல்பைப் பெற்ற பாற்சோற்றை அமுது செய்யுமாறு புரிந்தார்கள்.' பாடல் வருமாறு:

'' ஆங்கதுகேட் டலும்கொடிய
அமண்சார்பால் கெடுமன்னன்
ஓங்குபெரு மையலினால்,
'நஞ்சூட்டும்' எனஉரைப்பத்

தேங்காதார் திருநாவுக்
கரயரைஅத் தீயவிடப்
பாங்குடைய பாலடிசில்
அமுதுசெயப் பண்ணினார்."

ஆங்கு-அவ்வாறு. அது-அந்தப் பாதகர்கள் ஆகிய சமணர்கள் கூறிய அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்டலும்-கேட்டவுடன். கொடிய-கொடுமை யாகிய. அமண்-சமணர்களினுடைய; திணை மயக்கம். சார்பால்-சார்பைச் சார்ந்திருப்பதால். சார்பு-கட்சி. கெடு-கெட்டுப் போன. மன்னன்-அந்தப் பல்லவ வேந்தன். ஓங்கு-தன்னுடைய மனத்தில் ஓங்கி எழுந்த. பெரு-பெரிய. மைய லினால்-மயக்கத்தினால். நஞ்சு-அந்தத் தருமசேனனுக்குப் பாம்பின் விடத்தை. ஊட்டும்-கொடுத்துக் குடிக்கச் செய்வீர் களாக. என-என்று; இடைக்குறை. உரைப்ப-அந்தச் சமணர்களினிடம் கூற. த்:சந்தி. தேங்காதார்-சற்றேனும் தயங்காதவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். திருநாவுக்கரயரை-திருநாவுக்கரசு நாயனாரை, அத்தீய-அந்தக் கொடிய. விடப் பாங்கு-பாம்பின் நஞ்சினு டைய பக்குவத்தை; இயல்பை. உடைய-பெற்றதாகிய. பால் அடிசில்-பாற்சோற்றை. அமுதுசெய-திருநாவுக்கரசு நாயனார் அமுது செய்யுமாறு. செய: இடைக்குறை. உண்ணுமாறு என்பது கருத்து. ப்:சந்தி. பண்ணினார்-செய்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 104-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"அடியேங்களுடைய தலைவனாகிய வீரட்டானேசுவர னுடைய அடியவர்களுக்குப் பாம்பின் விடமும் அமுதத்தைப் போல ஆகிவிடும்" என எண்ணி வஞ்சகச் செயல்களைப் புரிவதில் மிக்க ஆற்றலைப் பெற்ற மனங்களைப் பெற்ற வர்களாகிய அந்தச் சமணர்கள் புரிந்த வஞ்சகமாகிய செய லாகும் விதத்தைத் தெரிந்து கொண்டு சிவந்த சடாபாரத் தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய அந்த

வீரட்டானேசுவரருடைய சீர்த்தியை விளங்குமாறு புரியும் வலிமையைப் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தச் சமணர்கள் தமக்கு அளித்த கொடிய பாம்பினுடைய நஞ்சினால் கொடியவர்களாக இருக்கும் சமணர்கள் தமக்குப் படைக்கச் செய்த பாற் சோற்றை உண்டுவிட்டு ஒரு துன்பத்தையும் அடையாமல் அமர்ந்திருந்தார்.' பாடல் வருமாறு:

" 'நஞ்சும்அமு தாம்எங்கள்
நாதன்அடி யார்க்'கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார்
வஞ்சனையாம் படிஅறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்கும்
திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த
பாலடிசில் மிசைந்திருந்தார். "

எங்கள்-அடியேங்களுடைய; என்றது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. நாதன்-தலைவனாகிய வீரட்டானேசுவரனுடைய. அடியார்க்கு-அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். நஞ்சும்-பாம்பின் விடமும். அமுதுஆம்-அமுதத்தைப் போல ஆகிவிடும். என்று-என எண்ணி. வஞ்சம்-வஞ்சகச் செயல்களைப் புரிவதில்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். மிகு-மிக்க ஆற்றலைப் பெற்ற. நெஞ்சு-மனங்களை; ஒருமை பன்மை மயக்கம். உடையார்-பெற்றவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வஞ்சனை-புரிந்த வஞ்சகம். ஆம்-ஆகும். படி-விதத்தை. அறிந்து-திருநாவுக்கரசு நாயனார் தெரிந்து கொண்டு. ஏ: அசைநிலை. செம்-சிவப்பாக இருக்கும். சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய அந்த வீரட்டானேசுவரருடைய. சீர்-சீர்த்தியை. விளக்கும்-விளங்குமாறு புரியும். திறல்-வலிமையை; ஆற்றலை. உடையார்-பெற்றவராகிய அந்தத்

திருநாவுக்கரசு நாயனார். தீ-கொடிய; 'நெருப்பைப் போல வெப்பமாக இருக்கும்' எனலும் ஆம். விடத்தால்-பாம்பின் நஞ்சினால். வெம்-கொடியவர்களாக இருக்கும்; திணை மயக்கம். சமணர்-அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். இடுவித்த-படைக்கச் செய்த. பாலடிசில்-பாற் சோற்றை; பாம்பின் விடத்தைக் கலந்த பாற்சோற்றை. மிசைந்து-அமுது செய்து விட்டு. இருந்தார்-ஒரு துன்பத்தையும் அடையாமல் அமர்ந்திருந்தார்.

அடுத்து வரும் 105-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: 'விபூதியைப் பூசிக் கொள்ளும் திருமேனியைப் பெற்ற பரிசுத்தராகிய வீரட்டானேசுவரருக்கு எல்லா உலகங்களில் வாழும் உயிர்களை இறந்து போகும்படி செய்யும் துயரம் போகும் பொருட்டு முன்பு திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த ஆலகால நஞ்சு அமுதத்தைப் போல ஆகிவிடுமானால், தம்முடைய திருவுருவம் யாருக்கும் தெரிந்து கொள்வதற்கு அருமையாகிய பசுக்களாகிய உயிர்களுக்குப் பதியாராகிய வீரட்டானேசுவரருடைய அடியவர்களுக்குப் பாம்பின் விடம் அமுதத்தைப் போல் ஆவது ஒரு வியப்பாகுமோ?' பாடல் வருமாறு:

"பொடியார்க்கும் திருமேனிப்
புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர்நீங்க
முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம்
ஆவதுதான் அற்புதமோ?"

இந்தப் பாடலில் வேற்றுப் பொருள் வைப்பணி வந்தது. பொடி-விபூதியை. ஆர்க்கும்-முழுவதும் பூசிக் கொள்ளும். திருமேனி-திருமேனியைப் பெற்ற. ப்:சந்தி. புனிதர்க்கு-பரிசுத்தராகிய வீரட்டானேசுவரருக்கு. ப்:சந்தி. புவனங்

கள்-எல்லா உலகங்களிலும் வாழும் உயிர்களை; இடஆகு பெயர். முடிவு-இறப்பைப் பெறுமாறு. ஆக்கும்-செய்யும். துயர்-துயரம். நீங்க-போகும் பொருட்டு. முன்னை-முன் ஒரு காலத்தில் திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த. விடம்-ஆலகால நஞ்சு. அமுது ஆனால்-அமுதத் தைப் போல ஆகிவிடுமானால். படி-தம்முடைய திருவுருவம். யார்க்கும்-எந்த மக்களுக்கும் தேவர்களுக்கும். அறிவரிய-தெரிந்து கொள்வதற்கு அருமையாகிய. பசு-பசுக்களாகிய உயிர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். பதியார் தம் முடைய-தலைவராகிய வீரட்டானேசுவரருடைய. தம்: அசைநிலை. அடியார்க்கு-அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். நஞ்சு-பாம்பின் விடம். அமுதம் ஆவதுதான்-அமுதத்தைப் போல ஆவது.தான்: அசைநிலை. அற்புதமோ-ஒரு வியப்பு ஆகுமோ. ஆகாது என்பது கருத்து.

பின்பு உள்ள 106-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தச் சமணர்கள் தமக்கு அளித்த அந்தப் பாம்பின் நஞ்சை வீரட்டானேசுவரர் தடுத்துஆட்கொண்ட திருநாவுக் கரசு நாயனார் திருவமுது செய்தருளித் தங்களுக்கு முன்னால் அமர்ந்து கொண்டிருக்க, ''நாம் அளித்த கொடிய பாம்பின் நஞ்சும் இவனுக்கு அமுதத்தைப் போல ஆகிவிட்டது'' என்று எண்ணி அந்தச் சமணர்கள் அச்சத்தை மேற்கொண்டு, ''இந்தத் திருவதிகை வீரட்டானத்தில் இந்தத் தருமசேனன் உயிர் போகாமல் பிழைத்திருப்பவனானால் நமக்கு எல்லாம் முடிவு வந்துவிட்டது'' என்று பகைவர்கள் போர் புரியும் போர்க்களத்தில் போராகிய செய்கையைச் செய்யும் தங்களுடைய மன்னனாகிய அந்தப் பல்லவனுக்கு அந்தச் சமணர்கள் அவனுடைய அரண்மனைக்குச் சென்று கூறுபவர் களானார்கள்.' பாடல் வருமாறு:

''அவ்விடத்தை ஆண்டஅர
சமுதுசெய்து முன்னிருப்ப

'வெவ்விடமும் அமுதாயிற்'
றெனஅமணர் வெருக்கொண்டே
'இவ்விடத்தில் இவன்பிழைக்கில்
எமக்கெல்லாம் இறுதி' எனத்
தெவ்விடத்துச் செயல்புரியும்
காவலற்குச் செப்புவார்.''

அவ்விடத்தை-அந்தச் சமணர்கள் தமக்கு அளித்த அந்தப் பாம்பின் நஞ்சை. ஆண்ட-வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். அமுதுசெய்து-திருவமுது செய்தருளிவிட்டு. முன்-தங்களுக்கு முன்னால். இருப்ப-அமர்ந்து கொண்டிருக்க. வெவ்-நாம் இவனுக்கு அளித்த கொடிய. விடமும்-பாம்பின் நஞ்சும். அமுது ஆயிற்று-அமுதத்தைப்போல ஆகிவிட்டது. என-என்று எண்ணி; இடைக்குறை. அமணர் - அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வெருக்கொண்டு-அச்சத்தை மேற்கொண்டு. ஏ:அசைநிலை. இவ்விடத்தில்-இந்தத் திருவதிகை வீரட்டானத்தில். இவன்-இந்தத் தரும சேனன். பிழைக்கில்-தன்னுடைய உயிர்போகாமல் பிழைத் திருப்பவனானால்; திணை மயக்கம். எமக்கு-சமணர்களாகிய நமக்கு, எல்லாம் இறுதி-எல்லாம் முடிவு வந்து விட்டது. என-என்று; இடைக்குறை. த்:சந்தி. தெவ்விடத்து-பகைவர்கள் போர் புரியும் போர்க்களத்தில். தெவ்:ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செயல்-போராகிய செய்கையை. புரியும்-செய்யும். காவலற்கு-தங்களுடைய மன்னனாகிய அந்தப் பல்லவனுக்கு. ச்:சந்தி. செப்புவார்-அவனுடைய அரண் மனைக்குச் சென்று பின் வருமாறு கூறுப்வர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 107-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'''நாங்கள் அந்தத் தருமசேனனுக்குப் பாம்பின் விடத்தைக் கலந்து பாற்சோற்றை உண்ணுமாறு செய்தவுடன் நம்முடைய சமண சமயத்தில் பாம்பின் நஞ்சைப் போக்கும்

பற்றுக் கோடாகிய தன்மையைப் பெற்ற மந்திரங்களால் அந்த நஞ்சைத் தன்னைக் கொல்லாத வண்ணம் அவன் தடுத்து விட்டான்; இறந்து போகும்விதம் அந்தத் தரும சேனனுக்கு இல்லாவிட்டால் எங்களுடைய உயிர்களும் உன்னுடைய நீதி முறையும் ஒழிந்து போவது உறுதி.'' என்று சூழ்ந்து செய்யும் கெட்ட செயல்களினுடைய துறையில் நின்று கொண்டிருந்த அந்தச் சமணர்கள் அந்தப் பல்லவ மன்னனிடம் இயம்பினார்கள்.' பாடல் வருமாறு:

'' 'நஞ்சுகலந் தூட்டிடவும்
நம்சமயத் தினில்விடம்தீர்
தஞ்சமுடை மந்திரத்தால்
சாதியா வகைதடுத்தான்;
எஞ்சும்வகை அவற்கிலதேல்
எம்முயிரும் நின்முறையும்
துஞ்சுவது திடம்.' என்றார்
சூழ்வினையின் துறைநின்றார். ''

நஞ்சு-நாங்கள் அந்தத் தருமசேனனுக்குப் பாம்பின் விடத்தை. கலந்து-பற்சோற்றோடு கலந்து. ஊட்டிடவும்-அவனை உண்ணுமாறு செய்தவுடன். நம்-நம்முடைய. சமயத்தினில்-சமண சமயத்தில். விடம்-பாம்பின் நஞ்சை. தீர்-போக்கும். தஞ்சம்-பற்றுக் கோடாகிய தன்மையை. உடை-பெற்ற. மந்திரத்தால் - மந்திரங்களால்; ஒருமை பன்மை மயக்கம். சாதியா-அந்த நஞ்சைத் தன்னைக் கொல்லாத. வகை-வண்ணம். தடுத்தான்-அந்தத் தரும சேனன் தடுத்து விட்டான். எஞ்சும்-இறந்துபோகும். வகை-விதம். அவற்கு-அந்தத் தரும சேனனுக்கு. இலதேல்-இல்லாவிட்டால்; இடைக்குறை. எம்-எங்களுடைய. உயிரும்-உயிர்களும்; ஒருமை பன்மை மயக்கம். நின்-உன்னுடைய. முறையும்-நியாய முறையும். துஞ்சுவது-ஒழிந்து போவது. திடம்-உறுதி. சூழ்-சூழ்ச்சி செய்து புரியும். வினையின்-கொடிய செயல்களினுடைய; ஒருமை பன்மை

மயக்கம். துறை-துறையில். நின்றார்-நிலைபெற்று இருந்த அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். என்றார்-என்று அந்தப் பல்லவ மன்னனிடம் இயம்பினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 108-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு: 'அந்தச் சமணர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அறிவு கெட்ட வேந்தனாகிய பல்லவனும், "ஒறுத்து அந்தத் தருமசேனனை இனிமேல் போக்கும் வகை எந்த வழியால்" என்று கேட்க அங்கே வந்திருந்த அந்தச் சமணர்களும், "மந்திரங்களாகிய சாதனையை நாங்கள் செய்து அவனை இறந்து போகுமாறு செய்வதற்கு உன்னுடைய வெற்றியைப் பெற்ற வலிமையைக் கொண்ட பட்டத்து ஆண் யானைக்கு எதிரில் அந்தத் தருமசேனனை விடுவதே வழி" என்று அந்தச் சமணர்கள் சொன்னார்கள்.' பாடல் வருமாறு:

" மற்றவர்தம் மொழிகேட்டு
மதிகெட்ட மன்னவனும்
'செற்றவனை இனிக்கடியும்
திறம்எவ்வா' றெனச்செப்ப
உற்றவரும், 'மந்திரசா
தகம்நாங்கள் ஒழித்திடநின்
கொற்றவயக் களிற்றெதிரே
விடுவ'தெனக் கூறினார். "

மற்று: அசைநிலை. அவர்தம்-அந்தச் சமணர்கள் கூறிய; ஒருமை பன்மை மயக்கம். தம்:அசை நிலை. மொழி-வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்டு-கேட்டு விட்டு. மதி-அறிவு. கெட்ட-கெட்டுப் போன. மன்னவனும்-வேந்தனாகிய அந்தப் பல்லவனும். செற்று-ஒறுத்து. அவனை-அந்தத் தருமசேனனை. இனி-இனிமேல். க்:சந்தி. கடியும்-போக்கும். திறம்-வகை. எவ்வாறு-எந்த வழியால். என்-என்று; இடைக்குறை. ச்:சந்தி. செப்ப-கேட்க.

உற்றவரும்-அங்கே வந்திருந்த அந்தச் சமணர்களும்; ஒருமை பன்மை மயக்கம். மந்திர-மந்திரங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். சாதகம்-சாதனையை. நாங்கள்-சமணர்களாகிய நாங்கள். ஒழித்திட-செய்து அவனை இறந்து போகுமாறு செய்வதற்கு. நின்-உன்னுடைய. கொற்ற-வெற்றியைப் பெற்ற. வய-வலிமையைக் கொண்ட. க்:சந்தி. களிற்று-பட்டத்து ஆண்யானைக்கு. எதிர்-எதிரில். ஏ: அசைநிலை. விடுவது-அந்தத் தருமசேனனை விடுவதே வழி. என-என்று; இடைக்குறை. க்:சந்தி. கூறினார் - அந்தச் சமணர்கள் சொன்னார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 109-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'மகா பாவிகளும், இழிந்தவர்களும் ஆகிய அந்தச் சமணர்கள் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் என்னும் அழகிய அடியவராக விளங்கும் பிரம கபாலத்தை ஏந்தியவராகிய வீரட்டானேசுவரருடைய அடியவராகிய திருநாவுக்கரசு நாயனார் இடத்திற்கு, "கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுகவிடும் பட்டத்து ஆண்யானையை நீங்கள் விடுவீர்களாக." என்று கூற, இந்த உலகத்தைப் பரிபாலிப்பவர்களாகிய மன்னர்களுடைய செயலை மேற் கொண்ட இழிந்த செயல்களைச் செய்யும் அந்தப் பல்லவ மன்னன், அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு மேலே சினத்தைக் கொண்ட வியப்பை உடைய தான கொலை புரியும் அந்தப் பட்டத்து ஆண்யானையை விடுமாறு கூறினான்.' பாடல் வருமாறு:

"மாபாவிக் கடையமணர்
வாகீசத் திருவடியாம்
காபாலி அடியவர்பால்,
'கடக்களிற்றை விடு'கென்னப்
பூபாலர் செயல்மேற்கொள்
புலைத்தொழிலோன் அவர்தம்மேல்

கோபாதி சயமான
கொலைக்களிற்றை விடச்சொன்னான்.''

மாபாவி-மகாபாவிகளும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கடை-இழிந்தவர்களும்; ஆகு பெயர். அமணர்—ஆகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வாகீச-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் என்னும். த்:சந்தி. திரு-அழகிய. அடியாம்-அடியவராக விளங்கும். காபாலி-பிரம கபாலத்தை ஏந்தியவராகிய வீரட்டானேசுவரருடைய. அடியவர்பால்-அடியவராகிய திருநாவுக்கரசு நாயனாரிடத்திற்கு. கட-கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுகவிடும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. களிற்றை-பட்டத்து ஆண் யானையை. விடுக-நீங்கள் விடுவீர்களாக. என்ன-என்று. விடுகென்ன-விடுக என்ன; தொகுத்தல் விகாரம். ப்:சந்தி. பூபாலர்-இந்த உலகத்தைப் பரிபாலிப்பவர்களாகிய மன்னர்கள்; ஒருமை பன்மை மயக்கம். செயல்-செய்யும் ஆட்சி புரிதலாகிய செயலை. மேற்கொள்-மேற்கொண்ட. புலை—இழிவாகிய. த்:சந்தி. தொழிலோன்-செயல்களைச் செய்யும் அந்தப் பல்லவ மன்னன், தொழில்: ஒருமை பன்மை மயக்கம். அவர் தம்மேல்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு மேலே. தம்:அசைநிலை. கோப-சினத்தைக் கொண்ட. அதிசயமான-வியப்பை உடையதான; ஆகுபெயர். கொலை-கொலையைப் புரியும். க்:சந்தி. களிற்றை—தன்னுடைய பட்டத்து ஆண் யானையை. விட-விடுமாறு. ச்:சந்தி. சொன்னான்-கட்டளையிட்டான்.

அடுத்து உள்ள 110-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னைக் கட்டியிருந்த கொட்டிலைக் குத்தி எறிந்து விட்டு ஒரு மலை என்று கூறுமாறு அந்த இடத்திலிருந்து வெளியில் ஓடி வந்து அங்கே இருந்த மாடத்தைத் தள்ளி விட்டு, மண்டபங்களைத் தன்னுடைய துதிக்கையினால்

எடுத்துக் கீழே மோதி உடைத்துவிட்டு, தன்னுடைய கால்களை எடுத்து வைத்ததனால் குத்துக்கோற்காரர்களினுடைய தலைகளை உதைத்துவிட்டுக் கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுகவிடும் ஆண் யானையினுடைய வேடத்தோடு வரும் யமனைக் காட்டிலும் மிகுதியாக உள்ள ஆற்றலைப் பெற்ற வெற்றியைக் கொண்ட அந்தப் பட்டத்து யானை.' பாடல் வருமாறு:

"கூடத்தைக் குத்திஒரு
  குன்றமெனப் புறப்பட்டு
மாடத்தை மறித்திட்டு
  மண்டபங்கள் எடுத்தெற்றித்
தாடத்திற் பரிக்காரர்
  தலைஇடறிக் கடக்களிற்றின்
வேடத்தால் வரும்கூற்றின்
  மிக்கதொரு விறல்வேழம்."

இந்தப் பாடல் குளகம். கூடத்தை-தன்னைக் கட்டியிருந்த கொட்டிலை. க்:சந்தி. குத்தி-தன்னுடைய தந்தங்களால் குத்தி எறிந்துவிட்டு. ஒரு குன்றம்-ஒரு மலை. என-என்று கூறுமாறு; இடைக்குறை. ப்:சந்தி. புறப்பட்டு-அந்தக் கொட்டிலிலிருந்து வெளியில் ஓடி வந்து. மாடத்தை-அந்த வீதியில் உயரமாக நின்ற மாடத்தை. மறித்தட்டு-தள்ளிவிட்டு. மண்டபங்கள்-அந்த வீதியில் உயரமாக நின்ற மண்டபங்களை. எடுத்து-தன்னுடைய துதிக்கையால் எடுத்து. எற்றி-கீழே மோதி உடைத்து. த்:சந்தி. தாடத்தில்-தன்னுடைய கால்களை எடுத்து வைத்ததனால்; உருபு மயக்கம். பரிக்காரர்-குத்துக்கோற்காரர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தலை-தலைகளை; ஒருமை பன்மை மயக்கம். இடறி-உதைத்துவிட்டு. க்:சந்தி. கட-கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுகவிடும்;

-ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. களிற்றின்-ஆண் யானை யினுடைய. வேடத்தால்-வேடத்தோடு; உருபு மயக்கம். வரும்-ஓடிவரும். கூற்றின்-யமனைக் காட்டிலும். மிக்கது ஒரு-மிகுதியாக உள்ள ஆற்றலைப் பெற்றதாகிய ஒரு. விறல்-வெற்றியைக் கொண்ட. வேழம்-பல்லவ மன்னனுடைய அந்தப் பட்டத்து யானை.

பிறகு உள்ள 111-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தப் பட்டத்து யானை தன்னுடைய கால்களில் கட்டிய கயிறுகளும் சங்கிலியினுடைய தொடரும் அறுந்து போகுமாறு செய்து, தன்னைக் கட்டியிருந்த கட்டுத்தறியை முறித்து விட்டு, தனக்கு மேலே சுற்றிப் பறக்கின்ற பறவைகளின் கூட்டம் அஞ்சுமாறு அந்தக் கட்டுத் தறியி னுடைய துண்டங்களைத் தன்னுடைய கால்களால் தள்ளி விலக்கிவிட்டு ஊஞ்சலைப் போல ஆடும் தன்னுடைய துதிக்கை எதிரில் சுற்றி வர மிகுதியான சினத்தை மேற் கொண்டு குதிரைகளைக் கலங்குமாறு செய்து, நறுமணம் கமழும் கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களும் மழை பொழிவதைப் போல தனக்கு முன்னால் பொழிய அந்த மதங்களை ஒழுகவிடும் மலையைப் போன்ற யானை திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில் ஓடி வரும்.' பாடல் வருமாறு:

"பாசத்தொடை நிகளத்தொடர்
பறியத்தறி முறியா
மீசுற்றிய பறவைக்குலம்
வெருவத்து ணிவிலகா
ஊசற்கரம் எதிர்சுற்றிட
உரறிப்பரி உழறா
வாசக்கட மழைமுற்பட
மதவெற்பெதிர் வருமால்."

பாச-அந்தப் பட்டத்து யானை தன்னுடைய கால்களில் கட்டியிருந்த கயிறுகளினுடைய;ஒருமை பன்மை மயக்கம்.

த்:சந்தி. தொடை-தொடர். நிகற-சங்கிலியினுடைய. த்:சந்தி. தொடர்-தொடரும். பறிய-அறுந்து போகுமாறு. த்:சந்தி. தறி-தன்னைக் கட்டியிருந்த கட்டுத் தறியை. முறியா-முறித்துவிட்டு. மீ-தனக்கு மேலே. சுற்றிய-சுற்றிக் கொண்டு பறந்த. பறவை-பறவைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குலம்-கூட்டம். வெருவ-அஞ்சுமாறு. த்:சந்தி. துணி-அந்தக் கட்டுத்தறியினுடைய துண்டங்களை; ஒருமை பன்மை மயக்கம். விலகா-தன்னுடைய கால்களால் தள்ளி விலக்கிவிட்டு. ஊசல்-ஊசலைப் போல ஆடும் கரம்-தன்னுடைய துதிக்கை. எதிர்-தனக்கு எதிரில். சுற்றிட-சுற்றிவர. உரறி-மிகுதியாகிய சினத்தை மேற்கொண்டு. ப்:சந்தி. பரி-குதிரைகளை; ஒருமை பன்மை மயக்கம். உழறா-கலங்குமாறு செய்து. வாச-வேங்கை மலரைப் போல நறுமணம் கமழும். க்:சந்தி. கட-கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்கள்; ஒருமை பன்மை மயக்கம். "விலக்கரும் கரிமதம் வேங்கை நாறுவ" என வருதலைக் காண்க. மழை-மழை பொழிவதைப் போல. முற்பட-தனக்கு முன்னால் பொழிய. மத-அந்த மதங்களை ஒழுக விடும்; ஒருமை பன்மை மயக்கம். வெற்பு-மலையைப் போன்ற யானை; உவம ஆகுபெயர். எதிர்-திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில். வரும்-ஓடிவரும். ஆல்:ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 112-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு ஓடி வந்த அந்த ஆண் யானை ஆகாயத்தில் இடி உண்டாகி எழும் ஒலியைப் போலத் திக்கு யானைகள் அச்சத்தை அடையுமாறு தன்னுடைய அடிகளின் கீழ் தரை புகுந்து நெளிந்திருக்கத் தான் ஓடி வரும் காற்றினுடைய நடையைப் போன்ற நடையினுடைய வேகத்தினால் விரைவில் அடைந்து பக்கத்தில் உள்ள மக்களை மோதி அடிக்கும்

செயலினால் கிளர்ச்சியைப் பெற்று எழும் சமுத்திரத்தில் எல்லாப் பொருள்களும் விழும் கடையுகத்தினுடைய இறுதியைப் போல ஊழித்தீ என்று கூறுமாறு முன்னால் கோபம் முடுகி மூண்டு அந்த யானை வேகமாகத் திருநாவுக்கரசு நாயனாரை நோக்கி ஓடிவந்தது.' பாடல் வருமாறு:

"இடியுற்றெழும் ஒலியில்திசை
இபம்உட்கிட அடியில்
படிபுக்குற நெளியப்படர்
பவனக்கதி விசையில்
கடிதுற்றடு செயலிற்கிளர்
கடலிற்படு கடையின்
முடிவிற்கனல் எனமுற்சினம்
முடுகிக்கடு கியதே."

இடி-அவ்வாறு ஓடி வந்த அந்த ஆண் யானை ஆகாயத்தில் இடி. உற்று-உண்டாகி. எழும் ஒலியில்-எழும் சத்தத்தைப் போல. திசை-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வட கிழக்கு, வட மேற்கு, தென்கிழக்கு, தென் மேற்கு என்ற எட்டுத் திசைகளிலும் நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். இபம்-யானைகள்; ஒருமை பன்மை மயக்கம். உட்கிட-அச்சத்தை அடையுமாறு. அடியில்-தன்னுடைய அடிகளின் கீழ்; ஒருமை பன்மை மயக்கம். படி-தரையில் உள்ள மண்; ஆகுபெயர். புக்குற-புகுந்தமையால். நெளிய-அந்த யானை வளைய. ப்:சந்தி. படர்-தான் ஓடி வரும். பவன-பிரசண்டக் காற்றினுடைய நடையைப் போன்ற. க்:சந்தி கதி-நடையினுடைய. விசையில் வேகத்தினால்; உருபு மயக்கம். கடிது-விரைவில் ஓடி. உற்று-சென்று. அடு-பக்கத்தில் நிற்கும் மக்களை மோதி அடிக்கும். செயலில்-செயலினால்; உருபு மயக்கம். கிளர்-கிளர்ச்சியைப் பெற்று எழும். கடலில்-சமுத்திரத்தில். படு-எல்லாப் பொருள்களும் விழும். கடையின்-கடையுகத்தினுடைய. முடிவில்-இறுதியைப் போல. கனல்-ஊழித் தீ. என-என்று கூறுமாறு; இடைக்.

குறை. முன்-முன்னால். சினம்-கோபம். முடுகி-முடுகி மூண்டு. க்:சந்தி. கடுகியது-அந்த ஆண் யானை வேகமாகத் திருநாவுக்கரசு நாயனாரை நோக்கி ஓடி வந்தது. ஏ:ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 113-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: 'அந்த ஆண் யானை தன்னுடைய இரண்டு பக்கங்களிலும் வந்து சேர்ந்த குதிரைகளினுடைய கூட்டம் இறந்து போகுமாறு தன்னுடைய நெருங்கியிருந்த வயிரத்தைப்போல முற்றியிருந்த தந்தங்களைக் கொண்டு இரண்டு பிளவுகளாகச் செய்து அவ்வாறு செய்ததனால் அற்ற குதிரைகளின் உடம்புகளினுடைய துண்டங்களைத் தன்னுடைய துதிக்கையில் எடுத்துக் கொண்டு சென்று, முறியுமாறு அடித்து நொறுக்கிய சுற்றுச் சுவர்களும் திண்ணைகளும் சரிந்து விழுமாறு பக்கத்தில் இருந்த படைகளை மோதி அழித்துவிட்டு அசைந்து கொண்டு அகலமாக உள்ள வெளியிடத்தை அந்த மோதும் துதிக்கையைக் கொண்ட சிறப்பை உடைய மலையைப் போன்ற ஆண் யானை அடைந்தது.' பாடல் வருமாறு:

"மாடுற்றணை இவுளிக்குலம்
மறியச்செறி வயிரக்
கோடுற்றிரு பிளவிட்டறு
குறைகைக்கொடு முறியச்
சாடுற்றிடு மதில்தெற்றிகள்
சரியப்புடை அணிசெற்
றாடுற்றகல் வெளியுற்றதவ்
வடர்கைக்குல வரையே."

மாடு-அந்த ஆண் யானை தன்னுடைய இரண்டு பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். உற்று-வந்து. அணை-சேர்ந்த. இவுளி-குதிரைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குலம்-கூட்டம். மறிய-இறந்து போகுமாறு. ச்:சந்தி. செறி-நெருங்கியிருந்த. வயிர-வயிரத்தைப் போல முற்றியிருந்த. க்:சந்தி. கோடு-தந்தங்களை;

ஒருமை பன்மை மயக்கம். உற்று-கொண்டு. இரு-இரண்டு. பிளவிட்டு-பிளவுகளாகச் செய்து; ஒருமை பன்மை மயக்கம். அறு-அவ்வாறு செய்ததனால் அற்று விழுந்த. குறை-குதிரைகளின் உடம்புகளினுடைய துண்டங்களை; ஒருமை பன்மை மயக்கம். கை-தன்னுடைய துதிக்கையில். க்:சந்தி. கொடு-எடுத்துக் கொண்டு ஓடிச் சென்று. முறிய-இடியுமாறு. ச்:சந்தி. சாடுற்றிடு-அடித்து நொறுக்கிய. மதில்-வீடுகளில் உள்ள சுற்றுச் சுவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தெற்றிகள்-திண்ணைகளும். சரிய-சரிந்து விழுமாறு. ப்:சந்தி. புடை-பக்கத்தில் இருந்த. அணி-அணிவகுத் திருந்த படை வீரர்களை; ஆகுபெயர். செற்று-மோதி அழித்துவிட்டு. ஆடுற்று-அசைந்து கொண்டு. அகல்-அகலமாக உள்ள. வெளி-வெளியிடத்தை. அவ்வடர்-அந்த மோதும். கை-துதிக்கையைப் பெற்ற. க்:சந்தி. குல-சிறப்பை உடைய. வரை-மலையைப் போன்ற ஆண் யானை; உவம ஆகுபெயர். உற்றது-அடைந்தது. ஏ:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 114-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பாவமாகிய கொடுமையாக உள்ள தீய வினை களில் முதிர்ச்சியைப் பெற்ற வஞ்சகச் செயல்களைப் பெற்றுக் கொலையைப் புரியும் கொடுமையைப் பெற்றவர் களாகிய அந்தச் சமணர்கள் திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில் முற்பட்டு ஓடிச் சென்று கருமையான மலையைப் போல அந்தப் பல்லவ மன்னன் ஏவியதால் மோதிப் போர் புரியும் துதிக்கையைப் பெற்ற அந்த ஆண் யானையைச் சம ணர்கள் தமக்கு முன்னால் ஓட்டிவிட அதைக் கண்டு அச்சத்தை அடையாதவராகி அந்த நாயனார் இடப வாக னத்தின் மேல் விளங்குபவராகிய வீரட்டானேசுவரருடைய தங்கத்தைப் போன்றவையும் வெற்றிக் கழலைப் பூண்டவை யும் ஆகிய திருவடிகளை அந்தப் பெரியவராகிய திருநாவுக் கரசு நாயனார் தெளிவாகத் தியானம் செய்து கொண்டு இருந்தார்.' பாடல் வருமாறு:

"பாவக்கொடு வினைமுற்றிய
படிறுற்றிடு கொடியோர்
நாவுக்கர செதிர்முற்கொடு
நணுகிக்கரு வரைபோல்
ஏவிச்செறு பொருகைக்கரி
யினைஉய்த்திட வெருளார்
சேவிற்றிகழ் பவர்பொற்கழல்
தெளிவுற் றனர்பெரியோர்."

பாவ-பாவமாகிய. க்:சந்தி. கொடு-கொடுமையாக உள்ள. வினை-தீய வினைகளில்; ஒருமை பன்மை மயக்கம். முற்றிய-முதிர்ச்சியைப் பெற்ற. படிறு-வஞ்சகச் செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். உற்றிடு-பெற்றுக் கொலையைப் புரியும். கொடியோர்-கொடுமையைப் பெற்றவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நாவுக்கரசு-திரு நாவுக்கரசு நாயனாருக்கு. எதிர்-எதிரில். முற்கொடு-முற்பட்டு. நணுகி-ஓடிச் சென்று. க்:சந்தி. கரு-கருமை யான. வரை-மலையை. போல்-போல. ஏவி-அந்தப் பல்லவ மன்னன் ஏவியதால். ச்:சந்தி. செறு-மோதி. பொரு-போர் புரியும் கை-துதிக்கையைப் பெற்ற. க்:சந்தி. கரியினை-அந்த ஆண் யானையை. உய்த்திட-சமணர்கள் தமக்கு முன்னால் ஓட்டிவிட. வெருளார்-அதைக் கண்டு அச்சத்தை அடையாதவராகி; முற்றெச்சம். சேவில்-அந்த நாயனார் இடப வாகனத்தின் மேல்; உருபு மயக்கம். திகழ்பவர்-ஏறிக் கொண்டு விளங்குபவராகிய வீரட்டானேசுவர ருடைய. பொன்-தங்கத்தைப் போன்றவையும்; உவம ஆகு பெயர். கழல்-வெற்றிக் கழலைப் பூண்டவையும் ஆகிய திரு வடிகளை; ஆகுபெயர். பெரியோர்-அந்தப் பெருமையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார். தெளிவு உற்றனர்-தெளிவாகத் தியானம் செய்து கொண்டு இருந்தார்.

அடுத்து உள்ள 115-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பெருமையைப் பெற்றவரும், புரிவதற்கு அருமையாக இருக்கும் தவத்தைப் புரிந்த திருநாவுக்கரசு நாயனார் அந்தச் சமணர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு ஏவிய ஆண் யானை தம்மேல் ஓடிவருவதைப் பார்த்து எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகிய வீரட்டானேசுவரனை, இடபவாகனத்தின்மேல் விருப்பத்தை அடைந்து ஏறி ஓட்டும் தலைவனை, ''சுண்ணவெண் சந்தனச் சாந்து'' என மாலையாகப் பாடியருளிய ஒரு திருப்பதிகத்தை இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் தொடங்கி மகிழ்ச்சியோடு பாடியருளுகிறவர் ஆனார்.' பாடல் வருமாறு:

'' அண்ணல் அருந்தவ வேந்தர்
ஆனை தம்மேல் வரக்கண்டு
விண்ணவர் தம்பெரு மானை
விடையுகந் தேறும் பிரானைச்,
'சுண்ணவெண் சந்தனச் சாந்து'
தொடுத்த திருப்பதி கத்தை
மண்ணுல குய்ய எடுத்து
மகிழ்வுட னேபாடு கின்றார். ''

அண்ணல்-பெருமையைப் பெற்றவரும். அரும்-புரிவதற்கு அருமையாக இருக்கும். தவ-தவத்தைப் புரிந்த. வேந்தர்-திருநாவுக்கரசு நாயனார். ஆனை-அந்தச் சமணர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு ஏவிய ஆண் யானை. தம்மேல் வர-தம்மேல் ஓடிவருவதை; வினையாலணையும் பெயர். க்:சந்தி. கண்டு-பார்த்து. விண்ணவர் தம்-தேவலோகத்தில் வாழும் தேவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசைநிலை. பெருமானை-தலைவனாகிய வீரட்டானேசுவரனை. விடை-இடபவாகனத்தின் மேல். உகந்து-மகிழ்ச்சியை அடைந்து. ஏறும்-ஏறி ஓட்டும். பிரானை-தலைவனை. ச்:சந்தி. 'சுண்ணவெண் சந்தனச் சாந்து'—'சுண்ணவெண் சந்தனச் சாந்து' என்று. தொடுத்த-

மாலையாகப் பாடியருளிய. திருப்பதிகத்தை-ஒரு திருப்பதிகத்தை. மண்ணுலகு-இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இடஆகு பெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். எடுத்து-தொடங்கி. மகிழ்வுடன்-மகிழ்ச்சியோடு. ஏ: அசை நிலை. பாடுகின்றார்-பாடியருளுகிறவர் ஆனார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட பாசுரத்தைப் பெற்ற திருப்பதிகம் திருவதிகை வீரட்டானத்தைப் பற்றிக் காந்தாரப் பண்ணில் அந்த நாயனார் பாடியருளியது. அதில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

" சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முரண் ஏறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை."

இந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதிப் பாசுரம் வருமாறு:

" நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாம் கொண்
டெடுத்தான் ஒன்பதும் ஒன்றும்அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டம் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை."

பிறகு வரும் 116-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'வஞ்சகர்களாகிய அந்தச் சமணர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு அனுப்பிய கோபத்தைக் கொண்ட, போரைப் புரியும், கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுகவிடும் வெம்மையைப் பெற்ற அந்த ஆண் யானையைத் திருநாவுக்கரசு நாயனார் பார்த்து, ''சிவந்த சடாபாரத்தைப் பெற்ற உயரமாகிய தலையைப் பெற்ற நடராஜப் பெருமானாரும், எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவரும், தலைவரும், வெம்மையாகிய ஒளியை வீசும் மூன்று இலைகளைப்பெற்ற திரிசூலத்தை ஏந்தியவரும் ஆகிய திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருவடிகளைப் பாதுகாப்பாக உடையோம் யாம்; ஆகையால் அடியேம் எதற்கும் பயப்படுவது இல்லை.'' என்று என்றே பாடுவதற்கு அருமையாக இருக்கும் ஒரு செந்தமிழ் மாலையாகிய ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளித் திருவாய் மலர்ந்தருளினார்.' பாடல் வருமாறு:

'' வஞ்சகர் விட்ட சினப்போர்
மதவெங் களிற்றினை நோக்கிச்,
'செஞ்சடை நீள்முடிக் கூத்தர்
தேவர்க்கும் தேவர் பிரானார்
வெஞ்சுடர் மூவிலைச் சூல
வீரட்டர் தம்அடி யோம்நாம்;
அஞ்சுவ தில்லை' என்றென்றே
அருந்தமிழ் பாடி அறைந்தார். ''

வஞ்சகர்-வஞ்சகர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். விட்ட-தம்மைக் கொல்லும் பொருட்டு அனுப்பிய. சின-கோபத்தைக் கொண்டதும்; வினையாலணையும் பெயர். ப்:சந்தி. போர்-யுத்தத்தைப் புரிவதும்; வினையாலணையும் பெயர். மத-கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுக விடு

வதும்; ஒருமை பன்மை மயக்கம்; வினையாலணையும் பெயர். வெம்-ஆகிய வெம்மையைப் பெற்ற. களிற்றினை-அந்த ஆண்யானையை. நோக்கி-திருநாவுக்கரசு நாயனார் பார்த்து. ச்:சந்தி. செம்-சிவப்பாக இருக்கும். சடை-சடாபாரத்தைப் பெற்ற. நீள்-உயரமாகிய. முடி-தலையைப் பெற்ற. க்:சந்தி. கூத்தர்-நடராஜப் பெருமானாரும். தேவர்க்கும்-எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். தேவர்-முதல் தேவரும். பிரானார்-தலைவரும். வெம்-வெம்மையாகிய. சுடர்-ஒளியை வீசும். மூவிலை-மூன்று இலைகளைப் பெற்ற. இலை: ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சூல-திரிசூலத்தை ஏந்திய. வீரட்டர் தம்-வீரட்டானேசுவரருடைய. தம்:அசை நிலை. அடியோம்-திருவடிகளைப் பாதுகாப்பாக உடையோம். நாம்-யாம். அஞ்சுவது-ஆகையால் அடியேம் எதற்கும் பயப்படுவது. இல்லை என்று-இல்லை என. என்று-என. ஏ:அசைநிலை. அரும்-பாடுவதற்கு அருமையாக இருக்கும். தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை; ஆகுபெயர். பாடி-பாடியருளி. அறைந்தார் - திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

மேலே குறிப்பிட்ட திருப்பதிகத்தில் வரும் மற்றொரு பாசுரம் வருமாறு:

" ஆடல் புரிந்த நிலையும்
அரையில் அசைத்த அரவும்
பாடல் பயின்றபல் பூதம்
பல்லா யிரம்கொள் கருவி
நாடற் கரியதோர் கூத்தும்
நன்குயர் வீரட்டம் சூழ்ந்து
ஓடும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றும்இல்லை;
அஞ்ச வருவதும் இல்லை."

பிறகு வரும் 117-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு குளிர்ச்சியைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பலதிருப்பதிகங்களைப் பாடியருளி தம்முடைய தலைவனாகிய வீரட்டானேசுவரனைச் சரணம் அடையும் தானமாக எண்ணிக் கொண்ட திருவுள்ளத்தோடு தங்கியிருந்து தம்முடைய திருவுள்ளத்தில் நிலவிய பக்தியை அடைந்த கொள்கையைப் பெற்ற திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாரை அவருக்கு முன்னால் வலமாகச் சுற்றி வந்து அவருக்கு எதிரில் தரையில் படிந்து வணங்கி விட்டு, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வட மேற்கு, தென் கிழக்கு, தென் மேற்கு என்னும் எட்டுத் திசைகளில் விளங்கும் ஊர்களில் வாழும் மக்கள் யாவரும் பார்க்கும் வண்ணம் அந்த நாயனாரை வணங்கிவிட்டுச் சமணர்கள் அவரைக் கொல்லும் பொருட்டு அனுப்பிய ஆண் யானை எழுந்து நின்றது.' பாடல் வருமாறு:

"தண்டமிழ் மாலைகள் பாடித்
தம்பெரு மான்சர ணாகக்
கொண்ட கருத்தில் இருந்து
குலாவிய அன்புறு கொள்கைத்
தொண்டரை முன்வல மாகச்
சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தில்
எண்டிசை யோர்களும் காண
இறைஞ்சி எழுந்தது வேழம்."

தண்-அவ்வாறு குளிர்ச்சியைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகள்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. பாடி-பாடியருளி. த்:சந்தி. தம்-தம்முடைய. பெருமான்-தலைவனாகிய வீரட்டானேசுவரனை. சரணாக-சரணம் அடையும் இடமாக; ஆகுபெயர். க்:சந்தி. கொண்ட-எண்ணிக் கொண்ட. கருத்தில்-திருவுள்ளத்தோடு. உருபு மயக்கம். இருந்து-தம்முடைய திருமடத்தில் தங்கிக்

கொண்டிருந்து. குலாவிய-தம்முடைய திருவுள்ளத்தில் தோன்றிய. அன்பு-பக்தியை. உறு-அடைந்த. கொள்கை-கொள்கையைப் பெற்ற. த்:சந்தி. தொண்டரை-திருத் தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாரை. முன்-அவருக்கு முன்னால். வலமாகச் சூழ்ந்து-பிரதட்சிணமாகச் சுற்றி வந்து. எதிர்-அந்த நாயனாருக்கு எதிரில். தாழ்ந்து நிலத்தில்-தரையில் படிந்து வணங்கிவிட்டு. எண் திசையோர்களும்-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென் கிழக்கு, தென் மேற்கு என்னும் எட்டுத் திசைகளில் விளங்கும் ஊர்களில் வாழும் மக்கள் யாவரும்; இட ஆகு பெயர். திசை:ஒருமை பன்மை மயக்கம். காண-பார்க்கும் வண்ணம். இறைஞ்சி-அந்த நாயனாரை வணங்கிவிட்டு. வேழம்-சமணர்கள் அந்த நாயனாரைக்கொல்லும் பொருட்டு அனுப்பிய ஆண் யானை. எழுந்தது-தரையிலிருந்து எழுந்து நின்றது.

திருநாவுக்கரசு நாயனார் திருவதிகை வீரட்டானத்தைப் பற்றிக் கொல்லிப் பண்ணிலும், காந்தாரப் பண்ணிலும், காந்தார பஞ்சமப் பண்ணிலும் அமைந்த திருப்பதிகங்களை யும், கொப்புளித்த திருநேரிசை, திருநேரிசை, திருவிருத்தம், திருக் குறுந்தொகை, ஏழைத் திருத்தாண்டகம், அடையாளத் திருத்தாண்டகம், போற்றித் திருத் தாண்டகம், திருவடித் திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம் ஆகியவை அமைந்த திருப்பதிகங்களையும் பாடியருளியுள்ளார். அவற்றில் போற்றித் திருத்தாண்டகம் ஒன்று வருமாறு:

"எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி;
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி;
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி;
கொல்லுங்கூற் றொன்றை உதைத்தாய் போற்றி;
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி;
கற்றார் இடும்பை களைவாய் போற்றி;

வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி;
வீரட்டம் காதல் விமலா போற்றி.''

பிறகு வரும் 118-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு வீரட்டானேசுவரர் தடுத்து ஆளாகக் கொண்ட திருநாவுக்கரசு நாயனாரைப் பணிந்து அச்சத்தை அடைந்து அந்தச் சமணர்கள் அவரைக் கொல்லும் பொருட்டு அனுப்பிய ஆண் யானை அந்த இடத்தைவிட்டு விட்டு ஓட அந்த யானையை ஓட்டியவராகிய அதன் மேல் ஏறியிருந்த வலிமையைப் பெற்ற யானைப் பாகர் அந்தஆண் யானையைக் கட்டிவிட்டுஅதை அடித்துத் திரியச் செய்து மறு படியும் அந்த ஆண் யானையை அந்தத் திருநாவுக்கரசரின் மேல் வருத்தத்தை அளித்துக் காட்டத் தன்னுடைய துதிக் கையினால் வீசி எறிந்து விட்டுத் தன்னைப் பார்த்தவர் களையே கொன்றுவிட்டு சமணர்களின் மேல் அவர்களை எதிரிட்டு ஓடியது.' பாடல் வருமாறு:

'' ஆண்ட அரசை வணங்கி
அஞ்சி அவ்வேழம் பெயரத்
தூண்டிய மேல்மறப் பாகர்
தொடக்கி அடர்த்துத் திரித்து
மீண்டும் அதனை அவர்மேல்
மிறைசெய்து காட்டிட வீசி
கண்டவர் தங்களை யேகொன்
றமணர்மேல் ஓடிற் றெதிர்ந்தே.''

ஆண்ட-அவ்வாறு வீரட்டானேசுவரர் தடுத்து ஆளாகக் கொண்ட. அரசை-திருநாவுக்கரசு நாயனாரை; திணை மயக்கம். வணங்கி-பணிந்துவிட்டு. அஞ்சி - அச்சத்தை அடைந்து. அவ்வேழம்-சமணர்கள் அந்த நாயனாரைக் கொல்லும் பொருட்டு அனுப்பிய அந்த ஆண்யானை. பெயர-அந்த இடத்தை விட்டு ஓடிப்போக. த்:சந்தி. தூண்டிய மேல்-அதன் மேல் வீற்றிருந்து அதை ஓட்டிய. மற-வலிமையைப் பெற்ற. ப்:சந்தி. பாகர்-யானைப்பாகர்.

தொடக்கி-அந்த யானையைக் கட்டிவிட்டு. அடர்த்து-அடித்து. த்:சந்தி. திரித்து-திரியுமாறு செய்து. மீண்டும்-மறுபடியும். அதனை-அந்த ஆண்யானையை. அவர்மேல்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரின் மேல். மிறை செய்து-வருத்தத்தை அளித்து. காட்டிட-காட்ட. வீசி-தன்னுடைய துதிக்கையினால் வீசி எறிந்து விட்டு. கண்டவர் தங்களையே-தன்னைப் பார்த்தவர்களையே. தம்:அசை நிலை. திருநாவுக்கரசு நாயனாரைக் கொல்லாமல் தன்னைப் பார்த்தவர்களையே கொன்று விட்டது. கொன்று-கொலை செய்துவிட்டு. அமணர்மேல்-தன்னை அனுப்பிய சமணர்களின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். எதிர்ந்து-எதிரிட்டுக் கொண்டு. ஓடிற்று-ஓடிப்போயிற்று. ஏ:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 119-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த ஆண்யானை அவ்வாறு ஓடிச் சென்று அருகத் பரமேஷ்டியை வணங்கும் சமணர்களைத் திரியுமாறு செய்து அவர்களைத் தன்னுடைய கால்களால் மிதித்து அவர்களுடைய உடம்புகளைப் பல துண்டங்களாகச் செய்து பிறகு தேடிச்சென்று வேறு பல மக்களையும் கொலை செய்துவிட்டு அந்த நகரத்தில் வாழும் மக்கள் கலக்கத்தை அடைந்து சுழல நீளமாக உள்ள சமுத்திரத்தைக் கலங்குமாறு செய்யும் உயரமாகிய மந்தர மலையைப் போல அசைந்து கொண்டு அந்த ஆண்யானையும் அந்தப் பல்லவ அரசனுக்கு மனக் கவலையை உண்டாக்கியது.' பாடல் வருமாறு:

'' ஓடி அருகர்கள் தம்மை
உழறி மிதித்துப் பிளந்து
நாடிப் பலரையும் கொன்று
நகரம் கலங்கி மறுக
நீடிய வேலை கலக்கும்
நெடுமந் தரகிரி போல

ஆடிஅவ் யானையும் மன்னற்
காகுலம் ஆக்கிய தன்றே. ''

ஓடி-அந்த ஆண்யானை அவ்வாறு ஓடிச் சென்று. அருகர்கள் தம்மை-அருகத் பரமேஷ்டியை வணங்கும் சமணர்களை. தம்: அசைநிலை. உழறி-திரியுமாறு செய்து. மிதித்து-தன்னுடைய கால்களால் மிதித்து. ப்:சந்தி. பிளந்து- பல துண்டங்களாகச் செய்து. நாடி-தேடி ஓடிச் சென்று. ப்:சந்தி பலரையும்-பல மக்களையும். கொன்று-கொலை செய்துவிட்டு. நகரப்-அந்த நகரத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். கலங்கி-கலக்கத்தை அடைந்து. மறுக-சுழல. நீடிய-நீளமாக உள்ள. வேலை-சமுத்திரத்தை. கலக்குப்-கலங்குமாறு செய்யும். நெடு-உயரமாகிய. மந்தர கிரி போல- மந்தர மலையைப் போல. ஆடி-அசைந்து கொண்டு. அவ்-அந்த. யானையும்-சமணர்கள் அனுப்பிய ஆண் யானையும். மன்னற்கு-தன்னுடைய அரசனாகிய பல்லவனுக்கு. ஆகுலம்-மனக்கவலையை. ஆக்கியது-உண்டாக்கியது. அன்று, ஏ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

பிறகு வரும் 120-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த ஆண்யானையினுடைய துதிக்கைக்கு அகப்படாமல் உயிர் பிழைத்த பாவங்களைப் புரிந்த சமணர்களாகிய இழிந்தவர்கள் யாவரும் தங்களுடைய மானத்தை அழியுமாறு செய்து மயக்கத்தை அடைந்து வருத்தத்தை அடைந்த உள்ளங்களை உடையவர்கள் ஆகிச் சேனையைப் பெற்ற தொண்டை மண்டலத்திற்கு அரசராகிய அந்தப் பல்லவனுடைய திருவடிகளில் அந்தச் சமணர்கள் தனித்தனியாக விழுந்து பணிந்துவிட்டு அரற்றி அழ மேம்பாட்டைப் பெற்ற சைவ சமய வழியை விட்டுவிட்ட அந்தப் பல்லவ மன்னன் சினம் மூண்டு ''இனிமேல் நாம் செய்யும் செயல் என்ன இருக்கிறது?'' என்று அந்தச் சமணர்களைப் பார்த்துக் கேட்டான்.' பாடல் வருமாறு:

"யானையின் கையிற் பிழைத்த
வினைஅமண் கையர்கள் எல்லாம்
மானம் அழிந்து மயங்கி
வருந்திய சிந்தைய ராகித்
தானை நிலமன்னன் தாளில்
தனித்தனி வீழ்ந்து புலம்ப
மேன்மை நெறிவிட்ட வேந்தன்
வெகுண், 'டினிச் செய்வதென்?' என்றான்."

யானையின்-அந்த ஆண் யானையினுடைய. கையில்-துதிக்கைக்கு அகப்படாமல்; உருபு மயக்கம். பிழைத்த-தங்களுடைய உயிர்கள் போகாமல் பிழைத்த. வினை-பாவங்களைப் புரிந்த; ஒருமை பன்மை மயக்கம். அமண்-சமணர்களாகிய; திணை மயக்கம். கையர்கள் - இழிந்தவர்கள். எல்லாம்-எல்லாரும். மானம்-தங்களுடைய மரியாதை. அழிந்து-அழியுமாறு செய்து. மயங்கி-மயக்கத்தை அடைந்து. வருந்திய-வருத்தத்தைக் கொண்ட. சிந்தையர் ஆகி-உள்ளங்களை உடையவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தானை-தேர், யானை, குதிரை, காலாட்கள் என்னும் சதுரங்கங்களை உடைய சேனையைப் பெற்ற. நில-தொண்டை மண்டலத்தை ஆட்சிபுரியும். மன்னன்-பல்லவ அரசனுடைய. தாளில்-திருவடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். தனித்தனி-தனித்தனியாக; வேறு வேறாக. வீழ்ந்து-விழுந்து வணங்கி. புலம்ப-அழுது அரற்ற. மேன்மை-மேம்பாடாகிய தன்மையைப் பெற்ற. நெறி-சைவ சமயமாகிய வழியை. விட்ட-விட்டு விட்ட. வேந்தன்-அந்தப் பல்லவ மன்னன். வெகுண்டு-சினம் மூண்டு. இனி-இனிமேல். ச்:சந்தி. செய்வது-நாம் புரியும் செயல் என்-என்ன இருக்கிறது. என்றான்-என்று அந்தச் சமணர்களைப் பார்த்துக் கேட்டான்.

அடுத்து உள்ள 121-ஆம் கவியின் கருத்து வருமாறு:

"நம்முடைய சமண சமயத்தில் இருந்து கொண்டே

தான் விரும்பிய பாம்பின் நஞ்சு, நோய்கள் முதலியவற்றை மந்திரங்களைக் கூறித் தடுக்கும் நிலையினால் எங்களுக்கு எதிரில் அவன் மேல் ஏறுதலை அழியுமாறு அந்த ஆண் யானையினால் இவ்வாறு உன்னுடைய சீர்த்தியைக் குறைவு படுத்திய அந்தத் தருமசேனன் உயிரை இழந்து போனால் தான் நமக்கு வந்திருக்கும் அவமானம் நினக்குப் பொங்கி எழும் நெருப்பு மேலே செல்ல அதற்குப் பிறகு புகை போனாற் போலப் போய்விடும்'' என்று அந்தச் சமணர்கள் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

'' 'நங்கள் சமயத்தில் நின்றே
நாடிய முட்டி நிலையால்
எங்கள் எதிரே றழிய
யானையால் இவ்வண்ணம் நின்சீர்
பங்கப் படுத்தவன் போகம்
பரிபவம் தீரும் உனக்குப்
பொங்கழல் போக அதன்பின்
புகைஅகன் றாலென,' என்றார்.''

நங்கள்-நம்முடைய. சமயத்தில்-சமண சமயத்தில். நின்றே-இருந்து கொண்டே. நாடிய-தான் விரும்பிய. முட்டி-பாம்பின் நஞ்சு நோய்கள் முதலியவற்றை மந்திரங் களைக் கூறித் தடுப்பதாகிய. நிலையில்-நிலைமையினால், எங்கள்-எங்களுக்கு. எதிர்-எதிரில். ஏறு-அவன்மேல் ஏறு தலை. அழிய-போகுமாறு. யானையால்-நாம் அனுப்பிய அந்த ஆண் யானையினால். இவ்வண்ணம்-இவ்வாறு. நின்_ உன்னுடைய. சீர்-சீர்த்தியை. பங்கப்படுத்தவன்-குறைவு படுத்திய அந்தத் தருமசேனன். போக-தன்னுடைய உயிரை இழந்து இறந்து போனால்தான். ப்:சந்தி. பரிபவம்-நமக்கு உண்டாகியிருக்கும் அவமானம். பொங்கு-பொங்கி எழும். அழல்-நெருப்பு. போக-மேலே செல்ல. அதன்பின்-அந்த நெருப்புக்குப் பிறகு. புகை அகன்றால் என-புகைபோனாற் போல. என:இடைக்குறை. உனக்கு-நினக்கு. தீரும்-

போய்விடும்; அவமானம் போய்விடும். என்றார்-என்று அந்தச் சமணர்கள் பல்லவ மன்னனிடம் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 122-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இரவிலே தோன்றும் இருட்டைப் போன்றவர்களாகிய அந்தச் சமணர்கள் இவ்வாறு தன்னிடம் சொல்ல, அருமையும் பெரிய இயல்பும் உள்ள பாவங்களைப் புரிந்த அந்தப் பல்லவ மன்னன், "நம்முடைய பழமையாகிய சமண சமயத்தை அழித்துவிட்டு நமக்குத் துயரத்தை விளையுமாறு செய்தவனாகிய அந்தத் தருமசேனனை இனிமேல் என்ன செய்வது? நீங்கள் கூறுவீர்களாக" என்று அந்தப் பல்லவ மன்னன் கூறத் தங்களுடைய சூழ்ச்சியை நிறைவேற்றும் வேலையைப் பெற்றவர்களாகிய அந்தச் சமணர்கள், "ஒரு கருங்கல்லோடு கயிற்றைக் கட்டி அந்தத் தருமசேனனைச் சமுத்திரத்தில் விடுவதே வழி." என்று அந்தச் சமணர்கள் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

"அல்லிருள் அன்னவர் கூற
அரும்பெரும் பாவத் தவன்தான்
'தொல்லைச் சமயம் அழித்துத்
துயரம் விளைத்தவன் தன்னைச்
சொல்லும் இனிச்செய்வ' தென்னச்
சூழ்ச்சி முடிக்கும் தொழிலோர்
'கல்லுடன் பாசம் பிணித்துக்
கடலிடைப் பாய்ச்சுவ' தென்றார்."

அல்-இரவில். இருள்-தோன்றும் இருட்டை. அன்னவர்-போலக் கருமையான உடம்புகளைப் பெற்ற. அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கூற-இவ்வாறு தன்னிடம் சொல்ல. அரும்-தீர்ப்பதற்கு அருமையாக இருக்கும். பெரும்-பெரிய இயல்பும் உள்ள. பாவத்தவன்-பாவச் செயல்களைப் புரியும் அந்தப் பல்லவ மன்னன்; ஒருமை

பன்மை மயக்கம். தான்:அசைநிலை. தொல்லை-பழமை யாகிய. ச்:சந்தி. சமயம்-நம்முடைய சமண சமயத்தை. அழித்து-அழிந்து போகுமாறு செய்துவிட்டு. த்:சந்தி. துயரம்-நமக்குத் துயரத்தை. விளைத்தவன் தன்னை-உண் டாக்கியவனாகிய அந்தத் தருமசேனனை. தன்:அசைநிலை. ச்:சந்தி. இனி-இனிமேல். ச்:சந்தி. செய்வது-என்ன செய் வது. சொல்லும்-நீங்கள் கூறுவீர்களாக. என்ன-என்று அந்தப் பல்லவ மன்னன் அந்தச் சமணர்களிடம் கூற. ச்:சந்தி. சூழ்ச்சி-தங்களுடைய சூழ்ச்சியை. முடிக்கும்-நிறை வேற்றும். தொழிலோர்-வேலையைப் பெற்றவர்களாகிய அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கல்லுடன்—ஒரு கருங்கல்லோடு. பாசம்-கயிற்றை. பிணித்து-இவனோடு சேர்த்துக் கட்டி. க்:சந்தி. கடலிடை-சமுத்திரத்தில். ப்:சந்தி. பாய்ச்சுவது-இந்தத் தருமசேனனை விட்டுவிடுவதே வழி. என்றார்-என்று அந்தச் சமணர்கள் பல்லவ மன்னனிடம் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 123-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தச் சமணர்கள் தன்னிடம் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்ட அந்தப் பல்லவ மன்னன் அந்த வேலைக்காரர்களாகிய சமணர்களைப் பார்த்து, "நமக்குத் துன்பத்தைச் செய்தவனாகிய அந்தத் தருமசேனனைப் பாதுகாப்பு அமையுமாறு நீங்கள் அழைத்துக் கொண்டு சென்று அவனுடைய பக்கத்தில் ஒரு கருங்கல்லோடு சேர்த்து வைத்துக் கயிற்றை இறுகக் கட்டி ஒரு படகில வைத்து மிக்கு ஒலிக்கும் சத்தத்தை உடைய சமுத்திரத்தில் அவனைத் தள்ளி விழுமாறு நீங்கள் செய்வீர்களாக." என்று அந்தப் பல்லவ மன்னன் கூறி அந்தச் சமணர்களை அனுப்பினான். பாடல் வருமாறு:

" ஆங்கது கேட்ட அரசன்
அவ்வினை மாக்களை நோக்கித்

'தீங்கு புரிந்தவன் தன்னைச்
சேமம் உறக்கொடு போகிப்
பாங்கொரு கல்லில் அணைத்துப்
பாசம் பிணித்தோர் படகில்
வீங்கொலி வேலையில் எற்றி
வீழ்த்துமின்' என்று விடுத்தான்.''

ஆங்கு-அவ்வாறு. அது-அந்தச் சமணர்கள் தன்னிடம் கூறிய இந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்ட அரசன்-கேட்ட அந்தப் பல்லவ மன்னன். அவ்வினை மாக்களை-அந்த வேலைக்காரர்களாகிய சமணர்களை-நோக்கி-பார்த்து. த்:சந்தி. தீங்கு-நமக்குத் துன்பத்தை. புரிந்தவன் தன்னை-செய்தவனாகிய அந்தத் தருமசேனனை. தன்:அசைநிலை. ச்:சந்தி. சேமம்-பாதுகாப்பு. உற-அமையுமாறு. க்:சந்தி. கொடு-நீங்கள் அழைத்துக் கொண்டு. போகி-சென்று. ப்:சந்தி. பாங்கு-அவனுடைய பக்கத்தில், ஒரு கல்லில்-ஒரு கருங்கல்லோடு; உருபு மயக்கம். அணைத்து-சேர்த்து வைத்து. ப்:சந்தி. பாசம்-கயிற்றை. பிணித்து-இறுக்கக் கட்டி. ஓர் படகில்-ஒரு படகில் அவனை வைத்து. வீங்கு-மிக்கு ஒலிக்கும். ஒலி-சத்தத்தை எழுப்பும். வேலையில்-சமுத்திரத்தில். எற்றி-அவனைத் தள்ளிவிட்டு. வீழ்த்துமின்-விழுமாறு நீங்கள் செய்வீர்களாக. என்று-என அந்தப் பல்லவ மன்னன் கூறி. விடுத்தான்-அந்தச் சமணர்களை அனுப்பினான்.

பிறகு வரும் 124 ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த வேலையைச் செய்வதற்காகச் செல்லும் அந்தச் சமணர்களோடு எழுந்தருளி அருகத் பரமேஷ்டியை வணங்குபவர்களும், கொடுமையாகிய செயல்களைப் புரிபவர்களும் ஆகிய அந்தச் சமணர்களும் போய்ச் சமுத்திரத்தை அடைய, திருநவுக்கரசு நாயனார் செம்மையாகிய தம்முடைய திருவுள்ளம் சிறப்பாக அமைய அந்தச் சமணர்களோடு எழுந்

தருளினார்; சமுத்திரத்தில் அந்தப் பல்லவ வேந்தன் கூறிய படியே அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் தள்ளிவிட்டு அந்தப் பாதகர்களாகிய சமணர்கள் நிறைவேற்றினார்கள்.' பாடல் வருமாறு:

" அவ்வினை செய்திடப் போகும்
அவருடன் போய்அரு கந்த
வெவ்வினை யாளரும் சென்று
மேவிட நாவுக் கரசர்
செவ்விய தம்திரு வுள்ளம்
சிறப்ப அவருடன் சென்றார்;
பல்வத்தில் மன்னவன் சொன்ன
படிமுடித் தார்அப் பதகர்.''

அவ்வினை-அந்த வேலையை. செய்திட-செய்வதற்காக, ப்:சந்தி. போகும்-சமுத்திரத்திற்குச் செல்லும். அவருடன்-அந்தச் சமணர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். போய்-தாமும் எழுந்தருளி. அருகந்த-அருகத் பரமேஷ்டியை வணங்குபவர்களும்; ஆகுபெயர். வெவ்-கொடுமையாகிய. வினையாளரும்-செயல்களைப் புரிபவர்களும் ஆகிய அந்தச் சமணர்களும்; ஒருமை பன்மை மயக்கம். வினை:ஒருமை பன்மை மயக்கம். சென்று-போய். மேவிட-சமுத்திரத்தை அடைய. நாவுக்கரசர் - திருநாவுக்கரசு நாயனார். செவ்விய-செம்மையாகிய. தம்-தம்முடைய. திருவுள்ளம் சிறப்ப-திருவுள்ளம் சிறப்பாக அமைய. அவருடன்-அந்தச் சமணர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். சென்றார்-எழுந்தருளினார். பல்வத்தில்-சமுத்திரத்தில். மன்னவன்-அந்தப் பல்லவ வேந்தன். சொன்னபடி-கூறியபடியே. அப் பதகர்-அந்தப் பாதகர்களாகிய சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். முடித்தார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் தள்ளிவிட்டு நிறைவேற்றினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 125-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த இயல்பில் அந்தக் கொடிய செயலாகிய திருநாவுக்கரசு நாயனாரைக் கருங்கல்லோடு கட்டி வைத்துச் சமுத்திரத்தில் விடுவதை நிறைவேற்றிவிட்டு அந்தச் சமணர்கள் சமுத்திரக் கரையை விட்டு நீங்கிப் போன பிறகு ஒப்புக் கூறுதற்கு அருமையாக இருக்கும் ஆழமாகிய சமுத்திரத்தில் விழுந்த பக்தி மிகுதியாக அடைதலைப் பெற்ற உண்மையாகிய திருத்தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும், ''எந்த விதமானாலும் ஆகட்டும்; அடியேனுடைய தந்தையைப் போன்ற வீரட்டானேசுவரனை அடியேன் துதிப்பேன்'' என எண்ணித் தாம் பாடியருளிய சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியினால் சிவபெருமானுக்கு உரிய ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை உச்சரித்துக் கொண்டு அந்த வீரட்டானேசுவரனை அந்த நாயனார் தோத்திரம் புரிந்தருளுபவரானார்.' பாடல் வருமாறு:

'' அப்பரி சவ்வினை முற்றி
அவரகன் றேகிய பின்னர்
ஒப்பரும் ஆழ்கடல் புக்க
உறைப்புடை மெய்த்தொண்டர் தாமும்
'எப்பரி சாயினும் ஆக;
ஏத்துவன் எந்தையை.' என்று
செப்பிய வண்டமிழ் தன்னால்
சிவன்அஞ் செழுத்தும் துதிப்பார்.''

அப்பரிசு-அந்த இயல்பில். அவ்வினை-அந்தக் கொடிய செயலாகிய திருநாவுக்கரசு நாயனாரைக் கருங்கல்லோடு கட்டி வைத்து ஒரு படகில் இருக்கச் செய்து சமுத்திரத்தில் விடுவதை. முற்றி - நிறைவேற்றிவிட்டு. அவர் - அந்தச் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அகன்று-சமுத்திரக் கரையை விட்டு. ஏகிய-நீங்கிப்போன. பின்னா-பிறகு.

ஒப்பு அரும்-சமானமாக வேறு ஒன்றைக் கூறுவதற்கு அருமையாக இருக்கும். ஆழ்-ஆழமாக உள்ள. கடல்-சமுத்திரத்தில். புக்க-விழுந்த. உறைப்பு-பக்தி மிகுதியாக அடைதலை. உடை-பெற்ற. மெய்த் தொண்டர் தாமும்-உண்மையாகிய திருத்தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும். தாம்: அசைநிலை. எப்பரிசு-எந்த விதம். ஆயினும்-ஆனாலும். ஆக-ஆகட்டும். எந்தையை-அடியேனுடைய தந்தையைப் போன்றவனாகிய வீரட்டானேசுவரனை. ஏத்துவன்-அடியேன் துதிப்பேன். என்று-என எண்ணி. செப்பிய-தாம் பாடியருளிய. வண்-சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற. தமிழ் தன்னால்-செந்தமிழ் மொழியினால். தன்: அசைநிலை. சிவன்-சிவபெருமானுக்கு உரிய. அஞ்செழுத்தும் - ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரத்தை. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். துதிப்பார்-உச்சரித்துக் கொண்டு அந்த நாயனார் வீரட்டானேசுவரனைத் தோத்திரம் புரிந்தருளுபவரானார்.

பிறகு வரும் 126-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' "சொற்றுணை வேதியன்" என்று தொடங்கும் பரிசுத்தமாகிய வார்த்தைகள் அடங்கிய நல்ல தமிழ் மாலையாகிய ஒரு திருப்பதிகமாக, "நமச்சிவாய" என சோர்வை அடையாமல் முன்னால் பாதுகாக்கும் ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரத்தைப் பக்தியோடு தம்முடைய திருவுள்ளத்தில் பற்றிக் கொண்டிருந்த உணர்ச்சியோடு அந்தத் திருப்பதிகத்தைத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளினார்.' பாடல் வருமாறு:

"'சொற்றுணைவேதியன்' என்னும் தூயமொழி
நற்றமிழ் மாலையா, 'நமச்சி வாய'என்
றற்றமுன் காக்கும்அஞ் செழுத்தை அன்பொடு
பற்றிய உணர்வினால் பதிகம் பாடினார்."

'சொற்றுணை வேதியன்' என்னும்- 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கும். தூய-பரிசுத்தமாகிய. மொழி-வார்த்தைகள் அடங்கிய; ஒருமை பன்மை மயக்கம். நல்-பிறவிப் பிணியைப் போக்கும் நல்ல. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலையா-மாலையாகிய ஒரு திருப் பதிகமாக. நமச்சிவாய என்று-நமச்சிவாய என. அற்றம்-சோர்வை அடையாத வண்ணம். முன்-முன்கூட்டியே. காக்கும்-பாதுகாக்கும். அஞ்சு எழுத்தை- ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரத்தை. எழுத்து; ஒருமை பன்மை மயக்கம். அன்பொடு-பக்தி யோடு. பற்றிய-இடைவிடாமல் தாம் பற்றுக் கோடாகப் பற்றிக் கொண்டிருந்த. உணர்வினால்-உணர்ச்சியோடு; உருபு மயக்கம். பதிகம்-அந்தத் திருப்பதிகத்தை. பாடி னார்-திருநாவுக்கரசு நாயனார் பாடியருளினார்.

இந்தப்பாடலில் குறிப்பிட்ட திருப்பதிகம் திருநாவுக்கரசு நாயனார் காந்தார பஞ்சமப் பண்ணில் பாடியருளியது. அதில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."

இந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதிப் பாசுரம் வருமாறு:

"மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்கண் இல்லையே."

அடுத்து உள்ள 127-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பெருகி எழுந்த பக்தியை உடையவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தாம் பற்றுக் கோடாகப் பற்றிக் கொண்ட இயல்பினால் அருமையான தாமரை மலரில்

அமர்ந்திருப்பவனாகிய பிரம தேவன் முதலாகிய தேவர்கள் வாழ்த்துவதற்கு அருமையாக உள்ள ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும் திருநாவுக்கரசு நாயனார் வாழ்த்தி வீரட்டானேசுவரரை வணங்க கருமையாகியதும் ஆழமாக இருப்பதுமாகிய சமுத்திரத்தில் அவரைக் கட்டிப் போட்ட கருங்கல் அமிழாமல் மிதந்தது.' பாடல் வருமாறு:

'' பெருகிய அன்பினர் பிடித்த பெற்றியால்
அருமல ரோன்முதல் அமரர் வாழ்த்துதற்
கரியஅஞ் செழுத்தையும் அரசு போற்றிடக்
கருநெடும் கடலினுட் கல்மி தந்ததே ''

பெருகிய-பெருகி எழுந்த. அன்பினர்-பக்தியை உடையவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். பிடித்த-தாம் தமக்கு ஒரு பற்றுக் கோடாகப் பற்றிக் கொண்ட. பெற்றியால்-இயம்பினால். அரு - அருமையாகிய. மலரோன்-தாமரை மலரில் அமர்ந்திருப்பவனாகிய பிரமதேவன். முதல்-முதலாக உள்ள. அமரர்-தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வாழ்த்துதற்கு-வாழ்த்துவதற்கு அரிய-அரியதாக உள்ள. அஞ்சு எழுத்தையும் - ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரத்தை. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். போற்றிட-வாழ்த்தி வீரட்டானேசுவரரை வணங்க. க்:சந்தி. கரு-கருமையாகிய. நெடும்-ஆழமாக இருக்கும். கடலினுள்-சமுத்திரத்தில். கல்-அந்த நாயனாரைக் கட்டிப் போட்ட கருங்கல். மிதந்தது-சமுத்திரத்திற்குள் அமிழாமல் மிதந்து கொண்டிருந்தது. ஏ: ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 128-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சமணர்கள் தம்மைக் கட்டிச் சமுத்திரத்தில் விட்ட அந்தப் பெரியதாகிய கருங்கல்லும் அந்தச் சமுத்திரத்தில் திருநாவுக்கரசு நாயனார் தன்மேல் ஏறிக் கொள்ளுமாறு

ஒரு தெப்பமாக மாறி மிதந்தமையால் அவரை இறுகக் கட்டி யிருந்த கயிறும் அவிழ்ந்து விட்டது; அந்தக் கருங்கல்லின் மேல் அமர்ந்திருந்த கெடுதல் இல்லாத சீர்த்தியைப் பெற்ற உண்மையாகிய பெருமையைப் பெற்ற திருத்தொண்டராகிய அந்த நாயனார் விளக்கத்தை அடைந்து காட்சியை அளித் தார்.' பாடல் வருமாறு:

"அப்பெருங் கல்லும்அங் கரசு மேல்கொளத்
தெப்பமாய் மிதத்தலிற் செறிந்த பாசமும்
தப்பிய ததன்மிசை இருந்த தாருல்சீர்
மெய்ப்பெருந் தொண்டனார் விளங்கித்
தோன்றினார்."

அப் பெரும்-சமணர்கள் தம்மைக் கட்டிச் சமுத்திரத்தில் விட்ட அந்தப் பெரியதாக இருக்கும். கல்லும்-கருங்கல்லும். அங்கு-அந்தச் சமுத்திரத்தில். அரசு-திருநாவுக்கரசு நாய னார்; தி ணை ம ய க் க ம். மேல்கொள-தன்மேல் ஏறிக் கொள்ளுமாறு. கொள:இடைக்குறை. த்:சந்தி. தெப்ப மாய்-ஒரு தெப்பமாக மாறி. மிதத்தலின்-சமுத்திரத்தில் அமிழாமல் மிதந்தமையால். செறிந்த-இறுகக் கட்டியிருந்த. பாசமும்-கயிறும். தப்பியது-கடலினுள் அமிழ்ந்துவிட்டது. அதன் மிசை-அந்தக் கருங்கல்லின் மேல். இருந்த-அமர்ந் திருந்த. தா-கெடுதல். இல்-இல்லாத; கடைக்குறை. சீர்-சீர்த்தியைப்பெற்ற. மெய்-உண்மையாகிய. ப்:சந்தி. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். தொண்டனார்-திருத் தொண்டராகிய அந்த நாயனார். விளங்கி-விளக்கத்தை அடைந்து. த்:சந்தி. தோன்றினார்-காட்சியை அளித்தார்.

பிறகு வரும் 129-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'புண்ணியம், பாவம் என்னும் இரண்டு வினைகளாகிய பாச பந்தமும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களாகிய கருங்கல் கட்டுவதனால் இந்த உலகத்தில் வரும் பிறவியாகிய சமுத்திரத்தில் விழுந்த அறிவில்லாத மனிதர்கள் கரையேறத் திருவருளை வழங்கும் உண்மை

யாகிய ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரம் திருநாவுக்கரசு நாயனாரை இந்தச் சமுத்திரம் ஒரு கருங்கல்லின் மேல் ஏறுமாறு புரிதலைச் சொல்லவும் வேண்டுமோ?' பாடல் வருமாறு:

" இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?"

இருவினை-புண்ணியம் பாவம் என்னும் இரண்டு வினைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாசமும்-பாச பந்தமும். மல-ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கல்-கருங்கல். ஆர்த்தலின்-கட்டுவதனால். வரு-இந்த உலகத்திற்கு வரும். பவ-பிறவியாகிய. க்:சந்தி. கடலில்-சமுத்திரத்தில். வீழ்-விழுந்து தடுமாறும். மாக்கள்-அறிவு இல்லாத மக்கள். ஏறிட—கரையேற. அருளும்-திருவருளை வழங்கும். மெய்-உண்மையாகிய. அஞ்சு எழுத்து-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்களும் அடங்கிய பஞ்சாட்சரம். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். அரசை-திருநாவுக்கரசு நாயனாரை; திணை மயக்கம். இக்கடல்-இந்தச் சமுத்திரம். ஒரு கல்மேல்-ஒரு கருங்கல்லின் மேல். ஏற்றிடல்-ஏறுமாறு புரிதலை. உரைக்க-சொல்லவும். வேண்டுமோ-வேண்டியிருக்குமோ.

பவக்கடல்: "பெரும்பிறவிப் பௌவத் தெப்பத் தடந்திரையால் எற்றுண்டு." என்று மாணிக்கவாசகரும், "இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்." என்று கருவூர்த் தேவரும், "இல்லை பிறவிக் கடல் ஏறல்." என்று கபிலதேவ நாயனாரும், "தம்மைப் பிறவிக் கடல் கடப்பிப்பவர்." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவி எனும் தோல் தோணி." என்று நம்பியாண்டார் நம்பியும், "ஏழு

பிறவிக் கடலை ஏறவிடும் நற்கருணை ஓடக்காரதும்.'', ''முடியாப் பிறவிக் கடற்றிற் புகார்.'' என்று அருணகிரி நாதரும், ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்.'' (திருக்குறள்) என்று திருவள்ளுவரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 130-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளை விரும்பி ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை உச்சரித்து அந்த ஈசுவரரைத் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்ற அந்தக் கருணையை உடைய திருநாவுக்கரசு நாயனாரை அலைகளாகிய கைகளால் தெளிவைப் பெற்ற வழியாகிய இயல்போடு தன்னுடைய தலையில் சுமந்து கொண்டு வந்து சமுத்திரத்தினுடைய கரையின்மேல் ஏற்றும் செயலைச் சமுத்திரத்திற்கு மன்னனாகிய வருணனும் முன் பிறவியில் பெரிய தவத்தைப் புரிந்தான்.' பாடல் வருமாறு:

''அருள்நயந் தஞ்செழுத் தேத்தப் பெற்றஅக்
கருணைநா வரசினைத் திரைக்க ரங்களால்
தெருள்நெறி நீர்மையின் சிரத்தில் தாங்கிட
வருணனும் செய்தனன் முன்பு மாதவம்.''

அருள்-வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளை. நயந்து-விரும்பி. அஞ்சு எழுத்து-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை உச்சரித்து. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். ஏத்தப் பெற்ற-அந்த ஈசுவரரைத் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்ற. அக்கருணை-அந்தக் கருணையைப் பெற்ற. நாவரசினை-திருநாவுக்கரசு நாயனாரை. அரசு: திணைமயக்கம். த்: சந்தி. திரை-தன்னுடைய அலைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கரங்களால்-கைகளால், தெருள்-தெளிவைப் பெற்ற. நெறி-வழியில் அமைந்த. நீர்மையின்-இயல்போடு. சிரத்தில்-தன்னுடைய தலையில். தாங்கிட-சுமந்து கொண்டு வந்து சமுத்திரத்தினுடைய கரையின்மேல் ஏற்றும் செயலை.

வருணனும்-சமுத்திரத்திற்கு மன்னனாகிய வருண தேவனும். முன்பு-முன் பிறவியில். மா-பெரிய. தவம்-தவத்தை. செய்தனன்-புரிந்தான்.

பிறகு வரும் 131-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'சீர்த்தி வாய்க்கப் பெற்ற வருண பகவானே வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாரைச் சேர்ந்து அடைந்த அந்தக் கருங்கல்லே ஒரு பல்லக்காக மாறிவிட அந்த நாயனாரைத் தன்னுடைய அலைகளாகிய கைகளால் தாங்கிக் கொண்டு வந்து மலர்கள் மலர்ந்திருக்கும் மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலைப் பெற்ற திருப்பாதிரிப்புலியூருக்குப் பக்கத்தில் எழுந்தருளச் செய்தான்.' பாடல் வருமாறு:

" வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டெழுந் தருளு வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்."

வாய்ந்தசீர்-சீர்த்தி வாய்க்கப்பெற்ற. வருணனே-வருண பகவானே. வாக்கின் மன்னரை-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாரை. ச்:சந்தி. சேர்ந்து அடை-சேர்ந்து அடைந்த. கருங்கலே-கருங்கல்லே; இடைக்குறை. சிவிகை-ஒரு பல்லக்காக. ஆயிட-மாறிவிட. ஏந்தி-அந்த நாயனாரைத் தன்னுடைய அலைகளாகிய கைகளால் தாங்கி. ஏ:அசைநிலை. கொண்டு-எடுத்துக் கொண்டு. பூம்-பல வகையான மலர்கள் மலர்ந்திருக்கும் பூம்பொழிலைப் பெற்ற. 'அழகைப் பெற்ற' எனலும் ஆம். திருப்பாதிரிப்புலியூர்-திருப்பாதிரிப் புலியூருக்கு. ப்:சந்தி. பாங்கரில்-பக்கத்தில் உள்ள கடற்கரையில். எழுந்தருளுவித்தனன்-எழுந்தருளுமாறு புரிந்தான். அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் சமுத்திரக் கரையில் ஏறின இடம் கரையேறிய குப்பம் என வழங்கும். "கரையேற விட்ட முதல்வர்" என வருதலைக் காண்க.

பிறகு உள்ள 132-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த அழகிய சிவத்தலமாகிய திருப்பாதிரிப்புலியூரில் உள்ள கடற்கரையை அடைந்த பக்தராகிய திருநாவுக்கரசு நாயனாரை உண்மையாகிய தவத்தைப் புரிந்த தவசிகளினுடைய கூட்டம் எல்லாம் அந்தக் கடற்கரைக்கு வந்து ஆரவாரம் செய்து கொண்டு எழுந்து நிற்க, எந்தத் திசைகளிலும் 'ஹரா, ஹரா' என்னும் ஒலியைப் போல கொந்தளிக்கும் நீர் நிரம்பிய பெரியதாக இருக்கும் அந்தச் சமுத்திரமும் பேரோசையை எழுப்பியது.' பாடல் வருமாறு:

"அத்திருப் பதியினில் அணைந்த அன்பரை
மெய்த்தவக் குழாமெலாம் மேவிஆர்த்தெழ
எத்திசை யினும்அர என்னும் ஓசைபோல்
தத்துநீர்ப் பெருங்கடல் தானும் ஆர்த்ததே."

அத்திரு-அந்த அழகிய. 'திரு-செல்வர்கள் வாழும்' எனலும் ஆம். ப்:சந்தி. பதியினில்-சிவத்தலமாகிய திருப்பாதிரிப்புலியூரில் உள்ள கடற்கரையை; இடஆகு பெயர்; உருபு மயக்கம். அணைந்த-அடைந்த. அன்பரை-பக்தராகிய திருநாவுக்கரசு நாயனாரை. மெய்-உண்மையாகிய. த்:சந்தி. தவக்குழாம்-தவத்தைப் புரிந்த தவசிகளினுடைய கூட்டம். எலாம்-யாவும்; இடைக்குறை. மேவி-அந்தக் கடற்கரைக்கு வந்து. ஆர்த்து எழ-ஆரவாரம் செய்து கொண்டு எழுந்து நிற்க. எத்திசையினும்-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய எல்லாத் திசைகளிலும். திசை: ஒருமை பன்மை மயக்கம். அர-ஹர, ஹர. என்னும்-என்று பக்தர்கள் கூறும். ஓசை போல்-சத்தத்தைப் போல. தத்து-கொந்தளிக்கும். நீர்-புனல் நிரம்பிய. ப்:சந்தி. பெரும்-பெரியதாக விளங்கும். கடல்தானும்-சமுத்திரமும். தான்: அசைநிலை. ஆர்த்தது-பேரோசையை எழுப்பியது. ஏ: சற்றசை நிலை.

பிறகு வரும் 133-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'யாவரும் வணங்கும் தகுதியைப் பெற்ற பெருந்தகையாகிய திருநாவுக்கரசு நாயனாரும் அந்தத் திருப்பாதிரிப்

புலியூரில் வாழும் திருத்தொண்டர்களுக்கு முன்னால் செழிப்பைப் பெற்ற திருப்பாதிரிப்புலியூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பிறைச் சந்திரனுடைய வெண்மையான கொழுந்தை அணிந்திருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய தோன்றாத் துணை ஈசரைத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டுப் பக்தி உண்டாக தரையில் விழுந்து அந்த ஈசரை வணங்கிப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு திருவருளின் வழி விளங்குமாறு ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருள்பவரானார்.'' பாடல் வருமாறு:

> '' **தொழுந்தகை நாவினுக் கரசும் தொண்டர்முன்**
> **செழுந்திருப் பாதிரிப் புலியூர்த் திங்கள்வெண்**
> **கொழுந்தணி சடையரைக் கும்பிட் டன்புற**
> **விழுந்தெழுந் தருள்நெறி விளங்கப் பாடுவார்.''**

தொழும்-யாவரும் வணங்கும். தகை-தகுதியைப் பெற்ற பெருந்தகையாகிய. நாவினுக்கரசும்-திருநாவுக்கரசு நாயனாரும். அரசு: திணை மயக்கம். தொண்டர்-அந்தத் திருப்பாதிரிப்புலியூரில் வாழும் திருத்தொண்டர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். முன்-முன்னால் செழும்-செழிப்பைப் பெற்று விளங்கும். திருப்பாதிரிப்புலியூர்-திருப்பாதிரிப் புலியூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; ஆகு பெயர். த்:சந்தி. திங்கள்-பிறைச்சந்திரனுடைய. வெண்-வெண்மையாகிய. கொழுந்து-கொழுந்தை. அணி-அணிந் திருக்கும். சடையரை-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய தோன்றாத் துணை ஈசரை. க்:சந்தி. கும்பிட்டு-தம்முடைய திருக்கரங்களைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பி கும்பிட்டுவிட்டு. அன்பு-பக்தி. உற-உண்டாக. விழுந்து-தரையில் விழுந்து அந்த ஈசரை வணங்கி. எழுந்து-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. அருள்-திருவருளினுடைய. நெறி-

வழி. விளங்க-திகழுமாறு. ப்:சந்தி. பாடுவார்-அந்த நாயனார் ஒரு திருப்பதிகத்தைப் பாடியருள்பவர் ஆனார்.

திருப்பாதிரிப்புலியூர்: இது நடு நாட்டில் கெடில நதிக் கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் தோன்றாத் துணையீசர், பாடலீசுவரர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் தோகையம்பிகை, பெரியநாயகி அம்மை என்பவை. தல விருட்சம் பாதிரி மரம். இந்தத் தலம் கூடலூருக்கு வடக்குத் திசையில் 3-மைல் தூரத்தில் கெடில நதியின் தென் கரையில் உள்ளது. வியாசகிரபாத முனிவர் வழிபட்டமையினால் இது வடபுலியூர் எனவும் வழங்கும். முடக் கால்களைப் பெற்ற ஒரு முயலினுடைய உருவத்தைச் சாபத்தினால் பெற்றவராகிய மங்கணர் என்னும் முனிவர் அந்த உருவம் நீங்கப் பெற்ற தலம் இது. இந்தச் செய்தியைத் திருப்பாதிரிப் புலியூர்த்தல புராணத்திலும் தேவாரத்திலும் காணலாம். அந்தத் தேவாரப் பாசுரம் வருமாறு:

"முன்னம் நின்ற முடக்கால்
 முயற்கருள் செய்து நீள்
புன்னை நின்று கமழ்
 பாதிரிப் புலி யூருளான்
தன்னை நின்று வணங்
 குந்தனைத் தவம் இல்லிகள்
பின்னை நின்ற பிணி
 யாக்கை யைப்பெறு வார்களே."

திருநாவுக்கரசு நாயனாரைச் சமணர்கள் ஒரு கருங்கல் தூணில் கட்டிக் கடலில் தள்ளிவிட அவர், "சொற்றுணை வேதியன்" என்று தொடங்கும் பாசுரம் அடங்கிய ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளிக் கடற்கரையின் மேல் ஏறிய தலம் இது. அந்த நாயனார் கரையேறின பிறகு, "ஈன்றாளுமாய்" என்று தொடங்கும் பாசுரத்தை முதலில் பெற்ற ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளிச் சில நாள் தங்கியிருந்த தலம் இது.

பிறகு வரும் 134-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார், ''ஈன்றாளுமாய் எனக் கெந்தையும் ஆகி'' என்று தொடங்கி, ''தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடி யோங்கட்கு'' எனறு முடியும் ஒரு திருப்பதிகத்தால் ஆகாயத்திலிருந்து பகீரதனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இறங்கி வந்த நீர் நிரம்பிய கங்கையாறு தங்கியிருக்கும் சடாபாரத்தைத் தன்னுடைய தலையின்மேற் பெற்றவனாகிய தோன்றாத் துணை ஈசனை, எல்லா உயிர்களுக்கும் சாட்சிகாக விளங்கும் ஒப்பற்றவனை, குளிர்ச்சியைப் பெற்ற செந்தமிழ் மாலைகளாகிய பல திருப் பதிகங்களைப் புகழ்ந்து அணிந்தருளினார்.' பாடல் வருமாறு:

''ஈன்றாளு மாய்எனக் கெந்தையும்
ஆகி' என எடுத்துத்
'தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்அடி யோங்கட்' கென்று
வான்தாழ் புனற்கங்கை வாழ்சடை
யானைமற் றெவ்வு யிர்க்கும்
சான்றாம் ஒருவனைத் தண்டமிழ்
மாலைகள் சாத்தினரே.''

'ஈன்றாளுமாக் எனக் கெந்தையும் ஆகி' என- அந்தத் திருநாவுக்கரசு நாயனார், ''ஈன்றாளுமாய் எனக்கெந்தையும் ஆகி'' என்று. என:இடைக்குறை. எடுத்து-தொடங்கி. 'தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்கட்கு' என்று-தோன்றாத் துணையாய் இருந்தனன் வன் அடியோங் கட்கு' என்று முடியும் ஒரு திருப்பதிகத்தால். வான்-ஆகா யத்திலிருந்து. தாழ்-பகீரதனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இறங்கி வந்த. புனல்-நீர்நிரம்பிய. கங்கை-கங்கை யாறு. வாழ்-தங்கியிருக்கும். சடையானை-சடாபாரத்தைத் தன்னுடைய தலையின்மேற் பெற்றவனாகிய தோன்றாத் துணை ஈசனை. மற்று:அசைநிலை. எவ்வுயிர்க்கும்-எல்லா

வகையான உயிர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். சான்றாம்-சாட்சியாக விளங்கும். ஒருவனை-ஒப்பற்றவனாகிய அந்த ஈசனை. த்:சந்தி. தண்-கேட்பதற்குக் குளிர்ச்சியாக விளங்கும். தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகள்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. சாத்தினர்-புகழ்ந்து அணிந்தருளினார். ஏ:ஈற்றசை நிலை.

இந்தப் பாடலில் குறிப்பிட்டுள்ள பாசுரம் வருமாறு: இது திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய திருவிருத்தம்.

"ஈன்றாளு மாய்எனக் கெந்தையுமாய்
உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்னடி யோங்களுக்கே."

இந்தத் திருப்பதிகத்தில் உள்ள இறுதிப் பாசுரம் வருமாறு:

"திருந்தா அமணர்தம் தீநெறிப்
பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம்
புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்கன் உடல்நெரித்
தாய்பா திரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப்பிற
வாமல்வந் தென்றுகொள்ளே."

அடுத்து வரும் 135-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'வேறாகவும் இத்தகையவையாகிய சொற்சுவை, பொருட் சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பல திருப்பதிகங்களை

அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி அந்தத் திருப் பாதிரிப்புலியூரில் தங்கிக் கொண்டிருந்து வெற்றியையும் இளமையையும் பெற்ற இடப வாகனத்தை ஓட்டுபவராகிய வீரட்டானேசுவரருடைய திருவடிகளை மிகுதியாக எண்ணிய எண்ணத்தினால் தம்மிடம் உண்டாகியதாகிய ஒரு விருப்பத் தினால் அந்தத் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து எழுந்தருளிப் பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்கு உரிய பறக்கும் கோட்டை களாகிய மூன்று புரங்களை எரித்து அழித்தவராகிய வீரட்டா னேசுவரர் எழுந்தருளியிருக்கும் திருவதிகை வீரட்டானம் என்னும் சிவத்தலத்துக்கு மீண்டும் வந்து சேர்வாரானார்." பாடல் வருமாறு:

''மற்றும் இனையன வண்டமிழ்
மாலைகள் பாடின வைகி
வெற்றி மழவிடை வீரட்டர்
பாதம் மிக நினைவால்
உற்றதொர் காதலில் அங்குநின்
றேகிஒன் னார் புரங்கள்
செற்றவர் வாழும் திருவதிகைப்
பதிசென் றடை வார்.''

மற்றும்-வேறாகவும். இனையன-இத்தகையவை யாகிய. வண்-சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை கள்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. பாடி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி. வைகி-அந்தத்திருப் பாதிரிப்புலியூரில் தங்கி. வெற்றி-வெற்றியையும். மழ— இளமையையும் பெற்ற. விடை-இடபவாகனத்தை ஓட்டுபவ ராகிய; ஆகு பெயர். வீரட்டர்-வீரட்டானேசுவரருடைய. பாதம்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். மிக— மிகுதியாக. நினைவால்-எண்ணிய எண்ணத்தினால். உற்றது-தம்மிடம் உண்டாகியதாகிய. ஓர்-ஒரு. காதலில்—

விருப்பத்தினால்; உருபு மயக்கம். அங்கு நின்று-அந்தத் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து. ஏகி-எழுந்தருளி. ஒன்னார்-பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்கு உரிய; ஒருமை பன்மை மயக்கம். புரங்கள்-பறக்கும் கோட்டைகளாகிய மூன்று புரங்களை. செற்றவர்-எரித்து அழித்தவராகிய வீரட்டானேசுவரர். வாழும்-எழுந்தருளி நித்தியவாசம் செய்து கொண்டிருக்கும். திருவதிகைப்பதி-திருவதிகை வீரட்டானம் என்னும் சிவத்தலத்திற்கு. சென்று-மீண்டும் எழுந்தருளி வந்து. அடைவார்-சேர்வாரானார்.

திருப்பாதிரிப்புலியூரைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியதாக இந்தப் பாடலில் குறிப்பிட்ட பல திருப்பதிகங்கள் இப்போது கிடைக்கவில்லை. ஒரு திருப்பதிகம் மாத்திரம் கிடைத்திருக்கிறது. மற்றவை மறைந்தன போலும்!

பிறகு வரும் 176 ஆம் கவியின் கருத்து வருமாறு:

'எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகிய மாணிக்க வரதேசுவரன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருமாணிகுழி என்னும் சிவத்தலத்துக்கும், சிவக்கொழுந்தீசர் எழுந்தருளி யிருக்கும் திருத்தினை நகருக்கும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைவாராய் அந்தச் சிவத்தலங்களுக்கு எழுந்தருளித் தாம் விழைந்த சொற்கள் அமைந்த மலர் மாலையாகிய திருப்பதிகங்களைப் பாடி அருளிக்கொண்டு மாணிக்கவரதேசுவரரையும், சிவக்கொழுந்தீசரையும் வணங்கிவிட்டு பலவகையான மலர்கள் மலர்ந்திருக்கும் மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலில் வீசும் நறுமணம் தம்முடைய திருவடிகளில் பொருந்த, நல்ல பொருள் நிரம்பிய வார்த்தைகளுக்கு அரசராகிய திருநாவுக்கரசு நாயனார் தான் வயல்களுக்குப் பாய்ந்து பலவகையாகிய பயிர்களை வளருமாறு செய்து அவற்றிலிருந்து கிடைக்கும் நெல் முதலியவற்றை விற்றுச் செல்வத்தை

அடைந்தவர்களை உண்டாக்கும் அழகிய கெடிய நதியைத் தாண்டி அந்த நாயனார் மேலே எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

"தேவர் பிரான் திருமாணி குழியும் திணை நகரும்
மேவினர் சென்று விரும்பிய சொன்மலர் கொண்டி
றைஞ்சிப்
பூவலர் சோலை மணமடி புல்லப் பொருள் மொழியின்
காவலர் செல்வத் திருக்கெடி லத்தைக்
கடந்த ணைந்தார்."

தேவர்-எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பிரான்-தலைவனாகிய மாணிக்கவரதேசுவரன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருமாணி குழியும்-திருமாணி குழி என்னும் சிவத் தலத்திற்கும். திணை நகரும்-சிவக்கொழுந்தீசர் எழுந்தருளியிருக்கும் ஆலயம் விளங்கும் திருத்திணை நகர் என்னும் சிவத்தலத்திற்கும். மேவினர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைபவராகி; முற்றெச்சம். சென்று-அந்தச் சிவத் தலங்களுக்கு எழுந் தருளி. விரும்பிய-தாம் விழைந்த. சொல்-இனிய சொற்கள் அமைந்த; ஒருமை பன்மை மயக்கம். மலர்-மலர்மாலை யாகிய திருப்பதிகங்களை; ஆகு பெயர். கொண்டு-பாடி யருளிக்கொண்டு. இறைஞ்சி - மாணிக்கவரதேசுவரரையும் சிவக் கொழுந்தீசுவரரையும் வணங்கிவிட்டு. ப்:சந்தி. பூ-பலவகையான மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்களாவன: பூவரச மலர், மகிழ மலர், வேப்ப மலர், சரக் கொன்றை மலர், புலிநகக் கொன்றை மலர், வில்வ மலர், கடம்ப மலர், பவள மல்லிகை மலர் முதலியவை. அலர்-மலர்ந்திருக்கும். சோலை-பூஞ்சோலையில். மணம்-வீசும் நறுமணம். அடி-தம்முடைய திருவடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். புல்ல-அவற்றை மிதித்துக்கொண்டு நடப்பதனால் பொருந்த. ப்:சந்தி. பொருள்-நல்ல அர்த்தம் நிரம்பிய. மொழியின்-வார்த்தைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம்.

காவலர்-அரசராகிய திருநாவுக்கரசு நாயனார். செல்வ-தான் வயல்களுக்குப் பாய்ந்து பல வகையாகிய பயிர்களை வளருமாறு செய்து அவற்றிலிருந்து கிடைக்கும் நெல் முதலியவற்றைவிற்றுச் செல்வத்தை அடைந்தவர்களை உண்டாக்கும்; திணை மயக்கம். த்:சந்தி. திரு-அழகிய. க்:சந்தி. கெடிலத்தை - கெடில நதியை. க்:சந்தி. கடந்து-தாண்டி. அணைந்தார்-அந்த நாயனார் அக்கரைக்கு எழுந்தருளினார்.

திருமாணி குழி: இது நடுநாட்டில் பெண்ணை யாற்றங் கரையில் விளங்கும் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மாணிக்கவரதேசுவரர். அம்பிகை மாணிக்க வல்லிஅம்மை. திருப்பாதிரிப்புலியூரிலிருந்து மேற்குத் திசையில் இரண்டரை மைல் தூரம் சென்றால் திருவஹீந்திரபுரம் என்னும் திருமாலினுடைய திவ்ய தேசத்தை அடையலாம்; அந்தத் திருக்கோயிலின் தென்புறத்தில் இருக்கும் கேபர் மலையின் ஓரமாகச் செல்லும் கொடி வழியில் ஒரு மைல் சென்றால் இந்தத் தலத்தை அடையலாம். திருமால் வாமனாவதாரம் செய்தருளிய சமயத்தில் மாணிக்கவரதேசுவரரைப் பூசித்த தலம் இது. மாணி-வாமனன்.

இந்தத் தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"நித்தநிய மத்தொழில னாகிநெடு
மால்குற ளனாகி மிகவும்
சித்தமதொ ருக்கிவழி பாடுசெய
நின்றசிவ லோக னிடமாம்
கொத்தலர் மலர்ப்பொழிலின் நீடுகுல
மஞ்ஞைநட மாட அதுகண்
டொத்தவரி வண்டுகளு வாவியிசை
பாடுதளி மாணி குழியே."

திருத்திணை நகர்: இது நடு நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் திருந்தீசுவரர், சிவக்கொழுந்தீசுவரர் என்பவை. அம்

பிகை ஒப்பிலாநாயகி. தல விருட்சம் கொன்றை மரம். இந்தத்தலம் இக்காலத்தில் தீர்த்தனகிரி என்று வழங்கும். இது தானூர் என்னும் சிற்றூருக்கு மேற்குத் திசையில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது.

பெரியான் என்னும் பள்ளன் தன்னுடைய நிலத்தை உழுது கொண்டிருக்கும்போது சிவக்கொழுந்தீசுவரர் ஒரு ஜங்கமரைப் போல வேடம் பூண்டு அவனிடம் எழுந்தருளி சோற்றைக் கேட்க, அவன் தன்னுடைய ஊருக்குச் சென்று சோற்றை எடுத்துக் கொண்டு வருவதாகக் கூறிவிட்டுச் சென்றான்; அவன் திரும்பி வருவதற்குள் அந்தச் சிவக்கொழுந்தீசுவரர் அவன் உழுதிருந்த வயலில் தினைப் பயிர் விளைந்து கதிர்கள் முற்றியிருக்குமாறு புரிந்தருளி மறைந்து போனார். அந்தப் பள்ளனும் அவனுடைய மனைவியும் வந்து தினைப் பயிர்கள் விளைந்திருப்பதைக் கண்டு வியப்பை அடைந்து ஜங்கமரைப் பார்க்க முடியாமல் திகைப்பை அடைந்து நின்றார்கள். அப்போது சிவக்கொழுந்தீசுவரர் அவர்களுக்குத் தம்முடைய தரிசனத்தை வழங்கியருளி இடப வாகனாரூடராகத் தோன்றி அவர்களைச் சிவலோக பதவியை அடையுமாறு புரிந்தருளினார். யாவரும் வியப்பை அடையும் வண்ணம் தினைப் பயிர்கள் விளைந்தமையால் இந்தச் சிவத்தலத்திற்குத் திருத்தினைநகர் என்னும் பெயர் உண்டாயிற்று. திருக்கோயிலுக்கு வடக்குத் திசையில் இருக்கும் தீர்த்தம் சாம்புவ தடாகம் என்று வழங்கும். இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

"வடிகொள் கண்ணிணை மடந்தையர் தம்பால்
மயில் துற்றுவஞ் சனைக்கிட மாகி
முடியு மாகரு தெல்எரு தேறும்
மூர்த்தியைமுத லாயபி ரானை
அடிகள் என்றடி யார்தொழு தேத்தும்
அப்பன் ஒபபிலா முலையுமை கோனைச்
செடிகொள் கான்மலி திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே."

பிறகு வரும் 137-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'கொடுமையாகிய செயல்களைப் புரியும் சமணர்களாகிய இழிந்தவர்கள் செய்யுமாறு புரிந்த கெட்ட துன்பங்கள் யாவும் பயன்படாமல் அழிய அவற்றையெல்லாம் வென்று சமுத்திரத்தின் கரை மேல் ஏறியருளிய இனிய தமிழ் மொழியினுடைய ஈசராகிய திருநாவுக்கரசு நாயனார் தங்களுடைய ஊருக்கு எழுந்தருளி மேகங்கள் ஏறித் தவழும் மாடங்கள் உயரமாக நிற்கும் திருவதிகை வீரட்டானம் என்னும் சிவத்தலத்தில் வாழும் மக்கள் எல்லாரும் தம்முடைய செயல்களில் ஆனந்தம் பொங்கி எழ விளங்கும் ஒலியை எழுப்பும் மங்கல வாத்தியங்களை வாசித்துக் கொண்டு மங்கலகரமான வார்த்தைகளைக் கூறலானார்கள்.' பாடல் வருமாறு:

"வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த
தீய மிறைகள் எல்லாம்
எஞ்சவென் றேறிய இன்தமிழ்
ஈசர் எழுந் தருள
மஞ்சிவர் மாடத் திருவதி
கைப்பதி வாணர் எல்லாம்
தம்செயல் பொங்கத் தழங்கொலி
மங்கலம் சாற்ற லுற்றார்."

வெம்-கொடுமையாகிய செயல்களைப் புரிந்து வரும். சமண்-சமணர்களாகிய; திணை மயக்கம். குண்டர்கள்-இழிந்தவர்கள். செய்வித்த-செய்யுமாறு புரிந்த. தீய-கெட்ட. மிறைகள்-துன்பங்கள். எல்லாம்-யாவும். எஞ்ச-பயன்படாமல் அழிய. வென்று-அவற்றையெல்லாம் வென்று விட்டு. ஏறிய-சமுத்திரத்தின் கரையினுடைய மேலே ஏறி வந்த. இன்-இனிய சுவையைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியினுடைய. ஈசர்-ஈசராகிய திருநாவுக்கரசு நாயனார். எழுந்தருள-தங்களுடைய ஊருக்கு எழுந்தருள. மஞ்சு-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். இவர்-ஏறித் தவழும்.

மாட-மாடங்கள் உயரமாக நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருவதிகை-திருவதிகை வீரட்டான மாகிய. ப்:சந்தி. பதி-சிவத்தலத்தில். வாணர்-வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாரும். தம்-தங்களுடைய. செயல்-செயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். பொங்க-ஆனந்தம் பொங்கி எழ. த்:சந்தி. தழங்கு ஒலி-ஒலியை எழுப்பும். மங்கலம்-மங்கல வாத்தியங்களை வாசித்துக் கொண்டு மங்கலகரமான வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். அந்த வாத்தியங்களாவன: நாகசுரம், ஒத்து, மத்தளம், கஞ்ச தாளங்கள், யாழ், வீணை, முகவீணை, கரடிகை, கஞ்சிரா, தம்புரா, சல்லரி, இடக்கை முதலியவை. சாற்றலுற்றார்-கூறலானார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 138-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருவதிகை வீரட்டானத்தில் வாழும் பக்தர்கள் அழகிய நீளமாக இருக்கும் தோரணங்களையும், வளப்பமாகிய குலைகளைப் பெற்ற பாக்கு மரங்களையும், மடல்களைக் கொண்ட வாழை மரங்களையும் ஒன்றனுக்கு ஒன்று சமமாக அமையும் வண்ணம் நட்டு வைத்து ஏழு தளங்களைப் பெற்ற கோபுரவாசலிலும், திண்ணைகள் ஆகிய எல்லா இடங்களிலும் தணிதல் இல்லாத ஒளி பெருகி வீசிய மலர்மாலைகளைத் தொங்கவிட்டுச் சிவப்பாக இருக்கும் சந்தனத்தால் தரையை மெழுகி அழகைப்பெற்ற நகரமாகிய அந்தத் திருவதிகை வீரட்டானத்தை முன்பு இருந்த அலங்காரங்களுக்கு மேலாக அலங்காரங்களைப் புரிந்து அவர்கள் அலங்கரித்து வைத்தார்கள்.' பாடல் வருமாறு:

"மணிநெடுந் தோரணம் வண்குலைப்
பூகம் மடற் கதலி
இணையுற நாட்டி எழுநிலைக்
கோபுரம் தெற்றி எங்கும்

தணிவில் பெருகொளித் தாமங்கள்
நாற்றிச்செஞ் சாந்து நீவி
அணிநகர் முன்னை அணிமேல்
அணிசெய் தலங்க ரித்தார்."

இது திருநாவுக்கரசு நாயனாரை வரவேற்பதற்காகத் திருவதிகை வீரட்டானத்தில் வாழும் பக்தர்கள் புரிந்தவற்றைக் கூறுவது. மணி-அந்தத்திருவதிகைவீரட்டானத்தில் வாழும் பக்தர்கள் அழகிய. நெடும்-நீளமாக இருக்கும். தோரணம்-தோரணங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். வண்-வளப்பத்தைப் பெற்ற. குலை-குலைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பூகம்-பாக்கு மரங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மடல்-மடல்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். கதலி-வாழை மரங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். இணை உற-ஒன்றுக்கு ஒன்று சமமாக அமையும் வண்ணம். நாட்டி-நட்டுவைத்து; எழு-ஏழு. நிலை-தளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கோபுரம் கோபுர வாசலிலும். தெற்றி-திண்ணைகள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-ஆகிய எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். தணிவு-குறைதல். இல்-இல்லாத; கடைக்குறை. பெருகு ஒளி-பிரகாசம் பெருகி வீசிய. த்:சந்தி. தாமங்கள்-மலர் மாலைகளை. நாற்றி-தொங்கவிட்டு. ச்:சந்தி. செம்-சிவப்பாக இருக்கும். சாந்து-அரைத்த சந்தனத்தைக் கொண்டு. நீவி-தரையை மெழுகி. அணி-அழகைப் பெற்ற. நகர்-பெரிய சிவத்தலமாகிய அந்தத் திருவதிகை வீரட்டானத்தை. முன்னை-முன்பு இருந்த. அணி-அலங்காரங்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். மேல்-மேலாக அமையும் வண்ணம். அணி செய்து-அவர்கள் அலங்காரங்களைப் புரிந்து. அணி: ஒருமை பன்மை மயக்கம். அலங்கரித்தார்-அலங்காரம் செய்து வைத்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 139-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நிலைபெற்று விளங்கிய பக்தியைக்கொண்ட நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளப் பங்களைக் கொண்ட பெரிய ஊராகிய அந்தத் திருவதிகை வீரட்டானத்தில் வாழும் ஆண் மக்களும், விளங்குகின்ற அணிகலன்களை அணிந்து கொண்டிருந்த பெண்மணிகளும் இனிமையாகக் கேட்கும் ஓசையும், ச, ரி, க, ம, ப, த, நிச என்னும் ஏழு சுவரங்களைப் பெற்ற இசைப் பாடல்களின் கானமும், எல்லா விடங்களிலும் எழுந்து மிகுதியாக ஒலிக்க தங்கத்தால் அமைந்த சுண்ணத்தையும், மலர்களையும், நெற்பொரிகளையும் எல்லா இடங்களிலும் தூவி வைத்து அந்தப் பழமையான நகரமாகிய திருவதிகை வீரட்டானத் தின் வெளியிடத்திற்கு யாவரும் சுற்றிவந்து திருத்தொண்ட ராகிய திருநாவுக்கரசு நாயனாரை எதிரில் சென்று வர வேற்றார்கள்.' பாடல் வருமாறு:

" மன்னிய அன்பின் வளநகர்மாந்தர்
வயங் கிழையார்
இன்னிய நாதமும் ஏழிசை
ஓசையும் எங்கும் விம்மப்
பொன்னியல் சுண்ணமும் பூவும்
பொரிகளும் தூவி எங்கும்
தொன்னக ரின்புறம் சூழ்ந்தெதிர்
கொண்டனர் தொண்ட ரையே. "

மன்னிய-நிலை பெற்று விளங்கிய. அன்பின்-பக்தி யைக் கொண்ட. வள-நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம், திருமாளிகை வளம் முதலிய வளப்பங்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். நகர்-பெரிய சிவத்தலமாகிய அந்தத் திருவதிகை வீரட்டா னத்தில் வாழும்; இடஆகு பெயர். மாந்தர்-ஆடவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். வயங்கு-விளங்கும். இழையார்- அணிகலன்களை அணிந்து கொண்டிருக்கும் பெண்மணி களும்; ஒருமை பன்மை மயக்கம். அந்த அணிகலன்

களாவன: உச்சிப்பூ, அராக்கொடி, மாட்டல், ஜிமிக்கிகள், வங்கி, தோள்வளைகள், காசுமாலை, முத்து மாலை, நவரத்தின மாலை, சங்கிலி, கைக்காப்புக்கள், கங்கணங்கள், மேகலை, ஒட்டியாணம், கால்காப்புக்கள், கைமோதிரங்கள், மெட்டிகள், பாதசரம், சிலம்புகள் முதலியவை. இன்னிய-இனியதாகக் கேட்கும்; விரித்தல் விகாரம். நாதமும்-கானமும். ஏழ்இசை- ச, ரி, க, ம, ப, த, நிச என்னும் ஏழு சுவரங்களைக் கொண்ட இசைப் பாடல்களினுடைய. இசை:ஒருமை பன்மை மயக்கம். ஓசையும்-இனிய கானமும். எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். விம்ம-எழுந்து மிகுதியாக ஒலிக்க. ப்:சந்தி. பொன்-தங்கத்தால். இயல் மகளிர் உரலில் இட்டுக் குத்திய. சுண்ணமும்-பொற்சுண்ணத்தையும்; மகளிர் பொற்சுண்ணத்தை இடிப்பதைக் கூறும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. பூவும்-மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். பொரிகளும் - நெற்பொரிகளையும். எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். தூவி-வாரி இறைத்து. தொல்-பழமையான. நகரின்புறம்-பெரிய சிவத்தலமாகிய திருவதிகை வீரட்டானத்தின் வெளியிடத்திற்கு. சூழ்ந்து-யாவரும் சுற்றி வந்து. தொண்டரை-அந்தத் திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாரை. எதிர்கொண்டனர்-அவருக்கு எதிரில் சென்று வரவேற்றார்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏ:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 140-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பரிசுத்தமாகிய வெண்மையாகிய விபூதியை முழுவதும் பூசிக்கொண்ட தங்கத்தைப் போலச் சிவந்த திருமேனியையும், தம்முடைய திருமார்பில் தொங்கும் உத்திராக்க மாலையையும், தம்முடைய தலைவனாகிய வீரட்டானேசுவரனுடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்து விளங்கும் திருவடிகளைத் தழுவி எண்ணும் திருவுள்ளத்

தையும் நைவை அடைந்து உருக்கத்தைப் பெற்றுப் பாய்வ தைப் போலப் பக்தியினால் நீரைச் சொரியும் திருவிழி களையும், திருப்பதிகங்களாகிய செம்மையாகிய செந்தமிழ்ச் சொற்கள் மேவிய சிவந்த அதரங்களைக் கொண்ட திருவா யையும் உடைய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் ஒரு திரு வீதிக்குள் நுழைந்தார்.' பாடல் வருமாறு:

" தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியும் தாழ் வடமும்
நாயகன் சேவடி தைவரும்
சிந்தையும் நைந்து ருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதி யுள்ளே. "

தூய-பரிசுத்தமாக உள்ள. வெண்-வெண்மையாகிய. நீறு-விபூதியை. துதைந்த-முழுவதும் பூசிக் கொண்ட. பொன்-தங்கத்தைப்போலச் சிவந்த. மேனியும்-திருமேனி யையும். தாழ்-தம்முடைய திருமார்பில் தொங்கும். வடமும்-உருத்திராக்க மாலையையும். நாயகன்-தம்முடைய தலைவனாகிய வீரட்டானேசுவரனுடைய. சேவடி-செந்தா மரை மலர்களைப் போலச் சிவந்து விளங்கும் திருவடிகளை; அடி: ஒருமை பன்மை மயக்கம். தைவரும்-தழுவிக் கொண்டு தியானிக்கும். சிந்தையும்-திருவுள்ளத்தையும். நைந்து-நைவை அடைந்து. உருகி-உருக்கத்தைப் பெற்று. ப்:சந்தி. பாய்வதுபோல்-ஓடுவதுபோல. அன்பு-பக்தியினால். நீர்-நீரை. பொழி-இடைவிடாமல் சொரிந்து கொண்டிருக்கும். கண்ணும்-திருவிழிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். பதிக-தேவாரத் திருப்பதிகங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செம்-செம்மையாகிய; சிறப்பாக உள்ள. சொல்-செந்தமிழ்ச் சொற்கள்; ஒருமை பன்மை மயக்கம். மேய-மேவிய. செவ்வாயும்-சிவந்த அதரங்களைக்கொண்ட

திருவாயையும். உடையார்-பெற்றவராகிய அந்தத் திரு நாவுக்கரசு நாயனார். வீதியுள்ளே-திருவதிகை வீரட்டானத் தில் உள்ளே ஒரு தெருவுக்குள். ஏ:ஈற்று அசை நிலை. புகுந்தனர்-நுழைந்தார். விபூதி தூய்மையானது என்பதைப் புலப்படுத்தும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

அடுத்து வரும் 141-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு ஒரு தெருவுக்குள் எழுந்தருளிய திருநாவுக் கரசு நாயனாரைப் பார்த்த திருவதிகை வீரட்டானத்தில் வாழும் ஆடவர்களும் பெண்மணிகளும் பார்த்தார்கள்; தங்களுடைய கைகளைத் தங்களுடைய தலைகளின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டுப் பிறகு தரையில் விழுந்து வணங்கி எழுந்து நின்று கொண்டு, "இத்தகைய கருணை யைப் பார்த்தால் கொடுமையாகிய செயல்களைப் புரியும் சமணர்களாகிய இழிந்தவர்கள் இவருக்குத் துன்பத்தை உண்டாக்க சினம் உண்டானவாறு எவ்வண்ணம்?" எனக் கூறுவார்கள்; பிறகும் அவரைத் தொண்டராகத் தடுத்து ஆட்கொண்ட தலைவனாகிய வீரட்டானேசுவரனை வணங்கி அவர்கள் தோத்திரங்களைக் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

" கண்டார்கள் கைதலை மேல்
குவித்திந்தக் கருணை கண்டால்
மிண்டாய செய்கை அமண்கையர்
தீங்கு விளைக்கச் செற்றம்
உண்டாயின வண்ணம் எவ்வண்ணம்?
என்றுரைப் பார்கள்; பின்னும்
தொண்டாண்டு கொண்ட பிரானைத்
தொழுது துதித்த னரே."

கண்டார்கள்-அவ்வாறு ஒரு தெருவுக்குள் எழுந்தருளிய திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்தவர்களாகிய திரு வதிகை வீரட்டானத்தில் வாழும் ஆடவர்களும் பெண்மணி

களும் பார்த்தார்கள். கை-பார்த்துவிட்டுத் தங்களுடைய கைகளை; ஒருமை பன்மை மயக்கம். தலைமேல்-தங்களுடைய தலைகளின் மீது; ஒருமை பன்மை மயக்கம். குவித்து-குவித்துக் கூப்பிக் கும்பட்டு விட்டுப் பிறகு தரையில் விழுந்து வணங்கி எழுந்து நின்று கொண்டு. இந்த-இத்தகைய. க்:சந்தி. கருணை-வீரட்டானேசுவரர் இவருக்கு வழங்கிய கருணையை. கண்டால்-பார்த்து விட்டால். மீண்டு ஆய-கொடுமையாகிய. செய்கை-செயல்களைப் புரியும்; ஒருமை பன்மை மயக்கம். சமண்-சமணர்களாகிய; திணை மயக்கம். கயர்-இழிந்தவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தீங்கு-இவருக்குத் துன்பத்தை. விளைக்க-உண்டாக்க. ச்:சந்தி. செற்றம்-இவரிடம் சினம். உண்டாயின வண்ணம்-உண்டான வாறு. எவ்வண்ணம்-எவ்வாறு. என்று - என. உரைப்பார்கள்-அந்த ஆடவர்களும் பெண்மணிகளும் கூறுவார்கள். பின்னும்-பிறகும். தொண்டு-இவரைத் திருத்தொண்டராக; திணை மயக்கம். ஆண்டு கொண்ட-தடுத்து ஆளாக ஏற்றுக் கொண்ட. பிரானை-இவருடைய தலைவனாகிய வீரட்டானேசுவரனை. த்:சந்தி. தொழுது-வணங்கி விட்டு. துதித்தனர்-அந்த ஆடவர்களும் பெண்மணிகளும் தோத்திரங்களைக் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏ:ஈற்றசை நிலை.

அடுத்து உள்ள 142-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இவ்வாறு அந்த ஆடவர்களும் பெண்மணிகளும் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் துதித்ததைப் போல் வேறு பல ஊர்களில் வாழும் மக்களும் அந்த நாயனாருடைய புகழைக் கூறித் துதிகளைக் கூற, தம்முடைய திருமேனி முழுவதும் வெள்ளை நிறத்தை உடைய விபூதியின் பிரகாசத்தை அங்கே வந்து சேர்ந்த மக்களுடைய கூட்டங்களும் கலந்துகொண்டு போக அவ்வாறு எழுந்தருளிய பக்தராகிய திருநாவுக்கரசு நாயனாரும் எழுந்தருளி வந்து சேர்ந்து அழகிய பவளத்தைப் போல சிவந்த நிறத்தைப்

பெற்ற திருமேனியை உடைய வீரட்டானேசுவரர் எழுந்தருளியிருக்கும் ஆலயம் விளங்கும் திருவதிகை வீரட்டானத்தை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

> '' இவ்வண்ணம் போல எனைப்பல
> மாக்கள் இயம்பி ஏத்த
> மெய்வண்ண நீற்றொளி மேவும்
> குழாங்கள் விரவிச் செல்ல
> அவ்வண்ணம் நண்ணிய அன்பரும்
> வந்தெய்தி அம்பவளச்
> செவ்வண்ணர் கோயில் திருவீரட்
> டானத்தைச் சேர்ந்தனரே. ''

இவ்வண்ணம் போல-இவ்வாறு அந்த ஆடவர்களும் பெண்மணிகளும் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் துதித்ததைப் போல. எனைப் பல-வேறு பல ஊர்களில் வாழும். மாக்கள்-மக்களும். இயம்பி-அந்த நாயனாருடைய புகழைக் கூறி. ஏத்த-துதிகளைக் கூற. மெய்-தம்முடைய திருமேனி முழுவதும். வண்ண-வெள்ளை நிறத்தை உடைய. நீற்று-விபூதியினுடைய. ஒளி-பிரகாசத்தை. மேவும்-அங்கே வந்து சேர்ந்த மக்களுடைய; ஆகு பெயர். குழாங்கள்-கூட்டங்களும். விரவி-அவரோடு கலந்துகொண்டு. ச்:சந்தி. செல்ல-போக. அவ்வண்ணம்-அவ்வாறு. நண்ணிய-எழுந்தருளிய. அன்பரும்-திருவதிகை வீரட்டானேசுவரருடைய பத்தராகிய திருநாவுக்கரசு நாயனாரும். வந்து-எழுந்தருளி வந்து. எய்தி-சேர்ந்து. அம்-அழகிய. பவள-பவளத்தைப் போல. ச்:சந்தி. செவ்வண்ணர்-சிவந்த நிறத்தைப் பெற்ற திருமேனியை உடையவராகிய. கோயில்-வீரட்டானேசுவரர் எழுந்தருளியிருக்கும் ஆலயம் விளங்கும். திருவீரட்டானத்தை-திருவதிகை வீரட்டானத்தை. ச்:சந்தி. சேர்ந்தனர்-அந்த நாயனார் அடைந்தார். ஏ:ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 143-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருவதிகை வீரட்டானத்திற்கு எழுந்தருளிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எல்லாத் தேவர்களுடைய தலைவனும், யாவரையும் ஆட்களாகப் பெற்ற தலைவனும் ஆகிய வீரட்டானேசுவரனை அவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குள் நுழைந்து அந்த ஈசுவரனை அந்த நாயனார் வணங்கி விட்டு நம்பிக்கை உண்டாகும் பக்தியினால் விருப்பத்தை அடைந்த காதலோடு திளைத்து இன்பத்தை அடைந்து ''அடியேங்களுடைய தலைவனாகிய இந்த வீரட்டானேசுவரனை ஏழையேன் ஆகிய அடியேன் பழைய காலத்தில் சமண சமயத்தில் அடியேன் சேர்ந்திருந்த காலத்தில் இகழ்ந்தது என்ன முட்டாள்தனம்?'' என எண்ணி தம்முடைய கழிவிரக்கத்தோடு ஒரு திருத்தாண்டகமாகிய செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு பாசுரத்தைப் பாடியருளி அந்த நாயனார் மகிழ்ச்சியை அடைந்தார்.' பாடல் வருமாறு:

'' உம்பர்தம் கோனை உடையபி
ரானைஉள் புக்கி றைஞ்சி
நம்புறும் அன்பின் நயப்புறு
காத லினால் திளைத்தே
'எம்பெரு மான்றனை ஏழையேன்
நான்பண் டிகழ்ந்த' தென்று
தம்பரி வால்திருத் தாண்டகச்
செந்தமிழ் சாற்றி வாழ்ந்தார். ''

உம்பர்தம்-அவ்வாறு திருவதிகை வீரட்டானத்திற்கு எழுந்தருளிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எல்லாத் தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம்:அசை நிலை. கோனை-அரசனை. உடைய-யாவரையும் ஆட்களாகப் பெற்ற. பிரானை-தலைவனாகிய அந்த வீரட்டானேசுவரனை. உள்-அவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குள். புக்கு-நுழைந்து. இறைஞ்சி-அந்த வீரட்டானேசுவரரை வணங்கிவிட்டு. நம்புறும்-நம்பிக்கை உண்டாகும்-

நம்பு:முதல் நிலைத் தொழிற் பெயர். அன்பின்-பக்தியினால். நயப்புறு-தாம் விருப்பத்தை அடைந்த. காதலினால்-பக்தியோடு; உருபு மயக்கம். திளைத்து-பேரானந்த சாகரத்தில் முழுகி இன்புற்று. ஏ:அசை நிலை. எம்-அடியேங்களுடைய: இது திருநாவுக்கரசு நாயனார் தம்மையும் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியாரையும் சேர்த்துக் கூறியது. பெருமான் தனை-தலைவனாகிய இந்த வீரட்டானேசுவரனை. தன்:அசைநிலை. ஏழையேன்-அறிவு இல்லாத அடியேனாகிய. நான்-யான். பண்டு-சமண சமயத்தைச் சார்ந்து அடியேன் இருந்த அந்தப் பழைய காலத்தில். இகழ்ந்தது-இந்த வீரட்டானேசுவரனை இகழ்ந்து பேசியது என்ன முட்டாள்தனம். என்று-என எண்ணி. தம்-தம்மிடம் உண்டாகிய. பரிவால்-கழிவிரக்கத்தோடு; உருபு மயக்கம். திருத்தாண்டக-ஒரு திருத்தாண்டகமாகிய. ச்:சந்தி. செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு பாசுரத்தை; ஆகுபெயர். சாற்றி-பாடியருளி. வாழ்ந்தார்-மகிழ்ச்சியை அடைந்தார். இந்தப் பாடலில் குறிப்பிட்ட பாசுரத்தைக் கொண்டது ஏழைத் திருத்தாண்டகம் என்னும் திருப்பதிகம். அந்தத் திருப்பதிகத்தில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

"வெறிவிரவு கூவிளநற் றொங்கலானை
வீரட்டத் தானைவென் றேற்றினானைப்
பொறியரவி னானைப்புள் ளூர்தியானைப்
பொன்னிறத்தி னானைப் புகழ்தக் கானை
அறிதற்கரியசீர் அம்மான் தன்னை
அதியரைய மங்கை அமர்ந்தான் தன்னை
எறிகெடிலத் தானை இறைவன் தன்னை
ஏழையே னான்பண் டிகழ்ந்தவாறே."

இந்தத் திருப்பதிகத்தில் இறுதியாக வரும் திருத்தாண்டகம் வருமாறு:

"முலைமறைக்கப் பட்டுநீ ராடாப் பெண்கள்
முறைமுறையால் நம்தெய்வம் என்றுநீண்டித்
தலைபறிக்கும் தன்மையர்களாகி நின்று
தவமேயென் றவம்செய்து தக்கதோரார்
மலைமறிக்கச் சென்ற இலங்கைக்கோனை
மதனழியச் செற்றசே வடியினானை
இலைமறித்த கொன்றையந் தாரான் தன்னை
ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே."

பிறகு வரும் 144-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருமாலுக்கும் பிரம தேவனுக்கும் திருவடிகளையும் திருமுடியையும் பன்றி உருவெடுத்து நிலத்தைத் தோண்டிப் பார்த்தும், அன்னப் பறவையின் வடிவத்தை எடுத்து மேலே பறந்து பார்த்தும் தெரிந்து கொள்ளாதவனாகிய அந்த வீரட்டானேசுவரனை, தன்னுடைய அடியவர்களுக்கு எளியவனாக விளங்குபவனை, பரவிய கெடில நதியின் நீர் சுற்றி ஓடும் திருவதிகை வீரட்டானத்தில் உள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அமுதத்தைப் போன்றவனை, அறிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள பெருமையையும், பக்தியாகிய இயல்பையும் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் கழிவிரக்கத்தை அடைந்ததைப் புலப்படுத்தும் செந்தமிழ் மொழியில் அமைந்த திருத் தாண்டகங்கள் பலவற்றைப் பாடியருளித் திருப்பணிகளைப் புரிந்து கொண்டு வரும் காலத்தில்." பாடல் வருமாறு:

"அரிஅயனுக் கரியானை
அடியவருக் கெளியானை
விரிபுனல்சூழ் திருவதிகை
வீரட்டா னத்தமுதைத்
தெரிவரிய பெருந்தன்மைத்
திருநாவுக் கரசுமனம்

பரிவுறுசெந் தமிழ்ப்பாட்டுப்
பலபாடிப் பணிசெயும்நாள்.''

இந்தப் பாடல் குளகம். அரி-திருமாலுக்கும். அயனுக்கு-பிரமதேவனுக்கும். அரியானை-திருவடிகளையும் திருமுடியையும் பன்றி உருவை எடுத்து நிலத்தைத் தோண்டிப் பார்த்தும், அன்னப் பறவையின் வடிவத்தை எடுத்து மேலே பறந்து பார்த்தும் தெரிந்து கொள்ளாதவனாகிய அந்த வீரட்டானேசுவரனை. அடியவருக்கு-தன்னுடைய அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். எளியானை-எளியவனாக விளங்குபவனை. விரி-பரவிய. புனல்-கெடில நதியின் நீர். சூழ்-சுற்றி ஓடும். திருவதிகை வீரட்டானத்து-திருவதிகை வீரட்டானத்தில் உள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும்; இட ஆகு பெயர். அமுதை-அமுதத்தைப் போன்ற அந்த ஈசுவரனை. த்:சந்தி. தெரிவரிய-யாராலும் அறிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள. பெரும்-பெருமையையும். தன்மை-பக்தியாகிய இயல்பையும் பெற்றவராகிய; ஆகு பெயர். த்:சந்தி. திருநாவுக்கரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணைமயக்கம். மனம்-தம்முடைய திருவுள்ளத்தில். பரிவு-தாம் சமண சமயத்தைச் சார்ந்திருந்ததை எண்ணிக் கழிவிரக்கத்தை. உறு-அடைந்ததைப் புலப்படுத்தும். செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. ப்:சந்தி. பாட்டு- பாசுரங்களாகிய திருத்தாண்டகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பல-பலவற்றை. பாடி-பாடியருளி. ப்:சந்தி. பணி-தமக்கு உரிய திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். செயும்-புரிந்து கொண்டு வரும்; இடைக்குறை. நாள்-காலத்தில்.

அடுத்து வரும் 145-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'புன்மையாகிய அறிவைப் பெற்ற சமணர்களுக்காகப் பல தீய செயல்களைச் செய்து கொண்டு வாழும் அந்தப் பல்லவ மன்னனும் தன்னுடைய பழைய தீய வினையாகிய பந்தபாசம் தன்னை விட்டு நீங்கத் துன்பங்களை விட்டு

ஒழித்து அந்தத் திருவதிகை வீரட்டானத்தை அடைந்து வீரட்டானேசுவரர் தடுத்து ஆளாகக் கொண்ட திருநாவுக் கரசு நாயனாரை வணங்கிவிட்டு வலிமையைப் பெற்ற சமணர்களை விட்டு விட்டு இளமையைப் பெற்ற இடப வாகனத்தை ஓட்டுபவனாகிய அந்த வீரட்டானேசுவரனு டைய திருவடிகளை அடைந்தான்.' பாடல் வருமாறு:

"புல்லறிவிற் சமணர்க்காப்
பொல்லாங்கு புரிந்தொழுகும்
பல்லவனும் தன்னுடைய
பழவினைப்பா சம்பறிய
அல்லல்ஒழிந் தங்கெய்தி
ஆண்டஅர சினைப்பணிந்து
வல்லமணர் தமைநீத்து
மழவிடையோன் தாளடைந்தான்."

புல்-புன்மையாகிய. அறிவின் - அறிவைப் பெற்ற. சமணர்க்கா-சமணர்களுக்காக; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பொல்லாங்கு-பல துன்பங்களை; ஒருமை பன்மை மயக்கம். என்றது சைவசமயத்தினர்களை ஒறுத்தல், சமணர் கள் புரியும் தீய செயல்களுக்கு உடம்பட்டு உதவி செய்தல் முதலியவை. புரிந்து-செய்துகொண்டு. ஒழுகும்-வாழும். பல்லவனும்-அந்தப் பல்லவ மன்னனும். தன்னுடைய-தன் னுடைய பழம் பிறவியில் புரிந்த. வினை-தீய வினையாகிய. ப்:சந்தி. பாசம்-பாசபந்தம். பறிய-தன்னைவிட்டு அகல. அல்லல்-துன்பங்களை; ஒருமை பன்மை மயக்கம். ஒழிந்து-விட்டு நீங்கி. அங்கு-அந்தத் திருவதிகை வீரட்டானத்தை. எய்தி-அடைந்து. ஆண்ட-வீரட்டானேசுவரர் தடுத்து ஆளாகக் கொண்ட. அரசினை-திருநாவுக்கரசு நாயனாரை; திணைமயக்கம். ப்:சந்தி. பணிந்து-வணங்கிவிட்டு. வல்-வலிமையைப் பெற்ற. அமணர்தமை-சமணர்களை; தம்: அசை நிலை. நீத்து- விட்டு விட்டு. மழ-இளமையைப்

பெற்ற. விடையோன்-இடபவாகனத்தை ஓட்டுபவனாகிய அந்த வீரட்டானேசுவரனுடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அடைந்தான்-போய்ச் சேர்ந்தான். சிவகதியை அடைந்தான் என்பது கருத்து.

அடுத்து வரும் 146-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'முக்தி இன்னதென்று தெரிந்து கொள்ளாத சமணர்கள் கூறிய வார்த்தைகளைப் பொய்யான வார்த்தைகள் என எண்ணி உண்மையைத் தெரிந்து கொண்ட அந்தப் பல்லவ மன்னனும் திருவதிகை வீரட்டானம் என்னும் பெரிய சிவத் தலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவராகிய வீரட்டானேசுவரருக்குப் பாடலிபுத்திரமாகிய திருப்பாதிரிப் புலியூரில் சமணத் துறவிகள் தங்கியிருக்கும் பள்ளிகளோடு மலைக்குகைகளையும் சேர இடித்துவிட்டு அவற்றில் இருந்த பண்டங்களைக் கொண்டுவந்து குணபர வீச்சரம் என்னும் திருக்கோயிலை அந்தப் பல்லவ மன்னன் கட்டினான்.' பாடல் வருமாறு:

"வீடறியாச் சமணர்மொழி
பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை
நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண்
பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து
குணபரவீச் சரம்எடுத்தான்."

வீடு-முத்தி இன்னதென்று. அறியா-தெரிந்து கொள்ளாத. ச்:சந்தி. சமணர்-சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மொழி-கூறிய வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். பொய்-பொய்யான வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். என்று-என எண்ணி. மெய்-உண்மையை.

உணர்ந்த-தெரிந்து கொண்ட. காடவனும்-அந்தப் பல்லவ மன்னனும். திருவதிகை நகரின்கண்-திருவதிகை வீரட்டானம் என்னும் பெரிய சிவத்தலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும். கண்ணுதற்கு-தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவராகிய வீரட்டானேசுவரருக்கு. ப்:சந்தி. பாடலி புத்திரத்தில்-பாடலிபுத்திரமாகிய திருப்பாதிரிப்புலியூரில். அமண்-சமணத் துறவிகள் தங்கியிருக்கும்; திணை மயக்கம். பள்ளியொடு-பள்ளிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். பாழிகளும்-மலைக்குகைகளையும். கூட-சேர. இடித்து-இடித்துவிட்டு. க்:சந்தி. கொணர்ந்து-அவற்றில் இருந்த பொருள்களைக் கொண்டு வந்து. குணபர வீச்சரம்-குணபர வீச்சரம் என்னும் திருநாமத்தைப் பெற்ற திருக்கோயிலை. எடுத்தான்-கட்டினான்.

பிறகு வரும் 147-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இந்தக் காலத்தில் திருப்பணிகளைப் புரிந்து வருகின்ற இனிய சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளைப் பெற்ற செந்தமிழ் மொழிக்கு அரசராகிய வாகீசர் என்னும் அழகிய முனிவராகிய திருநாவுக்கரசு நாயனாரும் பிறைச் சந்திரன் தங்கியிருக்கும் தம்முடைய சடாபாரத்தின் மேல் பல பாம்புகளை அணிந்திருப்பவர்களாகிய சிவபெருமான்கள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவத் தலங்கள் பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான்களை வணங்கி விட்டு இனிய சுவையைப் பெற்ற சொற்களைக் கொண்டவையும், சிவபெருமானுடைய திருநாமத்தை வைத்துப் பாடியிருப்பவையும் ஆகிய செந்தமிழ் மொழியில் அமைந்த பல திருப்பதிகங்களை அந்தச் சிவ பெருமான்களுக்குச் சூட்டி தமக்கு உரிய தொண்டுகளைப் புரியும் பொருட்டு அந்த நாயனார் மேலே தொடர்ந்து எழுந்து செல்வாரானார்.' பாடல் வருமாறு:

"இந்நாளில் திருப்பணிகள்
செய்கின்ற இன்றமிழ்க்கு
மன்னான வாகீசத்திருமுனியும்
மதிச்சடை மேல்
பன்னாகம் அணிந்தவர்தம்
பதிபலவும் சென்றிறைஞ்சிச்
சொன்னாமத் தமிழ்புனைந்து
தொண்டுசெய்வான் தொடர்ந்தெழுவார்."

இந்நாளில்-இந்தக் காலத்தில். திருப்பணிகள்-திருப்பணிகளை. செய்கின்ற-புரிந்து வருகின்ற. இன்-இனிய சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளைப் பெற்ற. தமிழ்க்கு-செந்தமிழ் மொழிக்கு. மன் ஆன-அரசர் ஆன. வாகீச-வாகீசர் என்னும். த்:சந்தி. திரு-அழகிய. முனியும்-முனிவராகிய திருநாவுக்கரசு நாயனாரும். மதி-பிறைச் சந்திரன் தங்கியிருக்கும். ச்:சந்தி. சடைமேல்-சடாபாரத்தின்மீது. பல்-பல. நாகம்-பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். அணிந்தவர் தம்-அணிந்திருப்பவர்களாகிய சிவபெருமான்கள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். தம்: அசை நிலை. பதி-சிவத்தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும்-பலவற்றிற்கும். சென்று-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. இறைஞ்சி-அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கிவிட்டு. ச்:சந்தி. சொல்-இனிய சுவையைப் பெற்ற சொற்களைக் கொண்டவையும்; வினையாலணையும் பெயர். சொல்: ஒருமை பன்மை மயக்கம். நாம-சிவபெருமானுடைய திருநாமத்தை வைத்துப் பாடியிருப்பவையும் ஆகிய. த்:சந்தி. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த பல திருப்பதிகங்களை; ஆகு பெயர். புனைந்து-அந்தச் சிவபெருமான்களுக்குச் சூட்டி. தொண்டு-தமக்கு உரிய தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்வான்-புரியும் பொருட்டு.

தொடர்ந்து-அந்த நாயனார் மேலே தொடர்ந்து. எழுவார்-எழுந்து செல்வாரானார்.

அடுத்து வரும் 148-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவதிகைவீரட்டானம் என்னும் சிவத்தலத்திற்குப் பக்கத்தில் உள்ள திருவெண்ணெய் நல்லூருக்கும், அபிராமேசுவரர் திருவருளை வழங்கும் திரு ஆமாத்தூருக்கும், திருக்கோவலூர் முதலாக உள்ள அழகிய சிவத்தலங்கள் பிறவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைப் பணிந்து விட்டு, சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளாகிய வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ்த் திருப்பதிகங்களைப் பாடியருளிப் பெருகி எழுந்த விருப்பத்தோடு இடப வாகனத்தை ஓட்டுபவராகிய சிவக்கொழுந்தீசர் மகிழ்ச்சியைப் பெற்று எழுந்தருளியிருக்கும் பெண்ணாகடத்திற்கு எழுந்தருளி அடைந்தார்.' பாடல் வருமாறு:

" திருவதிகைப் பதிமருங்கு
திருவெண்ணெய் நல்லூரும்
அருளுதிரு ஆமாத்தூர்
திருக்கோவ லூர்முதலா
மருவுதிருப் பதிபிறவும்
வணங்கிவளத் தமிழ்பாடிப்
பெருகுவிருப் புடன்விடையார்
மகிழ்பெண்ணா கடம் அணைந்தார். "

திருவதிகை-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவதிகை வீரட்டானம். ப்:சந்தி. பதி-என்னும் சிலத் தலத்திற்கு. மருங்கு-பக்கத்தில் உள்ள. திருவெண்ணெய் நல்லூரும்-திருவெண்ணெய் நல்லூருக்கும். அருளு-அபிராமேசுவரர் தம்முடைய திருவருளை வழங்கும். ஆமாத்தூர்-திருவாமாத்தூருக்கும். திருக்கோவலூர் முதலா-திருக்

கோவலூர் முதலாக. மருவு-உள்ள. திருப்பதி-அழகிய சிவத் தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பிறவும்-பிற வற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி. வணங்கி-அந்தத் தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைப் பணிந்து விட்டு. வள-சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளாகிய வளப்பத்தைப் பெற்ற. த்:சந்தி. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த பல திருப்பதிகங்களை; ஆகு பெயர். பாடி-அந்த நாய னார் பாடியருளி. ப்:சந்தி. பெருகு-தம்முடைய திரு வுள்ளத்தில் பெருகி எழுந்த. விருப்புடன்-விருப்பத்தோடு. விடையார்-இடபவாகனத்தை ஓட்டுபவராகிய சிவக்கொழுந் தீசர். மகிழ்-மகிழ்ச்சியைப் பெற்று எழுந்தருளி யிருக்கும். மகிழ்: முதல்நிலைத் தொழிற் பெயர். பெண்ணாகடம்-திருப்பெண்ணாகடத்திற்கு. அணைந்தார் - எழுந்தருளி அடைந்தார்.

திருவதிகை வீரட்டானம்: இது நடுநாட்டில் கெடில நதிக்கரையில் விளங்கும் சிவத்தலம். இங்கே கோயில் கொண் டிருப்பவர் வீரட்டேசுவரர். அம்பிகை திரிபுரசுந்தரி. இது பண்ணுருட்டிக்குத் தென்கிழக்குத் திசையில் ஒரு மைல் தூரத் தில் கெடில நதியின் உட்கரையில் உள்ளது. "வீசும் கெடில வடகரைத்தே எந்தை வீரட்டமே" என்று தேவாரத் தில் வருவதைக் காண்க. இது அட்ட வீரட்டங்களில் ஒன்று; திரிபுரதகனம் புரிந்தருளியதைப் புலப்படுத்தும் தலம் இது. திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையாராகிய திலக வதியார் வீரட்டானேசுவரரை வழிபட்ட தலம் இது. அந்த நாயனார் சமண சமயத்தைவிட்டு விட்டுச் சைவசமயத்தைச் சேர்ந்த பிறகு, "கூற்றாயினவாறு விலக்க கிலீர்" என்று தொடங்கும் பாசுரத்தைப் பெற்ற ஒரு திருப்பதிகத்தைப் பாடி யருளித் தமக்கு வயிற்றில் உண்டாகியிருந்த சூலை நோயைப் போக்கிக் கொண்ட தலம் இது. பல்லவன் என்னும் சமண மன்னன் சைவ சமயமே உண்மையானது என்று

தெளிவை அடைந்த பிறகு திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணர்களினுடைய பள்ளிகளையும் பாழிகளையும் இடித்து விட்டு அவற்றில் இருந்த கற்களைக்கொண்டு, 'குணபர ஈச்சரம்' என்னும் திருக்கோயிலைக் கட்டுவித்தான். அந்த ஆலயமும் இந்தத் தலத்தில் உள்ளது. இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"முற்றா வெண்மதி சூடும் முதல்வனார்
செற்றார் வாழும் திரிபுரம் தீயெழ
விற்றான் கொண்டெயில் எய்தவர் வீரட்டம்
கற்றால் அல்லதென், கண்துயில் கொள்ளுமே."

திருவெண்ணெய் நல்லூர்: இது நடுநாட்டில் பெண்ணை யாற்றங் கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திரு நாமங்கள் தடுத்தாட்கொண்ட ஈசுவரர், கிருபாபுரீசர் என்பவை. அம்பிகையின் திரு நாமங்கள் வேற்கண்ணியம்மை, மங்களாம்பிகை என்பவை. இது பண்ணுருட்டியிலிருந்து 15 மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலத்தில் விளங்கும் திருக்கோயிலுக்கு, 'திருவருட் டுறை' என்று பெயர். இந்த ஆலயத்தில் எழுந்தருளி யிருக்கும் கிருபாபுரீசர் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்து ஆண்டுகொண்டருளினார். "வெண்ணெய் நல்லூரில் அற்புதப்பழ ஆவணம் காட்டி அடியனா என்னை ஆளது கொண்ட நற்பதத்தை" என்று தேவாரத்தில் அவர் பாடி யருளியதைக் காண்க. மெய்கண்ட தேவர் என்னும் காரணத் திருநாமத்தைப் பெற்றவராகிய சுவேதவனப் பெருமான் என்னும் சந்தானாசாரியர் வாழ்ந்திருந்த தலம் இது. இந்தத் தலத்திற்கு அருகில் உள்ள புத்தூரில் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருமணமாகும் சமயத்தில் கிருபாபுரீசர் ஒரு முதிய அந்தணராக வேடங் கொண்டு வந்து அந்தத் திரு மணத்தைத் தடுக்க, அந்தத் திருமணம் தவிர்ந்தமையால், 'மணம் தவிர்ந்த புத்தூர்' என்று அந்த ஊர் இக்காலத்தில்

வழங்கும். இந்த ஊர் திருவெண்ணெய் நல்லூருக்குச் செல்லும் வழியில் பண்ணுருட்டிக்கு மேற்குத் திசையில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. 'தடுத்தாட்கொண்டவூர்' என்னும் சிற்றூர் திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்குத் திசையில் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது. இந்தத் தலத்தைப் பற்றிச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பித்தாபிறை சூடீபெரு மானே அரு ளாளா
எத்தால் மறவாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேனெனல் ஆமே."

திரு ஆமாத்தூர்: இது நடுநாட்டில் பம்பையாற்றங் கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் அபிராமேசுவரர். அம்பிகை முத்தாம்பிகையம்மை. தலவிருட்சம் வன்னிமரம். இந்தத் தலம் விழுப்புரத்திற்கு வடமேற்குத் திசையில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இது பம்பை என்னும் ஒரு சிறிய ஆற்றின் வடகரையில் உள்ளது. பசுக்களுக்குத் தாயகமாக விளங்கும் தலம் இது. இராமபிரான் வழிபட்ட தலம் இது. இந்தத் தலத்தைப் பற்றி இரட்டைப் புலவர்கள் ஒரு கலம்பகத்தைப் பாடியிருக்கிறார்கள். இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

"குராம னும்குழ லாள்ஒரு கூறனார்
அராம னும்சடை யான்திரு ஆமாத்தூர்
இராம னும்வழி பாடுசெய் ஈசனை
நிராம யன்றனை நாளும் நினைமினே."

திருக்கோவலூர்: இது நடுநாட்டில் பெண்ணை யாற்றங்கரையில் உள்ளது. இங்கே கோயில் கொண்டிருப்பவர் வீரட்டேசுவரர். அம்பிகை சிவானந்த வல்லி. இது

பெண்ணை யாற்றின் தென்கரையில் உள்ளது. சந்நிதி மேற்குப் பார்த்தது. இது அட்ட வீரட்டங்களில் ஒன்று. அந்தகாசுரனை வீரட்டேசுவரர் சங்காரம் புரிந்தருளி யதை நினைப்பிக்கும் தலம் இது. மெய்ப் பொருள் நாய னார் திருவவதாரம் செய்தருளிய தலம் இது. இந்த ஊர் மேலூர் என்றும் கீழூர் என்றும் இரண்டு பகுதிகளை உடைய தாக விளங்குகிறது. வீரட்டேசுவரருடைய திருக் கோயில் கீழூரில் இருக்கிறது. அம்பிகையின் திருக்கோயில் தனியாக உள்ளது. இதற்குத் தென்மேற்கில் உள்ள மேலூரில் திரு மாலினுடைய திருக்கோயில் உள்ளது. இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

'' படைகொள் கூற்றம் வந்துமெய்ப்
  பாசம் விட்டபோ தின்கண்
இடைகொள் வார்மெச் சிலை
  எழுக போது நெஞ்சே
குடைகொள் வேந்தன் மூதாதை
  குழகன் கோவலூர் தனுள்
விடைய தேறும் கொடியினான்
  வீரட்டானம் சேர்துமே. ''

திருப்பெண்ணாகடம்: இது நடுநாட்டில் உள்ள சிவத் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சுடர்க்கொழுந் தீசர். அம்பிகை கடந்தை நாயகி.

இதனுடைய மற்றொரு பெயர் திருக்கடந்தை நகர் என் பது. இது விருத்தாசலத்திற்குத் தென் மேற்குத்திசையில் 11 மைல் தூரத்தில் உள்ளது. தேவகன்னிகள், காமதேனு, இந் திரனுடைய ஐராவதம் என்னும் வெள்ளை யானை ஆகிய வர்கள் வழிபட்டுப்பயன் பெற்ற தலம் இது. இந்தத் தலத்தில் உள்ள திருக்கோயிலுக்குத் தூங்கானை மாடம் என்று பெயர். திருநாவுக்கரசு நாயனார்,

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
டேவிரும் கூற்றகல
மின்னாரும் மூவிலைச் சூலம்என்
மேற்பொறி மேவு கொண்டல்
துன்னார்கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே.*"

என்று ஒரு பாசுரத்தைப் பாடியருளி யுள்ளார். இதைப் பாடியருளி தம்முடைய தோளின் மேல் சூலக் குறியையும் இடபக்குறியையும் பொறித்தருளப் பெற்ற தலம் இது.

பிறகு வரும் 149-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மேகங்கள் தங்கியிருக்கும் மாடங்களில் வாழும் வேதியர்கள் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களைக் கானம் செய்யும் இனிய நாதத்தை வளருமாறு புரியும் சீர்த்தியைப் பெற்ற வேதியர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தும் செழிப்பைப் பெற்று விளங்கும் பெண்ணாகடமாகிய அந்தச் சிவத்தலத்திற்குள் அடைந்து நீண்ட சடாபாரத்தைத் தம் முடைய தலையின் மேற் பெற்றவராகிய சுடர்க்கொழுந் தீசர் நிலை பெற்று எழுந்தருளியிருக்கும் திருத்தூங்கானை மாடம் என்னும் சிவத்தலத்தை இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் புகழ்ந்து வணங்கும் அழகிய முனிவராகிய திருநாவுக்கரசு நாயனார் அந்தச் சுடர்க் கொழுந்தீசரை வணங்கித் தோத்திரங்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து வாழ்த்தியருளினார்.' பாடல் வருமாறு:

"கார்வளரும் மாடங்கள்
கலந்தமறை ஒலிவளர்க்கும்
சீருடைஅந் தணர்வாழும்
செழும்பதியின் அகத்தெய்தி

வார்சடையார் மன்னுதிருத்
தூங்கானை மாடத்தைப்
பார்பரவும் திருமுனிவர்
பணிந்தேத்திப் பரவினார்.''

கார்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். வளரும்-தங்கியிருக்கும். மாடங்கள்-மாடங்களில். கலந்த-வாழ்ந்துள்ள. மறை-வேதியர்கள் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களைக் கானம் செய்யும்; ஒருமை பன்மை மயக்கம். ஒலி-இனிய நாதத்தை. வளர்க்கும்-மேலும் மேலும் வளருமாறு புரியும். சீர்-சீர்த்தியை. உடை-பெற்ற. அந்தணர்-வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வாழும்-தங்களுடைய வாழ்க்கையை நடத்தும். செழும்-செல்வச் செழிப்பையும், நீர்வளச் செழிப்பையும், நில வளச்செழிப்பையும், நன் மக்கள் வளச் செழிப்பையும் வேறு செழிப்புக்களையும் பெற்று விளங்கும். பதியின்-பெண்ணாகடமாகிய அந்தச் சிவத்தலத்திற்கு. அகத்து-உள்ளே. எய்தி-எழுந்தருளி அடைந்து. வார்-நீளமாகிய. சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சுடர்க்கொழுந்தீசர். மன்னு-நிலை பெற்று எழுந்தருளியிருக்கும். திரு-அழகிய. 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம். த்:சந்தி. தூங்கானை மாடத்தை-திருத்தூங்கானை மாடம் என்னும் சிவத் தலத்தை. ப்:சந்தி. பார்-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இடஆகு பெயர். பரவும்-வாழ்த்தி வணங்கும். திரு-அழகிய. முனிவர்-முனிவராகிய திருநாவுக்கரசு நாயனார். பணிந்து-சுடர்க் கொழுந்தீசரை வணங்கி. ஏத்தி-தோத்திரங்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து. ப்:சந்தி. பரவினார்-வாழ்த்தி யருளினார்.

பிறகு உள்ள 150-ஆம் கவியின் கருத்து வருமாறு:

"'புன்மையாகிய வழியாகும் சமண சமயத்தினுடைய கட்டைப் பெற்று வந்த இந்த உடம்போடு உயிர் பிழைத்து வாழ்ந்திருக்க அடியேன் சகிக்க மாட்டேன்; அடியேனுடைய உடம்பின் மேல் தாங்குவதற்கு அடியேனுடைய தலைவராகிய சுடர்க்கொழுந்தீசரே, நின்னுடைய அடையாளப் பொறிகளாகிய சூலத்தையும் இடபத்தையும் பொறித்தருள்வாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டுப்பாடியருளும் சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகள் என்னும் செழுமையைப் பெற்ற செந்தமிழ் மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை அந்தச் சுடர்க்கொழுந்தீசருடைய சந்நிதியில் நின்று கொண்டு அந்த நாயனார் பாடியருள்பவரானார்.' பாடல் வருமாறு:

" 'புன்னெறியாம் அமண்சமயத்
தொடக்குண்டு போந்த உடல்
தன்னுடனே உயிர்வாழத்
தரியேன்நான்; தரிப்பதனுக்
கென்னுடைய நாயக, நின்
இலக்கினை யிட்டருள்' என்று
பன்னுசெழுந் தமிழ்மாலை
முன்னின்று பாடுவார்."

புன்-புன்மையாகிய. நெறியாம்-வழியாகும். அமண் சமய-சமண சமயத்தினுடைய. த்:சந்தி. தொடக்குண்டு-கட்டில் அகப்பட்டு. போந்த-பிறகு இந்தத் திருவதிகை வீரட்டானத்திற்கு வந்து. உடல் தன்னுடன்-அடியேனுடைய உடம்போடு. தன்:அசைநிலை. ஏ: அசைநிலை. உயிர்வாழ-உயிர் பிழைத்து வாழ்ந்திருக்க. த்:சந்தி. தரியேன் நான்-அடியேன் சகிக்க மாட்டேன். தரிப்பதனுக்கு-அடியேனுடைய தோள்களில் தாங்குவதற்கு. என்னுடைய-அடியேனுடைய. நாயக-தலைவனாகிய சுடர்க்கொழுந்தீசனே. நின்-தேவரீருடைய. இலக்கினை-சூலம், இடபம்

என்னும் அடையாளப் பொறிகளை; ஒருமை பன்மை மயக்கம். இட்டருள்-பொறித்தருள்வாயாக. என்று-எனத் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. பின்னு-தாம் பாடி யருளும். செழும்-சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளாகிய செழுமையைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை-மாலையாகிய ஒரு திருப்பதி கத்தை. முன்-அந்தச் சிவக்கொழுந்தீசருடைய சந்நிதியில். நின்று-நின்றுகொண்டு. பாடுவார்-பாடியருள்பவரானார்.

இந்தப் பாடலில் குறிப்பிடப் பெற்ற பாசுரம் வருமாறு:

" பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
டேவருங் கூற்றகல
மின்னாரும் மூவிலைச் சூலமென்
மேற்பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுட் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே. "

பிறகு வரும் 151-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

' "பொன்னார் திருவடிக்கென் விண்ணப்பம்" எனத் தொடங்கி எல்லாப் பொருள்களுக்கும் முன்னே தோன்றிய வனாகி எல்லாப் பொருள்களுக்கும் இறுதியாகி நிலைத்து நின்ற சுடர்க்கொழுந்தீசனை, தன்னுடைய திருமேனியில் உமாதேவியை வாம பாகத்தில் எழுந்தருளுமாறு ஏற்றுக் கொண்டவனை, சுகத்தைச் செய்தருளுபவனை, அவனு டைய நல்ல திரு நாமங்கள் அமைந்த திருவிருத்தம் ஒன்றை நன்மைகள் சிறந்து விளங்குமாறு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியவுடன்.' பாடல் வருமாறு:

" 'பொன்னார்ந்த திருவடிக்கென்
விண்ணப்பம்' என்றெடுத்து
முன்னாகி எப்பொருட்கும்
முடிவாகி நின்றானைத்

தன்னாகத் துமைபாகம்
கொண்டானைச் சங்கரனை
நன்னாமத் திருவிருத்தம்
நலம்சிறக்கப் பாடுதலும்."

இந்தப் பாடல் குளம் 'பொன்னார்ந்த திருவடிக் கென் விண்ணப்பம்' என்று- 'பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்' என. எடுத்து-தொடங்கி. முன்-எல்லாப் பொருள்களுக்கும் முன்னே தோன்றினவன். ஆகி-ஆக நின்று. எப் பொருட்கும்-எல்லா வகையாகிய பொருள் களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். முடிவுஆகி-இறுதியில் இறவாமல் இருப்பவனாகி. நின்றானை-நிலைத்து நின்ற சுடர்க்கொழுந்தீசனை. த் : ச ந் தி. தன்-தன்னுடைய. ஆகத்து-திருமேனியில். உமை-உமாதேவியை. பாகம்-வாமபாகத்தில். கொண்டானை-ஏற்றுக் கொண்டவனை. ச்:சந்தி. சங்கரனை-சுகத்தைச் செய்தருளுபவனை. நல்-நல்ல. நாம-அவனுடைய திருநாமங்களை வைத்துப் பாடியருளிய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருவிருத்தம்-திருவிருத்தம் ஒன்றை. நலம்-நன்மைகள்; ஒருமை பன்மை மயக்கம். சிறக்க-சிறந்து விளங்குமாறு. ப்:சந்தி. பாடுதலும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியவுடன்.

இந்தப் பாசுரத்தை மேலே காட்டினோம். ஆண்டுக் கண்டுணர்க.

அடுத்து வரும் 152-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும் அழகிய பெண்ணாகடத்தில் உள்ள திருக்கோயிலாகிய தூங்கானை மாடத்தில் எழுந்தருளியிருக்கின்ற பொன் மலையாகிய மேரு மலை என்னும் வில்லை ஏந்தியவனாகிய சுடர்க் கொழுந் தீசன் வழங்கிய திருவருளினால் ஒரு சிவகணங்களில் ஒன்றாக விளங்கும் ஒரு பூதம் பக்கத்தில் உள்ள ஒருவரும் தெரிந்து கொள்ளாத வண்ணம் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார்

ருடைய அழகிய தோளில் பெருமையோடு உயர்ச்சியைப் பெற்ற மூன்று இலைகளைக் கொண்ட திரிசூலத்தை, கோபத்தைக் கொண்ட இடபத்தினோடு பொறிக்க.' பாடல் வருமாறு:

" நீடுதிருத் தூங்கானை மாடத்து
நிலவு கின்ற
ஆடகமே ருச்சிலையான்
அருளாலோர் சிவபூதம்
மாடொருவர் அறியாமே
வாகீசர் திருத்தோளில்
சேடுயர்மூ விலைச்சூலம்
சினவிடை யினுடன்சாத்த."

இந்தப் பாடலும் குளகம். நீடு-நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும். திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணைமயக்கம். த்:சந்தி. தூங்கானை மாடத்து-திருப்பெண்ணாகடத்தில் உள்ள திருக்கோயிலாகிய தூங்கானைமாடத்தில். நிலவுகின்ற-எழுந்தருளியிருக்கின்ற. ஆடக-பொன்னால் ஆகிய. மேரு-மேருமலையாகிய. ச்:சந்தி. சிலையான்-வில்லை ஏந்தியவனாகிய சுடர்க் கொழுந்தீசன் வழங்கிய. அருளால்-திருவருளினால். ஓர்-ஒரு. சிவபூதம்-சிவகணங்களில் ஒன்றாக விளங்கும் பூதம். மாடு-பக்கத்தில் உள்ள. ஒருவர்-ஒருவரும். அறியாமே-தெரிந்து கொள்ளாத வண்ணம். வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய. திரு-அழகிய. த்:சந்தி. தோளில்-தோளினில். சேடு-பெருமையோடு. உயர்-உயர்ச்சியைப் பெற்ற. மூஇலை-மூன்று இலைகளைக் கொண்ட. இலை: ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சூலம்-திரிசூலத்தை. சின-கோபத்தைக் கொண்ட. விடையினுடன்-இடபத்தினோடு. சாத்த-பொறித்து வைக்க.

அடுத்து உள்ள 153-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தத் திருநாவுக்கரசருடைய அழகிய தோளில் அமைந்த அழகிய அடையாளப் பொறியைத் தாம் பார்த்து தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து தம்முடைய தலைவனாகிய சுடர்க் கொழுந்தீசன் வழங்கிய திருவருளை எண்ணி மலையிலிருந்து விழும் அருவியைப் போலத் தம்முடைய கண்கள் நீரைச் சொரிய அந்தச் சிவக் கொழுந்தீசரை வணங்கிவிட்டு தரையில் விழுந்து பேராவலோடு ஓங்கி நின்ற திருவுள்ளத்தைக் கொண்டவராகி, "அடியேன் உஜ்ஜீவனத்தைப் பெற்று அடியேனுடைய துன்பத்திலிருந்து விலகி விட்டேன்" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

" ஆங்கவர்தம் திருத்தோளில்
ஆர்ந்ததிரு இலச்சினையைத்
தாம்கண்டு மனம்களித்துத்
தம்பெருமான் அருள்நினைந்து
தூங்கருவி கண்பொழியத்
தொழுதுவிழுந் தார்வத்தால்
ஓங்கியசிந் தையராகி
'உய்ந்தொழிந்தேன்' எனஎழுந்தார்."

ஆங்கு-அவ்வாறு. அவர்தம்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. தம்:அசைநிலை. திரு-அழகிய. த்:சந்தி. தோளில்-தோளின் மேல். ஆர்ந்த-அமைந்த. திரு-அழகிய. இலச்சினையை-அடையாளப் பொறியை. த்:சந்தி. தாம் கண்டு-தாம் பார்த்து. 'தாம்' என்றது திருநாவுக்கரசு நாயனாரை. மனம்-தம்முடைய திருவுள்ளத்தில். களித்து-மகிழ்ச்சியை அடைந்து. த் : ச ந் தி. தம்-தம்முடைய. பெருமான்-தலைவனாகிய சுடர்க் கொழுந்தீசன். அருள்-வழங்கிய திருவருளை. நினைந்து-எண்ணி. தூங்கு-மலையிலிருந்து குதிக்கும். அருவி-அருவியைப் போல. கண்-தம்

முடைய கண்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொழிய-நீரைச் சொரிய. த்:சந்தி. தொழுது-அந்தச் சுடர்க் கொழுந்தீசரை வணங்கிவிட்டு. விழுந்து-தரையில் விழுந்து எழுந்து நின்று கொண்டு. ஆர்வத்தால்-பேராவலோடு; உருபு மயக்கம். ஓங்கிய-பக்தி ஓங்கி நின்ற. சிந்தையராகி-திருவுள்ளத்தைப் பெற்றவராகி. உய்ந்து-அடியேன் உஜ்ஜீவனத்தை அடைந்து. ஒழிந்தேன்-துன்பங்களிலிருந்து விலகி விட்டேன். என-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு; இடைக்குறை. எழுந்தார்-எழுந்து நின்று கொண் டிருந்தார்.

பிறகு உள்ள 154-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருப்பெண்ணா கடத்தில் விளங்கும் திருக்கோயிலாகிய தூங்கானை மாடத்தில் எழுந்தருளியிருக்கும் சுடர்க் கொழுந்தீசருடைய திருவடிகளை வாழ்த்தி வணங்கிவிட்டு அந்தப் பக்கங்களில் அமையுமாறு திருத்தொண்டுகளைப் புரிந்து பழகி அந்தச் சிவத்தலத்தில் தங்கியிருக்கும் காலத்தில் மலர்கள் மலர்ந்த பல வகை மரங்கள் வளர்ந்து நிற்கும் காட்டில் அந்த மலர்கள் நறுமணம் கமழும் ஒப்பு அற்ற திருவரத் துறையையும் தேன் நிரம்பிய மலர்கள் மலர்ந்த மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம் பொழிலில் மேகங்கள் வந்து துயிலும் திருமுதுகுன்றத்திற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் திருமுதுகுன்றத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பழமலை நாதரை வணங்கிவிட்டு.' பாடல் வருமாறு:

"தூங்கானை மாடத்துச்
சுடர்கொழுந் தின்அடிபரவிப்
பாங்காகத் திருத்தொண்டு
செய்துபயின் றமரும்நாள்
பூங்கானம் மணம்கமழும்
பொருவில்திரு அரத்துறையும்

தேங்காவின் முகில்உறங்கும்
திருமுதுகுன் றமும்பணிந்து."

இந்தப் பாடல் குளகம். தூங்கானை மாடத்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருப் பெண்ணாகடத்தில் விளங்கும் திருக்கோயிலாகிய திருத்தூங்கானை மாடத்தில் எழுந்தருளியிருக்கும். ச்:சந்தி. சுடர்க் கொழுந்தின்-சுடர்க் கொழுந்தீசருடைய. அடி-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பரவி-வாழ்த்தி வணங்கிவிட்டு. ப்:சந்தி. பாங்கு ஆக-பக்கங்களில் அமையுமாறு. பாங்கு: ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருத்தொண்டு-தமக்கு உரிய திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்தருளி. பயின்று-பழகி. அமரும்-அந்தச் சிவத்தலத்தில் தங்கியிருக்கும். நாள்-காலத்தில். பூம்-மலர்கள் மலர்ந்திருக்கும் பலவகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும். அந்த மரங்களாவன: தேக்க மரம், வேங்கை மரம், வாகை மரம், தென்ன மரம், பன மரம், மகிழ மரம், தமால மரம், வேப்ப மரம், ஆல மரம், அரச மரம், வாத நாராயண மரம், பூவரச மரம், கடம்ப மரம், வில்வ மரம், விளா மரம், மருத மரம், பல வகையாகிய வாழை மரங்கள், நுணா மரம் முதலியவை. கானம்-காட்டில். மணம்-அந்த மலர்கள் நறுமணத்தை. கமழும்-வீசும். அந்த மலர்களாவன: மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், நந்தியா வட்டை மலர், பவள மல்லிகை மலர், பூவரச மலர், வேப்ப மலர் முதலியவை. பொரு-ஒப்பு. இல்-இல்லாத; கடைக்குறை. திரு வரத்துறையும்-திருநெல்வாயிலரத்துறைக்கும் அந்த நாயனார் எழுந்தருளி. தேம்-தேன் நிரம்பிய. காவின்-மலர்கள் மலர்ந்திருக்கும் மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலில். முகில்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உறங்கும்-வந்து துயிலும். திரு முதுகுன்றமும்-திருமுதுகுன்றத்திற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தச் சிவத்

தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். பணிந்து-பழமலை நாதரை வணங்கிவிட்டு.

திருநெல்வாயில் அரத்துறை: இந்தத் தலம் திருவரத் துறை எனவும் வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவர் அரத்துறை நாதர். அம்பிகை ஆனந்த நாயகி. தீர்த்தம் வெள் ளாறு. இது பெண்ணாகடத்திற்குத் தென்மேற்குத் திசையில் 4 மைல் தூரத்தில் உள்ளது. இது நிவா என்னும் ஆற்றினு டைய கரையின் மேல் உள்ளது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கு அரத்துறை நாதர் முத்துப் பல்லக்கையும், முத்துக்குடையையும், முத்துச் சின்னங்களையும் வழங்கி யருளிய தலம் இது. அருணகிரிநாதர் இந்தத் தலத்தைப் பற்றித் திருப்புகழில் பாடியருளியிருக்கிறார். இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"கல்வாய் அகிலும் கதிர்மா மணியும்
கலந்துந் திவரும் நிலவின் கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடுறையும்
நிலவெண்மதி ஆடிய நின்மலனே,
நல்வாயில் செய்தார், நடந்தார், உடுத்தார்,
நரைத்தார், இறந்தார் என்று நானிலத்திற்
சொல்வாய்க் கழிகின்ற தறிந்தடியேன்
தொடர்ந்தேன் உய்யப் போவதோர்
சூழல் சொல்லே."

இந்தத் தலத்தைப் பற்றிய திருப்புகழ் வருமாறு:

"அறிவி லாதவர் ஈனர்பேச் சிரண்டு
பகரும் நாவினர் லோபர்தீக் குணங்கள்
அதிக பாதகர் மாதற்மேற் கலன்கள்
—புனையாதர்
அசடர்பூமிசை வீணராயப் பிறந்து
திரியும் மானுடர் பேதைமார்க் கிறங்கி
அழியும் மாலினர் நீதிநூற் பயன்கள்
—தெரியாத

நெறியாலாதவர் சூதினாற் கவர்ந்து
பொருள்செய் பூரியர் மோகமாய் ப்ரபஞ்ச
நிலையில் வீழ்தரு மூடர்பாற் சிறந்த
—தமிழ்கூறி

நினைவு பாழ்படவாடி நோக்கிழந்து
வறுமையாகிய தீயின்மேற் கிடந்து
நெளியும் நீள்புழு வாயினேற் இரங்கி
—அருள்வாயே

நறியவார்குழல் வானநாட் டரம்பை
மகளிர் காதலர் தோள்கள் வேட்டிணங்கி
நகைகொ டேழிசை பாடிமேற் பொலிந்து
—களிகூர

நடுவிலாதகு ரோதமாயத் தடிந்த
தகுவர் மாதர்ம ணாளர்தோட் பிரிந்து
நசைபொ றாதழு தாசமாய்த் தழுங்கி
—இடர்கூர

மறியும் ஆழ்கட லூடுபோய்க் கரந்து
கவடு கோடியின் மேலுமாய்ப் பரந்து
வளரு மாவிரு கூறிதாய்த் தடிந்த
—வடிவேலா

மருவு காளமு கில்கள்கூட் டெழுந்து
மதியுலாவிய மாடமேற் படிந்த
வயல்கள் மேவுநெல் வாயில் வீற்றிருந்த
—பெருமாளே."

திருமுதுகுன்றம்: இந்தச் சிவத்தலம் நடுநாட்டில் மணிமுத்தா நதிக் கரையில் உள்ளது. இது விருத்தாசலம் எனவும் வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திரு நாமங்கள் பழமலைநாதர்; விருத்தாசலேசுவரர் என்பவை. அம்பிகை பெரிய நாயகி. தல விருட்சம் வன்னி மரம். இது கூடலூருக்குத் தென்மேற்குத் திசையில் 35-மைல் தூரத்தில் உள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் பரவை

நாச்சியாரின் பொருட்டுப் பொன்னை வழங்கியருளுமாறு பழமலை நாதரை வேண்டி வழிபட்ட தலம் இது. இது விருத்தகாசி எனவும் வழங்கும். இந்தத் தலத்தில் உயிர் விடும் பிராணிகளுக் கெல்லாம் பெரிய நாயகியார் தம்முடைய ஆடையினால் வீசி இளைப்பாற்றப் பழமலை நாதர் பஞ்சாட்சர உபதேசத்தைப் புரிந்தருளி அந்தப் பிராணிகளைத் தம்முடைய உருவமாக ஆக்கும் தலம் இது. ஆதலால் இது காசியைக் காட்டிலும் சிறந்தது என்று ஆன்றோர் கூறுவர். இந்தச் சிறப்பைக் கந்த புராணத்தில் உள்ள வழி நடைப்படலத்தில் உள்ள பின்வரும் பாடலால் உணர்ந்து கொள்ளலாம்.

"தூசினால் அம்மை வீசத்
தொடையின்மேற் கிடத்தித் துஞ்சு
மாசிலா உயிர்கட் கெல்லாம்
அஞ்செழுத் தியல்பு கூறி
ஈசனே தனது கோலம்
ஈந்திடும் இயல்பால் அந்தக்
காசியில் விழுமி தான
முதுகுன்ற வரையும் கண்டான்."

இதைப் பற்றிய தேவாரப் பாசுரம் ஒன்றைச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளியிருக்கிறார். அந்தப் பாசுரம் வருமாறு:

"நெடியோன் நான்முகனும்
இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச
முதுகுன்றம் அமர்ந்தவனே
படியா ரும்மியலாள்
பரவைஇவள் தன்முகப்பே
அடிகேள் தந்தருளாய்
அடியேன்இட் டளங்கெடவே."

அடுத்து உள்ள 155-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளாகிய வளத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த மென்மையாகிய மலர்மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பழமலை நாதருக்கு அணிந்தருளி அந்தத் திருமுதுகுன்றத்துக்குப் பக்கத்தில் இருக்கிற குளிர்ச்சியைப் பெற்ற துறைகளில் நீர் ஓடும் பல சிவத்தலங்களிலும் ஒப்பற்ற இடபவாகனத்தை ஓட்டுபவராகிய சிவபெருமானார் விரும்பித்தாம் எழுந்தருளும் இடமாகக் கொண்டருளும் பல சிவத்தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் திருக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைத் தம்முடைய தலையின் மேல் தம்முடைய திருக் கரங்களை வைத்துக் கூப்பிக் கும்பிட்டுப் பிறகு தரையில் விழுந்து வணங்கிவிட்டுக் கிழக்குத் திசையின் மேல் செந்தாமரை மலர்களும் வெண்டாமரை மலர்களும் மலர்ந்து விளங்கும் தடாகம் சுற்றியிருக்கும் நிவா நதியினுடைய கரையின் வழியே அந்த நாயனார் எழுந்தருளு வாரானார்.' பாடல் வருமாறு:

"வண்டமிழ்மென் மலர்மாலை
புனைந்தருளி மருங்குள்ள
தண்டுறைநீர்ப் பதிகளிலும்
தனிவிடையார் மேவியிடம்
கொண்டருளும் தானங்கள்
கும்பிட்டுக் குணதிசைமேல்
புண்டரிகத் தடம்சூழ்ந்த
நிவாக்கரையே போதுவார்."

வண்-சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளாகிய வளத்தைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மென்-மென்மையாகிய. மலர்மாலை-மலர்மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. புனைந்தருளி- அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பழமலை நாதருக்கு அணிந்தருளி.

இந்தத் திருப்பதிகத்தில் வரும் ஒருபாசுரத்தை முன்பே எழுதியுள்ளோம்; ஆண்டுக் கண்டுணர்க. மருங்கு-அந்தத் திருமுதுகுன்றத்துக்குப் பக்கத்தில். உள்ள-இருக்கிற. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. துறை-துறைகளில்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-புனல் ஓடும். ப்:சந்தி. பதிகளிலும்-பல சிவத் தலங்களிலும். தனி- ஒ ப் ப ற் ற. விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவராகிய சிவபெருமானார். மேவி-விரும்பி. இடம் கொண்டருளும்-தாம் எழுந்தருளும் இடமாகக் கொண்டருளும். தானங்கள்-பல சிவத் தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளி. கும்பிட்டு-அந்தத் தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைத் தம்முடைய தலையின்மேல் தம்முடைய திருக்கரங்களை வைத்துக் கூப்பிக் கும்பிட்டுவிட்டுப் பிறகு தரையில் விழுந்து வணங்கிவிட்டு. க்:சந்தி. குணதிசை மேல்-கிழக்குத் திசையின்மேல். புண்டரிக-செந்தாமரை மலர்களும் வெண்டாமரை மலர்களும் மலர்ந்து விளங்கும்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தடம்-தடாகம். சூழ்ந்த-சுற்றி அமைந்த. நிவா-நிவா நதியினுடைய. க்:சந்தி. கரையே-கரையின் வழியே. போதுவார்-அந்த நாயனார் எ ழு ந் த ரு ளு வாரானார்.

அடுத்து வரும் 156-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் என்றும் குறையாத சீரைப் பெற்ற தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளுகின்ற ஆகாய கங்கா நதி பக்கத்தில் பரவித் தங்கியிருக்கும் கொன்றை மலர்களை அணிந்திருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய அந்த நடராஜப் பெருமானாருடைய திருவடிகளை அந்த நாயனார் பணிந்து தம்முடைய திருமேனியாலும், தம்முடைய இனிய உயிரினாலும் இருக்கிற பிரயோசனத்தைப் பெறுவதற்கு எண்ணி. தேன் நிரம்பியிருக்கும் மலர்கள் மலர்ந்துள்ள பலவகையான

மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலைப் பெற்ற அழகிய பெரும்பற்றப் புலியூராகிய சிதம்பரத்தினுடைய பக்கத்தை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

"ஆனாத சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடைபரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொளநினைந்து
தேனாரும் மலர்ச்சோலைத் திருப்புலியூர் மருங்க
ணைந்தார்."

ஆனாத-சிறிதேனும் என்றும் குறையாத. சீர்-சீர்த்தியைப் பெற்ற. த்:சந்தி. தில்லை-தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும். அம்பலத்து-திருச்சிற்றம்பலத்தில், ஏ:அசைநிலை. ஆடுகின்ற-திருநடனம் புரிந்தருளுகின்ற. வானாறு-ஆகாய கங்காநதி. புடை-பக்கத்தில். பரக்கும்-பரவித் தங்கியிருக்கும். மலர்-கொன்றை மலர்களை அணிந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய அந்த நடராஜப் பெருமானாருடைய. அடி-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பணிந்து. ஊனாலும்-தம்முடைய திருமேனியினாலும். உயிராலும்-தம்முடைய இனிய உயிரினாலும், உள்ள-இருக்கிற. பயன்-பிரயோசனத்தை. கொள-பெறுவதற்கு; இடைக்குறை. நினைந்து-எண்ணி. தேன்ஆரும்-தேன் நிரம்பியிருக்கும். மலர்-மலர்கள் மலர்ந்துள்ள; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சோலை-பல வகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலைப் பெற்ற. த்:சந்தி. திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். ப்:சந்தி. புலியூர்-பெரும்பற்றப் புலியூராகிய சிதம்பரத்தினுடைய. மருங்கு-பக்கத்தை. அணைந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

பிறகு வரும் 157-ஆம் கவியின் கருத்து வருமாறு:

"திருநாவுக்கரசு நாயனாரும் திருமால், பிரமதேவர் ஆகிய இரண்டு தேவர்களும் திருவடிகளைப்பன்றிஉருவத்தை எடுத்து . நிலத்தைத் தோண்டிப் பார்த்தும், அன்னப் பறவையினுடைய வடிவத்தை எடுத்துக்கொண்டு மேலே பறந்து திருமுடியைத் தேடியும் அவற்றைக் காண முடியாதவராகிய நடராஜப் பெருமானார் திரு நடனம் புரிந்தருளிய அந்தச் சிதம்பரத்தினுடைய அழகிய எல்லையிடத்தில் எழுந்தருளித் தரையில் படியுமாறு தம்முடைய திருமேனியினால் விழுந்து அந்த நடராஜப் பெருமானாரை வணங்கிய பிறகு மேலும் மேலும் எழுந்து ஓங்கும் வேகத் தோடும் பூம்பொழிலில் மகிழ்ச்சியைப் பெற்ற மயில்கள் களிப்பை அடைந்து எதிரில் எதிரில் நடனமாட நறுமணம் கமழும் செந்தாமரை மலர்களும் வெண்டாமரை மலர்களும் சுற்றி மலர்ந்திருக்கும் வாவிகளும். தடாகங்களும், மலருகின்ற திருமுகம் விளக்கத்தை அடைந்த மருத நிலத்தில் உள்ள குளிர்ச்சியைப் பெற்ற வயல்களின் வழியாகவே அந்த நாயனார் எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

" நாவுக் கரசரும் இருவர்க் கரியவர்
நடமா டியதிரு எல்லைப் பால்
மேவித் தலமுற மெய்யில் தொழுதபின்
மேன்மேல் எழுதரும் விரை வோடும்
காவிற் களிமயில் மகிழ்வுற் றெதிரெதிர்
ஆடக் கடிகமழ் கமலம் சூழ்
வாவித் தடமலர் வதனம் பொலிவுறு
மருதத் தண்பணை வழி வந்தார்."

நாவுக்கரசரும்-திருநாவுக்கரசு நாயனாரும். இருவர்க்கு அரியவர்-திருமால் பிரமதேவர் ஆகிய இரண்டு தேவர்களும் திருவடிகளைப் பன்றி உருவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்துத் தேடியும், அன்னப் பறவையின் வடிவத்தை எடுத்துக் கொண்டு திருமுடியை மேலே

பறந்து தேடிப் பார்த்தும் அவற்றைக் காண முடியாத வராகிய நடராஜப் பெருமானார். நடம்-திருநடனம். ஆடிய - புரிந்தருளிய. திரு-அழகிய. எல்லைப்பால்-சிதம்பரத்தினுடைய எல்லையிடத்தில். மேவி-அந்த நாயனார் எழுந்தருளி. த்:சந்தி. தலம்உற-தரையிற் படியு மாறு. மெய்யில்-தம்முடைய திருமேனியினால்; உருபு மயக்கம். தொழுதபின்-விழுந்து அந்த நடராஜப் பெருமானாரை வணங்கிய பிறகு. மேன்மேல்-மேலும் மேலும். எழுதரும்-எழுந்து தோன்றும். விரைவோடும்-வேகத்தோடும். காவில்-பூம்பொழிலில். களி-மகிழ்ச்சியைப் பெற்ற. மயில்-மயில்கள்; ஒருமை பன்மை மயக்கம். மகிழ்வுற்று-ஆனந்தத்தை அடைந்து. எதிர் எதிர்-ஒன்றுக்கு ஒன்று எதிரில் எதிரில். ஆட-நடனமாட. க்:சந்தி. கடி-நறுமணம். கமழ்-கமழும். கமலம் - செந்தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றி மலர்ந்திருக்கும். வாவி-வாவிகளும்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தடம்-தடாகங்களும்; ஒருமை பன்மை மயக்கம். மலர்-மலருகின்ற. வதனம்-திருமுகம். பொலிவுறு-விளக்கத்தை அடைந்த. மருத-மருத நிலத்தில் உள்ள. த்:சந்தி. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. பணை-வயல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வழி-வழியாகவே. வந்தார்-அந்த நாயனார் நடந்து எழுந்தருளினார்.

அடுத்து வரும் 158-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'நறுமணத்தோடு நெருங்கிய இதழ்கள் விரிந்திருக்கும் செந்தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும் மலர்ந்திருக்கும் தடாகங்களில் இறங்கி வந்து முதிய எருமைகள் புதியனவாக மலர்ந்த செந்தாமரை மலர்களையும், வெண்டாமரை மலர்களையும், செங்கழுநீர் மலர்களையும், நீலோற்பல மலர்களையும், குமுத மலர்களையும், வேறு மலர்களையும் மேய்ந்து இன்னும் அந்தத் தடாகங்

களுக்குப் பக்கத்தில் நெருங்கியுள்ள காடு என்று கூறு மாறு மிகுதியாக உயர்ந்து வளர்ந்திருக்கும் மூங்கில் களுடைய அளவைப் போலப் பெருகி வளரும் கரும்புச் செடிகள் பெருகி வளர்ந்து பக்கத்தில் முதிர்ச்சியை அடைந்த முத்துக்களைச் சங்குப் பூச்சிகள் பொழிபவை பெரியவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய அழகிய திருவுரு வத்தைப் பார்த்து உருக்கத்தை அடைந்து அன்பைப் பெற்ற நீரைக் கண்கள் சொரிபவை என்று கூறுமாறு முன்னால் இருக்கின்ற வளப்பத்தைப் பெற்ற வயல்கள் உள்ள எல்லா இடங்களும் அவ்வாறு விளங்கும்.' பாடல் வருமாறு:

"முருகிற் செறிஇதழ் முளரிப் படுகரில்
முதுமே திகள்புது மலர்மேயும்
அருகிற் செறிவன மௌமிக் குயர்கழை
அளவிற் பெருகிட வளர்இக்குப்
பெருகிப் புடைமுதிர் தரளம் சொரிவன
பெரியோ ரவர்திரு வடிவைக்கண்
டுருகிப் பரிவுறு புனல்கண் பொழிவன
எனமுன் புளவள வயலெங்கும்."

இந்தப் பாடல் குளகம். முருகில்-நறுமணத்தோடு; உருபு மயக்கம். செறி-நெருங்கிய. இதழ்-இதழ்கள் விரிந்திருக் கும்; ஒருமை பன்மை மயக்கம். முளரி-செந்தாமரை மலர்க ளும் வெண்டாமரை மலர்களும் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. படுகரில்-தடாகங்களில்; ஒருமை பன்மை மயக்கம். முது-முதிய; கிழப்பருவத்தை அடைந்த. மேதிகள்-எருமை மாடுகள். புது-புதியவையாக மலர்ந்திருக் கும். மலர்-செந்தாமரை மலர்களையும், வெண்டாமரை மலர்களையும், செங்கழுநீர் மலர்களையும், நீலோற்பல மலர்களையும், குமுத மலர்களையும், அல்லி மலர் களையும், ஆம்பல் மலர்களையும் வேறு மலர் களையும்; ஒருமை பன்மை மயக்கம். மேயும்-மேய்ந்து தின்னும். அருகில்-அந்தத் தடாகங்களுக்கு பக்கத்தில்

செறி-நெருங்கியுள்ள. வனம்-மரங்கள் வளர்ந்து நிற்கும் காடு. என-என்று கூறுமாறு; இடைக்குறை. மிக்கு-மிகுதியாக அமைந்து. உயர் - உயரமாக வளர்ந்திருக்கும். கழை-மூங்கில்களினுடைய. அளவில்-அளவைப் போல. பெருகிட-பெருகி வளர. வளர்-வளர்ந்து நிற்கும். இக்கு - கரும்புச் செடிகள்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பெருகி-பெருகி வளர்ந்து. ப்:சந்தி. புடை-அவற்றின் பக்கத்தில். முதிர்-முதிர்ச்சியை அடைந்த. தரளம்-முத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். சொரிவன-சங்குப் பூச்சிகள் உமிழ்பவை. பெரியோர்-பெருமையைப் பெற்றவராகிய. அவர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. திரு-அழகிய. வடிவை-திருவுருவத்தை. க்:சந்தி. கண்டு-பார்த்து. உருகி-உருக்கத்தை அடைந்து. ப்:சந்தி. பரிவுறு-அன்பைப் பெற்ற; 'கழிவிரக்கத்தைப் பெற்ற' எனலும் ஆம். புனல்-நீரை. கண்-கண்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொழிவன-சொரிபவை. என-என்று சொல்லுமாறு; இடைக்குறை. முன்பு-முன்னால். உள-இருக்கின்ற; இடைக்குறை. வள-வளப்பத்தைப் பெற்ற. என்றது சம்பா நெற் பயிர்கள், குறுவை நெற் பயிர்கள். மணக்கத்தை நெற்பயிர்கள் முதலியவற்றை. வயல்-வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-சிதம்பரத்தில் எல்லா இடங்களும்; ஒருமை பன்மை மயக்கம். 'அவ்வாறு விளங்கும்' என்பதை கூட்டிப் பொருளை முடிக்க.

கரும்புச் செடி மூங்கிலைப் போலத் தோன்றுதல்: "கரும்பின் கண்ணிடை அன்ன பைதல் ஒரு கழை நீடிய சுரன்." (குறுந்தொகை, 180: 3-4.) என்று கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடியதைக் காண்க.

பிறகு உள்ள 159-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அறிவினால் பெருமையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார் பக்கத்தில் உள்ள நெற்பயிர்கள் வளர்ந்து

நிற்கும் பண்ணைகளில் உள்ள வயல்களாகிய அவற்றினு டைய மணம் தம்முடைய நாசியில் படுமாறு எழுந்தருளுபவ ராகிய அந்த நாயனார், "இந்த மானிடப் பிறவியாகிய பகையினுடைய வழியை விட்டு விடுபவர்களே, புண்ணியம் பாவம் என்னும் இரண்டு வினைகள் பெருகியிருப்பதனால் தொடர்ந்து வருகின்ற நோய்களும், உண்டாகும் பாச பந்த மும் அகன்று போகும் வண்ணம் வந்து சேருங்கள்." என இரண்டு பக்கங்களிலும் பழகிச் சுற்றியிருக்கும் மரங்களினு டைய கிளைகளின் மேல் அமர்ந்திருந்து குயில்கள் இனிமை யாகக் கூவும் நெருங்கிய இடத்தில் பல மரங்கள் நிலை பெற்று நிற்பதனால் தோற்றப் பொலிவைப் பெற்ற அழகிய நந்தனவனத்தை அந்த நாயனார் தமக்கு எதிரில் பார்த் தார்.' பாடல் வருமாறு:

"அறிவிற் பெரியவர் அயல்நெற் பணைவயல்
அவையிற் படும்வகை அணைகின்றார்
'பிறவிப் பகைநெறி விடுவீர், இருவினை
பெருகித் தொடர்பிணி உறுபாசம்
பறிவுற்றிட அணையுமின்' என் றிருபுடை
பயில்சூழ் சினைமிசை குயில்கூவும்
செறிவிற் பலதரு நிலையிற் பொலிவுறு
திருநந் தனவனம் எதிர்கண்டார்."

அறிவில்-தம்மிடம் வாய்த்திருக்கும் நல்ல அறிவினால்; உருபு மயக்கம். பெரியவர்-பெருமையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார். அயல்-திருப்பாதிரிப் புலியூரின் பக்கத்தில். நெல்-சம்பா நெற் பயிர்களும், குறுவை நெற் பயிர்களும், மணக்கத்தை நெற் பயிர்களும், வேறு வகையான நெற் பயிர்களும் வளர்ந்து நிற்கும்; ஆகு பெயர்; ஒருமை பன்மை மயக்கம். பணை-பண்ணைகளில் உள்ள; இடைக் குறை; ஒருமை பன்மை மயக்கம். வயல்-வயல்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். அவையில்-அவற்றினுடைய நறு

ணம். படும் வகை-தம்முடைய நாசியில் படுமாறு. அணை கின்றார்-சிதம்பரத்திற்கு எழுந்தருளுபவராகிய அந்த நாய னார். பிறவி-இந்த மானிடப் பிறவியாகிய. ப்:சந்தி. பகை-பகையினுடைய. நெறி-வழியை. விடுவீர்-விட்டு விடுவதற்கு விரும்புகின்ற மக்களே; ஒருமை பன்மை மயக்கம்; விளி. இரு வினை-புண்ணியம், பாவம் என்னும் இரண்டு செயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். பெருகி-பெருகியிருப்பதனால். த்:சந்தி. தொடர்-தொடர்ந்து வருகின்ற. பிணி-சுரம், தலை வலி, வயிற்று வலி, முடக்கு வாதம், காசநோய், இருமல், வயிற்றுக்கடுப்பு முதலிய நோய்களும்; ஒருமை பன்மை மயக் கம். உறு-உண்டாகும். பாசம்-பாச பந்தமும். பறிவுற்றிட-உங்களை விட்டு அகன்று போகும் வண்ணம். அணையுமின்-இந்தச் சிதம்பரத்திற்கு வந்து சேருங்கள். என்று-என. இரு புடை-இரண்டு பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். பயில்-பழகி. சூழ்-சுற்றியிருக்கும். சினை மிசை-மரங்களி னுடைய கிளைகளின் மேல் அமர்ந்திருந்து. சினை; ஒருமை பன்மை மயக்கம். குயில்-குயில்கள்; ஒருமை பன்மை மயக்கம். கூவும்-இனிமையாகக் கூவும். அந்தக் குயில்கள் மாமரத்தில் அமர்ந்திருக்கும். செறிவில்-நெருங்கிய இடத்தில்; மரங்கள் நெருங்கி வளர்ந்து நிற்கும் இடத்தில். பல-பல வகையான. தரு-மரங்கள். நிலையில்-நிலை பெற்று நிற்பதனால்; உருபு மயக்கம். பொலிவுறு-தோற்றப் பொலிவைப் பெற்ற. திரு-அழகிய. நந்தனவனம்-சிதம்பரம் ஆலயத்தைச் சார்ந்த நந்தனவனத்தை. எதிர்-தமக்கு எதிரில். கண்டார்-அந்த நாயனார் பார்த்தார்.

பிறகு உள்ள 160-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் முன்னால் பணி யோடு நடராஜப் பெருமானாரை வணங்கி விட்டு அந்தச் சிதம்பரத்திற்கு எழுந்தருளிச் சேர அழகிய மரக் கிளைகளின் மேலும், பக்கங்களில் உள்ள எல்லா இடங்களிலும் தவத்தை

முன் பிறவியில் செய்ததனால் வந்து அமைந்த திருத் தொண்டுகளைப் புரியும் நிலையில் தலை சிறந்து நின்று உயர்ச்சியாக உள்ள செந்தமிழ் மொழிக்கு அரசராக விளங் கும் அந்த நாயனாரைப் பார்த்து, "'இந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய அழகிய வடிவத்தைப் பார்த்து, "இது மிகவும் வியப்பை உண்டாக்குவது'', என்று கூறித் தொண்டர்கள் வந்து அவருக்கு எதிரில், 'ஹர ஹர' எனவே சிவபெருமானுடைய திருநாமங்களாகிய முன்பு பழகிய வார்த்தைகளை வளருகின்ற சிறகுகளைப் பெற்ற கிளிகளி னோடு சிறிய உருவங்களை உடைய நாகணவாய்ப் புட்கள் மொழிகின்றவையாக விளங்கின.' பாடல் வருமாறு:

" அவர்முன் பணிவொடு தொழுதங் கணைவுற
அணிகொம் பரின்மிசை அருகெங்கும்
'தவம்முன் புரிதலில் வருதொண் டெனும்நிலை
தலைநின் றுயர்தமிழ் இறையோராம்
இவர்தம் திருவடி வதுகண் டதிசயம்'
எனவந் தெதிர்அர கரஎன்றே
சிவமுன் பயில்மொழி பகர்கின் றனவளர்
சிறைமென் கிளியொடு சிறுபூவை.''

அவர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார். முன்-முன் னால். பணிவொடு-பணிவோடு. தொழுது-நடராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. அங்கு-அந்தச் சிதம்பரத் திற்கு. அணைவுற-எழுந்தருளிச் சேர. அணி-அழகிய. கொம் பரின்மிசை-மரங்களினுடைய கிளைகளின் மேலும்; ஒருமை பன்மை மயக்கம். அருகு-பக்கங்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். தவம்-தவத்தை. முன்-முன் பிறவியில். புரிதலில்—செய்ததனால். வரு-இந்தப் பிறவியில் வந்து அமைந்த. தொண்டு-திருத்தொண்டுகளைப் புரிவது; ஒருமை பன்மை மயக்கம். எனும்-என்னும்; இடைக்குறை. நிலை-நிலையில். தலை நின்று-தலை சிறந்து நின்று. உயர்-உயர்ச்சியாக

உள்ள. உயர்ச்சி-சிறப்பு. தமிழ்-செந்தமிழ் மொழிக்கு. இறையோர் ஆம்-அரசராக விளங்கும் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்த்து. இவர்தம்-இந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. தம்: அசை நிலை. திரு-அழகிய. வடிவு-திருவுருவம் அது: பகுதிப் பொருள் விகுதி. கண்டு-பார்த்து விட்டு. அதிசயம்-இது மிகவும் வியப்பை உண்டாக்குவது. என-என்று கூறி; இடைக்குறை. வந்து-தொண்டர்கள் அவரிடம் வந்து. எதிர்-அந்த நாயனாருக்கு எதிரில். அரகர-ஹர ஹர. என்றே-எனவே. சிவம்-சிவபெருமானுடைய திருநாமங்களாகிய; ஆகுபெயர். முன்-முன்பு. பயில்-தாங்கள் கூறிப் பழகிய. மொழி-வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். வளர்-வளருகின்ற. சிறை-சிறகுகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். கிளியொடு-கிளிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். சிறு-சிறிய உருவங்களைப் பெற்ற. பூவை-நாகணவாய்ப்புட்கள், மைனாக்கள்; ஒருமை பன்மை மயக்கம். பகர்கின்றன-மொழிகின்றவையாக விளங்கின.

அடுத்து உள்ள 161-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அழகிய சொற்களைக் கொண்ட அழகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களில் உள்ள மந்திரங்களை அந்தக் கிளிகளும் மைனாக்களும் அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால் கூறியவுடன் அந்த நாயனாரும் நடராஜப் பெருமானாரை வணங்கி முன்னால் அன்பு மிகுதியாக உண்டாகும் தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த ஆனந்தமும் விருப்பமும் நிறைந்திருக்கும் பக்தியோடும் தம்முடைய திரு வார்த்தைகள் தடுமாற்றத்தை அடைய சிறப்பாகிய சொற்களைக் கொண்ட அழகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் பாராயணம் புரியும் மூவாயிரம் அந்தணர்கள் வாழும் தில்லையாகிய சிதம்பரம் என்னும் அழகிய பெரிய சிவத்தலத்தின் எல்லையிடத்தில் மேகங்களோடு

விளங்குகின்ற உயரமாகிய திருமதில் சுற்றியிருக்கும் மேற்குத் திசையில் உள்ள அடிக்கும் மணியைக் கட்டித் தொங்க விட்டிருக்கும் கோபுர வாசலுக்கு வெளியில் அந்த நாயனார் வந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

'' அஞ்சொல் திருமறை அவர்முன் பகர்தலும்
அவரும் தொழுதுமுன் அளிகூரும்
நெஞ்சிற் பெருகிய மகிழ்வும் காதலும்
நிறையன் பொடும்உரை தடுமாறச்
செஞ்சொல் திருமறை மொழியந் தணர்பயில்
தில்லைத் திருநகர் எல்லைப்பால்
மஞ்சிற் பொலிநெடு மதில்சூழ் குடதிசை
மணிவா யிற்புறம் வந்துற்றார். ''

அம்-அழகிய. சொல்-சொற்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். திரு-அழகிய. மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களில் உள்ள மந்திரங்களை அந்தக் கிளிகளும் மைனாக்களும்; ஒருமை பன்மை மயக்கம். அவர் முன்- அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால். பகர்தலும்- கூறியவுடன். அவரும்-அந்த நாயனாரும். தொழுது-நட ராஜப் பெருமானாரை வணங்கி. முன்-முன்னால். அளி- அன்பு. கூரும்-மிகுதியாக உண்டாகும். நெஞ்சில்-தம்மு டைய திருவுள்ளத்தில். பெருகிய-பெருகி எழுந்த. மகிழ்வும்- ஆனந்தமும். காதலும்-விருப்பமும். நிறை-நிரம்பியிருக்கும். அன்பொடும்-பக்தியோடும். உரை-தம்முடைய திருவார்த் தைகள்; ஒருமை பன்மை மயக்கம். தடுமாற-தடுமாற்றத்தை அடைய. ச்:சந்தி. செம்-சிறப்பாக உள்ள. சொல்-சொற் களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். திரு-அழகிய. மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர் வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மொழி-ஒவ்வொரு நாளும்

பாராயணம் புரியும். அந்தணர்-மூவாயிரம் அந்தணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பயில்-வாழும். தில்லை-தில்லையாகிய சிதம்பரம் என்னும். த் : சந்தி. திரு-அழகிய. 'செல்வத்தைப் பெற்றவர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். நகர்-பெரிய சிவத்தலத்தினுடைய. எல்லைப் பால்-எல்லையிடத்தில். மஞ்சில்-மேகங்களோடு; உருபு மயக்கம். பொலி-விளங்கும். நெடு-உயரமாகிய. மதில்-திருமதில். சூழ்-சுற்றியிருக்கும். குடதிசை-மேற்குத் திசையில் உள்ள. மணி-அடிக்கும் மணியைக் கட்டித் தொங்க விட்டிருக்கும். வாயில்-கோபுர வாசலுக்கு. புறம்-வெளியில். வந்து உற்றார்-அந்த நாயனார் வந்து சேர்ந்தார்.

பிறகு வரும் 162-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'துன்பங்களை உண்டாக்கும் இந்த மானிடப் பிறவி போகுமாறு தம்முடைய திருவருளைப் பெற்ற தவத்தைப் புரிந்த முதல்வராகிய திருநாவுக்கரசு நாயனார் தம்மை நடராஜப் பெருமானாருடைய அடியவர்கள் எதிர் கொண்டு வரவேற்க அந்த அடியவர்களோடும் வளப்பத்தைப் பெற்ற நீர் நிலைகளில் உள்ள நீர் தங்களிடம் மலர்ந்துள்ள செந்தாமரை மலர்கள், வெண்டாமரை மலர்கள், செங்கழு நீர் மலர்கள், நீலோற்பல மலர்கள், குமுத மலர்கள், அல்லி மலர்கள், ஆம்பல் மலர்கள் முதலிய நீர்ப் பூக்களினுடைய நறுமணம் கமழும் பக்கத்தில் உள்ள கோபுர வாசலின் வழியாக ஆலயத்துக்குள் அந்த நாயனார் நுழைந்து தமக்கு எதிரில் காட்சி அளித்த நடராஜப் பெருமானாரை வணங்கி விட்டு, கல்வித் துறைகள் பலவற்றையும் தங்களுக்குக் கை வரும் பெருமையைப் பெற்ற இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் முதலிய சாத்திரங்களினுடைய கரைகளைக் கண்டு தம்மை ஆளாக உடையவராகிய அந்த நடராஜப் பெருமானாருடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை விரும்பி வணங்கும் செல்வத்தைப் பெற்ற குடும்பங்கள் நிறைந்திருக்கும் நல்ல இடத்தில்

வளரும் சிவத் தன்மையே நிலாவிய அழகிய தெருவை அடைந்தார்.' பாடல் வருமாறு:

"அல்லற் பவம்அற அருளும் தவமுதல்
அடியார் எதிர்கொள அவரோடும்
மல்லற் புனல்கமழ் மாடே வாயிலின்
வழிபுக் கெதிர்தொழு தணைவுற்றார்
கல்வித் துறைபல வருமா மறைமுதல்
கரைகண் டுடையவர் கழல்பேணும்
செல்வக் குடிநிறை நல்வைப் பிடைவளர்
சிவமே நிலவிய திருவீதி."

அல்லல்-துன்பங்களை உண்டாக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பவம்-இந்த மானிடப் பிறவி. அற-போகுமாறு. அருளும்-தம்முடைய திருவருளைப் பெற்ற. தவ-தவத்தைப் புரிந்த. முதல்-முதல்வராகிய திருநாவுக்கரசு நாயனார். அடியார்-நடராஜப் பெருமானாருடைய அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எதிர்கொள-தம்மை எதிர் கொண்டு வரவேற்க. கொள: இடைக்குறை. அவரோடும்-அந்த அடியவர்களோடும்; ஒருமை பன்மை மயக்கம். மல்லல்-வளப்பத்தைப் பெற்ற. புனல்-நீர் நிலைகளில் உள்ள நீர். கமழ்-தங்களிடம் மலர்ந்திருக்கும் செந்தாமரைமலர்கள், வெண்டாமரை மலர்கள், செங்கழுநீர் மலர்கள், நீலோற்பல மலர்கள், குமுத மலர்கள், அல்லி மலர்கள், ஆம்பல் மலர்கள் முதலிய நீர்ப்பூக்களினுடைய நறுமணம் கமழும். மாடு-பக்கத்தில் உள்ள. ஏ:அசை நிலை. வாயிலின்-கோபுர வாசலின். வழி-வழியாக. புக்கு-ஆலயத்துக்குள் அந்த நாயனார் நுழைந்து. எதிர்-தமக்கு எதிரில் காட்சி அளித்த. தொழுது-நடராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. கல்வித் துறை-கல்வித் துறைகள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பலவற்றையும். வரு-தங்களுக்குக் கை வரும்; தாங்கள் அறிந்து கொண்டு பழகியிருக்கும். மா-பெருமையைப் பெற்ற. மறை-

இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், ஒருமை பன்மை மயக்கம். முதல்-முதலிய சாத்திரங்களினுடைய. கலை-கலைகளை; ஒருமை பன்மை மயக்கம். கண்டு உடையவர்-கண்டு தம்மை ஆளாக உடையவராகிய அந்த நடராஜப் பெருமானாருடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டிருக்கும் திருவடிகளை; ஆகு பெயர். பேணும்-விரும்பி வணங்கும். செல்வ-செல்வத்தைப் பெற்ற. க்:சந்தி. குடி-குடும்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நிறை-நிறைந்திருக்கும். நல்-நல்ல. வைப்பிடை-இடத்தில். வளர்-வளரும். சிவமே-சிவத்தன்மையே; என்றது சிவபெருமானுக்கு உரிய விபூதியைப் பூசிக்கொள்ளுதலும், உருத்திராக்க மாலையைத் தரிப்பதும், சடாபாரத்தைப் பூண்பதும் ஆகியவற்றை. நிலவிய-நிலாவிய. திரு-அழகிய. வீதி-தெருவை. அணைவுற்றார்-அந்த நாயனார் போய்ச் சேர்ந்தார்.

பிறகு வரும் 163-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"புதிய மின்னலைப் போல ஒளியை வீசும் மாணிக்கங்களைக் கோத்த நீண்ட மாலைகளும், நறுமணம் கமழும் மலர்மாலைகளும் நிறைந்து தோரணங்களாகத் தொங்கவிட்டிருக்கும் அழகிய ஒரு திருவீதியில் உலகங்களினுடைய தலைவர்களாகிய தேவர்களினுடைய விசாலமாக உள்ள கிரீடங்கள் ஒன்றனோடு ஒன்று மோதித் தரையில் விழுமாறு தள்ளிவிட்ட மாணிக்கங்களைப் போக்கிவிட்டு வாயுதேவன் திருப்பணியைப் புரிய வருணபகவான் தீர்த்தத்தைக்கொண்டு வந்து அபிடேகத்துக்கு வழங்கித் தன்னுடைய பணியைப் புரியவும் அந்த மாணிக்கங்கள் குற்றமுடையவையாகும் என்று எண்ணி யாவரும் தரையில் விழுந்து வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டிருக்கும் அடியவர்கள் அழகிய துடைப்பத்தால் பெருக்குவார்கள்; குளிர்ந்த நீரைத் தரையின்மேல் விட்டுச் சுத்தம் செய்வார்கள்."

பாடல் வருமாறு:

"நவமின் சுடர்மணி நெடுமா
லையும்நறு மலர்மாலையும்நிறை திருவீதிப்
புவனங் களின்முதல் இமையோர்தடமுடி
பொருதுந் தியமணி போகட்டிப்
பவனன் பணிசெய வருணன்புனல் கொடு
பணிமா றவும்அவை பழுதாமென்
றெவரும் தொழுதெழும் அடியார் திருவல
கிடுவார் குளிர்புனல் விடுவார்கள்."

நவ-புதிய. மின்-மின்னலைப் போல். சுடர்-ஒளியை வீசும். மணி-மாணிக்கங்களைக் கோத்த; ஒருமை பன்மை மயக்கம். நெடுமாலையும்-நீளமாகிய மாலைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். நறு-நறுமணம் கமழும். மலர் மாலையும்-மலர் மாலைகளும்; ஒருமை பன்மை மயக்கம். நிறை-நிறைந்து தோரணங்களாகத் தொங்க விட்டிருக்கும். திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். வீதி-ஒரு திருவீதியில். ப்:சந்தி. புவனங்களின்—உலகங்களினுடைய. முதல்-தலைவர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். இமையோர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தட-விசாலமாகிய. முடி-கிரீடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொருது-ஒன்றனோடு ஒன்று மோதி. உந்திய-தரையில் விழுமாறு தள்ளிவிட்ட. மணி-அந்த மாணிக்கங்களை; ஒருமை பன்மை மயக்கம். போகட்டி-போக்கி விட்டு. ப்:சந்தி. பவனன்-வாயுதேவன். பணிசெய—பெருக்குதலாகிய திருப்பணியைப் புரிய. செய: இடைக் குறை. வருணன்-சமுத்திர ராஜனாகிய வருண பகவான். புனல்கொடு-சமுத்திரத்தில் உள்ள நீரைக்கொண்டு. பணி மாறவும்-தரையைத் துடைக்கும் திருப்பணியைச் செய்யவும். அவை-அந்தத் தரையில் விழுந்த மாணிக்கங்கள். பழுது—குப்பை. ஆம்-ஆகும். என்று-என எண்ணி. எவரும்—யாவரும். தொழுது-தரையில் விழுந்து வணங்கிவிட்டு.

எழும்-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருக்கும். அடியார்-நடராஜப் பெருமானாருடைய அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். திரு-அழகிய. அலகு இடுவார்-துடைப்பத்தால் அந்த மாணிக்கங்களைப் பெருக்குவார்கள்; ஒருமை பன்மை மயக்கம். குளிர்-குளிர்ச்சியைப் பெற்ற. புனல்-நீரை. விடுவார்கள்-தரையின்மேல் விட்டுச் சுத்தம் செய்வார்கள்.

பிறகு வரும் 164-ம் கவியின் கருத்து வருமாறு :

'மேலே உள்ள ஆகாயமாகிய இடம் நிறையத் தொங்க விட்டிருக்கும் துவசங்களினூடு விரிந்த வெப்பமான சூரியன் வீசும் கிரணங்கள் நுழைவதற்கு அருமையாக இருக்கும் அழகு பெருகி விளங்கிய அழகிய ஒரு தெருவை திருமுறையாகிய தேவாரப் பதிகங்களைப் பாடியருளி மகிழும் பெருமையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார் நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டு இந்த உலகத்தில் விளங்கும் அழகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியர்கள் அவற்றை ஓதும் பெருகி எழுந்த இனிய கானம் நல்ல பண்புகள் நிறைந்த முனிவர்கள் கூறும் தோத்திரங்களோடும் ஆரவாரம் பெருகி எழுந்த நிலையில் ஏழு தளங்களைப் பெற்ற கோபுர வாசலில் தம்முடைய திருமேனி தரையில் படியுமாறு விழுந்து அந்த நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டு ஆலயத்துக்குள் அந்த நாயனார் நுழைந்தார்.' பாடல் வருமாறு:

" மேலம் பரதலம் நிறையும் கொடிகளில்
விரிவெங் கதிர்நுழை வரிதாகும்
கோலம் பெருகிய திருவீ தியைமுறை
குலவும் பெருமையர் பணிவுற்றே
ஞாலம் திகழ்திரு மறையின் பெருகொலி
நலமார் முனிவர்கள் துதியோடும்

ஓலம் பெருகிய நிலையேழ் கோபுரம்
உறமெய் கொடுதொழு துள்புக்கார்.''

மேல்-மேலே உள்ள. அம்பரதலம்-ஆகாயமாகிய இடம். நிறையும்-நிறையத் தொங்கவிட்டிருக்கும். கொடிகளில்-துவசங்களினூடு. விரி-விரிந்த. வெம்-வெப்பமாகிய. கதிர்-சூரியனுடைய கிரணங்கள்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகு பெயர். நுழைவரிதாகும்-உள்ளே நுழைவதற்கு அரியதாக இருக்கும். கோலம்-அழகு. பெருகிய-பெருகி விளங்கிய. திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். வீதியை-ஒரு தெருவை. முறை-திருமுறையாகிய தேவாரப் பதிகங்களைப் பாடியருளி. குலவும்-மகிழும். பெருமையர்-பெருமையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார். பணிவுற்று-நடராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. ஏ:அசைநிலை. ஞாலம்-இந்த உலகத்தில். திகழ்-விளங்கும். திரு-அழகிய. மறையின்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியர்கள் அவற்றை ஓதும்;ஒருமை பன்மை மயக்கம். பெருகு ஒலி-பெருகி எழுந்த இனிய கானம். நலம்-பல நல்ல பண்புகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்-நிரம்பிய. முனிவர்கள்-முனிவர்கள் கூறும். துதியோடும்-தோத்திரங்களோடும்; ஒருமை பன்மை மயக்கம். ஓலம்-ஆரவாரம். பெருகிய-பெருகி எழுந்த. நிலை-நிலையில்-ஏழ்-ஏழு தளங்களைப் பெற்ற. கோபுரம்-கோபுர வாசலில். உறமெய்கொடு-தம்முடைய திருமேனியைக் கொண்டு தரையில் படியுமாறு விழுந்து. தொழுது-நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டு. உள்-அந்த ஆலயத்துக்குள். புக்கார்-அந்த நாயனார் நுழைந்தார்.

அடுத்து உள்ள 165-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'வளரும் தங்கத்தைப் பதித்ததும் மேகங்கள் தவழ அவற்றை அணிந்துள்ள அழகிய திருக்கோயிலை வலமாக

வந்து சுழற்சியை அடையும் வரைக்கும் நிற்காத அளவினால் பெருகியதாக உள்ள பேராவலுக்கு நடுவில் தம்முடைய திருவுள்ளத்தில் எழுந்து பொங்கும் பக்தியாகிய சமுத்திரத்தைப் போல நிறைந்திருக்கும் தம்முடைய திருமேனியில் எல்லா இடங்களிலும் புளகாங்கிதமாகிய மயிர்க்கூச்சுச் செறிந்துள்ள வரிசை அமைய அழகு மிகுதியாக உள்ள தங்கத்தைப் பதித்த கோபுரவாசலின் வழியே ஆலயத்துக்குள் நுழைபவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தமக்கு முன்னால் தம்முடைய திருக்கழுத்தில் விளங்குகின்ற ஆலகால நஞ்சைக் கொண்ட நடராஜப் பெருமானார் திருநடனம் புரிந்தருளும் கனகசபையாகிய பொன்னம்பலத்தைத் தமக்கு எதிரில் தம்முடைய கண்களால் தரிசித்தார்.' பாடல் வருமாறு:

'' வளர்பொற் கனம்அணி திருமாளி கையினை
வலம்வந் தலமரு வரைநில்லா
அளவிற் பெருகிய ஆர்வத் திடைஎழும்
அன்பின் கடல்நிறை உடல்எங்கும்
புளகச் செறிநிரை விரவத் திருமலி
பொற்கோ புரமது புகுவார்முன்
களனிற் பொலிவிடம் உடையார் நடம்நவில்
கனகப் பொதுஎதிர் கண்ணுற்றார். ''

வளர்-வளரும். பொன் - தங்கத்தைப் பதித்ததும்; வினையாலணையும் பெயர். கனம்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அணி-தவழ அவற்றை அணிந்துள்ள. திரு-அழகிய. மாளிகையினை-நடராஜப் பெருமானாருடைய திருக்கோயிலை. வலம் வந்து-வலமாக வந்து. அலமரு-தம்முடைய திருவுள்ளத்தில் சுழலும் சுழற்சியை; வினையாலணையும் பெயர். வரை-பெருகிறவரையிலும். நில்லா-நிற்காத. அளவில்-அளவினால்; உருபு மயக்கம். பெருகிய-பெருகியதாக உள்ள. ஆர்வத்திடை-பேராவலுக்கு நடுவில் எழும்-பொங்கி எழும். அன்பின்-பக்தியாகிய. கடல்-சமுத்

திரத்தைப் போல. நிறை-நிறைந்திருக்கும். உடல்-தம்முடைய திருமேனியில். எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். புளக-புளகாங்கிதமாகிய மயிர்க்கூச்சு. ச்:சந்தி. செறி-செறிந்துள்ள. நிரை-வரிசை. விரவ-அமைய. த்:சந்தி. திரு-அழகு. மலி-மிகுதியாக உள்ள. பொன்-தங்கத்தைப் பதித்த. கோபுரமது-கோபுர வாசலின் வழியாக. அது:பகுதிப் பொருள் விகுதி. புகுவார்-ஆலயத்துக்குள் நுழைபவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். முன்-தமக்கு முன்னால். களனில்-தம்முடைய திருக்கழுத்தில். பொலி-விளங்கும். விடம்-ஆலகால நஞ்சை. உடையார்-பெற்றவராகிய நடராஜப் பெருமானார். நடம்-திருநடனத்தை. நவில் - புரிந்தருளும். கனகப்பொது - கனக சபையாகிய பொன்னம்பலத்தை. எதிர்- தமக்கு எதிரில். கண்ணுற்றார்-தம்முடைய கண்களால் தரிசித்தார். கண்: ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 166-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நெடுங்காலமாக விளங்கும் அழகோடு வீசும் பெருகிய பிரகாசம் நிறைந்திருக்கும் பொன்னம்பலமாகிய கனக சபையைத் தாம் தியானிக்கும் வண்ணம் தமக்கு நேரில் சேருமாறு உண்டாகும் பக்தியினால் ஆனந்தத்தை அடையும் நற்பண்பை முன்னால் அடையுமாறு உண்டாகும் நிலைமை சேர்ந்திருக்க தம்முடைய திருமுடியை அன்னப்பறவையின் வடிவத்தை எடுத்து மேலே பறந்து தேடிப் பார்த்தும் பிரம தேவனும், திருவடிகளைப் பன்றியின் வடிவத்தை எடுத்து நிலத்தைத் தோண்டிப் பார்த்தும், தேவர்களும் முதலாக இருக்கும் யோனிகளாகிய பல உயிர்களும் தெளிவை அடையாத சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகள் செய்தருளும் அமுதத்தைப் போன்ற அழகிய நடனத்தை திருப்தியை அடையாத விதத்தோடு வணங்கிட

பேரானந்தத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைகிறவரானார்.' பாடல் வருமாறு:

' நீடும் திருவுடன் நிகழும் பெருகொளி
நிறைஅம் பலம்நினை வுறநேரே
கூடும் படிவரும் அன்பால் இன்புறு
குணம்முன் பெறவரு நிலைகூடத்
தேடும் பிரமனும் மாலும் தேவரும்
முதலாம் யோனிகள் தெளிவொன்றா
ஆடும் கழல்புரி அமுதத் திருநடம்
ஆரா வகைதொழு தார்கின்றார். "

நீடும்-நெடுங்காலமாக விளங்கும். திருவுடன்-அழகோடு. நிகழும்-வீசிக்கொண்டு அமையும். பெருகி-பெருகிய. ஒளி-பிரகாசம். நிறை-நிறைந்திருக்கும். அம்பலம்-பொன்னம்பலமாகிய கனகசபையை. நினைவுற-தாம் தியானிக்கும் வண்ணம். நேர்-தமக்கு நேரில். ஏ: அசை நிலை. கூடும்படி-சேருமாறு. வரும்-உண்டாகும். அன்பால்-பக்தியினால். இன்புறு-பேரானந்தத்தை அடையும். குணம்-நல்ல பண்பை. முன்-முன்னால். பெற-அடையுமாறு. வரு-உண்டாகும். நிலை-நிலைமை. கூட-சேர்ந்திருக்க. த்: சந்தி. தேடும்-தம்முடைய திருமுடியை அன்னப் பறவையினுடைய வடிவத்தை எடுத்துக் கொண்டு மேலே பறந்து தேடிப்பார்த்தும் பிரமனும்-பிரமதேவனும். மாலும்-தம்முடைய திருவடிகளைப் பன்றியினுடைய வடிவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்தும் திருமாலும். தேவரும்-தேவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். முதலாம்-முதலாக இருக்கும். யோனிகள்-எண்பத்து நான்கு லட்சம் உயிர்களும். தெளிவு-தெளிவதை. ஒன்றா-அடையாத. ஆடும்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும். கழல்-வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகள்; ஆகு பெயர். புரி-செய்தருளும். அமுத-அமுதத்தைப் போன்ற. த்: சந்தி. திரு-

அழகிய. நடம்-ஆனந்தத் தாண்டவத்தை. ஆரா-திருப்தியை அடையாத. வகை-விதத்தோடு. தொழுது - நடராஜப் பெருமானாரை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வணங்கி. ஆர்கின்றார்-பேரானந்தத்தை அடைகிறவரானார்.

பிறகு உள்ள 167-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானுடைய திருநடனத்தைத் தரிசித்த சமயத்தில் அந்த நாயனாருடைய கைகளும் அவருடைய தலையின்மேல் அணிந்த அஞ்சலியாகக் கூப்பிக் கும்பிட்டுக்கொண்டு விளங்கின; அவருடைய திருவிழிகளும் சொரிந்த நீர் மழையைப் போல இடைவிடாமல் பொழியும் தன்மையை உடையவையாக விளங்கின. அவருடைய அகக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவையும், புறக்கரணங்களாகிய அவருடைய திருமேனியில் உள்ள உறுப்புக்களும் ஒன்று சேர்ந்து உருக்கத்தை அடையும் அன்பை உடையவையாகத் திகழ்ந்தன; இத்தகைய பாக்கியத்தை அடையும் அவருடைய திருமேனியும் தரையின்மேல் விழுவதற்கு முன்னால் எழுந்து நிற்கும்; மின்னலைப் போலத் தொங்கும் சடாபாரத்தோடு அந்தத் திருச்சிற்றம்பலத்தில் நின்றுகொண்டு திருநடனம் புரிந்தருளும் ஐயனுடைய திருநடனத்தைத் தம்முடைய எதிரில் தரிசித்துத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக்கொண்டு கூப்பிக் கும்பிடும் அந்த நாயனாருடைய பேராவல் பெருகி எழுதலுக்கு அளவே இல்லை.'

பாடல் வருமாறு:

"கையும் தலைமிசை புனைஅஞ் சலியன;
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன; கரணங் களுமுடன்
உருகும் பரிவின; பேறெய்தும்

மெய்யும் தரைமிசை விழுமுன் பெழுதரும்;
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால். ''

கையும்-திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப்பெருமானாருடைய திருநடனத்தைத் தரிசித்த சமயத்தில் அந்த நாயனாருடைய கைகளும்; ஒருமை பன்மை மயக்கம். தலைமிசை-அவருடைய தலையின்மேல். புனை-அணிந்துகொண்ட. அஞ்சலியன-அஞ்சலியாகக் கூம்பிக் கும்பிட்டுக்கொண்டு விளங்கின. கண்ணும்-அவருடைய திருவிழிகளும்; ஒருமை பன்மை மயக்கம். பொழி-சொரிந்த. மழை-மழையைப் போல. ஒழியாது-இடைவிடாமல். ஏ: அசைநிலை. பெய்யும்-பொழியும். தகையன-தன்மையை உடையவையாக விளங்கின. கரணங்களும்-அவருடைய அகக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவையும், புறக்கரணங்களாகிய அவருடைய திருமேனியில் உள்ள எல்லா உறுப்புக்களும். உடன்-ஒன்று சேர்ந்து. உருகும்-உருக்கத்தை அடையும். பரிவின-அன்பை உடையவையாகத் திகழ்ந்தன. பேறு-இத்தகைய பாக்கியத்தை. எய்தும்-அடையும். மெய்யும்-அவருடைய திருமேனியும். தரைமிசை-தரையின் மேல். விழும்-விழுவதற்கு. முன்பு-முன்னால். எழுதரும்-எழுந்து நிற்கும். மின்-மின்னலைப் போல. தாழ்-தொங்கும். சடையொடு-தன்னுடைய தலையின்மேல் உள்ள சடா பாரத்தோடு. நின்று-அந்தத் திருச்சிற்றம்பலத்தில் நின்று கொண்டு. ஆடும்-திரு நடனத்தைப் புரிந்தருளும். ஐயன்-ஐயனாகிய நடராஜப் பெருமானுடைய. திரு-அழகிய. நடம்-திருநடனத்தை. எதிர்-தம்முடைய எதிரில். கும்பிடும்-தரிசித்துத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக்கொண்டு கூப்பிக் கும்பிடும். அவர்-அந்த

நாயனாருடைய. ஆர்வம்-பேராவல். பெருகுதல்-பெருகி எழுதலுக்கு. அளவு-ஓர் அளவே. இன்று-இல்லை. ஆல்: ஈற்றசை நிலை.

அடுத்து உள்ள 168-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இந்தப் பான்மையை உடையவராகிய அந்தத் திரு நாவுக்கரசு நாயனார் பல தடவைகளும் தரையில் விழுந்து நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டுப் பிறகு தரையி லிருந்து எழுந்து நின்றுகொண்டிருக்க, 'நீ என்றைக்கு இந்தச் சிதம்பரத்தை அடைந்தாய்?" என்று சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் கனக சபையாகிய பொன்னம் பலத்தில் நின்று கொண்டு திருநடனம் புரிந்தருளும் தந்தை யைப் போன்றவனாகிய அந்த நடராஜப் பெருமான் தன்னு டைய திருவருளை மழையைப் போலச் சொரியும் கருணை யினோடு அவனுடைய திருவருளைப் பெற்றதனால் உண் டாகும் பேரானந்தத்தால் உண்மையாகிய பான்மையோடு ஒரு திருவிருத்தமாகிய அழகிய பாசுரத்தைப் பாடியருளிப் பிறகும் மேலும் மேலும் தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த அன்பினால் ஆனந்தத்தை அடையும் ஒரு திரு நேரிசையாகிய பாசுரத்தையும் அந்த நாயனார் பாடி யருள்கிறவரானார்.' பாடல் வருமாறு:

" இத்தன் மையர்பல முறையும் தொழுதெழ
'என்றெய் தினை?' என மன்றாடும்
அத்தன் திருவருள் பொழியும் கருணையில்
அருள்பெற் றிடவரும் ஆனந்தம்
மெய்த்தன் மையினில் விருத்தத் திருமொழி
பாடிப் பின்னையும் மேன்மேலும்
சித்தம் பெருகி பரிவால் இன்புறு
திருநே ரிசைமொழி பகர்கின்றார். "

இத்தன்மையர்-இந்தப் பான்மையை உடையவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். பல முறையும்-பலதடவை களும்; ஒருமை பன்மை மயக்கம். தொழுது-தரையில்

விழுந்து நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டு. எழ-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருக்க. என்று-நீ என்றைக்கு. எய்தினை-இந்தச் சிதம்பரத்தை அடைந்தாய். என-என்று; இடைக்குறை. மன்று-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் கனகசபையாகிய பொன்னம்பலத்தில். 'மன்று-சிற்சபை' எனலும் ஆம். ஆடும்-நின்று கொண்டு திருநடனம் புரிந்தருளும். அத்தன்-தந்தையைப் போன்றவனாகிய அந்த நடராஜப் பெருமான். திருவருள்-தன்னுடைய திருவருளை. பொழியும்-மழையைப் போலச் சொரியும். கருணையில்-கருணையோடு; உருபு மயக்கம். அருள்-அவன் வழங்கும் திருவருளை. பெற்றிட-பெற்றதனால். வரும்-உண்டாகும். ஆனந்தம்-பேரானந்தத்தால். மெய்-உண்மையாகிய. த்:சந்தி. தன்மையில்-பான்மையோடு; உருபு மயக்கம். விருத்த-ஒரு திருவிருத்தமாகிய. த்:சந்தி. திரு-அழகிய. மொழி-பாசுரத்தை. பாடி-அந்த நாயனார் பாடியருளி. ப்:சந்தி. பின்னையும்-பிறகும். மேன் மேலும்-மேலும் மேலும். சித்தம்-தம்முடைய திருவுள்ளத்தில். பெருகிய-பெருகி எழுந்த. பரிவால்-அன்பினால். இன்பு-ஆனந்தத்தை. உறு-அடையும். திரு நேரிசை-ஒரு திரு நேரிசையாகிய. மொழி-பாசுரத்தையும். பகர்கின்றார்-அந்த நாயனார் பாடியருளுகிறவரானார்.

அந்தநாயனார் கொல்லிப் பண்ணில் பாடியருளிய சிதம்பரத்தைப் பற்றிய திருநேரிசை ஒன்று வருமாறு:

"செஞ்சடைக் கற்றை முற்றத்
இளநிலா எறிக்கும் சென்னி
நஞ்சடை கண்டனாரைக்
காணலாம் நறவம் நாறும்
மஞ்சடை சோலைத் தில்லை
மல்கு சிற்றம் பலத்தே

துஞ்சடை இருள்கி ழியத்
துளங்கெரி ஆடு மாறே.''

அந்த நாயனார் சிதம்பரத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

''பாளை யுடைக்கமு கோங்கிப்பன்
மாடம் நெருங்கி எங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயல் தில்லை தன்னுள்
ஆள உடைக்கழற் சிற்றம்பலத்தரன்
ஆடல் கண்டால்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப்
பேய்த் தொண்டர் காண்பதென்னே.''

அடுத்து வரும் 169-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' ''பத்தனாய்ப் பாட மாட்டேன்'' எனஅந்த நடராஜப் பெருமானாருடைய சந்நிதியில் தொடங்கிக் கொல்லிப்பண் அமைய, ''அத்தா, உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே'' என முடித்து இந்த வகையில் அந்த நடராஜப் பெருமானாரை வாழ்த்தி வணங்கி நின்று கொண்டே இனிய சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகளைப் பெற்ற செந்தமிழ் மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி, தம்முடைய திருக் கரங்களால் உழவாரத் திருத்தொண்டினைப் புரியும் விருப் பத்தோடு அந்த நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டுத் தம்முடைய திருமடத்திற்கு அந்த நாயனார் எழுந் தருளினார்.' பாடல் வருமாறு:

'' 'பத்தனாய்ப் பாட மாட்டேன்'
என்றுமுன் எடுத்துப் பண்ணால்
'அத்தாஉன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்த வா'றென்
றித்திறம் போற்றி நின்றே
இன்றமிழ் மாலை பாடிக்

கைத்திருத் தொண்டு செய்யும்
காதலிற் பணிந்து போந்தார்.''

'பத்தனாய்ப் பாட மாட்டேன்' என்று- 'பத்தனாய்ப் பாடமாட்டேன்' என. முன்-அந்த நடராஜப் பெருமானாருடைய சந்நிதியில், எடுத்து-தொடங்கி. ப்:சந்தி. பண்ணால்-கொல்லிப்பண்ணினோடு; உருபு மயக்கம். 'அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறு' என்று- 'அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே' என முடித்து. இத்திறம்-இந்த வகையில். போற்றி-அந்த நடராஜப் பெருமானாரை வாழ்த்தி வணங்கிவிட்டு. நின்றே-நின்று கொண்டு. இன்-இனிய சொற்சுவை, பொருட்சுவை என்னும் சுவைகள் அமைந்த. தமிழ் மாலை-செந்தமிழ் மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. பாடி-அந்த நாயனார் பாடியருளி. க்:சந்தி. கை-தம்முடைய கைகளால்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருக்தொண்டு-உழவாரத் தொண்டினை. செய்யும்-புரியும். காதலின்-விருப்பத்தோடு. பணிந்து-அந்தநடராஜப் பெருமானாரை மீண்டும் வணங்கி விட்டு. போந்தார்-தம்முடைய திருமடத்திற்கு எழுந்தருளினார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருப்பதிகம் சிதம்பரத்தைப் பற்றிக் கொல்லிப் பண்ணில் அந்த நாயனார் பாடியருளிய திருநேரிசைகள் அடங்கியது. அந்தத் திருப்பதிகத்தில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

'' பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனேபரம யோகி
எத்தினாற் பத்தி செய்கேன்
என்னைநீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை
அம்பலத் தாடுகின்ற
அத்தாஉன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்த வாறே.''

இந்தப் பதிகத்தில் இறுதியில் வரும் பாசுரம் வருமாறு:

"மண்ணுண்ட மால வனும்
மலர்மிசை மன்னி னானும்
விண்ணுண்ட திருவு ருவம்
விரும்பினார் காண மாட்டார்
திண்ணுண்ட திருவே மிக்க
தில்லைச் சிற்றம்ப லத்தே
பண்ணுண்ட பாட லோடும்
பரமநீ ஆடு மாறே."

பிறகு வரும் 170-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நெடுங்காலமாக விளங்கிய மாணிக்கங்களினுடைய ஒளி வெள்ளம் நிறைந்த நடராஜப் பெருமானாருடைய ஆலயத்தினுடைய அழகிய முற்றத்தின் பக்கத்திலும் ஆடி அசையும் உயரத்தில் கட்டி யிருக்கும் துவசங்கள் சுற்றிக் கட்டியிருக்கும் தங்கத்தால் ஆகிய இரதம் ஓடும் அலங்காரத்தைப் பெற்ற அழகிய தெருவுக்குள்ளும் தம்மால் இயன்ற திருப்பணிகளை அந்த நாயனார் புரிந்து கொண்டு அந்த நடராஜப்பெருமானாரைத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிடும் செயலை உடையவராகித் தாம் பாடியருளிய பரிசுத்தமாகிய தம்முடைய திருவாக்கினால் பல திருப்பணிகளையும் மிகுதியாகப் புரிவாரானார்.' பாடல் வருமாறு:

"நீடிய மணியின் சோதி
நிறைதிரு முன்றில் மாடும்
ஆடுயர் கொடிசூழ் பொற்றேர்
அணிதிரு வீதி யுள்ளும்
கூடிய பணிகள் செய்து
கும்பிடும் தொழில ராகிப்
பாடிய புனித வாக்கின்
பணிகளும் பயிலச் செய்வார்."

நீடிய-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நெடுங்காலமாக விளங்கிய. மணியின்-மாணிக்கங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். சோதி - ஒளி வெள்ளம். நிறை-நிறைந்த. திருமுன்றில்-நடராஜப் பெருமானாருடைய ஆலயத்தினுடைய அழகிய முற்றத்தின். முன்றில்-இல்முன்; பின் முன்னாகத் தொக்க தொகை. மாடும்-பக்கத்திலும். ஆடு-ஆடி அசையும். உயர்-உயரத்தில் கட்டியிருக்கும். கொடி-துவசங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றிக் கட்டித் தொங்கவிட்டிருக்கும். பொன்-தங்கத்தால் ஆகிய. தேர்-இரதம் ஓடும். அணி-அலங்காரத்தைப் பெற்ற. திரு-அழகிய. வீதியுள்ளும்-தெருவுக்கு உள்ளும். கூடிய-தம்மால் செய்யக் கூடிய. பணிகள்-திருப்பணிகளை. செய்து-அந்த நாயனார் புரிந்து கொண்டு. கும்பிடும்-அந்த நடராஜப் பெருமானாரைத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிடும். தொழிலராகி-செயலை உடையவராகி. ப்:சந்தி. பாடிய-தாம் பாடியருளிய. புனித-பரிசுத்தமாகிய. வாக்கின்-தம்முடைய வாக்கினால். பணிகளும்-தேவாரப் பதிகங்களைப் பாடியருளும் திருப்பணிகளையும். பயில-மிகுதியாக. ச்:சந்தி. செய்வார்-அந்த நாயனார் புரிவாரானார்.

அடுத்து உள்ள 171-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: 'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நடராஜப்பெருமானார் வழங்கிய திருவருளைப் பெற்ற பெரிய ஆனந்தம் பொங்கி எழ, "அன்னம் பாலிக்கும்" என்று தொடங்கும் திருக்குறுந் தொகைகளாகிய பாசுரங்களை அந்த நாயனார் பாடியருளி அழகிய உழவாரப் படையை எடுத்துக்கொண்டு பெரியதாக அமைந்து தம்முடைய திருவுள்ளத்தில் எழும் விருப்பத் தோடும் பெருமையையும் அழகையும் பெற்ற திருத்தொண்டு களைப் புரிந்துகொண்டு விருப்பம் உண்டாகும் தம்முடைய திருமேனியில் தம்முடைய கண்களிலிருந்து பொழியும் நீர் தம்முடைய திருமேனி முழுவதும் பூசிக் கொண்டிருந்த

வெண்மையான விபூதியில் வழிந்து அந்த விபூதியைச் சேறு போலச் செய்ய.' பாடல் வருமாறு:

" அருட்பெரு மகிழ்ச்சி பொங்க
'அன்னம்பா லிக்கும்' என்னும்
திருக்குறுந் தொகைகள் பாடித்
திருவுழ வாரம் கொண்டு
பெருத்தெழு காத லோடும்
பெருந்திருத் தொண்டு செய்து
விருப்புறு மேனி கண்ணீர்
வெண்ணீற்று வண்ட லாட. "

இந்தப் பாடல் குளகம். அருள்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நடராஜப் பெருமானார் வழங்கிய திருவருளைப் பெற்றதனால் உண்டாகிய. பெரு-பெரிய. மகிழ்ச்சி-ஆனந்தம். பொங்க-பொங்கி எழ. 'அன்னம் பாலிக்கும்' என்னும்- 'அன்னம் பாலிக்கும்' என்று தொடங்கும். திருக் குறுந்தொகைகள்-திருக்குறுந் தொகைகளாகிய பாசுரங் களை. பாடி-அந்த நாயனார் பாடியருளி. த்:சந்தி. திரு-அழகிய. உழவாரம்-உழவாரப் படையை. கொண்டு-தம் முடைய கைகளில் எடுத்துக்கொண்டு. பெருத்து-பெரியதாக அமைந்து. எழு-தம்முடைய திருவுள்ளத்தில் எழும். காத லோடும்-விருப்பத்தோடும். பெரும்-பெருமையையும். திரு-அழகையும் பெற்ற. த்: சந்தி. தொண்டு - தம்முடைய உழ வாரப்படையினால் ஆலயத்தில் பிராகாரத்தில் பக்தர்கள் நடக்கும் வழியில் உள்ள புற்களைச் செதுக்கியும், கல்முதலிய வற்றை ஒதுக்கியும் புரியும் திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்துகொண்டு. விருப்பு-விருப்பம். உறு-உண்டாகும். மேனி-தம்முடைய திருமேனியில். கண்-தம்முடைய கண்களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். நீர்-பொழியும் நீர். வெண்ணீற்று-தம்முடைய திருமேனி முழுவதும் பூசிக்கொண்டிருந்த வெண்மையாகிய விபூதியில்

வழிந்து. வண்டல்ஆட-அந்த விபூதியைச் சேற்றைப் போலச் செய்ய.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருக்குறுந் தொகை வருமாறு:

"அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே."

அந்த நாயனார் பாடிய மற்றொரு திருப்பதிகத்தில் உள்ள முதற் பாசுரம் வருமாறு:

"பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ."

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருப்பதிகம் இத்தத் தொகைத் திருக்குறுந்தொகை என்னும் பெயரை உடையது. அதில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

"சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சடர்
அந்தி வான்நிறத் தான்அணி யார்மதி
முந்திச் சூடிய முக்கண்ணி னான்அடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே."

பிறகு வரும் 172-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தாம் விரும்பிய திருப் பணிகளைப் புரிந்துகொண்டு திகழ்ந்த காலத்தில் திருவேட் களத்தில் எழுந்தருளியிருக்கும் இடபத்தை உயர்த்திய துவசத்தைப் பெற்றவராகிய பாசுபதேசுவரரை அந்தத் தலத்திற்கு எழுந்தருளி முன்னால் பணிந்துவிட்டு ஒருதிருப் பதிகத்தைப் பாடியருளி நீலோற்பல மலரைப் போல நீல நிறத்தைப் பெற்ற ஆலகால விடத்தை விழுங்கிய திருக் கழுத்தைப் பெற்றவராகிய பால்வண்ண நாதேசுவரர்

நிலைபெற்றுத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்கழிப்பாலைக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் நல்வாழ்வைப் பெறும் வண்ணம் அடைந்தார்.' பாடல் வருமாறு:

**'' மேவிய பணிகள் செய்து
விளங்கும் நாள் வேட்களத்துச்
சேவுயர் கொடியார் தம்மைச்
சென்றுமுன் வணங்கிப் பாடிக்
காவியங் கண்டர் மன்னும்
திருக்கழிப் பாலை தன்னில்
நாவினுக் கரசர் சென்று
நண்ணினார் மண்ணோர் வாழ. ''**

மேவிய-தாம் விரும்பிய. பணிகள் - திருப்பணிகளை. செய்து-புரிந்து கொண்டு. விளங்கும்-திகழும். நாள்-காலத்தில். வேட்களத்து - திருவேட்களத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும். ச்:சந்தி. சே-இடபமாகிய. உயர் கொடியார் தம்மை-உயர்த்திய துவசத்தைப் பெற்றவராகிய பாசுபதேசுவரரை. தம்: அசை நிலை. ச்:சந்தி. சென்று-எழுந்தருளி. முன்-அந்த ஈசுவரருடைய சந்நிதியில். வணங்கி-பணிந்துவிட்டு. ப்:சந்தி. பாடி-ஒருதிருப்பதிகத்தைப் பாடியருளி. க்:சந்தி. காவி-ஆலகால விடத்தை விழுங்கினமையால் நீலோற்பல மலரைப் போல நீல நிறத்தைப் பெற்ற. அம்-அழகிய. கண்டர்-திருக் கழுத்தைப் பெற்றவராகிய பால்வண்ணநாதேசுவரர். மன்னும்-நிலைபெற்றுத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருக் கழிப்பாலை தன்னில்-திருக்கழிப்பாலை என்னும் சிவத்தலத்துக்கு; உருபு மயக்கம். தன்: அசை நிலை. நாவினுக்கரசர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார். சென்று-எழுந்தருளி. மண்ணோர்-இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்: ஒருமை பன்மை மயக்கம். வாழ-நல்ல வாழ்வைப் பெறும் வண்ணம். நண்ணினார்-அடைந்தார்.

திருவேட்களம்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பாசுபதேசுவரர். அம்பிகை நல்லநாயகி. இது சிதம்பரத்துக்குக் கிழக்குத் திசையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் சிதம்பரத்தில் தங்கியிருப்பதற்கு அஞ்சி இந்தத் தலத்தில் தங்கிக்கொண்டிருந்து சிதம்பரத் துக்கு எழுந்தருளி நடராஜப் பெருமானாரைத் தரிசித்து வருவார். இது அருச்சுனனுக்குப் பாசுபதேசுவரர் பாசுப தாஸ்திரத்தை வழங்கியருளிய தலம். பாசுபதாஸ்திரத் தைக் கையில் ஏந்திய உற்சவ விக்கிரகமும் அருச்சுனனுடைய உற்சவ விக்கிரகமும் இந்த ஆலயத்தில் உள்ளன. வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் இந்த உற்சவம் நடைபெறு கிறது. இதைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

“ கட்டப் பட்டுக் கவலையில் வீழாதே
பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம்நீர்
சிட்டனார் திரு வேட்களம் கைதொழப்
பட்ட வல்வினை ஆயின பாறுமே. ”

இந்தப் பாசுரம் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய திருக்குறுந்தொகை. மற்றொரு திருக்குறுந் தொகை வருமாறு:

“ நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. ”

திருக்கழிப்பாலை: இது சோழநாட்டில் உள்ள சிவத் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பால்வண்ண நாதேசுவரர். அம்பிகை வேதநாயகி. இது சிதம்பரத் திற்குத் தென்கிழக்குத் திசையில் ஏழு மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலத்தில் இருந்த ஆலயத்தைக் கொள்ளிட நதி அடித்துக்கொண்டு போய்விட்டமையினால் அந்தக் கோயிலில் இருந்த பால்வண்ணநாதேசுவரர் சிதம்

பரத்துக்குத் தென் கிழக்குத்திசையில் இரண்டரை மைல் தூரத்தில் உள்ள சிவபுரி என்னும் சிவத்தலத்தில் ஒரு தனி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கிறார். சிவலிங்கப் பெருமான் வெண்ணிறமுடையவராக விளங்குகிறார். அதனால்தான் பால்வண்ணநாதேசுவரர் என்னும் திருநாமம் வந்தது. வன்மீக முனிவர் வழிபட்ட தலம் இது. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் காந்தாரப் பண்ணில் ஒரு திருப்பதிகத்தையும், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந் தொகை, திருத் தாண்டகம் என்பவை அடங்கிய திருப்பதிகங்களையும் பாடியருளியிருக்கிறார்.

அவற்றுள் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"ஊதுடுத்தி ஒன்பது வாசல் வைத்து
ஒள்ளெலும்பு தூணா வுரோமம் மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பலபடைத்தார் தாம ரையினார்
கானெடுத்து மாமயில்கள் ஆலும் சோலைக்
கழிப்பாலை மேய கபாலப் பனார்
வானிடத்தை யூடறுத்து வல்லைச் செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே."

அந்த நாயனார் இந்தத் தலத்தைப்பற்றிக் காந்தாரப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே
என்கின் றாளால்
சினபவளத் திண்டோள்மேற் சேர்ந் திலங்கு
வெண்ணீற்றன் என்கின்றாளால்
அனபவள மேகலையோ டப்பாவைக் கப்பாவான்
என்கின் றாளால்
கனபவளம் சிந்தும் கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டால் கொல்லோ."

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய திருநேரிசை ஒன்று வருமாறு:

"நங்கையைப் பாகம் வைத்தார்;
ஞானத்தை நவில வைத்தார்;
அங்கையில் அனலும் வைத்தார்;
ஆனையின் உரிவை வைத்தார்;
தங்கையின் யாழும் வைத்தார்;
தாமரை மலரும் வைத்தார்;
கங்கையைச் சடையுள் வைத்தார்;
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே."

அவர் பாடியருளிய திருவிருத்தம் ஒன்று வருமாறு:

"நெய்தற் குருகுதன் பிள்ளையென்
றெண்ணி நெருங்கிச் சென்று
கைதை மடல்புல்கு தென்கழிப்
பாலை யதனு றைவாய்
பைதற் பிறையொடு பாம்புடன்
வைத்த பரிசறி யோம்
எய்தப் பெறின்இரங் காதுகண்
டாய்நம் இறைய வனே."

அவர் பாடியருளிய திருக்குறுந்தொகை ஒன்று வருமாறு:

"வண்ண மும்வடி வும்சென்று கண்டிவன்
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திவன்
கண்ணு வாம்பொழில் சூழ்கழிப் பாலைஎம்
அண்ண லேஅறி வான்இவன் தன்மையே."

பிறகு வரும் 173-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கோபத்தைக் கொண்ட இடபமாகிய காளை மாட்டு வாகனத்தை ஓட்டி அதன் மேல் ஏறும் மணவாள நம்பியாகிய பால்வண்ணநாதேசுவரனுடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளைத் திருக்கழிப்பாலைக்கு அந்தத் திரு

நாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அந்த ஈசுவரரை வணங்கி விட்டு, 'வனபவளவாய் திறந்து வானவர்க்கும் தானவனே என்கின்றாள்' என்று தொடங்கி அத்தகைய திருப்பதிகத் தோடு பக்தியை உண்டாக்கும் சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தையுடைய செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகத்தையும் அந்த நாயனார் பாடியருளி அந்தத் திருக்கழிப்பாலையில் தங்கியிருந்து யாரும் நினைப் பதற்கு அரியவராகிய அந்தப் பால்வண்ணநாதேசுவரரை வாழ்த்தி வணங்கிவிட்டு நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும் அழகிய பெரும்பற்றப்புலியூராகிய சிதம்பரத்தை எண்ணி மீண்டும் அங்கே எழுந்தருள்பவரானார்.' பாடல் வருமாறு:

“ சினவிடையே றுகைத்தேறும் மணவாள
 நம்பிகழல் சென்று தாழ்ந்து
'வனபவள வாய்திறந்து வானவர்க்கும்
 தானவனே என்கின் றாள்' என்
றனையதிருப் பதிகமுடன் அன்புறுவண்
 டமிழ்பாடி அங்கு வைகி
நினைவரியார் தமைப்போற்றி நீடுதிருப்
 புலியூரை நினைந்து மீள்வார். ”

சின-கோபத்தைக் கொண்ட. விடை-இடபமாகிய. ஏறு-காளைமாட்டு வாகனத்தை. உகைத்து-ஓட்டி. ஏறும்-அதன்மேல் ஏறி எழுந்தருளும். மணவாள நம்பி-மண வாள நம்பியாகிய பால்வண்ணநாதேசுவரருடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகுபெயர். சென்று-திருக்கழிப்பாலைக்கு அந்தத் திருநாவுக்கரசு நாய னார் எழுந்தருளி. தாழ்ந்து-அந்த ஈசுவரரைத் தரையில் விழுந்து வணங்கிப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. 'வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தான வனே என்கின்றாள்' என்று- 'வனபவள வாய்திறந்து வான வர்க்கும் தானவனே என்கின்றாளால்' எனத் தொடங்கி.

அனைய-அத்தகைய. திருப்பதிகமுடன்-ஒரு திருப்பதிகத்தோடு. அன்பு-பக்தியை. உறு-பெற்ற. வண்-சொற்சுவை பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தையும்; ஆகுபெயர். பாடி-அந்த நாயனார் பாடியருளி. அங்கு_ அந்தத் திருக்கழிப்பாலையில். வைகி-தங்கிக் கொண்டிருந்து. நினைவு அரியார் தமை - யாராலும் நினைப்பதற்கு அரியவராகிய அந்தப் பால்வண்ணநாதேசுவரரை. தம்:அசை நிலை. ப்:சந்தி. போற்றி-வாழ்த்தி வணங்கி விட்டு. நீடு-நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும். திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். ப்:சந்தி. புலியூரை-பெரும்பற்றப்புலியூராகிய சிதம்பரத்தை. நினைந்து-எண்ணி. மீள்வார்-மீண்டும் அந்தச் சிவத்தலத்துக்கு எழுந்தருள்வார்.

"வனபவள" என்று தொடங்கும் பாசுரத்தை முன்பே காட்டினோம்; ஆண்டுக் கண்டுணர்க. காந்தாரப் பண்ணில் அமைந்த அந்தத் திருப்பதிகத்தில் வரும் மற்றொரு பாசுரம் வருமாறு:

"வண்டுலவு கொன்றை வளர்புன் சடையானே
என்கின்றாளால்;
விண்டலர்ந்து நாறுவ தோர் வெள்ளெருக்கு
நாண்மலருண் டென்கின்றாளால்;
உண்டயலே தோன்றுவதோர் உத்தரியப்
பட்டுடையன் என்கின்றாளால்;
கண்டயலே தோன்றும் கழிப்பாலைச்
சேர்ப்பானைக் கண்டாள் கொல்லோ."

அடுத்து வரும் 174-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: 'திருமாளிகைகளினுடைய பின்புறத்தில் உள்ள தோட்டங்களில் சமுத்திரத்தின் அலைகள் சங்குகளைக் கொண்டு வந்து பொழியும் திருக்கழிப்பாலையினுடைய பக்கத்தை

விட்டு அகன்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அரும்பு களைப் பெற்ற கிளைகளைக் கொண்ட குளிர்ச்சியையுடைய சுரபுன்னை மரங்கள் வளர்ந்து நிற்கும் பூஞ்சோலையின் வழியாக நடந்து சென்று சிதம்பரத்தை அடையும் சமயத்தில் "நினைப்பவர் தம் மனம் கோயில் கொண்டருளும்" அந்தத் தலத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச் சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாரை, "அடியேன் தினையளவு பொழுதேனும் மறந்து விட்டு உயிர் பிழைத்து இருப்பேனோ?" என்ற கருத்தை வைத்து அந்த நாயனார் ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி விட்டுத் தில்லையாகிய சிதம்பரத்திற்கு எழுந்தருளி அடைந்தார்.' பாடல் வருமாறு:

"மனைப்படப்பிற் கடற் கொழுந்து
வளைசொரியும் கழிப்பாலை மருங்குநீங்கி
நனைச்சினைமென் குளிர்ஞாழற் பொழிலூடு
வழிக்கொண்டு நண்ணும் போதில்
'நினைப்பவர்தம் மனம்கோயில் கொண்டருளும்
அம்பலத்து நிருத்த னாரைத்
தினைத்தனையாம் பொழுதுமறந் துய்வனோ ?'
எனப்பாடித் தில்லை சார்ந்தார்."

மனை - திருமாளிகைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. படப்பில்-பின்புறத்தில் உள்ள தோட்டங் களில்; ஒருமை பன்மை மயக்கம். கடல்-சமுத்திரத்தில் வீசும். கொழுந்து-அலைகள்; ஒருமை பன்மை மயக்கம். வளை -சங்குகளைக் கொண்டு வந்து; ஒருமை பன்மை மயக்கம். சொரியும் - கரையில் பொழியும். கழிப்பாலை-திருக்கழிப் பாலையினுடைய. மருங்கு-பக்கத்தை. நீங்கி-விட்டுஅகன்று. நனை-அரும்புகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சினை-கிளைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். குளிர்-குளிர்ந்த நிழலைத் தரும். ஞாழல்-சுர

புன்னைமரங்கள் வளர்ந்துநிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். பொழிலூடு-பூஞ்சோலையின் வழியாக. வழிக் கொண்டு- நடந்து சென்று. நண்ணும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரத்தை அடையும். போதில்-சமயத்தில். நினைப்பவர் தம்-தம்மை தியானிப்பவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசை நிலை. மனம்-திருவுள்ளங்களை; ஒருமை பன்மை மயக்கம். கோயில்-ஆலயங்களாக; ஒருமை பன்மை ம ய க் க ம். கொண்டருளும்-ஏற்றுக் கொண்டருளும். அம்பலத்து-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில். நிருத்தனாரை-திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாரை. த்:சந்தி. தினைத்தனை- தினையளவு. ஆம்-ஆகும். பொழுது-பொழுதும். மறந்து- மறந்து விட்டு. உய்வனோ-அடியேன் உயிர் பிழைத்து இருப்பேனோ. என-என்ற கருத்தைவைத்து; இடைக்குறை. பாடி-ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருளி. த்:சந்தி. தில்லை-தில்லையாகிய சிதம்பரத்திற்கு. சார்ந்தார்- எழுந்தருளி அடைந்தார்.

இந்தப் பாடலிற் குறிப்பிட்ட திருக்குறுந்தொகை வருமாறு:

"பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ."

அந்த நாயனார் கொல்லிப் பண்ணில் பாடியருளிய ஒரு திரு நேரிசை வருமாறு:

"ஓதினார் வேதம் வாயால்
ஒளிநிலா எறிக்கும் சென்னிப்
பூதனார் பூதம் சூழப்
புலியுரி அதள னார்தாம்
நாதனார் தில்லை தன்னுள்
நவின்ற சிற்றம் பலத்தே

காதில் வெண்குழைகள் தாழக்
கனலெரி ஆடு மாறே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

'' தொடுத்த மலரொடு தூபமும்
சாந்தும் கொண்டெப் பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடு
மாலுக்கும் காண் பரியான்
பொடிக்கொண் டணிந்து பொன்னா
கியதில்லைச் சிற்றம் பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்ப தென்னே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு பெரிய திருத்தாண்டகம் வருமாறு:

'' அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு புக்கதிருத்தாண்டகம் வருமாறு:

'' மங்குல் மதிதவழும் மாட வீதி
மயிலாப்பில் உள்ளார் மருகல் உள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கில் உள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்குமிட மறியார் கால நாளார்
தரும புரத்துள்ளார் தக்க ளூரார்

பொங்குவெண் ணீறணிந்து பூதம் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே.''

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

'' பாளை யுடைக்கமு கோங்கிப்பன்
மாடம் நெருங்கி எங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயல் தில்லை தன்னுள்
ஆள்வுடைக் கழற்சிற்றம் பலத்தான்
ஆடல் கண்டால்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப்
பேய்த்தொண்டர் காண்ப தென்னே. ''

அடுத்து வரும் 175-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: ' ''அரியானை'' என்று தொடங்கி தன்னுடைய அடியவர்களுக்கு எளியவனாக விளங்கும் நடராஜப் பெருமானை அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவுள்ளத்திலிருந்து பிரியாமல் உள்ள பெரிய திருத்தாண்டகமாகிய செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருளி விளங்கும் ஒளி வெள்ளத்தை விரித்து நின்று எல்லா உலகங்களிலும் விளக்கத்தைப் பெற்ற சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பொன்னம்பலமாகிய கனகசபைக்கு எழுந்தருளித் திருநடனம் புரிந்தருளுகின்றவராகிய நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டு செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தால் வாழ்த்துவதை அந்த நாயனார் புரிபவரானார்.' பாடல் வருமாறு:

'' 'அரியானை' என்றெடுத்தே அடியவருக்கெளியானை
அவர்தம் சிந்தை
பிரியாத பெரியதிருத் தாண்டகச்செந்
தமிழ்பாடிப் பிறங்கு சோதி

விரியாநின் றெவ்வுலகும் விளங்கியபொன்
அம்பலத்து மேவி ஆடல்
புரியாநின் றவர்தம்மைப் பணிந்துதமி
ழாற்பின்னும் போற்றல் செய்வார். ”

'அரியானை' என்று - 'அரியானை' என. எடுத்து—தொடங்கி. ஏ: அசைநிலை. அடியவருக்கு - தன்னுடைய அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். எளியானை—எளியவனாக விளங்கும் நடராஜப் பெருமானை. அவர்தம்—அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. தம்: அசைநிலை. சிந்தை- திருவுள்ளத்திலிருந்து. பிரியாத-பிரியாமல் உள்ள. பெரிய திருத்தாண்டக-பெரிய திருத்தாண்டகமாகிய. ச்:சந்தி. செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தை; ஆகு பெயர். பாடி-அந்த நாயனார் பாடியருளி. ப்:சந்தி. பிறங்கு-விளங்கும். சோதி-ஒளி வெள்ளத்தை. விரியா நின்று-விரித்து நின்று. எவ்வுலகும்-எல்லா உலகங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். விளங்கிய—விளக்கத்தைப் பெற்ற. பொன் அம்பலத்து-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பொன்னம்பலமாகிய கனக சபைக்கு. மேவி-அந்த நாயனார் எழுந்தருளி. ஆடல்—திருநடனத்தை. புரியா நின்றவர் தம்மை-புரிந்தருளுகின்றவராகிய நடராஜப் பெருமானாரை. தம்:அசை நிலை. ப்:சந்தி. பணிந்து-வணங்கிவிட்டு. தமிழால்-செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு திருப்பதிகத்தால். போற்றல்—வாழ்த்துதலை. செய்வார்-அந்த நாயனார் புரிபவரானார்.

"அரியானை" என்று தொடங்கும் பெரிய திருத்தாண்டகத்தை முன்பே காட்டினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

அந்தத் திருப்பதிகத்தில் வரும் மற்றொரு பாசுரம் வருமாறு:

“ அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன்தன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனைமூவா

மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலும் குலவரையும் மண்ணும்விண்ணும்
திருந்தொளிய தாரகையும் திசைகள் எட்டும்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவுமாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. ''

பிறகு உள்ள 176-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார், "செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்கும்" என்று தொடங்கும் சிறந்த உண்மையைக் கொண்ட அழகிய சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை வியப்பு உண்டாகுமாறு அந்த நாயனார் பாடியருளி பக்தி அமைந்த தம்முடைய திருவுள்ளம் உருக்கத்தை அடைய சொரிகின்ற நீர் வழியும் இரண்டு கண்களும், நடராஜப் பெருமானாரைப் புகழ்ந்த இனிய சுவையைப் பெற்ற வார்த்தைகள் நிரம்பியுள்ள திருவாயும், தம்முடைய செயல்களிலிருந்து நீங்காத திருப்பணிகளும் மாறாமல் புரிந்துகொண்டு வரும் காலத்தில்.' பாடல் வருமாறு:

'' 'செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலாஎறிக்கும்'
எனும் சிறந்த வாய்மை
அஞ்சொல் வளத்தமிழ் மாலை அதிசயமாம்
படிபாடி அன்பு சூழ்ந்த
நெஞ்சுருகப் பொழிபுனல் வார்கண்ணிணையும்
பரவியசொல் நிறைந்த வாயும்
தஞ்செயலின் ஒழியாத திருப்பணியும்
மாறாது சாரும் நாளில். ''

இந்தப் பாடல் குளகம். 'செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்கும்' எனும்- 'செஞ்சடைக்கற்றை முற்றத் திள நிலா எறிக்கும்' என்று தொடங்கும். எனும்: இடைக்

குறை. சிறந்த-சிறப்பாக அமைந்த. வாய்மை-உண்மை யைக் கொண்ட. அம்-அழகிய. சொல்-இனிய சுவையைப் பெற்ற சொற்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். வள-வளப்பத்தைப் பெற்ற. த்:சந்தி. தமிழ்-செந்தமிழ் மொழி யில் அமைந்த. மாலை-மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. அதிசயமாம் படி-வியப்பு உண்டாகுமாறு. பாடி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி. அன்பு-பக்தி. சூழ்ந்த-அமைந்த. நெஞ்சு-தம்முடைய திருவுள்ளம். உருக-உருக் கத்தை அடைய. ப்:சந்தி. பொழி-சொரியும். புனல்-நீர். வார்-வழியும். கண் இணையும்-இரண்டு கண்களும். கண்: ஒருமை பன்மை மயக்கம். பரவிய-நடராஜப் பெருமா னாரைப் புகழ்ந்த. சொல்-இனிய சுவையைப் பெற்ற வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். நிறைந்த-நிரம்பி யுள்ள. வாயும்-திருவாயும். தம்-தம்முடைய. செயலின்-செயல்களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். ஒழியாத-நீங்காத. திருப்பணியும்-திருப்பணிகளும்; ஒருமை பன்மை மயக்கம். மாறாது-மாறுபடாமல். சாரும்-புரிந்து கொண்டு வரும். நாளில்-காலத்தில். இந்தப் பாடலில் குறிப்பிட்ட பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்த திருநேரிசைகள் அடங் கியது. அந்தத் திருநேரிசை வருமாறு:

" செஞ்சடைக் கற்றை முற்றத்
 இளநிலா எறிக்கும் சென்னி
நஞ்சடை கண்ட னாரைக்
 காணலாம் நறவம் நாறும்
மஞ்சடை சோலைத் தில்லை
 மல்குசிற் றம்ப லத்தே
துஞ்சடை இருள்கி ழியத்
 துளங்கெரி ஆடு மாறே. "

இந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதித் திருநேரிசை வருமாறு:

" மதியிலா அரக்கன் ஓடி
மாமலை எடுக்க நோக்கி
நெதியன்தோள் நெரிய ஊன்றி
நீடிரும் பொழில்கள் சூழ்ந்த
மதியம்தோய் தில்லை தன்னுள்
மல்குசிற் றம்ப லத்தே
அதிசயம் பொலிய நின்று
அனலெரி ஆடு மாறே. "

பிறகு உள்ள 177-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இறுதி யுகமாகிய கலியுகத்தில் சமுத்திரத்தின் மேல் ஆழாமல் மிதந்திருந்த அழகிய கழுமலமாகிய சீகாழியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்த சிவந்த கண்களைப் பெற்ற இடப வாகனத்தை ஓட்டுபவராகிய பிரமபுரீசர் வழங்கிய திருவருளினால் இமயமலை அரசனுடைய புதல்வியும், பொம்மையைப் போன்றவளுமாகிய திருநிலை நாயகி ஒரு பொற்கிண்ணத்தில் கறந்து வழங்கியருளிய அழகிய கொங்கைகளில் சுரந்த பாலுடனும் முழுவதும் நிரம்பியுள்ள சைவ சமயம் பெருகுமாறு வளரும் சிவ ஞானத்தைக் குழைத்துக் குடிக்கச் செய்தருளிய பாலை திருவமுது செய்தருளிய அடியேங்களை ஆட்களாக உடைய வேதியராகிய சிறுவர் திருவாய் மலர்ந்தருளிச் செய்தஅழகிய வார்த்தைகளை அடியவர்கள் தம்மிடம் கூற அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டருளினார்.' பாடல் வருமாறு:

" கடை யுகத்தில் ஆழியின்மேல் மிதந்ததிருக்
கழுமலத்தில் இருந்த செங்கண்
விடை யுகைத்தார் திருவருளால் வெற்பரையன்
பாவைதிரு முலைப்பா லோடும்
அடையநிறை சிவம்பெருக வளர் ஞானம்
குழைத்தூட்ட அமுது செய்த
உடைய மறைப் பிள்ளையார் திருவார்த்தை
அடியார்கள் உரைப்பக் கேட்டார். "

கடை-இறுதி. யுகத்தில்-யுகமாகிய கலியுகத்தில். ஆழி யின் மேல்-சமுத்திரத்தின் மேல். மிதந்த-ஆழாமல் மிதந்து கொண்டிருந்த. திரு-அழகிய. 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். க்:சந்தி. கழுமலத்தில்-கழுமலமாகிய சீகாழியில். இருந்த-திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருந்த. செம்-சிவப்பாக இருக்கும். கண்-கண்களைக் கொண்ட ஒருமை பன்மைமயக்கம். விடை-இடப வாகனத்தை. உகைத் தார்-ஓட்டுபவராகிய பிரமபுரீசர். திருவருளால்-வழங்கிய திருவருளால். வெற்பரையன்-இமாசல அரசனுடைய புதல் வியும். பாவை-பொம்மையைப் போன்றவளுமாகிய திரு நிலை நாயகி. திரு-அழகிய. முலை-தன்னுடைய கொங்கை களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாலோடும்-ஒரு பொற் கிண்ணத்தில் கறந்து வழங்கியருளிய பாலு டனும். அடைய-இந்த நாடு முழுவதும். நிறை-நிறைந் திருக்கும். சிவம்-சைவ சமயம். பெருக-பெருகி வளருமாறு. வளர்-வளரும். ஞானம்-சிவஞானத்தை. குழைத்து-அந்தப் பாலோடு குழைத்து. ஊட்ட-குடிக்கச் செய்தருளிய. அமுது செய்த-அந்தப் பாலைத் திருவமுது செய்தருளிய. உடைய-அடியேன்களை ஆட்களாக உடைய; இது சேக்கிழார் தம் மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. மறை-வேதியராகிய; திணை மயக்கம். ப்:சந்தி. பிள்ளையார்-சிறுவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். திரு வார்த்தை - திருவாய் மலர்ந்தருளிச் செய்த அழகிய வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். அடியார்கள்-பிரமபுரீசருடைய அடியவர்கள். உரைப்ப-கூற. க்:சந்தி. கேட்டார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டருளி னார்.

பிறகு வரும் 178-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை விழுங்கியவராகிய பிரமபுரீசரை

தாயைப் போன்றவளாகிய திருநிலை நாயகி வழங்கிய அழகிய அமுதத்தைப் போன்ற பாலை அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் குடித்தருளிய சமயத்திலேயே ச, ரி, க, ம, ப, த, நிச என்னும் ஏழு சுவரங்களைக் கொண்ட இசைப்பாடல்களாகிய சொற்சுவை பொருட்சுவை என்னும் சுவைகளாகிய வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை, ''இந்தப் பிரமபுரீசன் அடியேங்களுடைய தலைவன்'' என்று சுட்டிக் காட்டி பாடியருள வல்லவரும் சீகாழியில் திருவவதாரம் செய்தருளும் பெருமையையும் தகுதியையும் கீர்த்தியையும் திருநாவுக்கரசு நாயனார் கேட்டவுடன் வியப்பை உடைய தாகும் விருப்பம் மிகுதியாக எழ அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய அழகிய வெற்றிக் கழல் களைப் பூண்ட திருவடிகளைப் பணியும் பொருட்டு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த விருப்பம் வாய்ப்பாக அமைய.' பாடல் வருமாறு:

'' ஆழிவிடம் உண்டவரை அம்மை திருப்
பாலமுதம் உண்ட போதே
ஏழிசைவண் தமிழ்மாலை, 'இவன் எம்மான்'
எனக்காட்டி இயம்ப வல்ல
காழிவரும் பெருந்தகை சீர் கேட்டலுமே
அதிசயமாம் காதல் கூர
வாழியவர் மணிக்கழல்கள் வணங்கு தற்கு
மனத்தெழுந்த விருப்பு வாயப்ப. ''

இந்தப் பாடல் குளகம். ஆழி-திருமால் பள்ளிகொண் டருளிய பாற்கடலில் எழுந்த.விடம்-ஆலகால நஞ்சை.உண்ட வரை-விழுங்கியவராகிய பிரமபுரீசரை. அம்மை-தாயைப் போன்றவளாகிய திருநிலை நாயகி. திரு-அழகிய. ப்:சந்தி. பாலமுதம்-தன்னுடைய கொங்கைகளிலிருந்து கறந்த அமு

தத்தைப் போன்ற பாலை. உண்டபோதே-குடித்த சமயத்தி லேயே. ஏழிசை- ச, ரி, க, ம, ப, த, நிச என்னும் ஏழு சுவரங்களைக் கொண்ட இசைப் பாடல்களாகிய. வண்- சொற்சுவை பொருட்சுவை ஆகிய வளப்பத்தைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை-மாலை யாகிய ஒரு திருப்பதிகத்தை. இவன் எம்மான்-இந்தப் பிரம புரீசன் அடியேங்களுடைய தலைவன். என-என்று. க்:சந்தி. காட்டி - சுட்டிக் காட்டி. இயம்ப-பாடியருள. வல்ல- வல்லமையைப் பெற்ற. காழி-சீகாழியில். வரும்-திருவவதாரம் செய்தருளும். பெரும்-பெருமையையும். தகை- தகையையும் பெற்ற திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய. சீர்- சீர்த்தியை. கேட்டலும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டவுடன். ஏ:அசை நிலை. அதிசயமாம்-வியப்பாக இருக் கும். காதல்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரைத் தரிசிக்கும் விருப்பம். கூர-தம்முடைய திருவுள்ளத்தில் மிகுதி யாக எழ. வாழி: அசைநிலை. அவர்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. மணி-மணிகளை அடக் கிய. க்:சந்தி. கழல்கள்-வெற்றிக் கழலைப் பூண்ட திருவடி களை; ஆகுபெயர். வணங்குதற்கு-பணியும் பொருட்டு. மனத்து-தம்முடைய திருவுள்ளத்தில். எழுந்த-பொங்கி எழுந்த. விருப்பு-விருப்பம். வாய்ப்ப-வாய்ப்பாக அமைய.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட பாசுரம் வருமாறு:

"தோடுடைய செவியன்விடை ஏறிஓர்
தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசிஎன்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள்
பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரம்மேவிய
பெம்மான் இவன்அன்றே."

பிறகு வரும் 179-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரை வணங்க வேண்டுமென்ற விருப்பம் உண்டான அந்தச் சமயத்திலேயே சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளுகின்ற நடராஜப் பெருமானாருடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளைப் பணிந்து அவருடைய சந்நிதியில் அந்தப் பெருமானாருடைய திருவருளைப் பெற்றுக் கொண்டு பொய்யாகிய இந்த மானிடப் பிறவியாகிய நோயைப் போக்கும் அழகிய ஒரு திருவீதியில் அந்த நாயனார் புரண்டு, வலமாக வந்து சென்று எல்லா உலகங்களிலும் வாழ்பவர்கள் நிறைந்து கூடியுள்ள அந்த அழகிய சிவத்தலத்தினுடைய எல்லையில் இருந்தபடியே நடராஜப் பெருமானாரைப் பணிந்துவிட்டு நடராஜப் பெருமானாரைத் துதித்துப் பிறகு சொல்லுவதற்கு அரியதாக உள்ள பெருமையைப் பெற்றவராகிய அந்த நாயனார் திருநாரையூருக்கு எழுந்தருளிச் சௌந்தரேசரை வணங்கிவிட்டு ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி அப்பால் எழுந்தருளுபவரானார்.' பாடல் வருமாறு:

"அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற
கழல்வணங்கி அருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணியோட்டும் திருவீதி
புரண்டுவலம் கொண்டு போந்தே
எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின்
எல்லையினை இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திருநாரை
யூர்பணிந்து பாடிச் செல்வார்."

அப்பொழுதே-திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரை வணங்க வேண்டுமென்ற விருப்பம் உண்டான அந்தச் சமயத்திலேயே. அம்பலத்துள்-

சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம் பலத்தில். ஆடுகின்ற-திருநடனம் புரிந்தருளுகின்ற. கழல்-வெற்றிக் கழலைப் பூண்ட நடராஜப் பெருமானாருடைய திருவடிகளை; ஆகுபெயர். வணங்கி-அந்த நாயனார் பணிந்துவிட்டு. அருள்-அந்த நடராஜப் பெருமானார் வழங் கிய திருவருளை. முன்-அவருடைய சந்நிதியில். பெற்று-பெற்றுக்கொண்டு. ப்:சந்தி. பொய்-நிலையாமையாகிய பொய்த்தன்மையைப் பெற்ற. ப்:சந்தி. பிறவி-இந்த மானிடப்பிறவியாகிய. ப்:சந்தி.பிணி-நோயை.ஒட்டும்-போக் கும். திருவீதி-சிதம்பரத்தில்உள்ள ஒரு வீதியில். திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். புரண்டு-அங்கப்பிரதட்சிணம் புரிந்தருளி. வலம்கொண்டு-பிறகு எழுந்திருந்து நடராஜப் பெருமானாருடைய ஆல யத்தை வலமாக வந்து. போந்து-அங்கிருந்து எழுந்தருளி. ஏ:அசை நிலை. எப்புவனங்களும்-எல்லா உலகங்களிலும் வாழ்பவர்கள்; இட ஆகுபெயர். நிறைந்த-நிறைந்து கூடி யுள்ள. திருப்பதியின்-அந்த அழகிய சிவத்தலமாகிய சிதம் பரத்தினுடைய. எல்லையினை-எல்லையில் இருந்தபடியே; உருபுமயக்கம். இறைஞ்சி-நடராஜப் பெருமானாரை அந்த நாயனார் வணங்கி. ஏத்தி-துதித்து. ச்:சந்தி. செப்பரிய-எடுத்துக் கூறுவதற்கு அரியதாக உள்ள. பெருமையினார்-பெருமையைப் பெற்றவராகிய அந்த நாயனார். திருநாரை யூர்-திருநாரையூருக்கு எழுந்தருளி. பணிந்து-சௌந்த ரேசரை வணங்கிவிட்டு. பாடி-ஒரு திருப்பதிகத்தைப் பாடி யருளி. ச்:சந்தி. செல்வார்-அந்தத் திருநாரையூரை விட்டு மேலே எழுந்தருள்பவரானார்.

திருநாரையூர்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சௌந்தரேசுவரர். அம் பிகை திரிபுரசுந்தரி யம்மை. சிதம்பரத்திலிருந்து தென் மேற்குத் திசையில் 8 மைல் தூரம் சென்று குமராட்சி என்னும் ஊரை அடைந்து அங்கிருந்து காட்டுமன்னார்குடிக்குச்

செல்லும் வழியில் ஒன்றரை மைல் சென்று, அந்த வழியை விட்டுத் தென்திசையில் திரும்பி முக்கால் மைல் சென்றால் இந்தத் தலத்தை அடையலாம். இது நாரை பூசித்த தலம். சிதம்பரத்தில் சேமித்து வைத்திருந்த தேவாரத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி மூலமாக வெளிப்படுத்திய பொல்லாப்பிள்ளையார் என்னும் விநாயகப் பெருமானார் எழுந்தருளியுள்ள தலம் இது. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" செம்பொன்னை நன்பவளம் திகழும் முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தம் சித்தத் தானை
வம்பவிழும் மலர்க்கணைவேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனைஎம் கயிலாய மலையான் தன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி ஏத்தும்
நம்பனைஎம் பெருமானை நாதன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. "

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய திருக்குறுந் தொகை ஒன்று வருமாறு:

" வீறு தானுடை வெற்பன் மடந்தைஓர்
கூற னாகிலும் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழில் நாரையூர் நம்பனுக்
காறு சூடலும் அம்ம அழகிதே. "

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு:

" சொல்லானைப் பொருளானைச் சுருதியானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய்தானை
அல்லானைப் பகலானை அரியான் தன்னை
அடியார்கட் கெளியானை அரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பிஏத்தும்

நல்லானைத் தீயாடும் நம்பன் தன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேன்நானே.''

பிறகு வரும் 180-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'திருத்தொண்டர்களினுடைய கூட்டம் தம்முடைய பக்கத்தைச் சுற்றி வர நடராஜப் பெருமானாரைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்ட திருக்கைகளோடு விபூதியைத் தம்முடைய திருமேனி முழுவதும் பூசிக்கொண்ட திருக்கோலம் தம்மைப் பார்த்தவர்களுடைய உள்ளங்கள் கசிவை அடைந்து கரைந்து உருக்கத்தை அடையும் கருணையினால் தம்முடைய கண்களிலிருந்து வழியும் நீர் திருமேனியினுடைய இடங்கள் எல்லாம் சொரிந்து காண்பிக்கத் தெளிவான அலைகள் வீசும் சமுத்திரத்தில் தம்மைக் கட்டிச் சமணர்கள் விட்ட கருங்கல் ஆழாமல் அந்தக் கருங்கல்லே தெப்பமாக மாற அதைச் செலுத்திக் கரையில் ஏறியருளும் திருநாவுக்கரசு நாயனாரும் சொற்சுவை பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ் மொழியினால் எழுதும் வேதமாகிய தேவாரத் திருப்பதிகங்களைத் திருவாய் மலர்ந்தருளிய தலைவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவவதாரம் செய்தருளிய திருப்புகலியாகிய சீகாழியின் பக்கத்தை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு :

'' தொண்டர்குழாம் புடைசூழத் தொழுகரத்
தொடுநீறு துதைந்த கோலம்
கண்டவர்தம் மனம்கசிந்து கரைந்துருகும்
கருணைபுறம் பொழிந்து காட்டத்
தெண்டிரைவாய்க் கல்மிதப்பில் உகைத்தேறும்
திருநாவுக் கரசர் தாமும்
வண்டமிழால் எழுதுமறை மொழிந்தபிரான்
திருப்புகலி மருங்கு சார்ந்தார்.''

தொண்டர்- திருத்தொண்டர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குழாம்- கூட்டம். புடை-தம்முடைய

பக்கத்தை.சூழ-சுற்றிவர. தொழுகரத்தொடு-நடராஜப்பெருமானாரைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கூப்பிக் கும்பிட்ட திருக்கைகளோடு. கரம்:ஒருமை பன்மை மயக்கம். நீறு-விபூதியை. துதைந்த-தம்முடைய திருமேனி முழுவதும் பூசிக் கொண்ட. கோலம்-அழகிய திருக்கோலம். கண்டவர் தம்- தம்மைப் பார்த்தவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசைநிலை. மனம்-உள்ளங்கள்; ஒருமை பன்மைமயக்கம். கசிந்து-கசிவை அடைந்து, கரைந்து உருகும்-உருக்கத்தை அடையும். கருணை - கருணையினால். புறம்-தம்முடைய கண்களிலிருந்து வழியும் நீர் தம்முடைய திருமேனியில் உள்ள இடங்கள் எல்லாவற்றிலும். பொழிந்து - சொரிந்து. காட்ட-தம்முடைய பக்தியைக் காண்பிக்க. த்:சந்தி. தெண்-தெளிவைப் பெற்ற. திரை வாய்- அலைகள் வீசும் சமுத்திரத்தில்; ஆகுபெயர். திரை: ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கல்-கருங்கல்லாகிய மிதப்பில்-தெப்பத்தில் சமணர்கள் திருநாவுக்கரசு நாயனாரை ஒரு கருங்கல்லில் கட்டிச் சமுத்திரத்தில் தள்ளிவிட அந்தக் கருங்கல்லே தெப்பமாக மாற அதன்மேல் ஏறி அந்த நாயனார் கரையை அடைந்தார். உகைத்து-அந்தத் தெப்பத்தைச் செலுத்தி. ஏறும்-கரையில் ஏறும். திருநாவுக்கரசர் தாமும்-திருநாவுக்கரசு நாயனாரும்; தாம், அசைநிலை. வண் - சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற. தமிழால்-செந்தமிழ் மொழியினால். எழுதுமறை-ஏடுகளில் வரையும் வேதமாகிய தேவாரத் திருப்பதிகங்களை. வடமொழியில் உள்ள வேதத்தை எழுதாக் கிளவி என்பர். இந்தத் தேவாரத் திருப்பதிகங்கள் எழுதும் மறை ஆயின. மொழிந்த-திருவாய் மொழிந்தருளிய. பிரான்-தலைவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். திருப்புகலி-திருவவதாரம் செய்தருளிய திருப்புகலியாகிய சீகாழியினுடைய. மருங்கு-பக்கத்தை. சார்ந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

எழுதுமறை: ''பழுதிலிறை எழுது மொழி தமிழ்விரசன் வழி மொழிகள்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''எல்லையிலா மறை முதல் மெய்யுடன் எடுத்த எழுது மறை.'', ''எழுதும் மாமறையாம் பதிகத்திசை முழுதும் பாடி.'', ''எழுது மாமறையாம் பதிகத்திசை போற்றி.'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 181-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'உயரமாக உள்ள மேருமலையாகிய வில்லை ஏந்திய வீரட்டானேசுவரர் கொடுமையாக இருக்கும் சூலை நோயை வழங்கியருளி தமக்கு நேரில் முன் காலத்தில் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் சீகாழிக்கு எழுந்தருள அதைக் கேட்டருளி ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்க்கத் தக்கதாகிய பெரிய விருப்பம் மிகுதியாக எழுந்த தம்முடைய திருவுள்ளத்தில் உண்டாகிய எண்ணத்தோடு மூண்டெழுந்த பிரமபுரீசருடைய திருவருளைப் பெற்று மகிழ்ந்த உள்ளங்களைப் பெற்ற பக்தர்கள் தம் பக்கத்தைச் சுற்றி வர எழுந்தருளி முன்னால் அந்தச் சீகாழிக்கு எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

''நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை
மடுத்தருளி நேரே முன்னாள்
ஆண்டஅர செழுந்தருளக் கேட்டருளி
ஆளுடைய பிள்ளை யாரும்
காண்டகைய பெருவிருப்புக் கைம்மிக்க
திருவுள்ளக் கருத்தி னோடு
மூண்டஅருள் மனத்தன்பர் புடைசூழ
எழுந்தருளி முன்னே வந்தார்.''

நீண்ட-உயரமாக உள்ள. வரை-மேருமலையாகிய. வில்லியார்-வில்லை ஏந்தியவராகிய வீரட்டானேசுவரர். வெம்-

கொடுமையாகத் தம்முடைய வயிற்றைப் பற்றிக் கொண்டிருந்த. சூலை-சூலை நோயை. மடுத்தருளி-வழங்கியருளி. நேர்-நேரில். ஏ: அசைநிலை. முன் நாள்-முன் ஒருகாலத்தில். ஆண்ட-அந்தச் சூலை நோயைப் போக்கியருளி ஆட்கொண்ட. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். எழுந்தருள-சீகாழிக்கு எழுந்தருள. க்:சந்தி. கேட்டருளி-அதைக் கேட்டருளி. ஆளுடைய பிள்ளையாரும்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். காண்தகைய - பார்க்கத்தக்க பான்மையை உடைய. பெரு-பெருகிய. விருப்பு-விருப்பம். க்:சந்தி. கைம்மிக்க-மிகுதியாக எழுந்த. திருவுள்ள-தம்முடைய திருவுள்ளத்தில் உண்டாகிய. க்:சந்தி. கருத்தினோடு-எண்ணத்தோடு. மூண்ட-மூண்டெழுந்த. அருள்-பிரமபுரீசருடைய திருவருளை. மனத்து-பெற்று மகிழ்ந்த உள்ளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். அன்பர்-பக்தர்கள்; ஒருமை பன்மை மயக்கம். புடை-தம்முடைய பக்கத்தை. சூழ-சுற்றி வர. எழுந்தருளி-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்தருளி. முன்-முன்வால். ஏ: அசைநிலை. வந்தார்-அந்தச் சீகாழிக்கு எழுந்தருளினார்.

பிறகு வரும் 182-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"அவ்வாறு சீகாழிக்கு எழுந்தருளித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வணங்கி அடைந்து வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் பக்தியினால் தம்முடைய திருவுள்ளத்தில் உருக்கத்தை அடையத் திருத்தொண்டர்கள் கூடியிருந்த கூட்டத்துக்கு நடுவில் எழுந்தருளி குற்றம் இல்லாத பெருகி எழும் விருப்பத்தோடு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளில் விழுந்து வணங்க அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை வணங்கி விட்டு அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு எழுதுவதற்கு அரியவையாக உள்ள செந்தாமரை மலர்களைப்

போன்ற தம்முடைய திருக்கரங்களால் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை எடுத்து விட்டு அவரை வணங்கி இடப வாகனத்தின்மேல் எழுந்தருள்பவராகிய பிரமபுரீசரை அழுது அழைத்துக் கொண்டவராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், "அப்பரே" என்று திருநாவுக்கரசு நாயனாரை அழைக்க அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும், "அடியேன்" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

" தொழுதணைவுற் றாண்ட அரசன் புருகத்
தொண்டர் குழாத் திடையே சென்று
பழுதில் பெரும் காதலுடன் அடிபணியப்
பணிந்த வர்தம் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத் திறைஞ்சி
விடையின் மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண் டவர் தாம்
' அப்பரே ' எனஅவரும், ' அடியேன் '
என்றார். "

தொழுது-அவ்வாறு சீகாழிக்கு எழுந்தருளித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வணங்கி. அணைவுற்று-அடைந்து. ஆண்ட-வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். அன்பு-பக்தியினால். உருக-தம்முடைய திருவுள்ளத்தில் உருக்கத்தை அடைய. த்:சந்தி. தொண்டர்-திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். குழாத்திடை-கூடியிருந்த கூட்டத்துக்கு நடுவில். ஏ: அசைநிலை. சென்று-எழுந்தருளி. பழுது -ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. பெரும்-பெருகி எழும். காதலுடன்-விருப்பத்தோடு. அடி-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். பணிய-விழுந்து வணங்க. ப்:சந்தி. பணிந்து -அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளில் . விழுந்து

வணங்கி விட்டு. அவர் தம்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. தம்: அசைநிலை. கரங்கள்-கைகளை. பற்றி- தம்முடைய கைகளால் பிடித்துக் கொண்டு. எழுதரிய-ஓவியத்தில் எழுதுவதற்கு அரியவையாக உள்ள. மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கையால்-தம்முடைய திருக்கரங்களால்; ஒருமை பன்மை மயக்கம். எடுத்து-தம்மை வணங்கிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் தம்முடைய திருக்கரங்களால் தரையிலிருந்து எடுத்து விட்டு. இறைஞ்சி-அவரை வணங்கி. விடையின் மேல்-இடபவாகனத்தின்மீது. வருவார் தம்மை-எழுந்தருள்பவராகிய பிரமபுரீசரை. தம்:அசைநிலை. அழுது அழைத்துக் கொண்டவர் தாம்-அழுதருளி அழைத்துக் கொண்டவராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். தாம்: அசை நிலை. அப்பரே என- 'அப்பரே' என்று திருநாவுக்கரசு நாயனாரை அழைக்க; இடைக்குறை. அது முதல் திருநாவுக்கரசு நாயனாருக்கு அப்பர் சுவாமிகள் என்னும் திருநாமமும் அமைந்தது. அவரும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும். அடியேன் என்றார்-அடியேன் என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

அடுத்து வரும் 183-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பெரிய நாயகி சிவப்பாக இருக்கும் ஒரு தங்கக் கிண்ணத்தில் வைத்து அமுதத்தைப் போன்ற சிவஞானத்தைக் குழைத்து வழங்கியருள அதைக் குடித்தருளித் தாம் அழுத அழுகையைப் போக்கியருளிய சிவப்பாக இருக்கும் பவளத்தைப் போன்ற அதரங்களைக் கொண்ட திருவாயைப் பெற்ற மூன்று ஆண்டு நிரம்பிய குழந்தையாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனார் என்று கூறுமாறு சீர்த்தியைப் பெற்ற அடியேங்களுடைய பெருமையைப் பெற்ற நாயன்மார்களும் சேர்ந்திருந்த கூட்டத்தில் அர

னாகிய வீரட்டானேசுவரனுடைய அடியவராகிய திருநாவுக்கரசு நாயனார் ஆனந்தத்தை அடைந்து தேவர்களும் வாழ்த்துக்களைக் கூறிப் பாராட்டுக்களை இயம்ப சிவபெருமானுடைய திருநாமங்களைப் பெருகக் கூறும் இனிய சத்தத்தை உலகம் முழுவதும் பரவுமாறு நிரம்பியிருக்கும் வண்ணம் புரிந்தருளினார்.' பாடல் வருமாறு:

"அம்பிகை செம் பொற்கிண்ணத் தமுதஞா
னம்கொடுப்ப அழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப் பிள்ளை திருநாவுக்
கரசரெனச் சிறந்த சீர்த்தி
எம்பெரு மக்களும் இயைந்த கூட்டத்தில்
அரனடியார் இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றி சைப்பச் சிவம்பெருகும்
ஒலி நிறைத்தார் உலகம்எல்லாம்."

அம்பிகை-சீகாழியில் பிரமபுரீசருடைய ஆலயத்தில் ஒரு கட்டு மலையில் உள்ள தோணியில் தோணியப்பரோடு வீற்றிருக்கும் அம்பிகையாகிய பெரிய நாயகி. செம்-சிவப்பாக இருக்கும். பொற்கிண்ணத்து-ஒரு தங்கக் கிண்ணத்தில். அமுத-வைத்து அமுதத்தைப் போன்ற. ஞானம்-சிவஞானத்தைக் குழைத்து. கொடுப்ப-வழங்கியருள. அழுகை-அதைக் குடித்தருளி தாம் அழுத அழுகையை. தீர்ந்த-போக்கியருளிய. செம்-சிவப்பாக இருக்கும். பவள-பவளங்களைப் போன்ற அதரங்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். வாய்-திருவாயைப் பெற்ற. ப: சந்தி. பிள்ளை-மூன்று ஆண்டு நிரம்பிய ஆண் குழந்தையாகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும். திருநாவுக்கரசர் என-திருநாவுக்கரசு நாயனார் என்று கூறுமாறு. என:இடைக்குறை. ச்:சந்தி. சீர்த்தி-சீர்த்தியைப் பெற்ற. எம்-அடியேங்களுடைய. இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துச் சொன்னது. பெரு-பெருமையைப் பெற்ற. மக்களும்-அந்த இரண்டு நாயன்மார்களும். இயைந்த-சேர்ந்திருந்த. கூட்டத்தில்—

குழுவில். அரன் அடியார்-அரனாகிய வீரட்டானேசுவரனுடைய அடியவராகிய திருநாவுக்கரசு நாயனார். இன்பம்-ஆனந்தத்தை. எய்தி-அடைந்து. உம்பர்களும்-தேவர்களும். போற்று-வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம்; முதனிலைத் தொழிற் பெயர். இசைப்ப-கூறிப் பாராட்ட.ச்: சந்தி. சிவம்-சிவபெருமானுடைய திருநாமங்களை; ஆகு பெயர். பெருகும்-பெருகக் கூறும். ஒலி-இனிய சத்தத்தை. உலகம் எல்லாம்-இந்தப் பூமண்டலம் முழுவதும். நிறைத்தார்-நிரம்பியிருக்கும் வண்ணம் புரிந்தருளினார்.

பவள வாய்ப் பிள்ளை: "மதுர மொழிப் பவள வாயார்.", "உய்யும் நெறிகாட்டும் பவள வாயர்." என்று சேக்கிழார் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 184-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளைப் பணியும் பாக்கியத்தை அடியேன் அடைந்தேன்" என்று எண்ணித் திருநாவுக்கரசு நாயனார் ஆனந்தத்தை அடைய பெருகிய சிவஞான வள்ளலாராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாரைப் பணியும் பாக்கியத்தை அடைந்ததற்குத் தம்முடைய திருவுள்ளத்தில் ஆனந்தம் பொங்கி எழ அந்த இரண்டு நாயன்மார்களும் தங்களுடைய திருவுள்ளங்களில் நிறைந்திருந்த விருப்பத்தோடு ஒரு நாயனார் மற்றொரு நாயனாரோடு கூடிய உண்மையுடனும் ஊழிக்காலத்தின் இறுதியில் கடலின் வெள்ளமாகிய நீரில் மிதந்த தோணிபுரமாகிய சீகாழியில் உள்ள ஆலயத்தில் ஒரு கட்டு மலையின் மேல்இருந்த அழகிய தோணியில் வீற்றிருந்தவராகிய தோணியப்பருடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளைப் பணியும் விருப்பத்தை அந்த நாயனார் மிகுதியாகப் பெற்றிருந்தார்." பாடல் வருமாறு:

"'பிள்ளை யார்கழல் வணங்கப் பெற்றேன்' என்
றரசுவப்பப் பெருகு ஞான
வள்ளலார் வாகீசர்தமை வணங்கப் பெற்றதற்கு
மகிழ்ச்சி பொங்க
உள்ளம் நிறை காதலினால் ஒருவரொரு
வரிற்கலந்த உண்மை யோடும்
வெள்ளநீர்த் திருத் தோணி வீற்றிருந்தார்
கழல்வணங்கும் விருப்பின் மிக்கார்."

பிள்ளையார்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகுபெயர். வணங்க-பணிய. ப்:சந்தி. பெற்றேன்-பாக்கியத்தை அடியேன் அடைந்தேன். என்று-என எண்ணி. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். உவப்ப-ஆனந்தத்தை அடைய. ப்:சந்தி. பெருகு-பெருகிய. ஞான வள்ளலார்-சிவஞான வள்ளலாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். வாகீசர் தமை-வாகீச ராகிய திருநாவுக்கரசு நாயனாரை. தம்: அசைநிலை. வணங்க-பணியும் பாக்கியத்தை: ப்:சந்தி. பெற்றதற்கு-தாம் அடைந்ததற்கு. மகிழ்ச்சி-ஆனந்தம். பொங்க-தம் முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழ. உள்ளம்-அந்த இரண்டு நாயன்மார்களும் தங்களுடைய திருவுள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நிறை-நிறைந்திருந்த. காதலி னால்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். ஒருவர்-ஒரு நாய னார். ஒருவரின்-மற்றொரு நாயனாரோடு; உருபு மயக்கம். கலந்த-கூடியிருந்த. உண்மையோடும் - உண்மையுடனும். வெள்ள-ஊழிக் காலத்தின் இறுதியில் கடலின் வெள்ளமாகிய. நீர்-நீரில் மிதந்த. த்:சந்தி. திரு-அழகிய. த்:சந்தி. தோணி-தோணி புரமாகிய சீகாழியில் உள்ள ஆலயத்தில் ஒருகட்டு மலையின் மேல் இருந்த தோணியில். வீற்றிருந்தார்-பெரிய நாயகியாரோடு அமர்ந்திருந்தவராகிய தோணியப்பருடைய கழல்-வெற்றிச் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகுபெயர்.

வணங்கும்-பணியும். விருப்பின்-விருப்பத்தை; உருபுமயக்கம். மிக்கார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் மிகுதியாகப் பெற்றிருந்தார்.

பிறகு உள்ள 185-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பிரமபுரீசர் வழங்கிய திருவருள் பெருகி எழும் ஒப்பற்ற சமுத்திரமும், இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் எல்லாருக்கும் அன்பு செறிந்திருக்கும் சமுத்திரமும் ஆகும் என்று கூறுமாறும், ஓங்கி வளர்ந்திருக்கும் அர்த்தத்தைப் பெற்ற சைவ சமயமாகிய முதன்மையைப் பெற்ற சைவ சமயவழி பெற்றிருக்கும் புண்ணியமாகிய இரண்டு கண்கள் என்றுகூறுமாறும், இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் இருட்டைப் போன்ற கரிய நிறத்தைக் கொண்டதும், திருமால் பள்ளிகொண்டருளிய பாற்கடலில் எழுந்ததுமாகிய ஆலகாலவிடத்தை விழுங்கியவராகிய பிரமபுரீசர் வழங்கிய திருவருளும், இந்தப் பூமண்டலத்தில் வாழும் உயிர்கள் எல்லாவற்றையும் ஈன்றெடுத்தவளாகிய பெரிய நாயகி வழங்கியதிருவருளும் என்று கூறுமாறும், இரண்டு நாயன்மார்களும் சேர்ந்துகொண்டு அறிவில் தெளிவைப் பெற்றவரும், அறுபத்து நான்கு கலைகளில் வல்ல அறிவைப் பெற்றவரும், கன்றுக்குட்டியைப் போன்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் எழுந்தருளி சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவரும் மகாதேவரும் ஆகிய பிரமபுரீசர் எழுந்தருளி யிருக்கும் ஆலயத்தை அந்த இரண்டு நாயன்மார்களும் அடைந்தார்கள்.' பாடல் வருமாறு:

"அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம் உய்ய

இருட்கடுவுண் டவர்அருளும் உலகம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவும் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும் அரசும் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சார்ந்தார் அன்றே.''

அருள்-பிரமபுரீசர் வழங்கிய திருவருள். பெருகு-பெருகி எழும். தனி-ஒப்பற்ற. க்:சந்தி. கடலும்-சமுத்திரமும். உலகுக்கு எல்லாம்-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் எல்லாருக்கும்; இட ஆகுபெயர். அன்பு செறி-அன்பு செறிந்திருக்கும். கடலும் - சமுத்திரமும். ஆம் - ஆகும். எனவும்- என்று கூறுமாறும்; இடைக்குறை. ஓங்கும்-ஓங்கி வளர்ந்திருக்கும். பொருள்-நல்ல அர்த்தத்தைப் பெற்ற. சமய-சைவ சமய. முதற்சைவ-முதன்மையான சைவ சமய. நெறி-வழி. தான்: அசை நிலை. பெற்ற-பெற்றிருக்கும். புண்ணிய - புண்ணியமாகிய. கண் இரண்டு-இரண்டு கண்கள்; ஒருமை பன்மை மயக்கம். எனவும்-என்று கூறுமாறும்; இடைக்குறை. புவனம்-இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம்- இருள்-இருட்டைப் போலக் கரிய நிறத்தைக் கொண்ட. கரிய நிறம் என்றாலும் இங்கே நீல நிறத்தைக் கொள்ள வேண்டும். கருமையையும் நீலநிறம் என்பது ஒரு மரபு; ''நீல நிறக் காக்கை'' என வருதல் காண்க. கடு-திருமால் பள்ளி கொண்டிருக்கும் பாற் கடலில் எழுந்த ஆலகால விடத்தை. உண்டவர்-விழுங்கியவராகிய பிரமபுரீசர். அருளும்-வழங்கிய திருவருளும். உலகம்எல்லாம்-இந்தப் பூ மண்டலத்தில் வாழும்உயிர்கள் எல்லாவற்றையும்; இட ஆகு பெயர். ஈன்றாள்தன்-பெற்றெடுத்தவளாகிய பெரிய நாயகி. தன்:அசை நிலை. திருவருளும்-வழங்கிய திருவருளும். எனவும்-என்று கூறுமாறும்; இடைக்குறை. கூடி- இரண்டு நாயன்மார்களும் சேர்ந்து கொண்டு. த்:சந்தி. தெருள்-அறிவில் தெளிவைப் பெற்றவரும்; திணை மயக்கம். கலை-அறுபத்து நான்கு கலைகளில் வல்ல; ஒருமை பன்மை

மயக்கம். ஞான-அறிவைப் பெற்றவரும்; திணை மயக்கம். க்:சந்தி. கன்றும்-கன்றுக் குட்டியைப் போன்றவரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும்; உவம ஆகு பெயர். அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். சென்று-எழுந்தருளி. செம்-சிவப்பாக இருக்கும். சடை-சடா பாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்ற. வானவர்-மகாதேவராகிய பிரமபுரீசர். கோயில்-எழுந்தருளியிருக்கும் ஆலயத்தை. சார்ந்தார்-அந்த இரண்டு நாயன்மார்களும் அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். அன்று, ஏ: ஈற்றசை நிலைகள்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்குக் கன்றுக் குட்டி உவமை: ''புண்ணியக் கன்றனையவர்தாம் பொருமி அழுதருளினார்.'', ''தெய்வ ஞானக் கன்றினை.'', ''மழ விடை இளங்கன்றொன்று வந்து.'' என்று சேக்கிழார் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 186-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பண்ணைப் போல ரீங்காரம் செய்யும் வண்டுகள் முரலும் மலர்கள் மலர்ந்திருக்கும் பல வகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில் சுற்றியிருக்கும் சீகாழியில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பரமேசுவரராகிய பிரமபுரீசருடைய ஆலயத்திற்கு முன்னால் உயரமாக நிற்கும் அழகிய கோபுர வாசலில் இருந்தபடியே பிரமபுரீசுவரரை வணங்கி விட்டு ஆலயத்துக்குள் நுழைந்து ஆகாயம் தாழுமாறு உயரமாக விளங்கும் பெரிய விமானத்தை வலமாக வந்து தரையில் விழுந்து அந்தப் பிரமபுரீசரை வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்த சமயத்தில் உண்மையாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளும் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், "அப்பரே, தங்களுடைய தலைவராகிய வீரட்டானேசுவரரைத் தேவரீர் பாடியருள்வீராக" என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தரு

ரிச் செய்ய தம்முடைய கண்களிலிருந்து வழியும் நீர் மழையைப் போலச் சொரிய திருநாவுக்கரசு நாயனாரும் உண்மையாகிய அறுபத்து நான்கு கலைகளைக் கற்கும் சொற்கள் சொரியத் தம்முடைய திருவுள்ளத்தில் கசிவை அடைந்து பாடியருள.' பாடல் வருமாறு:

"பண்பயில்வண் டறைசோலை சூழும் காழிப்
பரமர்திருக் கோபுரத்தைப் பணிந்துள் புக்கு
விண்பணிய ஓங்குபெரு விமானந் தன்னை
வலங்கொண்டு தொழுதுவிழுந் தெழுந்த எல்லைச்
சண்பைவரு பிள்ளையார், 'அப்பர் உங்கள்
தம்பிரா னாரைநீர் பாடீர்., என்னக்
கண்பயிலும் புனல்பொழிய அரசும் வாய்மைக்
கலைபயிலும் மொழிபொழியக் கசிந்து பாடி."

பண்-பண்ணினைப் போல. பயில்-ரீங்காரம் செய்யும். வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். அறை-முரலும். சோலை-மலர்கள் மலர்ந்திருக்கும் பல வகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில். சூழும்-சுற்றியிருக்கும். காழி-சீகாழியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; ஆகு பெயர். பரமர்-பரமேசுவரராகிய பிரமபுரீசருடைய ஆலயத்திற்கு முன்னால் உயரமாக நிற்கும். திரு-அழகிய. க்:சந்தி. கோபுரத்தை-கோபுர வாசலில் இருந்த படியே; உருபு மயக்கம். ப்:சந்தி. பணிந்து-பிரமபுரீசரைத் திருநாவுக்கரசுநாயனார் வணங்கி விட்டு. உள்-அந்த ஆலயத்துக்கு உள்ளே. புக்கு-நுழைந்து. விண்-ஆகாயம். பணிய-தாழுமாறு. ஓங்கு-உயரமாக விளங்கும். பெரு-பெரிய. விமானம் தன்னை-விமானத்தை. தன்:அசைநிலை. வலம் கொண்டு-வலமாக வந்து. தொழுதுவிழுந்து- தரையில் விழுந்து அந்தப் பிரமபுரீசரை வணங்கி விட்டு. எழுந்த-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்த. எல்லை-சமயத்தில். ச்:சந்தி. சண்பை- சண்பையாகிய சீகாழியில். வரு- திருவவதாரம் செய்தருளும். பிள்ளையார்-ஆளுடைய பிள்ளையார்

ராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். அப்பர்-அப்பர் சுவாமிகளே; விளி. உங்கள்-தங்களுடைய. தம்பிரானாரை-தலைவராகிய வீரட்டானேசுவரரை. நீர்-தேவரீர். பாடீர்-பாடியருள்வீராக. என்ன-என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. க்:சந்தி. கண்-தம்முடைய கண்களி லிருந்து; ஒருமை பன்மை மயக்கம். பயிலும்-வழியும். புனல்-நீர். பொழிய-மழையைப் போலச் சொரிய. அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணைமயக்கம். வாய்மை-உண்மையாகிய. க்:சந்தி.கலை-அறுபத்து நான்குகலைகளை; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. பயிலும்-கற்கும். மொழி-சொற்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொழிய-மழையைப் போலச் சொரிய. க்:சந்தி. கசிந்து-கசிவை அடைந்து. பாடி-ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி. இந்தப் பாடல் குளகம்.

திருவதிகை வீரட்டானத்தைப்பற்றிக் காந்தார பஞ்சமப் பண்ணில் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" முளைக்கதிர் இளம்பிறை மூழ்க வெள்ளநீர்
வளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மழுக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடும் கெடில வாணர். "

அந்த நாயனார் பாடியருளிய கொப்புளித்த திருநேரிசை ஒன்று வருமாறு:

" இரும்புகொப் புளித்த யானை
ஈருரி போர்த்த ஈசன்
கரும்புகொப் புளித்த இன்சொற்
காரிகை பாக மாகச்
சுரும்புகொப் புளித்த கங்கைத்
துவலைநீர் சடையில் ஏற்ற

அரும்புகொப் புளித்த சென்னி
அதிகைவீ ரட்ட னாரே. "

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

" பாடினார் மறைகள் நான்கும்;
பாயிருள் புகுந்தென் உள்ளம்
கூடினார் கூட வால
வாயிலார் நல்ல கொன்றை
ஆடினார் கடல் மேவிச்
சூழ்சுடர் சுடலை வெண்ணீ
றாடினார் ஆடல் மேவி
அதிகைவீ ரட்ட னாரே. "

அந்த நாயனார் சீகாழியைப் பற்றித் திருவிருத்தம், திருக்குறுந்தொகை என்பவை அடங்கிய திருப்பதிகங்களைப் பாடி யருளியுள்ளார். அவற்றில் ஒரு திருவிருத்தம் வருமாறு:

" நிலையும் பெருமையும் நிதியும்
சால அழகு டைத்தாய்
அலையும் பெருவெள்ளத் தன்று
மிதந்தஇத் தோணி புரம்
சிலையில் திரிபுரம் மூன்றெறித்
தார்தம் கழும லவர்
அவரும் கழலடி நாள்தொறும்
நந்தமை ஆள்வ னவே. "

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக் குறுந்தொகை வருமாறு:

" ஒன்று தானறி யாருல கத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடும் குறிப்பது வாகுமே. "

அடுத்து வரும் 187-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பெரியநாயகியோடு சீகாழியில் உள்ள பிரமபுரீசருடைய ஆலயத்தில் ஒரு கட்டுமலையில் உள்ள தோணியின் மேல் விரும்பி அமர்ந்திருந்தருளும் தம்முடைய தலைவனாகிய தோணியப்பனுடைய சந்நிதியில் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நின்றுகொண்டு, பக்தியைப் பெற்ற செந்தமிழ் மொழியில் அமைந்த மாலையாகிய ஒரு திருப்பதிகத்தைப் பக்தியோடும் அந்தத் தோணியப்பரை வாழ்த்திப் பாடியருளி, பிரிவதற்கு அரியதாக உள்ள விதத்தில் அந்த ஆலயத்துக்கு வெளியில் எழுந்தருளி ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயாருடைய திருமடத்திற்கு அந்த நாயனார் எழுந்தருளி, அங்கே திருவமுது செய்தருளி தம்மிடம் பொருந்திய நட்பைப் பெற்ற உறவு அன்றைத்தினம் இருந்ததைப் போலப் பிறகும் வளர்ச்சியை அடைந்து ஓங்கி எழ, அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு பல தினங்கள் தங்கிக் கொண்டிருக்கும் காலத்தில்.' பாடல் வருமாறு:

" பெரியபெரு மாட்டியுடன் தோணி மீது
  பேணிவீற் றிருந்தருளும் பிரான்முன் நின்று
பரிவுறுசெந் தமிழ்மாலை பத்தி யோடும்
  'பார்கொண்டு மூடி' எனும் பதிகம் போற்றி
அரியவகை புறம்போந்து பிள்ளை யார்தம்
  திருமடத்தில் எழுந்தருளி அமுது செய்து
மருவியநண் புறுகேண்மை அற்றைநாள் போல்
  வளர்ந்தோங்க உடன்பலநாள் வைகும் நாளில். "

இந்தப் பாடல் குளகம். பெரிய பெருமாட்டியுடன்-பெரிய நாயகியோடு. தோணிமீது-சீகாழியில் உள்ள பிரமபுரீசருடைய ஆலயத்தில் ஒரு கட்டு மலையில் உள்ள தோணியின் மேல். பேணி-விரும்பி. வீற்றிருந்தருளும்-அமர்ந்திருந்தருளும். பிரான்-தம்முடைய தலைவனாகிய தோணியப்பனுடைய. முன்-சந்நிதியில். நின்று-அந்தத் திருநாவுக்கரசு

நாயனார் நின்று கொண்டு. பரிவுறு-பக்தியைப் பெற்ற. செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை-மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. பத்தியோடும்-பக்தியுடனும். 'பார் கொண்டு மூடி' எனும்- 'பார்கொண்டு மூடி' என்று தொடங்கும். எனும்: இடைச்குறை. பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. போற்றி-அந்தத் தோணியப்பரை வாழ்த்திப் பாடியருளி. அரிய-பிரிவதற்கு அரியதாக உள்ள. வகை-விதத்தில். புறம்-அந்த ஆலயத்திற்கு வெளியில். போந்து-எழுந்தருளி. பிள்ளையார் தம்-ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. தம்: அசை நிலை. திரு-அழகிய. மடத்தில்-திருமடத்திற்கு; உருபு மயக்கம். எழுந்தருளி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. அமுது செய்து-அங்கே திருவமுது செய்தருளி. மருவிய-தம்மிடம் பொருந்தியுள்ள. நண்பு-நட்பை. உறும்-பெற்றிருக்கும். கேண்மை-உறவு. அற்றை நாள் போல்-அன்றைத்தினம் இருந்ததைப் போல. வளர்ந்து-வளர்ச்சியை அடைந்து. ஓங்க-ஓங்கி எழ. உடன்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு. பலநாள்-பல தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். வைகும்-தங்கிக்கொண்டிருக்கும். நாளில்-காலத்தில்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருவிருத்தம் வருமாறு:

" பார்கொண்டு மூடிக்கடல் கொண்ட
ஞான்றுநின் பாதம்எல்லாம்
நாலஞ்சு புள்ளினம் ஏந்தின
என்பர் நளிர்மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித்
தாடும் கழுமலவர்க்
காளன்றி மற்றுமுண் டோஅந்தண்
ஆழி அகவிடமே. "

திருக் கழுமலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருவிருத்தம் வருமாறு:

" படையார் மழுவொன்று பற்றிய
கையன் பதிவினவில்
கடையார் கொடிநெடு மாடங்கள்
ஓங்கும் கழுமலமாம்
மடைவாய்க் குருகினம் பாளை
விரிதொறும் வண்டினங்கள்
பெடைவாய் மதுவுண்டு பேரா
திருக்கும் பெரும்பதியே. "

பிறகு வரும் 188-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த நட்பாகிய பான்மையோடு திருநாவுக்கரசு நாயனாரும் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் ஒருவரோடு ஒருவர் அளவளாவியதால் உண்டான ஆனந்தம் ஓர் அளவே இல்லாத தங்களுடைய திருவுள்ளங்களில் உருக்கத்தோடு அந்தத் திருமடத்தில் தங்கிக்கொண்டு வாழும் காலத்தில் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவுள்ளத்தில் மைபோலக் கரிய நிறம் தழைத்து ஓங்கும் நீலமணியைப் போன்ற திருக்கழுத்தைப் பெற்றவராகிய சிவபெருமானார் பொன்னைக் கொழிக்கும் காவிரியாறு பாயும் சோழநாட்டில் நிலை பெற்று விளங்கிய சிவத் தலங்கள் எல்லாவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைப் பணிந்து வாழ்த்துவதற்கு; உண்மையாகித் தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கியெழுந்த பெரியதாக இருக்கும் விருப்பத்தை அந்த ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தவுடன், அந்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் அந்தக் கருத்தை விரும்பிச் சம்மதிப்பாரானார்.'
பாடல் வருமாறு:

" அத்தன்மையினில் அரசும் பிள்ளை யாரும்
அளவளா வியமகிழ்ச்சி அளவி லாத

சித்தநெகிழ்ச் சியினோடு செல்லும் நாளில்
திருநாவுக் கரசுதிரு வுள்ளந் தன்னில்
மைத்தழையும் மணிமிடற்றார் பொன்னி நாட்டு
மன்னியதா னங்களெல்லாம் வணங்கிப் போற்ற
மெய்த்தெழுந்த பெருங்காதல் பிள்ளை யார்க்கு
விளம்புதலும் அவருமது மேவி நேர்வார். ''

அத்தன்மையினில்-அந்த நட்பாகிய பான்மையோடு; உருபு மயக்கம். அரசும்-திருநாவுக்கரசு நாயனாரும்; திணை மயக்கம். பிள்ளையாரும்-ஆளுடைய பிள்ளையா ராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும். அளாவளாவிய-ஒருவரோடு ஒருவர் அளவளாவியதால். மகிழ்ச்சி-உண்டான ஆனந்தம். அளவு-ஓர் அளவே. இலாத-இல்லாத; இடைக்குறை. சித்த - தங்களுடைய திருவுள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நெகிழ்ச்சியினோடு-உருக்கத் தோடு. செல்லும்-அந்தத் திருமடத்தில் தங்கிக் கொண்டு வாழும். நாளில்-காலத்தில். திருநாவுக்கரசு-திருநாவுக் கரசு நாயனாருடைய; திணைமயக்கம். திரு-அழகிய. உள் ளந்தன்னில் - திருவுள்ளத்தில். தன்: அசைநிலை. மை- மையைப் போன்ற கரியநிறம். கரிய நிறம் என்றாலும் இங்கே நீல நிறத்தையே கொள்க. கருமையையும் நீலம் என்பது ஒரு மரபு; ''நீல நிறக் காக்கை'' என வருதலைக் காண்க. த்: சந்தி. தழையும்-தழைத்து ஓங்கும். மணி_ நீல மணியைப் போன்ற. மிடற்றார்-திருக்கழுத்தைப் பெற்றவராகிய சிவபெருமானார். பொன்னி-திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் பொன்னைக் கொழிக்கும் காவிரிஆறு; ''பொன்னி பொன் கொழிக்கும்'' என வரு வதைக் காண்க. நாட்டு-ஓடும் சோழ நாட்டில். மன்னிய- நிலைபெற்று விளங்கிய. தானங்கள்-சிவத்தலங்கள். எல் லாம்-எல்லாவற்றிற்கும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. வணங்கி-அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டுஎழுந்தருளியிருக்கும்சிவபெருமான்களைப் பணிந்து.

ப்:சந்தி. போற்ற-வாழ்த்துவதற்கு. மெய்த்து-உண்மை யாகி. எழுந்த-தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த. பெரும்-பெரியதாக இருக்கும். காதல்-விருப்பத்தை. பிள்ளை யார்க்கு-அந்த ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு. விளம்புதலும்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வுடன். அவரும்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாய னாரும். அது-அந்தக் கருத்தை. மேவி-விரும்பி. நேர்வார்-சம்மதிப்பாரானார்.

அடுத்து வரும் 189-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் பல சிவத்தலங்களுக்கும் எழுந் தருளிவிட்டுத் திருக்கோலக்காவை அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடும் அந்தத் திருக்கோலக் காவுக்கு எழுந்தருளி சத்தபுரீசுவரரை வணங்கி விட்டுப் பக்தியை மேற்கொண்டு அந்தச் சீகாழிக்கே திரும்பி அந்த நாயனார் எழுந்தருளினார்; அந்தத் திருநாவுக்கரசு நாய னாரும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரிடத்தில் விடை யைப் பெற்றுக்கொண்டு இதன்பிறகு இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் பாடியருளிய தலைவராகிய சிவபெரு மானார் விரும்பி எழுந்தருளி யிருக்கும் சிவத்தலங்களாக உள்ள புகழ் நீண்டு வளர்ந்துள்ள திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும் திருக்குறுக்கை, திருநின்றியூரும், காணத்தக்க வனப்பைப் பெற்ற திருநனிபள்ளி முதலாக உள்ள சிவத் தலங்களைத் திருநாவுக்கரசு நாயனார் அடைந்து தங்களு டைய நெற்றிகளில் ஒற்றைக்கண் களைப் பெற்றவர்களாகிய குற்றம்பொறுத்த நாதேசுவரரையும், சிவலோக நாதரை யும், அருட்சோம நாதேசுவரரையும், வீரட்டேசுவரரையும், மகாலக்ஷ்மீசுவரரையும், நற்றுணையப் பரையும் அவர்

களுடைய வெற்றிக் கழல் பூண்ட திருவடிகளை அந்தத்திரு நாவுக்கரசு நாயனார் வணங்கி விட்டுத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரோடு சேர்ந்து கொண்டு எழுந்தருள் வாரானார்.' பாடல் வருமாறு:

"ஆண்டஅர செழுந்தருளக் கோலக் காவை
அவரோடும் சென்றிறைஞ்சி அன்பு கொண்டு
மீண்டருளி னார்; அவரும் விடைகொண் டிப்பால்
வேதநா யகர்விரும்பும் பதிக ளான
நீண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர்
நீடுதிருக் குறுக்கைதிரு நின்றி யூரும்
காண்டகைய நனிபள்ளி முதலா நண்ணிக்
கண்ணுதலார் கழல்தொழுது கலந்து செல்வார்."

ஆண்ட-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட் கொண்ட. அரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். எழுந்தருள-பல சிவத்தலங்களுக்கும் எழுந்தருளி விட்டு. க்:சந்தி. கோலக்காவை-திருக்கோலக் காவை. அவரோடும்-அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனா ரோடும். சென்று-எழுந்தருளி. இறைஞ்சி-சத்தபுரீசுவரரை வணங்கி விட்டு. அன்பு-பக்தியை. கொண்டு-மேற்கொண்டு. மீண்டருளினார்-அந்தச் சீகாழிக்கே அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திரும்பி எழுந்தருளினார். அவரும்-அந்தத் திரு நாவுக்கரசு நாயனாரும். விடைகொண்டு-திருஞான சம்பந்த மூர்த்தி நாயானரிடம் விடை பெற்றுக்கொண்டு. இப்பால்-இதன் பிறகு. வேத-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். நாயகர்-பாடியருளிய தலைவ ராகிய சிவபெருமானார். விரும்பும்-விரும்பித் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும். பதிகளான-சிவத் தலங்களாக உள்ள. நீண்ட-புகழ் நீண்டு வளர்ந்துள்ள. கருப்பறியலூர்-திருக்கருப்பறியலூர். புன்கூர் - திருப்புன்

கூர். நீடூர்-திருநீடூர். நீடு-நெடுங்காலமாகப் புகழ்பெற்று விளங்கும். திருக்குறுக்கை-அழகிய திருக்குறுக்கை. திரு நின்றியூரும்-அழகிய திருநின்றியூரும். காண்தகைய-பார்க்கத்தக்க அழகைப் பெற்ற. நனிபள்ளி-திருநனிபள்ளி. முதலா-முதலாக உள்ள பல சிவத்தலங்களை. நண்ணி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைந்து. க்:சந்தி. கண்ணுதலார்-நெற்றிகளில் ஒற்றைக் கண்களைப் பெற்ற வர்களாகிய குற்றம் பொறுத்த நாதேசுவரரையும், சிவலோக நாதரையும், அருட்சோம நாதேசுவரரையும், வீரட்டேசு வரரையும், மகாலக்ஷ்மீசுவரரையும், நற்றுணையப் பரையும். கழல்-அவர்களுடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகுபெயர். தொழுது-திருநாவுக்கரசு நாய னார் வணங்கிவிட்டு. கலந்து-திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரோடு சேர்ந்துகொண்டு. செல்வார்-மேலே எழுந் தருள்வாரானார்.

திருக்கோலக்கா: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சத்த புரீசுவரர், அம்பிகை ஓசை கொடுத்த நாயகி. இந்தச் சிவத் தலம் இந்தக் காலத்தில் திருத்தாளமுடையார் கோயில் என வழங்கும். இது சீகாழிக்குத் தெற்குத் திசையில் அரை மைல் தூரத்தில் உள்ளது. சீகாழிக்கும் திருக்கோலக் காவுக்கும் இடையில் கழுமலவாய்க்கால் என்னும் கால்வாய் ஓடுகிறது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பொற் றாளம் பெற்ற தலம் இது. இதைப்பற்றிச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை

ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ''

திருக் கோலக்காவைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய திருப்பதிகம் இப்போது கிடைக்கவில்லை. மறைந்த திருப்பதிகங்களில் அதுவும் ஒன்று போலும்!

திருக்கருப்பறியலூர்: இது சோழநாட்டில் உள்ள சிவத் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் குற்றம் பொறுத்த நாதேசுவரர். அம்பிகை கோல்வளையம்மை. தீர்த்தம் இந்திர தீர்த்தம். இது மண்ணிப் பள்ளம் என்னும் ஊருக்கு வடக்குத் திசையில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலத்தில் விளங்கும் திருக்கோயிலுக்குக் கொகுடிக் கோயில் என்று பெயர். இந்தத் தலத்தில் வாழ்ந்த அந்தணர்களைச் சிறப் பித்துத் தேவாரத்தில், ''முட்டாமே நாடோறும் நீர் மூழ்கிப் பூப்பறித்து மூன்று போதும், கட்டார்ந்த இண்டை கொண்டடி சேர்த்தும் அந்தணர்தம் கருப்பறியலூர்.'', ''பொய்யாத வாய்மையாற் பொடிப் பூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து, கையினால் எரி ஓம்பி மறைவளர்க்கும் அந்தணர்தம் கருப்பறியலூர்.'' என வருவனவற்றைக் காண்க.

ஒரு சமயம் தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் இறு மாப்போடு கயிலைக்குச் செல்ல, கயிலாசபதி ஒரு பூத வடிவத்தை எடுத்துக்கொண்டருளி அவனுக்கு முன்னால் காட்சியை வழங்கியருள, அதைத் தெரிந்து கொள்ளாது அந்த இந்திரன் தன்னுடைய வஜ்ராயுதத்தை அவர்மேல் எறிந்தபோது அவர் சினம் மூண்டு நிற்க, இந்திரன் தன்னு டைய குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று கூறி அவரை வணங்கிப் பூசித்த தலம் இது. இந்தக் காரணத்தி னால் சிவபெருமானாருக்கு, 'குற்றம் பொறுத்தநாதர்'

என்ற திருநாமம் வந்தது. இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

" நீற்றாரும் மேனியராய் நினைவார்தம்
உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றானைத் தீயானைக் கதிரானை
மதியானைக் கருப்பறிய லூர்க்
கூற்றானைக் கூற்றுதைத்துக் கோல்வளையா
ளவளோடும் கொகுடிக் கோயில்
ஏற்றானை மனத்தினால் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. "

திருப்புன்கூர்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சிவலோக நாதர். அம்பிகை சொக்கநாயகி அம்மை. இது வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்குத் திசையில் இரண்டுமைல் தூரத்தில் உள்ளது. திருநாளைப் போவார் நாயனார் தம்மை நேரே தரிசித்து வணங்கும் பொருட்டுச் சிவலோக நாதர் தமக்கு முன்னே அமர்ந்திருந்த திருநந்தி தேவரைச் சற்றே விலகியிருக்குமாறு பணித்தருளிய தலம் இது. "சற்றே விலகியிரும்பிள்ளாய், சந்நிதானம் மறைக்குதாம்; நற்றவம் புரியுந் திருநாளைப் போவான் வந்திருக்கிறான்" என்று கோபால கிருஷ்ண பாரதியார் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் பாடியருளியதைக் காண்க. சுந்தர மூர்த்தி நாயனாரும் ஏயர் கோன் கலிக்காம நாயனாரும் நண்பர்கள் ஆன பின்பு இரண்டு நாயன்மார்களும் சென்று வணங்கிய தலம் இது. கலிக்காம நாயனார் பல திருப்பணிகளைப் புரிந்தருளிய தலம் இது. கலிக்காம நாயனாருக்காக சிவலோக நாதர் பன்னிரண்டு வேலி நிலத்தை இரண்டு முறைகள் பெற்றுக் கொண்டு மழையின்றி உயிர்கள் வருந்திய காலத்தில் மழையைப் பெய்யுமாறு செய்தருளி உலகத்தில் வாழும் மக்களையும் பிற உயிர்களையும் உஜ்ஜீவனத்தை அடையும்

வண்ணம் புரிந்தருளிய தலம் இது. இது சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய பின்வரும் பாசுரத்தால் தெரிய வரும்,

" வையகம் முற்றும் மாமழை மறைந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. "

இக்கருத்தைக் கூறும் மற்றொரு பாசுரம் வருமாறு:

" ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர் கோன்உற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாள்அற எறிந்த சண்டிக்குன்
சடைமி சைமலர் அருள்செயக் கண்டு
பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொழில்திருப் புன்கூர் உளானே. "

கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் நம்பியாண்டார் நம்பி,

" பொன்னம் பலத்துறை புண்ணியன்
என்பர் புயல்மறந்த
கன்னன்மை தீரப் புனிற்றுக்
கலிக்காமற் கன்றுபுன்கூர்
மன்னும் மழைபொழிந் தீரறு
வேலிகொண் டாங்கவற்கே
பின்னும் பிழைதவிர்த் தீரறு
வேலிகொள் பிஞ்ஞகனே. "

என்று பாடியருளியதால் இந்தச் செய்தி விளங்கும். கலிக்காம நாயனாருடைய திருவவதாரத் தலமாகிய திருமங்கலம் இந்தத் திருப்புன்கூருக்கு அருகில் உள்ளது.

திருநாவுக்கரசு நாயனார் திருப்புன்கூரையும் திருநீடூரையும் சேர்த்துப் பாடியருளிய ஒரு திருத் தாண்டகம் வருமாறு:

'' பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னைப்
பேணாதார் அவர்தம்மைப் பேணா தானைத்
துறவாதே கட்டறுத்த சோதி யானைத்
தூநெறிக்கும் தூநெறியாய் நின்றான் தன்னைத்
திறமாய எத்திசையும் தானே ஆகித்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிறமாம் ஒளியானை நீடு ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. ''

திருநீடூர்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் அருட்சோம நாதீசுவரர், கான நிர்த்த சங்கரர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் வேயுறு தோளியம்மை, அதிகாந்தியம்மை என்பவை. தலவிருட்சம் மகிழ மரம். இது ஆனந்தத் தாண்டவ புரத்திலிருந்து தென் மேற்குத்திசையில் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. முனையடுவார் நாயனார் சிவபெருமானுடைய அடியவர்களுக்குத் திருவமுது படைத்து மகிழ்ந்து முத்தி பெற்ற தலம் இது. ஊழிக் காலத்திலும் மறையாமல் இருக்கும் தலமாதலின் இதற்கு நீடூர் என்னும் பெயர் உண்டாயிற்று. இந்திரன், சூரியன், சந்திரன், ஒரு நண்டு, காளி ஆகியவர்கள் வழிபட்ட தலம் இது. இதற்கு வகுளாரணியம், மகிழாரணியம், மகிழவனம் எனவும் பெயர்கள் வழங்கும்.

இதைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

'' காடில் ஆடிய கண்ணுத லானைக்

காலனைக்கடிந் திட்டபி ரானைப்
பாடி ஆடும் பரிசே புரிந்தானைப்
பற்றி னோடுசுற் றம்மொழிப் பானைத்
தேடி மால்அயன் காண்பரி யானைச்
சித்த மும்தெளி வார்க்கெளி யானைக்
கோடி தேவர்கள் கும்பிடும் நீடூர்க்
கூத்த னைப்பணி யாவிட வாமே. ''

இந்த நாயனார் திருப்புன்கூரையும் திருநீடூரையும் சேர்த்துப் பாடியருளிய மற்றொரு திருத் தாண்டகம் வருமாறு:

'' கையெலாம் நெய்பாயக் கழுத்தே கிட்டக்
கால்நிமிர்த்து நின்றுண்ணும் கையர் சொன்ன
பொய்யெலாம் மெய்யென்று கருதிப் புக்குப்
புள்ளுவரால் அகப்படா துய்யப் போந்தேன்
செய்யெலாம் செழுங்கமலப் பழன வேலித்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நெய்தல்வாய்ப் புனற்படப்பை நீடூ ரானை
நீதனேன் என்னேநான் நினையா வாறே. ''

திருக்குறுக்கை: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் வீரட்டேசுவரர். அம்பிகை ஞானாம்பிகை. இது திரு அன்னியூரிலிருந்து வடமேற்குத் திசையில் 4 மைல் தூரத்தில் உள்ளது. இது அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்று. காமனை வீரட்டேசுவரர் எரித்ததைப் புலப்படுத்தும் தலம் இது. வேதாரணியத் தல புராணத்தில் உள்ள சபைச் சருக்கத்தில் கூறப் பெற்ற சபைகளுக்குள் இந்தத் தலத்தில் உள்ள சபை 'காமாங்கநாசனிசபை' அல்லது 'சம்புவிநோதசபை' என வழங்கும். இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

'' ஆத்தமாம் அயனும் மாலும்
அன்றிமற் றொழிந்த தேவர்

தோத்தம்எம் பெருமான் என்று
தொழுதுதோத் திரங்கள் சொல்லத்
தீர்த்த மாம்அட்ட மிமுன்
சீருடை ஏழு நாளும்
கூத்தராய் வீதி போந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே.''

இது திருநாவுக்கரசு நாயனார் பாடிய திரிநேரிசை.

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"தழைத்ததோர் ஆத்தி யின்கீழ்த்
தாபரம் மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக்
கறந்து கொண்டாட்டங் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே.''

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருநேரிசை வருமாறு:

"நெடியமால் பிரம னோடு
நீரெனும் பிலயம் கொள்ள
அடியொடு முடியும் காணார்
அருச்சுனற் கம்பும் வில்லும்
துடியுடை வேட ராகித்
தூயமந் திரங்கள் சொல்லிக்
கொடிநெடும் தேர்கொ டுப்பார்
குறுக்கைவீ ரட்ட னாரே.''

திருநின்றியூர்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மகாலக்ஷ்மீசுவரர். அம்பிகை உலகநாயகி. இது ஆனந்தத் தாண்டவபுரத்தி

லிருந்து வடகிழக்குத் திசையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. இது திருமகள் வழிபட்ட தலம். "செந்தண்மா மலர்த் திருமகள் மருவும் செல்வத்தென்திரு நின்றியூரானே." என்று தேவாரத்தில் வருகிறதைக் காண்க. சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய அந்தப் பாசுரம் முழுவதும் வருமாறு :

" மொய்த்த சீர்முந் நூற் றறுபது வேலி
மூன்று நூறுவே தியரொடு நுனக்கு
ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி
ஓங்கும் நின்றியூர் என்றுனைக் களிப்பப்
பத்தி செய்தஅப் பரசி ராமற்குப்
பாதம் காட்டிய நீதிகண் டடைந்தேன்
சித்தர் வானவர் தானிவர் வணங்கும்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே. "

இந்த ஊரைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு :

" அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின் றி யூரைநீ
இஞ்சி மாமதில் எய்திமை யோர்தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. "

திருநனி பள்ளி: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கேகோயில்கொண்டிருப்பவர் நற்றுணையப்பர். அம்பிகையின் திரு நாமங்கள் பர்வத ராஜபுத்திரி, மலையான் மடந்தை என்பவை. இதற்கு இப்போது வழங்கும் பெயர் புஞ்சை என்பது. இது மாயூரத்திற்கு வடகிழக்குத் திசையில் எட்டு மைல் தூரத்தில் உள்ளது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய அன்னையாராகிய பகவதியார் திருவவதாரம் செய்தருளிய தலம் இது. இந்தத் தலத்தைப் பற்றிச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒருபாசுரம் வருமாறு:

"ஏன மருப்பினொடும் எழில் ஆமையும்
பூண்டு கந்து
வான மதிள் அரணம் மலையேசிலை
யாவளைத்தான்
ஊனமில் காழி தன்னுள்
உயர் ஞானசம் பந்தர்க்கன்று
ஞானம் அருள் புரிந்தான்
நண்ணும் ஊர்நனி பள்ளியதே."

இந்தத் தலத்தைப்பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"முற்றுணை ஆயி னானை
மூவர்க்கு முதல்வன் தன்னைச்
சொற்றுணை ஆயி னானைச்
சோதியை ஆதரித்து
உற்றுணர்ந் துருகி ஊறி
உள்கசி வுடைய வர்க்கு
நற்றுணை யாவர் போலும்
நனிபள்ளி அடிக ளாரே."

பிறகு வரும் 190-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் ஓடுகின்ற நீரைக் கொண்ட பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய இரண்டுக் கரைகளிலும் உள்ள பல சிவத்தலங்களையும் அடைந்து இடபத்தைத் துவசமாக உயர்த்தியவராகிய சொர்ணபுரீசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருச் செம்பொன் பள்ளிக்கு எழுந்தருளி அந்தச் சொர்ணபுரீசுவரரைத் துதித்து ஒரு திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடியருளி சோலைகளில் பலவகை மரங்கள் உயர்ந்து நிற்கும் மயிலாடுதுறை யாகிய மாயூரம், நீண்ட பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றின் கரையில் விளங் கும் துருத்தி, வேள்விக்குடி, திரு எதிர் கொள்பாடி ஆகிய

சிவத்தலங்களுக்கும் அந்த நாயனார் எழுந்தருளி பாசுரங்களைப் பெற்ற செந்தமிழில் அமைந்துள்ள மாலையாகிய ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சொர்ணபுரீசுவரரையும், மாயூர நாதேசுவரரையும், வேதேசுவரரையும், கலியாண சுந்தரேசுவரரையும், ஐராவதேசுவரரையும், திரிகோடீசுவரரையும் வாழ்த்தி விட்டுப் பரமேசுவரர் எழுந்தருளியிருக்கும் அழகிய சிவத்தலங்கள் பலவற்றிற்கும் அந்த நாயனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கி வாழ்த்திவிட்டு மேலே எழுந்தருளி பசுமாட்டினிடம் கிடைக்கும் கோமயம், கோஜலம், பால், தயிர், வெண்ணெய் என்னும் பஞ்சகவ்வியங்களில் திருமஞ்சனம் செய்தருளுபவராகிய திரிகோடீசுவரர் திருக்கோயில் கொண்டிருக்கும் திருக் கோடிகாவை அடைந்து அந்தத் திரிகோடீசுவரரை வணங்கிவிட்டு மாசிலாமணி ஈசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் குளிர்ச்சியைப் பெற்ற திருவாவடுதுறையை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு :

" மேவுபுனற் பொன்னியிரு கரையும் சார்ந்து
 விடைஉயர்த்தார் திருச்செம் பொன்பள்ளி பாடிக்
காவுயரும் மயிலாடு துறைநீள் பொன்னிக்
 கரைத்துருத்தி வேள்விகுடி எதிர்கொள் பாடி
பாவுறுசெந் தமிழ்மாலை பாடிப் போற்றிப்
 பரமர்திருப் பதிபலவும் பணிந்து போந்தே
ஆவுறும்அஞ் சாடுவார் கோடி காவில்
 அணைந்து பணிந் தாவடுண்டுறையைச்
  சார்ந்தார்."

மேவு-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் ஒடுகின்ற. புனல்-நீரைக்கொண்ட. பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய: "பொன்னி பொன்கொழிக்கும்."

என வருதலைக் காண்க. இரு-இரண்டு. கரையும்-கரைகளிலும் உள்ள பல சிவத்தலங்களையும்; இடஆகு பெயர். கரை: ஒருமை பன்மை மயக்கம். சார்ந்து-அடைந்து. விடை-இடபத்தை. உயர்த்தார்-துவசமாக உயர்த்திப் பிடித்தவராகிய சொர்ணபுரீசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திரு-அழகிய. "செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். ச்:சந்தி. செம் பொன்பள்ளி-திருச்செம்பொன் பள்ளிக்கு எழுந்தருளி. பாடி-சொர்ணபுரீசுவரரைத் துதித்து ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி. க்:சந்தி. கா-பூம் பொழிலில் பலவகையான மரங்கள்; ஆகு பெயர். உயரும்-உயர்ந்து வளர்ந்து நிற்கும். மயிலாடுதுறை - மயிலாடு துறையாகிய மாயூரத்திற்கும். நீள்-நீளமாக ஓடும். பொன்னி - பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய. க்:சந்தி. கரை-தென் கரையில் உள்ள. த்:சந்தி. துருத்தி-திருத்துருத்தி. வேள்வி குடி-திருவேள்விக்குடி. எதிர்கொள்பாடி-திரு எதிர்கொள் பாடி. பாவுறு-பாசுரங்களைப் பெற்று. பா:ஒருமை பன்மை மயக்கம். செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை-மாலைகளாகிய பல திருப்பதிகங்களை; ஒருமை பன்மை மயக்கம். பாடி-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி. ப்:சந்தி. போற்றி-வாழ்த்திவிட்டு. ப்:சந்தி. பரமர்-பரமேசுவரர் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும். திரு-அழகிய. 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். ப்:சந்தி. பதி-சிவத்தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல்வும்-பலவற்றிற்கும் எழுந்தருளி. பணிந்து-அந்தச் சிவத்தலங்களில் திருக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கிவிட்டு. போந்து-மேலே எழுந்தருளி. ஏ: அசை நிலை. ஆ-பசுமாட்டிலிருந்து. உறும்-பெறும். அஞ்சு-கோமயம், கோஜலம், பால், வெண்ணெய், தயிர் என்னும் பஞ்சகவ்வியங்களில்; ஒருமை பன்மை மயக்கம். ஆடுவார்-திருமஞ்சனம் செய்தருளுபவ

ராகிய திரிகோடீசுவரர். கோடிகாவில் - திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்கோடிகாவை; உருபு மயக்கம். அணைந்து-அந்த நாயனார் அடைந்து. பணிந்து-அந்தத்திரிகோடீசுவரரை வணங்கிவிட்டு. ஆவடுதண்டுறையை-மாசிலாமணி ஈசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் குளிர்ச்சியைப் பெற்ற திருவாவடுதுறையை. ச்:சந்தி. சார்ந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

திருச் செம்பொன் பள்ளி:இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சொர்ணபுரீசுவரர். அம்பிகையின் திருநாமங்கள் சுகந்த வன நாயகி அம்மை, மருவார்குழலி என்பவை. இது மாயூரத்திலிருந்து கிழக்குத் திசையில் ஆறே முக்கால் மைல்தூரத்தில் உள்ளது. இந்திரனும் குபேரனும் வழிபட்ட தலம் இது. இதைப்பற்றிய பாசுரம் ஒன்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளியது வருமாறு:

"மருவார் குழலி மாதோர் பாசமாயத்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் திருநேரிசை, திருக்குறுந் தொகை ஆகிய பாசுரங்கள் அடங்கிய திருப் பதிகங்களைப் பாடியருளி உள்ளார். அவற்றுள் ஒரு திருநேரிசை வருமாறு:

"ஊனினுள் உயிரை வாட்டி
உணர்வினார்க் கெரிய ராகி
வானினுள் வான வர்க்கும்
அறியலா காத வஞ்சர்
நாணெனில் தாமே என்னும்
ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்

தேனும்இன் னமுதும் ஆனார்
திருச்செம் பொன் பள்ளியாரே.''

அந்த நாயனார் பாடியருளிய திருக்குறுந் தொகை ஒன்று வருமாறு:

'' கானறாத கடிபொழில் வண்டினம்
தேனறாத திருச்செம்பொன் பள்ளியான்
ஊனறாத தோர்வெண்டலை யிற்பலி
தானறாததோர் கொள்கையன் காண்மினே.''

திருமயிலாடுதுறை: இந்தச் சிவத்தலம் மாயூரம் எனவும் வழங்கும். இது சோழநாட்டில் காவிரியாற்றின் தென் கரையில் உள்ளது. இங்கே கோயில் கொண்டிருப்பவர் மாயூர நாதேசுவரர். அம்பிகையின் திருநாமங்கள் அபயாம் பிகை, அஞ்சல் நாயகி என்பவை. சமயாம்பிகை மயில் வடிவத்தோடு மாயூர நாதேசுவரரைப் பூசித்த தலம் இது. துலாமாசமாகிய ஐப்பசி மாதத்தில் இங்கே காவிரியாற்றில் நீராடுவது சிறப்பு.

இந்தத் தலத்தைப்பற்றித் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தக்கராகப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' கரவின்றிநன் மாமலர் கொண்டே
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரம்ஒன்றிய செஞ்சடை யான்வாழ்
வளமயி லாடு துறையே.''

அந்த நாயனார் சாதாரிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' ஏனவெயி றாடரவெ டென்புவரி யாமையிவை
பூண்டிளை ஞராய்க்
கான வரி நீடுழுவை அதளுடைய
படர்சடையர் காணி யெனவாம்

ஆனபுகழ் வேதியர்கள் ஆகுதியின்
மீதுபுகை போகி யழகார்
வானமுறு சோலைமிசை
மாசுபட மூசுமயி லாடுதுறையே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியளிய ஒரு திருக்குறுந் தொகை வருமாறு:

"வெஞ்சி னக்கடும் காலன்விரை கிலான்
அஞ்சி றப்பும் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயிலாடு துறையுறை
அஞ்ச லாள்உமை பங்கன் அருளிலே."

பிறகு வரும் 191-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'"ஆவடு தண்டுறையாரை அடைந்துய்ந்தேன்" எனத் தொடங்கி அளவு இல்லாத திருத்தாண்டகம் ஒன்றை அந்த மாசிலாமணி ஈசுவரருடைய சந்நிதியில் நின்று கொண்டு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு தம்மிடம் தோன்றிய திருக்குறுந் தொகை, திருநேரிசை ஆகியவற்றையும், சந்தவிருத்தங்களான வற்றையும், வேறு வேறாகப் பாசுரங்கள் மலரும் செந்தமிழ் மொழியில் தொடுத்த மாலைகளாகிய திருப்பதிகங்களால் திருப்பள்ளித் தாமம் பலவற்றை அந்த மாசிலாமணி ஈசுவர ருக்கு அணிந்து விட்டு தம்முடைய திருவுள்ளத்தில் மிகுதி யாகிப் பொங்கியெழுந்த பக்தியினோடும் இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் புகழ்ந்து பாராட்டுமாறு அந்தத் திருவாவடு துறையில் அந்த நாயனார் பலதினங்கள் தங்கிக் கொண்டிருந்து தாம் செய்வதற்குரிய தம்முடைய திருக்கரங்களால் உழவாரத் திருத் தொண்டினை அந்த மாசிலாமணி ஈசுவரரை வாழ்த்தி வணங்கிப் புரிவாரானார்.' பாடல் வருமாறு :

"'ஆடுவதண் டுறையாரை அடைந்துய்ந் தேன்' என்
றளவில்திருத் தாண்டகம்முன் அருளிச் செய்து

மேவுதிருக் குறுந்தொகைநே ரிசையும் சந்த
விருத்தங்கள் ஆனவையும் வேறு வேறு
பாவலர்செந் தமிழ்த்தொடையாற் பள்ளித் தாமம்
பலசாத்தி மிக்கெழுந்த பரிவி னோடும்
பூவலயத் தவர்பரவப் பலநாள் தங்கிப்
புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச் செய்வார்.''

'ஆடுவதண் டுறையாரை அடைந்துயந்தேன்' என்று-'ஆடுவதண்டுறையாரை அடைந்துயந்தேன்' எனத் தொடங்கி. அளவுஇல்-அளவு இல்லாத. இல்: கடைக் குறை. திருத்தாண்டகம்-திருத் தாண்டகம் ஒன்றை. முன்-அந்த மாசிலாமணி ஈசுவரருடைய சந்நிதியில் நின்று கொண்டு. அருளிச் செய்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. மேவு-தம்மிடம் விருப்பத்தோடு தோன்றிய. திருக்குறுந்தொகை-திருக்குறுந் தொகைகள் அடங்கிய ஒரு திருப்பதிகத்தையும்; ஆகுபெயர்; ஒருமை பன்மை மயக்கம். நேரிசையும்-திரு நேரிசைகள் அடங்கிய ஒரு திருப்பதிகத்தையும்; ஆகுபெயர். நேரிசை: ஒருமை பன்மை மயக்கம். சந்த விருத்தங்கள் ஆனவையும்-திருச்சந்த விருத்தங்கள் ஆனவற்றையும். வேறு வேறு-வேறு வேறாக உள்ள. பா-பாசுரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவர்-தம்முடைய திருவாயிலிருந்து மலரும். செந்தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. த்:சந்தி. தொடையால்-தொடுத்த மாலையாகிய ஒரு திருப்பதிகத்தால். பள்ளித்தாமம் - திருப்பள்ளி எழுச்சியின் போது பாடியருளும் மாலைகளாகிய திருப்பதிகங்கள்; உவமஆகுபெயர்.பல-பலவற்றை. சாத்தி-அந்த மாசிலாமணி ஈசுவரருக்கு அணிந்துவிட்டு. மிக்கு-மிகுதியாக உண்டாகி. எழுந்த-தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த. பரிவினோடும் - பக்தியோடும். பூவலயத்தவர் - இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள். வலயம்-மண்டலம்; ஒருமை பன்மை மயக்கம். பரவு-புகழ்ந்து பாராட்டுமாறு.

ப்:சந்தி. பலநாள்-பலதினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். தங்கி-அந்தத் திருவாவடு துறையில் அந்த நாயனார் தங்கிக் கொண்டிருந்து. ப்:சந்தி. புரிவுறு-தாம்செய்வதற்கு உரிய. கை-தம்முடைய திருக்கரங்களால்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருத்தொண்டு-உழவாரத் திருத் தொண்டினை. போற்றி-அந்த மாசிலாமணிஈசுவரரை வாழ்த்தி. செய்வார்-வணங்கிப் புரிவாரானார்.

இந்தப் பாட்டில்குறிப்பிட்ட திருத்தாண்டகம் வருமாறு:

"நம்பனை நால்வேதம் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லால் இருந்தான் தன்னை
கற்பகமாய் அடியார்கட் கருள் செய்வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளும் முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை ஆவடுதண்டு றையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந் துய்ந்தேனே."

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு:

"திருவேஎன் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் உறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய் வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரர்ஏறே."

இந்தத் தலத்தைப்பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக் குறுந்தொகை வருமாறு:

"நிறைக்க லாவியள் அல்லளிந் நேரிழை
மறைக்க லாவியள் அல்லளிம் மாதரார்

பிறைக்க பாலம் பெரும்புனல் ஆவடு
துறைக்க வாவியோ டாடிய சுண்ணமே. ''

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

'' மாயிரு ஞாலம் எல்லாம்
மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப்
படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல ஊரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே. ''

இந்த தலத்தைப்பற்றி அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திருநேரிசை வருமாறு:

'' மஞ்சனே மணியும் ஆனாய்
மரகதத் திரளும் ஆனாய்
நெஞ்சுளே புகுந்து நின்று
நினைதரு நிகழ்வி னானே
துஞ்சும்போ தாக வந்து
துணைஎனக் காகி நின்று
அஞ்சல்என் றருள வேண்டும்
ஆவடு துறையு ளானே. ''

அந்த நாயனார் திருவாவடுதுறையைப் பற்றிப் பாடியருளிய சந்த விருத்தங்கள் இப்போது கிடைக்கவில்லை. மறைந்துபோன திருப்பதிகங்களில் அவையும் சேர்ந்து இருக்கும் போலும்!

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் திருக்கழுமலத்தைப் பற்றிப் பாடியருளிய திருத் தாளச்சதியே சந்தவிருத்தம் என்று கூறலாம். அந்தத் திருப்பதிகத்தில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

"பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்றவும்பரப்
பாலேசேர் வாயேனோர் கான்பயில் கணமுனிவர்
களும்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின் மங்கைதன்னொடும்
சேர்வார் நாள்நாள் நீங்கயிலைத் திகழ்தரு பரிச
தெலாம்
சந்தித்தே இந்தப்பார் சனங்கள்நின்று தங்கணாற்
றாமே காணாவாழ்வா ரத்தகவு செய்தவன்இடம்
கந்தத்தால் எண்டிக்கும் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார் பூவார்சீர்மேவும் கழுமல வளநகரே."

பிறகு வரும் 192-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அலைகளை வீசும் தன்னிடம் ஓடும் நீர் மாணிக்கங்களைச் சிதறி விழுமாறு புரியும் அலைகளில் உள்ள புனலைப் பெற்ற பொன் கொழிக்கும் காவிரி ஆற்றினுடைய தென் கரையில் விளங்கும் திருவிடை மருதூருக்கு அந்தத்திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி அடைந்து பக்தியோடு மான் குட்டி தங்கியுள்ள திருக்கரத்தைப் பெற்றவராகிய மகாலிங்க மூர்த்தியைப் பணிந்துவிட்டு அந்தத் திருவிடை மருதூரில் தங்கிக் கொண்டிருந்து சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற செந்தமிழ்ப் பாசுரங்கள் அடங்கிய மாலைகளாகிய திருப்பதிகங்கள் பலவற்றை அந்த மகாலிங்க மூர்த்தி மகிழ்ச்சியை அடைந்தருளுமாறு அணிந்து விட்டு, புள்ளிகளைப் பெற்ற பாம்புகளை அணிந்தவராகிய நாகநாதேசுவரரை அவர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருநாகேச்சுரத்தில் அந்த ஈசுவரரை வாழ்த்தி வணங்கிவிட்டு அந்த நாயனார் அருமையாக விளங்கும் செந்தமிழ் மொழியில் அமைந்த மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை அணிந்து விட்டு மேலே எழுந்தருளி செறிந்த நறுமணம் கமழும் நல்ல மலர்கள் மலர்ந்திருக்கும் பலவகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில்

சூழ்ந்திருக்கும் திருப்பழையாறையை அந்த நாயனார் அடைந்து பிறகு திருச்சத்தி முற்றத்திற்கு எழுந்தருளிப் போய்ச் சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

"எறிபுனல்பொன் மணிசிதறும் திரைநீர்ப் பொன்னி
இடைமருதைச் சென்றெய்தி அன்பி னோடு
மறிவிரவு கரத்தாரை வணங்கி வைகி
வண்டமிழ்ப்பா மாலைபல மகிழச் சாத்திப்
பொறியரவம் புனைந்தாரைத் திருநாகேச்சுரத்துப் போற்றி
அருந்தமிழ் மாலை புனைந்து போந்து
செறிவிரைநன் மலர்ச்சோலைப் பழையா றெய்தித்
திருச்சத்தி முற்றத்திற் சென்று சேர்ந்தார்."

எறி-அலைகளை வீசும். புனல்-தன்னிடம் ஓடும் நீர். மணி-மாணிக்கங்களை; ஒருமை பன்மை மயக்கம். சிதறும்-சிதறி விழுமாறு புரியும். திரை-அலைகளில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். நீர்-புனலைப் பெற்ற. ப்:சந்தி. பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரியாற்றினுடைய தென் கரையில் விளங்கும். இடைமருதை-திருவிடை மருதூருக்கு; உருபு மயக்கம். ச்:சந்தி. சென்று-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. எய்தி-அடைந்து. அன்பினோடு-பக்தியோடு. மறி-மான்குட்டி. விரவு-தங்கியுள்ள. கரத்தாரை-திருக் கரத்தைப் பெற்ற மகாலிங்க மூர்த்தியை. வணங்கி-பணிந்து விட்டு. வைகி-அந்தத் திருவிடை மருதூரில் தங்கிக்கொண்டிருந்து. வண்-சொற்சுவை, பொருட்சுவை என்னும் வளப்பத்தைப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. ப்:சந்தி. பா-பாசுரங்கள் அடங்கிய; ஒருமை பன்மை மயக்கம். மாலை-மாலைகளாகிய திருப்பதிகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பலவற்றை. மகிழ-அந்த மகாலிங்கமூர்த்தி மகிழ்ச்சியை அடைந்தருளுமாறு. ச்:சந்தி. சாத்தி-அவருக்கு அந்த நாயனார் அணிந்துவிட்டு. ப்:சந்தி. பொறி-புள்ளிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம்.

அரவம்-பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். புனைந் தாரை - அணிந்தவராகிய நாகநாதேசுவரரை. த்:சந்தி. திருநாகேச்சுரத்து-அவர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருநாகேச்சுரத்தில். ப்:சந்தி. போற்றி-அந்த ஈசுவரரை வாழ்த்தி வணங்கிவிட்டு. அரும்-அந்த நாயனார் அருமையாக விளங்கும். தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை-மாலையாகிய ஒரு திருப்பதிகத்தை. புனைந்து- அந்த ஈசுவரருக்கு அணிந்து விட்டு. போந்து- திருநாசேச்சுரத்திலிருந்து அப்பால் எழுந்தருளி. செறி-செறிந் திருக்கும். வரை-நறுமணம் கமழும். நல்-நல்ல. மலர்- மலர்கள் மலர்ந்திருக்கும் பல வகையாகிய மரங்கள் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சோலை-பூம்பொழில் சூழ்ந்திருக்கும். ப்:சந்தி. பழையாறு-திருப்பழையாற்றை. எய்தி-அடைந்து. த்:சந்தி. திருச்சத்தி முற்றத்தில்-திருச்சத்தி முற்றத்திற்கு; உருபு மயக்கம். சென்று-அந்த நாயனார் எழுந்தருளி. சேர்ந்தார்- அடைந்தார்.

திருவிடை மருதூர்: இது சோழநாட்டில் காவிரியாற்றினுடைய தென்கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் மருதப்பஈசுவரர், மருதவாணர், மகாலிங்கேசுவரர், மகா லிங்க மூர்த்தி என்பவை. அம்பிகை பெருநலமாமுலை நாயகி. தலவிருட்சம் மருதமரம். இது கும்பகோணத்துக்கு வடகிழக்குத் திசையில் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இதற்கு வடமொழியில் மத்யார்ஜுனம் என்று பெயர். இந்தத் தலத்தில் ஓடும் காவிரியாற்றில் தைமாதம் வரும் பூச நட்சத்திரத்தில் நீராடுவது மிகவும் புண்ணியத்தைத் தரும் செயல் என்பர்.

இந்தக் கருத்தைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய பின்வரும் பாசுரம் தெளிவுறுத்தும்:

"ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேஇடம் ஆவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையும் தானும் மகிழ்ந்
தீடா உறைகின்ற இடைமரு தீதோ."

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய தக்கராகப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரத்திலும் இந்தக் கருத்தைக் காணலாம். அந்தப் பாசுரம் வருமாறு:

"வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை உடைத்தாய்ப்
பூசம் புகுந்தாடிப் பொலிந்தழ காய
ஈசன் உறைகின்ற இடைமரு தீதோ."

திருநாவுக்கரசு நாயனார் தாம் திருவிடை மருதூரைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருக்குறுந் தொகையில் பூச நீராட்டைச் சிறப்பித்திருக்கிறார். அந்தத் திருக் குறுந் தொகை வருமாறு:

"பாசம்ஒன் றிலராய்ப் பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மான்இடை மருதினில்
பூசம் நாம்புகுதும் புனல் ஆடவே."

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

"காடுடைச் சுடலைநீற்றர் கையில்வெண் தலையர்தையல்
பாடுடைப்பூதம் சூழப் பரமனார் மருதவைப்பில்
தோடுடைக் கைதை யோடு சூழ்கிடங்கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமலவேலி இடைமரு திடங் கொண்டாரே."

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேபிற வித்துயர் நீத்திடும்
எம்மை ஆளும் பிரானிடை மருதினை
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே."

அவர் இந்தத் தலத்தைப்பற்றிப் பாடியருளிய மற்றொரு திருக்குறுந்தொகை வருமாறு:

"மனத்துள் மாயனை மாசறு சோதியை
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை
எனக்குத் தாயையெம் மானிடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததென் உள்ளமே."

இந்தத் தலத்தைப்பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
விண்ணுலகும் மண்ணுலகும் ஆனார் போலும்
பூதங்கள் ஆய புராணர் போலும்
புகழ வளரொளியாய் நின்றார் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்
பத்தர் களுக்கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே."

மற்றொரு திருத்தாண்டகம் வருமாறு:

"பச்சை நிறமுடையார் பாலர் சாலப்
பழையர் பிழையெலாம் நீக்கி ஆள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனொன்று கையேந்தி இல்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணும் தொண்டர்
இச்சை மிகஅறிவர் என்றும் உள்ளார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே."

வரகுண பாண்டியருடைய பிரமஹத்தி தோஷத்தைப் போக்கிய தலம் இது. அந்தப் பாண்டியர் பல திருத்தொண்டு

களைச் செய்து முத்தி பெற்ற தலம் இது. உருத்திரர், உமையம்மை, விநாயகர், முருகப் பெருமான், திருமால், பிரமதேவன் முதலியவர்கள் வழிபட்ட தலம் இது. மூகாம்பிகை சந்நிதி ஒன்று தனியாக இந்த ஆலயத்துக்குள் உள்ளது. மௌனமாக இருந்து அந்த அம்பிகை தவம் புரிந்தமையால் மூகாம்பிகை என்ற திருநாமம் அவருக்கு உண்டாயிற்று. மூகம்-ஊமை. 'திருவிடை மருதூர்த் தெரு அழகு' என்று ஒரு பழமொழி உண்டு. இந்தத் தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

" வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர்
வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூசம்ஆடி உலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீரால் ஏத்தஇடை மருதிற்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே. "

இந்தத் தலத்தைப்பற்றித் தக்கராகப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" ஓடே கலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடே இடம் ஆவது கல்லால் நிழற்கீழ்
வாடா முலை மங்கையும் தானும் மகிழ்ந்
தீடா வுறை கின்ற இடைமரு தீதோ. "

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய குறிஞ்சிப்பண் அமைந்த திருஇருக்குக் குறள் ஒன்று வருமாறு:

" தோடொர் காதினன், பாடும் மறையினன்
காடு பேணிநின், றாடும் மருதனே. "

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு தினமுகில் வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே. "

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் காந்தாரப் பண்ணில் பாடியருளிய பாசுரம் ஒன்று வருமாறு:

"பொங்குநூல் மார்பினீர்
பூதப்படையீர் பூங்கங்கை
தங்கு செஞ்சடையினீர்
சாமவேதம் ஓதினீர்
எங்கும்எழிலார் மறையோர்கள்
முறையால்ஏத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே
கோயிலாக மகிழ்ந்தீரே."

இந்தத் தலத்தைப் பற்றிச் சுந்தரமூர்த்தி நாயனார் தக்கேசிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"கழுதை குங்குமம் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நான்உழன் றுந்தடு மாறிப்
படுசு ழத்தலைப் பட்டனன் எந்தாய்
அமுது நீஇருந் தென்செய்தி மனனே
அங்கணா அரனே என மாட்டா
கழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே."

திருநாகேச்சுரம்: இது சோழநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் சண்பகாரணியேசுவரர், நாகநாதேசுவரர் என்பவை. அம்பிகை குன்ற முலை நாயகி. இது கும்பகோணத்திற்குக் கிழக்குத் திசையில் 4 மைல் தூரத்தில் உள்ளது. இதற்குச் சண்பகாரணியம் என்னும் பெயரும் உண்டு. பெரிய புராணத்தைப் பாடியருளிய சேக்கிழார் மிக்க அபிமானம் வைத்திருந்த தலம் இது. அதனால் அவர் தம்முடைய திருவவதாரத் தலமாகிய குன்றத்தூரில் திருக்கோயில் ஒன்றைக் கட்டுவித்து அதற்குத் திரு நாகேச்சுரம் என்று பெயர் அமைத்தார். அவருடைய திருவுருவமும் இந்த ஆலயத்தில்

இருக்கிறது. தீர்த்தம் சூரிய புஷ்கரிணி. சங்கநிதி, பதுமநிதி, மகாசாஸ்தா, ஆகியவர்களுடைய விக்கிரகங்களும் இந்த ஆலயத்தில் உள்ளன. சுந்தர மூர்த்தி நாயனாருடைய திரு உருவமும் அவருக்குஅருகில் பரவை நாச்சியார் திருஉருவமும் உள்ளன. சந்திரன், சூரியன், ஐந்து தலைநாகம் ஆகியவர்கள் வழிபட்ட தலம் இது. "ஞாயிறும் திங்களும் கூடிவந்தாடிடும் நாகேச்சுரம்" என்று தேவாரத்தில் வருவதைக் காண்க. இந்தத் தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"சந்தி ரனொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்தலை யரவின் பணி கொண்டருள்
மைந்தர் போன்மணி நாகேச் சுரவரே."

இந்தத் தலத்தைப் பற்றி இந்தளப்பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பொன்நேர்தரு மேனிய னேபுரியும்
மின்நேர்சடை யாய்விரை காவிரியின்
நன்னீர்வயல் நாகேச் சரநகரின்
மன்னேஎன வல்வினை மாயுந்தறுமே."

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிச் செவ்வழிப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"தழைகொள் சந்தும் அகிலும்
மயிற்பீலியும் சாதியின்
பழமும் உந்திப் புனல்பாய்
பழங்காவிரித் தென்கரை
நழுவில் வானோர் தொழநல்கு
சீர்மல்கு நாகேச்சரத்
தழகர் பாதம் தொழுதேத்த
வல்லார்க் கழகாகுமே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருநேரிசை வருமாறு:

" வஞ்சகர்க் கரியர் போலும்
மருவினார்க் கெளியர் போலும்
குஞ்சரத் துரியர் போலும்
கூற்றிகைக் குமைப்பர் போலும்
விஞ்சையர் இரிய அன்று
வேலைவாய் வந்தெ ழுந்த
நஞ்சணி மிடற்றர் போலும்
நாகஈச் சரவ னாரே. "

இந்தத் தலத்தைப்பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

" நல்லர் நல்லதோர் நாகம்கொண் டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்லில் ஒடுகை ஏந்திப் பலிதிரி
செல்வர் போல் திருநாகேச் சரவரே. "

இந்தத் தலத்தைப்பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

" மெய்யானைத் தன்பக்கல் விரும்பு வார்க்கு
விரும்பாத அரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானைப் புறங்காட்டில் ஆட லானைப்
பொன்பொதிந்த சடையானைப் பொடிகொள் பூதிப்
பையானைப் பையரவம் அசைத்தான் தன்னைப்
பரந்தானைப் பவளமால் வரைபோல் மேனிச்
செய்யானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேரா தார் நன்னெறிக்கட் சேரா தாரே. "

இந்தத் தலத்தைப்பற்றிப் பஞ்சமப் பண்ணில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

" பிறையணி வாணுதலாள்
உமையாளவள் பேழ்கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க
நீலமால்விடம் உண்டதென்னே
குறையணி குல்லைமுல்லை

அளைந்துகுளிர் மாதவிமேல்
சிறையணி வண்டுகள்சேர்
திருநாகேச் சரத்தாளே. ''

திருப்பழையாறு: இந்தத் தலம் பழையாறை வடதளி எனவும் வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சோமேசுவரர். அம்பிகை சோமகலா நாயகி. தீர்த்தம் சோம தீர்த்தம். இது பழையாறை என்றும் வடதளி என்றும் இரண்டு சிவத்தலங்களாக உள்ளன. பம்பைப் படை என்னும் ஊரிலிருந்து தெற்குத் திசையில் உள்ள திருமலை ராயன் ஆற்றைக் கடந்து கால் மைல் சென்றால் இந்தத் தலத்தை அடையலாம். இந்த இரண்டு சிவத்தலங்களையும் ஒரே பதிகத்தில் சேர்த்து நாயன்மார்கள் பாடியருளியிருக்கிறார்கள். வடதளியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாருடைய திருநாமம் தருமபுரீசுவரர் என்பது. அம்பிகை விமலநாயகி. இந்தத் தலத்தில் காமதேனுவினுடைய புதல்வியாகிய விமலிஎன்பவள் வழிபட்டிருக்கிறாள். ஆலயம் ஒரு மேட்டின் மேல் உள்ளது. இங்கே சிவபெருமான், அம்பிகை என்னும் இருவருடைய விக்கிரகங்களை அல்லாமல் வேறு விக்கிரகம் ஒன்றும் இல்லை. இந்த ஆலயத்துக்கு அருகில் துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகளுடைய சமாதிக் கோயில் இருக்கிறது. பழையாறை சந்திரன் வழிபட்ட தலம். அமர் நீதி நாயனார் வாழ்ந்திருந்த தலம் இது. காமதேனுவினுடைய புதல்வியர்களுக்குள் பட்டிவழிபட்டது பட்டீச்சுரம். விமலி வழிபட்டது பழையாறை வடதளி. சபளி வழிபட்டது திருமேற்றளி. இங்கே எழுந்தருளியிருப்பவர் கைலாசநாதர். அம்பிகை சபளநாயகி. நந்தினி பூசித்த சிவத்தலம் முழையூர். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பரசுநாதேசுவரர். அம்பிகை ஞானாம்பிகை. இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

'' நீதி யைக்கெட நின்றம ணேயுணும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்

ஆதி யைப்பழை யாறை வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே. ''

திருச் சத்தி முற்றம்: இந்தத் தலம் சத்தி முத்தம் எனவும் வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் சிவக்கொழுந்தீசுவரர், சத்திவனேசுவரர் என்பவை. அம்பிகை பெரிய நாயகி அம்மை. தீர்த்தம் சூல தீர்த்தம். இது கும்பகோணத்திற்குத் தென்மேற்குத் திசையில் 4-மைல் தூரத்தில் உள்ளது. பட்டீச்சுரம் இதனுடன் சேர்ந்து இதற்குத் தெற்குத் திசையில் உள்ளது. இரண்டு தலங்களும் ஒரே ஊரைப் போலத் தோன்றுகின்றன. பெரிய நாயகி அம்மை சிவக்கொழுந்தீசுவரரைத் தழுவிக்கொட்டு முத்தம் கொடுத்தருளிய தலம் இது. அந்தக் கோலத்தோடு உள்ள திருவுருவம் இந்த ஆலயத்தில் உள்ளது.

'' மட்டார் குழலிமலைமகள் பூசை மகிழ்ந்தருளும்
சிட்டா திருச்சத்தி முத்தத்துறையும்
சிவக்கொழுந்தே. ''

என்று தேவாரத்தில் வருவதைக் காண்க.

திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

'' கோவாய்முடுகி அடுதிறற் கூற்றம்குமைப்ப தன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடின்
மூவா முழுப்பழி மூடும்கண்டாய் முழங்கும் தழற்கைத்
தேவா திருச்சத்தி முத்தத்துறையும் சிவக்கொழுந்தே. ''

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடி யருளிய மற்றொரு பாசுரம் வருமாறு:

'' காய்ந்தாய் அனங்கன் உடலம்
பொடிபடக் காலனைமுன்
பாய்ந்தாய் உயிர்செகப் பாதம்
பணியார்தம் பல்பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பாய் அடியேற்
கருளாய்உன் அன்பர்சிந்தை

சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத்
துறையும் சிவக்கொழுந்தே.''

பிறகு வரும் 193-ம் கவியின் உள்ளுறை வருமாறு:

அவ்வாறு திருச்சத்தி முற்றத்திற்கு எழுந்தருளி அந்தத் திருநாவுக்கரசுநாயனார் அந்தச் சிவத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்த சிவக்கொழுந்தீசுவரரை இமய மலை யரசனுடைய புதல்வியாகிய பெரிய நாயகியினுடைய திருவுள்ளத்தில் உள்ள விருப்பம் பொருந்தும் பூசையை ஏற்றுக் கொண்டருளி எந்தக் காலத்திலும் தம்முடைய பக்தர்களுக்கு இனிமையானவன் ஆகிய அந்தச் சிவக்கொழுந் தீசுவரனை அந்த நாயனார் வணங்கி விட்டு தம்முடைய இயல்புக்கு ஏற்ற பல திருப்பணிகளை அந்த சிவக்கொழுந்தீசு வரருடைய ஆலயத்தினுடைய முற்றத்தை அடைந்து புரிந்து செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பல திருப் பதிகங்களையும் அந்தச் சிவக்கொழுந்தீசுவரருக்கு அந்த நாயனார் அணிபவரானார்.' பாடல் வருமாறு:

'' சென்று சேர்ந்து திருச்சத்திமுற்றத்
திருந்த சிவக்கொ ழுந்தைக்
குன்ற மகள்தன் மனக்காதல்
குலவும் பூசை கொண்டருளும்
என்றும் இனிய பெருமானை
இறைஞ்சி இயல்பில் திருப்பணிகள்
முன்றில் அணைந்து செய்துதமிழ்
மொழிமா லைகளும் சாத்துவார். ''

சென்று-அவ்வாறு திருச்சத்தி முற்றத்திற்கு எழுந்தருளி. சேர்ந்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அடைந்து. திருச்சத்தி முற்றத்து-திருச்சத்தி முற்றத்தில். இருந்த-திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்த. சிவக் கொழுந்தை- சிவக்கொழுந்தீசுவரரை. க்: சந்தி. குன்ற-இமயமலை அரச னுடைய; திணைமயக்கம். மகள்தன்-புதல்வியாகிய பெரிய நாயகியினுடைய. தன்: அசைநிலை. மன-திருவுள்ளத்தில்

இருந்த. க்:சந்தி. காதல்-விருப்பம். குலவும்-பொருந்தி யிருக்கும். பூசை-பூசையை. கொண்டருளும்-ஏற்றுக் கொண்டு தம்முடைய திருவருளை வழங்கும். என்றும்-என்றைக்கும். இனிய-தன்னுடைய பக்தர்களுக்கு இனிய வனான; வினையாலணையும் பெயர். பெருமானை-சிவ பெருமானாகிய அந்தச் சிவக்கொழுந்தீசுவரனை. இறைஞ்சி-அந்த நாயனார் வணங்கி விட்டு. இயல்பில்-தம்முடைய இயல்புக்கு ஏற்ற: உருபு மயக்கம். திருப்பணிகள்-உழவாரப் பணியையும் வேறு பல திருப்பணிகளையும். முன்றில்-அந்த ஆலயத்தினுடைய முற்றத்தை. முன்றில்-இல்முன்; பின் முன்னாகத் தொக்க தொகை. அணைந்து-சேர்வதை; வினையாலணையும் பெயர். செய்து-புரிந்தருளி. தமிழ் மொழி-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகளும்-மாலைகளாகிய பல திருப்பதிகங்களையும். சாத்துவார்-அந்தச் சிவக்கொழுந்தீசுவரருக்கு அந்த நாயனார் அணிப வரானார்.

பிறகு உள்ள 194-ஆம் கவியின் கருத்து வருமாறு:

"கோவாய் முடுகி." எனத் தொடங்கி, "கூற்றம் வந்து குமைப்பதன்முன், பூவா ரடிகள் என்தலை மேற் பொறித்து வைப்பாய்" என்ற வார்த்தைகளை வைத்து ஒரு திருப்பதி கத்தை அந்த நாயனார் பாடியருளி தம்முடைய திருநாவில் நிறைந்த அந்தத் திருப்பதிகத்தை அந்த நாயனார் பாடி யருளியவுடன் அவருடைய தலைவனாகிய சிவக்கொழுந்தீசு வரனும், "நீ திருநல்லூருக்கு வருவாயாக, வருவாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அந்தச் சிவக்கொழுந் தீசுவரரை வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் பணிந்து விட்டு மகிழ்ச்சியை அடைந்து.' பாடல் வருமாறு :

" 'கோவாய் முடுகி' என்றெடுத்துக்
'கூற்றம் வந்து குமைப்பதன்முன்
பூவார் அடிகள் என்தலைமேற்
பொறித்து வைப்பாய்.' எனப்புகன்று

நாவார் பதிகம் பாடுதலும்
நாதன் தானும், ' நல்லூரில்
வாவா' என்றே அருள்செய்ய
வணங்கி மகிழ்ந்து வாகீசர். ''

இந்தப் பாடல் குளகம். 'கோவாய்முடுகி' என்று- 'கோவாய் முடுகி' என. எடுத்து-தொடங்கி. க்:சந்தி. 'கூற்றம் வந்து குமைப்பதன் முன், பூவார் அடிகள் * என்தலைமேற் பொறித்து வைப்பாய்' என-'கூற்றம்வந்து குமைப்பதன்முன் பூவார் அடிகள் என் தலைமேற் பொறித்து வைப்பாய்' என்று. என: இடைக்குறை. ப்: சந்தி. புகன்று-திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. நாவார்- தம்முடைய திருநாவில் சுவை நிரம்பிய. பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. பாடுதலும்-பாடியருளியவுடன். நாதன் தானும்-அவருடைய தலைவனாகிய சிவக்கொழுந்தீசுவரனும். தான்: அசைநிலை. நல்லூரில்-நீ திருநல்லூருக்கு; உருபு மயக்கம். வா-வருவாயாக. வா-வருவாயாக. என்று-என. ஏ: அசை நிலை. அருள் செய்ய-திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார், வணங்கி-அந்தச் சிவக்கொழுந்தீசரைப் பணிந்து விட்டு. மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட திருவிருத்தம் வருமாறு:

''கோவாய் முடுகி அருதிறற்
கூற்றம் குமைப்ப தன்முன்
பூவார் அடிச்சுவ டென்மேற்
பொறித்துவை போக விடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்
டாய்முழங் கும்தழற் கைத்
தேவா திருச்சத்தி முற்றத்
துறையும் சிவக்கொ ழுந்தே. ''

இந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதித் திருவிருத்தம் வருமாறு:

"பொறித் தேர் அரக்கன் பொருப்பெடுப்
புற்றவன் பொன் முடிதோள்
இறத்தாள் ஒருவிரல் ஊன்றிட்
டலற இரங்கி ஒள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன்
செல்குற்றக் கொடுவினை நோய்
செறுத்தாய் திருச்சத்தி முற்றத்
துறையும் சிவக் கொழுந்தே."

பிறகு வரும் 195-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பல நன்மைகள் பெருகிஎழும் கலியாண சுந்தரேசுவரர் வழங்கிய திருவருளாகிய வழியாகவே திருநாவுக்கரசு நாயனார் திருநல்லூருக்கு எழுந்தருளி அடைந்து அந்தச் சிவத் தலத்தில் நிலை பெற்று வாழும் திருத்தொண்டர்கள் தம்மைத் தரையில் விழுந்து பணிந்து விட்டு பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருக்கும் சமயத்தில், "நின்னுடைய எண்ணத்தை யாம் நிறைவேற்றுகின்றோம்" என அந்த ஈசுவரர் திருவாய்மலர்ந்தருளிச் செய்து விட்டு அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய தலையின் மேல் சிவபெருமானாகிய அந்தக் கலியாணசுந்தரேசுவரன் தன்னுடைய திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை வைத்தருளினான்.' பாடல் வருமாறு:

**"நன்மை பெருகருள் நெறியே
வந்த ணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண் டனார்
வணங்கி மகிழ்ந் தெழும்பொழுதில்
'உன்னுடைய நினைப் பதனை
முடிக்கின்றோம்' என்ற வர்தம்
சென்னி மிசைப் பாதமலர்
சூட்டி னான்சிவ பெருமான்."**

நன்மை-பல வகையாகிய நன்மைகள்; ஒருமை பன்மை மயக்கம். பெருகு-பெருகி எழும். அருள்-கலியாண சுந்தரே

சுவரர் வழங்கிய திருவருளாகிய. நெறியே-வழியாகவே. நல்லூரில்-திருநாவுக்கரசு நாயனார் திருநல்லூருக்கு; உருபு மயக்கம். வந்து-எழுந்தருளி. அணைந்து-அடைந்து. மன்னு-அந்தத் திருநல்லூரில் நிலை பெற்று வாழும். திருத்தொண்டனார்-திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-தம்மைத் தரையில் விழுந்து பணிந்து விட்டு. மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. எழும்-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருக்கும். பொழுதில்-சமயத்தில். உன்னுடைய-திருநாவுக்கரசனே, நின்னுடைய. நினைப்பதனை-எண்ணத்தை. அது:பகுதிப் பொருள் விகுதி. முடிக்கின்றோம்-நிறைவேற்றித் தருகின்றோம். என்று-என திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அவர்தம்-அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. தம்:அசை நிலை. சென்னி மிசை-தலையின் மேல். சிவ்பெருமான்-சிவபெருமானாகிய அந்தக் கலியாணசுந்தரேசுவரன். பாத-தன்னுடைய திருவடிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். மலர்-செந்தாமரை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். சூட்டினான்-வைத்தருளினான்.

திருநல்லூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் பெரியாண்டேசுவரர், கலியாண சுந்தரேசுவரர் என்பவை. அம்பிகையினுடைய திருநாமங்கள் திரிபுரசுந்தரியம்மை, கலியாண சுந்தரி என்பவை. இந்தத் தலம் சுந்தரப் பெருமாள் கோயில் என்னும் ஊரிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. கலியாண சுந்தரேசுவரர் திருநாவுக்கரசு நாயனாருக்குத் தம்முடைய திருவடிகளை அவருடைய தலையின்மேல் வைத்தருளிய தலம் இது.

இதைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய பாசுரப் பகுதிகள் வருமாறு:

"வடபாற் கயிலையும் தென்பால் நல்லூரும்
தம்வாழ்பதியே"
".... நல்லூருறை நம்பனை நானொருகாற்
றுஞ்சிடைக் கண்டு கனவின்
தலைத்தொழு தேற்க வன்றான்
நெஞ்சிடை நின்றக லான்பல
காலமும் நின்றனனே.'"
"நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே."

சிவபெருமானுடைய அடியவர்களுக்கு கந்தைத் துணிகளையும், ஆடைகளிலிருந்து கிழித்த கௌபீனங்களையும் வழங்கி வந்த அமர் நீதி நாயனாரைக் கலியாண சுந்தரேசுவரர் தடுத்து ஆட்கொண்டு அந்த அமர் நீதி நாயனாருக்கும் அவருடைய பத்தினியாருக்கும் புதல்வனுக்கும் முத்தியை வழங்கியருளிய தலம் இது. இந்தச் செய்தியைத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய திருநல்லூர்த் திருவிருத்தத்தில் ஏழாவது திருவிருத்தத்தில் பின் வருமாறு பாடியருளியுள்ளார்.

"நாட்கொண்ட தாமரைப் பூந்தடம்
சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணம் காவென்று
சொல்லிக் கிறிபடத் தான்
வாட்கொண்ட நோக்கி மனைவி
யொடுமங் கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை உரைக்குமன்
றோஇவ் வகலிடமே."

கலியாண சுந்தரேசுவரருடைய சந்நிதி ஒரு மலையைப் போல உயரமான இடத்தில் உள்ளது. ஆலயத்துக்கு எதிரில் சப்தசாகரதீர்த்தம் என்னும் பெரிய தீர்த்தம் உள்ளது. கலியாண சுந்தரேசுவரர் தங்கவண்ணத்தோடு விளங்குகிறார்.

அவர் ஒரு நாளைக்கு ஐந்து வர்ணங்களை உடையவராகக் காட்சியளிக்கிறார் என்று ஆன்றோர் கூறுவர். சிவலிங்கப் பெருமானிடத்தில் சில துளைகள் காணப்படுகின்றன. அகத்திய முனிவருக்கு திருமணக் காட்சியைக் கலியாண சுந்தரேசுவரர் வழங்கியருளிய தலம் இது. இந்தத் திருக் கோயிலில் சாளக் கிராமச்சிலையினாற் செய்த முருகப் பெருமானுடைய விக்கிரகம் இருக்கிறது. அகஸ்தியர் பிரதிஷ்டை செய்த அகஸ்தியலிங்கம் இந்தக் கலியாண சுந்த ரேசுவரருக்கு அருகில் உள்ளது. இந்தத் தலத்தில் சப்த ஸ்தானத் திருவிழா நடந்து வருகிறது. இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

"பொன்வைத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்;
புலியுரியின் அதன் வைத்தார்; புனலும் வைத்தார்;
மன்வைத்த திரள்தோள்மேல் மழுவாள் வைத்தார்;
வார்காதிற் குழைவைத்தார்; மதியம் வைத்தார்;
மின்னலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார்;
வேழத்தின் உரிவைத்தார்; வெண்ணூல் வைத்தார்;
நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே."

இது திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத் தாண்டகம்.

பிறகு உள்ள 196-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' "நன்னந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்" எனத் தொடங்கி அந்தத் திருநாவுக்கரசு நாய னார் தாம் பாடியருளிக் கலியாணசுந்தரேசுவரருக்கு அணிந்த ஒரு திருத்தாண்டகத்தால் அந்த ஈசுவரருக்கு வாழ்த்துக்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்தப் பரிசுத்தராகிய கலியாண சுந்தரேசுவரர் தமக்கு வழங்கிய திருவருளை எண்ணித் தம்முடைய திருவுள்ளத்தில் பக்தியினால் உருக்கத்தை அடைந்து தரையில் விழுந்து அந்தப்

ஈசுவரரை வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு ஆனந்தம் நிரம்பித் தம்முடைய வதனம் மலர்ச்சியை அடைந்து என்றும் தன்னிடமிருந்து அகலாத செல்வங்களை மிகவும் பெற்று மகிழ்ச்சியை அடைந்த ஓர் தரித்திரனைப் போல் அந்த நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் ஆனந்தம் தழைத்திருந்தார்.' பாடல் வருமாறு:

'' 'நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்'
என்று
புனைந்ததிருத் தாண்டகத்தால் போற்றிசைத்துப்
புனிதரருள்
நினைந்துருகி விழுந்தெழுந்து நிறைந்து மலர்ந்
தொழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த வறியோன்போல் மனம்
தழைத்தார். ''

'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்' என்று- 'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்' என்று தொடங்கி. புனைந்த-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிக் கலியாணசுந்தரேசுவரருக்கு அணிந்த' திருத்தாண்டகத்தால்-ஒரு திருத்தாண்டகத்தால். போற்று-அந்த ஈசுவரருக்கு வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம்; முதனிலைத் தொழிற் பெயர். இசைத்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு. ப்:சந்தி. புனிதர்-அந்தப் பரிசுத்தராகிய கலியாணசுந்தரேசுவரர். அருள்-தமக்கு வழங்கிய திருவருளை. நினைந்து-எண்ணி. உருகி-தம்முடைய திருவுள்ளத்தில் பக்தியினால் உருக்கத்தை அடைந்து. விழுந்து-தரையில் விழுந்து அந்த ஈசுவரரை வணங்கிவிட்டு. எழுந்து-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. நிறைந்து-ஆனந்தத்தால் நிரம்பி. மலர்ந்து-தம்முடைய வதனம் மலர்ச்சியை அடைந்து. ஒழியாத-என்றும் தன்னிடமிருந்து அகலாத. தனம்-செல்வங்களை; ஒருமை பன்மை

மயக்கம். பெரிதும்-மிகவும். பெற்று-அடைந்து. உவந்த-மகிழ்ச்சியை அடைந்த. வறியோன்போல்-தரித்திரனைப் போல. மனம்-தம்முடைய திருவுள்ளத்தில். தழைத்தார்-அந்த நாயனார் ஆனந்தம் தழைத்திருந்தார். 'நனைந் தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்' என்று சொற்றொடர் வரும் திருத்தாண்டகத்தை முன்பே காட்டி யிருக்கிறோம்; ஆண்டுக் கண்டுணர்க.

அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

" அட்டுமின் இல்பலி என்றென்
 றகங்கடை தோறும் வந்து
மட்டவி ழுங்குழ லார்வளை
 கொள்ளும் வகையென் கொலோ
கொட்டிய பாணி எடுத்திட்ட
 பாதமும் கோ ளரவும்
நட்டம்நின் றாடிய நாதர்நல்
 லூரிடம் கொண் டவரே."

பிறகு வரும் 197-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருநல்லூரில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நம்பராகிய கலியாண சுந்தரேசுவரரிடத்தில் தமக்குப் பொருந்தியுள்ள உழவாரத் திருப்பணியையும், பிற பணிகளையும் அமையுமாறு ஒவ்வொரு நாளும் புரிந்துகொண்டு, பாசுரங்களாக அமைந்த செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய திருப் பதிகங்கள் பலவற்றை அந்த நாயனார் பாடியருளி அந்தக் கலியாணசுந்தரேசுவரரை வணங்கித் துதித்துவிட்டுத் தெய்வத் தன்மையைப் பெற்ற திருத்தொண்டுகளைப் புரிந்து கொண்டு வாழ்ந்து வரும் காலத்தில்.' பாடல் வருமாறு:

" நாவுக்கு மன்னர்திரு நல்லூரில் நம்பர்பால்
மேவுற்ற திருப்பணிகள் மேவுறநா ளும்செய்து

பாவுற்ற தமிழ்மாலை பலபாடிப் பணிந்தேத்தித்
தேவுற்ற திருத்தொண்டு செய்தொழுகிச் செல்லும்நாள்.''

இந்தப் பாடல் குளகம். நாவுக்கு மன்னர்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார். திருநல்லூரில்-திருநல்லூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். நம்பர்பால்-தம் முடைய அடியவர்களுக்குப் பலவகையாகிய நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய கலியாண சுந்தரேசுவரரிடத்தில். அந்த நம்பிக்கைகள் இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. மேவுற்ற-தமக்குப் பொருத்தமாக உள்ள. திருப்பணிகள்-உழவாரத் திருப்பணி யையும் பிற பணிகளையும். உழவாரத் திருப்பணியாவது திருக்கோயிற் பிரகாரங்களில் பிரதட்சிணம் செய்யும் பக்தர் களினுடைய் திருவடிகளில் உறுத்தாமல் இருக்கும் பொருட்டு வழியில் உள்ள புல்லைச் செதுக்கி எறிந்தும் மண்ணையும் கற்களையும் ஒதுக்கிவிட்டுப் பணிகளைச் செய்தல். பிறபணி களாவன பக்தர்களை இறைவனுடைய சந்நிதிக்கு அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைத்தல் முதலியவை. மேவுற-அமையுமாறு. நாளும்-ஒவ்வொரு நாளும். செய்து-அந்த நாயனார் புரிந்து கொண்டு. பா-பாசுரங்களாக; ஒருமை பன்மை மயக்கம். உற்ற-அமையப் பெற்ற. தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலை-மாலைகளாகிய திருப்பதிகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பலவற்றை. பாடி-பாடியருளி. ப்:சந்தி. பணிந்து-அந்தக் கலியாண சுந்தரேசுவரரை வணங்கி. ஏத்தி-துதித்துவிட்டு. த்:சந்தி. தேவுற்ற-தெய்வத் தன்மையைப் பெற்ற. திருத்தொண்டு-பல திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்துகொண்டு. ஒழுகி-வாழ்ந்து. ச்:சந்தி. செல்லும்-வாழ்ந்து வரும்; தம்முடைய வாழ்க்கையை நடத்தும். நாள்-காலத்தில்.

திருநாவுக்கரசு நாயனார் திருநல்லூரைப் பற்றிப் பாடி யருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

"செஞ்சுடர்ச் சோதிப் பவளத் திரள்திகழ் முத்தனைய
நஞ்சணிகண் டன்நல் லூருறை நம்பனை நானொருகால்
துஞ்சிடைக் கண்டுகனவின் தலைத்தொழு தேற்க வன்றான்
நெஞ்சிடை நின்றக லான்பல காலமும் நின்றனனே."

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"சென்றுருளும் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்;
திசைபத்தும் இருநிலத்தில் திருந்த வைத்தார்;
நின்றருளி அடிஅமரர் வணங்க வைத்தார்;
நிறைதவமும் மறைபொருளும் நிலவ வைத்தார்;
கொன்றருளிக் கொடுங்கூற்றம் நடுங்கி ஓடக்
குரைகழற்சே வடிவைத்தார்; விடையும் வைத்தார்;
நன்றருளும் திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே."

பிறகு உள்ள 198-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'திருக்கருகாவூர் முதலாக உள்ள நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவனாகிய பசுபதீசுவரன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாலூருக்கும், திருப் பாலைத் துறைக்கும், மற்ற சிவத்தலங்களுக்கும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி முல்லைவனேசுவர ரையும், பசுபதீசுவரரையும், பாலைவன நாதேசுவரரையும் வணங்கிவிட்டுத் தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த பேராவலால் அந்தச் சிவத்தலங்களில் திருத்தொண்டுகளை அந்த நாயனார் புரிந்துவிட்டு பெருமையைப் பெற்ற திருநல் லூருக்கு எழுந்தருளி ஒரு சமயமும் அந்தத் திருநல்லூரை விட்டுப் பிரியாமல் தம்முடைய திருவுள்ளத்தில் உருக்கத்தை அடைந்து அந்தச் சிவபெருமானைக் வணங்குகிறவரானார்.' பாடல் வருமாறு:

"கருகாவூர் முதலாகக்
கண்ணுதலோன் அமர்ந்தருளும்
திருவாவூர் திருப்பாலைத்
துறைபிறவும் சென்றிறைஞ்சிப்
பெருகார்வத் திருத்தொண்டு
செய்துபெரும் திருநல்லூர்
ஒருகாலும் பிரியாதே
உள்ளுருகிப் பணிகின்றார்."

கருகாவூர்-திருக்கருகாவூர். முதலாக-முதலாக உள்ள. க்:சந்தி. கண்ணுதலோன்-நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவனாகிய பசுபதீசுவரன். அமர்ந்தருளும்-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருவாவூர்-திருவாவூருக்கும். திருப்பாலைத்துறை-திருப்பாலைத்துறைக்கும். பிறவும்-வேறு சிவத்தலங்களுக்கும். சென்று-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி. இறைஞ்சி-முல்லைவனேசுவரரையும், பசுபதீசுவரரையும், பாலைவனநாதேசுவரரையும், வேறு பல சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களையும் வணங்கி விட்டு. ப்:சந்தி. பெருகு-தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த. ஆர்வ-பேராவலினால். த்:சந்தி. திருத்தொண்டு-அந்தச் சிவத்தலங்களில் உழவாரத் தொண்டினையும் வேறு பல திருத் தொண்டுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்து விட்டு. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். திருநல்லூர்-திருநல்லூருக்கு அந்த நாயனார் எழுந்தருளி. ஒருகாலும்-ஒரு சமயத்திலும். பிரியாது-அந்தத் திருநல்லூரை விட்டுப் பிரியாமல். ஏ:அசை நிலை. உள்-தம்முடைய திருவுள்ளத்தில். உருகி-பக்தியினால். உருக்கத்தை அடைந்து. ப்:சந்தி. பணிகின்றார்-அந்தச் சிவபெருமான்களை வணங்குகிறவரானார்.

திருக்கருகாவூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் முல்லைவனேசுவரர்.

அம்பிகை கரும்பனையாளம்மை. கர்ப்பரட்சகியம்மை என்ற திருநாமமும் உண்டு. தல விருட்சம் முல்லைக்கொடி. இது திருக்களாவூர் என வழங்கும். இது ஐயம்பேட்டை என்னும் ஊரிலிருந்து தென்கிழக்குத் திசையில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இது வெட்டாற்றின் தென்கரையில் உள்ளது. விநாயகப் பெருமானுடைய திருநாமம் கற்பக விநாயகர் என்பது. முருகக் கடவுளின் திருவுருவம் ஆறு முகங்களோடு விளங்குகிறது. கரும்பனையாளம்மை ஆதரவற்ற ஒரு பெண்மணிக்கு மருத்துவம் பார்த்து அவள் கருப்பத்தைக் காத்தபடியால் இந்தத் தலத்திற்குத் திருக் கருகாவூர் என்னும் பெயரும், அம்பிகைக்கு கர்ப்பரட்சகி என்னும் திருநாமமும் உண்டாயின. அம்பிகையின் சந்நிதி தனியாக உள்ளது. சிவலிங்கப் பெருமானார் மணலால் ஆனவர். சந்திரன் வழிபட்ட தலம் இது. இதைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

"குருகாம்; வயிரமாம்; கூறும் நாளாம்;
 கொள்ளும் கிழமையாம்; கோளே தானாம்;
பருகா அமிர்தமாம்; பாலில் நெய்யாம்;
 பழத்தின் இரதமாம்; பாட்டிற் பண்ணாம்;
ஒருகால் உமையாளோர் பாக னும்ஆம்;
 உள்நின்ற நாவுக் குரையா டியாம்;
கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்
 கண்ணாம் கருகாவூர் எந்தை தானே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கௌசிகப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"முத்தி லங்குமுறு வல்உமை அஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கி அக்
கத்தை போர்த்த கடவுள் கருகாவூர்எம்
அத்தர் வண்ணம் சுழலும்கழல் வண்ணமே."

திரு ஆலூர் : இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பசுபதீசுவரர். அம்பிகை மங்கள நாயகி. தீர்த்தம் பிரம தீர்த்தம். இது பட்டீச்சுரத்திற்குத் தென் மேற்குத் திசையில் நாலரை மைல் தூரத்தில் உள்ளது. இந்தத் தலத்தில் விளங்கும் திருக்கோயிலுக்குப் பசுபதீச்சுரம் என்று பெயர். இது பசுமாடுகள் வழிபட்ட தலம். இந்தத் தலத்தைப் பற்றி நட்டபாடைப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"புண்ணியர் பூதியர் பூத நாதர்
புடைபடு வார்தம் மனத்தார் திங்கட்
கண்ணியர் என்றென்று காத லாளர்
கைதொழு தேத்த இருந்த ஊராம்
விண்ணுயர் மாளிகை மாட வீதி
விரைகமழ் சோலை சுலாவி எங்கும்
பண்ணியல் பாடல் அறாத ஆவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு நாவே."

திரு ஆவுரைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய திருப்பதிகம் இப்போது கிடைக்கவில்லை. மறைந்த திருப்பதிகங்களில் அதுவும் ஒன்றாக இருக்கும் போலும்!

திருப்பாலைத் துறை: இது சோழ நாட்டில் காவிரியாற்றின் தென்கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பாலைவன நாதேசுவரர். அம்பிகை தவள வெண்ணகை அம்மை. இது பாபநாசத்துக்கு வடகிழக்குத் திசையில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. பாலைவன நாதேசுவரர் தாருகாவனத்து முனிவர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு அனுப்பிய புலியினுடைய தோலை உரித்து அதனைப் போர்வையாகப் போர்த்துக் கொண்டருளிய தலம் இது. அம்பிகையின் சந்நிதி தனியாகத் தென்பக்கம் உள்ளது. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந் தொகை வருமாறு:

"கவள மாகளிற் றின்உரி போர்த்தவர்
தவள வெண்ணகை மங்கையோர் பங்கினர்
திவள வானவர் போற்றித் திசைதொழும்
பவள மேனியர் பாலைத் துறையரே."

திருநல்லூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் பெரியாண்டேசுவரர், கலியாண சுந்தரேசுவரர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் திரிபுர சுந்தரி அம்மை, கலியாண சுந்தரி என்பவை. இது சுந்தரப் பெருமாள் கோயில் என்ற ஊருக்குத் தெற்குத் திசையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. கலியாண சுந்தரேசுவரர் திருநாவுக்கரசு நாயனாருக்குத் தம்முடைய திருவடிகளைச் சூட்டியருளிய தலம் இது. இந்தச் செய்தியை அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருத்தாண்டகத்தால் அறியலாம். அந்தத் திருத் தாண்டகம் வருமாறு:

"உற்றுலவு பிணியுலகத் தெழுமை வைத்தார்;
உயிர்வைத்தார்; உயிர்செல்லும் கதிகள் வைத்தார்;
மற்றமரர் கணம்வைத்தார்; அமரர் காணா
மறைவைத்தார்; குறைமதியம் வளர வைத்தார்;
செற்றம்மலி ஆர்வமொடு காம லோபம்
சிறவாத நெறிவைத்தார்; துறவி வைத்தார்;
நற்றவர்சேர் திருவடிஎன் தலைமேல் வைத்தார்,
நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே."

இந்தத் தலத்தைப் பற்றி அந்த நாயனார் பாடியருளிய ஒரு திருவிருத்தம் வருமாறு:

"படவேர் அரவல்குற் பாவைநல்
லீர்பக லேஒருவர்
இடுவா ரிடைப்பலி கொள்பவர்
போலவந் தில்புகுந்து

நடவார் அடிகள் நடம்பயின்
றாடியகூத் தர்கொலோ
வடபாற் கயிலையும் தென்பால்நல்
லூரும்தம் வாழ்பதியே.''

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு திரு விருத்தம் வருமாறு:

'' செஞ்சுடர்ச் சோதிப் பவளத்
திரள்திகழ் முத்தனைய
நஞ்சணி கண்டன் நல்லூருறை
நம்பனை நான்ஒருநாள்
துஞ்சிடைக் கண்டு கனவின்
தலைத்தொழு தேற்சவன்றான்
நெஞ்சிடை நின்ற கலான்பல
காலமும் நின்றனனே.''

சிவபெருமானுடைய அடியவர்களுக்குக் கந்தைத் துணிகளையும், ஆடையிலிருந்து கிழித்த கௌபீனங்களையும் கொடுத்து வந்த அமர்நீதி நாயனாரை கலியாண சுந்தரேசுவரர் ஆட்கொண்டருளி அந்த நாயனாருக்கும் அவருடைய பத்தினியாருக்கும் புதல்வனுக்கும் முத்தி வழங்கியருளிய தலம் இது. திருநாவுக்கரசு நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய திருவிருத்தங்களில் ஏழாவதாக உள்ள ஒரு திருவிருத்தம் வருமாறு:

'' நாட்கொண்ட தாமரைப் பூந்தடம்
சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணம் காவென்று
சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவி
யொடுமங் கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை உரைக்குமன்
றோஇவ் வகலிடமே.''

கலியாண சுந்தரேசுவரருடைய சந்நிதி மலையைப் போல உயர்ந்த ஓரிடத்தில் உள்ளது. திருக்கோயிலுக்கு எதிரில் சப்த சாகர தீர்த்தம் என்னும் தீர்த்தம் உள்ளது. கலியாண சுந்தரேசுவரர் பொன்வண்ணத் திருமேனியை உடையவராக விளங்குகிறார். இவர் ஒவ்வொரு நாளும் ஐந்து நிறம் உள்ளவராகக் காட்சி அளித்தருளுகிறார் என்று ஆன்றோர் கூறுவர். சிவலிங்கப் பெருமானிடத்தில் சில துளைகள் காணப்படுகின்றன. அகத்திய முனிவருக்குத் திருமணக் காட்சி வழங்கியருளிய தலம் இது. அந்த முனிவர் பிரதிஷ்டை செய்தருளிய அகத்தியலிங்கம் கலியாண சுந்தரேசுவரருக்கு அருகில் உள்ளது. இந்தத் திருக்கோயிலில் சாளக் கிராமத்தினால் செய்த முருகப் பெருமானுடைய திருவுருவம் இருக்கிறது. இந்தத் தலத்தில் சப்தஸ்தானத் திருவிழா நடை பெற்று வருகிறது. அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய மற்றொரு திருத்தொண்டகம் வருமாறு:

"பொன்னலத்த நறுங்கொன்றை சடைமேல்வைத்தார்;
புலியுரியின் அதன்வைத்தார்; புனலும் வைத்தார்;
மன்னலத்த திரள்தோள்மேல் மழுவாள் வைத்தார்;
வார்காதிற் குழைவைத்தார்; மதியம் வைத்தார்;
மின்னலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார்;
வேழத்தின் உரிவைத்தார்; வெண்ணூல் வைத்தார்;
நன்னலத்த திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் குறிஞ்சி பண்ணிலும், காந்தாரப் பண்ணிலும், சாதாரிப் பண்ணிலும் திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் குறிஞ்சிப் பணில் அமைந்த பாசுரம் ஒன்று வருமாறு:

"கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் நல்லூர்ப் பெருமானை

முட்டின் றிருபோதும் முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே.''

அந்த நாயனார் காந்தாரப் பண்ணில் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"பெண்ணமரும் திருமேனி உடையீர்
பிறங்கு சடைதாழப்
பண்ணமரும் நான்மறையே பாடி
ஆடல் பயில்கின்றீர்
திண்ணமரும் பைம்பொழிலும் வயலும்
சூழ்ந்த திருநல்லூர்
மண்ணமரும் கோயிலே கோயில்
ஆக மகிழ்ந்தீரே."

அவர் சாதாரிப் பண்ணிப் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"வண்டிரிய விண்டமலர் மல்குசடை
தாழவி டைஏறிப்.
பண்டெரிகை கொண்டபர மன்பதிய
தென்பர்அதன் அயலே
தண்டிரிய நாரைஇரை தேரவரை
மேலருவி முத்தம்
தெண்டிரைகள் மோதவிரி போதுகம
ழும்திருந லூரே."

திருநாவுக்கரசு நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய மற்றொரு திருவிருத்தம் ஒன்று வருமாறு:

"மன்னிய மாமறை யோர்மகிழ்ந்
தேத்த மருவிளங்கும்
துன்னிய தொண்டர்கள் இன்னிசை
பாடித் தொழுதுநல்லூர்க்
கன்னியர் தாமும் கனவிடை
உன்னிய காதலரை

அன்னியர் அற்றலர் அங்கண
னேஅருள் நல்கென்பரே.''

அந்த நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருத் தாண்டகம் வருமாறு:

"குலம்கிளரும் வருதிரைகள் ஏழும் வைத்தார்;
குருமணிசேர் மலைவைத்தார்; மலையைக் கையால்
உலம்கிளர எடுத்தவன்தோள் முடியும் நோவ
ஒருவிரலால் உறவைத்தார்; இறைவா என்று
புலம்புதலும் அருளொடுபோர் வாளும் வைத்தார்;
புகழ்வைத்தார்; புரிந்தாளாக் கொள்ள வைத்தார்;
நலம்கிளரும் திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே.''

பிறகு உள்ள 199-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம்மை அடிமையாக உடைய தலைவனாகிய கலியாணசுந்தரேசுவரன் வழங்கிய திருவருளைப் பெற்றுக் கொண்டு அந்தத் திருநல்லூரை விட்டு விட்டு நீங்கி எழுந்தருளி வாளை மீன்கள் துள்ளிப் பாயும் நீர் பாயும் வயல்களைப் பெற்ற திருப்பழனத்தின் பக்கத்தை அந்த நாயனார் அடைந்து திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில் எழுந்த நீலநிறத்தைப் பெற்ற ஆலகாலவிடத்தை விழுங்கி இருட்டைப் போலக் கருமை நிறத்தை அடைந்த திருக்கழுத்தைப் பெற்றவரும், பாம்புகளாகிய அணிகலன்களைப் புனைந்து கொண்டு நீண்ட இரவு நேரத்தில் திருநடனம் புரிந்தருள்பவராகிய ஆபத்சகாயேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளைப் பணியும் பாக்கியத்தை நேரில் அந்த நாயனார் அடைந்தார்.'

பாடல் வருமாறு:

"ஆளுடைய நாயகன்றன்
அருள்பெற்றங் ககன்றுபோய்
வாளைபாய் புனற்பழனத்
திருப்பழன மருங்கணைந்து

காளவிடம் உண்டிருண்ட
கண்டர்பணிக் கலன்பூண்டு
நீளிரவில் ஆடுவார்
கழல்வணங்க நேர்பெற்றார்.''

ஆளுடைய-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம்மை அடிமையாக உடைய. நாயகன்றன்-தலைவனாகிய கலியாண சுந்தரேசுவரன். தன்:அசைநிலை. அருள்-வழங்கிய திருவருளை. பெற்று-பெற்றுக்கொண்டு. அங்கு-அந்தத் திருநல்லூரை. அகன்று-விட்டு விட்டு நீங்கி. போய்-மேலே எழுந்தருளி. வாளை-வாளை மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். பாய்-தாவிக் குதிக்கும். புனல்-நீர் பாயும். பழன-வயல்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருப்பழன-திருப்பழனத்தினுடைய. மருங்கு-பக்கத்தை. அணைந்து-அந்த நாயனார் அடைந்து. காளவிடம்-திருமால் பள்ளிகொண்டருளிய பாற்கடலில் எழுந்த நீலநிறத்தைப் பெற்ற ஆலகால விடத்தை. உண்டு-விழுங்கி. இருண்ட-இருட்டைப் போலக் கருமை நிறத்தை அடைந்த. கண்டர்-திருக்கழுத்தைப் பெற்றவரும். பணி-பாம்புகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கலன்-அணிகலன்களை; ஒருமை பன்மை மயக்கம். பூண்டு-புனைந்து கொண்டு. நீள்-நீண்ட. இரவில்-நள்ளிரவு நேரத்தில். ஆடுவார்-திருநடனம் புரிந்தருள்பவராகிய ஆபத்சகாயேசுவரருடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டிருக்கும் திருவடிகளை; ஆகுபெயர். வணங்க-பணியும் பாக்கியத்தை; வினையாலணையும் பெயர். நேர்-தமக்கு நேரில். பெற்றார்-அந்த நாயனார் அடைந்தார்.

திருப்பழனம்:இது சோழநாட்டில் காவிரியாற்றினுடைய கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் ஆபத்சகாயேசுவரர். அம்பிகை பெரியநாயகிஅம்மை. இது திருவையாற்றுக்குக் கிழக்குத் திசையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. இது சப்தஸ்தானத் தலங்களில் இரண்டாவது தலம்.

' வஞ்சித்தென் வளைகவர்ந்தான்
வாரானே ஆயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம்
பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிநலிய
கழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற
சேவடியாய் கோடியையே.''

என்று அப்பூதியடிகள் நாயனாருடைய அடிமைத்திறத்தைத் திருநாவுக்கரசு நாயனார் பாராட்டிப் பாடியருளியிருக்கிறார். இந்தத் திருக்கோயிலில் வேணுகோபாலப் பெருமாள் என்னும் திருமாலினுடைய சந்நிதி உள்ளது. இந்தச் சிவத்தலத்தில் வாழை மரங்கள் சிறப்பாக வளர்ந்து நிற்கும். ஆதலால் இந்தத் தலத்திற்குக் கதலிவனம் என்ற பெயர் அமைந்தது. இதற்கு அருகில் உள்ள திங்களூரில் அப்பூதியடிகள் நாயனாருடைய புதல்வன் பாம்பின் நஞ்சினால் இறந்து போக திருநாவுக்கரசு நாயனார்,

" ஒன்றுகொ லாமவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே.''

என்று இந்தளப்பண்ணில அமைந்த பாசுரம் முதல் ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டு முதல் பத்து வரையில் எண்கள் அமையுமாறு பாடியருளி இறந்து போன அந்தச் சிறுவனை மீண்டும் உயிர்பெற்று எழுமாறு செய்தருளினார். அந்தத் திருப்பதிகத்தில் வரும் இறுதிப் பாசுரம் வருமாறு:

'' பத்துக் கொலாம்அவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக் கொலாமெயி றும்தெரிந் துக்கன
பத்துக் கொலாம்அவர் காயப்பட் டான்தலை
பத்துக் கொலாம்அடி யார்செ யகைதானே.''

திங்களூர் சந்திரன் வழிபட்ட தலம். சந்திரனுடைய கிரணங்கள் பங்குனி மாதத்திலும் புரட்டாசி மாதத்திலும் பௌர்ணமியிலும் அதற்கு முன்னும் பின்னும் உள்ள இரண்டு தினங்களிலும் சிவபெருமான்மேற் படுகின்றதாக ஆன்றோர் கூறுவர். இந்தத் தலத்தைப் பற்றித் தக்கேசிப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"வேதம் ஓதி வெண்ணூல்பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோபார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா எனநின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழனநகராரே."

இந்தத் தலத்தைப் பற்றிப் பழந்தக்கராகப் பண்ணில் ஒரு திருப்பதிகத்தையும், திருநேரிசை, திருவிருத்தம், திருக் குறுந் தொகை, திருத்தாண்டகம் என்பவை அடங்கிய திருப்பதிகங் களையும் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் பழந் தக்கராகப் பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

"சொன்மாலை பயில்கின்ற
குயிலினங்காள் சொல்லீரே
பண்மாலை வரிவண்டு
பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்
முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என்
புதுநலமுண் டிகழ்வானோ."

அவர் பாடியருளிய திருநேரிசை ஒன்று வருமாறு:

"ஆடினார் ஒருவர் போலும்
அலர்கமழ் குழலி னாளைக்
கூடினார் ஒருவர் போலும்
குளிர்புனல் வளைந்த திங்கள்

சூடினார் ஒருவர் போலும்
தூயநன் மறைகள் நான்கும்
பாடினார் ஒருவர் போலும்
பழனத்தெம் பரம னாரே.''

அவர் பாடியருளிய திருவிருத்தம் ஒன்று வருமாறு:

''மேவித்து நின்று விளைந்தன
வெந்துயர் துக்கமெல்லாம்
ஆவித்து நின்று கழிந்தனஅல்லல்
அவை யறுப்பான்
பாவித்த பாவனை நீஅறி
வாய்பழ னத்தரசே
கூவித்துக் கொள்ளுந் தனைஅடி
யேனைக் குறிக்கொள்வதே.''

அவர் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

''அருவ னாய்அத்தி யீருரி போர்த்துமை
உருவ னாய்ஒற்றி யூர்பதி ஆகிலும்
பருவ ரால்வயல் சூழ்ந்த பழனத்தான்
திருவி னால்திரு வேண்டுமித் தேவர்க்கே.''

அவர் பாடியருளிய ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

''அலையார் கடல்நஞ்சம் உண்டார் தாமே
அமரர்களுக் கருள்செய்யும் ஆதி தாமே
கொலையாய கூற்றம் உதைத்தார் தாமே
கொல்வேங்கைத் தோலொன் றசைத்தார் தாமே
சிலையால் புரம்மூன் றெரித்தார் தாமே
தீநோய் களைந்தென்னை ஆண்டார் தாமே
பலிதேர்ந் தழகாய பண்பர் தாமே
பழன நகர்எம் பிரானார் தாமே.''

இந்தத் தலத்தைப்பற்றித் தக்கேசிப்பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"கண்மேற் கண்ணும் சடைமேற் பிறையும்
உடையார் காலனைப்
புண்ணா றுதிரம் எதிரா றோடப்
பொன்றப் புறந்தாளால்
எண்ணா துதைத்த எந்தை பெருமான்
இமவான் மகளோடும்
பண்ணார் களிவண் டறைபூஞ் சோலைப்
பழன நகராரே."

அடுத்து வரும் 200-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தச் சிவத்தலமாகிய திருப்பழனத்தைச் சுற்றி உள்ள பல சிவத்தலங்களில் ஹரனாராகிய சிவபெருமானார் மகிழ்ந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தங்களுக்குச் சமானம் கூறுவதற்கு அரியவையாக உள்ள சிவத் தலங்களுக்கு எழுந்தருளித் தம்முடைய திருவுள்ளத்தில் பக்தியினால் உருக்கத்தை அடைந்து அந்தத் தலங்களில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கி விட்டு மேலே எழுந்தருள்பவராகி உண்மையான பரம்பொருளைத் தெரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்ற அந்தத் திருநாவுக்கரசர் கூறுவதற்கு அருமையாக இருக்கும் சீர்த்தியைப் பெற்ற அப்பூதி அடிகள் நாயனார் தம்முடைய வாழ்க்கையை நடத்தும் திங்களூரை அடைந்தார்.' பாடல் வருமாறு:

"அப்பதியைச் சூழ்ந்ததிருப்
பதியில்அர னார்மகிழும்
ஒப்பரிய தானங்கள்
உள்ளுருகிப் பணிந்தணைவார்
மெய்ப்பொருள்தேர் நாவினுக்கு
வேந்தர்தாம் மேவினார்
செப்பரும்சீர் அப்பூதி
அடிகளார் திங்களூர்."

அப்பதியை-அந்தச் சிவத்தலமாகிய திருப்பழனத்தை. ச்:சந்தி. சூழ்ந்த-சுற்றியுள்ள. திருப்பதியில்-அழகிய பல சிவத்தலங்களில்; ஒருமை பன்மை மயக்கம். அரனார்-ஹரனாராகிய சிவபெருமானார். அரன்-சங்காரம் செய்தருள்பவன். மகிழும்-மகிழ்ச்சியை அடைந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். ஒப்பு-தங்களுக்குச் சமானமாக. அரிய-வேறு எதையும்கூறுவதற்கு அருமையாக உள்ள. தானங்கள்-சிலத்தலங்களுக்கு எழுந்தருளி. உள்-தம்முடைய திருவுள்ளத்தில். உருகி-பக்தியினால் உருக்கத்தை அடைந்து. ப்:சந்தி. பணிந்து-அந்தச் சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களை வணங்கி விட்டு. அணைவார்-மேலே எழுந்தருளுபவராகி; முற்றெச்சம். மெய்-உண்மையாகிய. ப்:சந்தி. பொருள்-பரம் பொருளாகிய சிவபெருமானை. தேர்-அறிந்து தேர்ச்சி பெற்ற. நாவினுக்கு வேந்தர்-திருநாவுக்கரசு நாயனார். தாம்: அசை நிலை. செப்பரும்-கூறுவதற்கு அருமையாக இருக்கும். சீர்-சீர்த்தியைப் பெற்ற. அப்பூதி அடிகளார்-அப்பூதி அடிகள் நாயனார். திங்களூர்-தம்முடைய வாழ்க்கையை நடத்தும் திங்களூரை. மேவினார்-அந்த நாயனார் அடைந்தார்.

பிறகு வரும் 201-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'வேதியர்களுக்குள் மேம்பாட்டை அடைந்த அப்பூதி அடிகள் நாயனார் தம்முடைய புதல்வரோடு, நடக்கும் சாலை, கிணறு, குளம், வருகிறவர்களுக்குத் தாகம் தீர்த்துக் கொள்ளுமாறு நீரை வழங்கும் தண்ணீர்ப் பந்தல் ஆகியவற்றுக்குத் திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் என்னும் திருநாமத்தோடு அமைத்த பான்மையை அந்தத் திங்களூருக்கு எழுந்தருளி அடைந்த வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் கேட்டுவிட்டு அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய திருமாளிகைக்கு எழுந்தருள.' பாடல் வருமாறு:

" அந்தணரின் மேம்பட்ட
அப்பூதி அடிகளார்
தந்தனய ருடன்சாலை
கூவல்குளம் தருதண்ணீர்ப்
பந்தர்பல ஆண்டஅர
செனும்பெயரால் பண்ணினமை
வந்தணைந்த வாகீசர்
கேட்டவர்தம் மனைநண்ண. "

இந்தப் பாடல் குளகம். அந்தணரின்-வேதியர்களுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். மேம்பட்ட-மேம்பாட்டை அடைந்த. அப்பூதி அடிகளார்-அப்பூதி அடிகள் நாயனார். தம்-தம்முடைய. தனயருடன்-புதல்வரோடு. சாலை-வழிப் போவார் நடக்கும் சாலை. கூவல்-கிணறு. குளம்தரு-குளம் தாகம் அடைந்தவர்கள் தங்களுடைய தாகத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டுக் குளிர்ச்சியைப் பெற்ற நீரை வழங்கும். தண்ணீர்ப் பந்தல் பல-தண்ணீர்ப் பந்தல் முதலிய பல அமைப்புகளுக்கும். ஆண்ட அரசு-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார். அரசு: திணை மயக்கம். எனும்-என்னும்; இடைக் குறை. பெயரால்-திருநாமத்தோடு; உருபு மயக்கம். பண்ணினமை-அமைத்த பான்மையை. வந்து-திங்களூருக்கு எழுந்தருளி. அணைந்த-அடைந்த. வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். கேட்டு-அந்தத் திங்களூரில் வாழும் மக்கள் கூறக் கேள்விப்பட்டு. அவர்தம்-அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய. தம்: அசைநிலை. மனை-திரு மாளிகைக்கு, நண்ண-எழுந்தருள.

பிறகு உள்ள 202-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

' அந்த அப்பூதி அடிகள் நாயனாரும் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து தம்முடைய பத்தினியாரும், புதல்வரும், ஆகியவர்களோடும் பெருகியிருக்கும் உறவினர்களோடும் ஆனந்தம் மிகுதியாக அந்தத் திருநாவுக்

கரசு நாயனாரைத் தரையில் விழுந்து வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு வலமாக வந்து அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை திருவமுது செய்தருளும் வண்ணம் வேண்டிக் கொள்வாராகி சிவபெருமானாரால் ஆட்கொள்ளப் பெற்ற பெருமையைப் பெற்று விளங்கும் தவத்தைப் புரிந்த திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய திருவுள்ளச் சம்மதத்தை அடையும் பாக்கியத்தை அந்த அப்பூதியடிகள் நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

"மற்றவரும் மனம்மகிழ்ந்து
மனைவியார் மைந்தர்பெரும்
சுற்றமுடன் களிகூரத்
தொழுதெழுந்து சூழ்ந்துமொழிக்
கொற்றவரை அமுதுசெயக்
குறைகொள்வார் இறைகொள்ளப்
பெற்றபெரும் தவத்தொண்டர்
திருவுள்ளம் பெறப்பெற்றார்."

மற்று: அசை நிலை. அவரும்-அந்த அப்பூதியடிகள் நாயனாரும். மனம்-தம்முடைய திருவுள்ளத்தில். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. மனைவியார்-தம்முடைய பத்தினியாரும். மைந்தர்-புதல்வரும் ஆகியவர்களோடும். பெரும்-பெருகியிருக்கும். சுற்றமுடன்-உறவினர்களோடும்; திணை மயக்கம். களி-ஆனந்தம். கூர-மிகுதியாக உண்டாக. த்:சந்தி. தொழுது-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டு. எழுந்து-பிறகு தரையிலிருந்து யாவரும் எழுந்து நின்று கொண்டு. சூழ்ந்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை வலமாக வந்து பிரதட்சிணம் செய்து. மொழிக் கொற்றவரை-திருநாவுக்கரசு நாயனாரை. அமுதுசெய-திருவமுது செய்தருளுமாறு; செய: இடைக்குறை. க்:சந்தி. குறை கொள்வார்-வேண்டிக் கொள்ளுபவர்கள் ஆகி; முற்றெச்சம். இறை கொள்ள-திருவதிகை வீரட்டா

னேசுவரராகிய இறைவர் ஆட்கொள்ள. ப்:சந்தி. பெற்ற-பெறும் பாக்கியத்தை அடைந்த. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். தவ-தவத்தைப் புரிந்த. த்:சந்தி. தொண்டர்-திருத் தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய. திருவுள்ளம்-திருவுள்ளச் சம்மதத்தை; ஆகு பெயர். பெறப் பெற்றார்-அடையும் பாக்கியத்தை அந்த அப்பூதியடிகள் நாயனார் அடைந்தார்.

பிறகு வரும் 203-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த அப்பூதியடிகள் நாயனார் முன்னால் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்க்கும் பான்மை இல்லா விட்டாலும் அவரைப் பார்ப்பதற்கு முன்பே தம்முடைய திருவுள்ளத்தில் சேர்ந்திருந்த பெருகி எழும் பக்தியை உடையவராகிய அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் கொண்டிருந்த பெருகி எழும் விருப்பத்தோடு பாற் சோற்றையும் கறியமுதுகளையும் அந்த நாயனார் திருவமுது செய்வதற்கு வேண்டிய பொருள்களை வேறு வேறாகப் பல வகைகளை அந்த நாயனார் பெறுமாறு விருப்பத்தோடு திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்யும் பொருட்டு அழகிய அமுதத்தைப் போல ஆகுமாறு எல்லாவற்றையும் அமைத்து விட்டு.' பாடல் வருமாறு:

**"காண்டகைமை இன்றியும்முன்
கலந்தபெரும் கேண்மையினார்
பூண்டபெருங் காதலுடன்
போனகமும் கறியமுதும்
வேண்டுவன வெவ்வேறு
விதங்கள்பெற விருப்பினால்
ஆண்டஅர சமுதுசெயத்
திருவமுதாம் படிஅமைத்து."**

இந்தப் பாடல் குளகம். காண்-அந்த அப்பூதியடிகள் நாயனார் முன்னால் திருநாவுக்கரசு நாயனாரைப் பார்க்கும். தகைமை-பான்மை. இன்றியும்-இல்லா விட்டாலும். முன்-அவரைப் பார்ப்பதற்கு முன்பே. கலந்த-தம்முடைய திருவுள்ளத்திற் சேர்ந்திருந்த. பெரும்-பெருகி எழும். கேண்மையினார்பூண்ட- அப்பூதியடிகள் நாயனார் தன்னுடைய திருவுள்ளத்தில் பக்தியை உடையவராக. பெரும்-பெருகி எழும். காதலுடன்-விருப்பத்தோடு. போனகமும்-பாற் சோற்றையும். கறியமுதும்-பல வகையான கறியமுது களையும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: வேகவைத்த பூசணிக்காய், பறங்கிக் காய், வெள்ளரிக் காய், கருணைக் கிழங்கு, சேப்பங் கிழங்கு, வெண்டைக் காய், வாழைக்காய், கொத்தவரங் காய், கத்தரிக்காய், முள்ளுக் கத்தரிக்காய், புடலங்காய், அவரைக்காய், வாளவரங்காய், முருங்கைக்காய் முதலியவை. வேண்டுவன-அந்த நாயனார் திருவமுது செய்வதற்கு வேண்டிய பொருள்களை; அவை யாவன: ஆசனப்பலகை, நுனி வாழை இலை, தண்ணீர்ப் பாத்திரம், கை துடைத்துக் கொள்ளும் துணி, வாயலம்ப நீர், கால் அலம்ப நீர் முதலியவை. வெவ்வேறு-வேறு வேறாகிய. விதங்கள்-வகைகளை. பெற-அந்த நாயனார் பெறுமாறு. விருப்பினால்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். ஆண்ட அரசு-திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார். அரசு: திணை மயக்கம். அமுது செய-திருவமுது செய்யும் பொருட்டு. செய: இடைக் குறை. த்: சந்தி. திரு-அழகிய. அமுதுஆம்படி-அமுதத்தைப் போல ஆகுமாறு. அமைத்து-எல்லாவற்றையும் அந்த அப்பூதியடிகள் நாயனார் சித்தம் செய்து விட்டு.

பிறகு வரும் 204-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளும் பொருட்டு அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய பெருமையைப் பெற்ற திருநாமமாகிய திருநாவுக்கரசு என்பதை

வைத்த அந்தத் தம்முடைய முதல் மைந்தனை அழைத்து வந்து பக்தி வழங்கும் மெய்யறிவைப் பெற்ற அழகிய வேதியராகிய அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய திரு மாளிகைக்குப் பின்புறத்தில் உள்ள தோட்டத்தில் வளப்பத்தோடு வளர்ந்து நின்ற ஒரு வாழை மரத்தில் உள்ள பச்சை நிறத்தைப் பெற்ற நரம்பைக் கொண்ட குருத்திலையை அறுத்துக் கொண்டு வருமாறு அவனைத் தனியாக அனுப்பி னார்.' பாடல் வருமாறு:

'' திருநாவுக்கர சமுது செய்தருள மற்றவர்தம்
பெருநாமம் சாத்திய அப்பிள்ளைதனை அழைத்தன்பு
தருஞானத் திருமறையோர் தண்டலையின் வண்கதலிக்
குருநாளக் குருத்தரிந்து கொண்டுவரத் தனிவிட்டார். ''

திருநாவுக்கரசு-திருநாவுக்கரசு நாயனார்; திணைமயக் கம். அமுது செய்தருள-திருவமுது செய்தருளும் பொருட்டு. மற்று: அசைநிலை. அவர்தம்-அந்தத் திருநாவுக்கரசு நாய னாருடைய; தம்: அசைநிலை. பெரு-பெருமையைப் பெற்ற. நாமம்-திருநாமமாகிய திருநாவுக்கரசு என்பதை. சாத்திய- அலங்காரமாக எண்ணி வைத்த. அப்பிள்ளைதனை-அந்தத் தம்முடைய முதற் புதல்வனை; தன்: அசைநிலை. அழைத்து- அழைத்துக் கொண்டு வந்து. அன்பு-பக்தி. தரு-வழங்கும். ஞான-மெய்யறிவைப் பெற்று. இறைவனிடம் பக்தியைப் பூண்டமையால் அவருக்கு மெய்யறிவு உண்டாயிற்று. த்:சந்தி. திரு-அழகிய; 'செல்வத்தைப் பெற்ற' எனலும் ஆம். மறையோர்-வேதியராகிய அந்த அப்பூதியடிகள் நாய னார். தண்டலையின்-தம்முடைய திருமாளிகைக்குப் பின் புறம் உள்ள தோட்டத்தில். வண்-வளப்பத்தோடு வளர்ந்து நின்ற. கதலி-ஒரு வாழை மரத்தில் உள்ள. க்:சந்தி. குரு- பச்சைநிறத்தைப் பெற்ற. நாள-நரம்பைக் கொண்ட; இது வாழை இலையின் நடுவில் இருப்பது. க்:சந்தி. குருத்து-குருத் திலையை. அரிந்து-அறுத்து. கொண்டுவர-அதை எடுத்துக்

கொண்டு வருமாறு. த்:சந்தி. தனி-தனியாக. விட்டார்-அவனை அப்பூதியடிகள் நாயனார் அனுப்பினார்.

அடுத்து உள்ள 205-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அப்பூதி அடிகள் நாயனார் தன்னைத் தம்முடைய திருமாளிகைக்குப் பின்புறத்தில் உள்ள தோட்டத்திலிருந்து ஒரு வாழைக் குருத்திலையை அறுத்து எடுத்துக் கொண்டு வருமாறு அனுப்பிய அவ்வாறே அந்தத் திருநாவுக்கரசு என்னும் திருநாமத்தைக் கொண்டவனும் அப்பூதியடிகள் நாயனாருடைய முதற் புதல்வனும் ஆகிய அந்தச் சிறுவனும் வேகமாக அந்தத் தோட்டத்தை அடைந்து அந்தப் பக்கத்தில் தாமதம் செய்யாமல் பூவைப் பெற்ற ஒரு வாழை மரத்தில் உள்ள குருத்திலையை அறுக்கத் தொடங்கும் சமயத்தில் ஒரு நாகப் பாம்பு அவனைக் கடித்துத் துன்பத்தை உண்டாக்க, அந்தத் துன்பத்தைச் சிறிதும் சட்டை செய்யாதவனாகித் திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளும் பொருட்டு அந்த வாழை மரத்தில் உயரத்தில் இருந்த குருத்திலையை அறுத்து அதை எடுத்துக் கொண்டு விரைவில் திருநாவுக்கரசு நாயனார் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.' பாடல் வருமாறு:

" ஆங்கவனும் விரைந்தெய்தி
அம்மருங்கு தாழாதே
பூங்கதலிக் குருத்தரியப்
புகும்அளவில் ஒருநாகம்
தீங்கிழைக்க அதுபேணான்
திருவமுது செய்தருள
ஓங்குகத லிக்குருத்துக்
கொண்டொல்லை வந்தணைந்தான்."

ஆங்கு-அப்பூதி அடிகள் நாயனார் தம்முடைய திருமாளிகைக்குப் பின்புறத்தில் உள்ள தோட்டத்திலிருந்து ஒரு வாழைக் குருத்திலையை அறுத்து எடுத்துக் கொண்டு வருமாறு தன்னை அனுப்பிய அவ்வாறே. அவனும்-அந்த

திருநாவுக்கரசு என்னும் திருநாமத்தைக் கொண்டவனும் அப்பூதியடிகள் நாயனாருடைய முதற் புதல்வனும் ஆகிய அந்தச் சிறுவனும். விரைந்து-வேகமாகச் சென்று. எய்தி-அந்தத் தோட்டத்தை அடைந்து. அம்மருங்கு-அந்தப் பக்கத்தில். தாழாது- சிறிதேனும் தாமதம் செய்யாமல். ஏ:அசை நிலை. பூம்-பூவைப் பெற்ற. கதலி-ஒரு வாழை மரத்தில் உள்ள. க்:சந்தி. குருத்து-குருத்திலையை. அரிய-அறுக்கப்:சந்தி. புகும்-தொடங்கும். அளவில்-சமயத்தில். ஒரு நாகம்-ஒரு நாகப்பாம்பு. தீங்கு-அவனைக் கடித்துத் துன்பத்தை. இழைக்க-உண்டாக்க. அது-அந்தத்துன்பத்தை. பேணான்-சிறிதேனும் சட்டை செய்யாதவனாகி; முற்றெச்சம். திருவமுது செய்தருள-திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளும் பொருட்டு. ஓங்கு-அந்த வாழை மரத்தில் உயரத்தில் இருந்த. கதலி-வாழை மரத்தில் உள்ள. க்:சந்தி. குருத்து-குருத்திலையை. க்:சந்தி. கொண்டு-அறுத்து அதை எடுத்துக் கொண்டு. ஒல்லை-விரைவில். வந்து-திருநாவுக்கரசு நாயனார் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து. அணைந்தான்-சேர்ந்தான்.

பிறகு வரும் 206-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த நாகப்பாம்பு தன்னைக் கடித்ததனால் கெட்ட நஞ்சு தன்னுடைய தலையின்மேல் ஏறிக் கொள்ள அதனால் தன்னுடைய திருவுள்ளத்தில் சுழற்சியை அடைந்து அந்தத் திருநாவுக்கரசு என்னும் சிறுவன் செழுமையாக உள்ள வாழைக் குருத்திலையை தன்னுடைய அன்னையாருடைய கையினில் கொடுத்து விட்டுத் தளர்ச்சியை அடைந்து தன்னை நெருப்பைப் போன்ற நஞ்சைக் கக்கும் நாகப்பாம்பு கடித்து உண்டாகிய விதத்தை கூறாதவனாகித் தரையில் அவன் விழ அதைப் பார்த்து, 'நாங்கள் கெட்டு ஒழிந்து விட்டோம்; பரிசுத்தராகிய திருநாவுக்கரசு நாயனார் இந்தத் திருமாளிகையில் திருவமுதுபுரிந்தருள ஆரம்பிக்கமாட்டார்' என எண்ணி அந்தத் திருநாவுக்கரசு என்னும் சிறுவனுடைய

பிணத்தை ஒரு மறைவாகிய இடத்தில் அந்த அப்பூதியடிகள் நாயனார் ஒளித்து வைத்து விட்டார்.' பாடல் வருமாறு:

"தீயவிடம் தலைக்கொள்ளத்
தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினில்நீட்டித்
தளர்ந்துதனைத் தழல்நாகம்
மேயபடி உரைசெய்யான்
விழக்கண்டு, 'கெட்டொழிந்தோம்;
தூயவர்இங் கமுதுசெயத்
தொடங்கார்.' என் றதுஒளித்தார்."

தீய-அந்த நாகப்பாம்பு தன்னைக்கடித்ததனால் கெட்ட. விடம்-நஞ்சு. தலைக் கொள்ள-தன்னுடைய தலையின் மேல் ஏறிக் கொள்ள. த்:சந்தி. தெரு மந்து-தன்னுடைய திருவுள்ளத்தில் சுழற்சியை அடைந்து. செழும்-செழுமையாக உள்ள. குருத்தை-வாழைக் குருத்திலையை. த்:சந்தி. தாயர்-தன்னுடைய அன்னையாருடைய. கரத்தினில்-கையில். நீட்டி-கொடுத்து விட்டு. த்:சந்தி. தளர்ந்து-தளர்ச்சியை அடைந்து. தனை-தன்னை: இடைக்குறை. த்:சந்தி, தழல்-நெருப்பைப் போன்ற நஞ்சைச் சக்கும். நாகம்-நாகப்பாம்பு. மேயபடி-தன்னைக் கடித்து உண்டாகிய விதத்தை. உரை செய்யான்-கூறாதவனாகி; முற்றெச்சம். விழ-இறந்து பிணமாகத் தரையில் விழ. க்:சந்தி. கண்டு-அதைப் பார்த்து. கெட்டொழிந்தோம்-நாங்கள் கெட்டு ஒழிந்து விட்டோம். தூயவர்-பரிசுத்தராகிய திருநாவுக்கரசு நாயனார். இங்கு-இந்த நம்முடைய திருமாளிகையில். அமுதுசெய-திருவமுது செய்தருள. செய:இடைக்குறை. த்:சந்தி. தொடங்கார்-ஆரம்பிக்க மாட்டார். என்று-என எண்ணி. அது-அந்தத் திருநாவுக்கரசு என்னும் தங்களுடைய புதல்வனாகிய சிறுவனுடைய பிணத்தை. ஒளித்தார்-ஒரு மறைவாகிய இடத்தில் அந்த அப்பூதியடிகள் நாயனார் ஒளித்து வைத்து விட்டார்.

பிறகு உள்ள 207-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய பத்தினியாரும் தம்முடைய மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசினுடைய பிணத்தை ஒளித்து வைத்து விட்டுச் சிறிதேனும் தங்களுடைய திருவுள்ளங்களில் தடுமாற்றம் இல்லாதவர்களாகி ''அடியேங்களுடைய தலைவனே, தேவரீர் திருவமுது செய்தருள வேண்டும்'' என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடம் வந்து அவரை வணங்க தேவர்களினுடைய தலைவனாகிய வீரட்டானேசுவரனுடைய திருத்தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் தடுமாற்றத்தை நயபராகிய வீரட்டானேசுவரர் வழங்கிய திருவருளினால் தெரிந்து கொண்டருளி அந்தத் துன்பத்தைப் போக்குவாரானார்.' பாடல் வருமாறு:

'' தம்புதல்வன் சவம்மறைத்துத்
தடுமாற்றம் இலராகி
'எம்பெருமான், அமுதுசெய
வேண்டும்' என வந்திறைஞ்ச
உம்பர்பிரான் திருத்தொண்டர்
உள்ளத்தில் தடுமாற்றம்
நம்பர்திரு வருளாலே
அறிந்தருளி நவைதீர்ப்பார்.''

தம்-அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தர்ம பத்தினியாரும் தங்களுடைய. புதல்வன்-தம்முடைய மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசினுடைய. சவம்-பிணத்தை. மறைத்து-ஒரு மறைவாகிய இடத்தில் ஒளித்து வைத்து விட்டு. த்:சந்தி. தடுமாற்றம்-தங்களுடைய திருவுள்ளங்களில் சிறிதேனும் தடுமாற்றம். இலராகி-இல்லாதவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. எம்-அடியேங்களுடைய. இது அப்பூதியடிகளும் அவருடைய பத்தினியாரும் தங்களைச் சேர்த்துக் கூறியது. பெருமான்-தலைவரே; ஒருமை பன்மை மயக்கம்; விளி. அமுது செய வேண்

டும்-தேவரீர் திருவமுது செய்தருள வேண்டும். செய: இடைக்குறை. என-என்று கூறி; இடைக்குறை. வந்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடத்துக்கு வந்து. இறைஞ்ச-அவரை வணங்க. உம்பர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரான்-தலைவனாகிய வீரட்டானேசுவரனுடைய. திருத் தொண்டர்-திருத் தொண்டராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். உள்ளத்தில்-தம்முடைய திருவுள்ளத்தில். தடுமாற்றம்-தடுமாற்றத்தை. நம்பர்-தம்முடைய அடியவர்களுக்குப் பல வகையான நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய வீரட்டானேசுவரர். அந்த நம்பிக்கைகள் இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. திருவருளால்-வழங்கிய திருவருளினால். ஏ:அசை நிலை. அறிந்தருளி-தெரிந்து கொண்டருளி. நவை-அந்தத் திருநாவுக்கரசு என்னும் சிறுவன் இறந்து பிணமாகி விட்ட துன்பத்தை, தீர்ப்பார்-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் போக்கியருள்பவரானார்.

பிறகு வரும் 208-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அன்றைக்கு அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தர்மபத்தினியாரும் தங்களுடைய மூத்தபுதல்வனாகிய திருநாவுக்கரசினுடைய பிணத்தை ஒரு மறைவான இடத்தில் ஒளித்து வைத்து விட்டதற்கு அளவைக் கடந்த கருணையைப் பெற்றவராகி அந்தப் பிணத்தைக் கொன்றை மலர் மாலையை அணிந்த நறுமணம் கமழும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய வீரட்டானேசுவரர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்கு முன்னால் கொண்டு வரச் செய்து, "ஒன்று கொலாம்" என்று ஒரு திருப்பதிகத்தைத் தொடங்கித் தம்மை அடிமையாக உடையவனாகிய வீரட்டானேசுவரனுடைய சீர்த்தியை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருள அதற்குப் பிறகு தன்னை நாகப்பாம்பு கடித்ததனால் தன்னுடைய தலைக்கு மேல் ஏறிய விடம் சென்று அகன்று அந்தச் சிறுவன் தன்னுடைய

உயிரைப் பெற்று விழித்துக் கொண்டு தரையிலிருந்து எழுந்து அமர்ந்தான்.' பாடல் வருமாறு:

" அன்றவர்கள் மறைத்தனுக்
களவிறந்த கருணையராய்க்
கொன்றைநறுஞ் சடையார்தம்
கோயிலின்முன் கொணர்வித்தே
ஒன்றுகொலாம்' எனப்பதிகம்
எடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய்நீங்கிப்
பிள்ளைஉணர்ந் தெழுந்திருந்தான். "

அன்று-அன்றைக்கு. அவர்கள்-அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தர்ம பத்தினியாரும். மறைத்தனுக்கு-தங்களுடைய மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசினுடைய பிணத்தை ஒரு மறைவான இடத்தில் ஒளித்து விட்டதற்கு. அளவு இறந்த-அளவைக் கடந்து. கருணையராய்-கருணையைப் பெற்றவராகி. க்:சந்தி. கொன்றை-கொன்றைமலர் மாலையை; ஆகு பெயர். நறும்-அணிந்ததனால் நறுமணம் கமழும். சடையார் தம்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய வீரட்டானேசுவரர். தம்:அசை நிலை. கோயிலின் முன்-ஆலயத்துக்கு முன்னால். கொணர்வித்து-அந்தப் பிணத்தைக் கொண்டு வரச் செய்து. ஏ:அசை நிலை. 'ஒன்றுகொலாம்' என-ஒன்று கொலாம் என்று. என: இடைக்குறை. ப்:சந்தி. பதிகம்-ஒரு திருப்பதிகத்தை. எடுத்து-தொடங்கி. உடையான்-தம்மை அடிமையாக உடையவனாகிய வீரட்டானேசுவரனுடைய. சீர்-சீர்த்தியை. பாட-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருள. ப்:சந்தி. பின்றை-அவர் அவ்வாறு பாடியருளிய பிறகு. விடம்-தன்னை நாகப்பாம்பு கடித்ததனால் தன்னுடைய தலைக்கு மேல் ஏறிய நஞ்சு. போய்-சென்று. நீங்கி-அகன்று. ப்:சந்தி. பிள்ளை-அந்தச் சிறுவனாகிய திருநாவுக்கரசு.

உணர்ந்து-விழித்துக் கொண்டு. எழுந்து-தரையிலிருந்து எழுந்து. இருந்தான்-அமர்ந்தான்.

பிறகு உள்ள 209-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தங்களுடைய அருமையாக இருக்கும் புதல்வனாகிய திருநாவுக்கரசு மீண்டும் தன்னுடைய உயிரைப் பெற்று அந்தச் செயலைப் பார்த்த பிறகும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளாமல் இருந்ததற்காகத் தளர்ச்சியை அடைந்து துன்பத்தால் வருந்தியவர்களாகிய அந்த அப்பூதியடிகள் நாயனாரும், அவருடைய தரும பத்தினியாரும் தாங்கள் அடைந்த துயரத்திலிருந்து விலகும் பொருட்டு திருக்கோயிலிலிருந்து வருத்தத்தை அடையும் அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய திருமாளிகைக்குள் நுழைந்து அழகிய வாகீச முனிவராகிய திருநாவுக்கரசு நாயனார் அந்த அப்பூதியடிகள் நாயனார் படைத்த விருந்துணவைத் திருவமுது செய்தருளி விருப்பத்தோடு அந்தத் திங்களூரில் அந்த நாயனார் தங்கிக் கொண்டிருக்கும் காலத்தில்.' பாடல் வருமாறு;

"அருந்தனயன் உயிர் பெற்ற
அதுகண்டும் அமுதுசெயா
திருந்த தற்குத் தளர்வெய்தி
இடருழந்தார் துயர்நீங்க
வருந்தும் அவர் மனைப்புகுந்து
வாகீசத் திருமுனிவர்
விருந்தமுது செய் தருளி
விருப்பினுடன் மேவும்நாள்."

இந்தப் பாடல் குளகம். அரும்-தங்களுடைய பெறுதற்கு அரியவனாக விளங்கும். தனயன்-புதல்வனாகிய திருநாவுக்கரசு. உயிர்பெற்ற-இழந்த உயிரை மீண்டும் பெற்ற. அது-அந்தச் செயலை. கண்டும்-பார்த்த பிறகும். அமுது செயாது-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்

தருளாமல். செயாது: இடைக்குறை. இருந்ததற்கு-இருந்த தற்காக. த்:சந்தி. தளர்வு-தளர்ச்சியை. எய்தி-அடைந்து. இடர்-துன்பத்தால். உழந்தார்-வருந்தியவர்களாகிய அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தரும பத்தினி யாரும்; ஒருமை பன்மை மயக்கம். துயர்-அடைந்த துயரத்தி லிருந்து. நீங்க-விலகும் பொருட்டு. வருந்தும்-வருத்தத்தை அடையும். அவர்-அந்த அப்பூதி நாயனாருடைய. மனை-வீரட்டானேசுவரருடைய திருக்கோயிலிலிருந்து திருமாளி கைக்குள். ப்:சந்தி. புகுந்து-நுழைந்து. வாகீசத்திரு முனி வர்-அழகிய வாகீச முனிவராகிய திருநாவுக்கரசு நாயனார். விருந்து-அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய தருமபத்தினி யார் படைத்த விருந்துணவை; ஆகுபெயர். அமுது செய் தருளி-திருவமுது செய்தருளி. விருப்பினுடன்-விருப்பத் தோடு. மேவும்-அந்தத் திங்களூரில். மேவும்-திருநாவுக்கரசு நாயனார் விரும்பித் தங்கிக் கொண்டிருக்கும். நாள்-காலத்தில்.

அடுத்து உள்ள 210-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: 'அந்தத் திங்களூரிலிருந்தும் அழகிய வேதியராகிய அப்பூதி யடிகள் நாயனார் தமக்குப் பின்னால் வர அந்தத் திருநாவுக் கரசு நாயனார் பசுமையாகிய கண்களைப் பெற்ற இடபவாக னத்தின் ஒப்பற்ற பாகராகிய ஆபத்சகாயேசுவரர் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அழகிய திருப்பழனம் என்னும் சிவத்தலத்துக்குள் அந்த நாயனார் நுழைந்து தம்முடைய திருவுள்ளத்தில் தங்கியிருக்கும் பெருகி எழும் விருப்பத்தோடும் தம்முடைய தலைவனாகிய அந்த ஆபத் சகாயேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளைச் சேர்ந்து தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த பக்தி உண்டாக அந்த ஆபத்சகாயேசுவரரைப் பணிந்து விட்டு அவருடைய சந்நிதியில் நின்று கொண்டு வாழ்த்துக்களை அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.' பாடல் வருமாறு:

"திங்களூர் தனில்நின்றும்
திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர்
திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடும்
தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியஅன் புறவணங்கி
முன்நின்று போற்றிசைப்பார்."

திங்களூர்தனில் நின்றும்-அந்தத் திங்களூரிலிருந்தும். தன்:அசைநிலை. திரு-அழகிய. மறையோர்-வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார். பின்-தமக்குப் பின்னால். செல்ல-வர. ப்:சந்தி. பைம்-பசுமையாக விளங்கும். கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். விடை-இடபவாகனத்தை. தனிப்பாகர்-ஒப்பற்ற ஓட்டுபவராகிய ஆபத்சகாயேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திரு-அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். ப்:சந்தி. பதி-சிவத்தலத்துக்குள். புகுந்து-அந்தத் திருநாவுக்கரசு நாயனார் நுழைந்து. தங்கு-தம்முடைய திருவுள்ளத்தில் தங்கியிருக்கும். பெரும்-பெருகி எழும். காதலொடும்-விருப்பத்தோடும். தம்-தம்முடைய. பெருமான்-தலைவனாகிய அந்த ஆபத்சகாயேசுவரருடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை; ஆகுபெயர். சார்ந்து-சேர்ந்து. பொங்கிய-தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த. அன்பு-பக்தி. உற-உண்டாக. வணங்கி-அந்த ஆபத்சகாயேசுவரரைப் பணிந்து விட்டு. முன்-அவருடைய சந்நிதியில். நின்று-நின்று கொண்டு. போற்று-வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். இசைப்பார்-அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

அக்குடியின் மேல் 31-2
அங்கங்கள் 172
அங்கவரும் 68
அச்சமயத் 88
அஞ்சொல் திருமறை 264
அடிகண் மார் 144
அடைவில் 87
அணங்கனைய 49
அண்ணல் அருந் 186
அதிசயம் அன்றிது 168
அத்தன்மை 321
அத்திருப்பதி 209
அத்துறையில் 70
அந்தணரின் 278
அந்நாளில் 43
அந்நிலையில் 60-61
அந்நெறியில் 71
அப்பதியைச் சூழ்ந்த 276
அப்பரிசவ் வினை 201
அப்பெருங் கல்லும் 205
அப்பொழுதே 301
அம்பிகை செம் 310
அரசனது 160
அரிஅயனுக் 230
அரியானை 293
அருகணைந்தார் 158
அருட்பெருகு 313
அருந்தனயன் 389
அருட்பெரு மகிழ்ச்சி 282
அருள்கொண்ட 149
அருள் நயந்தஞ்செழுத் 207
அல்லற்பவம் அற 266
அல்லிருள் 197
அவர்முன் பணிவொடு 262
அவர் திலைமை 89
அவ்வார்த்தை 100
அவ்விடத்தை 173
அவ்வினை 200
அறிவிற் பெரியவர் 260
அன்றவர்கள் மறைத் 288
ஆங்கதுகேட்டஅரசன் 198-9
ஆங்கது கேட்டலும் 169
ஆங்கவர்தம் 247
ஆங்குவன 26
ஆங்கவனும் 283
ஆங்கவன் போய் 95
ஆண்ட அரசருள் 155
ஆண்ட அரசு 159
ஆண்ட அரசெழுந் 324
ஆண்ட அரசை 192
ஆண்டகை 45
ஆயநாளிடை 53-4
ஆடுவதண் 238
ஆழிவிடம் உண்ட 299
ஆளுடைய நாயகன் 271
ஆனந்த வெள்ளத் 167

ஆன்றாத சீர்த்தில்லை	255	கால் எல்லாம்	11
இடியுற்றெழும்	182	காவளர்த்தும்	64
இத்தன்மை	128	குண்டர்களும்	93
இத்தன்மையர்	276	கூடத்தைக்	179
இந்நாளில் திருப்பணிகள்	235	கையுந் தலைமிசை	274-5
இருவினைப் பாசமும்	206	கோவாய் முடுகி	254
இவ்வகைப் பல	139	சினவிடையே	288
இவ்வகைய-திருநாட்டில்	25	சுலவிவயிற்	104
இவ்வண்ணம் போல	227	செஞ்சடைக்கற்றை	295
இன்ன தன்மையில்	135	சென்றணைந்த	152
ஈன்றாளுமாய்	212	சென்று சேர்ந்து	253
உடைஒழிந்	143	சென்று திரு	75
உம்பர் தம் கோனை	228	கொல்லாது	96
எடுத்த மனக்	101	சொற்றுணைவேதியன்	202
எந்தையும்	59	சொன்னவண்	142
எயிற்குலவும்	22	தண்டமிழ் மாலைகள்	190
எறி புனல் பொன்	243	தந்தையார்	42
என்ற பொழு	110	தம்பியார்	62
என்றவன் முன்	98	தம்புதல்வன்சவம்	286
ஒருவாறு	57	தருமசேனர்க்கு	137
ஓடி அருகர்கள்	193	தவத்தின் கண்	30
ஓரேழு நாள்	165	தலைநெறியா	148
கடைகாவல்	145	தவமென்று	81
கடைஞர் மிடை	13	தவ்வை	140
கடையுகத்தில்	297	தாதையாரும்	56
கண்டார்கள்	225	தாவாத புகழ்	92
கருங்கதலி	15	தாளிணை மேல்	107
கருவூர் முத	264	திங்களூர் தனில்	391
கன்னி திரு	51	திருநாவுக்கரசு வளர்	5
காண்டகைமை	280	திருநாவுக்கரசமுது	282
கார்வளரும்	241	திருவதிகைப்	236

திருவாளன் திருநீறு	111	பண்டு புரி	85
திரைக்கெடில	116-117	பத்தனாய் பாட	278
திலகவதியார்	38	பரசுங்கருணை	130
தீயவிடம் தலைக்	285	பல்லவனும்	156
தூங்கானை மாடத்து	248-9	பாசத் தொடை	180
தூண்டுதவ	79	பாடலிபுத்	67
தூய வெண்ணீறு	224	பாவக் கொடு	185
தேவர்பிரான் திரு	216	பிள்ளையார்	312
தொண்டர் குழாம்	304	புகழனார்	33
தொழுதணைவுற்	308	புண்தலைவன்	90
தொழுந்தகை	210	புலர்வதன் முன்	76
தொன்மை முறை	8	புல்லறிவிற்	232
நங்கள் சமயத்தில்	196	புனப்பண்ணை	9
நஞ்சு கலந்	175	புன்னெறியாம்	243
நஞ்சும் அமுதாம்	171	பெரிய பெருமாட்டி	319
நவமின் சுடர்மணி	268	பெருகிய அன்பினர்	204
நறையாற்றும்	17-18	பேராதபாசப்	72
நனைந்தனைய	260	பொடியார்க்கும்	172
நன்மைபெருகருள்	256	பொய் தருமால்	102
நாமார்க்கும்	153	பொய் வாய்மை	124
நாளும் மிகும்	77	பொன்னார்ந்த	244
நாவுக்கரசரும்	256	மணிநெடுந்	220-221
நாவுக்கு மன்னர்	261	மருமேவு	19
நில்லாத உலகியல்பு	66	மருணீக்கியார்	40
நீடிய மணியின்	280	மலர் நீலம்	28
நீடுந் திருவுடன்	273	மலையும் பல்	138
நீடுதிருத்	246	மறம்தருதீ	24
நீண்டவரை	306	மற்றவரும்	279
நீறணிந்தார்	115	மற்றவுரை	108
நீற்றால்	118	மற்றவர் தம்	176
பண்பயில்வண்	316	மற்றவர் தாம்	55

மற்றும் இனையன	214	மேவுற்ற இவ்	126
மனைப்படப்பிற்	290	மையற்றுறை	132
மன்னிய அன்பின்	222	மொய்யளி	21
மன்னுதபோ	84	யானையின்	195
மன்னும் பதி	121	வஞ்சகர் விட்ட	188
மாசில் மதி	162	வந்தணைந்து	105
மாசில் மனத்	63	வண்டமிழ்மென்	253
மாடுற்றனை	183	வளர்பொற்	271
மாதினியார்	39	வாய்ந்த சீர்	208
மாபாவிக்	177	விரையலங்கற்	147
முருகிற்செறி	258	வீடறியாச்	233
மெய்ம்மைப்பணி	134	வெஞ்சமண்	219
மேலம் பரதலம்	269	வெம்முனைமேற்	58
மேவிய பணிகள்	284	வெய்யநீற்று	160
மேவு புனற் பொன்னி	234	வேந்தற்குற்கு	

கி. வா. ஜ. வின் பிற நூல்கள்

1. பெரிய புராண விளக்கம் (பல பகுதிகள்)
2. அபிராமி அந்தாதி (விளக்க உரையுடன்)
3. வழிகாட்டி (திருமுருகாற்றுப்படை விளக்கம்)
4. மல்லிகை மாலை (கட்டுரைகள்)
5. இமயமும் குமரியும் (,,)
6. கி. வா. ஜ. சிறுகதைகள்
7. நவகிரகங்கள்
8. கந்தபுராணக் கதைகள்
9. நாடோடிப் பாடல்கள் (இரண்டு பாகங்கள்)
10. கி. வா. ஜ. சிலேடைகள்

(இன்னும் பல)